


இது மதுராலயத் திருவுருவப்படம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பரஞ்சோதிமுனிவரருளிச்செய்த

திருவிளையாடற்புராண

மூலமும்,

அரும்பதக் குறிப்புரையும்.



இவை

முத்தமிழ்ரத்தினகரம்

ம. தி. பானுகவி அவர்களாலும்,

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆங்கிலோவர்னகுலரிஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

வல்லி - ப. தெய்வநாயகமுதலியார்

அவர்களாலும்,

பார்வையிடப்பட்டு

மேற்படி முதலியாரவர்களால்

சென்னை புரசை

"கணேச" அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

1905ஆம் டிசம்பர் மீ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த,

திருவாலவாய்த் தேவாரம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதஞயகனல்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னுடமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைருலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொ
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. [ழிந்திட்

செந்துவர்வாயாள்சேலனகண்ணுள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பரிடைகிலவுஞ்
சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிவே. (ங)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைருலாவுங்கோபுரஞ் சூழ்மணிக்கோ
யின், மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவெண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ச)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிதிர்மழுவுடன்றரித்த
வையலுருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ஞ)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்

கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

முத்தின்முழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமுத்தாற்போ
லத்தனுருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணங்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலாநிகழமன்னனும்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கிலுற் பணிசெய்துப
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற. [ரவ
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (கூ)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந் தொழுதுதன்குணத்
தினைக் குலாவக், கண்டிநாடோறுமின்புறுகின்ற குலச்சிறைகருதி
நின்றேத்தக், குண்டராயுள்ளார் சாக்கியர்தங்கள் குறியின்கணெறி
யிடைவாரா, வண்டநாயகன்ருனமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவது
மிதுவே. (கo)

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மந்நலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநீற்றுப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே. (க)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புண்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (உ)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (๑)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (๒)

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திரு வாலவாயான் றிருநீறே. (๓)

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (๔)

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலெத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (๕)

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (๖)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (๗)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருத்தினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (๘๐)

ஆற்றலடல்லிடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்கல்லவர்தாமே. (๘๑)

திருச்சிற்றம்பலம்.

நூலாசிரியர் வரலாறு.

பரஞ்சோதிமுனிவர்.

இவர் முனிவரென்றழைக்கத்தக்க தவநிலையினின்றவ ராதலி னடியவர்க ளனைவரைப் பரஞ்சோதிமுனிவரென் றறைகின்றனர்.

இவர் காலத்தினைப் பலர் பலவாறு கூறுகின்றனர். திருமலை நாயகன் காலத்தி லிவர் மகன் சரசுவதிபண்டாரத்திலுல் இவரரு ளிய திருவிளையாடல் அவ்வரசன் அவைக்களத் தரங்கேற்றப்பட்ட தென்றும், அதற்காக அம்மன்னவன் மானியம் விட்டனனென்றும், அம்மானியத்திற்குத் திருவிளையாட லரங்கேற்றிய சரசுவதிப் பண்டாரத்துக்கு விட்ட மானியமென்றே கணக்கில் வழங்கிவந்த தென்றும் அன்பர்பலர் கூறக் கேட்டுள்ளேம்.

இவரதுகல்வியாற்றலைக்கண்ட அரசனும் அவையினரு மிவரை யே சரசுவதிப்பண்டாரமெனக் கூறியிருந்தாலும் இருக்கக்கூடும். பண்டாரமெனக் கேட்கப்படுதலி னிவர் அபிஷேகத்தரான சைவ தேசிகர் மரபினராதல்வேண்டும். இவரதுஇருப்பிடத்தினை மதுரை யெனவும் பிறப்பிடத்தினைவேதாரணியமெனவுஞ் சிலர்கூறுகின்ற னர். நாம் கேட்டமட்டி லிவரை மதுரைசைவரென்றன்றி வேறி வர்பிறப்பிட முதலிய அறியப்படவில்லை. உத்தேசமாக இவர்காலம் முந்நூறாண்டுகளுக்குள்ளேயே இருத்தல்வேண்டும். இந்நூல் எண் ணூறாண்டுகளுக்கு முற்பட்டதென்று சிலர் கூறுகின்றனர். அங் ஙனமிருந்திருக்குமாயின் அக்காலத் துரையாசிரியர்கள் இவர் பா டல்களை உதாரித்தே இருப்பர். நாமறிந்தவளவிற் கவ்வாறொன்றுங் காணப்படாமையின் எண்ணூறாண்டென்பதனைத் தூரமானதாக நினைக்கின்றேம். இவரது காலத்தினைக் குறித்தறிவதற்கேற்ற வா தாரங்கள் கிடைக்குமட்டு மிவ்வாறு சந்தேகமாகவே ஒவ்வொரு வரும் எழுதுவார்கள்.

பரஞ்சோதிமுனிவர் சங்கமருவிய சான்றோரிலக்கியங்களை யும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமாதி பழையஇலக்கணங் களையும் நன்குபயின்று தேர்ந்த புலவர்பெருமானென்பதையும் பெ ரியபுராணமுதலிய சைவகலைகளிலழுந்திய உள்ளன்பின ரென்பதை யும் சைவசித்தாந்த நூல்களில் வல்லுநரென்பதையும் இவரியற்றிய இத்திருவிளையாடற் பாக்களாலும், போற்றிக்கலிவெண்பாவாலும் நன்குதெரிகின்றன. ஒப்பு முயர்வுமற்ற இப்புலவர்பெருமான் இய ற்றியுள்ள இந்நூலினையொப்பஜந்திலக்கண வமைதியும் அதிமதுரச் சுவையும் பொருந்திய நூல்வேறொன்றின்றென்பது திண்ணம். இவ ரியற்றிய இந்நூலினைப் பாராயணஞ்செய்து புத்தீரப்பேறு முதலி யன பெற்றாரனேகர். பெறுவாரனேகராதலின் மகா மந்திரம்போ ன்ற இந்நூலினை இயற்றிய ஆசிரியர் பரஞ்சோதியார் புகழ் குன்றி லிட்ட தீபமென எஞ்ஞான்றும் பொலிவுறுமென்பது திண்ணம். வட மொழித் திருவிளையாடலை யாதாரமாகக்கொண்டே இத்தென்மொ ழித் திருவிளையாடலினைத் தங்கல்வி வல்லபத்தா லாசிரியர் பாடி முடித்திருக்கின்றனர். பிறர் பலவாறு கூறுப. ஆசிரியர் சரிதமுறை சரிவர வறியப்படாமையின் அறிந்துள்ளவா றெழுதினேம்.

முகவுரை.

அநாதிமுத்தனுகிய பரமசிவன் அநாதிபெத்தர்களாகிய ஆன்மாக்கள் ஆணவமாகியினின் றகன்று சின்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாய முத்தியின்பத்தைப் பெறும்பொருட்டு ஒவ்வொரு சிருஷ்டியிலுமாரம்பத்திலும் வேதாகமங்களே யருளிச்செய்ததலே டமையாது குருமுகமாயும் பல நன்மாணக்கர்க்குச் சரியை கிரியை யோக ஞான பாதங்களே யுபதேசித் தனுஷ்டிக்கச்செய்து தாமு மவ்வாறிருந்து காட்டினரென்பது வைதிக மரபின செல்லாராலும் துணியப்பட்டதென்பது மிகு பிரசித்தம். அந்தப் பரமேச்சுரன் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் முறையே தன்மை முன்னிலை படர்க்கையாக நின்று ஒவ்வொரு திவ்விய ஸ்தலங்களிலும் அநுக்கிரஹஞ்செய்து வருகின்றனரென்பதும் பிரசித்தமாம். அவ்வாறு பரமேச்சுரன் அநுக்கிரஹஞ் செய்த திவ்விய ஸ்தலங்களிலொன்றாயும்,மூர்த்தி தலந் தீர்த்தமென்னும் மூவகை மேன்மையுமுடையதாயும், பரமேச்சுரன் அறுபத்துநான்கு திருவிளையாடல்களேயும் செய்து அன்பரை இரக்ஷித்த விடமாயும், துவாதசாந்த க்ஷேத்திரமென்னும் அபிதானமுடைய தாயுமுள்ள ஸ்தலம் மதுரைமா நகரமாம்.

சோமசுந்தரக்கடவுள் அங்கயற்கண் அம்பிகையோடு திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் இம்மதுரை க்ஷேத்திரத்திற்குப் பல புராணங்களிருப்பினும் அவற்றுள் மிகவும் சிறப்புடையது பரஞ்சோதி மஹாமுனிவ ரியற்றிய திருவிளையாடற்புராணமேயென்று பண்டித ரொவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாம்.

'ஒதற்கெளிதாய் உணர்தற்கரிவரிதாய்,வேதப்பொருளாய் மிகவிளங்கிய' இத்திருவிளையாடற் புராணம் யாவருக்கும் உபயோகமாம்படி அத்தியாவசியமாய் வேண்டிய விடங்களில் அரும்பதக் குறிப்புரையு மெழுதி உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. இதனுடன் மதுரையாலயத் திருவுருவப் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சுலபமாக யாவரும் பெறும்பொருட்டு (ராயல் பன்னிரண்டு பக்கங்கொண்ட) 46 பாராமுடைய இப்புத்தகம் உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து ரூபாய் 1-8-0. க்கு விலை வைக்கப்பட்டிருக்கின்றது. இதிற் பிழையுண்டாயின்உலகம் பொறுக்க.

வ. ப. தே.

விளம்பரம்.

திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும், குறிப்புரையும் சேர்ந்த வாலியம் 2.	6	0	0
சுவகீதசாரம் (விஞவிடை வசனம்.)	0	8	0
திருவாசகம் (பாக்கெட் சைஸ்.)	0	10	0
வேதாந்தசாரம் ,, ...	0	10	0
நாஞசீவவாதக்கட்டளை குறிப்புரையுடன்	0	4	0
சித்தாந்தபிந்து (சமஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்ப்பு வசனம்.)	0	8	0
தாயுமானசுவாமிகள் பாடல்	0	6	0
அற்புத தேவாரத்திரட்டு	0	3	0
திருவிளையாடற் சாரவெண்பா	0	0	9
பெரியபுராண சாரவெண்பா	0	0	9
விபூதி மஹாத்மியம்	0	0	6
காந்த சங்கிரகம்	0	0	6

மேற்கண்ட புத்தகங்கள் கீழ்க்குறிக்குமிடங்களிற் கிடைக்கும்.

கோ. வடிவேலு செட்டியார், தமிழ்ப்பண்டிதர்,
கோமளேச்சுரன்பேட்டை, சென்னை.

வ ப. தெய்வநாயகமுதலியார், தமிழ்ப்பண்டிதர்,
முத்து முதலி தெருவு, இராயப்பேட்டை, சென்னை.

ரிப்பன் பிரஸ், சென்னை. கலாரத்நாகரம் பிரஸ், சென்னை.
வித்யாவிநோதனி பிரஸ், தஞ்சை.

ஸ்ரீமத் கம்பராமாயணவசனம் நூதன பதிப்பு 100-விசித்திரப்படங்களுடன் ராயல் 8 - பேஜ் சயிஸில் மிகவும் இனிய நடையில் அச்சிடப்பட்டு ஏழு காண்டமும் இரண்டு புத்தகமாக உயர்ந்த காலிகோ பயிண்டு செய்யப்பட்டது கிளேஸ் கடிதம் விலை ரூ. ...	6	0	0
ஷை ரப் கடிதம்	4	0	0
சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கொத் துகிளேஸ் கடிதம்...	0	3	0
ஷை ரப் கடிதம்...	0	2	0
12,800-இங்கிலீஷ் வார்த்தைகளுக்குச் சரியான தமிழ் அர்த்தமுள்ள ஒக்கபிலோரி	0	8	0
ஷை இங்கிலீஷ் தெலுங்கு ஒக்கபிலோரி ...	0	8	0

மேற்கண்ட புத்தகங்கள் கீழ்க்குறிக்குமிடங்களிற் கிடைக்கும்.

மானேஜர்,
கணேசப் பிரஸ்,
வேப்பேரி, சென்னை.

வ. ப. தெய்வநாயக முதலியார், தமிழ்ப்பண்டிதர்,
முத்து முதலி தெருவு, இராயப்பேட்டை, சென்னை.

கலாரத்நாகரம் பிரஸ், பிளாக்டவுன், சென்னை.

படல அகராதி.

பக்கம்.	படலம்.	பாடற் றொகை.
உசுங	அங்கம்வெட்டினபடலம்	உஅ
உகக	அட்டமாசித்தியுபதேசித்தபடலம்	உக
ஙிஉஉ	அருச்சனைப்படலம்...	ஙிங
கஙிக	அன்னக்குழியும்வைகையுமழைத்தபடலம் ...	உள
ஙசஅ	இசைவாதுவென்றபடலம்	சச
சகள	இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம் ...	ஙஅ
ஙிசு	இந்திரன்பழிதீர்த்தபடலம்	கள
சஅஉ	இந்திரன்முடிமேல்வளையெறிந்தபடலம் ...	ஙிக
ஙஐச	இரசவாதஞ்செய்தபடலம்	ஙஐ
கசுக	உக்கிரகுமாரனுக்குவேல்வளைசெண்டுகொடுத்தபடலம்	சுசு
கசுஉ	உக்கிரபாண்டியனதுதிருவவதாரப்படலம் ...	சஙி
உஅங	உலவாக்கிழியருளியபடலம்	ககு
ங்கஉ	உலவாக்கோட்டையருளியபடலம்	கஅ
உஉசு	எல்லாம்வல்லசித்தர்திருவிளையாடற்படலம்...	உச
கஙிஙி	எழுகடலழைத்தபடலம்	கஙி
களக	கடல்சுவறவேல்விட்டபடலம்	உஐ
ங்சுஅ	கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம் ...	உங
உங்ஐ	கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம் ...	உக
சகக	கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம் ...	ங்ஐ
சஐள	கீரனைக்கரையேற்றியபடலம்	உள
கசள	குண்டோதரனுக்கன்னபிட்டபடலம் ...	உஉ
சகஙி	சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்	கச
ங்அசு	சங்கப்பலகைதந்தபடலம்	ங்க
ஙிஐஉ	சமணரைக்கழுவேற்றியபடலம்	அஉ
ங்அஐ	சுந்தரப்பேரம்பெய்தபடலம்	சச
ங்ஐஅ	சோழனைமடுவில்வீட்டியபடலம் ...	உஉ
கசு	தடாதகைப்பிராட்டியார்திருவவதாரப்படலம்	அக
உக்க	தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்	ங்ள
ங்கஉ	தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம் ...	கஐள
சச	தலவிசேடம்	உங
ங்அ	திருக்கைலாயப்புகழ்ச்சி	ள
அள	மதுரைக்காண்டம் திருநகரங்கண்டபடலம்...	சள
உக	திருநகரப்படலம்	கஐக
கக	திருநாட்டுப்படலம்	சஐ
ககக	திருமணப்படலம்	ககக
ங்சக	திருமுகங்கொடுத்தபடலம்	ங்ஐ

பக்கம்.	படலம்.	பாடற் றொகை.
ஈஎடு	திருவாலவாய்க்காண்டம் திருவாலவாயான படலம்.	உஅ
சகூ	தீர்த்தவிசேடம்	ஈசூ
சசடு	சரிபரியாக்கியபடலம்	கஉள
உசுஅ	நாகமெய்தபடலம்	உரூ
ஈஎஉ	நாரைக்குமுத்திகொடுத்தபடலம்	உடு
உஉஉ	கூடற்காண்டம்-நான்மாடக்கூடலானபடலம்	உசு
சூஉ	பதிகம்	கடு
சசுச	பரிசரியாக்கியபடலம்	சுசு
ஈசடு	பலகையிட்டபடலம்	கஅ
உடுO	பழியஞ்சினபடலம்.	சச
ஈசுடு	பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம் ...	கஅ
ஈடுடு	பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம் ...	சுஈ
சகஉ	பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்	சுஅ
ஈ	பாயிரம்	ஈO
சO	புராணவரலாறு	உடு
சளஈ	மண்சுமந்தபடலம்	ககச
கடுள	மலயத்துவசனையழைத்தபடலம்	ஈக
உOடு	மாணிக்கம்விற்றபடலம்	கஈ
உடுள	மாபாதகந்தீர்த்தபடலம்	சக
ஈகச	மாமனுகவந்துவழக்குரைத்தபடலம் ...	ஈள
உளக	மாயப்பசுவைவதைத்தபடலம்	ஈஅ
உசசு	மாறியாடினபடலம்	உக
டுடு	மூர்த்திவிசேடம்	ஈள
உளள	மெய்க்காட்டிட்டபடலம்	சக
ககஉ	மேருவைச்சண்டாலடித்தபடலம்... ...	சக
உஈச	யானையெய்தபடலம்	சஉ
ஈஉO	வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்	சுஅ
உகக	வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடலம் ...	கக
சஉஈ	வலைவீசினபடலம்	சுச
உஅடு	வளையல்விற்றபடலம்	ஈசூ
டுகச	வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடலம்	டுடு
சஈஉ	வாதவூரடிகளுக்குபதேசஞ்செய்தபடலம் ...	அசூ
உக	விடையிலச்சினையிட்டபடலம்	ஈO
உசO	விருத்தகுமாரபாலரானபடலம்	ஊஊ
ஈஈO	விறகுவிற்றபடலம்	எO
கசஈ	வெள்ளியம்பலத்திருக்கூத்தாடியபடலம் ...	உஅ
அஉ	வெள்ளையானைச்சாபந்தீர்த்தபடலம் ...	ஈக
ககக	வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம்	சஉ

உ

கணபதிதுணை.

பரஞ்சோதிமாமுனிவர்

அருளிச்செய்த

மதுரை யறுபத்துநான்கு திருவிளையாடற்

போற்றிக்கலிவெண்பா.

காப்பு.

நாற்றிக்கும் போற்று நதிமதுரைச் சொக்கரையாம்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச் - சீற்றமதன்
றைக்குஞ் சரமுகத்தான் சாயவிழித் தோனுதவு
கைக்குஞ் சரமுகத்தான் காப்பு.

நூல்.

பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனூர்
தீமை விருத்திரனைச் செற்றபழி—போமாறு
பொற்கமலந் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம்போற்றி—நற்றவத்தோ
ரீசனூர்ச் சாத்து மெழின்மலரைக் கால்சிதைத்த
வாசவனூர் வெள்ளானை மண்ணிழிந்து—பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள்சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி—நல்வணிகன்
கண்டுவந்து கூறக் கனவினருட் சித்துருவங்
கொண்டுவந்து காடெறிந்து கோநகரம்—கண்டிடனைக்
கொத்தரு நிம்பக் குலசே கரனையெதிர்
சித்தரா யாட்கொண்ட சீர்போற்றி—பத்தி
மலையத் துவசன் மகந்தன்னின் மூன்று
முலையுத் தமியாய் முளைத்துக்—கலைமுழுதுங்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச்
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி—கொற்றமணித்
தேரேறி யெட்டுத் திசைவென்று நந்திகணப்
போரேறி வென்றெறிக்கும் போதிலொரு—வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொம்பைமணஞ் செய்துமுடி
மங்கலஞ் செய்த வளம்போற்றி—யங்கனக

மன்றுடல் வேட்டவிரு மாதவர்க்கு வெள்ளிமன்று
ணின்றுடிக் காட்டு நிலைபோற்றி—குன்றமென
மூன்ன மலைபசித்தீ மூளுங் குறள்வீரற்
கன்னமலை யீந்த வருள்போற்றி—பின்னுமவன்
வெய்யபசிக் கன்னக் குழியுநீர் வேட்கைக்கு
வைகையுந் தந்த வரம்போற்றி—யையதனே
யீன்றுள் கடலாட வேண்ட வெழுகடலுஞ்
சான்று வரநிறுத்துந் தாள்போற்றி—வான்றுழ
வாழுமலை யத்துவச மன்னனேக்கூஉய்த் தேவியோடு
மாழி படிவித்த வருள்போற்றி—வேள்விவரு
வில்வளைக்கை நங்கை விரலுக் கிரகுமரச்
செல்வனைப் பெற்ற திறம்போற்றி—செல்வனுக்கு
மன்றன் முடித்து வளைசெண்டு வேல்கொடுத்து
வென்றிமுடி சூட்டும் விறல்போற்றி—வன்றிறல்வேல்
வேலை சுவற விடுத்துக் கிரகுமரன்
ஞாலம் புரந்த நலம்போற்றி—வேல்வலக்கைச்
சேயனைய வுக்ரன் றிகிரியெறிந் திந்திரன்போர்
சாயமுடி சிந்து சயம்போற்றி—யாயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேரு மணிமுடிமேற்
செண்டெறிந்து வைப்பெடுத்தச் சீர்போற்றி—பண்டொருநா
ளாறறிய வந்தணருக் காதி மறைப்பொருளைத்
தேற விரித்த திறம்போற்றி—யீறடைந்த
தென்னன் குமரன் றிருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்றநலம்போற்றி—நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
தூன்றுமுகி ஞன்கேவுஞ் சூள்போற்றி—கன்றியவன்
வான்மாரி யேழு விடுப்பமழை நான்கும்போய்
நான்மாட மான நலம்போற்றி—தேனிதழி
வைத்த முடிமறைத்து மாடநக ரெங்கெங்குஞ்
சித்தரா யாடியருள் சீர்போற்றி—சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக்கல் யானைக்குத்
தின்ன வளித்த திறம்போற்றி—தென்னவன்மேல்
வெங்க ணமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரந் தொட்டெய்த சீர்போற்றி—தொங்குதிரை
மூப்பிளைய காளை முலையுண் குழவியெனக்
கோப்பருவங் கொண்ட குணம்போற்றி—மாப்பெரியோர்
தேறுநடந் தன்னையொரு தென்னன் றனக்கிரங்கி
மாறிநடஞ் செய்த மலர்போற்றி—யாறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப நாடு மறப்பழியை
யஞ்சி வெளிசெய்த வறம்போற்றி—வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் றந்தை தனைவதைத்த
தீயபழி தீர்த்தவருட் சீர்போற்றி—தாயனைய
வாசான் மனைவிதன்மே லாசைவைத்த மாணவனைக்

கூசாமற் கொன்ற கொலைபோற்றி—மாசமணர்
வல்வித்தை செய்துவிடு வண்ணஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்ல குணம்போற்றி—வல்லமணர்
கூரியகோட் டானை வரவிடுப்பக் கொல்லேற்றூல்
வீரியஞ் சாய்த்த விறல்போற்றி—தாரணியில்
வெந்திறல்வேன் மீனவன்முன் மெய்க்காட்டிட் டன்புடைய
மந்திரியைக் காத்த வளம்போற்றி—நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற்குவை தந்த புகழ்போற்றி—நற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமட வார்க்குவளை
கையேற்றி மாலேற்றுங் கைபோற்றி—மையீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்
கட்டசித்தி யீந்த வருள்போற்றி—கட்டவிழார்த்
தாரார்க் கரையிரவிற் சூழ்திறந்து காப்படைத்துச்
சீரார் விடைபொறித்த சீர்போற்றி—யாராலே
மூண்டபொருந் தென்னன் மூனைப்போர்க்குத் தண்ணீர்தந்
தாண்ட கருணை யறம்போற்றி—மீண்டியன்மால்
வன்மனத்துக் கெட்டான் வடிவெடுத்துப் பொன்னனையா
ணன்மனையிற் சென்ற நடைபோற்றி—தென்னனெதி
ராயிர வாம்பரிக்கோ ராடவனே யோடையினில்
வீய வலந்திரித்த வேல்போற்றி—தூயவள
மொல்கு மடியார்க் குலவாத் தனிக்கோட்டை
நல்குங் கருணை நலம்போற்றி—நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி—கோமகனே
யாட்டிய வன்பழிதீர்த் தாண்டச் சிவலோகம்
காட்டி யருள்தருணைக் கண்போற்றி—பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த
நாண மிலாத நடைபோற்றி—பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டுந் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம்போற்றி—வந்திறைஞ்சி
யற்பொழியு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும் பாணனுக்குப்
பொற்பலகை யிட்ட புகழ்போற்றி—கற்பதனன்
மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றுடன்
றோட்சுமையாத் தாங்குவித்த சூன்போற்றி—காட்சிபெற
மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
தாயாய் முலைகொடுத்த தாய்போற்றி—வீயாத
வேனமிரண் டாறனையு மீராறு மந்திரியா
மீனவனுக் கீந்த விறல்போற்றி—மானவலி
யெய்த்தெளிய னன விரும்புட் குபதேசம்
வைத்தவலி தந்த வரம்போற்றி—சித்தநெகிழ்
பத்தியினூற் சூழ்ந்தவழி பாடுசெய்யு நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி—சித்தரணி

கோளரவு நான்மாடக் கூடலே யாலவாய்
வாளகிரி போல்வளைந்த மாண்போற்றி—கோளமரிற்
சுந்தரப்பே ரம்பெய்து சோழன் கடற்சேனைக்
கந்தரநா டுந்த வருள்போற்றி—செந்தமிழ்நூ
லாய்ந்தவர் கல்வி யளந்தறியும் பொற்பலகை
யீந்த கருணை யிசைபோற்றி—வேந்தனிடைச்
சொற்சுவையாற் பாட லருகெத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ்போற்றி—நற்கீரன்
மெய்வெந் தழற்கண்ணுல் வெந்தோடை வீழ்ந்தோனைக்
கைதந்தே றிட்ட கரைபோற்றி—மைதவிர
வேதமுறுங் கீரற் கியற்றமிழைத் தென்மலய
மாதவனுற் றேற்றுவித்த மாண்போற்றி—போதணிந்த
மங்கல மண்டபத்து வந்தமன் சங்கத்தார்
சங்கையறத் தேற்றுந் தமிழ்போற்றி—சங்கையாய்ப்
போனவிடைக் காடன்பின் போய்ப்பாட்டல் கேட்டரசன்
மானநிதி நல்குவிக்கு மாண்போற்றி—மீன்மகளுய்ச்
செங்கையொரு நான்குடைய நிண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம்போற்றி—துங்கமறை
யான்றதிரு வாதவூ ரந்தணருக் கைத்தெழுத்தின்
மூன்றுபொரு டேற்று முறைபோற்றி—தேன்றதும்பும்
வேம்புநறுந் தாரான்முன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாத் தந்த வரம்போற்றி—வாம்பரிக
ணின்ற பரிக ணிணம்பிடுங்கி யூளையிட்டுத்
தின்று நரியாகுஞ் செயல்போற்றி—யன்றொருத்திக்
காளாய் முதுகி லடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம்போற்றி—கோளமணர்
வீறுகெடக் கூனிமிர்த்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறுபுனை வித்த நிலைபோற்றி—சீறமண
ரங்கனலும் வேகவதி யாறுந் தமிழறிய
வெங்கழுவி லேற்றும் விறல்போற்றி—யங்கொருத்தி
மன்றற்குச் சான்றுக வன்னி நிணறிலிங்க
மன்றழைத்துக் காட்டு மருள்போற்றி—யன்றிறைவ
ஞற்றிய வாட லறுபத்து நான்கனையுஞ்
சாற்றிய தென்மூனிவன் ருள்போற்றி—சாற்றிய
வண்ணங்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி—யண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருவாலவாய் என்னும் மதுரையில்
எழுந்தருளியிருக்கின்ற
சோமசுந்தரக்கடவுளது
திருவிளையாடற்புராணம்.

காப்பு.

சத்தியாய்ச் சிவ மாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற்பாதமே.

(அரும்பொருள் விளக்கம்.)

திருவாசகத்து "ஒருநாம மோருருவமொன்றுமிலான்" என்றவண்ணம் விளங்காகின்ற நிஷ்கள சிவமானது ஜீவர்களின் இச்சாஞானக் கிரியைகளே மறைக்கும் பேரிருளாகிய ஆணவமலத்தைத் தன்னிச்சைவழித் தனது சத்தியால் நிவிர்த்தி செய்தலால் 'சத்தியாய்' என்றும், அப்படி பராசத்தியேயுடலாகக்கொண்ட பரசிவம் சகளீகரியாவிடின் யாவுந் தொழிற்படா வாகலால் 'சிவமாகி' என்றும், பக்குவர்க்கு "யோகியா யோக முத்தியுதவுவன்" என்றவண்ணம் ஞானசாரியனுய் ஜீவர்கள் மும்மலமுமொழிந்து உலகாயதன் முதல் பாடாணவாதி யீருகச் சொல்லப்படும் பத்துவித முத்தியும் பழிபடுத்தியென வொழித்தடையத் திருவடி முத்தியை யருள் செய்தலால் 'தனிப்பரமுத்தி' என்றுங் கூறினர்.

தன்னிச்சைவழியென்றது சிவஞானசித்தியார் "சத்தன்வேண்டிற்றெல்லாமாஞ் சத்திதானே" என்றதனாலும், பராசத்தியுடம்பாகப் பரசிவம் நிற்குமென்றது "பொன்மை நீலாதிவண்ணம் பொருந்திடப் பளிங்கவற்றின், றன்மையாய் நிற்குமாபோல் சத்திதன்பேதமெல்லாம்,நின்மலன் ருளுய்த்தோன்றி நிலைமையொன் ருயே நிற்பன்" என்றதனாலு மறிதற்பாற்ரும்.

'ஆய்' என்றது செய்து என்னும்வாய்பாட்டெச்சத்தின் விகாரம் - 'ஆதி' என்பதும் அப்படியே - பாதம் அஃறிணை இயற்பெயராதலால் பாற்பொதுமை நீங்க 'நல்குவ' என அஃறிணைப்பன்மை முடிபுதந்தார் - இச்செய்யுள்பாடாண்டிணையுள் கடவுளவாழ்த்தென்னுந்துறை - தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் "அமரர்கள் முடியும் அறுவகையானும் - புரைதீர்காமம் புல்லிய பாங்கினும் ஒன்றன்பகுதியி னென்றுமென்ப" என்பது மிங்குணர்தற்பாற்ரும்.

எடுத்துக்கொண்ட விஷயம் தடையின்றி முடியுமாறு முன்னர் விநாயகக்கடவுளை வணங்குவது மரபாதலின் இந்நூலாசிரியரும் அம்மரபையொட்டி முதற்கண் விநாயகரைத் துதிசெய்யலாயினர்.

விநாயகபுராணம் - திருவவதாரப்படலம். "முராரியாதியதேவர்கண் முதலுறு முழுதுலகினிலுள்ளோர், விராவியாதொரு காரியமாயினும் விளங்குறச் செயவென்றே, பராவி யுன்னருச் சனைசெய்வோர் மனத்துறு பான்மைதந் தருளுன்னன், பிராதுசெய்பவர் காரியமூறுசெய் திடுதியென் றிவைசொல்வான்" என்றதனாலுந் தெளிக.

திருமால்முதலியோர் துயரொழியக் கசமுகாசுரனைக்கொல்லவெடுத்தருளிய மாறுபட்ட திருவுருவங்களினுந் திருமுகஞ் சிறந்ததாதலின் 'சித்தியானை' என்றார்.

சித்தியானை - சித்திவிநாயகர் (தலவிளையகரது திருநாமம்) - யானை என்றது பிரணவ சொரூபத்தை யுணர்த்தற் பொருட்டு.

மதுரைக்காண்டம்.



பாயிரம்.



வாழ்த்து.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மல்குகவேதவேள்விவழங்குகசுரந்துவானம்
பல்குகவள்ங்களெங்கும்பரவுகவறங்களின்ப
நல்குகவுயிர்கட்கெல்லாநான்மறைச்சைவமோங்கிப்
புல்குகவுலகமெல்லாம்புரவலன்செங்கோல்வாழ்க. (க)

நூற்பயன்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

திங்களணிதிருவாலவாயெம்மண்ண
றிருவிளையாட்டிவையன்புசெய்துகேட்போர்
சங்கநிதிபதுமநிதிச்செல்வமோங்கித்
தகைமைதருமகப்பெறுவர்பகையைவெல்வர்
மங்கலநன்மணம்பெறுவர்பிணிவந்தெய்தார்
வாழ்நாளுநனிபெறுவர்வானுடெய்திப்
புங்கவராயங்குள்ளபோகமூழ்கிப்
புண்ணியராய்ச்சிவனடிக்கீழ்நண்ணிவாழ்வார். (உ)

(க) பல்குக - பெருகுக. நான்மறைச்சைவம் - நான்கு வேதங்களின் சம்பந்தத்தையுடைய சைவம் - வேதம் உடலும் சைவம் உயிருமாதலைச் சிவப்பிரகாசம் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" என்பதனுற் றெளிவாம்.

(உ) சங்கநிதி பதுமநிதிச் செல்வமோங்கி - (குபேரனுடைய செல்வங்களாகிய) சங்கவடிவாகவும், தாமரைவடிவாகவுமுள்ள நிதிகளாற்போன்ற செல்வத்தால் மிகவுமுயர்ந்து திருவிளையாட்டு - இதுதனக்கிடமாகிய நூலையுணர்த்தலால் தானியாகுபெயர். வந்து - செயவென்னச்சத்திரிபு.

கடவுள்வணக்கம்.

சிவபெருமான்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வென்றுளேபுலன்களைந்தார்மெய்யுணருள்ளந்தோறுஞ்
சென்றுளேயமுதமூற்றுந்திருவருள்போற்றியேற்றுக்
குன்றுளேயிருந்துகாட்சிகொடுத்தருள்கோலம்போற்றி
மன்றுளேமாறியாடுமறைச்சிலம்படிகள்போற்றி. (க)

சிவசத்தி.

மேற்படி - வேறு.

சுரும்புமுரல்கடிமலர்ப்பூங்குழல்போற்றியுத்தரியத்தொடித்தோள்போற்றி,கரும்புருவச்சிலைபோற்றிகவுணியர்க்குப்பால்சுரந்தகலசம்போற்றி,யிரும்புமனங்குழைத்தென்னையெடுத்தாண்டவங்கயற்கணெம்பிராட்டி, யரும்புமிளநகைபோற்றியாரணநூபுரஞ்சிலம்புமடிகள்போற்றி. (ச)

பரசிவம்.

கலிநிலைத்துறை.

பூவண்ணம்பூவின்மணம்போலமெய்ப்போதவின்ப
மாவண்ணமெய்கொண்டவன்றன்வலியாணைதாங்கி
மூவண்ணறன்சந்நிதிமுத்தொழில்செய்யவாளா
மேவண்ணலன்ஞன்விளையாட்டின்வினையைவெல்வாம். (ஞ)

(க) உள்ளே புலன்வென்றுகளைந்தார் - விஞ்ஞானகலர். ஏற்றுக்குன்று - (குன்று+ஏறு) வெள்ளிமலைபோன்றரிஷபம். மன்று - இங்கு வெள்ளியம்பலம்.

(ச) சுரும்பு - வண்டு. முரலல் - ரீங்காரஞ் செய்தல். கடி - வாசனை. உத்தரீயம் - மேற்போர்வை. தொடி - கைவளை.

(ஞ) மெய், போதம், இன்பம் - சத்து, சித்து, ஆனந்தம் (சச்சிதானந்தம்). வலியானை - சத்தியின் ஏவல். மூவண்ணல் - பிரம - விட்டுணு - உருத்திரர். வாளாமேவு அண்ணல் - (சித்தாகவும் சடமாகவுமுள்ள சகலதத்துவங்களேயும், அருவாகவும் உருவாகவும் அருவுருவாகவுமுள்ள தத்துவ கர்த்தாக்களேயும் கடந்துநின்ற சுத்தசிவம் தன் சந்நிதிமாத்திரத்தான் இயக்கித்தான் இயங்காதுநிற்குந் தன்மையன் என்பதையுணர்த்தும்) அசைவற்றிருக்குங்கடவுள். வாளா இடைச்செல். விளையாட்டின் - திருவிளையாடல்களைப் புகழ்ந்து பேசுவதால்.வெல்வாம்-உளப்பாட்டுத்தன்மைவினைமுற்றுப்பன்மை.

சிற்சத்தி.

அண்டங்களெல்லாமணுவாகவணுக்களெல்லா
மண்டங்களாகப்பெரிதாய்ச்சிறிதாயினனு
மண்டங்களுள்ளும்புறம்புங்கரியாயினனு
மண்டங்களீன்றவணையென்பரறிந்தருல்லோர். (சு)

சோக்கலிங்க மூர்த்தி.

கலிவிருத்தம்.

பூவினையகன் பூமகணையகன்
காவினையகலுதிக்கடவுளர்க்
காவிநாயகனங்கயற்கண்ணிமா
தேவிநாயகன்சேவடியேத்துவாம். (எ)

அங்கயற்கண்ணம்மை.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பங்கயற்கணரியபரம் பரனுருவேதனக்குரியபடிவமாகி, யிங்க
யற்கணகனுலகமெண்ணிறந்தசராசரங்களீன்றுந்தாழாக், கொங்க
யற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்டியன் மகள்போற் கோலங
கொண்ட, வங்கயற்கண்ணம்மையிருபாதப்போ தெப்போது மகத்
துள்வைப்பாம். (அ)

சபாநாதர்

ணண்மையறிவானந்த வுருவாகியெவ்வுயிர்க்கு முயிராய்நின்ற
ணண்மையனல் வெம்மையெனத் தனேயகலா திருந்துசரா சரங்க
ளீன்ற, பெண்மையுருவாகியதன் ஞனந்தக்கொடிமகிழ்ச்சி பெருக
யார்க்கு, மண்மையதாயம்பலத்து ளாடியருள்பேரொளியை யகத்
துள்வைப்பாம். (கூ)

(சு) கரி - சாட்சி. உள் புறம்பு - உயிர்கண் மேல்நிற்றலால் இடவாகுபெயர். துணை - கணவன்; இது பண்பாகு பெயராய்ப் பண்பின்மேல் நின்றது.

(எ) ஆவிநாயகன் - உயிர்த்தலைவன்.

(அ) பங்கயன் - பிரமன். இதனிறுதியில் தொக்குநின்ற வும்மை திருமால்மேல் நிற்றலால் இறந்தது தழீஇய எச்சம். கொங்கை என்பது - கொங்கய் எனப்போலியாயிற்று.

(கூ) தன்னனந்தக்கொடி-சிவகாமவல்லி; தான்-சிவம், ஆனந்தம் - காமம், கொடி-வல்லி. அண்மையதாய்-அடைதற்கெளிதாய்.

சோமசுந்தரக்கடவுள்.

சடைமறைத்துக்கதிர்மகுடந் தரித்துநறுங்கொன்றையந்தார் தணந்துவேப்பந், தொடைமுடித்துவிடாகக் கலணைகற்றி மாணிக்கச் சுடர்ப்பூணேந்தி, விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமருமக ஞகிமீனநோக்கின், மடவரலைமணந்துலக முழுதாண்டசுந்தரனை வணக்கஞ்செய்வாம். (கo)

தடாதகைப்பிராட்டியார்.

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்றுமுடிபுனைந்துசெங் கோலோச்சி, முழுதுலகுஞ்சயங்கொண்டு திறைகொண்டுநந்திகண முனைப்போர்சாய்த்துத், தொழுகணவற்கணிமணமா லிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிச்செல்வந், தழைவுறுதன்னரசளித்தபெண ணரசியடிக்கமலந் தலைமேல்வைப்பாம். (கக)

வெள்ளியம்பலவாணர்.

பொருமாறிற்கினர்தடந்தோளொருமாறன்மனங்கிடந்தபுழுக் கமாற, வருமாறிற்கண்ணருவி மாறுது களிப்படைய மண்ணும் விண்ணு, முருமாறிப்பவக்கடல்வீழ்ந் தூசலெனத்தமொறி யுழலு மாக்கள், கருமாறிக்கதியடையக் கான்மாறி நடித்தவரைக் கருத் துள்வைப்பாம். (கஉ)

தக்ஷிணமூர்த்தி.

கல்லாவின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்களுல்வருக்கும் வாக்கிறந்தபூரணமாய் மறைக்கப் பாலா, யெல்லாமாயல்லதுமா யிருந்தவினை யிருந்தபடி யிருந்த காட்டிச், சொல்லாமற்சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கைவெல்வாம். (கங)

(கo) தணந்து - கழன்று. மீனநோக்கின் மடவரல்-மீனாட்சி.

(கக) செழியர்பிரான் - மலையத்துவசபாண்டியன்.

(கஉ) பொரும் ஆறில் - யுத்தம் செய்யுந்தறையில். புழுக்கம்-பரதநூற்றுறையிற் சென்ற இராஜசேகர பாண்டியன்தான் கால்தளர்ந்து வருந்தியதுபோல் சிவபெருமான் எடுத்த திருவடியும் வருந்து மென்றுமனம் புழுங்கினமை. வரும்ஆறில்-பெருக்குண்ட ஆற்றுவெள்ளம்போல்.

(கங) நால்வர் - சனகர், சனந்தரர், சனற்குமாரர், சனற்சுசாதர். சொல்லாமற் சொல்லுதல் - வாக்கினாற் சொல்லாது குறிப்பாற் சொல்லுதல் - நினையாமல் நினைதல் - தற்போதமாக நினையாமல் திருவருள் வழியாக நின்று சிந்தித்தல்.

சித்திவிநாயகக்கடவுள்.

உள்ளமெனுங்கூடத்தி லூக்கமெனுந்தறிநிறுவி யுறுதியாகத்
கள்ளரியவன்பென்னுந் தொடர்பூட்டியிடைபடுத்தித்தழுகட்பாசக்
கள்ளவினைப்பசுபோதக் கவளமிடக்களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம்பொழிசித்தி வேழத்தைநினைந்துவரு வினைகடீர்ப்பாம்

சுப்பிரமணியக்கடவுள்.

கறங்குதிரைக்கருங்கடலுங் காரவுணப்பெருங்கடலுங் கலங்
ககார்வந், துறங்குசிகைப்பொருப்புஞ்சூ ருரப்பொருப்பும் பிளப்ப
மறை யுணர்ந்தோராற்று, மறங்குலவுமகத்தழலு மவுணமடவார்
வயிற்றி னழலுமூள, மறங்குலவுவேலெடுத்த குமரவேள்சேவடிகள்
வணக்கஞ்செய்வாம். (கரு)

சரஸ்வதியம்மை.

பழுதகன்றநால்வகைசொன் மலரெடுத்துப்பத்திபூப் பரப்
பிதிக்கு, முழுதகன்றுமணந்துசுவை யொழுகியணிபெறமுக்கண்
மூர்த்திதாளிற், றெழுதகன்றவன்பெனுநார்தொடுத்தலங்கல்சூட்ட
வரிசசுரும்புந்தேனுங், கொழுதகன்றவெண்டோட்டு மூண்டகத்தா
ளடிமுடிமேற் கொண்டுவாழ்வாம். (கசு)

திருநந்திதேவர்.

வேறு.

வந்திறைபடியிற்றாழும்வானவர்மகுடகோடி
பந்தியின்மணிகள்சிந்தவேத்திரப்படையாற்றாக்கி
யந்தியும்பகலுந்தொண்டரலகிடுங்குப்பையாக்கு
நந்தியெம்பெருமான்பாதநகைமலர்முடிமேல்வைப்பாம். (கள)

(கச) தறுகண்-அஞ்சாமை. கவளம்-வாயளவுகொண்டவுணவு.

(கசு) நால்வகைச்சொல்-பெயர், வினை, இடை, உரி. நால்வகை மலர் - கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ. தொடுத்த-இதில் அகரவீறு தொக்குநின்றது. தோடு - இதழ்.

(கள) வேத்திரம்-பிரம்பு. அலகிடுங்குப்பை-பெருகிடுங்குப்பை.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

கடியவிழ்கடுக்கைவேணித்தாதைபோற்கனற்கண்மீனக்
கொடியனேவேவநோக்கிக்குறையிரந்தனையான்கற்பிற்
பிடியனநடையாள்வேண்டப்பின்னுயிரளித்துக்காத்த
முடியணிமாடக்காழிமுனிவனேவணக்கஞ்செய்வாம். (கஅ)

திருநாவுக்கரசுசுவாமிகள்.

அறப்பெருஞ்செல்விபாகத்தண்ணலேந்தெழுத்தாலஞ்சா
மறப்பெருஞ்செய்கைமாறுவஞ்சகரிட்டநீல
நிறப்பெருங்கடலும்யார்க்குநீந்துதற்கரியவேழு
பிறப்பெனுங்கடலுநீத்தபிரானடிவணக்கஞ்செய்வாம். (கக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அவைகலல்குலார்பா லாசைநீத்தவர்க்கேவீடு
தருவமென்றளவில்வேதஞ் சாற்றியதிலேவன்றன்னைப்
பரவைதன்புலவிதீர்ப்பான் கழுதுகண்படிக்கும்பானு
ளிரவினிற்றூதுகொண்டோ னினையடிமுடிமேல்வைப்பாம். (உ0)

மாணிக்கவாசகசுவாமிகள்

எழுதருமறைகடேறு விறைவனேயெல்லிற்கங்குற்
பொழுதறுகாலத்தென்றும் பூசனைவிடாதுசெய்து
தொழுதகைதலேமேலேறத் துளும்புகண்ணீருண்மூழ்கி
யழுதடியடைந்தவண்ப னடியவர்க்கடிமைசெய்வாம். (உக)

(கஅ) சினேவினே முதன்மேலேற்றிக் கடியவிழ்கடுக்கை என்றார். தமது தந்தையாராகிய சிவபெருமானேப்போல் தாமும்வேவ நோக்கலாதி செய்தருளினமையால் அவரோடொப்பத் தோன்ற நிற்றலின் இஃது உவம உருவகவணியாம்.

(கக) பிறப்பைக் கடலென உருவகஞ்செய்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைப் புணையாக உருவகஞ்செய்யாமையால் இஃது ஏகதேசவுருவகவணி.

(உ0) புலவி - ஊடல். கழுது - பேய். உயர்வுகுறித்தற் பொருளில் வந்த வும்மை 'கழுது' என்பதனிறுதியில் தொக்குநின்றது.

(உக) அறுகாலம் - விடியல், உச்சி. ஏற்பாடு, மாலே, யாமம், வைகறை.

தண்டியடிகள்-மற்றைநாயன்மார்.

வேறு.

தந்தைதாளொடும்பிறவித் தாளெறிந்துநிருத்தரிரு தாளைச்
சேர்ந்த,மைந்தர்தாள் வேதநெறிசைவநெறிபத்திநெறிவழாது வாய்
மெய், சிந்தைதானரனடிக்கே செலுத்தினராய்ச்சிவானுபவச்செல்
வராகிப், பந்தமாந்தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப்
பணிதல்செய்வாம். (௨௨)

முதனூல்வழி.

வேறு.

அண்ணல்பாற்றெளிந்தநந்தி யடிகள்பாற்சனற்குமார
னுண்ணிறையன்பிலுய்ந்து வியாதனுக்குணர்த்தவந்தப்
புண்ணியமுனிவன்சூதற் கோதியபுராணமூவா
றெண்ணியவிவற்றுட்காந்தத் தீசசங்கிதையின்மாதோ. (௨௩)

நூல்செய்தற்குக்காரணம்.

அறைந்திடப்பட்டதாகு மாலவாய்ம்புகழ்மையத்தச்
சிறந்திடும்வடநூறன்னைத் தென்சொலாற்செய்தியென்றிங்
குறைந்திடும்பெரியோர்கூறக் கடைப்பிடித்துறுதியிந்தப்
பிறந்திடும்பிறப்பிலெய்தப் பெறுதுமென்றுள்ளந்தேரு. (௨௪)

மொழிபெயர்த்தவிதம்.

திருநகர்தீர்த்தமூர்த்திச் சிறப்புமூன்றந்தமூர்த்தி
யருள்விளையாடலெட்டெட் டருச்சனைவினையொன்றுக
வரன்முறையறுபத்தெட்டா மற்றவைபடலமாக
விரிமுறைவிருத்தச்செய்யுள் வகைமையால்விளம்பலுற்றேன். (௨௫)

அவையடக்கம்.

நாயகன்கவிக்குங்குற்ற நாட்டியகழகமாந்தர்
மேயவத்தலத்திலோர்க்கென் வெள்ளநிவுரையிற்குற்ற
மாயுமாறரிதன்றேனு நீர்ப்பிரித்தன்னமுண்ணுந்
தூயதீம்பால்போற்கொள்கச் சுந்தரன்சரிதந்தன்னை. (௨௬)

---

(௨௨) பந்தமென்னும் சிறப்புப்பெயர் தொடக்கென்னும் பொதுப்பெயரை விசேடித்து நின்றமையின் 'பந்தமாந் தொடக்கு' இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

(௨௪) உறுதி - ஆன்மலாபம்.

(௨௬) கழகம் - கடைச்சங்கம்.

கலிநிலைத்துறை.

கவைக்கொ ழுந்தழ ஞ்சுவை கண்டவு னிமையோர்
சுவைக்க வின்னமு தாயின துளக்கமில் சான்றோ
ரவைக்க ளம்புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்க ளம்புகுந் தேறுவ சிறியனேன் பனுவல். (உஎ)

பாய வாரியுண் டுவர்கெடுத் துலகெலாம் பருகத்
தூய வாக்கிய காரெனச் சொற்பொரு டெளிந்தோ
ராய கேள்வியர் துகளறுத் தாலவாயுடைய
நாய ஞர்க்கினி தாக்குப நலமிலேன் புன்சொல். (உஅ)

அல்லை யீதல்லை யீதென மறைகளுமண்மைச்
சொல்லி னுற்றுதித் தினிலக்குமிச் சுந்தரனுடைப்
கெல்லை யாகுமோ வெண்ணுரை யென்செய்கோ விதனைச்
சொல்லு வேனெனு மாசையென் சொல்வழி கேளா. (உக)

அரங்கேற்றிடம்.

அறுகாற் பீடத்துயர்மா லாழிகடைந் தமுதையரங் கேற்றுமாபோ
லறுகாற்பே டிசைபாடுங்கூடன்மான் மியத்தையருந் தமிழாற்பாடி
யறுகாற்பீ யெர்முடியார் சொக்கேசர் சன்னிதியி லமரர்சூழ
மறுகாற்பீடத்திருந்து பரஞ்சோதிமுனிவனரங்கேற்றினனே. (ங0)

பாயிரம் - முற்றுப்பெற்றது.

(உஎ) செவிக்களம் - செவியில். களம் - ஏழனுருபு.

(உஅ) தூயவாக்கிய - உண்பதற் குரியநீராக்கிய.

(உக) 'ஆகுமோ' 'செய்கோ, என்பவற்றின் ஈற்றிலுள்ள ஓகாரம் இரண்டனுள் முன்னது வினா, பின்னது அசைநிலை. 'செய்கு' தன்மை யொருமை வினைமுற்று.

(ங0) முதல்வரியிலுள்ள 'அறுகால்' இங்கு அற்றகால்களையுடைய (காலில்லாத) பாம்பையுணர்த்தி ஆதிசேடன் மேல் நின்றது. இரண்டாவது வரியிலுள்ள 'அறுகால்' ஆறுகால்களையுடைய வண்டு. மூன்றாவது 'அறுகு + ஆல்' - அறுகம்புல்லினால்.

பாண்டித்திருநாட்டுப்படலம்.

கலிநிலைத்துறை.

கறைநிறுத்திய கந்தரச்சுந்தரக்கடவு
ளுறைநிறுத்திய வாளிஞற்பகையிருளொதுக்கி
மறைநிறுத்திய வழியினல்வழுதியாய்ச் செங்கோன்
முறைநிறுத்திய பாண்டியநாட்டணியது மொழிவாம். (க)

தெய்வநாயக னீறணிமேனிபோற்சென்று
பௌவமேய்ந்துமை மேனிபோற்பசந்துபல்லுயிர்க்கு
மெவ்வமாற்றுவான் சுரந்திடுமின்னருளென்னக்
கௌவைநீர்சுரந்தெழுந்தனகூனைகுரன்மேகம். (உ)

ஓடித்துவாய்திறந்தொல்லெனவெல்லொலிமுழங்கத்
தடித்துவாள்புடைவிதிர்த்துநின்றிரசாபம்
பிடித்துளம்புகோடைமேற்பெய்துவெம்பெரும்போர்
முடித்துநாமெனவருதல்போன்மொய்த்தனகொண்மூ. (ஊ)

மூனிதனீள்வரைபுச்சிமேன்முழங்கிவானிவந்து
கனிதம் நீர்மழைபொழிவனதடஞ்சிலையிராமன்
ஈனிருனீர்மையாலாலவாய்க்கண்ணுதன்முடிமேற
புனிதநீர்த்திருமஞ்சனமாட்டுவான்போலும். (எ)

சுந்தரன்றிருமுடிமிசைத்துயரீராட்டு
நிந்திரன்றனையொத்தகாரெழிலிதென்மலைமேல்
வந்துபெய்வதனிமுதன்மௌலிமேல்வலாரி
சிந்துகின்றகைப்போதெனப்பன்மணிதெறிப்ப. (ஏ)

(க) வாள்தங்குவதற்குரிய விடம் உறையாதலின் 'உறை நிறுத்தியவாள்' என்றார். வாளேயுறையினின்றும் எடாமலே என்றபடி.

(உ) எவ்வம் - துன்பம் அஃதிங்குப்பிறவியின் வெப்பை யுணராதிருந்தது.

(ஊ) சாபம் - வில். கொண்மூ - மேகம்.

(எ) தனிதம்-முழக்கம். இதுமேகத்துக்காதலால் காரியவாகுபெயர். வான்தொழிற்பெயர்விகுதி.

(ஏ) கார்எழிலி - கரியமேகம். தென்மலை - பொதியமலை.

உடுத்ததெண்கடன்மேகலையுடையபார்மகடன்
னிடத்துதித்தபல்லுயிர்க்கெலாமிரங்கித்தன்கொங்கைத்
தடத்துநின்றிழிபாலெனத்தடவரைமுகடு
தொடுத்துவீழ்வனவிழுமெனத்துங்குவெள்ளருவி. (சு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கருநிறமேகமென்னுங்கச்சிணிகரக்கொங்கை
யருவியாந்தீம்பால்சோரவகன்சுனையென்னுங்கொப்பூழ்
பொருவில்வேயென்னுமென்றோட்பொதியமாஞ்சைலப்பாவை
பெருகுதண்பொருநையென்னும்பெண்மகப்பெற்றுளன்றே. (எ)

கல்லெனக்கரைந்துவீழுங்கடும்புனற்குழவிகானத்
தொல்லெனத்தவழ்ந்துதீம்பாலுண்டொரீஇத்திண்டோண்மள்ளர்
செல்லெனத்தெழிக்கும்பம்பைத்தீங்குரல்செவிவாய்த்தேக்கி
மெல்லெனக்காலிற்போகிப்பிணைதொறும்விளையாட்டெய்தி. (அ)

அரம்பைமென்குறங்காமாவினவிர்தளிர் நிறமாத்தெங்கின்
குரும்பைவெம்முலையாவஞ்சிக்கொடியிறுதுசுப்பாக்கூந்தல்
சுரும்பவிழ்குழலாக்கஞ்சஞ்சுடர்மதிமுகமாக்கொண்டு
நிரம்பிநீள்கைதைவேலிநெய்தல்சூழ்காவில்வைகி. (கூ)

பன்மலர்மாலைவேய்ந்துபானுவைப்போர்வைபோர்த்துத்
தென்மலைத்தேய்ந்தசாந்தமான்மதச்சேறுபூசிப்
பொன்மணியாரந்தாங்கிப்பொருநையாங்கன்னிமுன்னீர்த்
தன்மகிழ்கிழவனுகந்தழீஇக்கொகலந்ததன்றே. (கo)

(சு) இழும் - ஒலிக்குறிப்பு.

(எ) பொருநை - தாம்பிரபர்ணி.

(அ) கல் - ஒல் - இவையிரண்டும் ஒலிக்குறிப்புகள். செல் மேகம்.

(கூ) அரம்பை - வாழை - நுசுப்பு - இடை. கைதை - தாழை.

(கo) மான்மதம் - கஸ்தூரி. கன்னி - இதுபொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் கலந்ததுஎன அஃறிணைமுடிபுதந்தார்.

வல்லேதாயிருபால்வைகுஞ்சிவாலயமருங்குமீண்டி
முல்லேயானேர்ந்துத்தேனுந்திரைக்கையாண்முகத்துவீசி
நல்லமான்மதஞ்சாந்தப்பிதுவிரைமலர்தூய்நீத்தஞ்
செல்லலாற்பூசைத்தொண்டின்செயல்வீசுமாக்கள்போலும். (கக)

அரும்பவிழனங்கவாளியலேதரவாகம்பொன்போர்த்
திரங்கிவாலன்னமேந்தியிருகையுஞ்சங்கஞ்சிந்தி
மருங்குசூழ்காஞ்சிதள்ளிவரம்பிறவொழுகும்வாரி
பரம்பரற்கையம்பெய்யும்பார்ப்பனமகளிர்போலும். (கஉ)

உரைபடுமணியும்பொன்னும்வைரமுங்குழையும்பூட்டி
யரைபடுமகிலுஞ்சாந்தமப்பியின்னமுதமூட்டிக்
கரைபடுமருதமென்னுங்கன்னியைப்பருவநோக்கித்
திரைபடுபொருநைநீத்தஞ்செவிலிபோல்வளர்க்குமாதோ. (கங)

மறைமுதற்கலைகளெல்லாமணிமிடற்றவனேயெனகு
நிறைபரமென்றும்பூதிசாதனமெறிவீடென்று
மறைகுவதறிந்திந்தேரூரறிவெனக்கலங்கியந்த
முறையின்வீணைர்ந்தோர்போலத்தெளிந்ததுமூரிவெள்ளம். (கச)

மறைவழிகிளைத்தவெண்ணெண்கலைகள்போல்வருநீர்வெள்ளத்
துறைவழியொழுகும்பல்கால்சோலைதண்பழனஞ்செய்தே
னுறைவழியோடையெங்குமோடிமன்னுடையார்க்கன்பர்
நிறைவழியாதவுள்ளத்தன்புபோனிரம்பிற்றன்றே. (கஙி)

கலிநிலைத்துறை.

இழிந்தமாந்தர்கைப்பொருள்களுமிகபரத்தாசை
கழிந்தயோனியர்கைப்படிற்றூயவாய்க்களங்க
மொழிந்தவாறுபோலுவரியுண்டுவர்கெடுத்தெழிலி
பொழிந்தநீரமுதாயினபுவிக்கும்வானவர்க்கும். (கசு)

ஈறிலாதவளொருத்தியேயைந்தொழிலியற்ற
வேறுவேறுபேர்பெற்றெனவேலைநீரொன்றே

(கக) ஆன் ஐந்து – பஞ்சகவ்வியம். அவை பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பனவாம்.

(கஉ) பார்ப்பன மகளிர் – தாருகாவனத்து ரிஷிபத்தினிகள்.

(கச) பூதி – விபூதி. சாதனமென்றது பஞ்சாட்சர ஜப முதலியவற்றை.

யாறுகால்குளங்கூவல்குண்டகழ்கிடங்கெனப்பேர்
மாறியீறில்வான்பயிரெலாம்வளர்ப்பதுமாதோ. (கஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

களமர்கள்பொன்னேர்பூட்டித்தாயர்வாய்க்கனிந்தபாடற்
குளமகிழ்சிறாரினேறுமொருத்தலுழுவகைதூங்க
வளமலிமருதம்பாடிமனவலிகடந்தோர்வென்ற
வளமருபொறிபோலேவலாற்றவாள்வினையின்மூண்டார். (கஅ)

பலநிறமணிகோத்தென்னப்பன்னிறவேறுபூட்டி
யலமுகவிரும்புதேயவாள்வினைக்கருங்கான்மள்ளர்
நிலமகளுடலங்கீண்டசால்வழிநிமிர்ந்தசோரிச்
சலமெனநிவந்தசெங்கேழ்த்தழன்மணியிமைக்குமன்னே. (கக)

ஊறுசெய்படைவாய்தேயவுழுநருநீர்கால்யாத்துச்
சேறுசெய்குநருந்தெய்வந்தொழுதுதீஞ்செந்நெல்வீசி
நாறுசெய்குநரும்பேர்த்துநடவுசெய்குநருந்தெவ்வின்
மாறுசெய்களைகட்டோம்பிவளம்படைக்குநருமானூர். (உ0)

பழிபடுநறவந்தன்னைக்கடைசியர்பருகிச்செவ்வாய்
மொழிதடுமாறவோர்வைமுகத்திதழுறுவரோன்ற
விழிசிவந்தூழலக்கூந்தன்மென்றுகில்சோரவுள்ளக்
கழிபெருங்களிப்புநல்கிக்கலந்தவொத்தன்றே. (உக)

பட்பகையாகுந்தீஞ்சொற்கடைசியர்பவளச்செவ்வாய்க்
குட்பகையாம்பலென்றுமொண்ணறுங்குவளைநீலங்
கட்பகையாகுமென்றுங்கமலநன்முகத்துக்கென்றுந்
திட்பகையாகுமென்றுஞ்செறுதல்போற்கனைதல்செய்வார். (உஉ)

கடைசியர்முகமுங்காலுங்கைகளுங்கமலமென்னூர்
படைவிழிகுவளையென்னூர்பவளவாய்குமுதமென்னூ
ரடையவுங்கனைந்தார்மள்ளர்பகைஞராயடுத்தவெல்லை
யுடையவஞ்சினையாற்றலொறுப்பவர்க்குறவுண்டாமோ. (உங)

(கஅ) அலமரு எனற்பாலது அளமரு எனப் போலியாயிற்று.

(உ0) உழுநரும், செய்குநரும், படைக்குநரும் என்பவற்றின்கணுள்ள நகரவிடைநிலை நிகழ்காலத்தின்மேல் நின்றது.

(உஉ) செய்வார் - இதில் வகர இடைநிலை இறந்தகாலத்தைக் காட்டிநின்றது.

புரையறவுணர்ந்தோர் நூலின்பொருளினுளடக்கியந்நூல்
வரையறைகருத்துமானவளர்கருப்புறம்புதோன்றிக்
கரையமைகல்விசாலாக்கவிஞர்போலிறுமாந்தந்நூ
லுரையெனவிரிந்துகற்பின்மகளிர்போலொசித்ததன்றே. (உச)

அன்புறுபத்திவித்தியார்வநீர்பாய்ச்சுந்தொண்டர்க்
கின்புருவானவீசனின்னருள்வினையுமாபோல்
வன்புறுகருங்கான்மள்ளர்வைகலுஞ்செவ்விநோக்கி
நன்புலமுயன்றுகாக்கவிளைந்தனநறுந்தண்சாலி. (உடு)

அகனிலவேறுபாட்டி னியல்செவ்வியறிந்துமள்ளர்
தகவினுமுயற்சிசெய்யக் காமநூல்சாற்றுநான்கு
வகைநலார்பண்புசெவ்வி யறிந்துசேர்மைந்தர்க்கின்ப
மிகவினாபோகம்போன்று விளைந்தனபைங்கூழெல்லாம். (உசு)

கொடும்பிறைவடிவிற்செய்தகூனிரும்பங்கைவாங்கி
முடங்குகால்வரிவண்டார்ப்பமுள்ளரைக்கமலநீல
மடங்கவெண்சாலிசெந்நெல்வேறுவேறரிந்தீடாக்கி
நெடுங்களத்தம்பொற்குன்றநிரையெனப்பெரும்போர்செய்தார். ()

கற்றையைகளைந்துதூற்றிக்கூப்பியூர்க்காணித்தெய்வ
மற்றவர்க்கற்றவாறீந்தளவைகண்டாறிலொன்று
கொற்றவர்கடமைகொள்ளப்பண்டியிற்கொடுபோய்த்தென்னு
மற்றவர்சுற்றந்தெய்வம்விருந்தினர்க்கூட்டியுண்பார். (உஅ)

சாறுகெட்டியெள்ளுச்சாமைகொள்ளிறுங்குதோரை
யாறிடுமதமால்யானைப்பழுக்குலையவரையேனல்
வேறுபல்பயறுடின்னபுன்னிலவினைவுமற்று
மேறுபண்டியேற்றியிருநிலங்கிழியவுய்ப்பார். (உக)

துறவினரீசனேசத்தொண்டினர்பசிக்குநல்லூண்
டிறவினைப்பிணிக்குத்தீர்க்குமருந்துடற்பனிப்புக்காடை

(உடு) சாலி - நெற்பயிர்கள்.

(உசு) கான்குவகை கல்லார் - பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

(உஎ) கூன் இரும்பு - அரிவாள்.

(உக) இறுங்கு - சோளம். தோரை - மலைநெல். யானைப்பழக்குலை - யானை விலாப்புடைபோற் பருத்த வாழைக்குலை.

யுறைவிடம்பிறிதுகல்லியவரவரொழுகிச்செய்யு
மறவினையிடுக்கணீக்கியருங்கதியுய்க்கவல்லார். (கூ0)

நிச்சலுமீசனன்பர்நெறிப்படிற்சிரார்மேல்வைத்த
பொச்சமிலன்புமன்னர்புதல்வரைக்கண்டாலன்ன
வச்சமுங்கொண்டுகூடியடிபணிந்தினியகூறி
யிச்சையாரெழுகியுள்ளக்குறிப்பறிந்தேவல்செய்வார். (கூக)

கறைபகெனிதேன்பெய்தபாலொடுநறுநெய்வெள்ள
நிறைபடுசெம்பொன்வண்ணப்புழுக்கலானிமிர்ந்தசோறு
குறைவறவுண்டுவேண்டும்பொருள்களுங்கொண்மினென்ன
மறைமுதலடியார்தம்மைவழிமறித்தருத்துவார்கள். (கூஉ)

பின்னெவனுரைப்பதந்தப் பெருந்தமிழ்நாடாங்கன்னி
தன்னிடையூர்களென்னு மவயவந்தாங்கச்செய்த
பொன்னியற்கலனேகோயின் மடமறப்புறநீர்ச்சாலை
யின்னமுதருத்துசாலை யெனவுருத்திரிந்ததம்மா. (கூங)

* திணைமயக்கம்—கலிநிலத்துறை.

இன்றடம்புனல் வேலிசூழிந்நிலவரைப்பிற்
குன்றமுல்லைதண் பணைநெய்தல்குலத்திணைநான்கு
மன்றவுள்ளமற் றவைகிற்க மயங்கியமரபி
னொன்றொடொன்றுபோய் மயங்கியதிணைவகையுரைப்பாம். (கூச)

கொல்லையானிரை மேய்ப்பவர்கோழிணர்க்குருந்தி
னெல்லைதாயகிற் படர்கறிக்கருந்துணருருப்ப

(கூஉ) செம்பொன்வண்ணப்புழுக்க லானிமிர்ந்த சோறு - பருப்புச்சோறு.

(கூச) திணைநான்கு - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பாலை இயற்கைத்திணையன்றென்பது "முல்லையுங்குறிஞ்சியுமுறை மையிற்றிரிந்து, நல்லியல்பழிந்து நடுங்கு துயருறத்தப், பாலை யென்பதோர் படிவங்கொள்ளும்." என்பதனுற்றெளிவாம்.

மயங்கியமரபின் என்றதற்கு - அணுலோமன் பிறதிலோமன் முதலிய மரபறியக்கூடாதார்போலெனப் பொருள்கொள்க.

* ஒருநிலத்தின் கருப்பொருள் மற்றொருநிலத்தின் கருப் பொருளுடன் வந்து கூடுதலே திணைமயக்கமாம்.

முல்லைசோறெனத் தேன்விராய்முத்தினழைசிற்றி
லெல்லையாயமோ டூபெவெயின்சிறுமகளிர். (௩௫)

கன்றெருங்களிவண்டுவாய் நக்கலீர்ங்கரும்பு
மென்றுபொன்சொரிவேங்கைவா யுறங்குவமேதி
குன்றினந்தினைமேய்ந்து பூங்கொழுநிழன்மருதஞ்
சென்றுறங்குவசேவக மெனமுறச்செலீமா. (௩௬)

எற்றுதெண்டிரையெறிவளை யெயிற்றியரிழைத்த
சிற்றில்வாய்நுழைந்தழிப்பவச் சிறுமியர்வெகுண்டு
பற்றிலாரெனச்சிதறிய மனவணிபரதர்
முற்றிலாமுலைச்சிறுமியர் முத்தொடுங்கோப்ப. (௩௭)

முல்லைவண்டுபோய்முல்லையாழ் முளரிவாய்மருதம்
வல்லவண்டினப்பயிற்றிப்பின் பயில்வன மருதங்
கொல்லையான்மடியெறிந்தினங் குழவியென்றிரங்கி
யொல்லையூற்றுபால் வெள்ளத்துளுகள்வனவாளை. (௩௮)

கரும்பொற்கோட்டிளம்புன்னைவாய்க் கள்ளுண்கொளைச்
சுரும்புசெவ்வழிப்பாண்செயக் கொண்றைபொன்சொரிவ
வருந்தடங்கடல்வளையெடுத் தாழியான்கையி
லிருந்தசங்கென விறைகொளப் பூவைமேலெறிவ. (௩௯)

கழிந்ததெங்கிஞெண்பழம்பரீஇ முட்பலாக்கனிகீண்
டழிந்ததேனுவர்க்கேணிபாய்ந் தகற்றுவதுவனா
வழிந்ததேண்மடற்கேதகை மலர்கிழல்குருகென்
றெழிந்ததாமரைப்போதுபுக் கொளிப்பனகெண்டை. (௪0)

ஆறுசூழ்கழிப்புலால்பொரு தசைந்துகூன்கைதை
சோறுகால்வனவாம்பல்வாய் நிறப்பனதுணிந்து
கூறுவாரெனக்குவளைகண் காட்டிடக்கூடித்
தூறுவாரெனச்சிரித்தலர் தூற்றுவமுல்லை. (௪௧)

துள்ளுசேல்விழி நுளைச்சியர் சுறவொடுமருந்தக்
கள்ளுமாறவுங்கூனலங் காய்தினையவரை

---

(௩௬) தினை கதிர்மேல்நிற்றலால்முதலாருபெயர்.
(௩௭) எயிற்றியர் - வேடச்சிறுமியர். மனவு - அக்குமணி.
(௪0) பரீஇ - உயிரளபெடை. பரிவி - வீழ்ந்து.

கொள்ளுமாறவுங்கிழங்குதேன் கொழுஞ்சுவைக்கன்ன
லெள்ளுமாறவுமளப்பன விடைக்கிடைமுத்தம். (கூ)

அவமிகும்புலப்பகைகடந் துயிர்க்கெலாமன்பா
நவமிகுங்குடைநிழற்றிமெய்ச் செய்யகோனடாத்திச்
சிவமிகும்பரஞானமெய்த் திருவொடும்பொலிந்து
தவமிருந்தரசாள்வது தண்டமிழ்ப்பொதியம். (கூ)

வானயாறுதோய்ந்துயரிய மலயமேமுக்கண்
ஞானநாயகனம்மலே போர்த்தகார்நால்வா
யானையீருரியம்மழை யசும்பதன்புண்ணீர்
கூனல்வான்சிலைகுருதிதோய் கோடுபோன்றன்றே. (கூ)

சுனையகன்கரைச்சூழல்வாய்ச் சுரும்புசூழ்கிடப்ப
நனையவிழ்ந்தசெங்காந்தண்மே ஞகிளைவேங்கை
சினையவிழ்ந்தவீகிடப்பபொன் சோலைகலத்தெண்ணீ
ரனையபொன்சுடுநெருப்பொடு கரியிருந்தனைய. (கூ)

குண்டுநீர்ப்படு குவளைவாய்க்கொழுஞ்சினைமரவம்
வண்டுகூப்பிடச் செம்மறுப்புதுமதுவார்ப்ப
வண்டர்வாய்ப்பட மறைவழிபொருள்சொரிந்தானெய்
மொண்டுவாக்கிமுத் தீவினைமுடிப்பவரனைய. (கூ)

அகிலுமாரமுந் தழன்மடித்தகழ்ந்தெறிந்தழல்கா
றுகிருமாரமுந் தொட்டெறிந்தைவனந்தாவிப்
புகரின்மால்கரி மருப்பிரும்வேலிகள்போக்கி
யிகலில்வான்பயி ரோம்புவவெயினர்தஞ்சீறூர். (கூ)

அண்டவாணருக் கின்னமுதருத்துவோர்வேள்விக்
குண்டவாரழற் கொழும்புகைகோலுமக்குன்றிற்
புண்டவாதவே லிறவுளர்புனத்தெரிமடுப்ப
வுண்டகாரகிற் றூமமுமொக்கவேமயங்கும். (கூ)

(கூ) உயிர்க்கு - உயிர்களிடத்து - கு-உருபுமயக்கம்.
(கூ) அசும்பு-துளி. கூனல்-வளைவு.கூனல்வான்சிலை - இந்திர [வில்.
(கூ) வீ - மலர்.
(கூ) மூத்தீ - ஆவகனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம்.
(கூ) ஐவனம் - மலைநெல். புகர் - குற்றம்.
(கூ) இறவுளர் - குறவர்.

கருவிவான்சொரி மணிகளுங்கழைசொரிமணியு
மருவிகான்றபன் மணிமகளுமகன்றலோகத்
திரவிகான்றசெம் மணிகளும்புனங்கவரினமான்
குருவிவீழ்ந்திடக் கொடிச்சியர்கோத்தெறிகவண்கல். (சகு)

மாயவன்வடி வாயதுவையமாலுந்திச்
சேயபங்கய மாயதுதென்னனுட்லர்மேற்
போயுமென்பொருட் டாயதுபொதியமப்பொருட்டின்
மேயநான்முக னகத்தியன்முத்தமிழ்வேதம். (சுo)

ஏகமாகிய மேருவும் பொதியமேயிரும்பொ
னுகுமேருவைச் சூழ்ந்தசாம்பூநதயாறு
நாகராடுதண்பொருனையே நாவலாலுடுத்த
போகபூமியும்பொருனைசூழ் பூமியேபோலும். (சுக)

சிறந்ததண்டமிழாலவாய் சிவலுலகாளுற்
புறந்தயங்கியநகரெலாம் புரந்தரன்பிரமன்
மறந்தயங்கியநேமியோ னுதியவாளே
ரறந்தயங்கியவுலகுரு வானதேயாகும். (சுஉ)

வளைந்ததுண்ணிடை மடந்தையர்வனமுலைமெழுகிக்
களைந்தகுங்குமக்கலவையுங் காசறைச்சாந்து
மளைந்ததெண்டிரைப் பொருனையோவந்தருஞாங்கர்
விளைந்தசெந்நெலுங் கன்னலும்வீசுமவ்வாசம். (சுங)

பொதியிலேவிளை கின்றனசந்தனம்பொதியி
னதியிலேவிளைகின்றன முத்தமந்திருழ்
பதியிலேவிளைகின்றன தருமமப்பதியோர்
மதியிலேவிளைகின்றன மறைமுதற்பத்தி. (சுசு)

கடுக்கவின்பெறு கண்டனுந்தென்றிசைநோக்கி
யடுக்கவந்துவந்தாடுவானுடலினிளைப்பு

(சகு) கொடிச்சியர் - குறப்பெண்கள்.

(சுங) காசறை - கஸ்தூரி.

(சுசு) மறைமுதல் - இது சிவமெருமானுக்குப் பரியாய நாம மாதலின் வருமொழி முன்னிலை மொழியின் ஈற்றெழுத்தாகிய லகர ஒற்று இரியாது நின்றது.

விடுக்கவாரமென்காறிரு முகத்திடைவீசி
மடுக்கவுந்தமிழ்திருச்செவி மாந்தவுமன்றே. (திஞ)

விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கணமேனும்
வடமொழிக்குரைத்தாங்கியன் மலயமாமுனிக்குத்
திடமுறுத்தியம்மொழிக்கெதி ராக்கியதென்சொன்
மடமகட்கரங்கென்பதுவழுதிநாடன்றே. (திக)

கண்ணுதற்பெருங் கடவுளுங்கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப்பசுந்தமிழ்தானே
மண்ணிடைச்சிலவிலக்கண வரம்பிலாமொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததாவெண்ணவும்படுமோ. (திஎ)

தொண்டர்நாதனைத் தாதிடைவிடுத்ததுமுதலே
யுண்டபாலனையழைத்தது மெலும்புமெண்ணுருவாக்
கண்டதும்மறைக்கதவினைத் திறந்ததுங்கன்னித்
தண்டமிழ்ச்சொலோமறுபுலச் சொற்களோசாற்றீர். (திஅ)

வெம்மையால்வினைவஞ்சினும் வேந்தர்கோல்கோடிச்
செம்மைமாறினும்வறுமைநோய் சிதைப்பினுஞ்சிவன்பாற்
பொய்ம்மைமாறியபத்தியும் பொலிவுங்குன்றுவாய்த்
தம்மைமாறியும் புரிவதுதருமமந்நாடு. (திக)

உலகம்யாவையுமீன்றவ ளும்பருளுயர்ந்த
திலகநாயகிபரஞ்சுடர் சேயெனமூன்று
தலைவரான்முறை செய்தநாடிஃதன்றிச்சலதி
சுலவுபாரினுண்டாகுமோ துறக்கத்துமஃதே. (கூ0)

பாண்டித் திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆ படலம். உ-க்கு திருவிருத்தம்-கூ0.

(திஎ) கழகம் - சங்கம் - இங்கு முதலூழியிறுதிக் கண்ணிருந்த தலைச்சங்கமுதல் மூன்றையுங் குறித்து நின்றது.

(திஅ) கன்னி - அழிவின்மை.

(திக) பொலிவு விபூதி, உருத்திராக்ஷம், பஞ்சாட்சரமுதலிய னவாய சைவவினக்கங்கள்.

(கூ0) சலதி - கடல். சுலவல் - சூழ்தல்.

மதுரைத் திருநகரப்படலம்.

மங்கலம்புனை பாண்டிநாடாகியமகட்குச்
சங்கலம்புகை தோளிணைதடமுலையாதி
யங்கமாம்புறந் தழுவியநகரெலாமனைய
நங்கைமாமுக மாகியநகர்வளம்பகர்வாம். (க)

கொங்கையேபரங் குன்றமுங்கொடுங்குன்றுங்கொப்பூ
ழுங்கமேதிருச் சுழியலவ்வயிறுருற்றுலஞ்
செங்கையேடக மேனியேபூவணந்திரடோள்
பொங்கர்வேய்வனந் திருமுகமதுரையாம்புரமே. (உ)

வடிவின்மாநில மடந்தைமார்பிடைக்கிடந்திமைக்கப்
படிலாரமே பாண்டிநாடுரமேற்பக்கத்
திடிவின்மாமணி யதன்புறநகரெலாமிவற்று
ணடிவிலுயக மாமணிமதுரைமாநகரம். (ங)

திருமகட்கொரு தாமரைக்கூடமேதிருமான்
மருமகட்குவெண் டாமரைமாடமேஞானந்
தருமகட்குயோகத் தனிப்பீடமேதரையாம்
பெருமகட்கணி திலகமேயானதிப் பேரூர். (ச)

திக்கும்வானமும் புதையிருடின்றுவெண்சோதி
கக்குமாளிகை நிவப்புறுகாட்சியுங்கருண்
மிக்கவாலிதழ்த் தாமரைவெண்மகளிருக்கை
யொக்குமல்லது புகழ்மகளிருக்கையுமொக்கும். (ஞ)

புடைநகர்.

நெற்கரும்பெனக் கரும்பெலாநெடுங்கமுகென்ன
வர்க்கவான்கமு கொலிகலிதெங்கெனவளர்ந்த
பொற்கவின்குலத் தெங்குகார்ப்பந்தரைப்பொறுத்து
நிற்கநாட்டிய காலெனநிவந்ததண்பணையே. (சு)

சிவந்தவாய்க்கருங் கயற்கணுள்வலாரியைச்சீறிக்
கவர்ந்தவான்றருக்குலங்களே கடிமணம்வீசி

(சு) ஒருபொருளே மற்றொரு பொருளாக வறிதலின் இது மயக்கவணியாம்.

யுவந்துவேறுபல் பலங்களும்வேண்டினர்க்குதவி
நிவந்தகாட்சியே போன்றதுநிழன்மலர்ச்சோலை. (எ)

ஒல்லொலிக்கதிர்ச் சாலிகள்புறந்தழீஇயோங்க
மெல்லிலைப்பசுங் கொடியினுல்லீக்குறுபூக
மல்லலனுங்களத் தண்ணறனணிவிழாத்தருப்பைப்
புல்லொடும்பிணிப்புண்ட பொற்கொடிமரம்போலும். (அ)

சீதவேரியுண்டளிமுரல் கமலமேற்செருந்தி
போதவேரியுமலர்களுஞ் சொரிவனபுத்தேள்
வேதவேதியர்செங்கரம் விரித்துவாய்மனுக்க
ளோதவேமமு முதகமுமுதவுவாரினைய. (கூ)

விரைசெய்பங்கயச்சேக்கைமேற் பெடையொடுமேவி
யரசவன்னநன்மணஞ்செய வம்புயப்பொய்கை
திரைவளைக்கையா னுண்டெளிசெறிந்தபாசடையா
மரகதக்கலத்தாளநீராஞ்சனம் வளைப்ப. (கo)

இரும்பினன்னதோள் வினைஞராரத்தெறிந்துவாய்மடுக்குங்
கரும்புதின்றிடியேற்றெழி காட்டியின்சாறு
சுரும்புசூழ்கிடந் தரற்றிடச்சொரிந்துவெஞ்சினத்தீ
யரும்புகட்களிறெத்தன வாலையெந்திரங்கள். (கக)

பள்ளநீர்குடைந்தஞ்சிறைப் பாசிபோர்த்தெழுந்த
வெள்ளையன்னத்தைக் காரனமெனப்பெடைவீழ்ந்த
வுள்ளமீட்டலமரச்சிற குதறியுள்ளன்பு
கொள்ளவாசையிற்றழீஇக்கொடு குடம்பைசென்றணையும். (கஉ)

இரவியாழியொன்றுடையதே ரீர்த்தெழுமிமையாப்
புரவிநானிமிர்த்தயில்வன பொங்கர்வாய்த்தளிர்கள்.

(எ) வலாரி - இந்திரன். தருக்குலம் - சந்தானம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகமாகிய பஞ்சதருக்கள்.

(கூ) ஏமம் - பொன். உதகம் - நீர்.

(கo) பாசடை - பசியவிலை. தாளநீராஞ்சனம்-முத்தாலாத்தி.

(கக) கரும்பாலையை யானைக் குவமித்தலின் இது செம்மொழிச்சிலேடை யுவமையணி.

(கஉ) குடம்பை - கூடு.

கரவிலார்மகத்தெழுபுகை கற்பகநாட்டிற்
பரவிவாட்டுவபனியெனப் பங்கயப்பொய்கை. (கஙூ)

இடைநகர்.

பிறங்குமாலவாயகத்துளெம் பிரானருளால்வந்
தறங்கொழுத்தமா யெழுகடலமர்ந்தவாநோக்கிக்
கறங்குதெண்டிரைப் பெரும்புறக்கடலும்வந்திவ்வூர்ப்
புறங்கிடந்ததேபோன்றது புரிசைசூழ்கிடங்கு. (கச)

எறியும்வாளையுமடிக்கடி யெழுந்துடல்பரப்பிப்
பறியுமாமையும் வாளொடுகேடகம்பற்றிச்
செறியுநாண்மலர்கழியுஞ் சேண்டொடுபுரிசைப்
பொறியுமேயொன்றி யுடன்றுபோர்புரிவனபோலும். (கஙி)

கண்ணிலாதவெங்கூற்றெனக் கராங்கிடந்தலைப்ப
மண்ணினுரெவரேனுமிம் மதிவிடைவீழ்ந்தோர்
தெண்ணிலாமதிமிலைந்தவர்க் கொப்பெனச்சிலை
யெண்ணினுரிருணாக நீத்தேறினுமேலூர். (கசு)

குமிழலர்ந்தசெந்தாமரைக் கொடிமுழிழ்கோங்கி
னுமிழ்தரும்பரஞானமுண் மிழ்ந்தவாய்வேதத்
தமிழறிந்துவைதிகமுடன் சைவமுஞ்சார்த்து
மமிழ்தவெண்டிரைவைகையு மொருபுறத்தகழாம். (கஎ)

பிள்ளையும்பெடையன்னமுஞ் சேவலும்பிரியாக்
கள்ளமுண்டகச்செவ்வியாற் கண்டவர்கண்ணு
மூள்ளமுந்திரும்பாவகை சிறைப்படுத்தோங்கும்
புள்ளலம்புதண்கிடங்கிது புரிசையைப்புகல்வாம். (கஅ)

மாகமுந்தியகடிமதின் மதுரைநாயகர்கைக்
நாகமென்பதேதேற்றமந் நகர்மதில்விழுங்கி
மேகநின்றசைகின்றதவ் வெஞ்சினப்பணித
னாகமொன்றுதோலுரிபட நெளிவதேயாகும். (கக)

புரங்கடந்தபொற்குன்று கோபுரமெனச்சுருதிச்
சிரங்கடந்தவர்தென்னரா யிருந்தனர்திருந்தா
ருரங்கடந்திடவேண்டினு முதவிசெய்தவரால்
வரங்கடந்திடப்பெறவெதிர் நிற்பதுமாணும். (௨0)

(கஅ) கள்ள - உடைமைப் பொருளில்வந்த பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயரெச்சம். தண்கிடங்கு - நீரரண் - புரிசை. மதிலரண்.

சண்டபானுவுந்திங்களுந் தடைபடத்திசையு
மண்டகோளமும் பரந்துநீண்டகன்றகோபுரங்கள்
விண்டவாயிலால் வழங்குவவிடவராவங்காந்
தீண்டபோல்பவு மும்மிழ்வனபோல்பவுமுழலா. (உச)

மகரவேலையென்றியானேபோன் மழையருந்தகழி
சிகரமாலைசூழம்மதிற் றிரைக்கரந்தழாவி
யகழவோங்குநீர்வைகையா லல்லதுவேற்றுப்
பகைவர்சேனையாற் பொரப்படும்பாலதோவன்றே. (உஉ)

எல்லைதோவழித்தடைசெயு மிம்மதிற்புறஞ்சூழ்ந்
தொல்லைமேவலர்வளைந்துழி யுடன்றுபோராற்றி
வெல்லமள்ளரும் வேண்டுமோபொறிகளேவெல்ல
வல்லதம்மதிற் பொறிசெயுமறஞ்சிறிதுரைப்பாம். (உங)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மழுக்கள்வீசுவனஞ்சுபூசுமுனை வாள்கள்வீசுவனமுத்தலைக்
கழுக்கள்வீசுவனகுந்தமெயிரி காலவீசுவனகாலனை
ரெழுக்கள்வீசுவனகப்பணங்கள்விட மென்னவீசுவனவன்னெடுங்
கொழுக்கள்வீசுவனகற்கவண்கையிறு கோத்துவீசுவனவார்த்தரோ.

கஞ்சபில்குதூளைவா ளெயிற்றரவுகாகிமிர்த்தெறியுமலையரா,வெஞ்சி
னங்கொண்முழை வாய்திறந்துபொரு வாரைவிக்கிடவிழுங்குமாற்,
குஞ்சரங்கொடிய முசலம்வீசியெதிர் குறுகுவார்தலைகள்சிதறுமா,
லஞ்சுவெம்பொறி விசைப்பினுங்கடுகியபுலிப்பொறியமுக்குமால்.

எள்ளியேறுநரையிவுளிமார்பிற வெறிந்துகுண் டகழியிடைவிழத்
தள்ளிமீளுமுருள்கல்லிருப்புமுளை தந்துவீசியுடல்சிந்துமாற்
கொள்ளிவாயலகைவாய்திறந்துகனல் கொப்புளிப்பவுடல்குப்புறத்
துள்ளியாடுவனகைகள்கொட்டுவன தோள்புடைப்பசிலகூளியே.

துவக்குசங்கிலியெறிந்திழுக்குமறி தொடர்பிடித்தகை யறுக்கவிட், டுவக்குமொன்னலர்க டலைதோத்திருகி யுடனெருக்குமரநிலைகளாற், கவைக்கொழுத்தழல் கொளுத்திவீசுமெதிர் கல்லுருட்டியமொல்லனைச், சுவைக்கவெங்கண்மழை பெய்யுமட்டமணல் கொட்டுமேவலர்கள் கிட்டவே. (உஎ)

(உக) அங்காந்து - வாய்திறந்து.
(உசு) முத்தலைக்கழு - சூலம்.
(உசு) இவுளி - குதிரை. [ஒருவகை.
(உஎ) அரிதொடர்-துவக்கு (பந்தப்படக்கும்) சங்கிலிகளுன்

உருக்கியீயமழை பெய்யுமாலயவருக்குவட்டெருகு செம்பினீர், பெருக்கிவீசும் விடுபடையெலாமெதிர் பிடித்துவிட்டவர் தமைத் தெறச், செருக்கிவீசுகடைகற்றமாடமொடு சென்றுசென்றுதடி முரசொடும், பெருக்கியீளுகடை வையமேனடவி யெய்யும்வாளி மழை யெய்யுமால். (உஅ)

வெறிகொளம்பொறியை வெல்லினும்பொருது வெல்லுதற் கரியகாலனே, முறியவெல்லினும் வெலற்கருங்கொடிய முரணவாய மரரரணெலா, மறிவிஞனிறுகம்மியன்செயவு மரியவாயவனர்புரி யுமிப், பொறிகள்செய்யும்வினே யின்னபொன்னணி புரத்துவீதிக ளுரைத்துமால். (உக)

அகநகர்.

கலிநிலத்துறை.

கழையுந்தாமமுஞ்சுண்ணமு மணிநிழற்கலனுங்
குழையுந்தூபமுந்தீபமுங் கும்பமுந்தாங்கித்
தழையுங்காதலர் வரவுபார்த்தன்பகந்தழும்பி
விழையுங்கற்பினு ரொத்தனவிழாவருவீதி. (ஈ0)

ஆலநின்றமாமணிமிடற் றண்ணலானந்தக்
கோலநின்றசேவடிநிழல் குறுகினுர்குணம்போல்
வேலைநின்றெழுமதியெதிர் வெண்ணிலாத்தெண்ணீர்
காலநின்றன சந்திரகாந்தமாளிகையே. (ஈக)

சூன்றநேர்பளிக்குபரிகை நிரைதொறுங்குழுமி
நின்றபல்சராசரமு மந்நிழல்வாய்வெள்ளி
மன்றகம்பொலிந் தாடியமலரடிநிழல்புக்
கொன்றியொன்றறக் கலந்தபல்லுயிர்நிலையனைய. (ஈஉ

கறித்தருந்துபுற்குவைகழீஇக் காற்றெடர்பரியத்
தெறித்தகன்றயண் மரகதச்சித்திரத்தெற்றி.
யெறித்தபைங்கதிர்க் கொழுந்தையுமெட்டிநாவளைத்துப்
பறித்துமென்றுவாயசைப்பன பசலையான்கன்று. (ஈஈ)

(உக) யவனர் - சிற்பர்.

(ஈ0) விழா - திருவிழா

சிறுகுகண்ணவாய்க் காற்றெறிசெவியவாய்ப்பாச
மிறுகுகாலவாய்க் கோட்டுமானினம்வழங்காறுங்
குறுகுநுண்மருங் கிறுத்தெழுகோட்டுமானினம்போ
மறுகும்வண்டுசூழ்ந் திறைகொளமாண்மதகாறும். (நூசு)

மாடமாலையுமேடையுமாளிகைநிரையு
மாடரங்கமுமன்றிவேளன்னவர்முடியு
மேடவிழ்ந்ததாரகலமு மிணைத்தடந்தோளுஞ்
சூடுமாதரார்சீறடிப் பஞ்சுதோய்சுவடு. (நூஙி)

மருமச்செம்புன லாறிடமாறுகோட்டுப்
பருமச்செங்கண்மால்யானையின் பிணக்கையுமறைநூ
லருமைச்செம்பொரு ளாய்ந்தவர்க்கரும் பொருள்வோர்
தருமச்செங்கையு மொழுகுவதானநீராறு. (நூசு)

பரியமாமணி பத்தியிற் பதித்திருட்படலம்
பொரியவில்லிடக் குயிற்றிய பொன்னரமியமுந்
தெரியமாமுரசொலிகெழு செம்பொடைரக்கு
மரியமின்பயோதரஞ்சுமந் தாடுவகொடிகள். (நூஎ)

கலம்படும்புயத்தாடவர் மார்பமேற்புலவிக்
கலம்படர்ந்தபூண்முலையினர் காலெடுத்தோச்சச்
சிலம்பலம்பிசைமழுங்குமுன் னெழுமவர்தேர்ந்தார்ப்
புலம்புவண்டுநொந்தரற்றிய பொங்குபேரொலியே. (நூஅ)

தையலார்மதிமுகங்களுந் தடங்களுங்குழைய
மையளாவியவிழிகளு மாடமுங்கொடிய
கையுநாண்மலர்ப்பொதும்பருங் கறங்கிசைவண்ட
நெய்யவோதியும் வீதியுநீளறனெறிய. (நூகூ)

(நூசு) கோட்டு மானினம் - கொம்புகளை யுடைய யானைக் கூட்டம்.

(நூசு) பருமம் - கலசம்.

(நூஎ) அரமியத்திற் (நிலாமுற்றத்திற்) கட்டிய கொடிகள் அரிய (பசுநிறமுள்ள) மின்னும் பயோதரங் (மேகங்) களைச்சுமந்து ஆடுகின்றன எனவும், அரங்கில் (நடனசாலையில்) கொடிகள் (பூங் கொடிபோன்ற பெண்கள்) அரியமின் (மின்னலையொத்த இடை யையும்) பயோதரங் (கொங்கை) களையுஞ் சுமந்து ஆடுகின்றனர் கள் எனவுங் கூட்டிப் பொருள்கொள்க. முரசு - இங்கு மத்தளம்.

நூகூ) பொதும்பர் - சோலை.

மலருந்திங்கடோய்மாடமுஞ் செய்வனமணக்க
ளலருந்தண்டுறையுங்குடைந் தாடுதும்பி
சுலவுஞ்சோலையுமாதருந் தூற்றுவலர்கள்
குலவும்பொய்கையுமேகளுங் குறைபடாவண்ணம். (சo)

ஊடிஞரெறிகலன்களு மம்மனையுடன்பந்
தாடினர்பரியாரமு மடியிஞற்சிற்றில்
சாடினரொடுவெகுண்டகண் டதும்புமுத்திறைப்ப
வாடினர்பரிந்தில மாலையுங்குப்பை. (சக)

ஐயவெண்ணுரைவரம்பின தாகுமோவடிய
ருய்யமாமணிவிரிவளை விறகுவிற்றுழன்றேன்
பொய்யில்வேதமுஞ்சுமந்திடப் பொறுதகன்றாற்றுஞ்
செய்யதாண்மலர்சுமந்திடத் தவஞ்செய்ததெருக்கள். (சஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தோரணநிரைமென்காஞ்சி சூழ்நிலைநெடுந்தேரல்குற்
பூரண தம்பக்கொங்கைப் பொருவின்மங்கலமாமங்கை
தாரணிந்தாரந்தூக்கிச் சந்தகிமிர்ந்துபாலிச்
சீரணிமூலவெண்மூரல் செய்துவீற்றிருக்குமன்னே. (சங)

திங்களைச்சுண்ணஞ்செய்து சேறுசெய்தூட்டியன்ன
பொங்குவெண்மாடப்பந்தி புண்ணியம்பூசுந்தொண்டர்
தங்கண்மெய்வேடந்தன்னைத் தரித்தனசாலக்கண்கொண்
டங்கணன்விழவுகாண்பா னடைந்தெனமிடைந்தவன்றே. (சச)

தேரொலிகலினப்பாய்மான் சிரிப்பொலிபுரவிபூண்ட
தாரொலிகருவியைந்துந் தழங்கொலிமுழங்குகைம்மான்
பேரொலியெல்லாமொன்றிப் பெருகொலியன்றியென்றுங்
காரொலிசெவிமடாது கடிமணிமாடக்கூடல். (சஙி)

(சக) மூத்து இறைப்ப - நீரைச்சொரிய. ஈண்டு 'மூத்து' நீர் மேல் நிற்றலால் உவமையாகுபெயர். நித்திலம் - முத்து.

(சங) காஞ்சி - ஓர் ஆபரணம் (எண்கோவை.)

(சச) புண்ணியம் - விபூதி.

(சஙி) கருவியைந்து—தோல்-துளை-நரம்பு-கஞ்சம்-மிடறு.

பரத்தையர் வீதி.

இழிபவருயர்ந்தோர்மூத்தோ ரிளையவர்கழியாநோயாற்
கழிபவர்யாவரேனுங் கண்வுலப்பட்டுநெஞ்ச [டிப்
மழிபவர்பொருள்கொண்டெள்ளுக் கெண்ணெய்போ லளந்துகாட்
பழிபடுபோகம்விற்பா ராவணப்பண்புசொல்வாம். (சசு)

மெய்படமன்பினுர்போல் விரும்பினுர்க்கருத்துந்தங்கள்
பொய்படுமின்பம்யார்க்கும் புலப்படத்தேற்றுவார்போன்
மைபடுகண்ணுர்காமன் மறைப்பொருள்விளங்கத்தீட்டிக்
கைபடச்சுவராய்த்தோன்றச் சித்திரங்காணச்செய்வார் (சஎ)

திருவிற்கான்மணிப்பூணுகம் பலகையாத்தெண்முத்தார
வருவிக்கால்வரைமென்கொங்கைச் சூதொட்டியாடிவென்று
மருவிக்காமுகரைத்தங்கள் வடிக்கண்வேண்மார்பந்தைப்பக்
கருவிச்சூதாடிவென்றுங் கைப்பொருள்கவர்தல்செய்வார். (சஅ)

தண்பனிநீரிற்றேய்த்த மல்லிகைத்தாமமாற்றி
விண்பமெதியந்தீண்டும் வெண்ணிலாமுற்றத்திட்ட
கண்படையணைமேற்கொண்டு காமனுங்காமுற்றெய்தப்
பண்பலபாடிமைந்த ராவியைப்பரிசில்கொள்வார். (சக)

குரும்பைவெம்முலையிற்சிந்து சாந்தமுங்குழலிற்சிந்து
மரும்பவிழ்மாலைத்தாது மளிதுகர்ந்தெச்சிலாகிப்
பொரும்பரிக்காலிற்றூளாய்ப் போயரமாதர்மெய்யு
மிருங்குழற்காடுஞ்சூழ்போ யியன்மணம்விழுங்குமன்றே. (கO)

ஆலவாயுடையானென்று மங்கயற்கண்ணியென்றுஞ்
சோலைவாழ்குயிலினல்லார் சொல்வியாங்கொருங்குசொல்லும்
பாலவாங்கினிக்கள்பூவை பன்முறைகுரவனேது
நூலவாய்ச்சந்தக்கூட்டி நுவன்மறைச்சிறுரையொத்த. (கக)

ஒளவியமதர்வேற்கண்ணு ரந்தளிர்விரனடாத்துந்
திவ்வியநரம்புஞ்செவ்வாய்த் தித்திக்குமெழாலுந்தம்மிற்
கௌவியநீரவாகிக் காலையர்செவிக்காலோடி
வெவ்வியகாமப்பைங்கூழ் விளைதரவளர்க்குமன்றே. (கஉ)

(சக) நாற்றி - தொங்கவிட்டு.

(கக) தூல் - வேதம் - அவாய் - விரும்பி. சந்தைகூட்டி - ஒருசேரச்சொல்லி.

(கஉ) எழால் - கண்டத்தொனி.

கட்புலனுதியைந்து மூவப்புறக்கனிந்தகாமம்
விட்புலத்தவரேயன்றி வீடுபெற்றவரும்வீழ்ந்து
பெட்பமுற்றமுதுங்கைப்பப் பெருங்குலக்கற்பினூர்போ
னட்பிடைப்படுத்திவிற்கு நல்லவிருக்கையீதால். (திக)

வேளாளர்வீதி.

எழுக்கறுவாய்மைமாண்புங் கங்கைதன்மரபின்வந்த
விழுக்குடிப்பிறப்புமூவ ரேவியவினைகேட்டாற்று
மொழுக்கமுமமைச்சாய்வேந்தர்க் குறுதிசூழ்வினையுங்குன்ரு
விழுக்கறுமெழிச்செல்வர் வளமறுவியம்பலுற்றும். (திச)

வருவிருந்தெதிர்கொண்டேற்று நயனுரைவழங்குமோசை
யருகிருந்தடிசிலூட்டி முகமனன்கறையுமோசை
யுரைபெறுதாழ்பாராட்டி மோசைகேட்டுவகைதுள்ள
விருந்தியளிக்குமோசை யெழுகடலடைக்குமோசை. (திஞ)

அருந்தினரருந்திச்செல்ல வருந்துகின்றருமாங்கே
யிருந்தினரிதருந்தாங்கிற்க வின்னமுதட்டப்பின்னும்
விருந்தினர்வரவுநோக்கி வித்தெலாம்வயலில்வீசி
வருந்திவிண்ணேக்குமோரே ருழவர்போல்வாடிநிற்பார். (திசு)

வானமுந்திசையும்பொங்கும் புகழ்மையும்வானம்பேணு
ஞானமும்பொறையுங்குன்ரு நன்றியுமூக்கப்பாடிக்
சானமுங்கொடையுமன்பும் வரிசையுந்தகைசாணண்பு
மானமுந்தவஞ்செய்தீன்ற மகவுபோல்வளர்க்கவல்லார். (திஎ)

வணிகர்வீதி.

புல்லியோர்பண்டங்கொள்வார் வினவினப்பொருடம்பக்க
லில்லெனினினமாயுள்ள பொருளுரைத்தெதிர்மறுத்து
மல்லதப்பொருளுண்டென்னின் விலைசுட்டியறுத்துநோக்குஞ்
சொல்வினுமிலாபங்கொள்வார்தொன்மாபிருக்கைசொல்வாம்.(திஅ)

(திச) மூவர் - அந்தணர், அரசர், வைசியர்.

(திஞ) அடிசில் - உணவு. முகமன் - உபசாரச்சொல்.

கலிநிலைத்துறை.

நீலவேதிமேற்பளிங்கிலு னிழற்சுவர்நிறீஇயின்
காலவாலியவைரவாட் கானிரைத்தும்பர்க்
கோலவாணிலாச்சொரிமணி குயிற்றிவெண்மாட
மாலைபோல்வருத்தியற்றின பீடிகைமறுகு. (நிக)

1.—திரையளிப்பவுந்திரைபடு நீம்புனல்வேலிக்
2.—கரையளிப்பவுங்கரையிலா னிரைபடுகானத்
3.—தரையளிப்பவுந்தரைகிழித் தூன்றிவிண்டாங்கும்
4.—வரையளிப்பவும்வாங்கிவாய் மடுப்பனமாடம். (கூ0)

கரியகம்பலக்கிடுகின்மேற் கதிர்விடுபவளத்
தெரியல்பொன்னரிமாலிகை தெண்ணிலாச்சொரியும்
பரியநித்திலமணிவட மரகதப்பசுந்தார்
விரியவிட்டனவிந்திர வின்னிரையனைய. (கூக)

நாள்களுங்குளிர்திங்களு ஞாயிறுமேனாட்
கோள்களுங்குளிர்விசும்பொரீஇக் குடிபுகுந்தாங்கு
வாள்கிடந்திராப்பகலொளி மழுக்கலால்வணிக
ராள்கலம்பகர்பீடிகை துறக்கநாடனைய. (கூஉ)

பன்னிறத்தபல்பெருவிலைப் பட்டெலாமவண
வன்னபட்டின்மேம்படுவிலைப் பருத்தியுமவண
வெங்கிலத்தரும்பொருள் பதினெழுபுலவணிகர்
மன்னிருக்கையுமருமபெறல் வளனெலாமவண. (கூஙு)

(நிகூ) பீடிகைமறுகு - கடைவீதிகள்.

(கூ0) 1. கடல்படுதிரவியம், உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

2. மருதநிலம்படுதிரவியம் - செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்வளநீர்.

3. முல்லைநிலம்படுதிரவியம் - தேனடை, தேன், மயிற்பீலி, அரக்கு, நாவி.

4. மலைபடுதிரவியம் - மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், இலவங்கம்.

(கூக) கரியகம்பலம் - கறுப்புக்கம்பளம், கிடுகு - தொங்கவிட்டபடுதா-இதுதிசைச்சொல்.

(கூஉ) வாள் - ஒளி. ஆள்கலம்-ஆளுங்கலம். அது - ஆபரணம்.

(கூங) அவண-அவ்விடத்தன.

மாகதத்தினுலம்மிகள் வைரவாளுலக்கை
யுரல்கள்வெள்ளியா லடுப்பகில்விறகுலேபனிநீ
ரரிசிமுத்தழல்செம்மணி யகிலன்பிறவு
மெரிபொளுலிழைத் தாபெவிவர்சிறுமகளிர். (சுச)

செயிரிற்றீர்ந்தசெம் பொன்னினுற்றிண்ணிலக்கதவம்
வயிரத்தாழுடைத் தவர்கடைவாயிலுமென்ரு
லயிரிற்றீர்ந்தபேர றிஞரு மனேயர்தஞ்செல்வத்
தியலிற்ருமெனவரையறுத் திசைப்பதையெவனே. (சுடு)

எரிக்குறும்பொறியனேயசெம் மணிசுடரெறிபொன்
வரிச்சுரும்புநேர்மரகத முத்துவாள்வைரந்
தெரிப்பருந்துகிர்சிந்தின செல்லுநாளொன்றுக்
கரிப்பர்கையகப்படுவென வாயிரத்திரட்டி. (சுசு)

பாயதொன்மரப்பறவைபோற் பயன்கொள்வான்பதினெண்
டேயமாந்தருங்கிளந்த சொற்றிரட்சிதான்றூய
மாயைகாரியவொலியன்றி வான்முதற்கருவி
ஞயகாரியவோசையே யாய்க்கிடந்தன்றே. (சுஎ)

ஒழிவில்வேறுபல்பொருளுமே ழுலோகமும்பிறவும்
வழுவில்வேறுபல்கலைகளு மாபுளிவகுத்துத்
தழுவிவேண்டினர் தாங்கொளத்தக்கவாபகரா
வழிவிலாமறை போன்றனவாவணவீதி. (சுஅ)

(சுச) செம்மணி - மாணிக்கமணி.

(சுடு) அயிர் - ஐயம். இசைப்பதை என்பதனீற்றிலுள்ள ஐகாரம் சாரியை.

(சுஎ) தொன்மரம் - ஆலமரம். தூயமாயைகாரிய வொலியன்றி - சுத்த மாயையின் காரிய வொலிபோலல்லாமல் சுத்த மாயாகாரியவொலி அக்கரங்களின் வடிவாய்ப் பொருள் பயப்புது-கடைவீதியிலெழுந்த பதினெண்ணிலத்துச் சொல்லோசையானது புறத்திற்கேட்போருக்குப் பொருள்பயத்தலின்மையால், சுத்த மாயாகாரியவொலியாகாது வான்முதல் கருவின் ஆய (ஆகாயமுதலிய பஞ்சபூதகாரணங்களால் உண்டாகிய) காரிய ஓசையாயிருந்தது. மாயைகாரியவொலியென்பது. "மொழிக்காரணமா நாதகாரிய வொலி" என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரத்தாலறிக.

(சுஅ) ஆவணவீதி - கடைவீதி.

திக்கெலாம்புகழ் மதுரையைச்சிவபுரமாக்கி
மூக்கணையகனரசுசெய் முறையினுக்கேற்பத்
தக்கதோழலே டளகைமாநகருறைதயக்க
மொக்குமந்நகர் வாணிகருறையுள்சூழ்தியமம். (சுக)

மன்னவர்வீதி.

ஒற்றையாழியானுலகிரு ளொதுக்குமாபோலச்
செற்றநேமியாற் கலியிருடின்றுகோலோச்சி
மற்றடம்புய வலியினுண்மாறுசிற்றக்
கொற்றமன்னவர் விழுக்குடிக்கோமறுகுரைப்பாம். (ச0)

தரங்கவேலைகடம்மையே தாளுறப்பிணித்துத்
துரங்கமாவெனத்தொகுத்த மந்துரைபலவருவி
யிரங்குமோரறிவுயிர்வரை யாவையும்பெயர்த்து
மரங்கொல்யானைபோற் பிணித்தகூடம்பலமன்னே. (சக)

மழுக்கள்வச்சிரங்கார்முகம் வாளிமுக்குடுமிக்
கழுக்கள்சக்கரமுடம்பிடி கப்பணநாஞ்சி
லெழுக்கணந்தகம்பலகைதண் டிவைமுதற்படையின்
குழுக்களோடிகல்விந்தைவாழ் கூடமும்பலவால். (சஉ)

தூளியகல்லுமாலெனக்கொண்டு சுழற்றியுஞ்செந்து
ளூளையும்யானைபோற்பாய்ந்துமல் லாற்றியுமாற்றல்
வீளையவாளொடுகேடகம் வீசியும்வென்றி
யீளையராடமர்பயில்வன வெண்ணிலாக்கூடம். (சங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தேசவிர்நீலமாடஞ் செம்மணிச்சென்னிமாடங்
காசறுகனகமாடஞ் சந்திரகாந்தமாட
மாசறவிளங்குமின்ன மாடநீண்மாலைகூடற்
பாசிழைமடந்தைபூண்ட பன்மணிக்கோவையன்ன. (சச)

வீரையகல்கதுப்பினல்லார் வீங்கிளஞ்கொங்கைபோழ்ந்த
வரையகன்மார்பமன்றி வடுப்படார்தமக்கன்பில்லா

(சுக) தயக்கம் - தோற்றம். நியமம் - கடைவீதி.

(சக) மந்துரை - குதிரைலாயம்.

(சஉ) முக்குடுமிக்கழு - சூலம். உடம்பிடி - வேல். நாஞ்சில் - கலப்பை. நாந்தகம் - வாள்.

(சங) தொளையகல் என்றும் பாடமுண்டு.

ருரையகன்மானவாற்ரு லொழுகுவார்பலகையொள்வாட்
கரையகல்விஞ்சைவீரர் கணம்பயில்காட்சித்தெங்கும். (எடு)

மின்னேவாளென்னவீசி வீங்குகார்தம்மிற்போர்மூண்
டென்னவான்மருப்புகீட்டி யெதிரெதிர்புதையக்குத்தி
யன்னவானென்னவாய்விட் டதுவெனச்செங்கீர்சோரப்
பொன்னவாமகன்றமார்பர் பொருகளிருட்டுவார்கள். (எசு)

தண்டுவாருளமுந்தங்கள் பின்னிடத்துவக்குண்டூர்த்துத்
தாண்டுமாஞ்றையாழித் தேரினுந்தள்ளித்துள்ளப்
பாண்டில்வாய்ப்பசும்பொன்றேயப் பார்மகண்முதுகுகீண்டு
சேண்டிசைபோய்மடங்கச் செல்வத்தேர்நடத்துவார்கள். (எஎ)

மைந்தர்தந்நெருக்கிற்சிந்து கலவையுமகளிர்கொங்கைச்
சந்தமுங்கூந்தல்சோர்ந்த தாமமுஞ்சிவிறிவீசுஞ்
சிந்துரப்பொடியுநாறத் தேனெடுமெழுந்துசெந்ன
ளந்தரவயிறுதார்ப்ப வடபெரிநடத்துவார்கள். (எஅ)

தம்முயிர்க்கிரங்காராகித் தருக்கொடுமானமீர்ப்பத்
தெம்முனையெதிர்ந்தாராற்றுஞ் செருவெனக்குருதிச்செங்கேழ்
கொய்ம்மலர்க்குடுமிச்சேவல் கோழினக்தகர்போர்மூட்டி
வெம்முனேநோக்கிநிற்பார் வேறவற்றூறுநோக்கார். (எசு)

பெண்முத்தமனையபேதைச் சிறுமியர்பெருநீர்வைகை
வெண்முத்தமிழைத்தசிற்றில் சிதைபடவெருண்டுநோக்கிக்
கண்முத்தஞ்சிதறச்சிந்துங் கதிர்முத்தமாலைதட்பத்
தெண்முத்தினைகைத்துச்செல்வச் சிறூர்கடேருருட்டுவார்கள். (அ0)

கொடிமுகிறுழாவுமிஞ்சிக் கோனகர்வடகீழ்ஞாங்கர்
முடிமிசைவேம்புகாற முருகவிழாரும்போந்து
மடிமிசைநாறத்தென்னர் வழிவழியரசுசெய்யு
மிடிமுரசுறங்காவாயி லெழுகிலைமாடக்கோயில். (அக)

(எஅ) சிவிறி - தருத்தி.

(எசு) தெம்முனை - பகைமுனை. கோழினக்தகர் - கொழுத்த விளம்பாடு.

(அ0) தட்ப - தடிப்ப. தெண்முத்து-தெளிந்த முத்து; தெள்-தெளிவு. செல்வச்சிறூர் - அரிளங்குமாரர்.

(அக) ஆர் - ஆத்தி. போந்து - பனைமாலை.

மறையவர்வீதி.

ஆத்திகருண்டென்றோது மறமுதற்பொருள்களுன்கு
நாத்திகம்பேசும்வஞ்சர் நாவரிகருவியாக
வாத்தனுரைத்தவேத வளவுகண்டெள்ளந்தேறித்
தீர்த்தராய்முத்தீவேட்குஞ் செல்வர்தம்மிருக்கைசொல்வாம். (அஉ)

முஞ்சிநாண்மருங்கின்மின்னப் பொன்செய்தமுளரிவேய்ந்த
குஞ்சிநான்றசையத்தானைச் செருக்குமுன்கொய்ததூங்கப்
பஞ்சிநாண்கலத்தோன்மார்பும் பலாசக்கோல்கையுந்தாங்கி
யெஞ்சிநான்மறைதூல்கற்போர் கிடைகளேயில்லமெல்லாம். (அங)

தீவினையந்தணாளர் சிரூர்பயிறெய்வவேத
நாவுருவேற்றக்கேட்டுக் கிளிகளோருவிலும்வேற்றுப்
பூவையும்பயின்றுபுத்தே ளுலகுறைபுதுமந்தாரக்
காவுறைகிளிகட்கெல்லாங் கசடறப்பயிற்றுமன்னே. (அச)

வேதமுமங்கமாறு மிருதியும்புராணநூலின்
பேதமுந்தெரிந்தோராலும் பிறமதங்களேயவல்ல
வாதமுமதமேற்கொண்டு மறுத்தலுநிறுத்தவல்ல
போதமுமுடையோராலும் பொலிந்தனகழகமெல்லாம். (அடு)

உறிபொதிகரகக்கைய ரொளிவிடுசெங்கற்றோய்த்த
வறுவையருயிர்க்கூறஞ்சு நடையினரவிச்சைமாள
வெறிசுடர்மழுவாளென்னக் கோவணமார்த்தகோலர்
மறைமுடிவன்றித்தேறு மாதவர்மடங்களெங்கும். (அசு)

அட்டில்வாய்ப்புகையுமாடத் தகில்பபுகையும்வேள்வி
விட்டெழுபுகையுமொன்றி விரிசுடர்விழுங்கக்கங்குல்
பட்டதுபலருந்தத்தம் பயில்வினையிழக்கநங்கை
மட்டவிழ்கடுக்கையான்கண் புதைத்தநாண்மானுமன்னே. (அஎ)

(அஉ) ஆத்தன் - (ஆப்தன்) சிவபெருமான்.

(அங) முஞ்சி - ஒருவகை நாணற்புல். நாண் - கயிறு (அரைஞாண்.) பஞ்சிநாண் - உபவீதம்.

(அசு) அறுவை - வஸ்திரம்.

சைவர்வீதி—கலிநிலைத்துறை.

தெய்வநீறுமைந்தெழுத்துமே சிதைக்கலனாக
வெவ்வமாசிருவினையுடம்பெடுத்துழல்பிறவிப்
பௌவமேழையுங்கடந்தரன்பதமலர்க்கரைசேர்
சைவமாதவருறைமடத்தனிமறுகுரைப்பாம். (அஅ)

எங்குமீசனேப்பூசைசெய்திகபரமடைவா
ரெங்குமன்பரைப்பூசைசெய்தெழுபிறப்பறுப்பா
ரெங்குமாகமஞ்செவிமடுத்தெதிர்வினைதடுப்பா
ரெங்குநாயகன்வடிவுணர்ந்திருண்மலங்கலைவார். (அக)

அழிவிலாணுரையாகமமிலக்கமாய்ந்தவற்றுள்
விழுமிதாகியவிதியினும்விலக்கினுமடியைத்
தழுவுதொண்டர்கண்மைந்தர்கள்சாதகர்பாசங்
கழுவிவீடருள்போதகக்காட்சியர்பலரால். (கூ0)

மறைகளாகமம்பொதுச்சிறப்பெனச்சிவன்வகுத்த
முறையினேதியவிதிவிலக்குரைகளுமுடிவி
லறையும்வீடுமொன்றிரண்டெனும்பிணக்கறவமைந்த
குறைவிலாசிவயோகியர்குழாங்களும்பலவால். (கூக)

குழலுந்தும்புருநாரதர்பாடலுங்குனித்துச்
சுழலுங்கொம்பலைபாடலுமூவர்வாய்த்ததியும்
விழவின்செல்வமுஞ்சுருதியுந்திசையெலாம்விழுங்கு
முழவுங்கண்டியிலாததுமுன்னவன்கோயில். (கூஉ)

மடங்கலின்றிவிண்பிளந்துமேல்வளர்ந்துவெள்ளேற்று
விடங்கர்வெள்ளிமன்றிமைத்தெழுவெண்சுடர்நீட்ட
முடங்கல்வெண்பிறைக்கண்ணியான்கைலைமூவுலகு
மொடுங்குகின்றநாளோங்கியவோக்கமேயொக்கும் (கூங)

(அஅ) சிதை - பாய்மரம்.

(கூ0) அடியைத் தழுவுதொண்டர் - சரியையழி நிற்போர் - மைந்தர் - கிரியை வழிநிற்போர் - சாதகர் - யோகவழி நிற்போர் போதகக் காட்சியர் - ஞானதரிசனிகளான தேசிகர்.

(கூங) மூவுலகு மொடுங்குநாள் கைலை ஓங்கிய வோக்கம் என்பது உலகங்கள் யாவும் நிலைகெட்டழியும் பேரூழிக் காலத்தும் திருக்கைலைமலை சிறிது வளர்தல்.

சுரந்துதேன் றுளித்தலர்களுஞ்சொரிந் துவண்டாற்ற
நிரந்துசுந்தரற்கொருநிறைநின்றலர்கடம்பு
பரந்துகட்புனலுகப்பலமலர்கடூய்ப்பழிச்சி
யிரந்துநின்றருச்சனைசெயுமிந்திரனிகரும். (கூச)

உழல்செய்தீவினையுருப்பற வுயிர்க்கெலா மடியி
னிழல்செய்வார்க்குநீணிழல்செயா நின்றபூங்கடம்பின்
குழல்செய்வண்டுகற்பகமதுக் கொணர்ந்துவந்தூட்டித்
தழல்செய்காமமென்பேடையி னூடனெய்தணிக்கும். (கூடு)

ஆருநீர்க்கடலன்றது வெனநிறையகழ்கா
ரூருமாழியன்றதுவென வோங்கெயிலெட்டாய்ச்
சாருநேமியன்றதுவெனச் சமைந்தகோபுரம்பொன்
மேருவன்றதுவெனசுடர் விசும்பிழிவிமானம். (கூசு)

வேதவந்தமுந்துளக்கற மெய்ப்பொருள்விளங்கு
நாதவந்தமுங்கடந்ததோர் நடுநிலைப்பொருளின்
பாதவந்தனைப்பத்தியின் பாலராய்ப்பயில்வோர்
மாதவந்தருபயனெனத் தழைத்தபல்வளனும். (கூஎ)

பொறிகளைந்தினுக்கூட்டல் போகமுமிதப்பச்
செறிகொணீரவாலுவப்பவத் திருநகர்மாக்க
ணெறிகொள்செஞ்சடைப்பிறைமுடி நிருமலக்கொழுந்தின்
வெறிகொணண்மலரடிதழீஇ வீடுபெற்றூர்போல். (கூஅ)

முன்னவன்னரசிருக்கையா லந்நகர்முளரிப்
பொன்னையீன்றதாலதுபல பொருணிறைசெல்வந்
தன்னையீன்றதாலதுபல தருமமென்றுரைக்கு
மின்னையீன்றதஃதீன்றதால் விழுத்தகுபுகழே. (கூக)

எழுக்கடந்தசோளருத்திர வுலகமென்றியாரும்
வழுத்தநின்றவிந்நகர்வயி னும்பரின்மாண்ட
விழுத்தகும்பலசெல்வமும் வியந்துபார்த்துள்ளத்
தழுக்கறுமையாலின்னமு மமர்கண்ணுறுகார். (க00)

(கூசு) ஆழி - சக்ரவாளகிரி.

(கூஎ) வேதவந்தம் - வேதாந்தம்.

(க00) எழு - தூண்.

விரையவிழ்ந்ததார்மீனவர் வாகைவேல்விடித்துத்
திரையையென்றதுமுடிதகர்த் திந்திரன்செருக்குக்
கரையவென்றதுங்கார்தலை யிட்டதுங்கனக
வரையையென்றதுமிந்நகர் வலியினுலன்றே. (கoக)

எங்குநாவுமாயெங்கணுங் கண்ணுமாயெங்குந்
தங்குபேரொளியல்லதித் தனிநகர்ச்செல்வஞ்
செங்கணையிரநாவினுன் செப்பவுமெதிர்கண்
டுங்கணையிரமுடையவ னளக்கவும்படுமோ. (கoஉ)

புண்ணியம்புரி பூமிபாரதில்வருபோக
ருண்ணியின்புறு பூமிவாணுடென்பநாளும்
புண்ணியம்புரி பூமியுமதில்வருபோக
ருண்ணியின்புறு பூமியுமதுரைமாநகரம். (கoங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பண்கனிந்தனையசொல்லார் நரப்பிசைப்பாணிதேவ
ருண்கனியமுதுங்கைப்பச் செவிதளைத்தூட்டவுண்டும்
பெண்களினமுதமன்னர் பெருமிதநடனமுண்ணக்
கண்களாவிடித்துங்காலங் கழிப்பவரளவிலாதார். (கoச)

கலவிவித்தாகவூடிக் கட்புனல்குளிக்குநல்லார்
புலவிதீர்செவ்விநோக்கிப் புணர்முலைப்போகந்துய்த்து
நிலைநிலையாமைநோக்கி நெறிபடுதருமதானங்
கலைஞர்கைப்பெய்துங்காலங் கழிப்பவரெண்ணிலாதார். (கoஞ)

சந்தித்துமீனநோக்கி தலைவனைமூன்றுபோதும்
வந்தித்துமீசன்பூசை மரபுளிமுடித்தும்வேத
மந்தித்துமறியான்செய்த திருவிளையாடல்கேட்டுஞ்
சிந்தித்துமன்பர்பூசை செய்துநாள்கழிப்பார்பல்லோர். (கoசு)

(கoஉ) ஆயிரநாவினுன் - ஆதிசேடன்.

(கoச) பாணி - லயை.

(கoச) விடித்து - போகவிட்டு.

(கoஞ) நிலைநிலையாமை என்றது-தோற்றக்கேடுகளை.

(கoசு) அந்தித்தல் - சமீபித்தல்.

கற்பவைகற்றுங்கேட்டுங் கேட்டவைகருத்துளூறச்
சொற்பொருணினைந்துங்கேட்போர்க்குணர்த்தியுட்களிக்கந்திர்த்து
மெற்பகலிரவுநீங்கு மிடத்துமெய்யறிவானந்த
வற்புதவெள்ளத்தாழா தாழ்ந்துகாள்கழிப்பார்சில்லோர். (கoஎ)

தன்னிகருயர்ச்சியில்லான் காப்பியத்தலைவனுக
முன்னவர்மொழிந்ததேனோ தமக்கெலாமுகமனன்றே
வன்னதுதனதேயாகு மண்ணலேபாண்டிவேந்தா
யிந்நகர்க்கரசனுவா னிக்கவிக்கிறைவனுவான். (கoஅ)

என்னெனவுரைப்பேனிந்த விறைமகன்பண்பையேனை
மன்னவர்வானோர்போல மதித்துரைவிரிக்கற்பாற்றே
வன்னவனுணையாற்ற னடப்பதிவ்வகிலமென்றான்
முன்னவன்செய்தவாடல் வரவினைமுறையிற்சொல்வேன். (கoக)

மதுரைத் திருநகரப்படலம் முற்றிற்று.

ஆக படலம். நக-க்கு திருவிருத்தம்-கஙக.

திருக்கைலாசப்புகழ்ச்சி.

கலிநிலைத்துறை.

வரங்கடந்தருளெனமுதுவானவர்முனிவோர்
கரங்கடந்தலைமுகிழ்த்திடக்கருணைசெய்தவிச்சை
யுரங்கடந்துரையுணர்வெலாங்கடந்தருமறையின்
சிரங்கடந்தவனிருப்பதுதிருக்கயிலாயம். (க)

(கoஎ) பகலிரவு - சகலகேவலங்கள்.

(கoக) வரவுஎன்னுந் தொழிற்பெயர் பன்மைப்பொருண்மேனின்றது.

(க) முதுவானவர் - அரியயேந்திரர். மறையின் சிரங்கடந்தவன் - வேதாந்தத்திற்கப்பாற்பட்டவன் எ - ம். உபநிடதங்களால் தரப்பட்டவனென்றும் கொள்க.

புரந்தரா திவானவர்பதம்போதுறைபுத்தேள்
பரந்தவான்பதஞ்சக்கரப்படையுடைப்பகவன்
வரந்தவாதுவாழ்பதமெலாநிலைகெடவருநா
ளுரந்தவா துகின்றூழிதோறுரைங்குமவ்வோங்கல். (உ)

அரம்பைமாதராராடலினரவமும்பாட
னரம்பிலைசையுமுழவுதிர்சும்மையுநால்வாய்
வரம்பிலோதையுமருவிவீழொலியுமாரூது
நிரம்பிவானமூந்திசைகளுநிமிர்வனமாதோ. (ஊ)

வெந்தநீற்றெளிவெண்மையும் விமலனேயகங்கொண்
டந்தமின்றியேயசைவறவிருக்கையுமருவி
வந்தகண்களுங்கொண்டவணிருக்குமாதவர்க்குத்
தந்ததாலரன்கையிலுந்தனதுசாரூபம். (ஸ)

ஆங்குவெண்டிகில்விரித்தெனக்கல்லெனவார்த்து
வீங்குகாலருவித்திரள்வெள்ளமேயன்றி
யோங்குநாண்மறைக்குடியினுள்ளொளிகோக்கித்
தாங்குமாதவர்கண்களுஞ்சொரிவனவெள்ளம். (ரி)

கோட்டுமாமலர்நிலமலர்குண்டுநீரெடுத்துக்
காட்டுமாமலர்கொடிமலர்கொண்டுமுட்கைசந்த
பாட்டுமாமலர்கொண்டுநம்பரஞ்சுடரடியிற்
சூட்டுமாதவர்தொகுதியுஞ்சூழ்வனவொருபால். (சு)

கையனாகமுங்காய்சினவுழுவையுங்கடுவாய்ப்
பையனாகமுந்தங்கிளைபரவியமுக்க
ணையனுகமெய்யருந்தவர்தமையடைந்தன்பு
செய்யனாகமும்வையமும்புகழ்வதச்சிலம்பு. (எ)

திருக்கைலாசப்புகழ்ச்சி முற்றிற்று.
ஆ படலம். ஸ-க்கு திருவிருத்தம்-உ0சு.

(உ) வானவர்பதம், சுவர்க்கம் - வான்பதம் - சத்தியலோகம், வாழ்பதம் - வைகுந்தம், உரம் - வன்மை, தவாது - கெடாது, ஓங்கல் - மலை.

(ஊ) சும்மை-ஓசை.

(சு) பாட்டுமாமலர் - பாடலாகிய சிறந்தமலர்.

(எ) கையனாகம் - துதிக்கையையுடைய யானை, கடு - விடம், பையனாகம்-படத்தையுடைய பாம்பு, சற்றடியிலுள்ள 'நாகம்'வின் னுலகைக் குறித்து நின்றது.

புராண வரலாறு.

கலிவிருத்தம்.

அளந்திடற்கரிதாயவக்குன்றின்மேற், களங்கறுத்துவிண்காத்தவன்கோயின்முன், விளம்பருஞ் சிவதீர்த்தத்தின்மிக்கதாய், வளம் பெறுஞ் சிவதீர்த்தத்தின்மாடது. (க)

தண்டருங்கதிர்ச்சந்திரகாந்தத்திற், பண்டையங்கநவமணிபத்தி செய், தண்டர்தச்சனனேகதவஞ்செய்து, கண்டதாயிரக்கான்மண்டபமரோ. (உ)

ஆனபான்மையினலந்தமண்டப, ஞானநாயக ஞண்மலர்த்தாடொழ, வானமீனெவெந்து பதங்குறித், தானமின்மதி வைகுவதொத்ததே. (ங)

அன்னமண்டபந் தன்னுளருந்தவ, மென்னவேங்கை யதண்மேலிருந்தனன், பன்னுகேள்விப்பதினெண்புராணமுஞ், சொன்னமாதவச் சூதமுனிவனே. (ச)

அந்தவேலையிலச் சிவதீர்த்தத்தில், வந்துமூழ்கியம்மண்டபதேறியே, சந்தியாதிதவமுடித்தீறிலா, விந்துசேகரன்ருணினைந்தேத்தியே. (ஞ)

சம்புபத்தன்சதானந்தனுத்தம, னம்புயத்தனனேயமகோதர, னும்பரஞ்சியவுக்கிரவீரிய, னம்புகேள்விப்பிரசண்டநற்றவன். (ட)

ஆதிமாதவர்யாவருமன்புமை, பாதியாய்முற்றுமாகும்பராபர, சோதிபால்வைத்த சூதனைத்தோத்திர, மோதியஞ்சலித் தொன்று விஞவினர். (ண)

(க) சிவதீர்த்தத்தின்மிக்கது - சிவனுடைய தீர்த்தங்களிலே யுயர்ந்தது.

(ங) பதங்குறித்து - காலம்பார்த்து.

(ச) வேங்கையதள் - புலித்தோலாசனம்.

(ண) ஆதிமாதவர் யாவரும், உமைபாதியாய்முற்றுமாகும் பராபரச்சோதிபால் அன்பு வைத்த சூதனைத்தோத்திர மோதியெனக் கூட்டிப் பொருள் கொள்க.

கலிநீலத்துறை.

வேதவாகமபுராணமேமிருதியேமுதலா
வோதுதூல்களின்றுணிபொருளுலகெலாம்பயந்த
பேதைபாகனேபரமெனத்தேர்ந்துணர்பெரிய
போதமாதவவுமக்கியாம்புகல்வதொன்றுள்தால். (அ)

மேருமந்தரங்கைலைபர்ப்பதமுதல்விடைமே
லூருமந்தரநாடவனுறைபதியனந்த
மாருமந்தமில்போகம்வீடடைவதென்றவற்றின்
காரணங்களோடுரைத்தனேகருத்திணுக்கிசைய. (கூ)

ஐயமாதிமுக்குற்றமுமகலநீயருளிச்
செய்யவுன்தெளிந்திலேங்கள்யாஞ்சிற்றறிவுடையே
மையனெஞ்சினேமாகையான்மயக்கறவின்னு
முய்யுமாறருள்செய்தியென்றுரைத்தனர்மன்னோ. (கo)

தலங்கடம்மின்மிக்குள்ளதாய்த்தகுதிசாதீர்த்தக்
குலங்கடம்மின்மிக்குடையதாய்க்குறையிரந்தோர்க்கு
நலங்கடந்தருண்மூர்த்தியாய்நாதவேதாந்தப்
புலங்கடந்தபேரொளியுறைதலலனென்றுபுகலாய். (கக)

என்றபோதெதிர்முகமலர்ந்திருண்மலவலியை
வென்றருளனுந்தலங்களின்வீசேடமாய்ந்தம்பொற்
குன்றவார்சிலையானிடங்கொண்டுறைபதியு
ளொன்றுகேட்கவீடளிப்பதாயுளதுமற்றதுதான். (கஉ)

முற்றவோதியபுராணமுவாறினுட்காந்தம்
பெற்றதாறுசங்கிதையவையாறுந்தம்பெயராற்
சொற்றபேர்சனற்குமரமாமுனிவரன்சூதன்
கற்றைவார்சடைச்சங்கரன்மாலயன்கதிரோன். (கங)

(கூ) அந்தரநாடு - சிவலோகம்.

(கo) ஐயமாதிமுக்குற்றம் - ஐயம், திரிபு, அறியாமை.

(கக) நாதவேதாந்தப் புலங்கடந்த என்றது - கலைஞானங்களை விளக்கும் அறிவையும், வைகரியாதி வாக்கு கண்மேற்ரும் தற்போதத்தையும் கடந்து நிற்றலை.

(கஉ) இருண்மலம் - ஆணவமலம்.

(கங) பேர் - பன்மைப் பொருளில்வந்த வேரிடைச்சொல்.

இன்னவாறனுட்சங்கரசங்கிதையென்று
சொன்னதூலினையுணர்த்திஞன்சங்கரன்றுணைவிக்
கன்னபோதவண்மடியினிலிருந்துகேட்டதனே
மின்னுவேல்பணிகொண்டவேள்வெளிப்படவுணர்ந்தான். (கச)

குன்றெறிந்தவேள்வழிபடுகுறுமுனிக்குரைத்தா
னன்றுதொட்டஃதகத்தியசங்கிதையாகி
நின்றதன்னதுகேட்பவர்க்கரனடிநீழ
லொன்றுமின்பவீடளிப்பதாவொருதலனுரைக்கும். (கஞ)

அதிகவப்பதியாதெனிஞலவாய்கேட்கக்
கதியளிப்பதென்றேதியசூதனேக்கதியின்
மதியையைவத்தவரன்னதைப்பகரெனவந்த
விதியினிற்புகல்கின்றனன்வியாதன்மாணக்கன். (கசு)

புதியதாமரைமேவியபழமறைப்புத்தேள்
விதியிஞற்கடநடைப்பரிமகஞ்செய்வான்வேண்டிக்
கதியைமாய்ந்தவர்க்குதவுதண்டுறைகெழுகாசிப்
பதியின்மைந்தரோடெய்திஞன்பண்டொருவைகல். (கஎ)

எழசீரடியாசிரியவிருத்தம்.

அகத்தியன்வியாதனுரதன்சனகஞதிநான்முனிவர்கோதமனூற்
சிகைத்தெளிவுணர்ந்தபராசரன்வாமதேவன்வான்மீகியேவசிட்டன்
சகத்தியல்கடந்தசுகன்முதன்முனிவர்தம்மொடும்பத்துவெம்பரிமா
மகத்தொழின்முடித்துமற்றவர்க்குள்ளமகிழ்வுறவழங்குவழங்கா. (ரு)

சத்தியவுலகிற்சரோருகக்கிழவன் சார்ந்தபின்புலப்பகைசாய்த்த
வத்திருமுனிவரனேவருங்காசி யடிகளேயடைந்தனர்பணிந்து [ற்
முத்திமண்டபத்தினறமுதஞன்கு மொழிந்தருண்மூர்த்திசன்னிதியி
பத்தியாயிருந்துநாரதமுனியைப் பார்த்தொருவிஞவுரைபகர்வார்.

(கஞ) குன்று - ஈண்டுகிரவுஞ்ச மலை. குறுமுனி - அகத்தியமுனி.

(கஎ) பழமறை - சிருட்டிக்காலந்தொட்டுள்ள வேதங்கள். பரிமகம் - அஸ்வமேதயாகம். (பரி - அஸ்வம், மகம் - யாகம்.

(கஅ) சகம் - தோன்றியழிவதாகிய உலகம்.

(கசு) சரோருகக்கிழவன் - பிரமன் (சரோருகம் - தாமரை) அறமுதல்நான்காவன - அறம், பொருள், இன்பம், வீடு.

தலமுதன்மூன்றுஞ்சிறந்ததோர்சைவத்தலமுளையென்ன நாரதன்முன், கலைமுழுதுணர்ந்தசனற்குமாரன்பாற் கற்றவன்வியாதமுமவன்பா, னலமுறக்கேண்மினெனவவன்கதிர்வே ணம்பியான் மறைமுதலனேத்து, மலைவறவுணர்ந்தோன் குறுமுனியாகு மவனிடைக்கேண்மெனவிடுத்தான். (உ0)

மலயமாதவனே யடைந்துகைதொழுது வாழ்த்திவாதாவிவில் வலனேக், கொலைபுரி தருமமூர்த்தியேவிந்தக் குன்றடக்கியதவக் குன்றே, யலைகடல்குடித்த வருட்பெருங்கடலே யருந்தமிழ்க்கொண்டலேதென்பா, றலைபெறநிறுத்தகளகணேயென்று சுருதியாயிரமெனத்துதித்தார். (உக)

மூவகைச் சிறப்புமுள்ளதோர்தான மொழிகெனமுகமலர்ந்தருள்சூர்ந், தியாவையுமுணர்ந்தோன் முத்திமண்டபத்தி னீரிருதொகையின்வந்திறக்குஞ், சேவல்கடமையு மைங்கரன்றனையுஞ் சேவலங் கொடியுடைவடிவேற், காவலன்றனையும் வடநிழலமர்ந்தகண்ணுதற் பரனையும் பணியா. (உஉ)

அங்கயற்கண்ணிதன்னையுமெந்தை யாலவாயானையுமிதய,பங்கயத்திருத்திச்சமாதியில்வருந்து பரவசமடைந்துபார்ப்பதிக்குச், சங்கரனருளிச்செய்தசங்கிதையைத் தாருகனுடலிரண்டாகச், செங்கைவேல்விடுத்த சேவக னெனக்குத் தெருட்டிஞ னனையசங்கிதையில். (உங)

பெறற்கருந்தவஞ் செய்தகந்தெளிந்தரிதிற் பெறுங்கதிகேட்பவர்க் கெளிதா, யுறப்படுந்தலநீர்விளையுமுச்சிறப்பு முள்ளதெத்தலத்தினுங்கழிந்த, சிறப்பிஞங்கெண்ணெண்டிருவீளையாடல் செய்தருள்வடிவெடுத்தென்று, மறைப்பொருள்விளங்கு மாலவாயதனை மண்ணின்மேற் சிவணுலகென்னும். (உச)

(உ0) அலம் - சுழற்சி (அஃதாவது ஐயம், திரிபு.)

(உக) துலை - தூலாக்கோல். கலைகண்-பற்றுக்கோடு. ஆயிரம்-அனந்தம்.

(உஉ) சேவல்களென்றது- மாகனந்தனென்னு மறையவனும், அவன் மனைவியும், மக்களிருவரும் மூன்றும் யுகத்திற் பாவத்தாற் கோழிகளாய்ப் பிறந்து முத்திமண்டபத்தில் வந்து முத்தியடைவ ரென்று காசிகாண்டத்திற் சொல்லப்பட்ட அக்கோழிகளாம்.

(உங) சமாதி - சுகத்துக்கு முதன்மையாயுள்ளது (அசைவற விருத்தல்.)

(உச) கழிந்த - மேன்மைப்பட்ட.

அத்தலத்தினைய மூவகைச்சிறப்பு மன்னிலாவுயிர்க் கெல்லாங்க
ருணை, வைத்தவன்செய்த திருவிளையாட்டும் வரையுரங் கிழியவே
லெடுத்த, வித்தகனெனக்குவிளம்பியவாறே வீளம்புவனுமக்கென
வந்த, வுத்தமமுனிவர் யாவருங்கேட்க வுணர்த்துவான் கடலெலா
மூண்டான். (உ)

புராணவரலாறு முற்றிற்று.

ஆ படலம் ரு - க்கு திருவிருத்தம் - உருக.

தலவிசேடம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாட்டமொருமூன்றுடைய நாயகனுக்கன்புடையீர்நயந்துகேவி
ர், கேட்டதலமீண்டுரைத்த திருவால வாயதனுட் கிளைத்துப்பொ
ன்னந், தோட்டலர்தாமரைமுளைத்த தொருதடமுஞ் சுந்தரச்செஞ்
சோதிஞான, வீட்டமெனமுளைத்தசிவலிங்கமுமொன்றுளதின்னுரி
சைப்பக்கேண்மின். (க)

திருவாலவாய்க்கிணையா மொருதலமுந்தெய்வமணஞ்செய்யப்பூத்த
மருவார்பொற்கமலநிகர் தீர்த்தமுமத்தீர்த்தத்தின்மருங்கின்ஞான
வுருவாகியுறைசோமசுந்தரன் போலிகபரந்தந்துலவாவீடு
தருவானுமுப்புவனத் தினுமில்லையுண்மையிதுசாற்றின்மன்னோ. ()

அவ்வகைய மூன்றின்முதற் றலப்பெருமை தனைச்சுருக்கியறையக்
னெவ்வகையவுலகத்துந் தருமதலமதிகமவற்றீறிலாத [கேண்மி
சைவதலமதிகமவற்றறுபத்தெட்டதிகமவைதமிலிரெட்டித்
தெய்வதலமதிகமவற்றதிகதலநான்கவற்றைச்செப்பக்கேண்மின். ()

அன்னமலிவயற்புலியூர்காசிநகர்காளத்தியாலவாயா
மின்னவளம்பதிநான்கிற்றிருவாலவாயதிகமெவ்வாறென்னின்

(உ) மூவகைச்சிறப்பு-மூர்த்தி, தலம், தீர்த்தங்களின் சிறப்பு.

(க) நாட்டம் - கண்.

(உ) உலவா - அழியாத. முப்புவனம் - சுவர்க்கம், மர்த்தியம், பாதலம்.

(ரு) தருமதலம் - புண்ணிய கேஷத்திரம்.

மின்னவிரம்பலங்காணக்காஞ்சிகர்வதிந்திறக்கவியன்காளத்திப்
பொன்னகரம்பத்தியிஞல்வழிபாடுசெயவளிக்கும்போகம்வீடு. (ச)

அறந்தழையுந் திருவால வாய்கேட்ட வுடன்போக மளிக்கு
மீண்டு, பிறந்திறவாப்பேரின்பக் கதியளிக்குமிதுவன்றிப் பிறழா
தெங்கு, நிறைந்தபரனெத்தலமும்படைப்பானித்தலத்தைமுதனிரு
மித்தங்ஙனுறைந்தருளினனன்றி யின்னமுளததன் பெருமை
யுரைப்பக்கேண்மின். (ஞ)

திருவாலவாயென்றுகேட்டவரேயறம்பெறுவர்செல்வமோங்குந்
திருவாலவாயென்றுநினைத்தவரேபொருளடைவர்தேவதேவைத்
திருவாலவாயிடத்துக்கண்டவரேயின்பநலஞ்சேர்வரென்றுந்
திருவாலவாயிடத்துவந்தவரேவீட்டுநெறிசேர்வரன்றே. (ட)

சுரநதிசூழ்காசிமுதற்பதிமறுமைக்கதியளிக்குந்தூநீர்வையை
வரநதிசூழ்திருவாலவாய்சீவன்முத்திதருமவதிவோர்க்கீது
திரனதிகம்பரகதியும்பின்கொடுக்குமாதலினிச்சீவன்முத்தி
புரனதிகமென்பதெவனதற்கதுவேயொப்பா மெப்புவனத்துள்ளும்.

ஆதலினிப்பதிவிட்டுப்பிறபதியிற்போய்நோற் போரங்கைகொண்ட
சீதளவானமுதேய்ப்பத்தித்திக்கத்தேம்பெய்துசெய்தநீம்பா
லோதனத்தைக்கைவிட்டுப்புறங்கையைநக்குவாரொப்பாரிந்த
மாதலத்தின்பெருமைதனையாவரேயளவிட்டுவழுத்தற்பாலார். (அ)

மேற்படி வேறு.

மற்றையதலங்கடம்மிற்பரிமகம்வாசபேய
மற்றமில்சோடசீகமக்கினிட்டோமம்யார்க்கு
மூற்றருமிராசசூயமுதண்மகமுடித்தபேறுஞ்
செற்றமிறெரிசபூர்ணமுதலிட்டிசெய்தபேறும். (கூ)

(எ) சுரநதி - தேவநதி, பரிமகம் - அசுவமேதம்.

(கூ) வாசபேயமாவது - அந்தணர்கள் 12-தினத்தில், 23-மே டகளால் சிவபெருமானுக்குப் பிரீதியுண்டாகச் செய்யும் யாகம். சோடசீகம் 5 - தினத்தில் 2 - மேடங்களால் செய்யும் யாகம். அக்கினிட்டோமம் என்பது மதுவே. இராஜசூயமாவது எல்லா அரசர்களையும் வென்று 5-தினத்தில் அல்லது 7-9-12 - தினங் களில் 4-மேடங்களால் சூத்திரியர்களால்செய்யப்படும் யாகம். தரி சபூர்ணமாவது அமாவாசை பௌர்ணமிகளில் சிவபெருமானுக்கு பிரீதியுண்டு பண்ணிச்செய்யும் ஸ்தாலிபாகக்கிரியை. இஷ்டி - யாக முதலியகிரியை.

எள்ளிழுதன்னங்கன்னியிவளிதேரியானையில்லம்
வெள்ளியான்பொன்பூணுடைவீள்வொடுபழனமுன்னுத்
தள்ளருமடிமையாதிதானங்கள்செய்தபேறும்
வள்ளறன்காசியாதிபதிகளில்வதிந்தபேறும். (கo)

கங்கைகாளிந்திவாணிகாவிரிகண்ணவேணி
துங்கபத்திரிதீம்பாலிதாயதண்பொருனைமுன்னுச்
சங்கையினதிகண்முற்றுமாடியதவத்தின்பேறு
மங்கலமதுரைதன்னில்வைகலும்வதிவோர்க்கெய்தும். (கக)

அன்னியதலங்கடம்மிலாற்றியபிரமகத்தி
பொன்னினைக்களவுசெய்தல்குருண்டல்புனிதவாசான்
பன்னியைப்புணர்தலின்னபாதகமனைத்துமெண்ணுந்
தன்னிகராலவாயில்வதிபவர்தமைவிட்டேகும். (கஉ)

மற்றையதலத்திற்சாந்திராயணமதியந்தோறு
முற்றபேறிங்குகங்குலுண்டியாலடைபேரூரு
மற்றையதலத்தின்மாதப்பட்டினிப்பலத்தின்பேறிங்
குற்றருருவைகலுண்டியொழிந்தவர்பெறும்பேரூரும். (கங)

அயனகரடைந்துநான்கு திங்களுணன்பாற்றும்பேறிவ்
வியனகரடைந்துகோற்கு மட்டமிவிரதநல்கு
மயனகரெய்தியாறு திங்களுணன்பாற்றும்பேறிவ்
வியனகர்ச்சோமவார விரதமேயளிக்குமன்றே. (கச)

வேனயதலத்திலோராண் டிணவொழிந்தியற்றுநோன்பா
லானபேறிங்குநோற்குஞ் சிவனிராவளிக்குமிங்கே

(கo) எள்இழுது - எண்ணெய்.

(கக) கண்ணவேணி - க்ருஷ்ணவேணி என்னும் ஓர்நதி.

(கங) சாந்திராயணம் - சந்திர சம்பந்தமுள்ளதோர் விரதம். அஃதாவது - சந்திரன் கலைவளரும் பூர்வபட்சப் பிரதமை முதல் பௌர்ணமி வரையில் நாளுக்கு நாள் ஒவ்வொரு கவளம் உயர்த்தியும், தேய் கலைகுறையும் கிருஷ்ணபட்சப் பிரதமைமுதல் அமாவாசைவரையில் ஒவ்வொரு கவளங் குறைத்தும் புசித்துச் செய்யும் விரதம்.

ஊனவைம்பொறியும்வென்றேன் முப்பொழுதுண்வைகித்
தானமர்ந்தாலுங்காலுண் டியற்றுமாதவத்தோனுகும். (கடு)

இந்தநான்மாடமோங்கு மாலவாயிடத்தியாரேனு
மந்தணர்தமக்கோர்முட்டி யருந்தவர்தமக்கோர்பிச்சை
தந்தவர்புறம்புசெய்த சோடசதானந்தம்மால்
வந்தபேறடைவர்பல்வே றுரைப்பதென்மதியான்மிக்கீர். (கசு)

பல்வகைத்தலங்களெல்லாம் வைகியபயனுமென்றும்
பல்வகைத்தீர்த்தமெல்லா மாடியபயனுமென்றும்
பல்வகைத்தானமெல்லா நல்கியபயனுமென்றும்
பல்வகைத்தானபூசை பண்ணியதவத்தின்பேறும். (கள)

பல்வகைத்தவங்களெல்லா முற்றியபயனுந்தூய
பல்வகைமந்திரத்தி லெய்தியபயனுநூலின்
பல்வகைக்கேள்வியெல்லா மாய்ந்துணர்பயனும்யோகம்
பல்வகைஞானமெல்லாம் பயின்றுணர்ந்தடங்கும்பேறும். (கஅ)

அனேயதொல்பதியிலென்றும் வைகுவோரடைவொன்று
வினேயதொல்பதிக்குநேர்வே றில்லேயிப்பதியின்மேன்மை
தனேயறிபவராசை னென்றறியாதலாலே
வினேயைவெல்பவனங்கெய்தி வதிவதேவேண்டுமாதோ. (கக)

மேற்படி வேறு.

கைத்தலநான்கிரண்டுடையமலர்க்கடவுண்மேலொருநாட்கயி
லேயாதி, யெத்தலமுமொருதலேயிட்டித்தலமு மொருதலேயிட்டி
ரண்டுந்தூக்க, வுத்தமமாந்திருவாலவாய்மிகவுங் கனத்தது கண்டு
லகின்மேலா,வைத்ததலமிதுவென்றுலிதன்பெருமையாவரேவழுத்
தற்பாலார். (உ0)

(கடு) கால் - காற்று.

(கசு) முட்டி - ஓர்கைப்பிடி - சோடசதானம் - பதினாறுவகை தானங்கள்.

(கக) 'தனேயறிபவராசென்றனன்றி' என்றும் பாடமுண்டு. அறிமின் என்னும் முன்னிலேப் பன்மை ஏவல் வினேமுற்று ஈறு தொக்கு 'அறி' என நின்றது.

அத்திருமாநகரின்பேர் சிவனகரங் கடம்பவன மமர்ந்தோர் சிவன்,முத்திபுரங்கன்னிபுரந்திருவாலவாய்மதுரை முடியாஞானம், புத்திதரும்பூவுலகிற்சிவலோகஞ்சமட்டிவிச்சாபுரந்தென்கூடல்,பத்திதருதுவாதசாந்தத்தலமென்றேதுவிளம்பகர்வர்நல்லோர். (உக)

என்றுதலச் சிறப்புரைத்த குறுமுனிவ னெதிரறவோ ரிறும்பூ தெய்தி, நன்றுதலப் பெருமையருள் செய்தனைகேட் டடலெதித்த நயப்பாடெல்லா, மின்றடைந்தேமினிச்சுவண புண்டரிகச் சிறப்ப தனையிசைத்தியென்னக், குன்றமடக்கியகருணைக் குன்றனையான் வரன்முறையாற்கூறுகின்றான். (உஉ)

மேற்படி வேறு.

விரதமாதவத்தீர்காணின் வெவ்வினையெல்லாம்வீட்டிச்
சரதமாப்போகநல்குந் தமனியமுளரிவந்த
வரவுமக்கனகக்கஞ்சப் பெருமையும்வளனுநன்கா
வுரைசெய்துங்கேண்மினென்னு முனிவரனுனைக்குமன்னோ. (உங)

தலவிசேடம் - முற்றிற்று.

ஆ படலம். சு - க்கு - திருவிருத்தம் - உருசு.

(உக) முத்தி - விடுகை. சிவன் முத்தி என்றது - யான் எனதென்னும் விகற்பம்பற்றிப் பசுகரணமாய்ப் பயில்வதின் றிச் சிவகரணமாய், உடையானுடைமைப் பொருளுமாய்த் தற்செயலற்றுச் சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்து நிற்றல் - பரஞானமென்றது - அபரஞானம்போ லழிவதின்றி நித்திய சுகத்தை வீளைவிப்பதாகிய சிவஞானம்பற்றி நிகழும் மோன நிலையை. புத்தி - சிவபோகம். சமட்டி விச்சாபுரம் - சிவஞான முதலிய நான்குவகை ஞானங்களையும் தருங்நகரம் - சமஷ்டி - நிறைவு - விச்சை - ஞானம் - துவாதசாந்தத்தலம் - பிரமரந்திரத்துக்குமேல் உன்மனிசத்திக்கதீதமாய் விளங்கும் நிராமயஸ்தானம்.

(உஉ) இறும்பூது - அதிசயம் - சுவணம் - பொன்.

(உங) தமனியம் - பொன்.

உ

தீர்த்தவிசேடப்படலம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

கண்ணகன்குடுமிமாடக் கடிபொழிலாலவாயி
னண்ணலம்பெருமையாரே யளப்பவரவிர்தண்முத்த
வெண்ணகையுமையாளன்பு விளைமுகச்செவ்விபோலத்
தண்ணறுங்கமலம்பூத்த தடப்பெருந்தகைமைசொல்வாம். (க)

ஆற்றினுக்கரசாங்கங்கை காவிரியாதியாறும்
வேற்றுருவாயமூன்நீர் வேலையும்பிறவுங்காருந்
தோற்றுமுன்றன்னேயாட்டச் சுந்தரமூர்த்திசெங்க
ணேற்றினன்கண்டதீர்த்த மாகுமீதெவ்வாறென்னின். (உ)

அகளமாயுலகமெல்லா மொடுக்கியங்நெறியேயார்க்கு
நிகளமாம்விருத்திதோன்ற நினைவறநினைந்துநிற்குந்
துகளிலாவறிவானந்த சுந்தரச்சோதிமேனட்
சகளமாமுருவங்கொண்டு தாஞெருவிளையாட்டாலே. (ரு)

முக்கணனரவப்பூண நூலினன்முகிழ்வெண்டிங்கட்
செக்கரஞ்சடையன்சூல கபாலத்தன்செங்கணேற்றன்
மைக்கருங்கயலுண்கண்ணி வாமத்தன்முன்னும்பின்னும்
பக்கமுநந்தியாதி கணதிபர்பரவிச்சூழ. (ச)

சென்றுதன்மேனித்தேசாற்றிசையெலாம்விளங்கச்செங்கண்
வென்றிகொளுரகவேந்தனகரமும்விபுதர்வேந்தன்
பொன்றிகழ்ங்கரும்வேதன்புரமுமால்புரமுமேலத்
தன்றிருநகருஞ்சென்றுசஞ்சரித்தாடிமீள்வான். (ஞ)

(க) யார் - வினைக்குறிப்புமுற்று. இதில் யாவினை இன்மைப் பொருளது.

(உ) மூன்நீராவன - ஆற்றுநீர், ஊற்றுநீர், மேகநீர். இம்மூவகைநீர்களே யுடையதெனவும், சிருட்டி, திதி, சங்காரங்களாகிய மூத்தெர்ழிற்குணங்களேயுடைய தெனவும், பண்புத்தொகைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகையாய்க் கடற்கோர் காரணக்குறியாகவந்த பெயராதலால் மூன்நீராய வேலையெனப் பொருள்கொண்டு இருபெயரொட்டுப் பண்புத்தொகை யெனினும் ஒக்கும்.

(ரு) அகளமாய் - களங்கமற்றவடிவாய். நிகளம் - பந்தம்.

(ஞ) உரகவேந்தன் - ஆதிசேடன். உரகம் - சர்ப்பம். தன்திருநகர் - சிவலோகம்.

அன்னபோதையனுந்தேவர்க்கரசனுமாழிவேந்து
முன்னர்வந்திறைஞ்சியேத்தமுனிவரும்பேறுநல்கித்
தன்னகரடைந்துநீங்காத்தனிப்பெருங்கணத்திலைரை
யின்னருள்சுரந்துநோக்கியிலிங்கத்திற்புகுதுமெல்லை. (சு)

வேத்திரப்படையோனதிகணதிபர்வீழ்ந்துபால
நேத்திரவன்பர்க்கன்பநிரஞ்சனநிருத்தானந்த
சாத்திரமுடிவுந்தேருத்தனிமுதலொருவவென்னத்
தோத்திரவகையாலேத்தித்தொழுதொன்றுவினவல்செய்வார். (எ)

ஐயவிவ்விலிங்கமூர்த்திக்காட்டவுமடியேமுழ்கி
யுய்யவுங்கங்கையாதிநதிகளுமுலகத்துள்ளோர்
மையறுதடாகநீருமற்றிலையிருமைப்பேறுஞ்
செய்வவோர்தீர்த்தமிங்குண்டாக்கெனச்செப்பலோடும். (அ)

அத்தகையிலிங்கமூர்த்திக்கடித்ததென்கீழ்சாராக
முத்தலைவேலேலவாங்கிநாட்டிஞன்முதுபார்கீண்டு
பைத்தலைப்பாற்றள்வேந்தன்பாதலங்கீண்டுபோயெண்
கைத்தலப்பிரமனண்டகடாகமுங்கீண்டதவ்வேல். (கூ)

அவ்வழிபுறம்புசூழ்ந்து கிடந்தபேராழியுழிப்
பௌவநீரென்னவோங்கப் பாணியாலமைத்துவேணித்
தெய்வகன்னீரைத்தூவிக் கலந்துமாதீர்த்தமாக்கிக்
கைவரைக்கபாலிநந்தி கணதிநோக்கிக்கூறும். (கo)

இன்னமாதீர்த்தந்தன்னே யெனைப்பலதீர்த்தங்கட்கு
முன்னமியாமிங்குக்கண்ட முதன்மையாலாதிதீர்த்த
மென்னலாமினியுண்டாக்குந் தீர்த்தங்களெவைக்குமேலாய்
மன்னலாற்பரமதீர்த்த மெனப்பெயர்வழங்கலாகும். (கக)

(சு) முனிவுஅரும் - சந்தோஷத்துடன்.

(எ) வேத்திரப்படையோன் - பிரம்புப்படையையுடையநந்திதேவர். பாலம் - நெற்றி.

(கூ) முத்தலைவேல் - சூலம். அண்டகடாகம் - அண்டத்தின் அடிச்சுவர்.

(கo) கைவரை - கையிலேந்திய.

(கக) கண்ட - உண்டுசெய்த

மருட்கெடமூழ்கினோர்நன் மங்கலம்பெறலாலுமை
மருட்சிவதீர்த்தமாகும் புன்னெறியகற்றியுள்ளத்
திருட்கெடஞானந்தன்னை யீதலான்ஞானதீர்த்தந்
தெருட்கதிதரலான்முத்தி தீர்த்தமென்றிதற்குநாமம். (கஉ)

குடைந்துதர்ப்பணமுஞ்செய்து தானமுங்கொடித்தம்மாடே
யடைந்தெழுத்தைந்துமெண்ணி யுச்சரித்தன்பாலெம்மைத்
தொடர்ந்துவந்திறைஞ்சிச்சூழ்ந்து துதித்தெமையுவப்பச்செய்தோ
ருடம்பெடுத்ததனுலெய்த வுறுதியுண்டதனைச்சேர்வார். (கஙு)

இந்தநீரெம்மையாட்டி னேழிரண்டெலின்மிக்க
வந்தமிதீர்த்தமெல்லா மாட்டியபயன்வந்தெய்தும்
வந்திதின்மூழ்கியிங்கு வைகுநங்குறியையுங்கள்
சிந்தையிலார்வம்பொங்கப் பூசனைசெய்மினெண்ணு. (கச)

விண்ணவர்தம்மின்மேலாம் வேதியனுகின்ற
பண்ணவன்றனக்நீரிற் படிந்துதன்னனுளையாலே
யண்ணலங்கணத்திறைமை மூழ்குவித்தனுதியாய
புண்ணியவிலிங்கந்தன்னுட் புகுந்தினிதிருந்தான்மன்னோ. (கஞ)

அந்தமாநீரானந்தி யாதியோர்விதியாற்சோம
சுந்தரன்முடிமேலாட்டித் துகளறப்பூசையாற்றிச்
சிந்தையில்விழைந்தவெல்லா மடைந்தனர்செம்பொற்கஞ்சம்
வந்தவாறிதுவத்தீர்த்த மகிமையுமுரைப்பக்கேண்மின். (கசு)

வலையெறிதரங்களான வாவியைநோக்கிற்பாவத்
தலையறுமூழ்கின்வேண்டிங் காமியமெல்லாஞ்சாரு
முளமுறமூழ்குமெல்லை முழுக்கொன்றற்குலகத்துள்ள
வனவறுதீர்த்தமெல்லா மாடியபயன்வந்தெய்தும். (கஎ)

மெய்யைமண்ணுதிகொண்டு விதிவிழிசுத்திசெய்து
மையறுவருணசுத்த மந்திரநலின்றுமூழ்கிற்

(கஉ) மாடு - சமீபம். உறுதி - பயன்.

(கச) குறி - சிவலிங்கம்.

(கஞ) அனுளை - கட்டளை.

(கஎ) வலை - சங்கு, தரங்கம் - அலை. தலை - தொடக்கு. காமியம் - விருப்பம்.

றுய்யமாதீர்த்தமெல்லாந் தோய்ந்துகான்மறையுமாய்ந்தோர்
கையிலெப்பொருளுமீந்த காசறுபேறுகல்கும். (கஅ)

தெய்வவித்தீர்த்தந்தன்னை நினைவின்றித்திண்டிளைஞ
மவ்வியவினையினீக்கி யரும்பெறல்வீடுசேர்வ
ரிவ்வுரைமெய்யேயாகு மென்னெனின்மனத்தாறன்றி
வெவ்வழறீண்டிளைஞஞ் சுமென்றிவிடுமோவம்மா. (ககூ)

ஆருமந்நீரிலென்று மாடினாற்சிவண்முத்தி
சேருவரந்நீராடுஞ் சிறப்புறுபயனுக்கொவ்வா
வாருணமாக்கினேய மந்திரமிவைமுன்னுன
பேருணர்வளிக்குஞானஞ் செய்தவர்பெறும்பேறெல்லாம். (உ0)

அன்னநீர்தனையுமாடி யாலவாயுடையநாதன்
றன்னையும்பணிவோன்மேலைப் பரகதிதன்னைச்சாரு
மென்னகன்னூலிற்சொன்ன பவித்திரமெவைக்குமேலாய்ப்
பன்னரும்புனிதமான பவித்திரமாகிநிற்கும். (உக)

ஆதரவிலனுயங்நீ ராடினேன்சுவர்க்கஞ்சேரு
மாதரவுளனுய்மூழ்கி வானவராதியானோர்க்
காதரவரிதியென்னுத் தருப்பணமமையச்செய்தோ
னுதரவேள்விமுற்று மாற்றியபயனைச்சேரும். (உஉ)

(கஅ) மண்ணுதியாவன - அரசடிமண், வில்வமரத் தடிமண், நுழாயடிமண், புளியமரத்தடிமண், அறுகடிமண், நாவல்மரத்தடி மண், ஆலமரத்தடிமண், யானைகட்டி மிடத்துமண், குதிரைகட் டுமிடத்துமண், பசுத்தொழுவத்து மண், முதலியனவும், தளிசித்த ளிர், புளியந்தளிர், நாவற்றளிர் வில்வத்தளிர், ஆலந்தளிர், அரசந் தளிர், அறுகந்தளிர், முதலியதளிர்களும், பால், தயிர், நெய், கோ சலம், கோமயம் ஆகிய பஞ்சகவ்வியங்களுமாம். வருணசூக்கமந்தி ரம் வருணதேவன் அனுக்கிரகத்துக்குரிய வேதமந்திரம்.

(ககூ) மனத்து ஆறு - மனத்தின்வழி.

(உ0) வாருணம் - வருணமந்திர ஸ்நானம். ஆக்கினேயம் - (அக்கினி) ஆக்னேய மந்திரஸ்நானம்.

(உக) என்ன - எப்படிப்பட்ட.

ஈனமார்தலங்கடம்மி லிருந்துசெய்விரதம்பூசை
தானமாதருமமோமந் தவஞ்செயந்தியானந்தம்மா
லானமாபயனிற்கோடி யதிகமாமடைந்துமூழ்கி
ஞானமாதீர்த்தஞாங்க ரிருந்தவைநயந்துசெய்யின். (உங)

பிறந்தநாளந்நீர்மூழ்கின் மேலேவெம்பிறவிப்பௌவ
மறிந்திடுமறிதேள்கும்ப மதிகளின்மூழ்கித்தென்பா
லுறைந்தவர்பொருட்டப்பிண்ட முதவினுலவர்தாமாழ்ந்து
நிறைந்திடுபிறவிப்பௌவ நின்றுமேலெழுவரன்றே. (உச)

அத்தடமருங்கின்யாவர் தென்புலமடைந்தோர்தங்கள்
சித்தமாசகற்றவேண்டிச் செய்கடன்முடிக்கினன்லே
மெத்தனெயெண்ணேர்ந்தாலு மெள்ளுக்காயிரமாண்டாக
வத்தனேயாண்மெட்டு மவரைவிண்ணுளவைப்பார். (உஞ)

மூவகையுலகிலுள்ள தீர்த்தமுமுறையாலென்றுஞ்
சேவகஞ்செய்யுமிந்தத் தீர்த்தமெந்நாளுமூழ்கி
யேவரந்நீரார்லென்று மீசனேப்பூசைசெய்வோ
ராவரிப்பிறவிதன்னி லவர்கதிக்கரையைச்சார்வார். (உசு)

விடுத்திடலரியநித்த வேள்விமாவிரதம்வேதந்
தடுத்திடலரியதானந் தவமிவைதரும்பேறெல்லா
மடுத்ததண்கரையில்வைகி யீசனேயருச்சிப்போர்க்குக்
கொடுத்திடுபுண்ணியத்திற் கோடியிலொன்றுக்கொவ்வா. (உஎ)

உம்மையிற்பிறவிதோறு நியமநல்லொழுக்கம்பூண்டு
பொய்ம்மையில்விரதந்தானந் தவஞ்செய்துபுனிதராகிச்
செம்மைசன்னெறியினின்ற சித்தருக்கலதித்தீர்த்த
மிம்மையிலடைந்துநித்த மாதேதற்கெய்தாதன்றே. (உஅ)

(உங) ஞாங்கர் - கரை.

(உச) மறி - சித்திரைமாதம். தேள் - கார்த்திகைமாதம், கும்பம் - மாசிமாதம், தென்பாலுறைந்தவர் - பிதிரர்.

(உஅ) உம்மை - முற்பிறப்பு.

மேற்படி - வேறு.

†மதிகதிரோனிடத்தொடுங்கு தினம் *திங்கட்பிறப் ‡பரவம் வாயுங்காந்து,கதிர்கடமைவிழுங்குதினம் $ விதிபாதமிந்நாளிற்கரு திழுங்கித், துதிகடருப்பணந்தானம் புரிதன்மனுவோதுதலத் தொகையொன்றற்கொன், றதிகபலனம்முறை நூறுயிரநூறுயிர மோரனந்தமாகும். (உசு)

பொருவரியதகர்த்திங்கடலொத்திங்களிவையுதிக்கும்போதுமூழ்கி னெருபதினுயிரமடங்காஞ்சுறவுகவைத்தாளலவனுதிப்பின்மூழ்கி னிருபதினுயிரமடங்கா மிந்திரவியிடத்தொடுங்குமிந்துவாரம் வருவதறிந்தாடிமனுவோதன் முதற்செயினனந்தமடங்குண்டாகும்.

பிரயாகைதனின்மகர மதிநாண்முப்பதுங்குடைந்து பெறும் பேறிந்தத், திரையார்பைந்தடத்தொருநாண்மூழ்குவோன் பெறும் பிரதசிலம்பூண்டி, வரையாம லொருவருடம்படிந்தமையை யமர் சிகாமணியாம்வேத, வுரையானவழிபடுமேன் மலடிக்குநன்மகப் பேறுண்டாமன்னே. (ஈக)

எண்டிசையாநதிவாவிவடிவானமாதீர்த்தமெல்லாமிப்பொற், புண் டரிகதடத்திலொருகோடியிலோர்கூறுநிகர்போதாவீது, கண்டத னலறந்தீண்டப்பெற்றதனனற்பொருளங்கையாலள்ளிக், கொண் டதனலின்பநலங்குடைந்ததனற்பேரின்பங்கொடுக்குமன்றே.

மேற்படி-வேறு.

முன்னவனருளிச்செய்தகாரணமுறையாலன்றி
யின்னமிப்புனிதவாவிக்கீதுவாலெய்துநாம
மின்னவிர்சடையான்சென்னிமேவியகங்கைநீரிற்
பின்னதுகலந்தநீராற்பெறுஞ்சிவகங்கையென்றும். (ஈஈ)

அலகிலாத்தீர்த்தந்தம்முளதிகவுத்தமமாய்த்தோன்றி
யிலகலாலிதனேத்தீர்த்தவுத்தமமென்பாராய்ந்தோர்

(உசு) †அமாவாசை. *மாசப்பிறப்பு. ‡கிரகணபுண்ணியகாலம். $ பிரதிமாதமும்வரும் 27-யோகங்களில் ஒன்றாய்ப் பிதிர்கர்மவிசே டங்களுக்குரிய சிரார்த்தவகை 96-ல்ஒன்றாய் வருவது.

(ஈ0) தகர் - மேஷம் (சித்திரை.) துலா - ஐப்பசி. சுறவு - மகரம் (தை), அலவன் - கடகம் (ஆடி.) இந்து இரவியிடத்து ஒடுங்கும் இந்துவாரம் - சோமவார அமாவாசை - மநு - பிரண வாதி மகாமந்திரங்கள்.

பலவிதழ்விரித்துச்செம்பொற்பங்கயமலர்ந்தநீரா
லுலகவர்யாரும்பொற்றமரையெனவுரைப்பரன்றே. (கூச)

தருமமுன்னுகூான்குந்தருதலாற்றருமதீர்த்த
மருமைசாலருத்ததீர்த்தமரும்பெறற்காமதீர்த்த
மிருமைசேர்முத்திதீர்த்தமென்பதாமினையதீர்த்தம்
வெருவருபாவமென்னும்விறலுக்கெரியாமன்றே. (கூடு)

இவ்வருந்தலத்தினுன்றபெருமையுமெரிகால்செம்பொற்
றெய்வதபதுமதீர்த்தப்பெருமையுஞ்செப்பக்கேட்டோ
ரெவ்வமில்போகம்வீடுபெறுவரென்றிசைத்தான்முந்நீர்ப்
பௌவமுண்டமரர்வேந்தன்பரிபவவிழுமந்தீர்த்தோன். (கூக)

தீர்த்தவிசேடம்-முற்றிற்று.

ஆ படலம். எ-க்கு திருவிருத்தம்-உகo.

மூர்த்திவிசேடப்படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆலகாயலர்ந்தசெம்பொனம்புயப்பெருந்தீர்த்தத்தின்
மேலவாம்பொருமைதன்னேவிளம்புவாரெவரேயுங்க
ணீலமாமிடற்றுமுக்கணிராமயனறிவானந்த
மூலமாலிங்கமேன்மைமுறையினுலறையலுற்றும். (க)

பொன்னெடுமேருவெள்ளிப்பொருப்புமந்தரங்கேதாரம்
வன்னெடும்புரிசைசூழ்ந்த வாரணவாசியாதிப்
பன்னருந்தலங்கடம்மிற் பராபரலிங்கந்தோன்று
முன்னரிக்கடம்பின்மாடே முளைத்ததிச்சைவலிக்கம். (உ)

(கூடு) வெருவரு - அச்சத்தைத்தரும். வெரு-ஈறுகெட்டுநின்ற முதனிலைத்தொழிற்பெயர். (வெருவு - அச்சம்.)

(கூசு) எரி - ஒளி. தெய்வதம் - தெய்வத்தன்மை பொருந்திய. எவ்வம் - துன்பம். பரிபவவிழுமம் - துன்பபாரம்.

(உ) வாரணவாசி - காசி (கோழிவசிப்பது.) இதுபற்றிக் காசிக்குக்குடநகரம் என்னும் பெயரும் வந்தது.

அப்பதியிலிங்கமெல்லாமருட்குறியிதனிற்பின்பு
கப்புவிட்டெழுந்தவிர்த்தக்காரணமிரண்டிலுஞ
மொப்பரிதானஞானவொளிதிரண்டன்னவிந்தத்
திப்பியவிலிங்கமூலவிலிங்கமாய்ச்சிறக்குமன்றே. (ங)

இந்தமாவிலிங்கத்தெண்ணுன்கிலக்கணவிச்சைமேனி
யந்தமிலழகன்பாகத்துமையொடுமெழுஞ்செய்து
சந்ததம்விளக்கஞ்செய்யுந்தக்கமையைநோக்கிச்சோம
சுந்தரனென்னுநாமஞ்சாத்தினுர்துறக்கவாணர். (சு)

நிறப்படுமுலகமெங்கும்வியாபியாய்ச்சிறந்துநிற்கு
மறப்பெருங்கடவுள்சோமசுந்தரனதலுலன்றே
கறைக்கதிர்வடிவேற்றென்னன்கையிற்பொற்பிரம்புபட்ட
புறத்தடித்தழும்புமூன்றுபுவனமும்பட்டதன்றே. (ஙு)

சொற்றவிச்சமட்டியானசோமசுந்தரனேக்காணப்
பெற்றவர்வியட்டியானபிறபதியிலிங்கங்காண
லுற்றவராவரென்னென்றுரைக்கின்வேரூட்டுநீர்போய்
மற்றையசினைகளெல்லாந்தழைவிக்குமரத்தின்மாதோ. (சூ)

எத்தலத்தியாவனெண்ணெண்டிருவிளையாடல்செய்தா
னத்தலத்தவனுக்கொப்புமதிகமாஞ்சிறப்பும்பெற்ற
வுத்தமனென்றுமெந்தவுலகிலுமில்லையந்த
வித்தகனதிகத்தன்மையெனத்தெளின்வீளம்பக்கேண்மின். (எ)

பொருப்பினுட்டலைமையெய்தும்பொன்னெடுங்குமிமேரு
தருக்களிற்றலைமைசாருந்தண்ணறுந்தெய்வதாரு
விருப்புறுவேள்விதம்முண்மேம்படும்புரவிமேத
மருட்படுதானந்தம்முள்விழுமிதாமன்னதானம். (அ)

மனிதரிலுயர்ந்தோராதிமறையவர்தேவர்தம்மிற்
பனிதருதிங்கள்வேணிப்பகவனேயுயர்ந்தோன்வேட்டோர்க
ளினிதருள்விரதந்தம்முளதிகமாமிந்துவாரம்
புனிதமந்திரங்கடம்முட்போதவைந்தெழுத்துமேலாம். (கூ)

(ங) திப்பியம் - ஒளி.

(சு) சோமசுந்தரன் - உமையோடுகூடியவழகன். (சஹ - உமா சுந்தரன்.)

(எ) புரவிமேதம் - அசுவமேதயாகம். விழுமிது - தலைமை பெற்றது.

மின்மைசான்மணியிற்றிந்தாமணிவரம்விழுப்பால்குந்
தன்மைசாலறங்கடம்மின்மிகுஞ்சிவதருமமென்ப
வின்மைசானெறிநின்றேருருக்கேற்குநற்கலக்கடம்மி
னன்மைசான்றவரேமுக்கணுதனுக்கன்புபூண்டோர். (கஐ)

நீயவாஞ்சுவைப்பாலாவிற்றேவராவதிகம்பல்வே
ருயமாநீர்த்தந்தம்முளதிகமாஞ்சுவணகஞ்ச
மாயமாசறுக்கவெல்லாத்தலத்திலும்வதிந்துமன்னுந்
தூயவானவரிற்சோமசுந்தரன்சிறந்தோனுகும். (கக)

அந்தமுமுதலுமில்லாவகண்டபூரணமாயார்க்கும்
பந்தமும்வீடுநல்கும்பராபரச்சோதிதானே
வந்தனைபுரிவோர்க்கிம்மைமறுமைவீடளிப்பானந்தச்
சுந்தரலிலிங்கத்தென்றும்விளங்குவான்சுருதியேத்த (கஉ)

இத்தகுசயம்புதன்னேயேனையசயம்புவெல்லா
நித்தமுந்தெரிசித்தேகுநிருமலவொளியாயிந்த
வுத்தமலிலிங்கங்கண்டோருரையுணர்வொடுங்கவுள்ளே
சித்தமாசொழியத்தோன்றுஞ்சிவபரஞ்சுடரைக்கண்டோர். (கங)

இத்தனிச்சுடரைநேர்கண்டிறைஞ்சினேர்பாவமெல்லாங்
கொத்தழற்பொறிவாய்ப்பட்டபஞ்சுபோற்கோபமூள
மெய்த்தவஞ்சிதையுமாபோன்மருந்தினுல்வியுநோய்போ
லுத்தமகுணங்களெல்லாமுலோபத்தாலழியுமாபோல். (கச)

கலிகடலிரவிதோன்றக்கருதிருளுடையுமாபோ
லொலிகெழுபெருங்காறள்ளவுடைபடுமேகம்போல
வலிகெழுமடங்கல்சீறமாயுமால்யானைபோலக்
குலிசவல்லேறுதாக்கப்பொடிபடுங்குன்றம்போல (கஎ)

மருட்சிசெய்காமநோயான்மதிகெடுமாறுபோல
வருட்சிவஞானநோக்கால்வலிகெடுமெலிச்சைபோலத்
தருக்குறுமுவணஞ்சீறத்தழலராவிளியுமாபோற்
செருக்குறவழியுங்கற்றகல்விபோற்சிதையுமன்றே. (கஅ)

(கஐ) கலம் - தானபாத்திரம்.

(கக) நீயவாம் - நீ. இனிமை, அவாம் - விரும்பும். தேவர் ஆ-காமதேனு.

(கஉ) சயம்பு - தானேயுண்டானது (ஸ்வயம்பு என்பது சயம் புனைத்திரிந்தது. ஸ்வயம் - தானே, பு - உண்டானது.)

(கஎ) மடங்கல் - சிங்கம் - குலிசம் - வச்சிராயுதம். ஏறு-இடி.

புலரியிற்சீவன்முத்திபுரேசனைக்காணப்பெற்ற
லகடனென்குட்பட்டவனிமாதானஞ்செய்த
பலனுறுங்கதிர்காலுச்சிவைகலிற்பணியப்பெற்றுற்
கலைஞர்பாணாற்றுப்பத்துக்கபிலமாதானப்பேறும். (கஎ)

விண்ணிடைப்பரிதிப்புத்தேண்மேலேநீர்குளிக்குமெல்லே
யண்ணலேவணங்கிற்கோடியானினத்தானப்பேறும்
பண்ணவர்பரவும்பாதியிருள்வயிற்பணியப்பெற்றுல்
வண்ணவெம்புரவிமேதமகம்புரிபெரும்பேறெய்தும். (கஅ)

இன்னனவதிகமாம்பேறறிந்துபோயெத்தேவர்க்கு
முன்னவன்சமட்டிவிச்சாபுரமுறைமுதல்வன்றன்னேச்
சொன்னவிக்காலந்தோறுமிறைஞ்சியுந்தொழுதுசூழ்ந்தும்
பொன்னடிக்கன்பராகிவழிபடும்புனிதசீலர். (கக)

உம்மையில்வினைகளென்னும்பிணியவிழ்ந்தொருவித்தாய
செம்மையராகியாஞத்திருவொடுசெல்வமோங்க
வெம்மையில்போகமுழுதுமலிருள்வீக்கநீந்தி
மைம்மலிகண்டத்தெங்கோன்மலரடிநீழல்வாழ்வார். (உ0)

மேற்படி - வேறு.

அறவுருவலைவாயாலுமஞ்செவிமடித்தாலடைந்தபத்துப், பிற
விவினையறுநினைந்தானூறுபெரும்பவப் பாவப்பிணிபோங்கூட, லி
றைவனையின்றிறைஞ்சுது மென்றெழுந்து மனைப்புறம்போந்தாலீ
ரைஞ்ஞூறு, மறமுறுவெம்பவத்திழைத்த பாதகவல்வினையனைத்து
மாயுமன்றே. (உக)

புழைக்கைவரைதொலைத்தானைத்தெரிசித்தோராயிரவாம் புர
விவேள்வி, தழைத்தபெரும்பயன்பெறுவருருத்திர*சூக்கமமதனுற்
றவவானோர்க, டொழற்கரியான்றனைத்துதித்தோர்கணத்துக்காயி
ராசசூயமாக, மிழைத்தபெரும்பயன்பெறுவர்சமட்டிவடிவாகியவவ்
விலிங்கந்தன்னை. (உஉ)

(கஎ) புலரி - விடியற்காலம். கடல்நான்கென்றது - நாற்றி
சைக்கடல்களே. உச்சிவைகல் - உச்சிக்காலம்.

(கஅ) மகம் - யாகம்.

(உ0) ஆனைத்திரு - நீங்காதசெல்வம்.

(உஉ) சூக்கம் - சூக்தமென்னும் வடமொழித்திரிபு. புழைக்
கை - தூவாரத்தையுடைய கையையுடையதென உருபும் பயனுந்
தொக்க இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைக் களத்துப்பிறந்த
அன்மொழித்தொகையாய், யானைக்குக் காரணப்பெயராய்வந்தது.
வாம்புரவி - தாவுங்குதிரை.

அங்கையளவாகியநன்னீராட்டிப்பூசித்தோரளவிலேனைத்
துங்கதலத்துறையிலிங்க மூர்த்திகளேச்சிவாகமநூல் சொன்னவாற்
மங்கலமாகியமுகமனீரெட்டும்வழுவாதுவாசந்தோய்ந்த [ரூன்
செங்கனகமணிக்கலசப்புனலாட்டிமாபூசைசெய்தோராவார் (உங)

அவ்வண்ணஞ்சுந்தரனையந்தமுதமானுதவுமைந்துநீங்தேன்.
செவ்வண்ணக்கனிசாந்தச்சேறுமுதன்மட்டித்துத்தேவர்தேரு, மெ
யவ்வண்ணங்குளிரவிரைப்புனலாட்டிமாபூசைவிதியாற்செய்தோர்,
மைவ்வண்ணவினைநீந்தி யறமுதலுற்பொருளடைந்து மன்னிவாழ்
வார். (உச)

நல்லவகைமுகமனீரெட்டுள்ளும்வடித்தவிரைநன்னீராட்ட
வல்லவர் நூருயிரமாமேதமகப்பயன்பெறுவர்வாசநான
மெல்லவிர்குங்குமஞ்சாந்தமிவைபலவுமட்டித்தோரெழிலார்தெய்வ
முல்லைநகையாரோடும்விரைக்கலவைகுளித்தின்பமூழ்கிவாழ்வார்.

நன்மலரொன்றுலவாயான் முடிமேற்சாத்தினுனையந்துநூறு,
பொன்மலர்கொண்டயற்பதியிற்பூசித்தபயனெய்தும்புனிதபோகத்
தன்மைதருசுந்தரற்குத்தூப மொருகாற்கொடுப்போர்தமக்குத்தாங்
கள். சொன்மனமெய்யுறச்செய்தகுற்றமாயிரம் பொறுப்பன்சுருதி
நாதன். (உசு)

திருவமுதுநிவேதிப்போரவிழொன்றற்குகமொன்றுச்சிவலோ
கத்தின், மருவிநிறைபோகமுடன் வைகுவர்தாம்பூலமுக வாசமீந்
தோர், பொருவரிய கடவுளராண் டொருநூறுகோடிசிவ புரத்து
வாழ்வா, ரொருபளிதவிளக்கிடுவோர் வெண்ணிறமுங் கண்ணுதலு
முடையராவார். (உஎ)

(உங) முகமன் - உபசாரம். இது சோடசோபசாரம்,தசோப சாரம், பஞ்சோபசாரம் என மூவிதமாம.

(உச) ஐந்தமுதம் - பஞ்சாமிர்தம். அவை பால், நெய், தேன். சர்க்கரை, பழம். ஆனுதவும் ஐந்து பஞ்சகவ்வியம். மட்டித்தல்-பூசு தல். விரைப்புனல் - வாசனையூட்டியதிருமஞ்சனம்.

(உஙி) மாமேதமகம் - அசுவமேதயாகம்.

(உசு) சுருதி - வேதம் (காதாற்கேட்கப்படுவது.)

(உஎ) முகவாசம் - "தக்கோலம் ஏலம். தகைசாலிலவங்கம். கர்ப்பூரம்சாதியோடைந்து" என்னுமிவ்வைந்தும். பளிதம்-கருப் பூரம். பளிதவிளக்கு - கர்ப்பூரநிராஞ்சனம்.

நறுந்திருமஞ்சனமெடுக்கக்குடமாட்டமணிக்கலசநல்லவாசம், பெறுந்தகைதூபக்காரீபக்கான்மணியின்னபிறவுங்தங்கும், றெறுங்கதிர்கான்மணிமாட மதுரைநாயகர்க்கீந்தோர் செய்தபாவம், வெறுந்துகள்செய்தைம்பொறிக்கும் விருந்தாட்டும் பெருங்காம வெள்ளத்தாழ்வார். (உஅ)

கயலிசையுங் கண்ணுமைகோன் நிருமுன்னர்ப் பல்லியமுங் கல்லென்றூர்ப்ப, வியலிசையபாடலிலே டாடலிவைசெய்விப்போ நிறுமாப்பெய்திப், புயலிசைய வியங்கலிப்ப மூவுலகுந் தொழவரசாய்ப்பொலங்கொம்பாடுஞ், செயலிசையவணங்கனையாராடரங்கு கண்டின்பச்செல்வத்தாழ்வார். (உகூ)

ஒருகாலட்டாங்கமுடன் பஞ்சாங்கமுடலுத லொண்செங்கால்வெண், குருகாலுமலர்த்தடஞ்சூழ்கூடலுயகர்ப்பணிவோர்கோ லொன்றேச்சிப், பொருகாலின்வருபரித்தேர் மன்னவராயாவருந்தம்புடைவந்தெய்தி, யிருகாலுந்தலைவருட வெக்காலுந்தணமவணங்கவிருப்பரன்றே. (ஙo)

இத்தகையதிருவாலவாயுடையான்நிருமுன்னரியற்றுமோம மெய்த்தவமந்திரந்தானமின்னவணுவளவெனினுமேருவாகு மூத்தமமாமிவ்விலிங்கப்பெருமையெலாம்யாவரளந்துரைப்பர்வேத வித்தகரேயிறிதறிந்தவாறுரைத்தே மினிப்பலகால்விளம்புமாறென்.

இத்தலத்துக்கொப்பாகவொருதலமும்பொற்கமலமென்னுமிந்த வித்தமமாதீர்த்தத்துக்கொப்பதொருதீர்த்தமுமெய்யுணர்வானந்த வித்தனையவிலிங்கமிதற்கொப்பாவோரிலிங்கமும்பார்விண்மேலெனு மூத்தலத்துமிலையந்தமூர்த்திதிருநாமங்கண்மொழியக்கேண்மின்.

கருப்பூரசுந்தரன்பூங்கடம்பவனசுந்தரனுட்கரவாத்தொண்டர் விருப்பூருங்கலியாணசுந்தரனல்லறவடிவாய்விளங்குமேற்றுப்

(உகூ) இயம் - வாத்தியம்.

(ஙo) குருகு - அன்னம். ஆலும் - ஒலிக்கும். அட்டாங்கம் - தலை, இரண்டுகை, இரண்டுசெவி, மோவாய், இரண்டுதோள்என்னுமிவ்வெட்டுறுப்பும் நிலத்திற்பொருந்தவணங்குதல். பஞ்சாங்கம்-தலை, இரண்டுகை, இரண்டுமுழந்தாள் என்னுமிவ்வைந்துறுப்பும் நிலத்திற்பட வணங்குதல்.

(ஙக) மேரு - மலை.

பொருப்பூருமபிராமசுந்தரன்றேன்புடைகவிழப்பொன்னிற்பூத்த
மருப்பூசசண்பகசுந்தரன்மகுடசுந்தரன்ரூண்வாழிமன்னே. (ஈஈ)

மான்மதசுந்தரன்கொடியபழியஞ்சுசுந்தரனேர்மருங்கின்ஞானத்
தேன்மருவியுறைசோமசுந்தரன்றேன்செவ்வழியாழ்செய்யப்பூத்த
கான்மருவுதடம்பொழில்சூழாலவாய்ச்சுந்தரன்மீன்கணங்கள்சூழப்
பான்மதிசூழ்நான்மாடக்கூடனுயகன்மதுராபதிக்குவேந்தன்.(ஈசு)

கிருகாலோன்பரவரியசமட்டிவிச்சாபுராதன்சீவன்முத்தி
புராதன்பூவுலகவிலோகாதிபன்கன்னிபுரேசன்யார்க்கும்
வாகானுந்தருமூலவிலிங்கமெனவிவைமுதலாமாடக்கூட
லாணைமின்னமளப்பிலவாகுமுலகுய்யவவ்விலிங்கம். (ஈகு)

பாதாளமேழுருவமூலத்தெழுந்ததவ்விலிங்கப்படிவந்தன்னு
ளாதாரமாகவமர்ந்தறுபத்துநாலுவிளையாடல்செய்த [ரூன்
போதானந்தன்பெருமைஙகுரவன்மொழிப்படியேபுகன்ரூமென்
மீகாதிகலெதிரிந்தமலைய முனிகேட்டறவோர்விஞ்தல்செய்வார்.

அருட்கடலேயிறைவிளையாட்டறுபத்துநான்கென்றுயவையா
னந்தப். பொருட்கடவுளெக்காலத் தியாவர்பொருட்டாடினனெம்
பாதந்தேறிப். தெருட்படரவரன்முறையாற்செப்புகெனக்கருகு
வித்தார்சென்பால்வெற்பி, லிருப்பவனும்விளையபடிக்கிறைநிம்பத
லாகுத்துவிரிந்தியம்புகின்றான். (ஈஎ)

மூர்த்திவிசேப்படலம் - முற்றிற்று.

ஆ_ படலம். அ-க்கு திருவிருத்தம்-ரு. உஎ.

(ஈசு) ஓர் மருஙகின் ஞானத்தேன் என்றது - உமாதேவியாரை - இது உவம ஆகுபெயர். மீன் - நட்சத்திரம்.

(ஈசு) போதானந்தன் - ஞானானந்தன். ஈண்டு "பதிகக்கிளவி பல்வகைப் பொருளேத், தொகுதியாகத் தொகுத்துரைப்பதுவே" என்னுஞ் சூத்திரப்படி, பலவகைத்திருவிளையாடல்களையுந் தொகுத்துக்கூறியதனாற் பதிகம் எனப்பெயர்வந்தது.

திருவிளையாடற் ரூகையாகிய
* பதிகம்.

—*—

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வானவர்கோன்பழிதொலைத்தவிளையாட்டுங்கரிசாபமாய்த்தவாறு
மீனவர்கோன்காடெறிந்துபுரங்கண்டபெருஞ்சிறப்புமீனநோக்கி
யானதடாதகையழல்வாயவதரித்துப்பாராண்டவருளுமீசன்
ரூனவிளைமணஞ்செய்துமுடிதரித்தமண்காத்ததகைமைப்பாடும்.(க)

புலிமுனியும்பணிமுனியுந்தொழவெள்ளி மன்றுணடம்புரிந்த
வாறும், வலிகெழுதோட்குண்டகட்டுக்குரட்கன்னக்குன்றளித்த
வகையும்பின்னு, நலிபசிநோய்கெடவன்னக் குழியழைத்துக் கொ
டுத்து நீர்நசைக்குவைகை, யலைபுனல்கூயருத்தியதும் பொன்மா
லைக்கெழுகடவு மழைத்தவாறும். (உ)

அந்தரர்கோனுதனத்திலுறை மலயத்துவசனை மீண்டழைத்த
வாறுஞ், சுந்தரவுக்கிரகுமரனவதரித்தவாறும்வனசுடர்வேல்செண்
டி, தந்தையிடத்தவன்பெற்றவாறுமவனவ்வடிவேல்சலதிவீறு, சிந்
விடித்ததுமகவான்முடியையுமெயிறிந்திறைவன்சிதைத்தவாறும்.

பொன்னசலந்தனைச்செண்டாற்புடைத்து நீதியெடுத்தருள்ம்
புனிதர்க்கீசன், பன்னரியமறைப்பொருளைப்பகர்ந்ததுவுமாணிக்
கம்பகர்ந்தவாறுந், தொன்னகர்மேனீர்க்கிழவன்வரவிடுத்தகடல்சு
வறத்தொலைத்தவாறு, மன்னதனித்தொன்மதுரைகான்மாடக்கூ
டனகரானவாறும். (ச)

(க) மீனவர்கோன் - குலசேகர பாண்டியன்.

(உ) புலிமுனி - வியாக்ரபாதமுனிவர். பணிமுனி - பதஞ்சலி முனிவர். குண்டுஅகடுகுரல் - ஆழ்ந்தவயிற்றையுடைய குண்டோதரன். (குண்ட--ஆழ்ந்த, உதரன் - வயிற்றையுடையோன்.) கூப் - கூவி.

(ஊ) மகவான் - இந்திரன்.

(ச) பொன்அசலம்-மகமேருமலை.(அசலம்-சலியாதது) (அசையாதிருப்பது.) நீர்க்கிழவன் - வருணன்.

வட்டங்கொள்சடையுடைய சித்தர்வீரேயாடியதோர்வனப்புங்
கையிற், கட்டங்கந்தரித்தபிரான் கல்லாரேகரும்பருந்தக்காட்டு
மாறு, முட்டங்கு வஞ்சனேயாலமணர்வீடு வாரணத்தையொழித்த
வாறு, மிட்டங்கொள்கௌரிமுனம்விருத்தனீரேயோன்குழவியான
வாறும். (கு)

செய்யதாண்மாறிநடமாடியதும்பழியஞ்சுதிறனுந்தாயை
மையலாற்புணர்ந்தமகன்பாதகத்தைமாற்றியதுமதியாதாசான்
றையலாடனேவிரும்புமாணவனேவாளமரிற்றடிந்தவாறும்
பையராவெய்ததுவும்படிற்றமணர்விடுத்தபசுப்படுத்தவாறும். (சு)

அறவேற்றுப்பரியுகைத்துமெய்க்காட்டிக்கொடுத்தவீரேயாட்டு
காட்டுஞ், சுறவேற்றுக்கொடியரசன்றனக்குலவாக்கிழிகொடுத்த
தொடர்புநாய்கர், நறவேற்றமலர்க்குழலார்மணங்கவர்ந்துவீரேபகர்
ந்தநலனுமாறு, மறவேற்கண்மாதரார்க் கட்டமாசித்தியுறமுதித்த
வாறும். (எ)

சென்னிபொருட்டெயில்வாயிறிறந்தடைத்துவிடைபொறித்
தசெயலுஞ்சென்னி, மன்னிகலிட்டமர்வீரேப்பமீனவற்குநீர்ப்பந்
தர்வைத்தவாறும், பொன்னனேயாள்பொருட்டிரதவாதவினைமுடி
ந்ததீவும்புகார்க்குவேந்தன், றன்னேயகன்குழிவீட்டித்தென்னவற்
குமறவாகைதந்தவாறும். (அ)

மனக்கவலேகெடவுலவாக் கோட்டையடியார்க்களித்தவகையு
மாம, னெனக்கருணைவடிவாகிவழக்குரைத்துப்பொருள்வணிகற்கீந்
தவாறுஞ், சினக்கதிர்வேல்வரகுணற்குச்சிவலோகங்காட்டியதந்தி
வவுக்கோலான், றனக்கடிமையெனவிறகுதிருமுடிமேற் சுமந்து
பகைதணித்தவாறும். (கூ)

(கு) கடங்கம் - மழு. இஃது எதுகைநோக்கிக் கட்டங்கமெ
னத்திரிந்தது. வாரணம் - யானை.

(அ) சென்னி - சோழன். புகார் - காவிரிப்பூம்பட்டினம்.
பொன்னனேயாள் - காஞ்சனமாலை என்னு முருத்திரகணிகை.

(கூ) திவவுக்கோலான்-நரம்பின்கட்டமைந்தவீணையையுடைய
பாணபத்திரன். திவவு - வீணைவலிக்கட்டி.

அப்பாணற்கிருநிதியுஞ்சேரனிடைத்திருமுகமீந்தளித்தவாறு
மப்பாணன்பாடமழையரையிரவிற்பொற்பலகையளித்தவாறு
மப்பாணன்மனைவியிசைப்பகை வெல்லவண்ணலவையடைந்தவாறு
மப்பாணனெனின்முலையருத்திப்பன்றியுயிரளித்தவாறும். ()

வயவேனக்குருவாகளமந்திரிகளாக்கியதும்வலியுண்டாகக், கயவாய்க்குக்குருமொழிவைத்தருளியது நாரைக்குக் கருணைநாட்டந், தயவால்வைத்தருண்முத்திநல்கியதுங்கூடனகர்தன்னேச்சித்தர்புயநாகம்போய்வளைத்திருவாலவாயாக்கிப்போந்தவாறும். (கக)

சுந்தரனென்றெழுதியகூரம்பெய்துசெம்பியன்போர்தொலைத்தவாறுஞ், செந்தமிழோர்க்கியற்பலகையருளியதுந்தருமிக்குச்செம்பொன்பாடித், தந்ததுவுமாறுபடுகீரற்குக்கரையேற்றந்தவாறும். விந்தமடக்கியமுனியாற்கீரனியற்றமிழ்தெளியவிடுத்தவாறும். (கஉ)

ஊமனுற்புலவரிகலகற்றியதுமிடைக்காடனுடன்போய்க்கொன்றை
தாமனுர்வடவாலவாயமர்ந்தபரிசும்வலேசலதிவீசிப் [த்
பூமனுய்க்குழலியைவேட்டருளியதும்வாதவூர்ப்புனிதர்க்கேறத்
தேமனுண்மலரடிகண்முடிசூட்டியுபதேசஞ்செய்தவாறும். (கங)

நரிகள்பரியாக்கியதும்பரிகணரியாக்கியதுநாகம்பூண்டோ
னரியதிருமேனியின்மேலடிசுமந்துமண்சுமந்தவருளுந்தென்னன்
னெரியடுவெஞ்சுரந்தணித்தவாறுமமணரைக்கழுவிலிட்டவாறுங்
கரியதெனவன்னிகிணறிலிங்கங்கூய்வணிகமகட்காத்தவாறும். ()

எனத்தொகையாலறுபத்துநான்கிவற்றைநிறுத்தமுறையீறிலாத, வினைத்தொகையாறகன்றீரெக்காலமெவர் பொருட்டெனீர் விளையவாற்றுன், மனத்தளவிலன்புமடையுடைந்தொழுகத்திருவாலவாயான்றுளே, நினைத்தளவிலரனந்தம்பெருகவிரித்துரைப்பலெனநெறியாற்கூறும். (கஙி)

பதிகம் - முற்றிற்று.

ஆ படலம் - கூ - க்கு - திருவிருத்தம் - கூசஉ.

(கக) எனக்குருவே - பன்றிக்குட்டி. கயவாய் - கருக்குருவி.
(கஉ) செம்பியன் - விக்கிரமச்சோழன்.
(கங) ஊமன் - உருத்திரசன்மன்.
(கச) தென்னன் - கூன்பாண்டியன். கரி - சாகடி.

சிவமயம்.

முதலாவது

இந்திரன் பழிதீர்த்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்பயில்குலிசப்புத்தேள்விருத்திராசுரனைக்கொன்ற
வன்பழிவிடாதுபற்றக்கடம்பமர்வனத்திலெய்தி
யென்பரவாரம்பூண்டவிறைவனையருச்சித்தேத்திப்
பின்பதுகழிந்துபெற்றபேற்றினையெடுத்துச்சொல்வாம். (க)

முன்னதாமுகத்தில்வண்டுமூசுமந்தாரநீழற்
பொன்னவிர்சுணங்குண்கொங்கைப் புலோமசைமணாளன்பொற்பூ
மின்னவிர்திமைப்பச்சிங்கஞ்சுமந்தமெல்லணைமேன்மேவி [ண்
ணன்னமென்னடையாராகமாடன்மேலார்வம்வைத்தான். (உ)

மூவகைமலரும்பூத்தவண்டுமேமுழங்கத்தெய்வப்
பூவலர்கொடிபேர்ந்தன்னபொன்னணிர்கூத்துமன்னர்
நாவலரமுதமன்னபாடலுநாகநாடுக்
காவலன்கண்டுகேட்டுக்களிமதுக்கடலுளாழ்ந்தான் (ங)

பையராவணிந்தவேணிப்பகவனேயனையதங்க
ளையனும்வியாழப்புத்தேளாயிடையடைந்தாலுகச்
செய்யதாள்வழிபாடின்றித்தேவர்கோனிருந்தானந்தோ
கையலார்மயலிற்பட்டோர்தமக்கொருமதியுண்டாமோ. (ச)

(க) குலிசப்புத்தேள் - இந்திரன். குலிசம் - வச்சிராயுதம்.

(உ) முன்னதாம் உகம் - கிரேதாயுகம். சுணங்கு - தேமல். புலோமசை-புலோமன்மகள். அவள்-இந்திராணி.

(ங) மூவகைமலர் - கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ. நாகநாடு - தேவலோகம்.

(ச) பகவன் - ஆறுகுணங்களுடையவன். அவை ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பனவாம்.

ஒல்லெனக்குரவனேகவும்பர்கோன்றிருவிளக்கம்
புல்லெனச்சிறிதுகுன்றப்புரந்தரன றிந்திக்கேடு
நல்லதொல்குரவற்பேணுகையினல்வினைந்ததென்னு
மல்லலுற்றறிவன்றன்னைத்தேடுவானுயினனே. (கூ)

அங்கவனிருக்கைபுக்கான்கண்டிலனவித்தபாசப்
புங்கவருலகுமேனேர்பதவியும்புவனமூன்றி
லெங்கணுந்திருவிக்காணனெங்குற்றனுரவனென்னுஞ்
சங்கைகொண்மனத்தலுகிச்சதுர்முகனிருக்கைசார்ந்தான். (கூ)

திருவினனங்குங்காணன்றிசைமுகற்றொழுதுதாழ்ந்து
பரவிமுன்பட்டவெல்லாம்பகர்ந்தனன்பகரக்கேட்டுக்
குரவனையிகழ்ந்தபாவங்கொழுந்துபட்டருந்துஞ்செவ்வி
வருவதுநோக்கிச்சூழ்ந்துமலர்மகனிதனைச்சொன்னான். (எ)

அனையதொல்குரவற்காணுமளவுநீதுவட்டாவீன்ற
தனையன்முச்சென்னியுள்ளான்றுணைவர்குலத்தில்வந்தும்
வினையினலறிவான்மேலான்விச்சுவவுருவனென்னு
மினையனைக்குருவாக்கோடியென்னலுமதற்குநேர்ந்தான். (அ)

அழலவிர்ந்தனையசெங்கேழுடக்கிதழ்முளரிவாழ்க்கைத்
தொழுதகுசெம்மறன்னைத்தொழுதுமீண்டகன்றுநீங்கா
விழைதகுகாதல்கூரவிச்சுவவுருவன்றன்னை
வழிபடுகுருவாக்கொண்டான்மலர்மகன்சூழ்ச்சிதேறன். (கூ)

கைதவக்குரவன்மாயங்கருதிலன்வேள்வியொன்று
செய்திடலடிகளென்னத்தேவர்கட்காக்கங்கூறி
வெய்தழல்வளர்ப்பானுள்ளம்வேறுபட்டவுணர்க்கெல்லா
மெய்திறனினைந்துவேட்டான்றனக்குமேலுறுவதோரான். (கo)

(கூ) அறிவன் - பிரகஸ்பதி.

(கூ) திருவி - சென்று.

(எ) செவ்வி - காலம். மலர்மகன் - பிரமன்.

(அ) முச்சென்னியுள்ளான் - திரிசிரனென்பான்.

(கo) கைதவம் - வஞ்சனை. செய்திடல் - அல்விகுதி. வியங்கோட்பொருட்டு.

வாக்கினுண்மனத்தால்வேறுய்மகஞ்செய்வான்செயலையாக்கை
நோக்கினுஞ்ஞெகிதன்னுலேக்கினுன்சூலிசவேலாற்
றூக்கினுன்றலைகண்மூன்றுந்தனித்தனிப்பறவையாகப்
போக்கினுனலகைவாயிற்புகட்டினுன்புலவுச்சோரி. (கக)

தெற்றெனப்பிரமபாவஞ்சீறிவந்தமர்வேங்கைப்
பற்றலுமதனைத்தீர்ப்பான்பண்ணவர்மாமேன்மண்மேற்
பொற்றொடியார்மேனீர்மேல்வேண்டினர்புகுத்தலோடு
மற்றவரிஃதியாந்தீர்க்கும்வண்ணம்யாதென்னவிண்ணோர். (கஉ)

அப்பிடைநுரையாய்மண்ணிலருவருப்புவராயம்பொற்
செப்பிளங்கொங்கையார்பாற்றீண்டுதற்கரியபூப்பாய்க்
கப்பிணர்மரத்திற்காலும்பயினதாய்க்கழிகவென்ரு
ரிப்பழிசுமந்தவெங்கட்கென்னலமென்ரூர்பின்னும். (கங)

மேற்படி-வேறு.

கருவின்மாதர்கருவுயிர்க்குமளவுமுறையாற்கணவர்தோண்
மருவிவாழ்கமண்ணகழ்ந்தகுழியுமதனல்வடுவொழிக
பொருவினீரும்பிறைதோறுமூறிப்பொலிகமரங்குறைபட்
டொருவினலுந்தழைகவெனவொழியாதலனுமுதவினூர். (கச)

மாசிற்கழிந்தமணியேபோல்வந்தபழிதீர்ந்திந்திரனுக்
தேசிற்றிகழத்துவட்டாதன்செல்வன்றன்னேத்தேவர்பிரான்
வீசிக்குலிசத்துயிருண்டவிழுமங்கேட்டுவெகுண்டியர்த்துக்
கூசிப்பழிகோள்கருதியொருகொடியவேள்விகடிதமைத்தான். (கஞ)

அந்தக்குண்டத்தெரிசிகைபோலழலுங்குஞ்சியண்டமுக
நந்தக்கொடியதூமம்போலுயிர்த்துச்செங்கண்சினச்செந்தீச்
சிந்தப்பிறைவாளெயிறதுக்கித்திசைவான் செவிபெடநகைத்து
வந்தக்கொடியவிடம்போலவெழுந்தானெருவாண்மறவீரன். (கசு)

(கக) யாக்கைகோக்கினுன் - சரீரத்திற் கண்களையுடையவனுகிய இந்திரன். ஒதி - ஞானப்பார்வை. விச்சுவவுருவனது மூன்றுதலைகளுள் சோமபானஞ்செய்யும் முகம் காடையாகவும், சுராபானஞ்செய்யும்முகம் ஊர்க்குருவியாகவும், அன்னபானஞ்செய்யும்முகம் சிச்சிலிக்குருவியாகவும் பறந்தன வென்பதையுணர்த்த 'தனித்தனிப்பறவையாக' என்ரூர்.

(கஞ) பயின் - பிசினி.

(கசு) தூமம் - புகை.

கலிவிருத்தம்.

ஈங்குவன்விருத்திரனென்பவாரழற்
றூங்குவன்கணைவிடுதூரநீண்டுநீண்
டோங்குவஞ்சுதற்கொப்பவைகலும்
வீங்குவனறனிலார்வினையினென்பவே. (கஎ)

வீங்குடல்விருத்திரன்றன்னைவிண்ணவ
ரேங்குறவருதுவட்டாவெனும்பெயர்த்
தீங்குறுமனத்திலேன்றேவர்கோனுயிர்
வாங்குதிபொருதெனவரவிட்டானரோ. (கஅ)

மதித்துணியெயிற்றிலேன்வடவைபோற்சினஇக்
கொதித்தெதிர்குறுகிலன்கொண்டலூர்தியு
மெதிர்த்தனன்களிற்றின்மேலிமயத்துச்சிமே
லுதித்ததோர்கருங்கதிரொக்குமென்னவே. (கக)

அறத்தொடுபாவநேர்ந்தென்னவார்த்திரு
திறத்தருமூண்டமர்செய்யக்கற்சிறை
குறைத்தவன்றகுவன்மேற்குலிசவேலெடுத்
தறைத்திடவீசிலனுடன்றுகள்வனும். (உ0)

இடித்தனன்கையிலோரிருப்புலக்கையைப்
பிடித்தனன்வரையெனப்பெயர்ந்துதீயெனத்
துடித்தனன்சிமூலச்சுவடுதோய்புயத்
தடித்தனனிந்திரனவசமாயினன். (உக)

அண்டரேறனையவனவசமாறிப்பின்
கண்டகன்கைதவநினைந்திக்கள்வனேர்
மண்டமராற்றுவான்வலியிலோமெனப்
புண்டரீகத்தவனுலகிற்போயினன். (உஉ)

தாழ்ந்துதான்படுதுயர்விளம்பத்தாமரை
வாழ்ந்தவன்வலாரியோடணைந்தமாமகள்
வீழ்ந்தமார்பினனடிவீழ்ந்துசெப்பமால்
சூழ்ந்துவாளுடனேநோக்கிச்சொல்லுவான். (உங)

(கஎ) அழல்தூங்கும் - அக்கினிதங்கும்.
(கக) சினஇ - கோபித்து. கருங்கதிர் - இல்பொருள்.
(உ0) கற்சிறை - மலையினிறகு.
(உஉ) கண்டகன் - அசுரன்.
(உங) சூழ்ந்து - ஆலோசித்து.

ஆற்றவும்பழையதுண்ணங்கைவச்சிர
மாற்றவருயிருணவலியின்ருதலால்
வேற்றொருபுதியதுவேண்டுமாலினிக
சாற்றுதமதுபெறுந்தகைமைகேட்டியால். (உச)

தொடையகன்மார்பநாந்தூயபாற்கடல்
கடையுநாளசுரருஞ்சுரருங்கையில்வெம்
படையொடுமடையன்மின்பழுதென்றப்படை
யடையவந்ததீசிபாலடைவித்தாமரோ. (உடு)

சேட்படுநாணனிசெல்வத்தேவரா
வாட்படையவுணராவந்துகேட்டிலர்
ஞாட்படைபடையெலாஞாணநோக்கினல்
வேட்படைவென்றவன்விழுங்கினனரோ. (உசு)

விழுங்கியபடையெலாம்வேறறத்திரண்
டொழுங்கியதான்முதுகந்தண்டொன்றியே
யெழுங்கதிர்க்குலிசமாமதவேணையெய்துமுன்
வழங்குவன்கருணையோர்வடிவமாயினன் (உஎ)

மேற்படி-வேறு.

என்றுமாதவனியம்பவும்பர்கோ
னென்றும்வானவர்தம்மொடோல்லெனச
சென்றுமாயையின்செயலேநோன்பினல்
வென்றமாதவனிருக்கைமேவினன். உஅ)

மேற்படி-வேறு.

அகமலர்ந்தருந்தவனமர்க்கன்புகூர்
முகமலர்ந்தின்னுரைமுகமன்கூறிநீர்
மிகமெலிந்தெய்தினீர்வினைந்ததியாதது
தகமொழிந்திடலெனவலாரிசாற்றுவான். (உக)

(உச) ஆற்றவும் - மிகவும். மாற்றவர் - பகைவர்.

(உடு) அடையன்மின் - வராதேயுங்கள். அடையவும் - முற்றிலும்.

(உசு) சேட்படுநாள் - நீண்டகாலம். ஞாட்பு - போர். வேள் - மன்மதன்.

(உஎ) மாதவன் - திருமகள் கொழுநன். ஒல்லென - விரைந்து

அடிகணீர் மரு தெதான் றதனேவேண்டியிம்
முடிகொள்வானவரொடுமுந்தினேனது
செடிகொள்காரிருளுடலவுணர்த்தேய்த்திதமர்
குடியெலாம்புரப்பதோர்கொள்கைத்தாயது. (கூ0)

யாதெனினினையதுன்யாக்கையுள்ளதென்
ரூதலும்யாவையுமுணர்ந்தமாதவ
ஞதவற்கண்டதாமரையினனனப்
போதலர்ந்தின்னனபுகல்வதாயினன். (கூக)

நாய்நமதெனநரிநமதெனப்பிதா
தாய்நமதெனநமன்றனதெனப்பிணி
பேய்நமதெனமனமதிக்கும்பெற்றிபோ
லாய்நமதெனப்படும்யாக்கையாரதே. (கூஉ)

விடம்பயிலெயிற்றரவுரியும்வீநுழை
குடம்பையுந்தானெனுங்கொள்கைத்தேகொலா
நடம்பயில்கூத்தரினடிக்குமைவர்வா
முடம்பையும்யானெனவுரைக்கற்பாலதோ. (கூங)

நடித்தயாவிலார்தமைநலியத்துன்பநோ
யடித்தயாவருந்திருவுடையயாக்கையைக்
கொடுத்தயாவறம்புகழ்கொள்வனேயெனி
னெடுத்தயாக்கையின்பயனிதனின்யாவதே. (கூச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

என்றனன்கரணமொன்றியெழுகருத்தறிவையீர்ப்ப
நின்றனன்பிரமநாடிநெறிகொடுகபாலங்கண்டு
சென்றனன்விமானமேறிசேர்ந்தனனுலகைநோன்பால்
வென்றனன்றுறக்கம்புக்குவீற்றினிதிருந்தானம்மா. (கூடு)

(கூ0) அடிகள் - சுவாமிகள். செடி - நாற்றம்.

(கூகூ) அரவுரி - பாம்பின்தோல். வீ - பறவை. குடம்பை கூடு. முட்டைத்தோலுமாம். கூத்தர் - நாடகக்கூத்தர்.

(கூச) நடி - பொதுநிலை. தயா-இரக்கம். ஐயா எனற்பாலது - அயாவென்றது.

(கூடு) கரணம் - அந்தக்கரணம். பிரமநாடி - ஒருநாடி விசேடம். சுழுமுனை நாடியென்றுங் கூறுவர். கபாலம் - தலையோடு.

அம்முனிவள்ளலீந்தவடைமுதுகந்தண்டைத்
தெம்முனையடுபோர்சாய்க்குந்திறல்கெழுகுவிசஞ்செய்து
கம்மியப்புலவனுக்கங்கரைந்துகைகொடுப்பவாங்கி
மைம்முகிலூர்தியேந்திமின்விடுமழைபோனின்றான். (சுசு)

மறுத்தவாவஞ்சப்போரால்வஞ்சித்துவெறுபோன
கறுத்தவாளவுணற்கொல்வான்கடும்பரிநெடுந்தேர்ஏழல்
வெறுத்தமால்யானைமள்ளர்வேலைபுக்கெழுந்துகுன்ற
மறுத்தவானவர்கோனந்தவவுணர்கோமகனைச்சூழ்ந்தான். (சுஎ)

வானவர்சேனைமூண்டவெளேத்தலும்வடவைச்செந்தீ
யானதுவையிலேங்கியழன்றுருத்தெழுந்தாலென்ன
தானவர்கோனுமானந்தலைக்கொளவெழுந்துபொங்கிச்
சேனையுந்தானுமூண்டுசீறினின்றடுபோர்செய்வான். (சுஅ)

றுத்தனரிடியேறென்னவார்த்தனராக்கங்கூறி
யெடுத்தனர்கையிற்சாபமெறிந்தனர்சிறுநாணேசை
தொடுத்தனர்மீளிவாளிதூர்த்தனர்குந்தநேமி
விடுத்தனர்வானோர்சேனைவீரர்மேலவுணவீரர். (சுக)

கிட்டினர்கடகக்கையாற்கிளர்வரையனையதிண்டோள்
கொட்டினர்சாரிமாறிக்குதித்தனர்பலகைகீட்டி
முட்டினரண்டம்விள்ளமுழங்கினர்வடிவாளோச்சி
வெட்டினரவுணச்சேனைவீரரைவானவீரர். (சுO)

வீழ்ந்தனர்தோளுந்தாளும்விண்டனர்சோரிவெள்ளத்
தாழ்ந்தனர்போருந்தாருமகன்றனரகன்றமார்பம்
போழ்ந்தனர்சிரங்களெங்கும்புரண்டனர்கூற்றூர்புக்கு
வாழ்ந்தனரடுபோராற்றிவஞ்சகன்சேனைமள்ளர். (சுக)

தாளொடுகழலுமற்றூர்தலையொடுமுடியுமற்றூர்
தோளொடுவீரமற்றூர்துப்பையோடமருமற்றூர்
வாளொடுகரமுமற்றூர்மார்பொடுகவசமற்றூர்
கோளொடுமாண்மையற்றூர்குறைபடக்குறையாமெய்யர். (சுஉ)

(சுசு) கம்மியப் புலவன் - தேவதச்சன். ஆக்கங் கரைந்து வாழ்த்துக்கூறி.

(சுO) வடிவாள் - கூரியவாள்.

(சுக) கூற்றூர் - யமபுரம். மள்ளர் - போர்வீரர்.

தொக்கனகழுகுசேனஞ்சொரிகுடர்பிடுங்கியீர்ப்ப
வுக்கனகுருதிமாந்தியொட்டல்வாய்கெட்டைப்பேய்க
ணக்கனபாடல்செய்யஞாட்பினுட்கவந்தமாடப்
புக்கனபிணத்தின்குன்றம்புதைத்தபார்சிதைத்ததண்டம். (சஉ)

இவ்வகைமயங்கிப்போர்செய்திறந்தவொழியப்பின்னுங்
கைவ்வகையடுபோராற்றிக்கரையிறந்தார்கண்மாண்டா
ரவ்வகையறிந்துயானத்தரசனுமவுணர்வேந்துந்
தெய்வதப்படைகள்வீசிச்சீறிநின்றடுபோர்செய்வார். (சச)

அனற்படைவிடுத்தான்விண்ணோராண்டகையதனைக்கள்வன்
புனற்படைவிடுத்துச்சிந்தத்துணித்தனன்புனிதன்காற்றின்
முனைப்படைவிடுத்தான்வெய்யோன்முழங்குகால்விழுங்குநாகச
சினப்படைதொடுத்துவீசிவிலக்கினன்றேவரஞ்ச. (சஙு)

நாகமாப்படைவிட்டார்த்தாளுகர்கோனுவணச்செல்வன்
வேகமாப்படையைவீசிவிலக்கினன்றருவர்வேந்தன்
மோகமாப்படையைத்தொட்டுமுடுக்கினனுமனவனன்ன
தேகமாப்படிறன்ஞானப்படைவிடுத்திருள்போனின்றான். (சசு)

மட்டிடுதாரான்விட்டவானவப்படைக்குமாறு
விட்டுடன்விலக்கிவேறும்விடுத்திடக்கனன்றுவஞ்சன்
மூட்டிடமானவெங்கான்மூட்டிடக்கோபச்செந்தீச்
சுட்டிடப்பொருதுபொங்கிச்சுராதிபனிதனைச்செய்தான். (சஎ)

வீங்கிருளொதுங்கமேகமின்விதிர்த்தெண்ணக்கையி
லோங்கிருங்குலிசமேலையொல்லெனவிதிர்த்தலோடுந்
தீங்குளம்பொன்றிருண்டதிணியுடற்கள்வனஞ்சி
வாங்கிருங்கடலில்வீழ்ந்தான்மறைந்தமைநாகமொத்தான். (சஅ)

ஒக்கவிந்திரனும்வீழ்ந்தானுடல்சினவுருமேறன்ஞன்
புக்கிடந்தேடிக்காணுன்புண்ணியமுளரியண்ணல்
பக்கம்வந்தனையசெய்திபகர்ந்தனன்பதகன்மாளத்
தக்கதோர்சூழ்ச்சிமுன்னிச்சராசரமீன்றதாதை. (சகூ)

(சசு) உவணச்செல்வன் - கருடன்.

(சஎ) மட்டிடுந்தாரான் - தேவெழுகுமாலையான்.

(சஅ) வீங்கிருள் - பேரிருள். ஒல்லென - விரைவாக. வீழ்ந்தான் - முற்றெச்சம். [திரன்.

(சகூ) முளரியண்ணல் - பிரமன். பதகன் - இழிஞனை விருத்

விந்தவெற்படக்கினுர்க்கீதுரையெனவிடுப்பமீண்டு
சந்தவெற்படைந்தான்வானோர்தலைவனேமுகமன்கூறிப்
பந்தவெற்பறுத்தான்வந்ததெவனைனப்பறைகளெல்லாஞ்
சிந்தவெற்பறுத்தான்வந்தசெயலெலாமுறையாற்செப்ப. (நிo)

யாவையுமுணர்ந்தவெந்தைக்கியானெதித்துணர்த்துகின்ற
தாவதென்னமருக்காற்றுதாழிபுக்கொளித்தாஞவீ
வீவதுமவனுல்வந்தவிழுமமோயெல்லாமின்று
போவதுங்கருதிதும்பாற்புகுந்தனமடிகளென்ருன். (நிக)

என்றவனிடுக்கண்டீர்ப்பானிகல்புரிபுலன்களைந்தும்
வென்றவனெடியோன்றன்னைவிடையவன்வடிவமாக்கி
நின்றவனநியானந்தமெய்மையாய்நிறைந்தவெள்ளி
மன்றவனுழிச்சென்தீவடிவினைமனத்துட்கொண்டான். (நிஉ)

கைதவன்கரந்துவைகுங்கடலெவெற்படக்குங்கையிற்
பெய்துழுந்தெல்லைத்தாக்கிப்பருகினுன்பிறைசேர்சென்னி
யையனதருளைப்பெற்ருர்க்கதிசயமிதென்கொன்மூன்று
வையமுத்தொழிலுஞ்செய்யவல்லவாவதேயன்றே. (நிங)

அறந்துறந்தீட்டியார்தமரும்பெறற்செல்வம்போல
வறந்தனபழீர்ப்பௌவம்வடவைகட்புலப்பட்டாங்கு
நிறைந்தசெம்மணியுமத்திநீண்டெரிகைபோனீண்டு
நிறந்தெழுபவளக்காந்திணியிருள்விழுங்கிற்றம்மா. (நிச)

பணிகளின்மகுடகோடிப்பரப்பெனவிளங்கிப்பல்கா
சணிகலப்பேழைபேழ்வாய்திறந்தனைத்தாகியொன்பான்
மணிகிடந்திமைக்குநீரான்மகபதிவேள்விக்காவாய்த்
திணியுடலவுணன்பட்டசெங்களமனையதன்றே. (நிஙி)

(நிo) விந்தவெற் படக்கினுர்க்கு - அகத்திய முனிவனுக்கு. சந்தவெற்பு - சந்தனுசலம் அதுபொதிகை.

(நிஉ) நெடியோன்றன்னை - விண்ணிலை.விடையவன் வடிவமாக்கி நின்றவன்-அகத்தியன். விடையவன் வடிவம் - சிவரூபம். இதனைக் குற்ருல புராண ஸ்காந்த புராணமாதியனவைகளிற் காண்க.

(நிங) அருள் - திருவை.

வறந்தநீர்தன்னின்மின்னுவாள்விதிர்த்தென்னப்பன்மீ
னெறிந்தனநெளிர்ந்தாகமிமைத்தனவேயுமுத்துஞ்
செறிந்தனகரந்தயாமைசேர்ந்தபல்பண்டஞ்சிந்தி
முறிந்தனவங்கங்கங்கமுக்கினசிறுமீனெல்லாம். (நகூ)

செருவினிலுடைந்துபோனசெங்கண்வாளவுணனங்கோ
ரருவரைமுதுகிற்கார்போலடைந்துவாளுடர்செய்த
வுருகெழுபாவந்தாளுருவெடுத்திருந்துநோற்கும்
பரிசெனநோற்றுனின்னும்பரிபவவிளைவுபாரான். (நஎ)

கைதவநோன்புநோற்குங்கள்வனைக்கண்டுவானுளோர்
செய்தவமனையான்யாணர்வச்சிரஞ்சீரிப்பான்போற்
பொய்தவன்றலையைக்கொய்தான்புணரிவாய்நிறையச்சோரி
பெய்ததுவலாரிதன்னைப்பிடித்ததுபிரமசாலை. (நஅ)

ஒம்மெனுமார்பைத்தட்டுமுருத்தெழுமதிர்க்கும்போர்க்கு
வம்மெனும்வாய்மடிக்கும்வாளெயிறுதிக்கும்வீழுங
கொம்மெனவோடுமீளுங்கொதித்தழுஞ்சிரிக்குஞ்சீறு
மிம்மெனுமளவுநீங்காதென்செய்வானஞ்சினானே. (நக)

விரைந்தரன்றிசையோர்வாவிவீழ்ந்தொருகமலநூலுட்
கரந்தனன்மகவானிப்பாற்கற்பகநாடுபுல்லென்
றிருந்ததாலிருக்குமெல்லையிம்பரினுடனென்போ
னெரும்பரிமேதவேள்வியாற்றினுலுற்றுமெல்லை. (கூ0)

(நகூ) மீன்னுவாள் - ஒளிபொருந்தியவாள். பன்மீன்-பலசாதி மீன். எறிந்தன - துள்ளின. வங்கம் - கப்பல். கங்கு - பருந்து.

(நஎ) வரை - மலை. கார் - மேகம். வானுடர் - தேவர். பரிசு - தன்மை. பரிபவம் - துன்பம்.

(நஅ) கைதவம் - வஞ்சனை, கள்வன். கரியவுருவுள்ளவிருத்திரன். வானோர்செய்தவமனையான் - இந்திரன். யாணர் - அழகு. சீரிப்பான் - சோதனைசெய்பவன். பிரமசாலை - பிரகத்தி.

(நக) வம்மெனும் - வருதி என்று கூறும்.

(கூ0) அரன்றிசை - வடகீழ்த்திசை. கமலநூல் - தாமரை நூல். புல்லென் றிருந்தது - ஒளிகெட்டிருந்தது. பரிமேதவேள்வி - அசுவமேதயாகம்.

அரசிலாவறுமைநோக்கியவனேவாளுடர்யாரும்
விரைசெய்தார்மகுடஞ்சூட்டிவேந்தனுக்கொண்டார்வேந்தாய்.
வருபவன்சசியையீண்டித்தருகெனமருங்குளார்போய்த்
திரைசெய்ரமுதளட்குச்செப்பவக்கற்பின்மிக்காள். (சுக)

பொன்னுயிர்த்தனேயகாட்சிப்புண்ணியக்குரவன்முன்போய்
மின்னுயிர்த்தனேயாணின்றுவிளம்புவாளிதன்கொல்கெட்டே
னென்னுயிர்த்துணேவனுங்கேயிருக்கமற்றொருவனென்னைத்
தன்னுயிர்த்துணேயாக்கொள்கைதருமோவடிகளென்றாள். (சுஉ)

மாதவரெழுவர்தாங்கமாமணிச்சிவிகைமீது
போதரினவனேவாளேர்புரந்தரனவனேயுன்றன்
காதலனுமென்றான்கைதொழுதற்குநேர்ந்தம்
மேதகுசிறப்பாலிங்குவருகெனவிடுத்தாடேது. (சுங)

மனிதரின்மகவானுகிவருபவன்சிவிகைதாங்கும்
புனிதமாதவரையெண்ணன்புன்கணேய்வினேவும்பாரான்
கனிதருகாமந்தூய்க்குங்காதலால்விரையச்செல்வா
னினிதயிராணிபாற்கொண்டேகுமின்*சர்ப்பவென்றான். (சுச)

சர்ப்பமாகெனமுற்கொம்புதாங்கிமுன்னடக்குந்தென்றல்
வெற்பனுமுனிவன்சாபம்வினேத்தனன்வினேத்தலோடும்
பொற்பமாசுணமேயாகிப்போயினனிவிலாத
வற்பரானவர்க்குச்செல்வமல்லதுபகைவேறுண்டோ. (சுஞ)

(சுக) அவனே - நகுடனே. சசி - இந்திராணி. அமுதனேள் - அமிர்தினேயொத்தவள்.

(சுஉ) பொன்உயிர்த்துஅனேய - பொன்னுற்செய்துயிர்மைத்த சித்திரப்பாவைபோன்ற. காட்சி-தோற்றம். கெட்டேன்-வியப்பிடைச்சொல். அடிகள் - சுவாமிகள்.

(சுங) மாதவர்எழுவர் - சத்தவிருடியர். அன்னேர் - அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்பவர்களேயாவர். சிவிகை - பல்லக்கு. வரனேர்புரந்தரன் - தேவர்கட்கரசன்.

(சுச) புன்கணேய் - தரித்திரமாகியவியாதி. வினேவு - உண்டாதல். சர்ப்ப-விரைய.

(சுஞ) தென்றல்வெற்பன் - அகத்தியன்.

பின்னர்தங்குரவனைபிரானடிபணிந்துவாஞ்ஞர்
பொன்னகர்வேந்தனின்றிப்புலம்படைகின்றதைய
வென்னலுங்குரவன்போயவ்விலஞ்சியுளொளித்தாற்கூவித்
தன்னுரையறிந்துபோந்தசதமகற்கொண்டுமீண்டான். (சுசு)

கொடும்பழிகோட்பட்டான்றன்குரவனேவணங்கியென்னைச்
சுடும்பழிகழிவதெங்ஙன்சொல்லெனத்தொலைவதோர்ந்தா
னடும்பழிமண்மேலன்றியரிதுநீவேட்டைகென்னப்
படும்பழியிதனைத்தீர்ப்பான்பார்மிசைவருதியென்றான். (சுஎ)

சுசனுக்கிழைத்தகுற்றந்தேசிகனெண்ணித்தீர்க்குந்
தேசிகற்கிழைத்தகுற்றங்குரவனேதீர்ப்பதன்றிப்
பேசவதெவனுந்தன்பாற்பிழைத்தகாரணத்தால்வந்த
வாசவன்பழியைத்தீர்ப்பான்குரவனேவழியுங்கூற. (சுஅ)

வாம்பரியுகைத்துத்தன்னுல்வழிபடுகுரவன்வாஞ்ஞர்
தாம்பரிவோடுஞ்சூழ்த்தராதலத்திழிந்துசெம்பொற்
காம்பரிதோளிபங்கன்கயிலைமால்வரையைத்தாழ்ந்து
தேம்பரியலங்கன்மார்பன்றென்றிசைநோக்கிச்செல்வான். (சுசு)

மேற்படி-வேறு.

கங்கைமுதலளவிறந்ததீர்த்தமெல்லாம்போய்ப்படிந்துகாசிகாஞ்சி
யங்கணைகேதாரமுதற்பதிகள்பலபணிந்துமவுணற்கொன்ற
பொங்குபழிவிடாதழுங்கியராவுண்ணமாசுண்டுபொலிவுமாழ்குந்
திங்களனையான்கடம்பவனத்தெல்லையணித்தாகச்செல்லுமேல்வை.

தொடுத்தபழிவேரறிவிடுத்தகன்ற திந்திரன்ரூன்சுமந்தபாரம்,
விடுத்தவஞ்ஞத்தளவிறந்தமிழ்வெய்தித் தேசிகன்பால்விளம்பப்பா
சங், கெடுத்தவன்மாதலம்புனிததீர்த்தமுளதிவணமக்குக்கிடைத்த
ல்வேண்டி, மடுத்தறிகவெனச்சிலரைவிடுத்தவ் வேறுநிலைன்றப்
பாற்செல்வான். (எக)

(சுசு) புலம்படைகின்றது - வருந்துகின்றது. இலஞ்சி தாமரையோடை.

(சுஎ) கொடும்பழி - பிரமகத்தி.

(சுஅ) குரவன் - அறியாமையை நீக்கி அறிவினையருள்வோன்.

(சுக) வாம் - தாவும் - தாரதலம்-பூவுலகம். காம்பரி-மூங்கில்.

(எ0) அழுங்கி - வருந்தி.எல்லை - சமீபம்.

(எக) வேறுநிலை - பழிவேறுபட்ட இடம்.

அருவிபடிந்தருவியெழி மணியெறித்துப்பாறையிலிட்டருவிநீர்
னாய்க், கருவிரல்கொய்தலர்சூட்டிக்கனியூட்டிவழியவெகல்லாமந்தி,
யொருதிறையில்யாளிகரிபுழைக்கை முகந்தொன்றற்கொன்றூட்டி
யூட்டிப், பருகுவனபுலிமுலைப்பால் புல்வாய்க்கன்றருந்தியிடம்பசி
நோய்தீர. (எஉ)

கெளியராக்குருளைவெயில் வெள்ளிடையிற்கிடந்துயங்கிநெளி
யப்புள்ளே,றெளியருரற்சிறைவிரித்துநிழல்பரப்பப்பறவைநோயுற்ற
சிதகொ, ளலியவாயசசோ வென்றேதியயன்மடமந்தியருவியூற்
றுந, துளியர்வளைத்தசும்பின்முகந்தெதித்துக்கருங்கையினற்சொ
ரியுமாதோ. (எஙூ)

படவரவமணியீன்று நொசிப்பாகிலையன்ன பைந்தாண்மஞ்
ஞை, பெடைதழுவிமணஞ்செய்யமணவறையில்விளக்கிவெபெருந்
தண்கானத், தடர்சிறைமென்குயிலோமென்றூர்ப்பமடக்கிள்ளையெ
முதைதந்துமோசைத், தொடர்புபெறவுச்சரிப்பக்குருமொழிகேட்
டாங்குவப்பதொடிக்கட்பூவை. (எசு)

இன்னவிலங்கொடுபுள்ளின் செயற்கரியசெயலேக்கியிறும்பூ
தெய்திப், பொன்னகரான்புளகமுடல்புதைப்பநிறைமகிழ்சிறியுளம்
புதைப்பப்போவா, னன்னபொழுதொற்றுவர் மீண்டடிவணங்கி
யின்சுவைப்பா லருந்துவான்முன், பின்னரியதென்சொரிந்தாங்கு
வகைமேற்பேருவகைபெருகச்சொல்வார். (எடு)

எப்புவனத்திலுமென்றுங் கண்டறியாவதிசயமுமெண்ணுக்கெ
ய்தாத், திப்பியமுமிக்கடம்பவனத்தின்றுகண்டுவகைதிளைத்தேமக
கண், வைப்பனேயவொருபுனிதவாவிமருங்கொருகடம்பவனத்தினீ
ழ, லொப்பிலொளியாய்முளைத்தவிலிங்கமொன்றுளதென்றுரைப்
பக்கேட்டான். (எசு)

(எஉ) புல்வாய்க்கன்று - மான்கன்று.

(எஙூ) புள்ளேறு - கருடன். அச்சோ - ஐயோ. தசும்பு-குடம்.

(எசு) மஞ்ஞை - மயில். மணவறை - மணஞ்செய்தவுடன் சென்று தங்குமறை. கேட்டாங்கு - கேட்டாற்போல. தொடிக்கட்பூவை - நாகணவாய்.

(எடு) இறும்பூது - ஆச்சரியம்.

(எசு) திப்பியம் - திவ்வியம்.

செவித்துளையிலமுதொழுக்கு முழையரொடும்வழிக்கொண்டு சென்னிமேற்கை, குவித்துளமெய்மொழிகரணங்குணமூன்றுமொன்றித்தன்கொடியபாச, மவித்துளயர்வொழிக்கமூலத்தருள்குறி மேலன்பீர்ப்பவடைவான்கானங், கவித்துளபூந்தடம்படிந்துகடம்பவனத்துழைநுழைந்தான்கவலைதீர்வான். (எஎ)

அருவாகியுருவாகியருவுருவங்கடந்துண்மையறிவானந்த, வுருவாகியளவிறந்தவுயிராகியவ்வுயிர்க்கோருணர்வாய்ப்பூவின், மருவாகிசசராசரங்களிலமுந்தன்னிடையுநித்துமடங்கநின்ற, கருவாகிமூலத்தவிக்கொழுந்தையாயிரங்கண்ணுங்களிப்பக்கண்டான்.

கண்டுவிழுந்தெழுந்துவிழிதுளிப்ப வெழுகளிப்பென்னுங்கடலிலாழ்ந்து, விண்டொழி தழுதழுப்பவுடல் பனிப்பவன்புருவாய்விண்ணோர்வேந்த, னண்டர்பிரானருச்சனைக்குவேண்டுமுபகரணமெலாமகல்வானெய்திக், கொண்டுவரச்சிலாவிடுத்தவரேகப்பின்னுமொருகுறைவுதீர்ப்பான். (எக)

தங்குடிமைத்தச்சனையோர் விமானமமைத்திடவிடுத்தத்தடத்தின்பாற்போ, யங்கணனைக்கடிதருசசித் திடநறிய மலர்ச்சடையாதயர்வானந்தச், சங்கெறிதண்டிரைத்தடத்திலரனருளாற்பலபருதிசலதியொன்றிற், பொங்குகதிர் பரப்பிமூலத் தாலென்னப்பொற்கமலம் பூப்பக் கண்டான். (அ0)

அன்புதலை சிறப்பமகிழ்ந் தாடிஞன் காணத்தாலதற்குநாம, மென்பதுபொற்றூமரையென் றேழுலகும் பொலிகவென விசைத்துப்பின்னு;மின்பதுமத்தடங்குடைந்து பொற்கமலங்கொய்தெடுத்துமீண்டுநீங்காத்,தன்பிணிநோய்தணியமூலத்தெழுந்தமுழுமுதன்மருந்தின்றன்பால்வந்து. (அக)

(எஎ) குறி - சிவலிங்கம்.

(எஅ) உண்மையறிவானந்த உருவாகி - சத்தியஞானானந்த வடிவமாகி.

(எக) உபகரணம் - பத்திரபுட்பாதிகளான சாமான்கள்.

(அ0) குடிமைத்தச்சன் - தேவதச்சன். சலதி - கடல். பொற்கமலம் - பொற்றூமரை.

(அக) ஆடிஞன் - முழுகினன்; நடனஞ் செய்தா னென்னினுமாம்.

மொய்த்தபுனக்காடெறிந்துநிலத்திருத்திவருமளவின் மூளைத்
தஞான, வித்தனேயசிவக்கொழுந்தின் றிருமுடிமேற்பரிதிகரமெல்
லத்தீண்டச், சித்தநெகிழ்ந்திந்திரன்றன்வெண்கலிகைத் திங்கணி
முல்செய்வானுள்ளம், வைத்தனனப்போதிரவிமண்டலம்போலிழிந்
ததொருமணிவிமானம். (அ)

கிரியெட்டுமெனமழையைக்கிழித்தெட்டும்புழைக்கைமதிக்கிற்
றுக்கோட்டுக், கரியெட்டுஞ்சினமடங்க ஞலெட்டுமெட்டெட்டுக்க
ணமுந்தாங்க, விரியெட்டித் திசைபரப்பமயனிருமித்ததவியவவ்வி
மானஞ்சாத்தி, யரியெட்டித் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பா
ஞயினனே. (அக)

முந்தவமருலகடைந்துபூசனைக்குவேண்டுவனமுழுதுந்தேர்வா
ர்,வந்ததருவைந்தீன்றபொன்னுடைமின்னுமிழுமணிப்பூண்வாசச்,
சந்தனமந்தாகினிமஞ்சனந்தூபந்திருப் பள்ளித்தாமந்தீப, மந்தமி
லானந்தநறுங்கனிதீந்தேன்றிருவமுதமனைத்துந்தந்தார். (அச)

தெய்வத்தாமரைமூளைத் தடம்படிந்துபவந்தொலைக்குந் திரு
மூழ்டிச், சைவத்தாழ்வடந்தாங்கியன்புருவா யருளுருவந் தாளுய்த்
தீதான்றும், பைவைத்தாடரவார்த்தபசுபதியையவனுரைத்தபனுவ
லாற்றின், மெய்வைத்தாதரம்பெருகவருச்சனைசெய்தானந்த வெள்
ளத்தாழ்ந்தான். (அடு)

பாரோரவட்டாங்கபஞ்சாக்கவிதிமுறையாற்பணிந்துள்வாய்மெய்
நேரோகச்சூழ்ந்துடலங்கம்பித்துக்கும்பிட்டிருத்தஞ்செய்து
தாரோருந்தொடைமிதப்பவானந்தக்கண்ணருவிததும்பின்றன்
பாராமைமீக்கொள்ளவஞ்சலித்துத்துதிக்கின்றனமரர்கோமான்.()

(அ) பரிதிகரம் - சூரியகிரணம்.

(அக) அரி - இந்திரன்.

(அச) பள்ளித்தாமம் - பூமாலை,

(அடு) பவம் - பாவம். சைவத்தாழ்வடம் - உருத்திராக்கம். அவனுரைத்த பனுவலாறு - சிவபெருமா னருளிச்செய்த வேதாகம மார்க்கம்.

(அசு) உள் - மனம். வாய் - வாக்கு. மெய் - காயம். நேரோக - சுத்தியாக.

மேற்படி வேறு.

அங்கணுபோற்றிவாய்மையாரணுபோற்றிநாக
கங்கணுபோற்றிமூலகாரணுபோற்றிநெற்றிச்
செங்கணுபோற்றியாதிசிவபரஞ்சுடரேபோற்றி
யெங்கணுயகனேபோற்றியீறிலாமுதலேபோற்றி. (அஎ)

யாவையும்படைப்பாய்போற்றியாவையுந்துடைப்பாய்போற்றி
யாவையுமாளுய்போற்றியாவையுமல்லாய்போற்றி
யாவையுமறிந்தாய்போற்றியாவையுமறந்தாய்போற்றி
யாவையும்புணர்ந்தாய்போற்றியாவையும்பிரிந்தாய்போற்றி. (அஅ)

இடருறப்பிணித்தவிந்தப்பழியினின்றென்னையீர்த்துன்
னடியினைக்கன்பளுக்குமருட்கடல்போற்றிசேற்கண்
மடவரன்மனுளபோற்றிகடம்பமாவனத்தாய்போற்றி
சுடர்விடுவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி. (அக)

பூசையும்பூசைக்கேற்றபொருள்களும்பூசைசெய்யு
நேசனும்பூசைகொண்டுநியதியிற்பேறுநல்கு
மீசனுமாகிப்பூசையான்செய்தேனெனுமென்போத
வாசனேயதுவுமான மறைமுதலடிகள்போற்றி. (கo)

என்னைநின்றேத்திலுனேயின்னகைசிறிதுதோன்ற
முன்னவனடியாரெண்ணமுடிப்பவனருட்கணேக்கா
லுன்னதுவேட்கையாதிங்குரையெனவிரையத்தாழ்ந்தி
சென்னிமேற்செங்கைகூப்பித்தேவர்கோனிதனேவேண்டும். (கக)

ஐயநின்னிருக்கையெல்லைக்கணியனுமளவினீங்கா
வெய்யவென்பழியினுலேமேலுனாளடியேன்செய்த
மையல்வல்வினையுமாய்ந்துன்மலரடிவழுத்திப்பூசை
செய்யவுமுரியனுனேன்சிறந்தபேறிதன்மேல்யாதோ. (கஉ)

(அஎ) வாய்மை - உண்மை. ஆரணு - வேதத்தினை யுடையவனே!

(அஅ) படைப்பாய் - சிருட்டிப்பாய். துடைப்பாய் - சங்காரிப்பாய்.

(அக) அருட்கடல் - கிருபா சமுத்திரம்.

(கo) நியதி - முறை.

(கக) இன்னகை - மந்தகாசம்.

(கஉ) மையல் - மயக்கம். வல்வினை - தீவினை.

இன்னநின்பாதப்போதேயிவ்வாறேயென்றும்பூசித்
தன்னடியாருள்யானுமோரடித்தொண்டனுமே
னன்னதேயடியேன்வேண்டத்தக்கதென்றடியில்வீழ்ந்த
மன்னவன்றனக்குமுக்கண்வரதனுங்கருணைபூத்து. (கூஉ)

எழசீர்க்கழிநேடிலடியாசிரியவிருத்தம்.

இருதுவிற்சிறந்தவேனிலு மதியாதிரண்டினிற்சிறந்தவான்றக
ரும், பொருவிரூரகையிற்சிறந்தசித்திரையுந்திதியினிற்சிறந்தபூர
ணையு, மருவுசித்திரையிற்சித்திரைதோறும் வந்துவந்தருச்சியோர்
வருடந், தெரியுநாண்முந்நூற்றறுபதுமைந்துஞ் செய்தவர்ச்சனைப்
பயனெய்தும். (கூச)

திறக்கநாடனைந்து சுத்தபல்போகந்துய்த்துமேன்மலபரிபா
கம், பிறக்கநான்முகன்மான் முதற்பெருந்தேவர் பெரும்பதத்தா
சையும்பிறவு, மறக்கநாம்வீடெழங்குஞ மென்னவாய்மலர்ந்தருளி
வான்கருணை, சிறக்கநால்வேதச்சிகை யெழுமனுதிவிபரஞ்சுடர்
விடைகொடித்தான். (கூடு)

மூடிலுன்புளகப்போர்வையால் யாக்கைமுடிமிசையஞ்சலிக்க
மலஞ், சூடிலுன்வீழ்ந்தானெழுந்துகண்ணருவி தளும்பிலுன்பன்
முறைதுதிசெய், தாடிலுனையனடிபிரிவாற்றுதஞ்சிலுனவனருளா
ணை, நாடிலுன்பிரியாவிடைகொடுதுறக்க நண்ணிலுன்விண்ணவர்
நாதன். (கூசு)

எண்சீர்க்கழிநேடிலடியாசிரியவிருத்தம்.

வந்தரமங்கையர் கவரிமருங்குவீச மந்தாரகற்பகம்பூமாரிதூ
ற்ற, வந்தரநாட்டவர்மூடிகளடிகள்சூட வயிராணிமுலைத்தடந்தோ
ய்ந்தகலந்திண்டோள், விந்தமெனச்செம்மாந்துவிம்முகாம வெள்
ளத்துளுடலழுந்தவுள்ளஞ்சென்று, சுந்தரநாயகன்கருணைவெள்ளத்
தாழ்ந்துதொன்முறையின்முறைசெய்தான்றுறக்கநாடன். (கூஎ)

இந்திரன் பழிதீர்த்தபடலம் முற்றுப்பெற்றது.

ஆ படலம். கo-க்கு திருவிருத்தம்-சுகூசு.

(கூஉ) முக்கண் - சோம, சூரிய, அக்கினி என்னுமூன்றுகண்.

(கூச) வேனில் - வசந்தம். தகர் - மேடம், அதுசித்திரை. தாரகை - நட்சத்திரம். பூரணை - பௌர்ணமி. மருவும் - பொருந்திய பயன் - பலன்.

(கூடு) வீடு - மோட்சம். வேதச்சிகை - வேதாந்தம்.

(கூசு) ஐயன் - கடவுள்.

(கூஎ) முறைசெய்தான் - அரசுசெலுத்தினான்.

இரண்டாவது,

வெள்ளையானைச் சாபந்தீர்த்தபடலம்.

கோச்சகக்கலிப்பா.

மட்டவிழுங்கொன்றைச்சடையான்மகவாகித்
தொட்டபழியின்முடக்கறுத்தவாறீது
பட்டமதவேழம்பரனைப்பராய்முனிவ
னிட்டகொடுஞ்சாபநீத்தேகியவாறுதுவாம். (க)

கருவாசனைகழிக்குங்காஞ்சிநகர்தன்னிற்
றிருவாசவேதமுனிதொல்லாகமத்தின்
பெருவாய்மையாற்றன்பெயர்விளங்கவீச
னொருவாவிலிங்கமொளியுருவங்கண்டான். (உ)

இன்புற்றருச்சனைசெய்தேத்துவானவ்வேலை
யன்புக்கெளியனருளாற்றிருமுடிமேன்
மின்பொற்கடிக்கமலப்போதொன்றுவீழ்த்திடலு
தன்பொற்கரகமலப்போதலர்த்தித்தாங்கினான். (ஊ)

தாங்கிக்கண்சென்னிதடமார்பினைத்துடலம்
வீங்கித்தலைசிறந்தமெய்யுவகைமேற்கொள்ள
நீங்கிக்கழிந்தகருணிதியனையான்
பூங்கற்பகநாட்டிற்போகின்றனவ்வேலை. (எ)

சங்கலறச்செங்களத்துத்தானவரைத்தேய்த்துவிறற்
கொங்கலர்தார்வேய்ந்தமரர்கோமான்றன்கோகரிற்
செங்கணமர்பெருஞ்சேனைக்கடல்கலிப்ப
மங்கலப்பல்லாண்டுமறைமுழங்கவந்தனைவான். (ஏ)

எத்திக்குங்கல்லென்றியங்கலிப்பவேந்திழையார்
தித்தித்தமுதொழுகுங்கீதஞ்செவிமடுப்பப்

(க) பட்டமதவேழம் - மதமுடையயானை.
(உ) கண்டான் - பிரதிட்டித்தான்.
(ஊ) கடி - வாசனை.
(எ) வீங்கி - பூரித்து. கழிந்த - மிகுந்த.
(ஏ) கோகரம் - அமராவதி.

பத்திக்கவரிநிரைதானைப்படுகடலிற்
றத்திப்புரளுந்திரைபோற்றலைபணிப்ப. (சு)

அங்கட்கடலினெடுங்கூம்பகநிமிர்ந்த
வங்கத்தலையுய்க்குமீகான்றனைமானத்
திங்கட்குடைநிழற்றத்தீந்தேமதங்கவிழ்க்கும்
வெங்கட்களிற்றின்பிசைப்பவனிபோந்தணைந்தான். (எ)

அத்தலைவிண்ணுடரருகணைந்துவெவ்வேறு
தத்தமனக்கிசைந்தகையுறைகடாங்கொடித்துக்
கைத்தலங்கள்கூப்பினர்கண்டார்கடவுளரி
லுத்தமனையர்ச்சித்துப்போந்தமுனியுத்தமனும். (அ)

தீங்கரியவாசிமொழிசெப்பித்தன்செங்கரத்தி
னீங்கரியதாமரையைநீட்டிஞன்மற்றதனைத்
தாங்கரியசெல்வத்தருக்காலோர்கையோச்சி
வாங்கிமதயானைமின்மேல்வைத்தான்மதியில்லான் (கூ)

கீறிக்கிடந்தமதியனையகிம்புரிக்கோட்
கீறிக்கடகவிழ்க்குமால்யானையுசியின்மே
லூறிக்கிடந்தநறுமலரைவீழ்த்தியுரற்
சீறிக்கிடந்தவெடுந்தாளாற்சிதைத்தன்றே. (கo)

கண்டான்முனிகாமற்காய்ந்தானுதற்கண்போல்
விண்டாரழல்சிதறநோக்கிஞன்வெகுகோபங்
கொண்டானமரொதுங்கக்கொதித்தால
முண்டானெனநின்றுருத்தானுரைக்கின்றான். (கக)

புள்ளியதோலாடைபுனைந்தரவப்பூணணிந்த
வெள்ளியசெங்கண்விடையானடிக்கமல
முள்ளியமெய்யன்புடையாரருவருத்தச்
தள்ளியசெல்வத்தருக்கிஞையென்செய்தாய். (கஉ)

(சு) இயம் - வாத்தியம்.
(எ) மீகான் - கப்பலோட்டி.
(அ) கையுறை - மரியாதைப்பொருள்; நஜரென்ப.
(கூ) ஓச்சி - நீட்டி. மதி - புத்தி.
(கo) கிம்புரி - பூண். கடம் - மதநீர். சிதைத்தன்று - சிதைத்தது.
(கக) காமற்காய்ந்தான் - சிவபெருமான்.
(கஉ) உள்ளிய - நினைத்த. தருக்கு - செருக்கு.

கதித்தார்முடியமரர்கையுறையோன்சூ
மதித்தாயெம்மீசன்மதிமூடிமேற்சாத்தும்
பொதித்தாதவிழ்மலரைப்போற்றுதுவாங்கி
மிதித்தானெசிந்தவதன்மேல்வைத்தாய்பேதாய். (கஙு)

வண்டுளருந்தண்டுழாய்மாயோனிறுமாப்பும்
புண்டரிகப்போதுறையும்புத்தேளிறுமாப்பு
மண்டர்தொழவாழுன்னிறுமாப்புமாலால
மூண்டவனைப்பூசித்தபேறென்றுணர்ந்திலையால். (கசு)

சேட்டானைவானவரின்சென்னிசெழியரிலோர்
வாட்டானைவீரன்வளையாற்சிதறுகரின்
கோட்டானநாற்கோட்டுவெண்ணிறத்தகுஞ்சரமுவ
காட்டானையாகவெனவிட்டான்கடுஞ்சாபம். (கஞ)

சவித்தமுனிபாதந்தலைக்கொண்டுசெங்கை
குவித்தமர்தருகோன்குறையிரப்பாரைய
வவித்தபொறியாயெம்மரசுங்காதல்ளுஞ்
செவித்தறுகண்வேழமுந்நீருடையரண்மேரு. (கட)

அத்தகையநீராற்சபித்தீரடிகேண்மற்
றித்தகையசாபமினிவிடுமினென்றிரந்து
கைதலங்களகூப்பிக்கரைந்தார்க்கிரங்கியருள்
வைத்தமுனிபிறிதுசாபம்வகுக்கின்றான். (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிந்தனைவாக்கிற்கெட்டாச்சிவனருளித்தசேட
கிந்தனைபரிகாரத்தானீங்காதுதலைமட்டாக
வந்ததுமுடிமட்டாகமத்தமாவனமாவாகி
பைந்திருபஃதாண்டெல்லையகன்றபின்பண்டைத்தாக. (கஅ)

(கஙு) கதித்தார் - பருமலைகப்பொருந்திய. பேதாய் - அறிவிலியே.

(கசு) புண்டரிகம் - வெண்டாமரை. புத்தேள் - பிரமன்.

(கஞ) சேட்டானைவானவ - உயர்ந்தயானையிலிருக்கும் இந்திரனே.

(கட) சவித்த - சாபமிட்ட. அமரர் - தேவர்கள். அவித்தபொறியாய் - சிதேந்திரியனே.

(கஎ) விடுமின் - நீக்குங்கள்.

(கஅ) சேடம் - பிரசாதம் வனமாவாகி - காட்டியானையாகி. ஐந்திருபஃது - நூறு.

என்றனன்பிறிதுசாபமிந்திரன்மகுடபங்க
மொன்றியசெய்கைபின்னருரைத்துமற்றஃதகிற்க
கின்றவெள்ளானைவானநீத்தநிவிழந்துநீலக்
குன்றெனவனத்துவேழக்குழாத்தொடுகுழீஇயதன்றே. (ககூ)

மாவொடுமயங்கிச்செங்கண்மறம்பயில்காடுமுல்லைப்
பூவொடுவழங்குநீத்தப்புறவுமூங்குறவர்தங்க
டேவொடுபயிலுங்கல்லுந்திரிந்துநூறுண்டுஞ்செல்லக்
காவொடுபயிலுந்தெய்வக்கடம்பமாவனம்புக்கன்றே. (உ0)

புக்குரல்வட்டத்திண்காற்பொருவிறேவியலிற்றீர்ந்த
மைக்கருங்களிறுமுக்கண்மாதவனருள்வந்தெய்தத்
தகுகதோரமையஞ்சாரமரகதந்தழைத்துமின்னு
நக்கபொன்முளரிபூத்தகளிர்கயந்தலைக்கண்டன்றே. (உக)

கண்டபோதறிவுதோன்றக்கயந்தலைகுடைந்தபோது
பண்டையவடிவந்தோன்றப்பரஞ்சுடரருட்கண்டோன்றக்
கொண்டதோர்பரமானந்தக்குறியெதிர்தோன்றக்கும்பிட்
டண்டர்நாயகனைப்பூசைசெய்வதற்கன்புதோன்றி. (உஉ)

தூம்புடைக்கையான்மொண்டுமெஞ்சனத்தூநீராட்டித்
தேம்புடையொழுகப்பள்ளித்தாமமுந்தெரிந்துசாத்திப்
பாம்புடைத்தாயவேணிப்பரனையர்ச்சிக்கவுள்ளத்
தாம்புடையறிந்தவெந்தையானையைநோக்கிக்கூறும். (உங)

வந்தையெவனீவேண்டும்வரமெவனுரைத்தியென்னச்
சிந்தையிலன்புகூர்ந்தசெய்வதவேழந்தாழ்ந்து
முந்தையில்வீளைவும்வந்தமுறைமையுமுறையாற்கூறி
யெந்தையையடையப்பெற்றேற்கினியொருகுறையுண்டாமோ. (உச)

(ககூ) வேழக்குழாத்தொடு - யானைக்கூட்டத்துடன்.

(உ0) குறவர் தங்கள் தேவோடு பயிலுங்கல் - வேடர்கள் தங் தெய்வமான முருகனுடன் பயிலுமலை. புக்கன்று - புகுந்தது.

(உக) தேவியலில் - தெய்வத்தன்மையில், களிர்-குளிர்.

(உஉ) கயந்தலை - கயத்தில். கயம் - குளம்.

(உங) கூறும் - உரைத்தருள்வான்.

(உச) வரமெவன் - வரம்யாது.

என்பரவாரம்பூண்டவெந்தையிக்கரிகளெட்டோ
டொன்பதாயடியனேனுமுன்னடிபிரியாதுன்றன்
முன்பதாயிவ்விமானமுதுகுறச்சுமப்பலென்றே
ரன்பதாயொன்றென்னுள்ளத்தடுத்தலாலஃதேவேண்டும். (உடு)

இடையருவன்பின்வேழமிங்ஙனங்கூறவிண்ணு
டையவனம்பான்மெய்யன்புடையவனவினத்தாங்கி
யடைவதேநமக்குவேண்டுமகமகிழ்வென்னுப்பின்னும்
விடையவன்வரங்கணல்கிவிடைகொடுத்தருளினானே. (உசு)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விடைகொடுவணங்கியேகும்வெள்ளானைமேற்றிசையடைந்து
முன்பெயராற், றடமுமற்றதன்பாலரனையுங்கணேசன்றன்னையுங்க
ண்டருசசனைசெய், திடையருவன்புந்தானுமங்கிருக்குமெல்லையிச
செய்திகேட்டருள்கூர், கடவுளர்பெருமானுழையரைவிளித்தெங்க
ளிற்றினைக்கொணர்கெனவிடுத்தான். (உஎ)

வல்லைவந்தழைத்தார்தம்மைமுன்போக்கி வருவலென்றெழுந்
துகிழக்திசையோ, ரெல்லைவந்தோரூர்தனதுபேராற்கண்டிந்திரேச
சுரமெனவிறைவன், றொல்லைவண்பெயராலொன்றுகண்டரனைத்
தாபூசனைசெய்தங்கிருப்பக், கல்லைவன்சிறகுதடிந்தவனின்னுங
ளிறுவந்திலதெனப்பின்னும். (உஅ)

மனத்தினுங்கடியதூதரைவிடுப்பவானடைந்திறைவனவணங்கிப்
புனத்தினுங்கடியகல்லினும்பன்னட்புன்கணையுறவருசாபங
கனத்தினுங்கரியகண்டனக்கண்டகெனந்தந்துங்களந்துதிக்கயத்தி
னினத்தினுங்கழிந்தெய்வதவேழமினிதுவீற்றிருந்ததுமாதோ. ()

குடவயினாவதப்பெருந்தீர்த்தங்குடைந்தயிராவதகணைசக்,
கடவுளைத்தொழுதைராவதேசசரத்துக்கடவுளைப்பணிந்தவர்சாப

(உடு) எந்தை - எனதுபிதாவே. சுமப்பல் - சுமப்பேன்.

(உசு) விண்ணுடையவன் - இந்திரன்.

(உஎ) கண்டு - பிரதிட்டைசெய்து.

(உஅ) கல் - மலை.

(உக) புனம்-வனம். கடியகல் - கொடியமலை. புன்கணேய்-துன்பம். கனம் - மேகம்.

தொடர்பினும்பாவத் தொடர்பினுங்கழிவர் சுராதிபன்களிறுசென்
னெறிபோ, யிடர்கெடவைகைபடிந்துதென் கல்லயிலிந்திரேச்சுர
னடிபணிவோர். (ஈ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இம்மையிலறமுன்மூன்றுலெய்தியபயனெய்தி
யம்மையின்மகவானீரேழரும்பதமளவும்வானில்
வெம்மையில்போகமூழ்கிவெறுப்புவந்தடையவுள்ளச்
செம்மையில்வீடுபேரின்பச்சிவகதிச்செல்வராவார். (ஈக)

வேள்ளாயனேச்சாபந்தீர்த்தபடலம் - முற்றிற்று.

ஆடபடலம் - கக - க்கு திருவிருத்தம் - சஅ0.

மூன்றவது,

திருநகரங்கண்டபடலம்.

கலிநிலைத்துறை.

தானவாறிழிபுகர்முகத்தகெரிசாபம்
போனவாறுரைசெய்துமேற்புதுமதிமுடிமேல்
வானவாறினன்கடம்பமாவனமுதுநகர
மானவாறதுதனேச்சிறிதறிந்தவாறிசைப்பாம். (க)

இன்னரம்புளரேழிசையெழான்மிடற்றளிகள்
கின்னரம்பயில்கடம்பமாவனத்தினின்கீழ்சார்த்
தென்னர்சேகரனெனுங்குலசேகரனுலக
மன்னர்சேகரனரசுசெய்திருப்பதுமணலூர். (உ)

(ஈ0) தொடர்பு - சம்பந்தம்.

(ஈக) அறமுன்மூன்று - தருமமுதலிய மூன்று. அவை அறம், பொருள், இன்பம். மகவானீரேழரும் பதம் - ஆயிரஞ் சதுர்யுகம்.

(க) தானம் - மதம். புகர் - புள்ளி. முதுநகரம் - பெருநகரம்.

(உ) கின்னரம்பயில் - கின்னரம்போற் பயில். கின்னரம் - வீணை.

குலவுமப்பெரும்பதியிளங்கோக்களிலொருவ
னிலவுமாநிதிபோலருச்சனைமுதனியதி
பலவுமாஞ்சிவதருமமுந்தேடிவான்பரன்பாற்
றலைமைசான்றமெய்யன்பிலென்றனஞ்சயனென்பான், (க)

செல்வமாகரிருந்துமேற்றிசைப்புலஞ்சென்று
மல்லல்வாணிகஞ்செய்துதன்வளம்பதிமீள்வான்
ரெல்லையேழ்பவக்கடற்கரைதோன்றுவித்தடியா
ரல்லதீர்ப்பவன்கடம்பமாவனம்புகுமனவில். (ச)

இரவிகண்மறைந்தேழ்பரியிரதமுந்தானு
முரவுநீர்க்கருங்கடலில்வீழ்ந்தொளித்தனனுக
விரவுநீண்மயங்கிருள்வயிற்றமியனுய்மெலியு
மரவுநீர்ச்சடையண்ணலுக்கன்பிலேனங்கண். (ஞ)

வாங்குநான்மருப்பேந்தியமதமலையெருத்தந்
தாங்கியாயிரங்கரங்களாற்றடவியெண்டிசையுந்
தூங்குகாரிருடரத்துசெஞ்சுடரெனச்சூழ்போய்
வீங்குகாரிருளொதுக்கியவிமானநேர்கண்டான். (சு)

அடித்தலைந்தனனவிர்சுடர்விமானமீதமர்ந்த
கடித்தலும்பியகண்டனேக்கண்டுதாழ்ந்துவகை
மடித்தநெஞ்சிலைஞ்ஙனம்வைகிருள்கழிப்பா
னெடுத்தசிந்தையினிருந்தனனிருக்குமவ்விருள்வாய். (எ)

சோமவாரமன்றுதலாற்சுரர்களங்கெய்தி
வாமமேகலைமலைமகடலைமகன்மலர்ந்த
காமர்சேவடிபணிந்தவன்கங்குல்போற்கருதி
யாமநான்கினுமருச்சனையின்புறப்புரிவார். (அ)

அண்டர்வந்ததுமருச்சனைபுரிவதுமனைத்துந்
தொண்டரன்பினுக்கெளியவன்சுரர்தொழக்கறுத்த

(க) இளங்கோக்கள் - வணிகர்.
(ச) மல்லல் - வளப்பம்.
(ஞ) இரவி - சூரியன்.
(சு) செஞ்சுடர் - சூரியன்,
(எ) கடி - விடம்.
(அ) வாமம் - அழகு. அவன் கங்குல் - சிவராத்திரி

கண்டனின்னருட்கண்ணினுற்கண்டனனுதலிற்
புண்டரம்பயில்புடைப்புண்ணியவணிகன். (கூ)

நானமென்பனிநறும்புனலுயகன்பூசைக்
கானநல்விரைவருக்கமுமமரர்கைக்கொடுத்து
ஞானவெண்மதிச்சடையவன்கோயிலின்ஞாங்கர்த்
தானமர்ந்தருச்சனைசெய்வான்றங்கணுயகனே. (கo)

வள்ளறன்னெய்யன்பிலுலருச்சிசெய்வானே
ருள்ளவல்வினையீட்டமுங்கங்குலுமொதுங்கக்
கள்ளமில்லவன்யாரையுங்கண்டிலன்கண்டான்
றள்ளருஞ்சுடர்விமானமேற்றனித்துறைதனியை. (கக)

ஆழ்ந்தசிந்தையனதிசயமடைந்துசேவடிக்கீழ்த்
தாழ்ந்தெழுந்திருகைகளுந்தலைமிசைக்கூப்பிச்
சூழ்ந்துதன்பதிக்கேகுவானெருதலைதுணிந்து
வாழ்ந்தவன்பிஞன்விடைகொடுவழிக்கொடுவந்தான். (கஉ)

முக்கடம்படுகளிற்றினுன்முகிறவழ்கோயில்
புக்கடங்கலர்சிங்கமன்னனெதிர்புகல்வான்
றிக்கடங்கலுங்கடந்தவெந்திகிரியாய்நெருநல்
லக்கடம்பமாவனத்திலோரதிசயங்கண்டேன். (கங)

வல்லைவாணிகஞ்செய்துநான்வருவழிமேலைக்
கல்லடைந்ததுவெங்கதிர்கங்குலும்பிறப்பு
மெல்லைகாணியகண்டனின்னிரவிமண்டலம்போ
லல்லடுஞ்சுடர்விமானமுமதிற்சிவகுறியும். (கச)

(கூ) அண்டர் - தேவர்.

(கo) நானம் - கஸ்தூரி; அல்லது வாசனை. விரைவருக்கம் - வாசனைத்திரவியவகைகள். அருச்சி - முதனிலைத்தொழிற்பெயர்.

(கக) தனியை - சிவபெருமானை.

(கஉ) ஆழ்ந்த சிந்தையன் - ஆலோசனையின் முழுகிய மனதுடையவன்.

(கங) முக்கடம் - மூவகை மதம். அடங்கலர்-பகைவர். நெருநல் - நேற்று.

(கச) மேலைக்கல் - அத்தகிரி.

மாவலம்புதார்மணிமுடிக்கடவுளர்வந்தத்
தேவதேவனேயிரவெலாமருச்சனைசெய்து
போவதாயினுர்யானுமப்பொன்னெடுங்கோயின்
மேவுமீசனேவிடைகொடுமீண்டனனென்றான். (கடு)

மூளுமன்பினன்மொழிந்திடமுக்கணெம்பெருமான்
ரூளுமஞ்சலிகரங்களுந்தலையில்வைத்துள்ள
ஈளுமன்புமற்புதமுமேகிரம்பநீர்ஞால
மாளுமன்னவனிருந்தனன்போயினனருக்கன். (கசு)

ஈட்டுவார்வினையொத்தபோதிருண்மலங்கருக
வாட்டுவாரவர்சென்னிமேன்மலரடிக்கமலஞ்
சூட்டுவார்மறைகடந்ததந்தொல்லுருவிளங்கக்
காட்டுவாரொருசித்தராய்த்தோன்றினர்கனவில். (கஎ)

வடிகொள்வேலினுய்கடம்பமாவனத்தினைத்திருந்தக்
கடிகொள்காடகழ்ந்தணிநகர்காண்கெனவுணர்த்தி
யடிகளேகினுர்கவுரியராண்டகைகங்குல்
விடியும்வேலைகண்விழித்தனன்பரிதியும்விழித்தான். (கஅ)

கனவிற்றீர்ந்தவனியதியின்கடன்முடித்தமைச்சர்
சினவிற்றீர்ந்தமாதவர்க்குந்தன்களுத்திறஞ்செப்பி
நனவிற்கேட்டதுங்கனவினிற்கண்டதுநயப்ப
வினவித்தேர்ந்துகொண்டெழுந்தனன்மேற்றிசைச்செல்வான். (ஃ)

அமைச்சரோடுமந்நீபமாவனம்புகுந்தம்பொன்
சமைத்தவிழ்ந்தபொற்றுமரைத்தடம்படிந்தொளிவிட்
டிமைத்தலர்ந்தபொன்விமானமீதினிதுவீற்றிருந்தோர்
தமைச்சரண்பணிந்தஞ்சலிதலையின்மேன்முகிழ்த்தான். (உ0)

(கடு) மாவலம்பு - வண்டிசைக்கின்ற.

(கசு) அன்பினுன் - வணிகன்

(கஎ) வினையொத்தபோது-இருவினையும் சமப்பட்டகாலத்து.

(கஅ) கடிகொள் - அச்சந்தங்கிய. கௌரியர் ஆண்டகை - குல சேகரபாண்டியன்.

(ககூ) சினவிற்றீர்ந்த மாதவர் - கோபநீங்கிய முனிவர்.

(உ0) நீபமாவனம் - பெரிய கடப்பங்காடு.

அன்புபின் றள்ளமுன்புவந் தருட்கணீர்த் * தேக
வென்புநெக்கிடவேகிவீழ்ந் திணையடிக்கமலம்
பொன்புனைந்ததார்மௌலியிற்புனைந்தெழுந்திறைவன்
முன்புநின்றுசொற்பதங்களாற்றோத்திரமொழிவான். (உக)

சரணமங்கையோர்பங்குறைசங்கரசரணஞ்
சரணமங்கலமாகியதனிமுதல்சரணஞ்
சரணமந்திரவடிவமாஞ்சதாசிவசரணஞ்
சரணமும்பர்களுயகபசுபதிசரணம். (உஉ)

ஆழிஞாலமேலாசையுமமரர்வான்பதமேல்
வீழுமாசையும்வெறுத்தவர்க்கன்றிமண்ணுண்டு
பீழைமூழ்கிவானரகொடுபிணிபடச்சுழலு
மேழையேங்களுக்காவதோவெந்தைநின்கருணை. (உங)

சூளதாமறைச்சென்னியுந்தொடத்தொடநீண்ட
நீளனீயுனக்கன்பிலமாயினுநீயே
மூளவன்புதந்தெங்குடிமுழுவதும்பணிகொண்
டாளவேகொலிக்கானகத்தமர்ந்தனையென்ஞ. (உச)

சுரந்தவன்பிருகண்வழிச்சொரிவபோற்சொரிந்து
பரந்தவாரெருதிவானந்தப்பரவையுட்படிந்து
வரந்தவாதமெய்யன்பிலல்வலங்கொடுபுறம்போந்
தரந்தைதீர்ந்தவனெருதிறையமைச்சரோடிருந்தான். (உஞ)

ஆயவேலையின்மன்னவனுணையாலமைச்சர்
மேயவேவலர்துறைதுறைமேவினர்விடப்பப்
பாயவேலையினூர்த்தனர்வழிக்கொடுபடர்ந்தார்
சேயகாடெறிந்தணிநகர்செய்தொழின்மாக்கள். (உசு)

(உக) சொற்பதங்கள் - புகழ்மொழிகள். * அருட்கணீர் தேங்க என்றும் பாடம்.

(உஉ) சங்கர - சுகத்தைச்செய்பவனே.

(உங) பீழை - துன்பம். வானரகு - சுவர்க்க நகரங்கள்.

(உச) சூள் - பிரதிக்ஞை.

(உஞ) அரக்கை - துன்பம்.

(உசு) வேலை - கடல்.

வட்டவாய்மதிப்பிளவின்வெள்வாய்க்குயநவிய
மிட்டதோளினர்யாப்புடைக்கச்சினரிரும்பின்
விட்டகாரொளிமெய்யினர்விசிகொள்வார்வன்றேற்
றொட்டகாலினர்வனமெறிதொழிலினாளுர். (உள்)

மறியுமோதைவண்டரற்றிடமரந்தலைபனிப்ப
வெறியுமோதையுமெறிபவரோதையுமிரங்கி
முறியுமோதையுமுறிந்துவீழ்தோதையுமுகில்வாய்ச்
செறியுமோதையுங்கீழ்ப்படமேற்படச்செறியும். (உஅ)

ஒளிறுதாதொடுபோதுசெந்தேனுகவொலித்து
வெளிறில்வன்மரஞ்சினையிறவீழ்வசெங்களத்துப்
பிளிறுவாயவாய்நிணத்தொடுகுருதிநீர்பெருகக்
களிறுகோடிறமாய்ந்துவீழ்காட்சியவனைய. (உக)

பூவடைந்தவண்டினமயற்புறவொடும்பழனக்
காவடைந்தனபறவைவான்கற்பகமடைந்த
கோவடைந்திடவொதுங்குறுங்குறும்புபோற்செறிந்து
மாவடைந்தனமானினவரைகளுங்காடும். (ஈO)

இருணிரம்பியவனமெலாமெறிந்துமெய்யுணர்ச்சோர்
தெருணிறைந்தசிந்தையின்வெளிசெய்துபல்லுயிர்க்கு
மருணிறைந்துபற்றறுத்தானடிநிழலடைந்த
கருணையன்பர்தம்பிறப்பெனவேரொடுங்களைந்தார். (ஈக)

களைந்துநீணிலந்திருத்திச்செந்நெறிபடக்கண்டு
வளைந்துநன்னகரெடுப்பதெவ்வாறெனத்தேறல்
விளைந்துதாதுகுதார்முடிவேந்தன்மந்திரரோ
டளைந்தளாவியசிந்தையோடிருந்தனனங்கண். (ஈஉ)

(உள) நவியம் - கோடாரி.

(உஅ) முகில்வாய்ச்செறியுமோதை - இடிமுழக்கம்.

(உக) களிறு - யானை.

(ஈO) குறும்பு - குறுநிலமன்னராகிய கொடுங்கோலினர்.

(ஈக) தெருள் - அறிவு.

(ஈஉ) வளைந்து - சுற்றி. அளைந்தளாவிய - கலந்தாலோசித்த.

மெய்யரன்புதோய்சேவடியினிலந்திண்டப்
பொய்யகன்றவெண்ணீறணிமேனியர்பூதிப்
பையர்கள்ளிருட்கனவில்வந்தருளியபடியே
யையர்வல்லேவந்தருளினரசுளங்களிப்ப. (௯௬)

கனவிலும்பெருங்கடவுளர்காண்பதற்கரியார்
நனவிலும்வெளிவந்தவர்தமையெதிர்நண்ணி
நினைவினின்றதாளிறைஞ்சிநேர்நின்றுநல்வரவு
வினவியாதனங்கொடுத்தனன்மெய்யுணர்வேந்தன். (௯௭)

தென்னரன்பினிலகப்படுசித்தர்தாமுன்னர்ச்
சொன்னவாதிநூல்வழிவருசார்புநூற்றொடர்பா
னன்னராலயமண்டபங்கோபுரநகர
மின்னவாறுசெய்யெனவகுத்திம்மென மறைந்தார். (௯௮)

மறைந்தெவற்றிலுநிறைந்தவர்மலரடிக்கன்பு
நிறைந்தநெஞ்சுடைப்பஞ்சவனிலத்துமேம்பட்டுச்
சிறந்தசிற்பநூற்புலவராற்சிவபரஞ்சுடர்வந்
தறைந்துவைத்தவாரூலயமணிநகர்காண்பான். (௯௯)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறைபயில்பதுமமண்டபமருத்தமண்டபமழைநுழைவளாய்ப், பிறைபயில்சிகைமாமண்டபமறுகாற் பீடிகைதிசையெலாம்பிளக்கும், பறைபயினிருத்தமண்டபம் விழாக்கொள்பண்மணிமண்டபம் வேள்வித்,துறைபயில்சாலதிருமடைப்பள்ளிசூழ்றைதேவர்தங்கோயில். (௧00)

வலவயினிமயவல்லிபொற்கோயின்மாளிகையடுக்கியமதில்வா, னிலவியகொடிய நெடியசூளிகைவானிலாவிரித வளமாளிகைமீன்,

---

(௯௬) கள்ளிருள் - நடுவிருள்.

(௯௭) பெருங்கடவுள் - அரி, பிரம, விந்திரர். நனவு - விழிப்பு; அது, சாக்கிரம்.

(௯௮) ஆதிநூல்வழிவரு - வேதாகமவழிவந்த சார்புநூல் - சிற்பநூல்.

(௯௯) பஞ்சவன் - பாண்டியன்.

(௧00) மழைநுழை - மேகமுலவுகின்ற.

குலவியகுடிலிக்குன்றிவர்செம்பொற்கோபுரங்கொண்டல்கண்படுக்குஞ், சுலவெயிலகழிக்கிடங்குகம்மியதூற் றெல்வரம்பெல்லைகண்டமைத்தான். (கூஅ)

சித்திரநிரைத்தபீடிகைமறுகுதெற்றிகள்வாணிலாத்தெளிக்குசித்திலநிரைத்தவிழாவருவீதிநிழன்மணிச்சாளரவொழுக்கப்பித்திகைமாடப்பெருந்தெருக்கவலீடுசால்சதுக்கந்பொதியில்பத்தியிற்குயின்றமன்றுசெய்குன்றுபருமணிமேடையாடரங்கு. ()

அருந்தவரிருக்கையந்தணருறையுளரசரானவணங்குலவணிகர்பெருந்தெருநல்வேளாளர்பேரறஞ்சால் பெருங்குடியேனையகரிதேதிருந்தியபரிமாநிலக்களங்கழகந்தீஞ்சுவையாறுநான்குண்டி [ர்யிரந்தவர்க்கருத்துநல்லறச்சாலையினேயனபிறவுநண்கமைத்தான். ()

துணிகயங்கீழ்நீர்க்கூவல்பூவோடை தொடுகுளம்பொய்கைகந்தவனந், திணிமலர்ச்சோலைதடவையுய்யானந்திருநகர்க்கணிபெறச்செய்து, மணிமலர்த்தாரோன்மாளிகைதனக்கம்மாநகர்வடகுணபாற்கண், டணிநகர்சாந்திசெய்வது குறித்தானண்ணலாரறிந்திதுசெய்வார். (சக)

பொன்மயமானசடைமதிக்கலையின்புத்தமுதருத்தரனதுபோய்ச்சின்மயமானதம்மடியடைந்தார்சிவமயமாக்கியசெயல்போற்றன்மயமாக்கியந்நகர்முழுதுஞ்சாந்திசெய்ததுவதுமதுரநன்மயமானதன்மையான்மதுராநகரெனவுரைத்தனர்நாமம். (சஉ)

(கூஅ) சூளிகை - ஒரு மண்டபவிசேஷம்; இறப்பென்றுஞ் சொல்ப.

(கூக) பீடிகைமறுகு-கடைவீதி. தெற்றிகள் - சித்திரகூடங்கள். கவலை - முச்சந்தி. சதுக்கம் - நாற்சந்தி. பொதியில் - அம்பலம். மன்று - சபை - அரங்கு - நாடகசாலை.

(சo) அருந்தவர் இருக்கை - முனிவர் மடங்கள். கழகம் - கலைபயிலிடம். தீஞ்சுவை ஆறு - கைப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பென்பன. நான்குண்டி - நக்கல், பருகல், உண்ணல், தின்னல், என்பன.

(சக) துணிகயம் - வெட்டிய குளம். கூவல் - கிணறு. தடவை - பூந்தோட்டம்.

(சஉ) சின்மயம் - ஞானமயம்.

கேட்டிசைக்கரியசாத்தனுந் தென்சார்கீற்று வெண்பிறைநுதற் களிற்றுக், கோட்டிளங்களபக் கொங்கையன்னே யருங்குடவயின்ம துமடை யுடைக்குந், தோட்டிளந் தண்ணந் துழாயணி மௌலித் தோன்றலும்வடவயிற்றோடு, நீட்டிரும் போந்தினிமிர் குழலெண் டோணீலியுங்காவலாகிறுவி. (சஉ)

கைவரை யெருத்திற்கனவரைகிடந்தகாட்சியிற்பொலிந்தொ ளிர்கோயின், மைவரைமிடற்றுமதுரைகாயகரைமர புளியருச்சனே புரிவான், பொய்வரைமறையாகமநெறியொழுகும் புண்ணியமுனி வரையாதி, சைவரைக்காசிப்பதியினிற்கொணர்ந்து தலத்தினிற்ரு பனஞ்செய்தான். (சச)

உத்தமகுலத்துநாற்பெருங் குடியுமுயர்ந்தவு மிழிந்தவுமயங்க, வைத்தவுமான புறக்குடி மூன்றுமறைவழுக்காமலுவகுத்த, தத்தம நெறிநின்ரெழுகவைதிகமுஞ்சைவமுந்தருமமுந்தழைப்பப், பைத் தெழுதிரைநீர்ஞாலமேற்றிலகம்பதித்தெனநகர்வளம்படுத்தான். ()

அன்றுதொட்டரசனங்ககரெய்தியணிகெழுமங்கலமியம்ப,வெ ன்றுதொட்டிமைக்குமனேயின் மங்கலநாளெய்தினிருந்துமுப்புர முந், தென்றுதொட் டெய்தான்கோயின் மூன்றுறுப்புங்குறைவி ல்பூசனைவழாதோங்கக்,கன்றுதொட்டெறிந்தகனியுகுத்தான்போ ற்கலிதரந்தரசுசெய்தானில். (சசு)

பவநெறிகடக்கும்பார்த்திவன்கிரணம் பரப்பிளம்பரிதிபோன் மலயத், துவசனேப்பயந்தமைந்தன்மேன்ஞாலஞ் சுமந்திநாள்பல கழித்தொருநா, ணவவடிவிறந்தோலையத்தெய்திநாதனேப்பணிந் தமூவலஞ்செய், துவமையிலின்பவருணிழலெய்தியொன்றியொன் ருநிலைநின்ரான். (சஎ)

திருகரங்கண்டபடலம் - முற்றிற்று.

ஆ படலம் - கஉ - க்கு திருவிருத்தம் - ஙகஎ.

(சஉ) அன்னேயர் - சத்தமாதர். போந்து - கூந்தற்பனே.

(சச) மரபுளி - மரபால்.

(சசு) மூன்றுறுப்பு - நித்தியம். நைமித்தியம் - பிராயச்சித்தம். கலி - பகை.

(சஎ) நவவடிவமாவன -பிரமன், விட்டுணு, உருத்திரன், மகே சுரன், சதாசிவன், வித்து. நாதம், சத்தி, சிவம் என்பன; இவற்றுள் முன்னேயான்கும் உருவம், பின்னேயான்கும் அருவம்,இடையது அருவுருவம்.

நான்காவது

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்.



கலிவிருத்தம்.

கன்னியொருபங்கினர்கடம்பவனமெல்லா
நன்னகரமானதுநவின்றமுலகின்ற
வன்னமகளாகிமலயத்துவசனுருந்
தென்னனிடைவந்துமுறைசெய்ததுரைசெய்வாம். (க)

மனுவறமுவந்துதன்வழிச்செலநடத்தும்
புனிதன்மலயத்துவசன்வென்றிபுனைபூணன்
கனியமுதமன்னகருணைக்குறையுள்காட்சிக்
கினியன்வடசொற்சடமிழ்க்கடலிகந்தோன். (உ)

வேனில்விறல்வேள்வடிவன்வேட்கைவிளைபூமி
யானமடவார்கள்பதினுயிரவருள்ளான்
வாளெழுருபானுவழிவந்தொழுகுசூர
சேனன்மகள்காஞ்சனையைமன்றல்வினைசெய்தான். (ஊ)

கண்ணுதலைமுப்பொழுதும்வந்துபணிகற்றை
னெண்ணில்பலநாண்மகவிலாவறுமையெய்திப்
பண்ணரியதானதருமம்பலவுமாற்றிப்
புண்ணியமிரம்புபரிவேள்விபுரிகுற்றான். (சு)

ஈறின்மறைகூறுமுறையெண்ணியொருதொண்ணூற்
றாறிலெழுமூன்றுமகமாற்றவமரேச
னூறுமகமும்புரியினென்பதொடிப்பின்
மாறுமெனமற்றதனைமாற்றியிதுசாற்றும். (எ)

(க) முறை - அரசு.
(உ) மனுவறம் - மனுதருமமென்னு மொருநீதி.
(ஊ) வேட்கை - காமம்.
(சு) பரி - குதிரை. வேள்வி - யாகம்.
(எ) நொடிப்பின் - கணப்பொழுதின்.

நன்பொருள்விரும்பினையதற்கிசையஞால
மின்புறுமகப்பெறுமகத்தினையியற்றி
னன்புறுமகப்பெற்றியென்றமரர்நாடன்
றன்புலமடைந்திடலுநிம்பகுதாரான். (எ)

மிக்கமகவேள்விசெய்விருப்புடையஞகி
யக்கணமதற்குரியயாவையுமமைத்துத்
தக்கயிமத்துரியதேவியொடுசாலை
புக்கனனிருந்துமகவேள்வியுரிகிற்பான். (ஏ)

ஆசறமறைப்புலவராசிரியர்காட்டி
மாசறுசடங்கின்வழிமந்திரமுதாத்த
வோசையநுதாத்தசொரிதந்தழுவவோதி
வாசவனிருக்கையிலிருந்தெரிவளர்ப்பான். (அ)

விசும்புநிலனுந்திசையும்வேள்வியசொலைப்
பசும்புகைபடர்ந்தொருபடாமெனமறைப்பத்
தசும்புபடுநெய்பொரிசமித்திலைதிவாலைக்
கசும்புபடுமின்னமுதினுதிமடித்தான. (கூ)

ஞ்முகனாதிபரமாத்துமையாற்ற
னெய்ம்முகநிறைத்தழனிமிர்ந்துவருமெல்லை
பைம்முகவராவணிபஞ்சுடர்தனிப்ப
மைம்முகநெடுங்கணிமவான்மனைவிகாண. (கஎ)

வள்ளன்மலயத்துவசமீனவன்வலத்தோ
டுள்ளமினைகாஞ்சனைசுருங்கியமருங்கு
றள்ளவெழுகொங்கைகடதும்பநிமிர்தீம்பால்
வெள்ளமொழுகக்கரியவேற்கணிடனுட. (கக)

(கூ) பொருள் - புதல்வன்.

(ஏ) மகவேள்வி - புத்திரகாமேஷ்டி.

(அ) உதாத்தம், அநுதாத்தம், சொரிதம் - எடுத்தல். படுத்தல், நலிதல்.

(கூ) அடி - செய்கின்ற. படாம் - ஆடை. தசும்பு - குடம். அசும்பு - ஊற்று.

(கஎ) ஐம்முகன் - சதாசிவன்.

(கக) வள்ளல் - வரையாது கொடுப்போன். மருங்குல்-இடை. தும்ப - விம்ம.

இவ்வுலகமன்றியுலகேழுமகிழ்வெய்தச்
சைவமுதலாயினதவத்துறைநிவப்ப
வௌவியமறங்கெடவறங்குதுகலிப்பத்
தெய்வமறைதுந்துபிதிசைப்புலனிசைப்ப. (கஉ)

மைம்மலர்நெடுங்கணரமங்கையர்நடிப்ப
மெய்ம்மனமொழிச்செயலின்வேறுபடலின்றி
யம்மதுரைமாநகருளாரகமகிழ்ச்சி
தம்மையறியாதனதலைத்தலைசிறப்ப. (கங)

மாந்தர்பயின்மூவறுசொன்மாநிலவரைப்பிற்
றீந்தமிழ்வழங்குதிருநாடதுசிறப்ப
வாய்ந்ததமிழ்நாடரசளித்துமுறைசெய்யும்
வேந்தர்களின்மீனவர்விழுத்தகைமையெய்த. (கச)

நொய்தழலெரிக்கடவுணேற்றபயனெய்தக்
கொய்தளிரெனத்தழல்கொழுந்துபடுகுண்டத்
தைதவிழிதழ்க்கமலமப்பொழுதலர்ந்தோர்
மொய்தளிர்விரைக்கொடிமுளைத்தெழுவதென்ன. (கஞ)

விட்டிலகுசூழியம்விழுங்குசிறுகொண்டை
வட்டமதிவாய்க்குறுமுயற்கறையைமானக்
கட்டியதிருநுற்றியகதிர்த்தரளமாலைச்
சுட்டியதில்விட்டொழுகுசூழ்கிரணமொப்ப. (கட)

தீங்குதலையின்னமுதமார்பின்வழிசிந்தி
யாங்கிளநிலாவொழுகுமாரவடமின்ன
வீங்குடலிளம்பரிதிவெஞ்சுடர்விழுங்கி
வாங்குகடல்வித்துருமமாலையொளிகால. (கஎ)

(கஉ) ஔவியம் - பொறுமை.

(கங) அரமங்கையர் - தேவமாதர்.

(கச) மாந்தர் - மனிதர். மூவறுசொல் - பதினெண்பாடை.

(கஞ) நொய்து - விரைவாக. ஐ - அழகாக.

(கட) சூழியம் - உச்சிக்கொண்டையி லணியும் அணிகலன். தரளமாலை - முத்தமாலை.

(கஎ) ஆரவடம் - முத்துவடம். வித்துருமமாலை - பவளமாலை.

சிற்றிடைவஞ்சிறுமென்றுகில்புறஞ்சூழ்
பொற்றிருமணிச்சிறியமேகலைபுலம்ப
விற்றிருமணிக்குழைவிழுங்கியகுதம்பை
சுற்றிருள்கடிந்துசிறுதோள்வருடியாட. (கஅ)

தெள்ளமுதமென்மழலைசிந்தவிளமூரன்
முள்ளெயிறரும்பமுலைமூன்றுடையதோர்பெண்
பிள்ளையெனமூவொருபிராயமொடுநின்ரு
ளெள்ளரியபல்லுயிருமெவ்வுலகுமீன்ரருள். (ககூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குறுந்தளிர்மெல்லடிகிடந்தசிறுமணி நூபுரஞ்சதங்கைகுழறியே
ஙக, நறுந்தளிர்போலசைந்துதளர்நடையொதுங்கிமழலையிளகைகை
யுந்தோன்றப், பிறந்தபெரும்பயன்பெறுபொன்மாலைமடியிருந்தொ
ருபெண்பிள்ளையாஞ, ளறந்தழுவுநெறிநின்ரோர்க்கிகம்போகம்வீட
ளிக்குமம்மையம்மா. (உ0)

செய்யவாய் வெளிரூதுதுணே முலேக்கண் கருகாதுசேல் போ
னீண்ட,மையவாய்மதர்த்தகருங்கண்பசவாதையிரண்டு மதியந்தாங்
கா, தையவாலிலே வருந்தப் பெரூதுபெறு மகவையெடுத் தணேத்
தாண்மோந்தா, யெய்யவாய்முத்தங்கொண்டின்புற்ரூண்முன்பெற்ற
தோகையன்ஞள். (உக)

பரையாதிவிருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம் படைத்துக்
காத்து, வரையாதுதுடைத்துமறைத்தருளியவைகின்றுதன்வடிவு
வெரூ, யுரையாதிமறைகடந்த வொருமுதல்வி திருமகளாயுதித்தற்
கிந்தத், தரையாளுமன்னவன் செய்தவமிதுவோ வதற்குரியதவந்
தான்மன்னே. (உஉ)

(கஅ) மேகலே-ஓராபரணவிசேடம். குதம்பை - காதணி.

(ககூ) மூரல் - நகை.

(உ0) சூழறியேங்கல் - ஒலிவேறுபாடுகொட்டாது முழங்குதல்.

(உக) மூன்பெற்றதோகை - மேனே.

(உஉ) பரை - பராசத்தி. ஆதி - ஆதிசத்தி. விருப்பு - இச்சா சத்தி. அறிவு - ஞானசத்தி. தொழில் - கிரியாசத்தி. வரையாது - நீங்காது.

கள்ளமாகெறியொழுகும் பொறிகடந்து கரணமெலாங் கடந்தானந்த, வெள்ளமாம்பரஞான வடிவுடையாடன்னன்பின் வெளிவந்தின்றோர், பிள்ளையாயவதரித்த கருணையுந்தன் மணட்டிதவப் பேறுந்தேருன், பள்ளமா கடற்றூணைப்பஞ்சவர்கோ னெஞ்சத்துப் பரிவுகூர்ந்தான். (உக)

மகவின்றிப்பலபகல்யான் வருந்தியருந் தவம்புரிந்தேன் மைந்தற்பேறு, தகவிந்தமகஞ்செய்தேன துவுமொருபெண்மகவைத்தந்ததந்தோ, முகவிந்துநில வொழுக வருபெண்ணுமுலே மூன்றுய் முகிழ்த்துமாற்றூர், நகவந்த தென்னேயோவென்றுவகையி லஞுகி நலியுமெல்லே. (உச)

மன்னவனின் றிருமகட்குமைந்தர்போற் சடங்கனைத்தும் வழாதுவேதஞ், சொன்னமூறை செய்துபெயர் தடாதகையென் றிட்டு முடிசூட்டுவாயிப், பொன்னனேயா டனக்கிறைவன் வரும்பொழு தோர்முலேமறையும்புந்திமாழ்கே, லென்னவர னருளாலோர்திரு வாக்குவிசும்பிடைநின்றெழுந்ததன்றே. (உஞ)

அவ்வாக்குச்செவிநிரம்பவன்புவகையகநிரம்பவகிலமெல்லா மெய்வாக்குமனமொன்ற விழிவாக்கும்புன னிரம்பவிமலற்போற்றி நெய்வாக்குமகநிரப்பியெழுந்துமனேயொடுஞ்சாலேநீத்திரண்டு[தன். கைவாக்குமியங்கலிப்பக்கடிமாடமனேபுகுந்தான்கழற்கால்வேந்

மூரசதிர்ப்ப மங்கலங்கொண் டெதிர்வருவார் முகத்துவகை முறுவல்பூப்ப, வரசிருக்கு மண்டபம்புக் கினிதமர்ந்து கனகமழை யான்றகேள்வி, விரசிருக்கு மறையவர்கைப் பெய்தெவர்க்குமம்மு முறையால்வெறுப்பநல்கிப், பரசிருக்குங்கரதலத் தெம்பரன்கோயி னனிசிறப்புப்பல்கநல்கா. (உஎ)

சிறைவிடுமின்சிறைக்களமுஞ்சீத்திடுமினேழாண்டுதேயத்தீட்டு மிறைவிடுமி னயல்வேந்தர் திறைவிடுமி னீறைநிதிய மீட்டுமாயத்,

---

(உக) பொறி - ஐம்பொறி. கரணம் - அந்தக்கரணம். பரஞானம் - சிவஞானம்.

(உச) தக - பொருந்த. நக - சிரிக்க.

(உஞ) பொன்னனேயாள் - பொன்போல்வாள். இறைவன் - நாயகன்.

(உசு) கடி - காவல்.

(உஎ) கனகம் - பொன். ஆன்ற - மிகுந்த.

துறைவிமிழலையமு மறப்புறமும் பெருக்குமெனத் தொழாரைக் காய்ந்த,கறைவிமின்னில்வேலான்வள்ளுவனைக்கூய்முரசங்கறங் கச்சாற்றி. (உஅ)

கல்யாணமணிமௌலிவேந்தரையுங்கால்யாப்புக்கழலரீத்துக், கொல்யானைபரிநெடுந்தேரசுரிமைதொன்முறையாற் கொடுத்துப் போக்கிப்,பல்லாருங்கொள்கவெனப்பண்டாரந்தனைத் திறந்துபசும் பொன்னுடை,வில்லாருமணிக்கொடும்பூண்வெறுக்கைமுதலினைப் பலவும்வெறுப்பவீசி. (உக)

தூமரபின்வருபெருமங்கலகவிகட்கிருந்தியந் துகில்பூண்பாய் மா, காமர்கரிபரித்தடந்தேர்முதலாயபலபொருளுங்களிப்பநல்கிக், கோமறுகுகளிதூங்கச் சுண்ணமொடு மெண்ணெய்விழாக் குளிப்ப ஈல்கி, மாமதுராநகரன்றிமற்றுமுளநகரெங்குமகிழ்ச்சிதூங்க. (ஈ0)

இவ்வண்ணநகர்களிப்ப விறைமகனுங்களிப்பெய்தி யிறைவர் சொன்ன, வவ்வண்ணஞ்சாதமுதல் வினைநிரப்பித்தடாதகையென் றழைத்துத்தேவி, மெய்வ்வண்ண மறையுணராவிறைவிதனைமேனே போன்மேனுணேற்ற,கைவ்வண்ணத்தளிர்தீண்டிவளர்ப்பவிமவான் போலக்களிக்குநாளில். (ஈக)

திருந்தாதவிளங்குதலேயாயமொடு புறம்போந்துசிறார்க்குச்சிற் றில், விருந்தாகமணற்சிறுசோறட்டுவ்வையுரங்கிழித்தவேளும்வாய் வைத், தருந்தாதவிளமுலேவாய்வைத்தருந்தப்பாவைதனக்களித்தும் போதில், வருந்தாதை யண்டமெலாஞ் சிற்றிலிழைப் பாளாய்க்கு மகிழ்ச்சிசெய்தாள். (ஈஉ)

(உஅ) சிறை - தண்டச்சிறை. இறை - கரம். திறை - கப்பம். அறப்புறம் - தருமசத்திரம். தொழார் - பகைவர். கறை-இரத்தம்.

(உக) கல்யாணம் - மங்கலம். பண்டாரம் - பொன் முதலிய பொருணிரம்பிய அறை.

(ஈ0) தூமரபு - வலம்புரி முத்தென்னக் குலம்புரி தூய்மையா தியவுடைய கல்விசைப்புலவர் மரபு.

(ஈக) இறைமகன் - அரசன்.

(ஈஉ) குதலை - நிரம்பாமொழி. ஆயம்-சிறுமடவியர்கூட்டம். தாதை - பிரமன்.

நீட்டுவாளிரண்டனையகண்களிப்பத்தோழியர்க்குத்தெரியவாடிக்
காட்டுவாளெனக்கழங்குபந்துபயின்றம்மனையுங்கற்றுப்பாசம்
வீட்டுவாண்மேலொடுதள்ளவெமைவினைக்கயிறுவீக்கியூச
லாட்டுவாள்காட்டெல்போலாடிஞணித்திலத்தாம்பசைத்தவுசல். ()

இம்முறையாற் ருயர்க்குந் தோழியர்க்கு மகத்துவகை யீந்தா
ளாகி, யம்முறையாற் ருதைக்கு மகத்துவகை யீவாளா யாத்தவாய்
மைச், செம்மறையா ரணமுதலுலீரெட்டுக் கலைமுழுதுந்தெளிந்தா
ளந்த, மெய்ம்மறையார்கலையனைத்து மேகலையாமருங் கசைத்தவிம
லையம்மா. (கூச)

சொல்வாய் மைக்கலைத் தெளிவுமுழுமதியைப் பிளந்திருபாற்
சொருகியன்ன, பல்வாய்மைக்கடகரிதேர்பரியுகைக்குந்திறனுமழற்
பகழிதூர்க்கும், வில்வாள்வச்சிரமுதற்பல்படைத்தொழிலுங்கண்டிள
மைவிழுங்குமூப்பிற், செல்வாய்மைத்திறலரசன்றிருமகட்குமுடிசூ
ட்டுஞ்செய்கைபூண்டான். (கூரு)

முடிகவிக்குமங்கலநாள் வரையறுத்துத்திசைதோறுமுடங்கல்
போக்கிக், கடிகெழுதார்மணிமௌலிக்காவலரைவருவித்துக்காவல்
சூழ்ந்த, கொடியணிமாநகரெங்கும்விழாவெடுப்பவழகமைத்துக்குன்
றமன்ன, தொடிகெழுதோட்சுமதிதிருமணத்தினுக்குவேண்டுவனசூ
ழ்ந்துசெய்தான். (கசு)

மங்கலதூரியமுழங்கமால்யானையுச்சிமிசைவந்தபூத [துப்
கங்கைமுதலொன்பதுதீர்த்தமுநிரப்பிக் கதிர்விடுபொற்கடம்பூசித்
புங்கவரைமந்திரத்தீவளர்த்தமுதமருத்தியெரிபொன்னுற்செய்த
சிங்கமணியாதனத்தைநேசித்துப்பூசித்துத்தெய்வமேற்றி. (கஎ)

(கூங) பாசம் வீட்டுவாள் - பந்தமொழிப்பவள்.

(கூச) நாலீரேட்டு - அறுபத்துநான்கு. கலை - கலைஞானம்.

(கூரு) கண்டு - உணர்ந்து.

(கூசு) வரையறுத்து - தீர்மானஞ்செய்து. முடங்கல் - திருமு
கமென்னுமோலைச்சுருள்.

(கூஎ) பூதம் - தூய்மை. கடம் - குடம். புங்கவர் - தேவர். தெ
ய்வமேற்றி - ஆசனஞ்தேவதையை ஆசனத்திலாவாஹித்து.

திருமுடியைமதயானைமிசைவைத்துஈகரைவலஞ்செய்துபூசித்,
தருமணியாற் சுடிகையிழைத்தாடகத்தாற்குயிற்றியதோரைவாய்க்கா
கம், பெருமணிநீள்படம்பரப்பிமிசைகவிப்பவச்சிங்கபீடத்தேற்றிக்,
குருமணிவாணகைமயிலேக்கும்பத்துப்புண்ணியநீர் குளிரவாட்டி. ()

புங்கவர்மந்தாரமழைபொழியவருந்தவராக்கம்புகலத்தெய்வப்
பங்கயமென்கொம்பனையாராடமுனிபன்னியர்பல்லாண்டுபாட
மங்கலதூரியமுழங்கமறைத்தழங்கமாணிக்கமகுடஞ்சூட்டி [கா.
யெங்கருணைப்பெருமாட்டிக்கரசமைச்சர்பணியுந்தன்னிறைமைநல்

பாலனைய மதிக்கவிகை மிசைநிழற்றமதிகிரணம்பரப்பியன்ன,
கோலமணிக்கவரிபுடையிரட்டமலர்மழைதேவர்குழாங்கடூற்றக், கா
லையிளங்கதிர்கயிலையுதித்தெனவெண்கடாயானைக்கழுத்தில்வேப்ப
மாலைமுடிப்பெண்ணரசைமங்கலதூரியமுழங்கவஞ்செய்வித்தான்.

விண்ணுடுமொழிகேட்டமகிழ்ச்சியினுந்திருமகடன்விளக்கநோ
க்கி, யுண்ணுடுபெருங்களிப்புத்தலைசிறப்பச்சிலபகல்சென்றெழிய
மேனுட், புண்ணுடு வேன்மங்கை குதுகலித்துநடிப்பத்தன்புயமேல்
வைத்த, மண்ணுடுமகட்களித்துவாளுடுபெற்றுனம்மகவுபெற்றான்.

விரதநெறி யடைந்தீற்றுக் கடன்பிறவுந்தாதைக்குவிதியாலாற்
றி, யரதனமெல் லணைமேற்கொண் டுலகமெலாமொருகுடைக்கீழா
ள்வாளாளுள், சாதமறையாய்மறையின்பொருளாயப்பொருண்முடி
வுதானுய்த்தேனீ, னிதமெனப்பூவின்மணமெனப்பரமனிடம்பிரி
யாவெம்பிராட்டி. (சஉ)

மேற்படி - வேறு.

மண்ணரசிறைஞ்சஞாலமநுவழிபுரந்துமாறன்
விண்ணரசிருக்கையெய்தப்பெற்றபின்விடையோனுள்ளத்
தெண்ணரசன்னமென்னடத்தென்னவனீன்றகன்னிப்
பெண்ணரசிருந்துநேமியுருட்டியபெருமைசொல்வாம். (சஈ)

(ஈஅ) புண்ணியநீர்-தோற்றத்தாலும் மந்திராவாகனத்தாலும் தூய்மையான மந்திரகலசநீர்.

(ஈக) புங்கவர் - தேவர்.

(சப) கோலம் - அழகு.

(சக) வேண்மங்கை - வீரலட்சுமி.

(சஉ) சரதம் - உண்மை. இரதம் - சுவை.

(சஈ) ஞாலம் - உலகம். மாறன் - பாண்டியன்.

இன்னியமியம்புமாக்களெழுப்பவானிரவிதோன்றக்
கன்னலந்தென்னப்பள்ளித்துயிலெழீஇக்கடிநீராடித
தன்னிறைமடிரபுக்கேற்றநியதிமாதானமன்பு
துன்னியகடவுட்பூசைத்தொழின்முதலனைத்துமுற்ற. (சச)

நிடம்படுமறிஞர்சூழச்சிவபரன்கோயின்முன்னிக்
கடம்படிமூலைத்தமுக்கட்கரும்பினைமறைவண்டார்க்கும்
விடம்பொதிகண்டத்தேனைவிதிமுறைவணங்கிமீண்டு
குடம்பயில்குமிழ்செம்பொற்குருமணிக்கோயிணண்ணி. (சஞ)

அரசிறைகொள்ளுஞ்செம்பொனத்தாணியிருக்கையெய்தி
நிரைசெறிமடங்கலாறுமுடங்கினநிமிர்ந்துதாங்க
விரைசெறிமலர்மீப்பெய்தவியன்மணித்தவிசின்மேவித்
திரைசெறியமுதிற்செய்தபாவைபோற்சிறந்துமாதோ. (சசு)

அனிந்திதையமுதின்சாயற்கமலினியணங்குங்காதல்
கனிந்தபார்மகளிராய்வந்தடைப்பைபொற்களாஞ்சியேந்த
வினந்திரிபதமக்கோயிலிருவருமனையராகிப்
புனைந்தவெண்கவரிக்கற்றையிருபுடைபுரட்டிவீச. (சஎ)

செடியுடலெயினச்செல்வன்சென்னிமேற்சுமந்துசாத்துங்
கடியவிழ்மலரிற்பொன்னிக்காவலன்குடக்கோனேவ
முடிகெழுவேந்தருள்ளார்முடிமிசையிலங்குதாம
மடிமிசைச்சாத்திநங்கையாணையாறேவல்செய்வார். (சஅ)

(சச) கன்னல் - நாழிகை. பள்ளி - படுக்கை. கடி - வாசனை.

(சஞ) குருமணி - நிறம்வாய்ந்தமணி.

(சசு) அரசிறை - அரசாட்சி. அத்தாணி - கொலுவிருக்கை மண்டபம்.

(சஎ) அடைப்பை - வெற்றிலைப்பை. களாஞ்சி - காளாஞ்சி, அது தம்பலபடிக்கம். இனந்திரி - சாதியான் மாறுபட்ட. இருவர் - திருடிகள் கலமகள். அனையர் - அவ்வாறு மனிதவுருவங்கொண்டவர்.

(சஅ) செடி - பாவம். எயினச்செல்வன் - வேடர்தலைவன். பொன்னிக்காவலன் - சோழன். குடக்கோன் - சேரன். தாமம் - மாலை.

வையுடைவாளராகிமார்புறப்பின்னியாத்த
கையினராகியன்னேயென்றுதன்கருணைநோக்கஞ்
செய்யுமென்றிமையார்நோக்கிநோக்குமேற்செங்கைகூப்பி
யுய்குநமெனவாய்பொத்தியுழையர்தம்பணிகேட்டுய்வார். (சக)

ஆங்கவன்மராடர்வேந்தனவன்கருநாடர்வேந்த
னீங்கிவன்விராடர்வேந்தனிவன்குருநாடர்வேந்த
னோங்குவன்சேரன்சென்னியுவனெனக்கோலாற்சுட்டிப்
பாங்கிருமருங்குங்காட்டக்கஞ்சுகப்படிவமாக்கள். (ரo)

செந்தமிழ்வடநூலெல்லைதெரிந்தவர்மறைநூலாதி
யந்தமிலெண்ணெண்கேள்வியளந்தவர்சமயமாறும்
வந்தவர்துறந்தோர்சைவமாதவர்போதமாண்ட
சிந்தனையுணர்வான்மாயைவலிகெடச்செற்றவீரர் (ருக)

முன்னிருந்தினியதேற்றுமூத்தவரெண்ணியெண்ணிப்
பன்னுமைந்துறுப்பிற்காலமளந்தறிபனுவன்மாந்தர்
பின்னுமுன்னோக்குஞ்சூழ்ச்சிப்பெருந்தகைச்சுமதியோடு
மின்னமுதனையகேள்விமந்திரர்யாருஞ்சூழ்வார். (ருஉ)

(சக) வையுடைவாளர் - கூரியவையுடைய வாட்படையாளர். உறையில் வைக்கப்பெற்ற வாளினென்றுமாம். யாத்த - கட்டிய. உழையர் - அணுக்கத்தொண்டர்.

(ரo) கஞ்சுகப்படிவமாக்கள் - கட்டியர். கஞ்சுகம் - சொக்காய் என்ப.

(ருக) சமயம்ஆறும்வந்தவர் - ஆறுசமயங்களையு மறிந்தவர்கள். ஆறுசமயங்களாவன சைவம், வைணவம், சாத்தம், பைரவம், கணபத்தியம், சௌரம் ஆதியவும் பிறவுமாம். சிலர் சைவம், பாசுபதம் காளாமுகம், கௌமாரம், வாமம், கணபத்திய மென்னுமுட் சமயங்காளிறியென்பர். வைதீகசமயங்களையும் ஆகமசமயங்களையும் பிறசமயங்களையும் பாரபட்சமின்றிக்காக்கவேண்டி மரசசபையினில் உட்சமயத்தினை உணர்ந்தாரே இருந்தனரெனல் பொருந்தாமை யுணர்க.

(ருஉ) மூத்தவர் - வயோதிகர். காலமளந்தறிபனுவன்மாக்கள்- நாழிகைக்கணக்கர்.

கற்றறியந்தணாளர்விருத்திகள்கடவுட்டானத்
தற்றமில்பூசைச்செல்வமறப்புறநடக்கையேனைச்
செற்றமில்குடிகண்மற்றுமமைச்சராற்றெளிந்தும்வெவ்வே
றுற்றுவிட்டினைர்ந்தும்வேறுகுறையுண்டேலொறுத்துநீர்த்தும்.

ஆதியுத்தேசத்தானுமிலக்கணவமைதியானுஞ்
சோதனைவகைமையானுஞ்சொன்னதூலனுவாதித்து
நீதியினவற்றுற்கண்டித்தவ்வழிநிறுத்தித்தம்மில்
வாதிகள்வாதஞ்செய்யுங்கோட்டிமேன்மகிழ்ச்சிகூர்ந்தும். (நிச)

பையுளபகுவாய்நாகப்பள்ளியோனுதிவானோர்
கையுளவலியாலட்டகடலமுதனைத்தும்வாரிப்
பொய்யுளமகலக்கற்றபுனிதநூற்புலவர்நாவிற்
செய்யுளின்விளைவித்தூட்டத்திருச்செவிதெவிட்டவுண்டும். (நிரு)

தொல்லைநான்மறையோர்சைவர்துறந்தவர்யார்க்குமின்பம்
புல்லவானமுதங்கைப்பப்பாகநூற்புலவரட்ட
மல்லிலவான்முகையினன்னவறுசுவைமுரியாமூர
னல்லவுணருத்தியன்னூர்நாவிருந்தமுதுசெய்தும். (நிசு)

எல்லவனுசிநீர்துமெல்லியனன்குமாறும்
வல்லவர்சூதனுதிவருத்தமூவாறுகேள்வி
சொல்லவுண்மலர்ந்துமேனைமநுமுதற்றுறைமாண்கேள்வி
நல்லனநயந்துகேட்டுநண்பகற்போதுநீத்தும். (நிஎ)

கலைக்குரைவிரிப்பாரென்னவறுமையிற்கல்விபோலப்
புலப்படாமருங்குனல்லாரெந்திரப்புலவன்பூட்டி
யிலத்திபாவைபோனின்முடல்செய்யாடற்கண்ணு
நலத்தகுபாடற்கண்ணுநல்லருணட்டஞ்செய்தும். (நிஅ)

(நிக) விருத்திகள் - தொழில்கள். அறப்புறம் - தருமசாலை.

(நிச) அநுவாதம் - புனருக்தி. அனுவாதமாவது - முன்னர்ப் பெறப்பட்டதொன்றனை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னரு மெடுத்தோதுதல்.

(நிரு) நாகப்பள்ளியான் - அனந்தசயனனென நாராயணன்.

(நிசு) பாகநூற்புலவர் - சமையற்சாத்திரங்கற்றவர்.

(நிஎ) எல்லவன் - சூரியன். மூவாறுகேள்வி - பதினெண்புராணம். நண்பகற்போது - உச்சிப்போது.

(நிஅ) கலைக்கு - பரதநூலுக்கு. வறுமை - தரித்திரம்.

இன்னிலையொழுகுந்தொல்லோரியற்றியதருமம்வேறு
மந்நிலைநிறுத்தும்வேள்வியறம்பலவாக்கஞ்செய்ய
நன்னிதியளித்தும்வேள்விநடத்தியுஞ்செல்வங்கல்வி
தன்னிருகண்களாகத்தழைந்திடவளர்க்குநாளும். (நிக)

ஒப்புருமுதலீறில்லாவொருத்திதன்சத்திபெற்ற
மும்பெருந்தேவராலேமுத்தொழினடத்துமென்று
செப்பலும்புகழன்றென்னிற்றென்னவன்கன்னியாகி
யிப்புவிமநுவிற்காக்குமென்பதென்பேதைமைத்தே. (சுo)

கலிநிலைத்துறை.

வரைசெய்பூண்முலைத்தடாதகைமடவரற்பிராட்டி
விரைசெய்தார்முடிவேய்ந்ததண்குடைமதுவேந்தன்
கரைசெய்நூல்வழிகோல்செலக்கன்னியாம்பருவத்
தரசுசெய்தலாற்கன்னிநாடாயதந்நாடு. (சுக)

இன்னவாறுமையவதரித்திருந்தனளென்னுப்
பொன்னவாவினர்பெறவெறிபொருகைகால்பொருப்பன்
சொன்னவாய்மைகேட்டகங்களிதூங்கினர்தொழுது
மின்னுவார்சடைமுனிவரோர்விஞ்சுரைசெய்வார். (சுஉ)

திருந்துநான்மறைச்சென்னியுந்தீண்டுதற்கரிதா
யிருந்தநாயகியாயையுமீன்றவெம்பிராட்டி
விரிந்தவன்புகூர்க்கனும்வெற்பனும்பன்னுள்
ளுருந்திநோற்றலாலவர்க்கொருமதலையாய்வந்தாள். (சுங)

மனித்தஞ்சியபூழியன்மகனெனவீங்குத்
தனித்தகாரணம்யாதெனத்தபனியப்பொதுவிற்
குனித்தசேவடிக்கன்புடைக்குடமுனியருள்கூர்ந்
தினித்ததோர்கதைகேண்மினென்றெடுத்துரைசெய்வான். (சுச)

(நிக) இன்னிலை இல்நிலை - இல்கிரகம். நிலை - ஆச்சிரமம்.

(சுo) சத்தி - அருட்சத்தி.

(சுக) வரைசெய் - வரையின்றன்மையைச் செய்கின்ற. மடவரற்பிராட்டி - மடவசலாகிய பிராட்டி.

(சுஉ) அவாவினர் - விருப்பமுள்ளவர். பொருகைகால் - தாம்பிரபர்ணியை ஒழுகவிட்ட. பொருப்பன் - அகத்தியன்.

(சுங) மதலை - சந்ததி.

(சுச) பூழியன் - பாண்டியன். தபனியம் - பொன். குனித்த - நடனஞ்செய்த. குடமுனி - அகத்தியன்.

விச்சுவாவசுவெனுமொருவிச்சையன்பயந்த
நச்சுவாள்விழிமடந்தைவிச்சாவதிநாம
மச்சுவாகதமொழியிலுலம்பிமைக்கண்பு
வைச்சுவாழ்வுறுமனத்திலுடாதையவணங்கா. (சுடு)

ஐயவம்பிகைதன்னையானன்பிலுல்வழிபட்
டெய்யவேண்டுமென்றுளவனுலகெலாம்பயந்த
தையன்மந்திரந்தனைமகடனக்குபதேசஞ்
செய்யவந்நெறியொழுகுவாள்செப்புவாள்பின்னும் (சுசு)

இறைவிதன்னையாதரிப்பதற்கிம்பரிற்சிறந்த
குறைவினன்னகர்யாதெனக்கூறுவான்கேள்வித்
துறைவிளங்கிஞேர்பயில்வதுதுவாதசமுடிவென்
றறைவளம்பதியவனிமேற்சிவபுரமாமால். (சுஎ)

சேடுதாங்குமூவுலகினுட்சிறந்தனசத்தி
பீடமூவிருபத்துநான்கவற்றின்முற்பீட
மாடமோங்கியமதுரையாமற்றதுபோகம்
வீடும்வேண்டியசித்தியும்விளைப்பதென்றெண்ணு. (சுஅ)

அல்லுமெல்லும்வானகர்க்கதவடைப்பின்றிசுவர்க்க
செல்வரங்கடைந்துமையருள்சித்தியால்வினையை
வெல்லுவாரதான்றெந்தையோடைவர்கள்வேண்டி
நல்வரம்பலவுடைந்தனர்நமர்களங்ஙகரில். (சுக)

(சுடு) விச்சையன் - வித்தியாதரன். சுவாகதம் - இனி.

(சுசு) ஐய - பிதாவே.உலகெலாமீன்றதையன் மந்திரம். உலக மாதாவான இராசராசேசுவரியின் மந்திரம். அது மந்திராசமான-பஞ்சதசாட்சரம்.

(சுஎ) ஆதரித்தல் - உபாசித்தல் - சிவபுரம் - மதுரை.

(சுஅ) சேடு - பெருமை - வீடு - முத்தி. வேண்டியசித்தி. இட்டசித்தி.

(சுக) அல்லுமெல்லும்-இரவும்பகலும். அதான்று-அதுவன்றி. அசையுமாம்.எந்தையோடைவர் - என்றந்தையுடனேந்துபேர் - அன்னேர்பஞ்சசரர். வசுபூர்ணர். சொச்சவித்தியர் யக்ஷர் வித்தியாதரர் என்பவர்கள் என்ப.

எம்மையாரையும்யாவையுமீன்றவங்கயற்க
ணம்மையாவரேயாயினுமன்பிஞ்தரிப்போ
ரிம்மையாகியபோகம்வீடெண்ணியாங்கெய்தச்
செம்மையாகியின்னருள்செய்துவீற்றிருக்கும். (எ0

என்றதாதையையிறைஞ்சிஞளனுஞைகொண்டெழுந்தாண்
மன்றன்மாமலர்வல்லிபோல்வழிக்கொடுகோனங்
குன்றமாறும்பின்னிடப்பமுன்குறுகிஞளன்பி
னின்றவாதியெம்பரையருணிறைந்தவங்ஙகரில். (எக)

அடைந்திளம்பிடியாடல்போலாடகமலங்
குடைந்தநான்மறைக்கொழுந்திடங்கொண்டுறைகுறிப்பாற்
படர்ந்தபொன்மலைவல்லியைப்பணிந்துவெங்கதிரோன்
றெடர்ந்தவான்சுரமதியமேயாதியாத்தொடங்கா. (எஉ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பெரும்பகனல்லாண்கங்குலாணுதவப்பெற்றவுணிலமுதற்பல்லூ, ணரும்பொடியெள்ளுண்சாந்திராயணமானேந்துபானறியநீர்தருப்பை, யிரும்புதனுனிநீர்காலிவையுகர்ந்து மியற்றரும்பட்டினியுற்றும், வரம்புறவிராறுதிங்களுநோற்றுவாடி மேல்வருஞ்சுரநிமயில். (எங)

சன்னிதியடைந்துதாழ்ந்துநின்றிளமாந்தளிரடிக்காஞ்சிசூழ்ந்திடந்த, மின்னிகர்மருங்குலிழையிடைநுழையா வெம்மூலைச்செம்மலர்க்காந்தட், பொன்னிரைவளைக்கைமங்கலக்கழுத்திற்பூரணமதிக்கலைமுகத்தி, னின்னிசையளிசூழிருட்குழற்கற்றையிறைவியையிம்முறைநினையா. (எச)

(எ0) ஆதரிப்போர் - உபாசிப்போர்.

(எக) அநுஞை - பிரயாணைத்தரவு.

(எஉ) இளம்பிடி - இளம்பெண்யானை சுரமதி - தைமாதம்.

(எங) பெரும்பகல் - உச்சி. கங்குல் - இரவு. வாடி - உடன்மெலிந்து.

(எச) இம்முறை - மாந்தளிரடி எழுவாய்-குழற்கற்றை இறுவாய்விடாதுநினைக்குமுறை.

கோலயாழ்த்தெய்வம்பராய்க்கரங்கு வித்துக்கொழுஞ்சுடர்ப் பசுங்கதிர்விளக்கம், போலதூற்பொல்லம்பொத்துபொன்னிறத்த போர்வைநீத்தவிழ்கடிமுல்லை, மாலைமேல்வீக்கிப்பத்தர்பின்கிடப்ப மலர்க்குழறேய்சுவற்கிடத்திச், சேலைநேர்விழியாண் மாடகந்திரித் துத்தெறித்தனள்பண்ணறிந்திசைப்பாள். (எடு)

கோச்சகக்கலிப்பா.

ஒளியாலுலகீன்றுயிரனைத்துமீன்போற்செவ்வியுறநோக்கி
யளியால்வளர்க்குமங்கயற்கண்ணன்னேகன்னியன்னமே
யளியாலிமவான்றிருமகளாயாவியன்னமயில்பூவை
தெளியாமழலைக்கிளிவளர்த்துவிளையாட்டயருஞ்செயலென்னே. ()

அண்டக்குவைவெண்மணற்சிறுசோறுக்கித்தனியேவிளையாடுங
கொண்டற்கோதாய்படியெழுதலாகாவுருவக்கோகிலமே
கொண்டற்குமியிமயவரையருவிகொழிக்குங்குளிர்முத்தால்
வண்டற்குதலைமகளிரொடும்விளையாட்டயரும்வனப்பென்னே. ()

வேதமுடிமேலானந்தவுருவாய்நிறைந்துவிளையாடு
மாதரசேமுத்தநகைமானேயிமயமடமயிலே
மாதரிமவான்றேவிமணிவடந்தோய்மார்புந்தடந்தோளும்
பாதமலர்சேப்புறமிதித்துவிளையாட்டயரும்பரிசென்னே. (எஅ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யாழியன்மொழியாலிவ்வழிபாடியேத்திஞாளாகமெய்யுள்ளத்
தாழியவன்பின்வலைப்படுகருணையங்கயற்கண்மடமாஞர் [றெய்தி
சூழியநுழைமெல்லிளங்குழற்குதலைத் தொண்டைவாயகைமூன்
வாழிளங்குழவியாகியாலயத்துவந்துநின்முள்வரங்கொடுப்பாள். ()

(எடு) கோலம் - அழகு. யாழ் - வீணை. பொல்லம்பொத்து - தைத்த. பத்தர் - சுரைப்பத்தர். சுவல் - பிடரி.

(எசு) அளி - அன்பு.

(எஎ) கொண்டற்கோதாய்-மேகம்போலும் கூந்தலினையுடையாய். வண்டல் - மகளிர்விளையாட்டு.

(எஅ) மாதரிமவான்றேவி - அழகியமலையரையன் மனைவி - மணிவடம். முத்தாரம். சேப்புற - கன்ற.

(எக) சூழியநுழை - சூழியமெனுமணியணிந்த. இளங்குழல் - இன்னம் வளரவேண்டிய கூந்தல்.

இறைஞ்சியஞ்சலித்தாடன்னே யெம்மன்னையாதுவேண்டினே யெனவென்று, நிறைந்தபேரன்புகின்னடிப்போதினீங்கலா நிலை மைதந்தருளென், றறைந்தனளின்னும்வேண்டுவதே தென்றருள விம்மகவுருவாகிச், சிறந்துவந்தென்பாலருள்சுரந்திருக்கத் திருவ ளஞ்செய்யெனப்பணிந்தாள். (அ0)

சிவபரம்பரையுமதற்குநேர்ந்தருள்வா டென்னவர்மன்னலுய் மலயத், துவசனென்றொருவன்வருமவன்கற்பின் றுணைவியாய்வரு தியப்போதுன், றவமகவாகவருவலென் றன்புதந்தனள்வந்தவா றிதுவென், றுவமையில்பொதியத்தமிழ்முனிமுனிவர்க் கோதிலு ணுள்ளவாறுணர்ந்தார். (அக)

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்-முற்றிற்று.

ஆ படலம் - கஉ - க்கு - திருவிருத்தம் - ருகூ.

ஐந்தாவது

திருமணப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரைபுகழ்தென்னன்செல்வத்தடாதகைப்பிராட்டிதானே
திரைசெய்நீர்ஞாலங்காத்தசெயல்சிறிதுரைத்தேன்றெய்வ
விரைசெய்பூங்கோதைமாதைவிடையவன்மணந்துபாராண்
டரசுசெய்திருந்ததோற்றமறிந்தவாறியம்பலுற்றேன். (க)

காயிரும்பரிதிப்புத்தேள்கலியிருடுமிப்பச்சோதி
பாயிருங்குடைவெண்டிங்கட்படரொளிதீழல்செய்ய
மாயிரும்புவனமெல்லாமநுமுறையுலகமீன்ற
தாயிளங்குமரியாகித்தனியரசிருக்குநாளில். (உ)

(அ0) அடிப்போதில் - கான்மலரில். மகவு - இளங்குழந்தை.

(அக) அருள்வாள் - உரைப்பாள்.

(க) தெய்வவிரை - தெய்வமணம். விடையவன் - சிவபெருமான்.

(உ) காய் - தண்டிக்கின்ற. பரிதிப்புத்தேள் - ஆக்கினைசக்கரமாகிய தேவன். மனுமுறை - நீதிப்படி.

மருங்குறேய்ந்தொளிப்பச்செம்பொன்வனமுலையிறுமாப்பெய்தக்
கருங்குழற்கற்றைபாளுட்கங்குலெவெளிதுசெய்ய
வீரங்குநல்யாழ்மென்றீஞ்சொலின்னகையெம்பிராட்டிக்
கருங்கடிமன்றல்செய்யுஞ்செவ்விவந்தித்ததாக. (ங)

பனிதருமதிக்கொம்பன்னபாவையைப்பயந்தாணைக்கிக்
குனிதரிறையப்பூத்தகொம்பலுய்க்கின்னங்கன்னி
கனிதருசெவ்வித்தாயுங்கடிமணப்பேறின்றென்னுத்
துனிதருநீரளாகிச்சொல்லுளுள்சொல்லக்கேட்டாள். (ச)

அன்னைநீகினைந்தவெண்ணமாம்பொழுதாகும்வேறு
பின்னைநீயிரங்கல்யான்போய்த்திசைகளும்பெருநீர்வைப்பு
மென்னதுகொற்றநாட்டிமீன்வலிங்கிருத்தியென்னுப் [தாள்.
பொன்னவிர்மலர்க்கொம்பன்னுள்பொருக்கெனவெழுந்துபோந்

தேம்பரிகோதைமாதின் றிருவுளச்செய்திநோக்கி
யாம்பரிசுணர்ந்தவேந்தரமைச்சரும்பிறரும்போந்தார்
வாம்பரிகடாவித்திண்டேர்வலவனுங்கொணர்ந்தான்வையந்
தாம்பரிவகலவந்தாளேறிளுள்சங்கமார்ப்ப. (சு)

ஆர்த்தனதடாரிபேரியார்த்தனமுருடுமொந்தை
யார்த்தனவுடுக்கைதக்கையார்த்தனபடகம்பம்பை
யார்த்தனமுழவுதட்டையார்த்தனசின்னந்தாரை
யார்த்தனகாளந்தாளமார்த்தனதிசைகளெங்கும். (எ)

வீங்கியகொங்கையார்த்தகச்சினர்விழிபோற்றைப்ப
வாங்கியசிலையேறிட்டகணையினர்வட்டத்தோல்வா

(ங) மருங்குல் - இடை. வனமுலை - அழகிய தனம். பாளுட் கங்குல் - பாதியிரவு. இரங்கும் - சத்திக்கின்ற. தீஞ்சொல்- இனிய சொல்.

(ச) பனி - குளிர்ச்சி. பாவை - தடாதகைப்பிராட்டி.

(ஞ) பெருநீர்வைப்பு - கடல்சூழுலகம்.

(சு) தேம்பரி-தேனினைத்தன்னிடத்துடைய. கோதை-மாலை.

(எ) தடாரி முதற்றட்டைவரைத்தோற் கருவிகள். பிறதொலக்கருவியுங் கஞ்சங்கருவியுமாம். கஞ்சக்கருவி - வெண்கலத் தாளமாதி.

டாங்கியகையர்வைவேற்றளிர்க்கையர்பிணைத்தெய்வம்போ
லோங்கியவாயத்தாருமேறினருடனத்தின்டேர். (அ)

கிடைப்பனவுருளாற்பாரைக்கீண்டுபொதலத்தினெல்லே
யடைப்பனபரந்ததட்டாலடையவான்றிசைகளெட்டு
முடைப்பனவண்டமுட்டியொற்றிவான்கங்கைநீரைத்
துடைப்பனகொடியாற்சாரிசுற்றுவபொற்றிண்டேர்கள். (கூ)

செருவின்மாதண்டந்தாங்கிச்செல்லும்வெங்கூற்றமென்ன
வருவிமாமதநீர்காலவரத்தவெங்குருதிக்கோட்டாற்
கருவிவான்வயிறுகீண்டுகவிழுநீர்வாயங்காந்து
பருகிமால்வரைபோற்செல்வபரூஉப்பெருந்தடக்கையானை. (கo)

ஒலியவார்திரையினன்னவொழுங்கினயோகமாக்கள்
வலியகாலடக்கிச்செல்லுமனமெனக்கதியிற்செல்வ
கலியநீர்ஞாலங்காப்பான்கடையுகமுடிவிற்றோற்றம்
பொலியும்வாம்புரவியொன்றேபோல்வனபுரவிவெள்ளம். (கக)

காலினுங்கடிதுசெல்லுஞ்செலவினர்கடுங்கட்கூற்ற
மேலினுமிகையுண்டாயின்வெகுண்டுவென்கண்டுமீளும்
பாலினர்பகுவாய்நாகப்பல்லினும்பிற்குமால
வேலினர்வீயாவென்றிவீக்கியகழற்கால்வீரர். (கஉ)

எண்புதைத்தெழுந்தவீரரிவுளிதேர்யானைவெள்ள
மண்புதைத்தனபதாகைமாலைவெண்கவிகைபீலி
விண்புதைத்தனநுண்ணேளிவெயில்விரிந்திப்புத்தேள்
கண்புதைத்தனபோரோதைக்கடலொலிபுதைத்ததன்றே. (கங)

தேரொலிகலினப்பாய்மான்செலவொலிகொலைவெண்கோட்டுக்
காரொலிவீரரார்க்குங்கனையொலிபுனைதார்க்குஞ்சி

(அ) கசசு - வீரமாதர்மார்பிலணியுமோராடை. விசேடம். வட்டத்தோல் - கேடகம். வை - கூர்மை. பிணைத்தெய்வம் - தூர்க்கை, பெண்டெய்வமுமாம். ஆயம் - மடவார்கூட்டம்.

(கூ) ஒற்றி - விலகி.

(கo) வெங்கூற்றம் - கொடிய நமன்.

(கக) கலிய - ஓசையினையுடைய.

(கஉ) கால் - காற்று. செலவினர் - போக்கினர். பில்கு - கக்குகின்ற. ஆலவேலினர். வீடம் பூசிய வேற்படையினர்.

(கங) இவுளி-குதிரை. பீலி - பீலிக்குடை. ஒதை - சத்தம்.

வாரொலிகழற்காற்செங்கண்மள்ளர்வண்டிண்டோள்கொட்டும்
பேரொலியண்டமெல்லாம்பிளந்திடப்பெருத்தவன்றே. (கச)

பரந்தெழுபூழிபோர்ப்பப்பகலவன்மறைந்துமுந்நீர்
கரந்தவன்போன்முளைக்கங்குல்வந்திறுத்ததேய்ப்பச்
சுரந்திருணிறையமுத்தின்சோதிவெண்குடையும்வேந்தர்
நிரந்தபூண்வயிரவாளுநிறைநிலாவெறிக்குமன்னே. (கரு)

தேர்நிரைகலனுய்ச்செல்லப்பரிநிரைதிரையாய்த்துள்ள
வார்முரசொலியாய்க்கல்லவாட்கலன்மீனுய்க்கொட்பத்
தார்நிரைகவரிக்காடுநுரைகளாய்த்ததும்பவேழங்
கார்நிரையாகத்தானைக்கடல்வழிக்கொண்டதன்றே. (கசு)

கள்ளவிழ்கோதைமாதரெடுத்தெறிகவரிக்காடு
துள்ளவந்தணர்வாயாசியொருபுறந்துவன்றியார்ப்பத்
தெள்ளியமுதகீதமொருபுறந்திரண்டுவிம்ம
வள்ளுவார்குழையெம்மன்னமணித்திண்டேர்நடந்ததன்றே. (கஎ)

மீனவன்கொடியுங்கானவெம்புலிக்கொடியுஞ்செம்பொன்
மானவிற்கொடியும்வண்ணமயிற்றழைக்காடுந்தோட்டுப்
பானலங்கருங்கட்செவ்வாய்வெண்ணகைப்பசுந்தோணிம்பத்
தேனலம்பலங்கல்வேய்ந்தசெல்விதேர்மருங்கிற்செல்ல. (கஅ)

மறைபலமுகங்கொண்டேத்திவாய்தடுமாறியெய்ப்ப
நிறைபரம்பரைநீயெங்கணிருப்பர்கோன்மகளாய்வைய
முறைசெய்துமாசுதீர்ப்பாயடியனேன்முகத்துமாசுங்
குறையெனநிழற்றுந்திங்கட்கொள்கைபோற்கவிகைகாப்ப. (கக)

அங்கயலுக்கிமான்றேர்க்கணித்தொருதடந்தேரூர்ந்து
வெங்கதிர்வீயாழச்சூழ்ச்சிமேம்படுசுமதியென்போ

(கச) கலினம்-கடிவாளம். கொலைவெண்கோட்டுக்கார்-யானை. வாரொலி - மிக்கவொலி.

(கரு) பகலவன் - சூரியன். எய்ப்ப - ஒப்ப.

(கசு) கலன் - கப்பல். கல்ல - ஒலிக்க.

(கஎ) வள்ளை - வள்ளைக்கொடிபோன்ற காது.வார் - தொங்குகின்ற.

(கஅ) மயிற்றழைக்காடு - பீலிக்குடையின் மிகுதி. தோடு - இதழ். பானல் - கருங்குவளை. நிம்பம் - வேம்பு.

(கக) எய்ப்ப-இளைப்படைய.கவிகை - வெண்கொற்றக்குடை.

னங்கைதன்குறிப்புநோக்கிநாற்பெரும்படையுஞ்செல்லச்
செங்கையிற்பிரம்புநீட்டிச்சேவகஞ்செலுத்திச்செல்வாள். (உ0)

அலகிலற்கருவிச்சேனையாழ்கடலனைத்துந்தன்போன்
மலர்தலையுலகமன்றிமகபதியுலகமாதி
யுலகமும்பிறவுஞ்செல்லவுலப்பிலாவலியதாக்கித்
திலகவாணுதலாண்மன்னர்திருவெலாங்கவரச்செல்வாள். (உக)

கயபதியாதியாயவடபுலக்காவல்வேந்தர்
புயவலியடங்கவென்றுபுழைக்கைமான்புரவிமான்றேர்
பயன்மதிநுதல்வேலுண்கட்பாவையராயமோடு
கயஃலிறையுங்கொண்டுதிசையின்மேலுட்டம்வைத்தாள். (உஉ)

வார்கழல்வலவன்றேரைவலியகாலுதைப்பமுந்நீ
ரார்கலஞெப்பத்தூண்டவும்பர்கோனனிகத்தெய்திப்
போர்விளையாடுமுன்னர்ப்புரந்தரன்மிலந்ததும்பைத்
தார்விழவாற்றல்சிந்தித்தருக்கழிந்தகன்றுபோனான். (உங)

இழையிடைதுழையாவண்ணமிடையிறவீங்குகொங்கைக்
குழையிடைநடந்துமீளுங்கொலைக்கணூர்குழுவுந்தான
மழைகவிழ்கடாத்துவெள்ளைவாரணமாவுங்கோவுத்
தழைகதிர்மணியுந்தெய்வதருக்களுங்கவர்ந்துமீண்டாள். (உச)

கலிநீலத்துறை.

இவ்வாறுமற்றைத்திசைக்காவலர்யாரையும்போய்த்
தெவ்வாண்மைசிந்தச்செருச்செய்துதிறையுங்கைக்கொண்

(உ0) அங்கயனுக்கி - மீளுட்சி. மான்றேர் - குதிரைபூண்ட தேர். சுமதி - முதன்மந்திரி பெயர். நாற்பெரும்படை - சதுரங்க சேனை.

(உக) அலகில் - கணக்கற்ற. சேனை - சேனைகளை. வலியதாக்கி - வன்மையுடையதாகச்செய்து.

(உஉ) கயபதி - ஓரரசன்பெயர். வடபுலம் - வடநாடு.

(உங) உம்பர்கோன் - தேவரரசன்.

(உச) கொலைக்கணூர்குழு - அரம்பையர்கூட்டம். வெள்ளை வாரணமா - ஐராவதம். கோ - காமதேனு. மணி - சிந்தாமணி

டவ்வாறுவெல்வாளெனமூன்றரணட்டமேருக்
கைவார்சிலையான்கயிலைக்கிரிநோக்கிச்செல்வாள். (உடு)

சலிக்கும்புரவித்தடந்தேருடைத்தம்பிராட்டி
கலிக்கும்பலதூரியங்கைவரைதெய்வத்திண்டேர்
வலிக்கும்பரிமள்ளர்வழங்கொலிவாங்கிகேரே
யொலிக்கும்படிகிட்டினளூழிதோறேங்குமோங்கல். (உசு)

வானூர்கயிலைமலையான்மகடன்னைநீத்துப்
போனுள்வந்தாளென்றருவிக்கட்புனலுக்கந்நீ
ராலுவொலியாலனைவாவென்றழைஇத்தன்றேசு
தானுகையாற்றழீஇயெதிரேற்பச்சென்றாள். (உஎ)

கிட்டிப்பொருப்பைக்கிரியோடுகிரிகடாக்கி
மூட்டிப்பொருதாலெனவேமுழங்கிப்பாயப்
புட்டிற்புறத்தார்மறத்தார்கணைபூட்டுவில்லார்
வட்டித்துருமேறெனவார்த்துவளைந்துகொண்டார். (உஅ)

ஓடித்திருமாமலைகாவலரும்பரார்க்குச்
சாடிப்பணிதற்கரிதாகியநந்திபாதங்
கூடிப்பணிந்தித்திறங்கூறலுங்கொற்றவேனந்
தேடிக்கிடையானுளந்தேர்ந்தனனந்தியெந்தை. (உகூ)

வென்றிக்கணத்தைவிடித்தான்கனன்மீதுபெய்த
குன்றிக்கண்ம்போற்சுழல்கண்ணழல்கொப்பளிப்பச
சென்றிக்கனையமொழியாள்பெருஞ்சேனையோடு
மொன்றிக்கடலுங்கடலும்பொருதொத்ததன்றே. (ஈ0)

சூலங்கண்மழுப்படைதோமரசேமிபிண்டி
பாலங்கள்கழுக்கடைவாட்படைதண்டாஞ்சி

(உடு) திசைகாவலர் - திக்குப்பாலர். தெவ்வாண்மை - போராண்மை. ஆண்மை - ஆண்டன்மை. திறை - கப்பம்.

(உசு) சலிக்கும் - ஒலிக்கும்.

(உஎ) கைலை - கைலாயமானது.

(உஅ) கிட்டி - அடைந்து. வேழம் - யானை. புட்டில் - அம்புக்கூடு.

(உகூ) ஏனம் - பன்றி.

(ஈ0) கணம் - சிவகணம். இக்கு - கரும்பு.

லாலங்கவிழ்க்கின்றவயிற்படைவீசியுழிக்
காலங்கலிக்குங்கடல்போன்றகளமரார்ப்பு. (ஈக)

எறிகின்றனவோச்சுவவெய்வனவாதியாகச்
செறிகின்றனபல்படைசெந்நிறப்புண்ணீர்மூழ்கிப்
பறிகின்றனவும்பிழைக்கின்றவும்பட்டுத்தாக்கி
முறிகின்றனவுமுயன்ஞர்வினைப்போகமொத்த. (ஈஉ)

தெரிசிக்கவந்தசிலதேவர்சிறைப்புளூர்தி
வெருவிப்பறந்தவொழிந்தோர்விலங்கூர்திமானங்
கருவிப்படையாற்சிதைபட்டனகாலனூர்தி
குருதிப்புனலுக்கதுகொற்றவையுண்டதென்ன. (ஈஈ)

பொருகின்றதுகண்டுவிச்சாதரர்போகம்வீடு
தருகின்றவனேத்தொழவானெறிசார்ந்துசேரே
வருகின்றவர்வேறுவழிக்கொடுபோவரன்புக்
குருகின்றளிர்மெல்லடியாரொடுமூற்றமஞ்சா. (ஈச)

திங்கட்படைசெங்கதிரோன்படைசீற்றமேற்ற
வங்கிப்படைதீம்புனலான்படைநாரசிங்க
துங்கப்படைசிம்புணெடும்படைசூறைச்செல்வன்
வெங்கட்படைபன்னகவெம்படைமாறிவிட்டார். (ஈடு)

கொட்புற்றமராடுமிக்கொள்கையர்தம்மினந்தி
நட்புற்றவர்கைப்படைதூட்படஞானமூர்த்தி
பெட்புற்றருளவருமெங்கள்பிராட்டிவெய்ய
கட்புற்றரவிற்கணைமாரிகடேற்றிநின்ருள். (ஈசு)

கையிற்படையற்றனர்கற்படைதொட்டுவீரர்
மெய்யிற்படுகென்றுவிடுக்குமுன்வீரக்கன்னி
பொய்யிற்படுநெஞ்சுடையார்தவம்போலமாய
நெய்யிற்படுவச்சிரவேலைநிமித்துவீசி. (ஈஎ)

(ஈக) ஞாஞ்ஞில் - கலப்பை.
(ஈஉ) புண்ணீர் - சோரி.
(ஈஈ) மானம் - விமானம்.
(ஈச) விச்சாதரர் - வித்தியாதரர். ஊற்றம் - போர்வன்மை.
(ஈடு) சிம்புள் - சரபம். சூறைச்செல்வன் - வாயுதேவன்.
(ஈசு) கொட்புற்று - சூழ்ந்து. பெட்புற்றருள - விரும்ப.
(ஈஎ) கற்படை - மலையாகியஆயுதம். வீரக்கன்னி-தடாதகை.

துண்டம்படவேதுணித்தக்கணவீரர்தம்மைத்
தண்டங்கொடுதாக்கினள்சாய்ந்தவர்சாம்பிப்போ
ரண்டங்கள்சராசரம்யாவையுந்தானேயாக்கிக்
கொண்டெங்குநின்றுள்வலிகூறவரம்பிற்றுமோ. (ஈஅ)

படையற்றுவிமானமும்பற்றறவற்றுச்சுற்றுந்
தொடையற்றிகன்மூண்டெழுதோள்வலியற்றுச்செற்ற
மிடையற்றுவீரநகையற்றடலேறுபோலு
நடையற்றடைவார்நிலகண்டனனந்தியண்ணல். (ஈக)

உடையானடிதாழ்ந்திவையோதலுமோதநீத்தச்
சடையானிளவாணகைசெய்துதருமச்செங்கண்
விடையான்சிலையானிகல்வென்றிவிளக்குந்தெய்வப்
படையானெழுந்தானமராடியபாரிற்சென்றான். (சO)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேவியாகவப்பாரிடைப்பாரிடவீரரையமராடி
யோவிலாவலிகவர்ந்ததுமன்றினியுருத்தெவரெதிர்ந்தாலுந்
தாவிலாவலிகவரவுமடங்கலின்றனிப்பிணைவெனநிற்குந்
தேவியார்திருவுருவமுஞ்சேவகச்செய்கையுமெதிர்கண்டான். (சக)

ஒற்றைவீர்கழற்சரணமும்பாம்பசைத்துடுத்தவெம்புலித்தோலுங்
கொற்றவாண்மழுக்கரமும்வெண்ணீறணிகோலமுந்நுண்மார்புங்
கற்றைவேணியுந்தன்னையேநோக்கியகருணைசெய்திருநோக்கும்
பெற்றதன்வலப்பாதியைத்தடாதகைப்பிராட்டியுமெதிர்கண்டாள்.

கண்டவெல்லையிலொருமூலை மறைந்ததுகருத்திலுண்மடனச்
சங், கொண்டமைந்திடக்குனிதரமலர்ந்தபூங்கொம்பர்போலொசிந்
தொல்கிப்,பண்டையன்புவந்திறைகொளக்கருங்குழற்பாரமும்பிடர்
தாழக், கெண்டையுண்கணும்புறவடிநோக்கமண்கிளைத்துமின்னெ
னநின்றுள்.

(ஈஅ) சாம்பி - ஒடுங்கி.
(ஈக) இகல் - போர். ஏறு - இடபம்.
(சO) உடையான் - சிவபெருமான்.
(சக) ஆகவப்பார் - யுத்தபூமி. பாரிடவீரர் - பூதவீரர்.
(சஉ) அசைத்து - இறுக்கி.
(சங) ஒசிந்தொல்கி - வளைந்துதுவண்டி.

நின்றமென்கொடிக்கல்விசும்பிடையரனிகழ்த்தியதிருமாற்ற
மன்றறிந்தமூதறிவனஞ்சுமதிசீறடிபணிந்தண்ணியிக்
கொன்றையஞ்சடைக்குழகனேநின்மணக்குழகனென்றலுமன்பு
தன்றநின்றவட்பார்த்தருட்சிவபரஞ்சோதிமற்றிதுகூறும். (சச)

என்றுதொட்டுநீதிசையின்மேற்சயங்குறித்தெழுந்துபோந்தனையாமு
மன்றுதொட்டுநம்மதுரைவிட்டுனைவிடாதடித்துவந்தனமுன்னைத்
தொன்றுதொட்டநான்மறையுரைவழிவருசோமவாரத்தோரை[ன்.
நன்றுதொட்ட நாண்மணஞ்செயவருதிநின்னகர்க்குநீயேகென்ரு

என்றநாதன்மேலன்பையுமுயிரையுமிருத்தியாயஞ்சூழக்
குன்றமன்னதேர்மேற்கொடுதூரியங்குரைகடலெனவார்ப்ப
நின்றதெய்வமால்வரைகளும்புண்ணியநீத்தமுநீத்தேகி
மன்றன்மாமதுராபுரியடைந்தனன்மதிக்குலவிளக்கன்ஞள். (சசு,

மங்கைகாயகிமங்கலமெதிர்கொளவந்துவானிழிசெல்வம்
பொங்குமாளிகைபுகுந்தனளாகமேற்புதுமணத்திறந்தீட்டி [ரு
யெங்குமோலை யுய்த்தமைச்சர்மங்கல வினைக்கியைவனவமைக்கின்
றங்கண்மாநகரெங்கணுங்கடிமுரசானேமேலறைவித்தார். (சஎ)

மேற்படி - வேறு.

கன்னிதன்மணமுரசறைதலுங்கடிநகருறைபவர்களெல்லாந்
தன்னியவுவகையர்கடவுளைத்தொழுகையருடனுமுகிழ்ப்பெழப்
பன்னியதுதியினரியலெழின்மகளிரையழகுசெய்பாசென [ய்வார்.
வின்னியலெழில்வளநகரெலாஞ்செயல் வினையணிபெறவெழில்செ

கோதையொடும்பரிசந்தனக்குப்பைகளேந்தனர்வீசுவார்
சீதளமென்பனிநீர்கயேச்சிந்தினபூழியடக்குவார்
மாதருமைந்தருமிறைமகண்மன்றன்மகிழ்ச்சிமயக்கினுற் [ர்.
காதணிகுழைதொடிகண்டிகைகழல்வனதெரிகிலர்தொழில்செய்வா

(சச) மூதறிஞன் - பேரறிஞன். குழகன் - அழகன்.
(சடு) ஓரை - காலம்.
(சசு) மன்றல் - மங்கலகரமான, நெடுந்தெருவுமாம்.
(சஎ) கடிமுரசு - கல்யாணமுரசு.
(சஅ) முகிழ்ப்பெழ - குவியாகிற்ப
(சசூ) பரி - தரித்திருந்த

மங்கலமென்றெனவினவுவார்வருமதிநாளெனவுரைசெய்வார்[வார்
தங்களேயொல்லைதழீஇக் கொள்வார்தாங்கருமோகைதலைக்கொள்
திங்களினெல்லையுமாறுநாளாறுகமென்றுசெலுத்துவார்
கங்கையருங்கடிகாணவோதுடித்தனதோள்கணமக்கென்பார்(கூ0)

பித்திகைவெள்ளைபுதுக்குவார்பெட்புறுவார்களும்பெட்புறச்
சித்திரபந்திநிறுத்துவார்தெற்றிகள்குங்குமநீவுவார்
வித்தியபாலிகைமென்றழைவிரிதலைநீர்நிறைபொற்குடம்
பத்தியின்வேதிகைப்புவார்தோரணம்வாயில்பரப்புவார். (கூக)

நீளிடைமணிமறுகெங்கணுநெடுநடைக்காவணநாட்டுவார்
பாளைகொள்கமுகுசுவைக்கழைபழுக்குலவாழையொழுக்குவார்
கோளிறைகொண்டெனவாடிகள்கோத்தணிவார்மிசைகொடிநிரை
வாளரியெழுபரியடிபடமத்திகைநிரையெனவைப்பரால். (கூஉ)

பூவொடுதண்பனிசிந்துவார்பொரியொடுபொற்சுணம்வீசுவார்
பாவைவிளக்குநிறுத்துவார்பைந்தொடைபந்தரிஞற்றுவா
ராவணமென்னவயிர்ப்புறவணிமறுகெங்கணுமரதனக்
கோவையுமரகதமாலையுங்கோப்பமையாரமுந்தூக்குவார். (கூங)

அ[illegible]ந்துரமப்புவாரழன்மணியோடைமிலேச்சுவார்
க[illegible]பிவளிகழுத்தணிகாலணிகலனேதிருத்துவார்
சுடர்[illegible]ஊட்டுவார்தொடையொகவரிகடேக்குவார்
வுவெறுபெ[illegible]வமணிமங்கலதீபமியற்றுவார். (கூச)

பழையீனகலனேவெறுப்பராற்புதியனபணிகள்பரிப்பராற்
குழைபனிநீரளாகுங்குமங்குவிமுலைபுதைபடமெழுகுவார்
மெழுகியவீரம்புலர்த்துவார்விரைபகிலவைகளப்புவா
ரழகியகண்ணடிநோக்குவார்மைந்தரையாகுலமாக்குவார். (கூடு)

(கூ0) மதிநாள் - சோமவாரம்.

(கூக) பித்திகை - சுவர்.

(கூஉ) ஒழுக்குதல் - வரிசையாகக் கட்டுதல். கோள் - நவக்கிரகம். இறைகொள்ளல் - இருத்தல்.

(கூங) ஆவணம் - கடைவீதி. அயிர்ப்புற - சந்தேகிக்க. ஆரம் - முத்து.

(கூச) ஓடை - முகபடாம்.

(கூடு) கலன் - ஆபரணம்.

அஞ்சனம்வேல்விழிதீட்டுவாராடவர்மார்பிடைகாட்டுவார்
பஞ்சுகள்பாதமிருத்துவார்பரிபுரமீதுதிருத்துவார்
வஞ்சியர்தேறலருந்துவார்மருங்குறளாடவருந்துவார்
கொஞ்சியகனிமொழிகழறுவார் குழுவொடுகுரவைகள்குழறுவார்.

இன்னரமிதுனமெனச்செல்வார்இளைகெழுபாலுணர்விறலியர்
கன்னியரரசைவணங்குவார்கடிமணமெய்துகளிப்பிலு
லின்னிசையாழொடுபாடுவாரீர்த்தனதுகில்விரித்தேந்துவார்
சென்னியின்மீதுகொண்டாடுவார்தேறலுயுண்டுசெருக்குவார். ()

மன்னவர்மகளிருமறையவர்மகளிரும்வந்துபொன்மாலையைத் [ர்
துன்னினர்சோபனம்வினவுவார்தோகைதன்மணவணி நோக்குவா
கன்னிதனேவலர்வீசியகாசறைகர்ப்புரவாசமென் [ரால்.
பொன்னுறுங்கலவையின்மெய்யெலாம்புதைபடவளலுலும்போவ

அங்கனங்கருஞ்செய்தசும்பினவாடைபொதிந்தனதோடவிழ்
தொங்கல்வளைந்தனமங்கையர்துள்ளியகவரியினுள்ளன
கங்கையும்வாணியும்யமுனையுங்காவிரியும்பலதுறைதொறு
மங்கலதூரியமார்ப்பனமதமலைமேலனவருவன. (இக)

அங்கவர்மனைதொறுமணவினையணுகியதழனியெனமண்டி
புங்கவரினிதுணவறுசுவைப்போனகமடிவினைபுரிகுவா
ரிங்கடுவனபலியடிகளுக்கெனயதிகளையெதிர்பணிகுவார்
சங்கரனடியரையெதிர்கொள்வார்சபரியையெதிர்புகுரிகுவார். ()

இன்னணங்கர்செயலணிசெயவினையிலிமணமகன்மணவினைக்
கன்னியுமனையவளென்னினிக்கடிநகர்செயுமெழில்வளனையா
மென்னவரியகர்செயலெழிலினை யெனவுரைசெய்வதெவனிதன்
முன்னிறைமகடமர்மணவணிமண்டபவினைசெயுமுறைசொல்வாம்.

மேற்படி - வேறு.

கருவிவான்முகிலூர்தியைப்பொருதகாட்கலைமதிமருமாட்டி
செருவில்வாங்கியவிமானமாலகளெனத்தெய்வதவரையெல்லா

(இசு) அஞ்சனம் - மை. பரிபுரம் - காலணி.

(இஎ) தேறல் - மது.

(இஅ) காசறை - மயிர்ச்சாந்து.

(இக) தசும்பு-குடம். தொங்கல்-மாலை. தூரியம் - வாச்சியம்.

(சுo) தழனி - ஆரவாரம். சபரியை - பூசை.

(சுக) இணையிலி - ஒப்பிலி. தமர் - உரிமைச் சுற்றத்தினர். அவர் அமைச்சராதியர்.

மருவியநகர்வையகம்நிறைமடமகடனைக்காண்பான்
றருவிகின்றெனநட்டனரெட்டிவான்றெருவிலெடுத்தேர்கள். ()

பளிக்கினேழுயர்களிறுசெய்தமைத்தபொற்படியதுபசுஞ்சோதி
தெளிக்குநீலத்திளிகணிரைமணித்தெற்றியதுற்றோர்சாய்
வெளிக்குளாடியவோவியப்பாவைபோன்மிளிர்பளிங்காற்சோதி
தளிர்க்கும்பித்தியதிடையிடைமரகதச்சாளரத்ததுமாதோ. (சுகூ)

பல்லுருச்செய்தபவனக்காலாயிரம்படைத்ததிந்திரநீலக்
கல்லுருத்தலேபோதியதாடகக்கவின்கொளுத்தரமேல
தல்லுருக்கியசெம்மணித்துலாத்ததாலமுதுடற்பசுந்திங்கள்
வில்லுருக்குகன்மாடமதாகியவேள்விமண்டபஞ்செய்தார். (சுசு)

மூத்திற்பாலைசெய்தவிர் மரகதத்திணன் மொய்த்தபாசிலைதுப்
பின், கொத்திற்றீம்பழம் வெண்பொளற்கோழரை குயின்றபூகமுந்
துப்பின், ரூத்திற் றூங்குபூச் செம்பொளற் பழுக்குலை தூக்கிப்
பொன்னுற்றண்டு, வைத்துப்பாசொளி மரகதநெட்டிலை வாழையு
நிரைவித்தார். (சுகூ)

பித்திமாதவிசண்பகம்பாதிரிபிறவுமண்டபஞ்சூழப், பத்தியாவ
ளர்த்தளிகள்வாய்த்திறந்துபண்பாடவின்மதக்காலத், தத்தியாய்
மணங்கவர்ந்தீசனாரந்தொறுந் தவழ்ந்தொழுகிளந்தென்ற, றித்தி
யாநிற்குமதுத்தளிர்த்தளித்திடச்செய்தனருய்யானம். (சுசு)

வேள்விச்சாலையும் வேதியுங்குண்டமு மேகலையொடு தொன்
னூற், கேள்விச்சார்பினுற் கண்கெகண்ணடி விடைகிளர்சுடர்சிவற்ச,
நீள்விற்சாமரம்வலம்புரிசுவத்திக நிறைகுடமெனவிட்டு, வாள்விட்
டோங்குமங்கலத்தொழில்செய்பொறிவகையினுணிருமித்தார். ()

மணங்கொள்சாந்தொடுகுங்குமப் போதளாய் மான்மதம்பனி
நீர்தோய்த், திணங்குசேறுசெய்திரு நிலந்தடவிவா னிரவிமண்டல

(கூஉ) மருமாட்டி - வழித்தோன்றல். சந்ததி என்றுபொருள்.

(சுகூ) சாளரம் - சன்னல்.

(சுசு) ஆடகம் - பொன்.

(சுகூ) துப்பின்கொத்து - பவளக்கொத்து. வெண்பொன் - வெள்ளி. பூகம் - பாக்குமரம்.

(சுசு) உய்யானம் - பூந்தோட்டம்.

(சுஎ) மேகலை - ஓமகுண்டத்தின் வெளிவேலியம்.

நாணப், பணங்கொணுகமாமணிவிளக் கிருகையும் பாவைகளெடுத் தேந்தக், கணங்கொடாரகை யெனநவமணி குயில் கம்பலம்விதா னித்தார். (சுஅ)

செம்பொற்கோயின்முன்சேண்டொடுகொவணக் திசையெலாம்விழு ங்கசெய்,தம்பொற்பாலிகைப்பாண்டில்வாய்முளைதெளித்தம்புயத் தவளுதி, யும்பர்க்கேற்றபொற்கம்பலமேல்விரித்துள்ளுறத்தனிசிட் டித்,தும்பைத்தாழ்சடையான்றமர்க்காதனஞ்சூழவிட்டதனுப்பண்.

கற்பகந்தருவயிரவாளரிப்பிடர்கதுவப்பொற்குறடேற்றி
யெற்பகிந்துகிராற்குடஞ்சதுரமாவியற்றியவெருத்தத்தூண்
விற்பமெம்பளிக்குத்திரந்துப்பிலல்விடங்கமேனிலமூன்றுப்
பொற்பநூல்வழிவிமானம்பன்மணிகளாற்பொலியச்செய்துள்ளாக.

அங்கமாறுமேகால்களாய்முதலெழுத்தம்பொற்பீடிகையாகித்
துங்கநான்மறைநூல்களேகித்திலந்தொடித்தசைதாம்பாகி
யெங்கணையகனெம்பெருமாட்டியோடிருப்பதற்குருக்கொண்டு
தங்கிஞலெனநவமணிகுயின்றபொற்றவிசதுசமைத்திட்டார். (எக)

புரந்தரன்றருகற்பகம்பொலந்துகில்பூண்முதலியநல்கச்
சுரந்தரும்பெறலமுதமைவகையறுசுவையுணுமுதலாகப்
பரந்தெய்வவான்பயப்பச்சிந்தாமணிபற்பலவுஞ்சிந்தித்
திரந்துவேண்டுவதரத்தரவீட்டினிரிந்திரநகர்நாண. (எஉ)

தென்னர்சேகரன்றிருமகடிருமணத்திருமுகம்வரவேற்று [றி
மன்னர்வந்தெதிர்தொழுதுகைக்கொண்டுதம்மணி முடிமிசையேற்
யன்னவாசகங்கேட்டனர்கொணர்ந்தவர்க்கருங்கலந்துகினல்கி
முன்னரீர்த்தெழுகளிப்புறமனத்தினுமுந்தினர்வழிக்கொள்வார். ()

கொங்கர்சிங்களர்பல்லவர்வில்லவர்கோசலர்பாஞ்சாவர்
வங்கர்சோனகர்சீனர்கள்சாளுவர்மாளவர்காம்போச
ரங்கர்மாகதராரியர்கேரியரவந்தியர்வைதர்ப்பர்
கங்கர்கொங்கணர்விராடர்கண்மராடர்கள்கருநடர்குருநாடர். ()

(சுஅ) இருகை - இருபுறம். தாரகை - நட்சத்திரம்.

(சுக) காவணம் - மணப்பந்தர். பாண்டில் - வட்டவடிவு. காப் பண் - நடு.

(எ0) வாள்அரி-ஒளிபொருந்தியசிங்கம். விடங்கம் - முகடு.

(எக) முதலெழுத்து - அகரம். குயின்ற - செய்த.

(எஉ) பொலந்துகில் - பொன்னுடை. ஈட்டினர்-குவித்தனர்.

(எங) திருமுகம் -அரசமுத்திரையோலை.

கலிங்கர்சாவகர்கூவிளரொட்டியர்கடாரர்கள்காந்தார், குலிங்கர்கேகயர்விதேகர்கன்பெளரவர்கொல்லர்கள்கல்யாணர்,தெலுங்கர்கூர்ச்சரர்மச்சர்கண் மிலேச்சர்கள் செஞ்சையர் முதலேனைப், புலங்கொண்மன்னருந்துறை தொறுமிடைந்துபார் புதைபடவருகின்றார். (எடு)

இத்தகைப்பலதேய மன்னவர்களு மெண்ணிடம் பெருதீண்டிப், பைத்தவாழிபோ னிலமகண்முதுகிறப் பரந்ததானையராகித், தத்தநாட்டுள பலவகை வளனெடுந் தழீஇப்பல தெறிதோறு, மொய்த்துவந்தனர்செழியர்கோன்றிருமகண் முரசதிர்மணமூதூர்.

வந்தகாவலருழையர் சென்றுணர்த்தினர்வருகெனவருகுய்ப்பச்
சந்தவாளரிப்பிடரணைமீதறந்தழைத்தருள்பழுத்தோங்குங்
கந்தநாண்மலர்க்கொம்பினைக்கண்டுகண்களிப்புறமுடித்தாமஞ்
சிந்தவீழ்ந்தருள்சுரந்திடத்தொழுதுபோய்த்திருந்துதம்மிடம்புக்கார்

வரைவளங்களும்புறவினில்வளங்களுமருதத்தண்பணைவேலித்
தரைவளங்களுஞ்சலதிவாய்நடைக்கலந்தருவளங்களுமீண்டி
யுரைவரம்பறமங்கலம்பொலிந்ததிவ்வுரினிநால்வேதக்
கரைகடந்தவன்றிருமணஞ்செயவருகாட்சியைப்பகர்கின்றேன். ()

எகநாயகிமீண்டபின்ஞாட்பிகந்திரிதகிரியெய்தி
நாகநாயகமணியணிசுந்தரநாயகனுயிர்க்கெல்லாம்
போகநாயகனுகிப்போகம்புரிபுணர்ப்பறிந்தருணந்தி
மாகநாயகன்மாலயனுருத்திரர்வரவின்மேன்மனம்வைத்தான் (எசு)

சங்குகன்னனேயாதியகணதிபர்தமைவிடுத்தனனன்னர்
செங்கணேற்றவர்மாலயன்முதற்பெருந்தேவர்வான்பதமெய்தி
யெங்கணையகன்றிருமணச்சோபனமியம்பினுரதுகேட்டுப்
பொங்குகின்றபேரண்புபின்றள்ளுறப்பொள்ளெனவருகின்றார். ()

அஞ்சுகோடியோசனைபுகைந்திருமடங்கழன்றவர்தமைப்போலீ
ரஞ்சுதீயுருத்திரர்புடையுடுத்தவரழற்கணற்பூதங்க

(எசு) பைத்த - பசுமைநிறம் வாய்ந்த. ஆழி - கடல்.
(எஎ) முடித்தாமம் - மகுடமாலை.
(எஅ) கலதி - கடல்.
(எகூ) ஞாட்பு - போர்.
(அ0) பொள்ளென - விரைந்து.

ளஞ்சுநூற்றுருத்திரரண்டத்துச்சியரரியயன்முதற்றேவ
ரஞ்சுமாணையுமாற்றலும்படைத்தவர்குறட்படைவீரர். (அக)

புத்தியட்டகர்நாலிருகோடிமேற்புக்ப்பெய்தநரகங்கள்
பத்திரட்டியுங்காப்பவர்பாரிடப்படையுடைக்கூர்மாண்டர்
சத்தியச்சிவபரஞ்சுடருதவியசதவுருத்திரரன்னு
ருய்த்தளித்தவீரைம்பதுகோடியருருத்திரர்கணநாதர். (அஉ)

பட்டகாரிவாயரவணிபவர்பசுபதியுருத்திராதி
யட்டமூர்த்திகண்மேருவினவிர்சுடராட்டகர்தோடேந்து
மட்டருமலர்மகன்செருக்கடங்கிடமயங்கியவிதிதேற்ற
நிட்டையாலவனெற்றியிற்றோன்றியநீலலோகிதநாதர். (அங)

பாலமேற்றசெந்தழல்விழியுருத்திரர்பதினெருபெயர்வாகைச்
சூலமேற்றகங்காளகபாலியர்துரகதநெடுங்காரி
நீலமேற்றபைங்கஞ்சுகப்போர்வையினெடியவர்நிருவாணக்
கோலமேற்றவரெண்மர்ஞாளிப்புறங்கொண்டகேத்திரபாலர். (அச)

செய்யதாமரைக்கண்ணுடைக்கரியவன்செம்மலர் மணிப்பீடத்
தையன்வாசவனுதியெண்டிசைப்புலத்தமரரெண்வசுதேவர்
மையில்கேள்விசாலேழெழுமருத்துகண்மருத்துவரிருவோர்வான்
வெய்யவாள்வழங்காறிரண்டருக்கரோர்வெண்சுடர்மதிச்செல்வன்.

கையுங்கால்களுங்கண்பெற்றுக்கதிபெற்றகடும்புவீமுனிச்செல்வன்
பையரார்முடிப்பதஞ்சலிபாற்கடல்பருகிமாதவன்சென்னி
செய்யதாள்வைத்தசிறுமுனிருறுமுனிசிவமுணர்சனகாதி
மெய்யுணர்ச்சியோர்வாமதேவன்சுகன்வியாதனுரைதன்மன்னே. ()

எழுவரன்னையர்சித்தர்விச்சாதரரியக்கர்கின்னரர்வேத
முழுவரம்புணர்முனிவர்யோகியர்மணிமுடித்தலைப்பலராகர்

(அக) கூஷ்மாண்டர் என்பது - கூர்மாண்டர் என்றுயிற்று. நூறுருத்திரர். சதவுருத்திரர்.

(அஉ) காரி - விடம். ஆடகர் - ஆடகேசவுருத்திரர். நீலலோகிதம் - கருமைகலந்தசெம்மை.

(அச) பாலம் - நெற்றி. பதினெருபெயர் - ஏகாதசவுருத்திரர் கங்காளம். கழியுடலின்முழுவெலும்பு - உண்கலமுமாம்.

(அஎ) ஐயன் - பிரமன் - வாசவன் - இந்திரன். வெய்யவாள் - சுரகையாணவொளி.

(அசு) செய்யதாள்வைத்த சிறுமுனி - உபமன்னியன்.

வழுவில்வான் றவவலியுடைநிருதர்வாள்வலியுடையசுரேசர்
குழுவொடும்பயில்பூதவேதாளர்வெங்கூளிகளரமாதர். (அஎ)

ஆண்டிரேடையனம்பருவந்திங்களாதிரண்டிருபக்க
மீண்டுமைம்பொழுதியோகங்கள்கரணங்களிராப்பகலிவற்றோடும்
பூண்டநாழிகைகணமுதற்காலங்கள்பொருகடனதிதிக்கு
ணீண்டமால்வரைதிக்கயமேகமின்னிமிர்ந்தவைம்பெரும்பூதம்.(அஅ)

மந்திரம்புவனங்கடத்துவங்கலேவருணங்கள்பதம்வேதந்
தந்திரம்பலசமயநூல்புறந்தழீஇச்சார்ந்தநூறருமாதி
முந்திரங்கியசதுர்விதஞ்சரியையேமுதலியசதுட்பாத
மிந்திரங்குநீர்முடியவரடியவரிச்சியாவெண்சித்தி. (அக)

ஆயிரங்கடலனையவாய்ப்பரந்தெழுமாயிரமனிகத்து
ளாயிரங்கதிரனையராயுருத்திரர்ந்தரத்தவரண்ட
மாயிரந்தகர்பட்டெனத்துந்துபியாயிரங்கலந்தார்ப்ப
வாயிரஞ்சதகோடியோசனைவழியரைக்கணத்திடைச்செல்வார். ()

சித்தந்தேர்முனிவேந்தருந்தேவருஞ்சிவனுருத்தரித்தோருந்
தத்தந்தேர்முதலூர்தியர்வார்திகழ்சந்தனமணிக்கொங்கைக்
கொத்தந்தேமலர்க்குழன்மனையாரொடுங்குளிர்விசும்பாரூர்சென்
றத்தந்தேரிடையாள்பங்கனணிவரைக்கணியராய்வருகின்றார். ()

இழிந்த வூர்தியர்பணிந் தெழுயாக்கைய ரிறைபுகழ் திருநாம,
மொழிந்தநாவினர்பொடிப் பெழுமெய்யினர் முகிழ்த்தகைமுடியே
றக், கழிந்தவன்பினர்கண்முதற் புலங்கட்குங் கருணைவான்சுவையூ
றப், பொழிந்தவானந்தத் தேனுறை திருமலைப்புறத்து வண்டென
மொய்த்தார். (கூஉ)

(அஎ) அண்ணையர் - சத்தமாதர். நிருதர் - அசுரசாதியிலொரு பிரிவினர்.

(அஅ) அயனம் - உத்தராயனதட்சணையனங்கள். பருவம்-கார் முதலியவிருதுக்கள். திங்கள் - மாதம். இருபக்கம் - சுக்கிலகிருட்டினபக்கம்.

(அக) சதுட்பாதம் - நாலுபாதம்.

(கூ0) அந்தரத்தவர் - ஆகாயவாசிகள்.

(கக) சிவனுருத்தரித்தோர்-சிவசாரூபிகள். விசும்பு-ஆகாயம்.

(கூஉ) கழிந்த - மிகுந்த.

விரவுவானவர்நெருக்கறவொதுக்குவான்வேத்திரப்படையோச்சி
யரவுவார்சடைநந்தியெம்பிரானவரணிமணிமுடிதாக்கப்
பரவுதூளியிற்புதைபடுகையிலையம்பருப்பதம்பகல்காலு
மிரவிமண்டலத்தொடுங்குநாளொடுங்கியவிந்துமண்டலமானும். ()

வந்தவானவர்புறநிற்பநந்தியெம்வள்ளலங்குள்ளெய்தி
யெந்தைதாள்பணிந்தையவிண்ணவரெலாமீண்டிளுரெனவீண்டித்
தந்திடென்னவந்தழைத்துவேத்திரத்தினுற்றராதரந் தெரிந்துய்ப்ப
மூந்திமுந்திவந்திறைஞ்சினுர்சேவடிமுண்டகமுடிசூடி. (கச)

தீர்த்தன்முன்பணிந்தேத்துகின்றுர் களிற்சிலர்க்குத் தன்றிரு
வாயின், வார்த்தைநல்கியுஞ்சிலர்க்கருண் முகிழ்நகை வழங்கியுஞ்சி
லர்க்குக்கண், பார்த்துநீண்முடிதுளக்கியுஞ்சிலர்க்கருட்பரிசிறந்தெ
ழுந்தண்டங், காத்தகண்டனேர்மண்டபத்திடைபுக்குக் கடிமணக்க
வின்கொள்வான். (கடு)

ஆண்டநாயகன்றிருவுளக்குறிப்புணர்ந்தளகைநாயகனுள்ளம் [று
பூண்டகாதன்மேற்கொண்டெழுமன்புந்தன்புனித மெய்த்தவப்பே
றீண்டவாங்கணிந்தெண்ணிலாமறைகளுமிருவருமுனிவோருங்
கூண்டருந்திருமேனியைத்தன்கையாற்றீண்டிமங்கலஞ் செய்வான்.

பூந்துகிற்படாங்கொய்சகத்தானைபின்போக்குகோவணஞ்சாத்தி
யேந்திரட்டைநாண்பட்டிகையிறுக்கிவண்டிரைக்குநாண்மலர்க்கு
வேய்ந்துகற்பகப்புதுமலர்ச்சிகழிகைமிலைந்துநீறணிமெய்யிற் [ஞ்சி
சாந்தமாண்மதந்தண்பனிநீரளாய்த்தடக்கையான்மட்டித்தான். ()

இரண்டுசெஞ்சுடர்தழைந்திருந்தாலெனவிணைமணிக்குழைக்
காதிற், சுருண்டதோடுபொற்குண்டலந்தினியிருடீரந்துதோட்புற
ந்துள்ள, மருண்டதேவரைப்பரமென மதிப்பவர்மையல்வல்லிருண்

(கஙு) வேத்திரப்படை - பிரம்பாயுதம்.

(கச) தராதரம் - தாரதம்மியம். சேவடி முண்டகம் - திருவடித்தாமரை.

(கடு) தீர்த்தன் - சிவபெருமான்.

(கக) ஆண்டநாயகன் - சிவபெருமான். அளகை நாயகன் குபேரன்.

(ஓ) மட்டித்தான் - பூசினன்.

மான, விருண்டகண்ட மேன்முழுமதிகோத்தென்வினைத்தகண்டி
கைசாத்தி. (கூஅ)

* வலங்கிடந்தமுந்நூல்வரையருவியின்வயங்குமார்பிடைச்சென்
னித், தலங்கிடந்தவெண்டிங்களூற்றமு தெனத்தரளமாலிகைசாத்
தி, யிலங்கிடந்தமாலிகைப்பரப்பிடையியைத் திருண்முகம்பிளக்
தாரக், கலங்கிடந்த பாற்கடன் முளைத்தெழு மிளங் கதிரெனக்
கவின்செய்து. (கூக)

திசைகடந்தநாற்புயங்களிற்பட்டிகைசேர்த்துவாளெறிக்குந்தோ
ணசைகடந்தநல்லார்மனங்கவர்ந்துயிர்நக்கவங்கதஞ்சாத்தி
யசைகடங்கலுழ்வாரணவுரிவைநீத்தணிகொளுத்தீயம்பெய்
திசைகடந்தமந்திரபவித்திரமெடுத்தெழில்விரலுழைவித்து. (க00)

உடுத்தகோவணமிசைப்பொலந்துகிலசைத்துரகமைந்தலைநால[ந்தி
விடுத்தபோல்வெயின்மணித்தலைக்கொடுக்குமின்விட விருபுறந்தாக்
கொடுத்ததார்புயந்தூக்கிநூபுரங்கழல்சொற்பதங்கடந்தன்பர்க்
கடுத்ததாளிலிட்டிருநிதிக்கோமகனருந்தவப்பயன்பெற்றான்.(கoக)

செங்கண்மாலயனிந்திரன்முதற்பெருந்தேவர்க்கும்யாவர்க்கு,மங்க
லந்தருகடைக்கணையகலுரு மங்கலம்புனைந்தான்போற், சங்கை
கொண்டுகும்போதரன்முதுகின்மேற் சரணம்வைத் தெதிர்போந்த
துங்கமால்விடைமேற்கொடுநடந்தனன்சுரர்கள்பூமழைதூர்த்தார்.

அந்தரத்தவரந்தரதுந்துபியைந்துமார்த்தனர்சூழ
வந்தரக்கருமியக்கரும்பூதருமங்கலவியங்கல்லக்
கொந்தலர்க்கருங்குழலரமடந்தையர்கொளிவல் விஞ்சையர்தாளந்
தந்தசைத்திடமலர்ந்தபூங்கொம்பர்போற்சாய்ந்தசைந்தனராட. ()

(கூஅ) சுருண்டதோடு-பொன்னோலை. குண்டலம் - மகரகுண்
டலம். மான - ஒப்ப. இணைத்தகண்டிகை - மகர கண்டிகை.

(கூக) ஊற்றமுது - ஒழுக்கிய அமுது. தரளமாலிகை - முத்து
வடம்.

(க00) பட்டிகை - தோளிலணியு மோராபரணம்.

(கoக) கொடுக்கு - இடையிற்கட்டித் தொங்கவிட்டவாடை
கொய்சகமுமாம்.

(கoஉ) கும்போதரன் - ஒரு பூதவீரன்பெயர்.

(கoங) அந்தரதுந்துபி - தேவவாத்தியம். கொளி -

துங்கமாயிரக்கருவியாயிரமலைத்துங்கிருண்முழைதோறுஞ்
சிங்கமாயிரம்வாய்திறந்தார்த்தெனச்சிரங்களாயிரத்திண்டோ
ளங்கமாயிரமாயிரமுடையவலியிரமுகந்தோறுஞ்
சங்கமாயிரமாயிரமாயிரந்தடக்கையும்பிடித்துள்ள. (८०ச)

போக்குமாயைவன்புணர்ப்பையுமிருண்மலப்புணர்ப்பையுங்கடந்தெ
காக்குநாயகனருச்சனைவிடாதருட்கதியடைந்துளவாணன் [ம்மைக்
றூக்குநேர்படவாயிரங்கரங்களாற்றொம்மெனமுகந்தோறுந்
தாக்கவேறுவேறெழுகுடமுழாவொலிதடங்கடலொலிசாய்ப்ப. ()

முனிவரஞ்சலிமுகிழ்த்தசெங்கையினர்மொழியுமாசியருள்ளங்
கனிவரும்பியவன்பினர்பரவவுட்கருத்தொருவழிக்கொண்டோர்
துனிவருங்கணநாதர்கொட்டதிர்கரத்தினையினர்மழைபோலப்
பனிவருங்கணராடியதாளினர்பாடுநாவினரேத்த. (८०சு)

இந்திரன்மணிக்களாஞ்சிகொண் டொருமருங்கெய்த மெல்லிலைவா
சந்,தந்திலகுபொன்னடைப்பைகொண்டீசனேர்சார்வரமருத்துக்
கோ,வந்திரங்கொலியாலவட்டம்பணிமாறவாரழற்றூபந்
தந்துநேரநீர்க்கடவுள்பொற்கோடிகந்தாமரைக்கரந்தூக்க. (८०எ)

நிருதியாடிகொண்டெதிர்வரவடிக்கடிநிமுகந்தளகைக்கோன்
கருதியாயிரஞ்சிதறிடத்தண்டிநன்காஞ்சுகவினைசெய்யப்
பருதியாயிரம்பணடவியுரகரும்பன்மணிவிளக்கேந்தச்
சுருதிநாயகன்றிருவடிமுடியின்மேற்சுமந்துபின்புறஞ்செல்ல. ()

கங்கைகாவிரியாதியநவநதிக்கன்னியர்குளிர்தூங்கப்
பொங்குவார்திரைக்கொழுந்தெனக்கவரிகள் புரட்டவெண்பிறைக்
துங்கவாளெயிற்றிருளுடற்குழிவிழிச்சுடரழற்செம்பங்கிச் [றீற்றுத்
சங்கவார்குழைக்குறியகுண்டோதரன்றண்மதிக்குடைதாங்க. ()

(८०ச) துங்கமாய்-மிகுதியாக. இரங்குஅருவி-முழங்குமருவி. தூங்கிருள் - தங்கிய இருள்.

(८०டு) வாணன் - வாணாசூரன். தூக்கு - பாட்டு. நேர்பட - இசைய.

(८०சு) பனி - தூளி. கணர் - கண்ணினையுடையர்.

(८०எ) ஈசன்-ஈசானன். மருத்துக்கோ-வாயுதேவன். அழல்-அக்கினிதேவன். கோடிகம் - பூந்தட்டு.

(८०அ) தண்டி - ஒருகணநாதன்.

(८०கூ) குண்டோதரன் - கணநாதரிலொருவன்பெயர்.

இடிக்கும்வானுருமேறுயர் நெடுங்கொடியெனவெண்கொடி ஞால, முடிக்குமூழிகாளுளர்கடுங்காலெனமூச்செறிவிடாகாக், துடிக்கவாய்விடுமுவணவண்கொடிமுதற்சூழ்ந்துசேவகஞ்செய்யுங், கொடிக்குழாத்தினுட்கொடியரசாய்விடைக்கொடிபுடைபெயர்ந்தாட.()

கண்ணுதற்பிரான்மருங்கிருகடவுளர்கப்புவிட்டெனத்தோன்றும்
வண்ணமுத்தலைப்படையெடுத்தொருகுடவயிறுடைப்பெரும்பூதம்
பண்ணவப்பதினெண்படைக்கலமுந்தன்பக்கமாச்சேவிப்ப [க.
வண்ணன்முச்சுடர்முளைத்தொருவரைகடந்தனையதோர்மருங்கெய்

பந்தரான்மறைப்பொருட்டிரட்டெனவடபாடல்செய்தெதிர்புட்ப
தந்தனைத்தவானுயிருணவுருத்தெழுதழல்விடத்தெதிர்நோக்கு
மந்தமாதியிலானிழல்வடிவமாயாடியினிழல்போல
வந்தசுந்தரன்சாத்துநிறைந்திருமாலையுமெடுத்தேந்த. (ககஉ)

அன்னத்தேரினனயன்வலப்பாங்கருமமாவலிகவர்சேன, வன்னத்தேரினன்மாலிடப்பாங்கருமலர்க்கரங்குவித்தேத்தப், பொன்னத்தேமலர்க்கொன்றையான்வெள்ளியம்பொருப்பொடுமெழீ இப்போந்தா, லென்னத்தேரணி மதுரைமாநகர்ப்புறத்தெய்துவானவ்வே லை. (ககங)

மேற்படி - வேறு.

தேவர்கடேவன்வந்தான்செங்கண்மால்விடையான்வந்தான்
மூவர்கண்முதல்வன்வந்தான்முக்கணெம்பெருமான்வந்தான்
பூவலரயன்மால்காணப்பூரணபுராணன்வந்தான்
யாவையும்படைப்பான்வந்தானென்றுபொற்சின்னமார்ப்ப. (ககச)

பெண்ணினுக்கரசிவாயிற்பெருந்தகையமைச்சரேனை
மண்ணினுக்கரசர்சேனைமன்னவர்பிறருமீண்டிக்

(கக0) இடிக்கும் - இடிக்கின்ற. வான் - மேகத்திலுள்ள. உருமேறு - பேரிடி. இடிக்கொடி, இந்திரனது. எனினம் - அன்னம். உவணவன்கொடி - கருடனுகியவளவியகொடி. விடை - இடபம்.

(ககக) படைக்கலம் - ஆயுதம்.

(ககஉ) பந்தம் - தேர். புட்பதந்தன் - ஒருமுனிவன்பெயர். சுந்தரன் - ஆலாலசுந்தரன்.

(ககங) சேனம் - கருடன்.

(ககச) மால்விடை - மூவகைவிடைகளுளொன்று.

கண்ணினுக்கினியான் றன்னைக்கண்டெதிர்கொண்டிதாழ
விண்ணினுக்கரசனாரின்வியத்தகுநகரிற்புக்கான். (ககஞ)

முகிறவழ்புரிசைமூதூர்முகப்பெருவாயினீங்கி
யகிறவழ்மாடவீதிவலம்படவேணவாளுக
நகிறழைபொலங்கொம்பன்னநன்னகர்மகளிரம்பொற்
றுகிறழைமருங்குலாயத்தொகைபுறந்தழுவச்சூழ்ந்தார். (ககசு)

தமிழ்முதற்பதினெண்டேத்துமகளிருந்தாருநாட்டி
னமிழ்தமன்னவருமுல்லையம்புயங்குமுதநீலங்
குமிழ்றுங்கோங்குகாந்தள்கோழிணரசோகம்வாச
மூமிழ்தரமலர்ந்தருந்தவனமெனவொருங்குமொய்த்தார். (ககஎ)

எம்மைநீர்விடுதிரேயோவென்பபோற்கலேயுஞ்சங்கும்
விம்மநாண்மடனுமுங்கணெஞ்சுடைவெளியாருக
வும்மைநீத்தோமென்தோவுரைத்தனமுரைத்தோமென்று
தம்மைநூபுரங்கால்பற்றித்தடுப்பபோலார்ப்பச்சென்றார். (ககஅ)

கடியவிழ்கமலக்காடுபூத்ததோர்கருணைவாரி
யடிமுதன்முடியீறுகமலர்விழிக்குவளைசாத்திக்
கொடியசெம்பதுமப்போதுகுழன்மிசைச்சூடுவார்போற்
றொடியணிகரங்கள்கூப்பித்துதியெனவினையசொல்வார். (ககக)

நங்கையென்னேற்றுள்கொல்லோநம்பியைத்திளைத்தற்கென்பார்
மங்கையைமணப்பானென்னேவள்ளலுநோற்றனென்பா
ரங்கடிமதுரையென்னேவாற்றியதவந்தானென்பா
ரிங்கிவர்வதுவைகாண்பானென்னைநாநோற்றேமென்பார். (கஉ0)

தென்னவன்வருந்திமேனாட்செய்தவப்பேறுப்பெற்ற
தன்மகள்வதுவைகாணத்தவஞ்செய்தானிலனேயென்பார்

(ககடு) சேனைமன்னவர் - சேனைபதிகள்.

(ககசு) புரிசை - மதில். பெருவாயில் - கோபுரவாயில். நீங்கி-கடந்து.

(ககஎ) தாருகாடு - கற்பகமரங்களையுடையதேவகாடு. இணர்-[கொத்து.

(ககஅ) விம்ம - ஒலிக்க.

(ககக) தொடி - வளையல்.

(கஉ0) திளைத்தல் - கலத்தல்.

கன்னிதனழகுக்கேற்றவழகனிக்காளையென்பார்
மன்னவனிவனேயன்றிவேறிலமதுரைக்கென்பார். (கஉக)

நங்கைதன்னலனுக்கேற்பநம்பியைத்தந்ததிந்தத்
துங்கமாமதிநூல்வல்லசுமதிதன்சூழ்ச்சியென்பா
ரங்கவடவப்பேறென்பாரண்ணைதன்கன்னிக்கன்றி
யிங்கிவன்மருகனுகவெத்தவமுடையாளென்பார். (கஉஉ)

பூந்துகிலெறிப்பர்சூழ்வர்புணர்முலையலைப்பர்பூசு
சாந்தினையுருப்பர்நாணந்தலைக்கொண்டார்போலச்சாய்வர்
கூந்தலையவிழ்ப்பர்வாரிக்கூட்டுவர்முடிப்பர்மேனி
மாந்தளிரெனுமாரன்வாளிகள்புதையச்சோர்வார். (கஉங)

தண்ணளியொழுக்கஞ்சார்ந்தருணத்தினைச்சார்ந்துமிந்த
வண்ணமென்மலர்களென்னேவாளியாய்த்தைத்தவென்பார்
கண்ணறுகூந்தல்வேய்ந்தகடியவிழ்நீலத்தாரும்
வெண்ணகையரும்புமுல்லைத்தாமமும்வெறுத்துவீழ்ப்பார். (கஉச)

விம்மிச்செம்மாந்தகொங்கைமின்னனூர்சிலர்வீற்காமன்
கைம்மிக்கசேனையேறுண்கெலங்கியமயக்காற்றங்கண்
மைம்மிக்கநெடுங்கண்மூரல்வதனமுமவனம்பென்றே
தம்மிற்றம்முகத்தைநோக்கார்தலையிறக்கிட்டுச்செல்வார். (கஉஞ)

பற்றியபைம்பொன்மேனிப்பசப்பதுதேரூரண்ண
லொற்றைமால்விடையின்மேற்கொண்டிருந்துமம்முளத்துமேவப்
பெற்றனமிதென்கொன்மாயம்பேதைமீர்பெருமானீண்ட
கற்றைவார்சடைப்பூங்கொன்றையிதுவன்றோகாண்மினென்பார்.

திங்களென்றெழுந்துநம்மைச்சுடுவதென்செந்தீயென்பார்
புங்கவன்சென்னிமீதுங்கிடப்பதேபோலுமென்பா

(கஉக) வதுவை - திருமணம். காளை - வாலிபன்.

(கஉஉ) நங்கை - பெண்ணிற்சிறந்தாள். நம்பி - ஆணிற்சிறந்தோன்.

(கஉங) நெகிழ்ப்பர் - தளர்த்துவர்.

(கஉச) தண்ணளியொழுக்கம்-சீவகாருணியவொழுக்கம். குளிர்ந்தவண்டின் வரிசை.

(கஉஞ) செம்மாந்த - இறுமாந்த.

(கஉசு) பசப்பு - பசலைநிறம்.

ரங்கவற்கிந்தவெப்பமிலைகொலென்றயிர்ப்பாராற்றக்
கங்கைகீர்சுமந்தானென்பாரதனையுங்காண்மினென்பார். (கஉஎ)

கலையொணம்போக்கிக்கருத்தொவெண்ணம்வேரு
யுலையொடுமெழுகிட்டென்னவுருகுகண்ணீராகிக்
கொலையொடுபையில்வேற்கண்ணுர்குரிசிறன்பவனிநோக்கி
யிலையொடுமெதியஞ்சுமையன்மெய்யன்பரொத்தார். (கஉஅ)

நட்டவர்க்கிடுக்கணெய்தநன்றிகொன்றவர்போற்கையில்
வட்டவாய்த்தொடியுஞ்சங்குமருங்குசூழ்கலையுநீங்க
விட்டபொற்சிலம்பிட்டாங்கேநன்றியினிகவார்போற்கா
லொட்டியேகிடப்பநின்றருருத்தபூங்கொம்பரன்னார். (கஉக)

பின்னருவேற்கணுளோர்விளங்கிழைவிடைமேலியன்
புன்னகைப்போதுநோக்கப்போதுமுப்புரமும்வேனின்
மன்னவன்புரமுஞ்சுட்டதல்லவோகெட்டேன்வாளா
வின்னையைசுடாதுபோமோவேழையேன்புரமுமென்றாள். (கஙo)

உழைவிழியொருத்திதன்கணுருவெளியாகித்தோன்றுங
குழகனேயிரண்டுசெம்பொற்கொங்கையுமொன்றுய்வீங்கத்
தழுவுவாளுற்றங்காணுடைமுலையிரண்டேயாகி
யிழையிடைகிடக்கநீங்கியிருக்கைகண்டிடைபோலெய்ததாள். கஙக

வாரிருங்கொங்கையாளோர்மாதராள்வாளுருய்யக்
காரிருள்விடமுண்டன்றுகறுத்ததேயன்றுகொன்றைத்
தாரிருஞ்சடையார்கண்டந்தையன்மீர்தமதுநெஞ்சங
காரிரும்பென்றேகாட்டக்குறியிட்டகறுப்பேயென்றாள். (கஙஉ)

பொன்னவிர்சடையான்முன்னேபோனதென்னெஞ்சுதானா
யன்னதுதாழ்த்ததென்னென்றழுங்குவாளொருத்திகெட்டே
னென்னதுநெஞ்சும்போனதென்றனளொருத்திகேட்ட
பின்னுள்வேற்கண்சேந்தாள்வினாத்தனளவும்பூசல். (கஙங)

(கஉஎ) அயிர்ப்பார்-சந்தேகிப்பார். ஆற்ற-தணிக்க. (கஉஅ) கலை-ஆடை. வண்ணம்-நிறம். சூரிசில்-தலையன். (கஉக) நட்டவர்-சிநேகஞ்செய்தவர். தொடி-வளையல். இகவார்-விலகார். (கஙo) விளங்கிழை-விளக்கமான இழையினையுடையாள். அன்மொழித்தொகை. (கஙக) உழை-மான். உருவெளி - நினைவாலுண்டாகுமொருபொய்த்தோற்றம். ஊற்றம்-பரிசம். (கஙஉ) வாரிருங்கொங்கை-கச்சணிந்த பெரியதனம். (கஙங) தாழ்த்தது-தாமதஞ்செய்தது. அழுங்குவாள்-வருந்துவாள். பூசல் - சண்டை.

செப்பிளங்கொங்கையாளோர்தெரிவைநீர்திருநோக்கெம்பால்
வைப்பதென்மதன்போலெம்மைச்சுவதேமதனுக்காவி
யப்பொழுதளித்தாற்போலெம்மாவியுமளித்தாலின்று
மெய்ப்புகழுமக்குண்டின்றேற்பெண்பழியேயுமென்றாள். (கஉச)

கவணமால்விடையான்றன்னைக்கடைக்கணித்திலனென்றங்கோர்
சுவணவான்கொடியோரோவத்தொழில்வல்லான்குறுகநோக்கி
யிவனேநீயெழுதித்தந்தால்வேண்டுவவீவனென்ற
ளவனேயாரெழுதவல்லாரென்றனஞவிசோர்ந்தாள். (கஉரு)

வலத்தயன்வரவுகாணுள்மாலிடங்காணுள்விண்ணோர்
குலத்தையுங்காணுள்மண்ணோர்குழாத்தையுங்காணுள்ஞானப்
புலத்தவர்போலக்கண்டபொருளெலாமுழுமான்செங்கைத்
தலத்தவன்வடிவாக்கண்டாளொருதனித்தையன்மாது. (கஉசு)

மூன்பெற்றங்காலிற்செல்லவண்ணலேமுன்போய்க்காண்பான்
பின்பற்றியாஞ்சப்பாசம்பிணித்தெழுவோடுவாளோர்
பொன்பெற்றமுலையாள்கொம்பருகுமலர்போலத்தாளின்
மின்பெற்றகாஞ்சிதட்பவிலங்கொடுநடப்பாளொத்தாள். (கஉஎ)

விதுக்கலைமிலைந்துசெங்கண்விடையின்மேல்வருமானந்த
மதுக்கடறனைக்கண்வாயான்முகந்துண்மெகளிரெல்லாம்
புதுக்கலைசரிவதோரார்புரிவளைகழல்வதோரார்
முதுக்குறைவகல்வதோரார்மூழ்கினர்காமவெள்ளம். (கஉஅ)

பைத்தழகெறிக்குமாடப்பந்திமேனின்றுகாண்பார்
கைத்தலங்கூப்பியாங்கேகண்களுநோக்கியாங்கே
சித்தமுங்குடிபோய்சசொல்லுஞ்செயலுமாண்டங்கண்மாண
வைத்தமண்பாவையோடுவடிவுவேறற்றுநின்றார். (கஉசு)

அன்பட்டபுரமுங்காமனுகமுஞ்சுட்டதீயிம்
மின்பட்டசடிலத்தண்ணன்மெய்யென்பதறியார்நோக்கிப்
பொன்பட்டகலனுமெய்யும்பொரிகின்றாரவனேப்புல்லி
னென்பட்டிவிடுமோவையவேழையராவியும்ம. (கசO)

(கஉச) தெரிவை-பெண். (கஉரு) கவணம்-வேகம். சுவணம்-பொன். (கஉசு) தையன்மாது-மீமிசை, பெண்ணென்று பொருள். (கஉஎ) பெற்றம்-இடபம். பாசம்-கயிறு. காஞ்சி-எண்கோவைமணி. (கஉஅ) விதுக்கலை-சந்திரகலை. முதுக்குறைவு-பேரறிவு. (கஉஙு) பைத்து-பசுமைநிறங்காட்டி. மாண-அலங்காரமுற. (கசO) சடிலம்-சுடை. கலன்-ஆபரணம். ஏழையர்-மாதர்.

கொடிகள்பூத்துதிர்ந்தபோதிற்கொம்பனூர்கலையுஞ்சங்குந்
தொடிகளுஞ்சுண்ணத்தூளுஞ்சுரர்பொழிமலருநந்தி
யடிகள்கைப்பிரம்புதாக்கச்சிந்தியவண்டவாணர்
முடிகளின்மணியுந்தாருங்குப்பையாய்மொய்த்தவீதி. (கசக)

துன்னியதருப்பைகூடவரசிலைதழாவித்தோய்த்துப்
பொன்னியல்கலசநன்னீர்பூசுரர்வீசவன்னூர்
பன்னியர்வட்டமாகவானவிற்பதித்தாலென்ன
மின்னியமணிசெய்நீராஞ்சனக்கலம்விதியாற்சுற்ற. (கசஉ)

கொடிமுரசாடிசெம்பொற்குடமணிமெய்யிற்பூத்த
கடிமலரனேயதீபமங்குசங்கவரியென்னும்
படிவமங்கலங்களெட்டும்பரித்துநேர்பதமக்கொம்பர்
வடிவினர்வந்துகாட்டமாளிகைமருங்கிற்செல்வான். (கசஙு)

செப்புரஙகவர்ந்தகொங்கையரம்பையர்தீபங்காட்டுந்
துப்புரவன்பினர்க்குத்தயமெய்ஞ்ஞானநல்கு
முப்புரங்கடந்தான்றன்னேமும்முறையியங்களேங்கக்
கப்புரவிளக்கந்தாங்கிவலஞ்செயக்கருணைபூத்தான். (கசச)

கோயின்முன்குறுகலோடுமைம்புலக்குறும்புதேய்த்த
னையநால்வேதச்செல்வர் *சுவத்திகளோதநந்தி
சேயிருந்தடக்கைபற்றிச்சென்கணேறிழிந்துநேர்ந்து
மாயனுமயனுநீட்டுமலர்க்கரமிருபாற்பற்றி. (கசஞ)

எதிர்ந்தருமறைகள்காணுதிளைத்தடிசுமந்துகாணு
முதிர்ந்தவன்புருவமானபாதுகைமுடிமேற்சத்தி
பதிந்தவர்த்தலுமேற்கொண்டுபொசவல்வினைதீர்த்துள்ளம்
பொதிந்துபேரின்பங்கும்பொன்னடிப்போதுசாத்தி. (கசசு)

பையரவுரியினன்னடைப்படாம்பரப்பிப்பெய்த
கொய்யவிழ்போதுதீத்தங்குரைகழலடிநனைப்பத்
தெய்வமந்தாரமாரிதிருமுடிநனைப்பத்தென்ன
ருய்யவந்தருளுமையனுள்ளெழுந்தருளுமெல்லை. (கசஎ)

(கசக) அண்டவாணர்-தேவர். (கசஉ) பூசுரர்-பிராமணர். (கசஙு) கொம்பர்-கொம்பு. (கசச) செப்புரம்-செப்பின்வன்மை. கோயில்-அரசமாளிகை. (கசஞ) சுவஸ்தி என்னும் வடமொழி, சுவத்தி எனத் தற்பவமாயிற்று; அஃதாவது, இருவர் ஒருவர்பின்னொருவராய் வேதத்தை மங்களார்த்தமாக மாற்றியோதுதல். (கசசு) பாதுகை-மரவடி. (கசஎ) பையரவுரி-படத்தினையுடைய பாம்பின் றோல். மந்தாரமாரி-மந்தார வருடம்.

மங்கலமகளிரோடுங்காஞ்சனமாலைவந்து
கங்கையின்முகந்தசெம்பொற்கரகநீரினையார்வாக்கத்
திங்களங்கண்ணிவேய்ந்தசிவபரஞ்சோதிபாத
பங்கயம்விளக்கியந்நீர்தலைப்பெய்துபருகிநின்றாள். (கசஅ)

பாதநாண்மலர்மேலீரம்புலரவெண்பட்டானீவிச்
சீதமென்பனிநீராட்டிமான்மதச்சேறுபூசித்
தாதவிழ்புதுமந்தாரப்பொன்மலர்சாத்திச்சென்னி
மீதிருகரங்கள்கூப்பிவேறுநின்றிதனைச்சொன்னாள். (கசஙக)

அருமையாலடியேன்பெற்றவணங்கினைவதுவைசெய்தித்
திருநகர்த்திருவுங்கன்னித்தேயமுங்கைக்கொண்டாள்கென்
றுரைசெய்தாளதற்குநேர்வாருண்ணகையுடையராகி
மருகனரியங்களார்ப்பவதுவைமண்டபத்தைச்சேர்ந்தார். (கஙO)

அருத்தநான்மறைகளார்ப்பவரிமணித்தவிசிலேறி
நிருத்தனங்கிருந்தருளுநின்றமாலயனையேவி
யுருத்திராதியரைப்பின்னுமொழிந்தவானவரைத்தந்தந்
திருத்தகுதவிசின்மேவத்திருக்கடைநாட்டம்வைத்தான். (கஙக)

வீண்டலவாஞரேஞர்மிடைதலான்ஞாலச்செல்வி
பண்டையளன்றியின்றுபரித்தனள்பௌவமேழு
முண்டவன்றன்னேத்தானின்றுத்தரத்திருத்திஞலே
வண்டர்நாயகன்றஞணைவலியிஞவறியேமம்ம. (கஙஉ)

மாமணித்தவிசில்வைகிமணவினைக்கடுத்தவோரை
தாம்வருமளவும்வானத்தபனியமலர்க்கொம்பன்ஞர்
காமருநடனநோக்கிக்கருணைசெய்திருந்தானிப்பாற்
கோமகள்வதுவைக்கோலம்புனைதிறங்கூறலுற்றேன். (கஙங)

மாசறுத்தெமையானந்தவாரிநீராட்டிப்பண்டைத்
தேசுருவிளக்கவல்லசிவபரம்பரையைச்செம்பொ
ஞசனத்திருத்திஞானமணிந்துகுங்குமச்சேறப்பி
வாசநீராட்டினூர்கண்மதிமுகக்கொம்பரன்ஞர். (கஙச)

(கசஅ) கரகம்-கமண்டலம் (கசஙக) நீவி-துடைத்து. (கஙO) உண்ணகை-புன்சிரிப்பு. (கஙக) நிருத்தன்-சிவபெருமான். நாட்டம் வைத்தான்-கண்ணருள் செய்தான். (கஙஉ) விண்டலவாஞர்-சுவர்க்கத்திலுள்ள தேவர். பௌவம்-கடல். (கஙங) ஓரை-லக்னம். தபனியம்-பொன். கோமகள்-அரசகுமாரியான தடாதகை. (கஙச) ஆனந்தவாரி-சந்தோஷ சமுத்திரம்.

மூரசொசெங்கமேங்கமூழ்கிதுண்சேசாத்தி
யரசியலறத்திற்கேற்பவந்தணர்க்குரியதானம்
விரைசெறிதளிர்க்கையாரவேண்டுவவெறுப்பத்தந்து
திரைசெய்நீரமுதமன்னுடிருமணக்கோலங்கொள்வாள். (கஙிடு)

செம்மலர்த்திருவும்வெள்ளச்செழுமலர்த்திருவுந்தங்கள்
கைம்மலர்த்தவப்பேறின்றுகாட்டுவார்போலநங்கை
யம்மலரனிச்சமஞ்சுமடியிற்செம்பஞ்சுதீட்டி
மைம்மலர்க்குழன்மேல்வாசக்காசறைவழியப்பெய்தது. (கஙிசு)

கொங்கையின்முகட்டிற்சாந்தங்குளிர்பனிநீர்தோய்த்தட்டிப்
பங்கயமலர்மேலன்னம்பவளச்செவ்வாய்விட்டார்ப்பத்
தங்கிய வென்னவாரநூபுரந்ததும்பச்செங்கே
ழுங்கதிர்ப்பாதசாலங்கிண்கிணியலம்பப்பெய்தது. (கஙிள)

எண்ணிரண்டிரட்டிகோத்தவிரிசிகையிருபத்தொன்றிற்
பண்ணியகலாபமீரேழ்பருமகாலிரண்டிற்செய்த
வண்ணமேகலையிரண்டிற்காஞ்சியிவ்வகையோரைந்தும்
புண்ணியக்கொடிவண்டார்ப்பப்பூத்தபோற்புலம்பப்பூட்டி. (கஙிஅ)

பொன்மணிவண்டுவீழ்ந்தகாந்தளம்போதுபோல
நின்மணியாழிகோத்துமெல்விரற்செங்கைக்கேற்ப
வண்மணிவைரயாப்புக்கடகமுந்தொடியும்வான
தென்மணிக்கரங்கள்கூப்பவிருதடந்தோளிலேற்றி. (கஙிசு)

மாகதமாலையம்பொன்மாலைவித்துருமமாலை
நிரைபடவானவில்லினிழல்படவாரத்தாமம்
விரைபடுகளபச்சேறுமெழுகியபுளகக்கொங்கை
வரைபடுமருவியன்றிவனப்புநீர்நுரையுமான. (கசுO)

உருவமுத்துவொயம்முத்துடுத்தபல்காசுகோளாய்
மருவவக்காசுசூழ்ந்தமாமணிகதிராய்க்கங்குல்
வெருவவிட்டிமைக்குமாரமேருவின்புறஞ்சூழ்ந்தாடுந்
துருவசக்கரம்போற்கொங்கைதுயல்வரவிளங்கச்சூட்டி. (கசுக)

(கஙிடு) எங்க-முழங்க. (கஙிசு) வெள்ளச்செழுமலர்த்திரு-சரஸ்வதி. (கஙிள) ஆரநூபுரம்-முத்தரிச்சிலம்பு. பாதசாலமெனும் ஓர் காலணி. (கஙிஅ) இவ்வகையோரைந்தும்-மேற்கூறிய விரிசிகைமுதலிய வைந்தும். (கஙிக) வண்டுவீழ்ந்த-வண்டுமொய்த்த. யாப்புக்கடகம்-கடைப்பூட்டுள்ளகடகம். (கசுO) வித்துருமமாலை-பவளமாலை. ஆரத்தாமம்-முத்துமாலை. (கசுக) உடு-நக்ஷத்திரம். காசு-அரதனம். கோள்-நவகிரகம். மாமணி-மாணிக்கம்.

கொடிக்கயலினமாய்நின்றகோட்சுரும்வேறும்வீறுந்
தொடிக்கலைமதியுந்தங்கோன்மெல்குலவிளக்காய்த்தோன்றும்
பிடிக்கிருகாதினூடுமந்தணம்பேசுமாபோல்
வடிக்குழைமகரத்தோடெருதிவாண்மழுங்கச்சேர்த்து. (கசுஉ)

மழைக்குமாமதிக்குநாப்பண்வானவிற்கிடந்தாலொப்ப
விழைக்குமாமணிசூழ்பட்டமிலம்பக்மிலங்கப்பெய்து
தழைக்குமாமுகிலைமைந்தன்றளையிடல்காட்டுமோபோற்
குழைக்குநீர்த்தகரஞாழற்கோதைமேற்கோதையாதீத்து. (கசுங)

கற்பகங்கொடுத்தவிந்தக்காமருகலன்களெல்லாம்
பொற்பமெய்ப்படுத்துமுக்கட்புனிதனுக்கிறிலாத
வற்புதமிழ்ச்சிதோன்றவழகுசெய்தமயந்தோன்றச்
சொற்கலையாளும்பூவின்கிழத்தியுந்தொழுதுநோக்கி. (கசுச)

சுந்தரவல்லிதன்னைச்சோபனமென்றுவாழ்த்தி
வந்திருகையுந்தங்கண்மாந்தளிர்க்கைகணீட்டக்
கொந்தவிழ்கோதைமாதுமறமெலாங்குடிகொண்டேறு
மந்தளிர்ச்செங்கைபற்றுவெழுந்தனண்மறைகளார்ப்ப. (கசுடு)

கலிவிருத்தம்.

அறைந்தன தூரிய மார்த்தன சங்க
நிறைந்தனவானவர்நீண்மலர்மாரி
யெறிந்தனசாமரையேந்திழையார்வாய்ச்
சிறந்தன மங்கல வாழ்த்தெழு செல்வம். (கசுசு)

அடுத்தனள் சுந்தரி யம்பொ னடைப்பை
யெடுத்தன ளாடி திலோத்தமை யேந்திப்
பிடித்தனள் விந்தை பிடித்தனள் பொற்கோ
லுடுத்த நெருக்கை யொதுக்கி நடந்தாள். (கசுள)

கட்டவிழ் கோதை யரம்பை களாஞ்சி
தொட்டன ளூர்ப்பசி தூமணி யால
வட்டம சைத்தனள் வன்ன மணிக்கா
சிட்டிழை கோடிக மேனகை கொண்டாள். (கசுஅ)

(கசுஉ) மந்தணம்-ரகசியம். (கசுங) வானவில்-இந்திரதனுசு. இலம்பகம்-நுதலணிமாலை. (கசுச) காமருகலன்கள்-அழகுபொருந்திய ஆபரணங்கள். சொற்கலையாள்-சரஸ்வதி. பூவின்கிழத்தி-திருமகள். (கசுடு) சோபனம்-ஒருவகைமங்கலப்பாட்டு. (கசுசு) தூரியம்-தோல்கருவிவாத்தியம். (கசுள) விந்தை-துர்க்கை. இந்திராணி-யென்ப. (கசுஅ) கோதை-மாலை. ஆலவட்டம்-காற்றெழுப்பும் ஓர் கருவி.

கொடிகளெனக்குளிர்போதொடுத்தும்
வடிபணிநீரினர்வீசுபொன்வண்ணப்
பொடியினரேந்தியபூம்புகைதீபத்
தொடியணிகையினர்தோகையர்சூழ்ந்தார். (கசுக)

தோடவிழ்தாதியர்சோபனகீதம்
பாடவிரைப்பனிநீரொடுசாந்த
மேடவிழ்மென்மலரிட்டபடத்திற்
பாடகமெல்லடியைப்பையவையா. (கஎ0)

செம்மலராளொடுநாமகடேவி
கைம்மலர்பற்றினகல்வியொடாக்க
மிம்மையிலேபெறுவார்க்கிதுபோதென்
றம்மணிநூபுரமார்ப்பநடந்தாள். (கஎக)

ஒல்கினணண்மெல்லவொதுங்கினளன்பு
பில்கியிருந்தபிரானருகெய்தி
மெல்கியெருத்தமிசைத்தலைதூக்கிப்
புல்கியகாஞ்சிபுலம்பவிருந்தாள். (கஎஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அற்பகவியைக்குஞ்செம்பொனரதனபீடத்தும்பர்ப்
பொற்பகலாதகாட்சிப்புனிதனேடிருந்தநங்கை
யெற்பகல்வலங்கொண்டேகுமெரிகதிர்வரையினுச்சிக்
கற்பகமருங்கிற்பூத்தகாமருவல்லியொத்தாள். (கஎங)

பண்ணுமின்னிசையுநீருந்தண்மையும்பாலும்பாலி
னண்ணுமின்சுவையும்பூவுநாற்றமுமணியுமங்கேழ்
வண்ணமும்வேறுவேறுவடிவுகொண்டிருந்தாலொத்த
தண்ணலுமுலகமீன்றவம்மையுமிருந்ததம்மா. (கஎச)

விண்ணுளார்திசையினுள்ளார்வேறுளார்பிலத்தினுள்ளார்
மண்ணுளார்பிறரும்வேள்விமண்டபத்தடங்கியென்றும்
பண்ணுளாரோசைபோலப்பரந்தெங்குநிறைந்தமூன்று
கண்ணுளாரடியினீழல்கலந்துளார்தம்மையொத்தார். (கஎஙி)

(கசுக) பொன்வண்ணப்பொடி-கதம்பப்பொடி. பொற்சுண்ணமுமாம். (கஎ0) தோடு-பூவிதழ். படத்தில்-நடைபாவாடையில். (கஎக) ஆக்கம்-செல்வம். இதுபோது-இதுகாலம். (கஎஉ) ஒல்கினள்-தாவண்டி. முற்றெச்சம். (கஎங) அற்பக-அல்-இருள், பக-கெட. எற்பகல்-எல்+பகல், எல்-இரவு. (கஎச) கேழ்-நிறம். (கஎஙி) விண்ணுளார்-தேவர். பிலத்தினுள்ளார்-பாதாளவாசிகள்.

ஆயபோதாழியங்கையண்ணல்பொற்கரகநீராற்
சேயவான்சோதியாடற்சேவடிவிளக்கிச்சாந்தந்
தூயபோதவிழச்சாத்தித்தூபமுஞ்சுடருங்கோட்டி
நேயமோடருச்சித்தையனிறையருள்பெற்றுநின்றான். (கஎசு)

விண்டலத்தவருளாதிவேதியன்பாததீர்த்த
முண்டகத்தவனுமாலுமுனிவரும்புரந்தராதி
யண்டருநந்திதேவுமடிகணத்தவருமேனை
தொண்டரும்புறம்புமுள்ளுநனைத்தனர்சுத்திசெய்தார். (கஎஎ)

அத்தலினின்றமாயோனுதிசெங்கரத்துநங்கை
கைத்தலங்கமலப்போதுபூத்ததோர்காந்தளொப்ப
வைத்தருமனுவாயோதக்கரகநீர்மாரிபெய்தான்
றொத்தலர்கண்ணிவிண்ணோர்தொழுதுபூமாரிபெய்தார். (கஎஅ)

ஆடினரம்பைமாதர்விஞ்சையரமுதகீதம்
பாடினரரவென்றூர்த்துப்பரவினர்முனிவர்வானோர்
மூடினர்புளகப்போர்வைகணத்தவர்முடிமேற்செங்கை
சூடினர்பலருமன்றற்றொடுகடலின்பத்தாழ்ந்தார். (கஎகூ)

புத்தனுரெறிந்தகல்லும்போதெனமிலைந்தவேத
வித்தனுரடிக்கீழ்வீழவிண்ணவர்முனிவரேனோர்
சுத்தநாவாசிகூறக்குங்குமத்தேதாய்ந்தேய்ந்த
முத்தவாலரிசிவீசிமுழங்கினர்போகவெள்ளம். (கஅO)

அம்மையோடொப்பனென்னவலர்மணம்போலநீங்கார்
தம்மருள்விளையாட்டாலேயாற்றநாட்டமியர்போல
நம்மனோர்காணத்தோன்றிநன்மணம்புணரஞால
மும்மையுமுய்ந்தவென்னுத்தத்தமின்மொழியலுற்றார். (கஅக)

காமருசுரபித்தீம்பால்கற்பகக்கனிநெய்கன்ன
னுமருசுவையவின்னநறுமதுபருக்கஞ்செம்பொ
னுமணிவட்டத்திண்காற்பாசனத்தமையப்பெய்து
தேமருகொன்றையானேத்திருக்கைதொட்டருள்கவென்றார். ()

(கஎசு) ஆழி-சக்கரம். சோதி-சிவபிரான். கோட்டி-மலர்த்து. (கஎஎ)நனைத்தனர்-நனைத்து. (கஎஅ) அத்தலை-அவ்விடத்தில். தொத்து-கொத்து. கண்ணி-மாலை. (கஎகூ) விஞ்சையர்-வித்தியாதரர். அமுதகீதம்-அமுதம்போலும் கீதம். உவமைத்தொகை. (கஅO)புத்தனுர்-சாக்கியநாயனுர். முத்தவாலரிசி-முத்தம்போலும் வெள்ளிய அரிசி; அக்ஷதையென்றுபொருள். (கஅக) ஆற்றநாள்-வெகுகாலம். புணர-செய்ய. (கஅஉ) காமரு-அழகுபொருந்திய. சுரபி-காமதேனு. மதுபருக்கம்-இனிப்புள்ள பால்பழம்சர்க்கரை முதலியவைகள்.

அங்கைவைத்தமுதுசெய்தாங்கககிழ்ந்தட்டமூர்த்தி
கொங்கவிழ்குமுதச்செவ்வாய்கோட்டிவாண்முறுவல்பூத்தான்
புங்கவர்முனிவர்கற்பின்மகளிரும்போதின்மேய
மங்கையுரிருவரோமெங்கலம்பாடலுற்றார். (கஅங)

மாக்கடிமுளரிவாணன்மைந்தரோடொருங்குவைகி
நாக்களினெநாவாரத்துவையானறுநெயார்த்தி
வாக்கிடவாரமாந்திவலஞ்சுழித்தகவீங்கித்
தேக்கிடமொலியிஞர்த்துநிமிர்ந்ததுதெய்வச்செந்தீ. (கஅச)

சுற்றுநான்மறைகளார்ப்பத்தூரியஞ்சங்கமேங்கக்
கற்றநான்முகத்தோன்வேள்விச்சடங்குநூல்கரைந்தவாற்றான்
முற்றமங்கலநாண்சாத்திமுழுதுலகின்றுள்செங்கை
பற்றினன்பற்றிலார்க்கேவீடருள்பரமயோகி. (கஅரு)

இணரொரித்தேவந்தானேயிவளர்ப்பவனுந்தானே
யுணவுகொள்பவனுந்தானேயாகியவொருவன்வையம்
புணர்வுறுபோகமூழ்கப்புருடனும்பெண்ணுமாகி
மணவினைமுடித்தானன்னான்புணர்ப்பையார்மதிக்கவல்லார். ()

பின்புதன்பன்னியோடுபிறைமுடிப்பெருமான்கையி
னன்பொரிவாங்கிச்செந்தீநாமடித்தெனைத்துமான
தன்படிவுணர்ந்தவேதமுனிவர்க்குத்தக்கதான
மின்பகந்தும்பருல்கியெரிவலமுறையால்வந்து. (கஅஎ)

மங்கலம்புனைந்தசெம்பொனம்மிமேன்மணிட்டிபாத
பங்கயமலரைக்கையாற்பரிபுரஞ்சிலம்பப்பற்றிப்
புங்கவன்மனுவாலேற்றிப்புண்ணியவகிட்டன்றேவி
யெங்கெனச்செங்கைகூப்பியெதிர்வரவருட்கண்சாத்தி. (கஅஅ)

விதிவழிவழாதுவேள்விவினையெலாநிரம்பவிங்ங
னதிர்கடலுலகம்தேறவாற்றிநான்மறைகளார்ப்பக்
கதிர்மணிநகையார்வாழ்த்தக்காமனைக்காய்ந்தநம்பி
மதிநுதன்மங்கையோடுமணவறைதன்னிற்புக்கான். (கஅக)

(கஅங) அமுதுசெய்தாங்கு-உண்டருளினாற்போல. (கஅச) முளரிவாணன்-பிரமன். மைந்தரோடு-உபபிரம்மாக்களுடன். (கஅரு) வேள்விச்சடங்கு-திருமணஓமம். (கஅசு) இணரொரி-இலவிட்டெரியுந்தீ. புணர்ப்பு-செய்கை. (கஅஎ) தந்தும்ப-நிறைய. (கஅஅ) மணட்டி-மனைவி. மனு-மந்திரம். நீதியுமாம். (கஅக) வேள்விவினை-மணச்சடங்கு. மணவறை-மணஞ்செய்துகும் அறை.

மனிதருமிமையாதையன்மங்கலவனப்புநோக்கிப்
புனிதவானவரையொத்தாரவர்க்கதுபுகழோவெந்தை
கனிதருகருணைநாட்டம்பெற்றவர்க்கடவுளோராற்
பனிதருமலரிட்டேத்திவழிபடப்பாலரன்ரே. (ககo)

மானிடரிமையோரென்னும்வரம்பிலராகிவேள்வி
தானிடரகலநோக்கித்தலைத்தலைமயங்கிநின்றூர்
கானிடநடனஞ்செய்யுங்கண்ணுதலருட்கணேக்கா
லூனிடரகலுநாளிலுயர்ந்தவரிழிந்தோருண்டோ (ககக)

மணவறைத்தவிசினீங்கிமன்றன்மண்டபத்திற்போந்து
கணமணிச்சேக்கைமேவிக்கருநெடுங்கண்ணன்வாணி
துணைவனேமுதல்வாவெனேர்க்குஞ்சூழ்கணத்தொகைக்குமென்றுந்
தணவறுசெல்வந்தந்தோன்சாறுசால்சிறப்புநல்கி. (ககஉ)

ஏட்டுவாய்மூளரியான்மாலேனைவானவருந்தத்த
நாட்டுவாழ்பதியிற்செல்லநல்விடைகொடுத்துவேந்தர்க்
காட்டுவாளுடிக்காட்டுந்தன்மைபோலரசுசெய்து
காட்டுவாளுகியையன்றிருவுளக்கருணைபூத்தான். (ககங)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அதிர்விடைக்கொடியங்கயற்கொடியாக வராக்கலன்பொற்கலனுக
பொதியவிழ்கடுக்கைவேம்பலராகப்புலியதள்பொலந்துகிலாக [ப்
மதிமுடிவைரமணிமுடியாகமறைகிடந்தலம்புமாமதுரைப்
பதியுறைசோமசுந்தரக்கடவுள்பாண்டியனுகிவீற்றிருந்தான்.(ககச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்டவழ்மதியஞ்சூடுஞ்சுந்தரவிடங்கப்புத்தேள்
கொண்டதோர்வடிவுக்கேற்பக்குருதிகொப்பளிக்குஞ்சூலத்
திண்டிறற்சங்குகன்னன்முதற்கணத்தேவர்தாமும்
பண்டையவடிவமாறிப்பார்த்திவன்பணியினின்றூர். (ககஙி)

தென்னவன்வடிவங்கொண்டசிவபரனுலகங்காக்கு
மன்னவர்சிவனேப்பூசைசெய்வதுமறையாதென்று
சொன்னதுமன்னரெல்லாந்துணிவதுபொருட்டுத்தானு
மந்நகர்நடுவுரென்றேரணிநகர்சிறப்பக்கண்டான். (ககசு)

(ககo) மங்கலவனப்பு-கல்லியாணசுந்தரம். (ககக) மயங்கி-கலந்து. கான்-சுடுகாடு (ககஉ) கணம்-கூட்டம். சேக்கை-பீடம். கருநெடுங் கண்ணன்-திருமால். தணவரும்-நீங்காத. (ககங) ஆட்டுவான்-கூத்தநூலாசிரியன். நட்டுவனென்ப. (ககச) அதள்-தோல். பொலந்துகில்-பொன்னுடை. (ககஙி) சுந்தரவிடங்கப் புத்தேள்-அழகிய சுயம்புவான தேவன். பார்த்திபன்-அரசன். (ககசு) மறையாறு-வேதவழி.

மெய்ம்மைநூல்வழியேகோயில்விதித்தருட்குறிநிறீஇப்பே
ரிம்மையேநன்மைகல்குமிறையெனநிறுவிப்பூசை
செம்மையாற்செய்துநீபவனத்துறைசிவனேக்கால
மும்மையுந்தொழுதுவையமுழுவதுங்கோனடாத்தும். (ககஎ)

பூவருமயன்மாலாதிப்புனிதருமுனிவரேனோர்
யாவருந்தனையேபூசித்திகபரமடையநின்ற
மூவருண்மேலாமுக்கண்மூர்த்தியேபூசைசெய்த
தாவரவிலிங்கமேன்மைத்தகுதியாரளக்கவல்லார். (ககஅ)

மேற்படி - வேறு.

மனித்தருக்கரசாகித் தெவ்வேந்தர்க்குமடங்கலாய்மடநல்லா
ர்க், கினித்தவைங்கணைக்காளையாய்நிலமகட்கினார்த்துழாயணிமா
லா, யனித்தநித்தமோர்ந்திகபரத்தாசைநீத்தகந்தெளிந்தவர்க்கொ
ன்றுய்த், தனித்தமெய்யறிவானந்தமாம்பரதத்துவமாய்நின்றான்.

திருமணப்படலம் - முற்றிற்று.

படலம். கசு-க்கு திருவிருத்தம் - எகஎ.

ஆ று வ து,

வேள்ளியம்பலத் திருக்கூத்தாடியபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகியனிறுத்துவான்வந்தொருபரஞ்சுடர்வான்றிங்கட்
குலமணிவிளக்கைவேட்டுக்கோமுடிகவித்துப்பாராண்
டிலகுறுதோற்றமீதான்முனிவரரிருவர்தேற
வலகிலானந்தக்கூத்துச்செய்தவாறறையலுற்றும். (க)

புண்ணியமலர்மென்கொம்பைவேட்டபின்புவனந்தாங்குங
கண்ணுதன்மூர்த்தியாயகவுரியன்மணத்தில்வந்த
மண்ணியல்வேந்தர்வானோர்மாதவர்பிறருமுண்ண
நண்ணுதிரென்னலோடுநண்ணுவார்விரைவினெய்த, (உ)

கஎ) நீபவனம்-கடம்பவனம். (கஅ) தகுதி-தன்மை. (கக) ஐங்கணைக்காளை-பஞ்சபாணங்களையுடையமன்மதன். (க)கோமுடி-அரசரணியுமகுடம். அலகிலானந்தக்கூத்து-அளவற்ற இன்பவுருவமான நடனம். (உ) வேட்டபின்-மணந்தபின்னர்.

பொன்னவிர்கமலம்பூத்தபுனிதநீராடித்தத்த
நன்னெறியமமுற்றிநண்ணினர்புலிக்காலோனும்
பன்னகமுனியுந்தாழ்ந்துபரவியம்பலத்துளாடு
நின்னருணடங்கண்டெண்பதடியேங்கணியமமென்றார். (கூ)

என்னலுமந்தக்கூத்தையிங்குநாஞ்செய்துந்தில்லைப்
பொன்னகருலகமெல்லாமுருவமாம்புருடற்குள்ள
மின்னதாந்துவாதசாந்தமென்றிறையருளிச்செய்ய
மன்னவவேனையங்கம்யாதெனமன்னன்சொல்வான். (சு)

அரைக்குமேலுலகீதெழன்றுமரைக்குக்கீழுலகேழென்று
முரைக்கலாலுலகமெல்லாமுருவமாம்புருடற்கிந்தத்
தரைக்குமேலனந்தந்தெய்வத்தானமுண்டனேத்துங்கூறின்
வரைக்குரூசிலதானங்கள்வகுத்துரைசெய்யக்கேண்மின். (ஙு)

திருவளராரூர்மூலந்திருவானைக்காவேகுய்ய
மருவளர்பொழில்சூழணுமலைமணிபூரநீவி
ரிருவருங்கண்டமன்றமிதயமாந்திருக்காளத்தி
பொருவருங்கண்டமாகும்புருவமத்தியமாங்காசி. (சு)

பிறைதவழ்கயிலைக்குன்றம்பிரமரந்திரமாம்வேத
மறைதருதுவாதசாந்தமதுரையீதநிகமெந்த
முறையினுலென்னினின்மூன்னர்த்தோன்றியமுறையாலென்றக்
கறையறுதவத்தரோடுகவுரியன்கோயில்புக்கான். (எ)

தன்னருளதனுணீத்தன்னையேதேடிப்போந்த
மின்னவிர்கயிலைதானுவிடையுருமாறிமன்றுய்
மன்னியதேயோதிங்கண்மண்டலமேயோவென்னப்
பொன்னவிர்விமானக்கீழ்பால்வெள்ளியம்பொதுவுண்டாக. (அ)

மின்பயில்பரிதிப்புத்தேள்பாற்கடல்விளங்கியாங்குப்
பின்பதல்மிசைமாணிக்கப்பீடிகைதோன்றிற்றன்ன
தன்பாதமுளமேயாகுமல்லதுவேதச்சென்னி
யென்பதாமஃதேயன்றியாதெனவிசைக்கற்பாற்றே. (கூ)

(கூ) புலிக்காலோன்-வியாக்கிரபாதன். பன்னகமுனி-பதஞ்சலி முனிவன். (சு) உள்ளம்-இதையபுண்டரீகம். துவாதசாந்தம்-சிரசின் மேல் பனிரண்டங்குலத்தில் விளங்கும் ஒரு பாவனைத்தானம். (ஙு) வரைக்குரு-அளவிற்குள்நில்லா. (சு) மூலம்-மூலாதாரம். நாபி-சுவாதிட்டானம். இதயம்-அநாகதம். கண்டம்-விசுத்தி. புருவமத்தியம்-ஆக்கினை. (எ) பிரமரந்திரம்-கண்டத்தின்மேல் பனிரண்டங்குலத்தில் கபாலத்தின் கீழ்உள்ள ஓரிடம். (அ) மன்றுய்-சபையாய். (கூ) பரிதிபுத்தேள் - சூரியன். மாணிக்கப்பீடிகை-பதுமராகமணியாலாகிய ஆதனம்.

அன்னதோர்தவிசினும்பராயிரங்கரத்தாலள்ளித்
துன்னிருள்விழுங்குங்கோடிசூரியரொருகாலத்து
மன்னினருத்தாலொப்பமனமொழிபக்கங்கீழ்மேற்
பின்முதல்கடந்தஞானப்பேரொளிவடிவாய்த்தோன்றி. (கo)

முந்துறுகணங்கண்மொந்தைதண்ணுமைமுழக்கஞ்செய்ய
நந்திமாமுழவந்தாக்கநாரணனிடக்கையார்ப்ப
வந்துகந்தருவநூலின்மரபுளியிருவர்பாட
வைந்துதுந்துபியுங்கல்லென்றூர்கலிமுழக்கங்காட்ட. (கக)

மதுமுகத்தலர்ந்தவெண்டாமரைமகள்சுருதிகூட்டச்
சதுமுகத்தொருவன்சாமகீதயாழ்தடவிப்பாட
விதுமுகத்தருகுமொய்க்குமீனனஞானவெள்ளிப்
பொதுமுகத்தமர்தூற்றும்பூமழையெங்கும்போர்ப்ப. (கஉ)

பொருங்கடனிறத்தசெந்தீப்பொங்குளைக்குறளன்மீது
பெருங்கடல்வடவைச்செங்கண்பிதுங்கமேற்றிரிந்துநோக்கி
முருங்கடலெரியிற்சீறமுதுகிறவலத்தாஞ்ஞன்றிக்
கருங்கடன்முளைத்தவெய்யோன்காட்சியிற்பொலிந்துகின்று.(கங)

கொய்யுஞ்செங்கமலப்போதுகுவிந்தெனவிடித்துக்கூத்துச்
செய்யும்புண்டரிகத்தாளுந்திசைகடந்துளவீரைந்து
கையுந்திண்படையுந்தெய்வமகளிர்மங்கலநாண்காத்த
மையுண்டமிடறுஞ்சங்கவார்குழைதுழைந்தகாதும். (கச)

செக்கரஞ்சடையுந்தேசார்வெண்டிருநீறுந்தெய்வ
முக்கணுமுரசக்கச்சுமுள்ளெயிறிமைக்குமார்பு
மைக்கருங்கயற்கணங்கைவல்லியினெதுங்கிநிற்கும்
பக்கமுமவண்மேல்வைத்தபார்வையுநகையுந்தோன்ற. (கஞ)

கங்கையாறலம்புமோசைகடிக்கைவண்டிரங்குமோசை
மங்கலமுழவினோசைமந்திரவேதவோசை
செங்கையாடெரியினோசைதிருவடிச்சிலம்பினோசை
யெங்கணுநிரம்பியன்பரிருசெவிக்கமுதமூற்ற. (கசு)

(கo) உம்பர்-மேல். (கக) கந்தர்வநூல்-இசைநூல். காந்தருவவே தமென்ப. (கஉ) தடவி-வருடி. (கங) உளை-புறமயிர். குறள்-பூதம். வெய்யோன்-சூரியன். (கச) மையுண்ட-கருமைபொருந்திய. (கஞ) முள்ளெயிறு-கூரிய பன்றிக்கொம்பு. (கசு) அலம்பல்-ததும்பல்.

ஆடினனை மலமூர்த்தியஞ்சலிமுகிழ்த்துச்சென்னி
சூடினரடியில்வீழ்ந்தார்சுருதியாயிரநாவாரப்
பாடினர்பரமானந்தப்பரவையிற்படிந்தாரன்பு
நீடினர்நிருத்தானந்தங்காண்பதுநியமமமூண்டார். (கஎ)

முனிவர்கந்தருவர்வானோர்தானவர்மோனையோகர்
புனிதகிம்புருடராதிப்புலவருமிறைஞ்சியன்பிற்
கனிதருமின்பத்தாழ்ந்தார்திருமணங்காணவந்த
மனிதருங்காணப்பெற்றார்மாதவர்பொருட்டான்மன்னே. (கஅ)

அனந்தனுமுனிவர்கேந்துமளவிலானந்தமூறி
மனந்தனினிரம்பிமேலும்வழிவதுபோலமார்பம்
புனைந்தபுண்ணியவெண்ணீறுகரைந்திடப்பொழகண்ணீரு
ணைவுந்திருகரமுங்கூப்பிநாதனேப்பாடுகின்றான். (கக)

பாபமுதலேபோற்றிபத்தியில்வினையாய்போற்றி
சராசரமாகிவேறுயின்றதற்பனேபோற்றி
கபாசலவுரியாய்போற்றிகனகசபையதனாடு
நிராமயபாதாநிருத்தனேபோற்றிபோற்றி. (உ0)

ஒன்றுகியைந்தாயையைந்துருவாகிபருவாய்போற்றி
யின்றுகிசசென்றநாளாயெதிர்நாளாயெழுவாய்போற்றி
ரனருகித்தியாகிநடுவாகிமுடிவாய்மன்று
ணின்றருடம்பரமானந்தநிருத்தனேபோற்றிபோற்றி (உக)

ஆடியபோம்பொருட்டுவெள்ளியம்பலத்தாடல்போற்றி
பொடியணிதடந்தோள்போறறிபுரிசடைமகுடம்போறறி
கடியவிழ்மலர்மென்கூந்தற்கயல்விழிபாகம்போற்றி
நெடியதற்பரமானந்தநிருத்தனேபோற்றிபோற்றி (உஉ)

என்றுநின்றேத்துமன்பினிருவரைநோகுகிவெள்ளி
மன்றுணின்றருடாகின்றமறைமுதல்கருணைகூர்ந்து
நன்றுநீர்வேட்டதென்னென்றருள்செயநாதன்பாதந்
துன்றுமெய்யன்பிற்றுழ்ந்துதொழுதுநின்றினசெசொல்வார். ()

(கஎ) பரவை-கடல். (கஅ) மோனம-மௌனம். (ககூ) அனந்தனு முனிவர்கேந்தன்-ஆதிசேடனுகிய பதஞ்சலிமுனிவன். (உ0) கபாச லம்-யாகை. நிராமயம்-நோயற்றது. (உக) ஐந்து-பஞ்சமூர்த்தம். ஒ கயந்து-லீலாமூர்த்தம். (உஉ) புரிசடை முறுக்கியசடை. கயல்விழி-அனமொழித்தொகை. மீனுட்சியென்றுபொருள். (உஊ) இருவர்-பதஞ்சலி வியாக்கிரபாதர். வேட்டது-விரும்பியது. நாதன்-சிவபெருமான்.

எந்தையித்திருக்கூத்தென்றுமிந்நிலைநின்றியார்க்கும்
பந்தவெம்பாசநீங்கப்பரிந்தருள்செய்தியென்னச்
செந்தமிழ்க்கன்னிநாடுசெய்தமாதவப்பேறெய்தத்
தந்தனமென்றன்வேதந்தலைதடுமாறநின்றான். (உச)

அராமுனியீதுவேண்டுமாதியெம்பெருமவிந்த
நிராமயபரமானந்தநிருத்தநேர்கண்டோரெல்லாந்
தராதலமிசைவந்தெய்தாத்தனிக்கதிபெறுதல்வெண்டும்
பராபரவென்றுதாழ்ந்தான்பகவனுமதற்குநேர்ந்தான். (உடு)

ஆர்த்தனர்கணத்தோர்கைகோத்தாடினரலர்பூமாரி
தூர்த்தனர்விண்ணோர்கண்ணீர்துளும்பினர்முனிவராகம்
போர்த்தனர்புளகமன்பிற்புதைந்தனர்விழுங்குவார்போற்
பார்த்தனர்புல்லிக்கொண்டார்பரவியவிருவர்தம்மை. (உசு)

மேற்படி - வேறு.

அனித்தமாகியபூதமைம்பொறிபுலனுதியாரூருகி
யினித்தமாயையோடிருவினைத்தொடக்கினுமிருளினும்வேரூகித்
தனித்தயோகிகளகற்றைந்தாடியதனிப்பெருந்திருக்கூத்தைக் [ன்.
குனித்தவண்ணமாக்கண்டவர்க்கிகபரங் கொடுத்தவணுறைகின்ரு

குனிவிலாதிரைத்தினந்தொடுத்ததிர்வருகொடுவிலாதிரையெல்
லை, புனிதவாடகமுளரிதோய்ந்தசு தனிப்பொதுநடங்தெரிசித்தங்,
கினிதமர்ந்தநூற்றெண்மட்டங்கைகந்தெழுத்தெண்ணியிந்நிலைநிற்குங்
கனியுமன்பினரெண்ணியாங்கெய்துவர்கருதியவரமெல்லாம். (உஅ)

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியபடலம் - முற்றிற்று.

ஆ படலம் - கடு - க்கு திருவிருத்தம் - அடு.

ஏழாவது,

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்.

கலிநிலைத்துறை.

பன்னகேசனுமடுபுலிப்பாதனும்பணிய
மின்னுவார்சடைமன்னவன்வெள்ளிமன்றுடல்
சொன்னவாறிதுபகித்தழல்சுடவொருபூத
மன்னமாமலைதாலத்தயாறெடுத்தினியறைவாம். (க)

(உச) இந்நிலை-இவ்வண்ணம். தலைதடுமாற-நிலைகெட்டிமயங்க. (உடு)அராமுனி-பதஞ்சலி. (உசு) அலர்பூ-விரிந்தபூ. விண்ணத்தொகை. (உஎ) தனித்த-மனைவிமக்கள்முதலிய சுற்றம்பற்றினின்றுந்துறந்து ஏகாந்தமாக இருக்கின்ற. (உஅ) குனிவில்-வளைந்ததனுசு. மார்கழி மாதமென்று பொருள். தனிப்பொது-ஒப்பற்றவெள்ளியம்பலம்,(க) ஒருபூதம்-குண்டோதரன்.

கன்னியர்க்கரசாயினுள்கடிமனைபுகுந்த
மின்னியற்சடைமாதவர்வேண்டியவேளை
ரெங்கிலத்துளமன்னவர்யாவர்க்குமுறையே
பொன்னியற்கலத்தறுசுவைப்போனகமருத்தா. (உ)

பூசுகின்றவுமுடுப்பவும்பூண்பவும்பழுக்காய்
வாசமெல்லிலையேனவுமம்முறைவழங்காத்
தேசமன்னவரேனையோர்செல்லுநர்ச்செலுத்தி
யீசனன்புறுகற்பினுளிருக்குமவ்வேலை. (ஊ)

மடைவளத்தொழிற்புலவர்வந்தடியினைவணங்கி
யடியரேமட்டபோனகமாயிரத்தொன்றி
னிடையதாயினுந்தொலந்திலதியாங்கண்மேற்செய்யக்
கடவதேதெனப்பிராட்டிதன்கணவர்முன்குறுகா. (எ)

பணிந்தொதுங்கிநின்றடிகண்முப்பத்துமுக்கோடி
கணங்கடம்மொடுமிங்கெழுந்தருள்வதுகருதி
யிணங்குமின்சுவைப்போனகமெல்லையின்றுக்கி
யுணங்குகின்றதுண்டெஞ்சியதெனைத்தெனவுரைக்கின். (ஏ)

இமையக்குன்றமுமடைகலாயிதன்புறங்கிடந்த
சிமையக்குன்றுகளீட்டமுஞ்சேர்ந்தெனநிமிரச்
சமையக்கொட்டியவாலரிப்புழுக்கலுஞ்சாதக்
கமையக்கொட்டியகறிகளின்வருக்கமுமனைத்தே. (ஐ)

என்றபோதிறையெம்பிரான்றேவியாரிடத்தி
லொன்றுமன்பினுலொருவிளையாடலுநினைத்தோ
தன்றனிக்குடைப்பாரிடத்தலுவனதாற்ற
லன்றியாவருமறிந்திடக்காட்டவோவறியேம். (ஒ)

சிறிதுவாணகைசெய்துமூவேந்தரிற்சிறந்த
மறுவின்மீனவனரும்பெறன்மகளுனக்கரிதிற்
பெறுவதேதுவான்றருவுநின்பணிசெயப்பெற்றிங்
குறைவதேற்பிறர்திருவெலாமுன்னதேயன்றே. (ஓ)

(உ) கன்னியர்-பாண்டிநாட்டினர். (ஊ) பழுக்காய்-பாக்கு. (எ) மடை-சோறு. இடை-கூறு. (ஏ) கணம்-தேவர்கூட்டம். போனகம்-உணவு. (ஐ) இமையக்குன்றம்-பனிமலை. அடைகல்-எல்லைக்கல். சிமையம்-சிகரம். (ஒ) பாரிடத்தலைவன்-பூதத்தலைவன். (ஓ) பிறர்திரு-அயலார் செல்வம்.

அளவிலாதநின் செல்வத்தின்பெருக்கைநாமறிய
வீளவுசெய்தலேபோலுநின்வீருந்துணப்பசியாற்
கோயடைந்தவராகிநங்கணத்திறுட்காணேங்
தளவமூரலாயாஞ்செயத்தக்கதேதென்றான். (கூ)

அடுக்கநின்றகுண்டோதரனகட்டிடைவடவை
மடுக்கவுண்ணினனதுவந்துயிற்றெரிபசியாய்த்
தொடுக்கவாலமுண்டாங்குடல்சோர்ந்துவேர்த்தாவி
யொடுக்கமுற்றையபசியினலுயங்கினேனென்றான். (கo)

குடையெடுக்குமிக்குறியதாட்குறட்கொருபிடிசோ
றிடுமினப்புறஞ்சோறுமாலெனத்தொழுதெல்லா
முடையநாயகிபோயினுள்குறியனுமுடனே
நடைதளர்ந்துகண்புகைந்துவாய்புலர்ந்திடநடந்தான். (கக)

படைக்கணெயலரிறைமகள்பணியினற்பசிநோய்
தொடுத்தவன்றனைக்கொண்டுபோய்ச்சொன்றிமுன்விடுத்தா
ரடுத்திருந்ததேதகண்டனரன்னமாமலையை
யெடுத்தயின்றதுமடிசிலங்கிருந்தநுங்காணூர். (கஉ)

சிலம்புநூபுரச்சீறடிச்சேடியர்சில்லோ
ரலம்புவால்வளைக்கைநெரித்ததிசயமடைந்தார்
புலம்புமேகலையார்சிலர்பொருக்கெனவெருண்டார்
கலம்பெய்பூண்முலையார்சிலர்கண்புதைத்திருந்தார். (கங)

மூரைபோகியமுரிவில்வான்மூரல்பால்வறையல்
கருனைதீம்பயறடுதுவைபலவகைக்கறிகள்
விரவுதேம்படுபாறயிரிழுதுதேன்வெள்ளம்
வரைவிலாதனமிடாவொடுவாரிவாய்மடுத்தான். (கச)

பல்பழக்குவைவேற்றுருப்பண்ணியங்கன்னன்
மெல்சுவைத்தண்டுதெங்கிவையன்றியும்வேவா
வல்சிகாய்களின்வருக்கமுநுகர்ந்துமாரும
லெல்லைதீர்நவபண்டமுமெடுத்துவாய்மடித்தான். (கஞ)

(கூ) வீளவுசெய்தல்-சமைத்தல். (கo) அகட்டிடை-வயிற்றினில். ஆலம்-விடம். உயங்கினேன்-வாடினேன். (கக) குறட்கு-பூதத்திற்கு. சோறும்-சொல்லுதும். (கஉ) சொன்றி- சோறு. அயின்றதும்-உண்டதும். அடிசில்-உணவு. (கங) சிலம்பு-ஒலிக்கின்ற. சேடியர்-தோழியர். வால்வளை. வெள்ளியசங்குவளையல் - பொருக்கென-விரைந்து. (கச) முரவை-தவிடு. முரிவில்-ஒடியாத. மூரல்-சோறு. கருனை-பொரிக்கறி. துவை-புளிக்கறி. இழுது-வெண்ணெய். (கஞ) வல்சிடசோறு.நவபண்டம். சமைக்காத புதிய பொருள்கள். நவதானியமுமாம்.

பாரித்துள்ளவிப்பண்டமும்பரூஉக்குறுங்கையால்
வாரித்தன்பெருவயிற்றிடைவைப்பவுந்துடுவை
பூரித்தாகுதிபண்ணியதழலெனப்பொங்கிக்
கோரித்தொண்பதுவாயிலும்பசித்தழல்கொளுத்த. (கசு)

அலங்கலோதிகண்டதிசயமடைந்துதன்னன்பி
னலங்கொளையகன்முன்புபோய்நாணமுட்கிடப்ப
விலங்குபூங்குழல்சுவன்மிசையிறக்கியிட்டொல்கி
நிலங்கிளைத்துநின்றுணிலகண்டனனிருபன். (கஎ)

அஞ்சிலோதியைவினவுவாணறிகலான்போலக்
குஞ்சியாரழலன்னவக்குடவயிற்றவனுண்
டெஞ்சியுள்ளவேற்பூதங்களின்னமும்விடித்துன்
னெஞ்சுவப்பவேயருத்துதுமென்னலுற்மலே. (கஅ)

ஐயவின்னுமிக்குறட்பசியடங்கிடாவேறு
வெய்யபாரிடவீரரைவிடுத்தியேலெடுத்து
வையம்யாவையும்வயிற்றிடைவைப்பதேயதனுற்
செய்யகாலருத்திரப்பெயர்தேற்றமாமுனக்கே. (கக)

சங்கவார்குழைக்குறண்மகன்றன்செயற்கே
யிங்குவந்துசெய்திடவறிதியென்றிறைமுன்
மங்கைபாயகிருமுதவாய்மலர்பொழுதியற்றுத்
திங்கள்வாய்முழையான்பசித்தீசுடவந்தான். (உo)

நட்டமாடியசுந்தரங்கையெம்பிராட்டி
யட்டபோனகம்பனிவனையேயவாய்க்கிடக்கு
தொட்டுவாய்மடுத்திடவுமென்சுபசிதணியா
திட்டுணுதவர்வயிறுபோற்காந்துவதென்றான். (உக)

கையர்முப்புரத்திட்டகீகடும்பசியுருவாய்ப்
பொய்யனேன்வயிற்றிடைக்குடிபுகுந்ததோவென்னுங்
கையெறிந்திடுமண்டங்கள்வெடிபடக்கதறு
மையகோவெனுமுயிர்த்திடுமாவீசோர்ந்தயரும். (உஉ)

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம் - முற்றிற்று.

ஆடபடலம் - கசு - க்கு திருவிருத்தம் - அசஎ.

(கசு) துடுவை-நெய்த்துடுப்பு. கோரித்து-அதிகரித்து. (கஎ) அலங்கல்-பூமாலை. சுவன்மிசை-பிடரியின்மீது. (கஅ) அஞ்சில்-அழகியசில். சடைபில்லை என்ப. (கக) வையம்-உலகம். வாய்மடுக்கும்-விழுங்கும். தேற்றம்-உறுதி. (உo) குறள்மகன்-பூதஞ்சுகிய குண்டோதரன். முழையான்-குகையினையுடையான். (உக) நட்டம் நடனம். அட்ட-சமைத்த. போனகம்-உணவு. தொட்டு-எடுத்து. காந்துவது-எரிவது. (உஉ) கையர்-வஞ்சகர். கடும்பசி-கொடியபசி.

எட்டாவது,

அன்னக்குழியும் வைகையுமழைத்தபடலம்.

கலிநிலைத்துறை.

வேதநாயகன் பாரிடவேந்தனுக்கமையா
வோதஞுதிகளருத்தியதன்மையீதுவையும்
போதராமையாலமைவுறப்போனகக்குழித்தந்
தோதமாகதியருத்தியசெய்கையுமுரைப்பாம். (க)

கவனமால்விடையாளிபின்கடிகமழ்தென்றற்
பவனமாமலையாட்டியைப்பார்த்திளோகைத்துத்
தவனமாபதியுடையவன்றன்பொருட்டன்ன
புவனமாதினிநினைத்தனனினைக்குமுன்போந்தாள். (உ)

நாற்றடந்திசைத்தயிர்க்கடனனந்தலிலங்கீண்
டீற்றெழுந்துநாற்கிடங்கராயுதித்தெழுந்தாங்கு
மாற்றருஞ்சுவைத்தீந்தயிர்வாலரிப்பதத்தோ
டேற்றெழுந்ததுநாற்குழியிடத்திலும்பொங்கி. (ஊ)

குருமதிக்குலமன்னவன்மருகனக்குண்டப்
பெருவயிற்றிருபிறையெயிற்றெரிசிகைப்பேழ்வா
யொருகுறட்குடைவீரனேயுன்பதிதனியப்
பருகெனப்பணித்தருளலும்பாரிடத்தலைவன். (எ)

அத்தயிர்ப்பதக்கிடங்கரிலலைகடல்கலக்கு
மத்தெனக்கரம்புதைத்தெடுத்தெதீத்துவாய்மடித்துக்
தய்த்திடப்பசிவிடுத்ததசுருதிநாயகன்முட்
பத்திவைத்துவீடினார்ந்தவர்புழவினைத்தொடர்போல். (ஏ)

வாங்கிவாங்கிவாய்மடித்தலுமுடம்பெலாம்வயிறாய்
வீங்கிஞன்றரைகிழிபடப்பொருப்பெனவீழ்ந்தா
னீங்குநீளுயிர்ப்பிலனுடல்புரண்டனனீர்வேட்
டாங்குநீர்நிலைதேடிவானுயிரெனமூந்தான். (ஐ)

(க) அமையா-போதாத. உவையும்-இவ்வன்ஞதிகளும். (உ) தென்றற்பவனமாம் - தென்றற்காற்றுண்டாகின்ற. அன்னப்புவனமாது-அன்னபூரணி. பூமிதேவியையுமுரைப்ப. (ஊ)நனந்தலை-நடு. கிடங்கர்-குழி. பதம்-சோறு. (எ) குரு-நிறம். பேழ்வாய்-பிளந்தவாய். (ஏ) கடல்கலக்குமத்து-மந்தரமலை. (ஐ) நீளுயர்ப்பு-நெடுமூச்சு.

ஆவியன்னவர்ப்பிரிந்துறையணங்களுர்போலக்
காவிநாண்மலர்தாமரைக்கடிமலர்வாட
வாவியோடையுங்குளங்களும்வறப்பவாய்வைத்துக்
கூவிணீலேநீர்களும்பசையறக்குடித்தான். (எ)

அனேயனுகியுநீர்நசையாற்றலன்வருந்தும்
வினேயனுகிவான திச்சடைவேதியன்பாதத்
தினேயநாதனுந்தன்றிருமுடிபின்மீதிருக்கு
நனேயநாண்மலரோதியைப்பார்த்தொன்றுநவில்வான். (அ)

தேங்குநீர்த்திரைமாலிகைச்செல்வியீயிந்த
வாங்குநீர்த்தடம்புரிசைசூழ்மதுரையின்மாடோ
ரோங்குநீத்தமாயொல்லெனவருதியென்றுரைத்தா
னீங்குநீர்த்திருமாதவணுருமொழிங்கழ்த்தும். (கூ)

அன்றுமெம்பிராணுணையாற்பகீரதன்பொருட்டுச
சென்றுநீயொருநீர்த்தமாய்த்திளைப்பவர்களங்க
மொன்றுநீவினைத்தொடக்கறுத்தெழுகெனப்பணித்தா
யின்றுமோர்நதியாகெனப்பணித்தியேலென்னே. (கo)

தெரிசித்தோர்படிந்தாடிஞேர்செங்கையாலேனும்
பரிசித்தோர்பவத்தொடர்சுமியின்பற்றுவிட்டுள்ளத்
துரிசித்தோர்வுறுபத்தியும்விச்சையுமுணர்வாய்
விரிசித்தோர்வுறுமெய்யுணர்வால்வரும்வீடும். (கக)

தந்திடப்பணித்தருளெனத்தடம்புனற்செல்வி
சுந்தரப்பெருங்கடவுளைவரங்கொண்டுதொழுது
வந்தளப்பிலாவேகமோடெழுந்துமாநதியா
யந்தரத்துகின்றிழிபவளாமெனவருமால். (கஉ)

கலிவிருத்தம்.

திரைவளையணிகரமுடையவள்செழுமணிநகையுடையா
ணுரைவளைதுகிலுடையவள்கொடிநுணுகிடையவளறனீள்
விரைவளைகுழலுடையவள்கயல்விழியுடையவள்வருவாள்
வரைவளைசிலையவன்முடிமடவரனதிவடிவினுமே. (கஙு)

(எ) காவி-செங்கழுநீர். வறப்ப-வற்ற. (அ) நீர்நசை-தாகம். ஆற்றலன்-சகிக்காதவன். இனேய-வருந்த. (கூ) தேங்கு-நிறைந்த. நீர்த்திருமாது-கங்கை. (கo) பணித்தியேல்-கட்டளையிட்டருளினை யாயின். (கக) பரிசித்தோர்-தொட்டவர். (கஉ) வரங்கொண்டு-வரம்பெற்று. (கங) அரல்-கருமணல்.

விரைபடுமகிலரைபொரிதிமில்வெயில்வீடுமணிவரையோ
டுரைபடுமுதுசினேயலறிடவடியொகெடிதகழாக்
குரைபடுகழலிறவுளர்சிறுகுடியடியொடுபறியாக்
கரைபடவெறிவதுவருவதுகடலிசைவளரியெனவே. (கச)

பிணையொடுகலைபிடியொடுகரிபிரிவிலவொடுபழுவப்
பணையொடுகருமுசுவயிறணைபறழொடுதழுவியதன்
றுணையொடுகவியயின்மரங்கிரைதொகையொடுமிறவுளர்வெங
கணையொடுசிலையிதணுடுமெறிகவணுடுகொடுவருமால். (கரு)

அடியிறநெடுவரையுதைவனவகழ்வனவகழ்மடுவைத்
திடரிடுவனமழைசெருகியசினைமரநிரைதலைகீழ்
படவிடிகரைதொறுநடுவனபடுகடலுடைமுதுபார்
நெடுமுதுகிருபிளவுறவருநெடுநதியினவலியே. (கசு)

பிளிறெலியின முதுமரமகழ்பெருவலியினவசையா
வெளிறடிவன வெறிமணியின விரைசெலவின மதமோ
டொளிறளியின நுரைமுகபடமுடையன வெனவரலாற்
களிறனையதுமதுவிதழிகள்கவிழ்சடையணிகுடிஞை. (கஎ)

கீடியபிலமுறுநிலையினநிருமலன்மதிமுடிமீ
தாடியசெயலினவெயிலுமிழருமணிதலையினநீள்
கோடியகதியினநிரைநிரைகுறுகியபலகாலி
ஞெடியவலியினவளையுடலுரகமுமெனவருமால். (கஅ)

மண்ணகழ்தலின்வளையணிகருமாவினையதுமிசைபோய்
விண்ணளவலினவுணர்களிறைவிடுபுனலொடுகெடுகு
மண்ணலையினையதுசுவையிழுதளையளவுறுசெயலாற்
கண்ணனையினையதுநெடுகியக்கிகியகதிதியே. (கக)

திகழ்தருகரியரிகவரிகள்செழுமணியொடிவருமா
றிகழ்தருகுடபுலவரசர்கணிறிசெய்துகவர்திருவோ
டகழ்தருபதிபுருமதிருலவரசனையதையலதேற்
புகழ்தருநிறையிடவருகுடபுலவரசனுங்கரும். (உ0)

(கச) விரைபடு-மணம்பொருந்திய. அரைபொரிதிமில்-அரையில் பொரியினையுடைய வேங்கை. பொரி-பொருக்கு. முதுசினே-பெருங்கினே. கடிது-விரைவாக. அகழா-தோண்டி. இறவுளர்-வேடர். (கரு) கலை-ஆண்மான். பிடி-பெண்யானை. கருமுசு-கருங்குரங்கு. பறழ்-குட்டி. (கசு) திடர்-மேடு. (கஎ) பிளிறெலி-பிளிறுதலாகிய வொலி. வெளில்-வினாமரம்-கட்டுத்தறியுமாம். அளி-குளிர்ச்சி. (கஅ) பிலம்-பாதாளம். ஆடிய-தங்கிய. நீள்கோடியகதியின-நீண்டவளைந்திசெல்லும்வேகத்தின. உரகம்-பாம்பு. (கக) கருமா-பன்றி. நெடுகு மண்ணல்-திரிவிக்கிரமன். இழுது-வெண்ணெய். (உ0) குடபுலம்-மேற்றிசைநாடு. அகழ்தருபதி-அகழ்சூழ்ந்தநகரம்.

ஆரொடுமடலவிழ்பனையொடுமெரிகரிலேந்பத்
தாரொடுபுலியொடுசிலையொடுதகுகயலொடுதழுவா
பாரொடுதிசைபரவியதமிழ்பயிலரசர்கள்குழுமிச்
சீரொடுபலதிருவொடுவருசெயலனையதநதியே. (உக)

கலிநிலைத்துறை.

கல்லார்கவிபோற்கலங்கிக்கலமாண்டகேள்வி
வல்லார்கவிபோற்பலவான்றுறைதோன்றவாய்த்துச்
செல்லாறுதோறும்பொருளாழ்ந்துதெளிநதுதேயத்
தெல்லாரும்வீழ்ந்துபயன்கொள்ளவிறுத்ததன்றே. (உஉ)

வண்டோதைமாமலர்வேணியின்வந்தநீத்தங்
கண்டோதநஞ்சுண்டருள்கண்ணுதன்மூர்த்திபேழ்வாய்
விண்டோதணியாதென்விடாயெனவெம்பிவீழ்ந்த
குண்டோதரனேவிடுத்தானக்குடிஞைஞாங்கர். (உங)

அடுத்தானதியின்னிடைபுக்கிருந்தாற்றலோடு
மெடுத்தான்குறுங்கையிரண்டுங்கரையேறவீட்டித்
தடுத்தான்மலைபோனிரிர்தண்புனல்வாயங்காந்து
மடுத்தான்விடாயுங்கடலுண்ணுமழையுநாண (உச)

தீர்த்தன்சடைகின்றிழிதீர்த்தமருந்திவாக்குக்
கூர்த்தின்புகொண்டுகுழகன்றிருமுன்னரெய்திப்
பார்த்தன்பணிந்தபதமுன்பணிந்தாடிப்பாடி
யார்த்தன்புருவாய்த்துதித்தானளவாதகீதம். (உஙி)

பாட்டின்பொருளானவன்பாரிடவீரன்பாடல்
கேட்டின்பமெய்திக்கணங்கட்குக்கிழமைநல்கி
மோட்டின்புனன்மண்முறைசெய்திருந்தானளகக்
காட்டின்புறம்போய்மடங்குங்கயற்கண்ணியோடும். (உசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தீர்த்தனிதழிச்சடைநின்றுமிழ்ந்துவரலாற்சிவகங்கை
தீர்த்தனுருவந்தெளிவோர்க்குஞானந்தரலாற்சிவஞான
தீர்த்தங்காலிற்கடுகிவருஞ்செய்தியாலேவேகவதி
தீர்த்தங்கிருதமாலையெனவைகைநாமஞ்செப்புவரால். (உஎ)

அன்னக்குழியும் வைகையுமழைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம். கஎ-க்கு திருவிருத்தம்-அஎச.

(உக) ஆர்-ஆத்தி. அரங்கிரிலேந்திம்பம்-அரம்போலும் வடிவினவான வில்லையுடைவேம்பு. (உஉ) கல்லார்-படியாதார். கவி-பாட்டு. மாண்ட-மிகுந்த. துறை-இருபொருட்டுறை. வீழ்ந்து-விரும்பி. முழுகி-பயன். உரை-நீர். (உங) ஓதை-ஓசை. வேணி-சடை. ஓதம்-கடல். வெம்பி-வெதும்பி. குடிஞை-யாறு. (உச) எடுத்தான்-அக்கினான். அங்காந்து-திறந்து. (உஙி) தீர்த்தன்-சிவபெருமான். பார்த்தன்-அருச்சுனன். பிரதைமகன்-பார்த்தன். (உசு) கிழமை-தலைமை-யுரிமை. மண்-மண்ணில். முறை-அரசு. மோடு-உயர்வு. (உஎ) காலில்-காற்றினும். கடுகி-விரைந்து.

ஒன்பதாவது,

எழுகடலழைத்தபடலம்.

கோச்சகக்கலிப்பா.

மூடங்கன் மதிமுடிமறைத்தமுடித்தென்னன்குறட்கன்னக்
கிடங்கரொடுநியழைத்தகிளர்கருணைத்திறனிதுமேன்
மடங்கல்வலிகவர்ந்தான்பொன்மாலைபடிந்தாடவெழு
சடங்கடலுமொருங்கழைத்தன்மைதனேச்சாற்றுவாம். (க)

ஓதவரும்பொருள்வழுதியுருவாகியுலகமெலாஞ்
சீதளவெண்குடைநிழற்றியசெங்கோல்செலுத்துநாள்
போதவரும்பொருளுணர்ந்தவிருடிகளும்புனிதமுனி
மாதவரும்வரன்முறையாற்சந்தித்துவருகின்றார். (உ)

வேதமுனிகோதமனுந்தலைப்பட்டுமீள்வாதேர்
போதளவில்கற்புடையபொன்மாலைமனைபுகுந்தான்
மாதவளும்வரவேற்றமுகமனுரைவழங்கிப்பொன்
னாதனமிட்டஞ்சலிசெய்தரியதவத்திறங்கேட்பாள். (ங)

கள்ளவினைப்பொறிகடந்துகரைகடந்தமறைச்சென்னி
யுள்ளபொருள்பரிவமென்றுணர்ந்தபெருந்தகையடிகே
டுள்ளரியபவமகற்றுந்தவமருள்செய்கெனக்கருணை
வெள்ளமெனமுகமலர்ந்துமுனிவேந்தன்விளம்புமால். (ச)

தவவலியாலுலகீன்றதாதைக்குத்தாயானுய்
சிவபெருமான்மருகனெனுஞ்சீர்பெற்றுயர்திறன்மலயத்
துவசனருங்கற்புடையாய்நீயறியாத்தொல்விரத
மவனியிடத்தெவரறிவாரானுமியம்பக்கேள். (ஞ)

மானதமேவாசிகமேகாயிகமேயெனவகுத்த
வீனமில்சீர்த்தவமூன்றுமிவற்றின்மானதந்தரும
தானமிசைமநிவைத்தறயவுபொறைமெய்சிவனே
மோனமுறத்தியானித்தலெந்தடக்கன்முதலனந்தம். (சு)

(க) மூடங்கல்-வலிவு. மடங்கல்-சிங்கம். (உ) போதவரும்பொருள்-அரியஞானப்பொருள். (ங) வேதமுனிகோதமன்-வேதங்களையுணர்ந்த முனியாகிய கௌதமன். (ச) பவம்-பாவம். (சு) மானதம்-மனத்தாற்செய்வது. வாசிகம்-வாக்காற்செய்வது. காயிகம்-உடம்பாற்செய்வது.

வாசிகமைந்தெழுத்தோதன்மனுப்பஞ்சசாந்திமறை
பேசுசதவுருத்திரந்தோத்திரமுரைத்தல்பெருந்தருமங்
காசகலவெடுத்தோதன்முதலனந்தங்காயிகங்க
ளீசனருசசனைகோயில்வலஞ்செய்கையெதிர்வணங்கல். (எ)

நிருத்தனுறைபதிபலபோய்ப்பணிதல்பணிநிறைவேற்ற
றிருத்தன்முடிநதியாதிதீர்த்தயாத்திரைபோய்மெய்
வருத்தமுறவாடலிவைமுதற்பலவவ்வகைமூன்றிற்
பொருத்தமுறுகாயிகங்கள்சிறந்தனவிப்புண்ணியத்துள். (அ)

திருத்தயாத்திரையதிகமவற்றதிகஞ்சிவனுருவாந்
திருத்தமாங்கங்கைமுதற்றிருநதிகடனித்தனிபோய்த்
திருத்தமாவெதிகந்திருநதிகளைவந்து
திருத்தமாய்நிறைதலிஞலவற்றதிகந்திரைமுந்நீர். (கூ)

என்றுமுனிவிளம்பக்கேட்டிருந்தகாஞ்சனமாலை
துன்றுதிரைக்கடலாடத்துணிவுடையவிருப்பினளாய்த்
தன்றிருமாமகட்குரைத்தான்சிறிதுன்னந்தளர்வெய்திச
சென்றிறைவற்குரைப்பலெனசசெழியர்தவக்கொழுந்தனையாள். (க)

தன்றன்னையுடையபெருந்தகைவேந்தர்பெருமான்முன்
சென்றன்னமெனநின்றுசெப்புவாள்குறள்வீரற்
கன்றன்னக்குழியிலுடுமாறழைத்தவருட்கடலே
யின்றன்னைகடலாடவேண்டிஞளென்றிரந்தாள். (கக)

தேவிதிருமொழிகேட்டித்தென்னவராய்நிலம்புரக்குங
காவிதிகழ்மணிகண்டர்கடலொன்றேறவெழுகடலுங
கூவிவரவழைத்துமெனவுன்னினர்குணபாலோர்
வாவியிடையெழுவேறவண்ணமொடும்வருவனவால். (கஉ)

துண்டமதித்திரளனையசுரிவளைவாய்விடவுதைத்து
வெண்டவளநுரைததும்பச்சுருவேறுமிசைக்கொட்பத்
தண்டாரளமணித்தொகுதியெடுத்தெறியுந்தரங்கநிரை
யண்டநெடுமுகடிரிஞ்சவார்த்தெழுந்தகடலேழும். (கங)

(எ) காசு-குற்றம். (அ) ஆடல்-முழுகுதல். (கூ) முந்நீர்-சமுத்திரம். (கo) துன்று-நெருங்கிய. (கக) தன்றன்னை-தன்னை. உடைய-மனை வியாகஉடைய. வேந்தர் பெருமான்-அரசர்க் கரசனுன சௌந்தர பாண்டியன். வேண்டிஞன்-விரும்பினன். (கஉ) காவி-நீலோற்பலம். (கங) தரங்கநிரை-அலைவரிசை. உரிஞ்ச-வருட.

காணுமாநகர்பனிப்பக்கலிமுடிவினயன்படைப்புக்
கோணுமாறெழுந்தசெனக்கொதித்தெழுந்தகடலரவம்
பூணுநாயகனகிலபுவனமெலாங்கடந்திரு
வாணையாலவனடிசென்றடைந்தார்போலடங்கியதால். (கச)


தன்வண்ணமெழுகடலின்றனிவண்ணமொடுகலந்து
பொன்வண்ணநறும்பொகுட்டுப்பூம்பொய்கைபொலிவெய்தி
மின்வண்ணச்சடைதாழவெள்ளிமணிமன்றுடு
மன்வண்ணமெனவெட்டிவண்ணமொடும்வயங்கியதால். (கடு)

எழுகடலழைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம். கள-க்கு திருவிருத்தம்-அசுரு.

பத்தாவது,

மலயத்துவசனை யழைத்தபடலம்.



கலிவிருத்தம்.

எழுகட லழைத்தவா றியம்பிலு மினிச்
செழுமதி மரபினேன் சேணிழிந்ததன்
பழுதில்கற் பில்லொடும் பரவை தோய்ந்தர
னழகிய திருவுரு வடைந்த தோதுவாம். (க)

புரவலன் றடாதகைப் பூவை யோடும்வந்
தரவுநீர்க் கடன்மருங் குடுத்த சந்தன
மரவமந் தாரமா வகுளம் பாடலம்
விரவுநந் தனத்தரி யணையின் மேவினான். (உ)

தாதவிழ் மல்லிகை முல்லை சண்பகப்
போதுகொ யதிகையருஞ் சேடிப் பொற்றொடி
மாதருங் கொடுத்திட வாங்கி மோந்துயிர்த்
தாதர மிரண்டற வமரு மெல்லியில். (ங)

(கச) மாநாகர்-தேவர். கோணுமாறு-தவறும்வண்ணம். (கடு) பொலிவெய்தி-பிரகாசித்து. வண்ணம்-நிறம். (க) சேணிழிந்து-சுவர்க்கத்தினை விடுத்து. பரவை-கடல். (உ) புரவலன்-அரசன். உரவு-முழங்குகின்ற. (ங) சேடிப்பொற்றொடிமாதர்-சேடிகளாகிய பொன்னன்தெடியணிந்த பெண்கள்-சேடி-தோழி-பொற்றொடி-பொன்வளையல்.

தன்னமர் காதலி தன்னை நோக்கியே
மன்னவ னுன்பொருட் டேழு வாரியு
மிங்ஙன மழைத்தன மீண்டுப் போந்துநி
னன்னையை யாவெ னழைத்தி யாலென. (சு)

மடந்தையு மன்னையைக் கொணர்ந்து வாவிமா
டடைந்தன ளாகமற் றவள்பு ராணநூற்
படர்ந்தகேள் வியர்தமை நோக்கிப் பௌவநீர்
குடைந்திடும் விதியெவன் கூறு மென்னவே. (கு)

கோதறு கற்பிலுய் கொழுநன் கைத்தலங்
காதலன் கைத்தல மன்றிக் கன்றின்வா
லாதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே
யோதநீ ராடுதன் மரபென் றுரைத்திரு. (கூ)

மறையவர் வாய்மைபொன் மாலை கேட்டுமேற்
குறைவறத் தவஞ்செயாக் கொடிய பாவியேற்
கிறைவனுஞ் சிறுவனு மில்லை யேயினிப்
பெறுவது கன்றலாற் பிறிதுண் டாகுமோ. (எ)

ஆதலாற் கன்றின்வால் பற்றி யாடுகோ
மாதரா யென்றுதன் மகட்குக் கூறலும்
வேதன்மால் பதவியும் வேண்டி ஞர்க்கரு
ணைதரு ருயிர்த்துணை யாய நாயகி. (அ)

தன்னுயிர்க் கிழவனை யடைந்து தாழ்ந்துதன்
னன்னைதன் குறையுரை யாட வாண்டகை
மன்னவன் வலாரியோ டொருங்கு வைகிய
தென்னவன் மேன்மனஞ் செலுத்தி ஞனரோ. (கூ)

மேற்படி வேறு.

ஞலையத் திரியார் திருவுள்ள முணர்ந்
தலையத் திரியட் டவரு தனித்
தூலையத் திரியொத் தவிமா னமொடு
மலையத் துவசச் செழியன் வருமால். (கo)

(சு) ஈண்டுப்போந்து-இங்கெய்தி. (கு) பௌவநீர்-கடனீர். குடைந்திடும்-முழுகுகின்ற. (கூ) கோதறு-குற்றமற்ற. காதலன் - மகன். கன்றின்வால்-பசுவின்கன்றின்வால். (எ) வாய்மை-உண்மைமொழி. இறைவனும்-நாயகனும். (கூ) உயிர்க்கிழவன்-பிராணநாதன். உரையாட-சொல்ல. (கo) ஞலை அத்திரி-வில்லாகியமலை. அலையத்திரி-பறக்குமலை. உலையத்திரி-உலையிலுள்ள அத்திரி-அதுதருத்தி. ஒத்தல்-தருத்தியையொப்ப சுருங்கி விரிதல்.

மண்பே றடைவான் வருமேழ் கடல்வா
யெண்பே றடையா வருளின் னமுதைப்
பெண்பே றதனற் பெறுபே றிதெனுக்
கண்பே றடைவா னெதிர்கண் டனனே. (கக)

வந்தான் மருகன் சரணம் பணிவான்
முந்தா முனமாம னெனும் முறையா
லந்தா மரையங் கையமைத் துமகட்
டந்தா னையெதிர்ந் தூதழீ யினனுல். (கஉ)

ஆத்தன் றிருவுள் ளமகிழ்ந் தருளாற்
பார்த்தன்பு நிரம்பிய பன்னி யொடுங்
தீர்த்தம்புகுந் தாடிய செல்க வெனப்
பூத்தண் பொருனைப் புனலு டவனும். (கங)

முன்னேத்தவ மெய்தி முயன்று பெறு
மன்னப் பெடையன் னவள்வந் தெதிரே
தன்னேத் தழுவத் தழுவிக் கிரிவேந்
தென்னைக் குறையா மகிழ் வெய்தினனே. (கச)

தண்டே மொழிவேள் விதவக் குறையாற்
கண்டே னிலனென் றுகருத் தவல
முண்டே யஃதிவ் வுவகைக் களிதேன்
வண்டே யெனவுண் டுமறந் தனனுல். (கஞ)

சேணுற் றவனைச் சிலநாள் கழியக்
காணுற் றவள்போ னிறைகற் புடையாள்
பூணுற் றுமலர்ந் தெதொர்பொற் கொடிபோ
லுணுற் றெதிர்நண் ணியிறைஞ் சினளால். (கசு)

மஞ்சோ தியகாஞ் சனமா லகையிற்
பைஞ்சோ திவிளங் குபவித் திரையாய்ச்
செஞ்சோ திமுடிச் சிவநா முவெழுத்
தஞ்சோ திநெடுங் கடலா டுமரோ. (கஎ)

(கக) எண்பேறு-எண்ணுதலாகியபேறு. அருள்இன்னமுது-அருளுருவுனை சிவபெருமான். பேறு-பயன். (கஉ)முறையால்-வரிசையால். மகட்டந்தான்-மலயத்துவசன். (கங)ஆத்தன்-சிவபெருமான். ஆடிய-ஆட. (கச) கிரிவேந்து-மலையரசன். (கஞ)வேள்வி-திருமணம். (கசு) சேணுற்றவனை-சுவர்க்கமடைந்த மலயத்துவசனை. (கஎ) மஞ்சோதி-மேகம்போலுங்கூந்தல். பைஞ்சோதி-பசியகிரணம். பவித்திரை-பவித்திரமுடையவள்.

துங்கக் கலேவே தியர்தொன் மறைநூற்
சங்கற் பவிதிப் படிதன் றுணைகை
யங்கைத் தளிர்பற் றியகத் துவகை
பொங்கப் புணரிப் புனலா டினளே. (கஅ)

குடைந்தார் கரையே றினர்கொன் றைமுடி
மிடைந்தார் கருணைக் கண்விழிக் கமல
முடைந்தா ரனைமா ருத்ரங் குறுகா
தடைந்தா ருமைபா கரருட் படிவம். (ககூ)

ஒண்கொண் டன்மிடற் றெளியும் மொருநா
லெண்கொண்ட புயத்தெழிலும் மழல்சேர்
கண்கொண் டநுதற் கவினும் பொலியா
மண்கண் டெியப் பவயங் கினளுல். (உo)

விண்ணின்று வழுக்கி விழுங்கதிர் போற்
கண்ணின் றநுதற் கருணை கான்வா
ழெண்ணின் றபுரத் தினிழிந் திமையா
மண்ணின் றதொர்தெய் வவிமான மரோ. (உக)

அத்தெய் வவிமா னமடித் திடலு
முத்தெய் வதமுக் கணவன் பணியா
னத்தெய் வதருக் கரனங் கையொடு
மெத்தெய் வதமுந் தொழவே றினளுல். (உஉ)

தேமா ரியெனும் படிசிந் தநறும்
பூமாரி பொழிந் ததுபொன் னுலகந்
தூமா மறையங் கரதுங் துபிகா
ராமா மெனவெங் குமதிர்ந்தனவால். (உங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எழுந்ததுவிமான மவ்வானமெழுந்ததுந் துபியுநாணி
விழுந்ததுபோலுமென்னவரவொலியெங்கும்விம்மத்
தொழுந்தகைமுனிவரேத்தச்சுராதிகள்பரவத்திங்கட்
கொழுந்தணிவேணிக்கூத்தர்கோநகர்குறித்துசெல்வார். (உச)

(கஅ) துங்கம்-உயர்ச்சி. மறைநூற் சங்கற்பவிதி-வேதோக்தமாகச் செய்யும் சங்கற்பவிதி. உவகை-மகிழ்ச்சி. (ககூ) ஏறினர்-ஏறினவர் கன். மிடைந்தார்-அணிந்தவர். அருட்படிவம்-சிவசாரூபம். (உo) மிடறு-கழுத்து. எழில்-அழகு. பொலியா-விளங்கி. வயங்கினன்-விளங்கினன். (உக) வழுக்கி தவறி. கருணைகரன்-சிவபெருமான். (உஉ) நத்தெய்வதருக்கரன் என்புழி-நகரம் சிறப்புப் பொருட் கண் வந்தது; நக்கீரனுர் - நப்பாலத்தனுர். என்பனவற்றின் நகரம் போல. (உங) தேமாரி-தேன்மழை. கார்-மேகம். தூமாமறை-தூய்மையான சிறந்த வேதங்களும். (உச) விம்ம-நெருங்க. தகை-தகுதி. சுராதிகள்-தேவர் முதலியோர்.

முன்புதன் னுருவாய்வையமுறைபுரிகோல்கைக்கொண்டு
பின்புதன் னுருவந்தந்தமருகனும்பெருகுகேண்மை
யன்புதந்தருகுன்றதடாதகையணங்குமீண்டு
பொன்புனைகுடுமிக்கோயில்புகுந்துநன்கிருப்பக்கண்டார். (உடு)

முன்னைவல்வினையால்யாக்கைமுறைதடுமாறித்தோற்ற
மன்னியமனிதர்போலப்பண்டையவடிவுமாறி
யன்னையேமகளாயீன்றவப்பனேமருகனுக
வென்னையாநோற்றேமியார்க்குமியற்றருந்தவந்தானென்னு. (உசு)

கன்றகலான்போலியன்கனைகழல்விடாதுபற்றி
யொன்றியவன்புபின்னின்றீர்த்தெழுவுள்ளத்தோடுஞ்
சென்றிருகண்ணுமுட்டியடிக்கடிதிரும்பிநோக்கக்
குன்றுழற்விமானந்தன்னையஞ்சலிகூப்பிசெல்வார். (உஎ)

மேற்படி - வேறு.

புவலோகங்கடந்துபோய்ப்புண்ணியருக்கெண்ணிறந்தபோக
மூட்டுஞ், சுவலோகங்கடந்துபோய்மகாலோகஞ்சனலோகந்தாண
துமேலத்,தவலோகங்கடந்துபோய்ச்சத்தியலோகங்கடந்ததண்டு
ழாயோ, னவலோகங்கடந்துலகநாயகமாஞ்சிவலோகநண்ணினரே.

அறக்கொடிபின்னிறைமகனேயடிபணிந்தனையீன்றார்க்காதி
வேக, மறைப்பொருடன்வடிவளித்தவரளின்மனநிறைமகிழ்ச்சிவா
ய்கொள்ளாமற், புறப்படுவதெனவிரண்டிருசெவிக்குஞ்செங்குமு
தம்பொதிந்தீந்தே, னிறைப்பதெனப்பன்முறையாற்றுதிசெய்து
தொழுதொன்றுங்கழ்ந்தாரின்றுள். (உக)

எண்ணிறந்தேவர்க்கும் யாவர்க்கும் பயன்சுரக்குமிமையோர்
காட்டுப், புண்ணியவான் றன்புனிற்றுக்கன்றுக்குக்குறைவேதென்
பொருட்டென்னீன்று, ளெண்ணியதுகடலொன்றேயெழுகடலுமீ
ண்டழைத்தாயீன்றாளாட, விண்ணிருந்தகணவனேயும்விளித்தனரு
ள்வடிவளித்துன்மேனடந்தாய். (ரு0)

(உடு) தன்னுருவாய்-பாண்டியனுய். பின்பு தன்னுருவந்தந்தமரு கன்-பின்னர் தனதுருவினைப் பாண்டியனை மலயத்துவசற் களித்த சிவபெருமானை மருகன். (உசு) முன்னை வல்வினை-இறந்த காலத்துச் செய்த வலியவினை. யாக்கை-உடலம். முறைதடுமாறிவரிசைக்கிரமமாறி, (உஎ)கன்றகலான்போல்-கன்றைப் பிரிந்த பசுவைப்போல். கனைகழல்-ஒலிக்குங்கழல். (உஅ)தண்டுழாயோன்-திருமால். நவம்-புதுமை. நாயகம்-தலைமை. (உக) அறக்கொடி-தருமசொரூபியான தடாதகை. (ரு0) பயன்-பால். புண்ணியவான்-காமதேனு.


தென்னர்மரபிறந்ததெனப்படு பழியிலாழவருஞ்செவ்விநோக்கிப், பொன்னவிர்தார்முடிபுனைந்துகோலோச்சிவருகின்றுய்போலுமேலு, மிந்நிலைமைக்கிடையூறுமினியின்றேயெனத்தலைவியியும்பலோடுந், தன்னிறைவியுட்கோளையகங்கொண்டுமகிழ்ந்திருந்தான் றமிழ்நர்கோமான். (கூக)

மலயத்துவசனையழைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - கசு-க்கு திருவிருத்தம் - கூஉ0.

பதினேராவது,

உக்கிரபாண்டியர் திருவவதாரப்படலம்.



கலிநிலைத்துறை.

மன்னவன்குலசேகரன் றிருமகன்மனைவி
தன்னெஞ்சுகடலாடியதகுதியீதந்தத்
தென்னவன்றனித்திருமகடிருவுளங்களிப்ப
வுன்னருந்திறலுக்கிரனுதித்தவாறுரைப்பாம். (க)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தண்ணிலாமௌலிவேய்ந்தசுந்தரசாமிஞாலத்
தெண்ணிலாவைகறன்னதிணையடிநிழல்போல்யார்க்குந்
தெண்ணிலாக்கவிகைநீழல்செய்தருட்செங்கோலோசசி
யுண்ணிலாவுயிர்தாஞகிழுறைபுரிந்தொழுகுநாளில். (உ)

கரியவன்கமலச்செம்மன்மறைமுதற்கலைகள்காண்டற்
கரியவனன்பர்க்கென்றுமெளியவனுகுமேன்மை
தெரியவன்பகன்றசிந்தைத்தென்னவன்றனக்குங்கற்பிற்
குரியவடனக்குங்காதன்மகளெனவுமையைத்தந்தான். (ங)

மற்றதற்கிசையத்தானுமருமகஞகிவைய
முற்றும்வெண்குடைக்கீழ்வைகுமுறைசெய்தாஞகமூன்று
கொற்றவர்தம்மிற்றிங்கட்கோக்குடிவிழுப்பமெய்தப்
பெற்றதுபோலுமின்னும்பெறுவதோர்குறைவுதீர்ப்பான். (ச)

(கூக) உட்கோள்-அபிப்பிராயம். (க) குலசேகரன்மகன் - மலயத்துவசன். திறல்-வெற்றி. (உ) மௌலி-கிரீடம். (ங) கரியவன்-காராயணன். (ச) மூன்றுகொற்றவர்-தமிழ்நாட்டு மூவேந்தரான சேர சோழபாண்டியர். திங்கட்கோக்குடி-சந்திரன்வழிவந்தபாண்டியன் மரபு.

ஒன்றினைச்செய்கைசெய்யாதொழிகைவேரொன்றுசெய்கை
யென்றிவையுடையோனுதியீறிலாப்பரமயோகி
நன்றுதீதிகழ்ச்சிவேட்கைநட்பிகல்விளக்குமாயை
வென்றவன்செய்யுமாயைவிருத்தியாரளக்கவல்லார். (ரு)

இந்திரசாலவிசைசாட்டுவானென்னத்தன்பாற்
செந்தழலுட்டமீன்றசெல்வனேக்கருப்பமெய்தா
தந்தமிலுயிருஞாலமனைத்தையுமீன்றதாயாஞ்
சுந்தரவல்லிதன்பாற்றோன்றுமாறுள்ளஞ்செய்தான். (சு)

அங்கவன்வரவுக்கேற்பவாயமும்பிறருந்தாழ்ந்து
மங்கைநின்வடிவுக்கேற்பக்கருவுருவனப்புஞ்சீருந்
திங்கடோறுற்றுமன்றச்செவ்வியுங்காணவாசை
பொங்கியதெங்கட்கென்றூர்புனிதையப்படிபோலாளுள். (எ)

கருமணிச்சிகரச்செம்பொற்கனவரையனையகாட்சித்
திருமுலையமுதம்பெய்தசெப்பிண்டனையவாக
வருமுலகமந்தமாயந்தமருங்குலும்வந்துதோன்ற
வருள்கனிந்தனையாணவிற்கின்சுவையார்வம்பொங்க. (அ)

என்னவுமெளியவேனுமரியனவென்னவேட்டா
ளன்னவும்போகபூமியரும்பெறலுணவுநல்கிப்
பன்னகரமுதுந்திங்கட்படிசுவையமுதுந்தெய்வப்
பொன்னகரமுதுமாசைபுதைபடக்கணங்கணல்க. (கூ)

புண்ணியமுனிவர்வேதபண்டிதர்போந்துவேந்தர்க்
கண்ணியசடங்குசூழ்தாரருங்கடிவெள்ளத்தாழ
வெண்ணியதிங்கடோறுமியற்றவிக்கன்னித்தேயம்
பண்ணியதருமச்சார்பாற்படுபயன்றலைப்பாடெய்த. (கo)

மாசறத்துறந்தோருள்ளமானவான்களங்கமில்க
ழீசர்தங்கிழமையென்னுமிந்துவாதிரைநாள்செய்த
பூசையின்பயன்றானெய்தவெரிபசும்பொற்கோள்வந்து
தேசொடுகேந்திரத்திற்சிறந்தநல்லோரைவாய்ப்ப. (கக)

(ரு) ஒன்றினைச்செய்கை-கர்த்திருத்துவம். செய்யா தொழிகை-அகர்த்திருத்துவம். வேரொன்று செய்கை-அன்னியதாகர்த் திருத்துவம். ஆதி-ஈறிலா பரமயோகி. ஆதிமத்தியாந்த ரகிதனென-சிறந்த சுவாமி. (சு) இந்திரசால விசசை-இந்திரசால மென்னு நூலிற் கூறும் வித்தை. சுந்தரவல்லி-அழகிய கொடிபோல்வாளான தடாதகை. செந்தழ லுட்டமீன்ற செல்வனே-குமரக்கடவுளே. (எ) ஆயம்-மகளீர் கூட்டம். (அ) மருங்குல்-இடை. பொங்க-அதிகரிக்க. (கூ)போகபூமி-சுவர்க்கம். திங்கள்-மாதம். போகபூமியை-ஆதியரிவஞ் சமாதியென்ப. அவை புறமதக் கொள்கையாதலினன்றன்றென்க. (கo) வேந்தர்க் கண்ணிய-அரசர்க் கடுத்த. சடங்கு-கருப்பக்கிரியை. (கக) மான-ஒப்பு. இந்து-சோமவாரம். பொற்கோள்-பொன்னெய கோள். அது-குரு.

மோந்தைநாண் மறைகடாமேழங்கமந்தாரமாரி
சிந்தைநாண்மலர்பூத்தாடுமின்னெனத்திசைகடோறு
மந்தரமகளிராடத்துந்துபியைந்துமார்ப்ப
விந்தையுந்திருவும்வெள்ளைக்கிழத்தியும்வீறுவாய்ப்ப. (கஉ)

அந்தணர்மிழ்ச்சிதூங்கவடித்தவர்வளர்க்குமுன்னர்
மந்திரவேள்விச்செந்தீயலஞ்சுழித்தெழுந்தார்த்தாடச்
சிந்துரநுதன்மாவெட்டுஞ்சேடனும்பொறையெய்ப்பாற
விந்திரன்மேருப்புத்தேள்புனலிறைக்கிடத்தோளாட. (கஊ)

ஆலத்தையமுதமாக்குமண்ணலுமணங்குங்கொண்ட
கோலத்துக்கேற்பக்காலக்குழந்தைவெங்கதிர்போலன்றைக்
காலத்திலுதித்தசெய்போற்கண்மழைபிலிற்றுநிம்ப
மாலத்தோட்செழியன்செல்வமகள்வயிற்றுரோன்றிஞனே. (கஎ)

எடித்தனண்மோந்துபுல்லியேந்தினள்காந்தன்கையிற்
கொடித்தனள்வாங்கிவீங்குகொங்கைகின்றிழிபால்வெள்ளம்
விடித்தனள்குமுதப்போதில்வெண்ணிலாவெள்ளம்போல்வாய்
மடித்தனளருத்திஞடன்மைந்தனேயெம்பிராட்டி. (கஏ)

சலத்தலைக்கிடக்கைப்புத்தேடருந்திழல்வாழ்க்கைப்புத்தே
ளலர்த்தலையிருக்கைப்புத்தேளாதிப்புத்தேளிர்வேதப்
புலத்தலைக்கேள்விசான்றபுண்ணியமுனிவரேனோர்
குலத்தலைமகளிரோடுங்கோமகன்கோயில்புக்கார். (கஐ)

குடபுலத்தரசும்பொன்னிக்குளிர்புனற்கோழிவேந்தும்
வடபுலத்தரசர்யாருங்குறுநிலவாழ்க்கைச்செல்வத்
தடல்கெழுதொண்டைத்தண்டாரரசொடுமனிகளுஞ்சூழக்
கடல்கணுற்றிசையும்பொங்கிவருவபோற்கலிப்பவந்தார். (கஒ)

மன்னனைத்தேவிதன்னைமுறையிறைவழுத்திவாழ்த்தி
நன்னர்கோளாகியோகைநவின்றுவெண்மழுமானீத்த
தென்னவர்பெருமான்றேவிதிருமுகக்கருணைபெற்றுப்
பொன்னடிபணிந்துதம்மூர்போகுவாரினையசொல்வார். (கஅ)

(கஉ) அந்தரமகளிர்-அரம்பையர். (கஙூ) சிந்துரநுதன்மா-சிந்துரதிலதந்தீட்டிய நெற்றியினையுடைய ஐராவதமுதலிய திக்குயானைகள். (கசு) ஆலம்-விடம். காலக்குழந்தைவெங்கதிர். உதையகாலத்தினஞ்சுரியன். (கஞ) மோந்து-முத்தங்கொண்டு. காந்தன்-நாயகன். (கசு) சலத்தலைக்கிடக்கைப்புத்தேள்-பாற்கடலிற்பள்ளிகொண்ட நாராயணமூர்த்தி. (கஎ) குடபுலம்-மேற்றிசைநாடு. கோழிவேந்து-சோழன். (கஅ) நன்னர்கோளாகி-சுபம் விசாரிப்பவர்களாய்.

வழுதியர்பெருமான் றன்பாற்கந்தனேவந்தா்னென்பார்
பழுதறுகற்பினுடன்பாக்கியமிதுவேயென்பா
ரழகினுன்மதனும்பெண்மையவாவுமிவன்கோலாணை
யெழுகடலுலகோவையமேழையுங்கர்க்குமென்பார். (கக)

மனிதர்வான்றவமோதென்பார்வைகுவோர்தவமோவானப்
புனிதர்வான்றவமோவேள்விப்பூசரர்தவமோகேள்வி
முனிவர்வான்றவமோவீறுமுதலிலாமுதல்வனுள்ளக்
கனிதருகருணைபோலிக்காதலன்றோற்றமென்பார். (கo)

தருமமாதவத்தின்பேறுவருத்தமார்தவத்தின்பேறு
பெருமைசால்காமநோற்றபெருந்தவப்பேறுவெய்தற்
கருமையாம்வீடுநோற்றவருந்தவப்பேறுவிந்தத்
திருமகனென்றுதம்மில்விஞ்மகிழ்சிறப்பச்சென்றார். (கச)

அவ்வவர்மனைகடோறுமங்கலவணிகளாகக்
கௌவைமங்கலங்களார்ப்புக்கடிநகரெங்கும்பொங்க
நெய்விழாவெடுப்பக்கேள்விநிரம்பியமறையோர்க்கீந்த
தெய்வமாதானநீத்தந்திரைக்கடன்மடித்ததம்மா. (கஉ)

சுண்ணமும்பொரியுந்தூவெள்ளரிசியுந்தூர்வைக்காடுந்
தண்ணறுஞ்சிவிறிவீசுதண்பனிநீருஞ்சாந்து
மெண்ணெயுநான்ச்சேறும்பசையறவெடுத்துவாரிக்
கண்ணகனகரமெங்குங்கழுவினதானவெள்ளம். (கஞ)

செம்பொன்செய்தருத்திதூம்புசெய்குழல்வட்டமாக
வம்பொன்செய்சிவிறிவெண்பொனண்டைகொண்டாரந்தூங்கும்
வம்பஞ்சுமூலியிளருமைந்தருமாறியர்ட
வம்பஞ்சுமாறிமாறியனங்களுமாடல்செய்தான். (கச)

இன்னணங்களிப்பமூதூரிந்தூவாதிரைந்நாளிற்
பொன்னவன்கேந்திரித்தபுனிதலக்கினத்திற்போந்த
தென்னவர்பெருமான்சேய்க்குச்சாதகச்செய்கியர்தீ
மன்னவர்க்கியன்றவேதமரபினுல்வயங்கவாற்றி (கடி)

(கக) கோலாணை-கோலின்திகாரம். (கo) தென்பார் - தமிழ் நாடு. காதலன்-மகன். (கச) அருத்தம்-பொருள். (கஉ) கடி-உச்சவம். நெய்விழா-எண்ணெயாட்டு. (கஞ) தூர்வை-அறுகு. சிவிறி-நீர்த்தருத்தி. (கச) தூம்பு-துவாரம். அண்டை - அண்டா. (கடி) சேய்க்கு-மகனுக்கு.

கரியவெண்டிரைநீர்ச்செல்வன்கல்லிறகரிந்தவென்றித்
தெரியலனுலகந்தாங்குதெய்வதவரைக்கோஞதித்
தரியலர்வீரஞ்சிந்தத்தருக்கழிந்தச்சந்தோற்றற்
குரியகாரணத்தாலுமமூக்கிரவருமனென்றான். (உசு)

நாலாகுமதியிற்சந்திமிதிப்பதுநடாத்தியாறும்
பாலாகுமதியிலன்னமங்கலம்பயிற்றியாண்டின்
மேலாகுமதியிற்கேசவினேமுடித்தைந்தாமாண்டி
னூலாறுதெரிந்துபூணனூற்கடமுமுடித்துப்பின்னா. (உஎ)

பதங்கிரைபாழிச்சாகையாரணம்பிணத்தவேத
முதனிரைக்கலையும்வென்றிமூரிவிற்கலையும்வாளு
மதங்கிரையொழுகுமையன்மாங்கிரைவையம்பாய்மா
விதங்கிரையேற்றமற்றுமுணர்த்திஞன்வியாழப்புத்தேள். (உஅ)

குருமுகத்தறியவேண்டுமென்பதோர்கொள்கையாலே
யொருமுறைகேட்டாங்கெண்ணெண்கலைகளுமொருங்குதேறி
யரனலதொருவராலுந்தேற்றுவதருமையாலப்
பரனிடைத்தெளிந்தான்பாசுபதாத்திரப்படையுமன்னே. (உகூ)

எல்லையில்கலைகளெல்லாமகவைநாலிரண்டின்முற்றத்
தொல்லறிவுடையனுகிக்குரவரைத்தொழுதுபோற்ற
வல்லவனுகியன்னர்மகிழ்ச்சிகொள்கலனுய்வென்றிச்
செல்வவேற்றிளையரோடுந்திருவிளையாடல்செய்வான். (ஈ0)

புகர்மதவேழமூட்டிப்போர்விளையாடிவென்றுந்
தகரொடுதகரைத்தாக்கித்தருக்கமாடிவென்றும்
வகிர்படுகுருதிச்சூட்டுவாரணமாடிவென்று
நகைமணிப்பலகைசெம்பொனுன்குறுப்பாடிவென்றும். (ஈக)

காற்றினுங்கடியமாவிற்காவதம்பலபோய்மீண்டுங்
கூற்றினுங்கொடியசீற்றக்குஞ்சரமுகைத்தும்வைகை
யாற்றினுய்யானத்தாவியகத்தினுளின்பந்துய்த்தும்
வேற்றிறன்மைந்தரோடுமல்லமாவிளைத்துவென்றும். (ஈஉ)

(உசு) தோற்றற்கு-உண்டாதற்கு. (உஎ) அன்னமங்கலம்பயிற்றல்-சோறூட்டுதலாகிய நற்சடங்கினைச்செய்தல். (உஅ) பதங்கிரை-பதவுரிசை. பாழி-அகன்ற. ஆரணம்-வேதம். (உகூ) பாசுபாத்திரம்-சிவபெருமானுடைய ஓரத்திரவிசேடம். (ஈ0) அகவை-யாண்டு. (ஈக) புகர்-புள்ளி. தகர்-யாடு. சூட்டு-உச்சிக்கொண்டை. வாரணம்-கோழி. (ஈஉ) மாவில்-குதிரையில். குஞ்சரம்-யானை.

சந்தவெற்படைந்துவேட்டஞ்செய்துமச்சைலவாழ்க்கை
யந்தணராசிகூறவவர்தொழில்விஞ்சியமன்னர்
கந்தமென்கனிவிருத்தாண்கைதழீஇக்களித்துமீண்டு
மிந்தவாறைம்மூவாண்டுகழியமேலெய்துமாண்டில். (ஙஙு)

சூர்முதறடிந்ததங்கடோன்றலேயிவனென்றெண்ணிக்
கார்முகமயிலும்வேலுங்கைவிடாக்காக்குமாபோல்
வார்முகமுலையினரும்வடிக்கணுமருங்குமொய்ப்பக்
கூர்முகவேலானின்னகொள்கையனகத்தாதை. (ஙஎ)

பங்கயசெவ்வித்தாகிக்கண்மனம்பருகுகாந்தி
யங்கழற்காலுஞ்சொன்னவடைவினிற்றிரண்டுநீண்ட
சுகமும்வட்டந்தோன்றச்செழுமுழந்தாளுநால்வாய்த்
துங்கவீர்ங்கவுண்மால்யானைத்துதிக்கைபோற்றிரள்கவானும். (ஙஙு)

சிறுகியவயிறுந்தாழ்ந்தநாபியுஞ்செவ்விநோக்கு
மறுவில்கண்ணடியினன்னகடியகல்வரைகொண்மார்பு
மெறியிசைவீணைத்தண்டினினேந்துதீண்டிழிந்தகையும்
வெறியதார்கிடந்தமேருவெற்பிரண்டனையதோளும். (ஙசு)

வலம்புரியென்னவாய்ந்தகண்டமுமலராண்மன்னும்
பொலம்புரிகமலமன்னவதனமும்பொதுவாஞ்சுக்கி
நிலம்புரிதவப்பேறன்னவடிவெலாநின்றுநின்று
நலம்புரிநூலாஞ்சுசோதிப்பானடிக்கவல்லான். (ஙஎ)

உன்னதமாறுதீண்டவுறுப்பைந்துசுக்கந்தானு
மன்னதுகுறுக்கநான்காமகலுறுப்பிரண்டேழாகச
சொன்னதுசிவப்புமூன்றுகம்பீரந்தொகுத்தவாறே
யின்னவைவிரிகினெண்ணுன்கிலக்கணவுறுப்பாமென்ப. (ஙஅ)

வயிறுதோணெற்றிநாசிமார்புகையடியிவ்வாறு
முயரில்வான்செல்வனுகுமொளிகவர்க்கண்கபோலம்
புயல்புரைவள்ளற்செங்கைபுதுமணங்கவருந்துண்டம்
வியன்முலைநடுமார்பைந்துதீண்டவேல்விஞ்சுகுன்மை. (ஙக)

(ஙஙு) சந்தவெற்பு-சந்தனமலை, அது பொதியை. சைலம்-மலை. (ஙசு) சூர் முதல்-சூரனுகிய முதல். தோன்றல்-குமரவேள். (ஙஙு) காந்தி-ஒளி. (ஙசு) நாபி-கொப்பூழ். (ஙஎ) பொலம்புரி-பொன்னை. (ஙஅ) சுக்கம்-சிறுமை. (ஙக) வான் செல்வம்-உயர்ந்த செல்வம்.

நறியபூங்குஞ்சிதொக்குவிரற்கணுகம்பல்லேந்துஞ்
சிறியவேலாயுள்கோசஞ்சங்கநாழுதுகிங்நான்குங்
குறியவேற்பாக்கியப்பேரூஞ்சிரங்குளமென்ரூய்ந்தோ
ரறியுமிவ்வுறுப்பிரண்டுமகன்றவேலிதுவுநன்ரும். (சஅ)

அகவடியங்கைநாட்டக்கடையிதழண்ணநாக்கு
நகமிவையேழுஞ்சேந்தநன்மையாற்பெறுமாவின்ப
மிகல்வலியோசைநாபியென்றிவைமூன்றுமாழ்ந்த
தகைமையாலெவர்க்குமேலாநன்மைசாறக்கோனென்ரு. (சக)

எல்லையின்மூர்த்திமைந்தனிலக்கணநிறைவிரேடு
நல்லவாங்குணனுநோக்கிப்பொதுவறஞாலங்காக்க
வல்லவனுகிவாழ்நாணனிபெறவல்லனென்ரு
வல்லணிமிடற்ரூன்பின்னுமனத்திரூளளந்துசூழும். (சஉ)

இத்தகுபண்புசான்றநீர்மையாலிசைமைநீதி
வித்தகநல்லவுள்ளமுடைமைமெய்வீறுதெய்வ
பத்திமையுலகுக்கெல்லாமகிழ்சகிசெய்பண்புசாந்த
சித்தமெவ்வுயிர்க்குமன்புசெய்கைநல்லீகைகல்வி. (சங)

வெல்லுதற்கரியார்தம்மைவெல்லுதறேவராலுஞ்
செல்லுதற்கரியதேத்துஞ்சென்றிடுதிறையுங்கோடல்
புல்லுதற்கரியஞாலமாலேபோற்புயத்திலேந்திச
சொல்லுதற்கரியகீர்த்தியுலகெலாஞ்சுமப்பவைத்தல். (சச)

என்றிவையாதியாயவியற்குணமுடையனுகி
நன்றிசெய்துலகுக்கெல்லாநாயகனெருவனுகி
நின்றிடுமிவற்ரூப்பின்னர்நீண்முடிகவித்துமுன்னர்
மன்றல்செய்கென்றுசூழ்ந்தமறிஞரோடுசாவினனே. (சடு)

உக்கிரபாண்டியர் திருவவதாரப்படலம் முற்றிற்று.

ஆ படலம் - உ0 - க்கு திருவிருத்தம்-கூசுடு.

(சo) சூஞ்சி-சிகை. சங்கம்-முழந்தாள். (சக) அகவடி-உள்ளடி. நாட்டம்-கண். (சஉ) அளந்து-எண்ணி. சூழும்-ஆலோசனை செய்வான். (சங) பண்பு-குணம். ஈகை-கொடை. (சச) தேத்தும்-தேயத்தும். கோடல்-கொள்ளுதல். (சடு) மன்றல்-திருமணம்.

பன்னிரண்டாவது,

உக்கிரபாண்டியருக்கு

வேல்வளைசெண்டு கொடுத்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உருக்குந்திறலுக்கிர குமரனுதயமிதுவான்மதியுநதிப், பெருக்
ருங்கரந்தசடைக்கற்றைப்பெருந்தேர்ச்செழியர்பிரானவற்குச், செ
ருக்குஞ்செல்வமணமுடித்துச் செவ்வேல்வளைசெண்டளித்துள்ளந்,
தருக்குமுடிதந்தரசுரிமைதந்தசெயலுஞ்சாற்றுவாம். (க)

வையைக்கிழவன்றன்னருமைக்குமரன்றனக்குமணம்புணர்ச்சி
செய்யக்கருதுந்திறமேலுக்கியறிஞரோடுந்திரண்டமைசசர்
மையற்றழியாநிலத்திருவுமரபுங்குடியும்புகழ்மையுநம்
மையற்கிசையத்தக்ககுலத்தரசர்யாரென்றளக்கின்றீர். (உ)

தீந்தண்புனல்சூழ்வடபுலத்துமணவூரென்னுந்திருநகர்க்கு
வேந்தன்பரிதிதிருமரபின்விளங்குஞ்சோமசேகரனென்
றாய்ந்தகேள்வியவனிடத்துத்திருமாதென்னவவதரித்த
காந்திமதியைமணம்பேசவிருந்தாரற்றைக்கனேயிருள்வாய். (ங)

வெள்ளக்களிற்றின்பிடர்சுமந்தகுமிக்கோயின்மேயவிளம்
பிள்ளக்கதிர்வெண்மதிமௌலிப்பெருமானிரவிமருமாலும்
வள்ளற்கரத்தான்கனவிலெழுந்தருளிவாவென்றனவிற்குங்
கள்ளத்திருவாந்திருமேனிகாட்டியதனேவிளம்புவார். (ச)

அன்னமிறைகொள்வயன்மதுரைச்சிவன்யாமரசனீயின்ற
பொன்னேயனேயாடனேமதுராபுரியிற்கொடுபோய்மறுபுலத்து
மன்னர்மகுடமணியிடறமழுங்குங்கழற்காற்சுந்தரனுந்
தென்னர்பெருமான்குமரனுக்குக்கொடுத்தியென்றுசெப்புதலும். ()

உள்ளக்கமலமுகக்கமலமுடனேமலர்விருதடங்க
ணள்ளற்கமலமலர்ந்ததனதங்கைக்கமலமுகிழ்த்தெழுந்து
வள்ளற்பரமன்கருணையெளிவந்தசெயலேகினேற்தன்பின்
வெள்ளத்தழுந்தியெழுந்திரவிவேலைமூளைக்கும்வேலையினில். (ஙு)

(க) திறல்-வலி. (உ) அமைச்சர்-மந்திரிமார்கள். (ஙூ) தீந்தண்புனல் - இனியகுளிர்ந்தநீர். பரிதிமரபு - சூரியவம்சம். (ச) வள்ளற்கரத்தான் - ஈகையினையுடைய கையினையுடையான். (ஞ) இறைகொள்-தங்கிய. (ஙு) உடனே-ஒன்றாய். முகிழ்த்து-குவித்து. வள்ளற்பரமன் - வள்ளலாகியபரமன்.

நித்தநியமக்கடனிரப்பிநிருபணமைச்சரொடுநான்கு
பைத்தசருவிப்படையிலெடுபலவேதியமுங்கலிப்பத்தன்
பொய்த்தமருக்குற்றிருமகளைப்பொன்னஞ்சோடிரதமிசை
வைத்துமணஞ்சேர்திருவிளைமதுரைநோக்கிவழிக்கொண்டான்.

நென்னலெல்லைமணம்பேசநினைந்தயாறேயமைச்சர்மதி
மன்னர்பெருமான்றமரோடுமணவூர்நோக்கிவழிவருவா
ரன்னவேந்தன்றனைக்கண்டாரடல்வேற்குமரனையானெங்
தென்னர்பெருமான்குமரனுக்குன்றிருவைத்தருதியெனவினையான்.

குலனுங்குடியுங்கனவின்கட்கொன்றைமுடியார்வந்துரைத்த
நலனுங்கூறிமணநேர்ந்துயப்பவதனைநன்முதியோர் [வரு
புலனெனறுழையர்தமைவிடுத்துப்பொருளைத்துறைவற்குணர்த்தி
யலனுந்தயில்வேன்மன்னனெடுமதுரைபுதூர்வந்தனைந்தார். (கூ)

இரவிமருமான்மதிமருமானெதிரேபணியத்தழீஇமுகமன்
பரவியிருக்கைசெலவுய்த்துப்பாண்டியேந்தனிருந்தான்மேல்
விரவியமைச்சர்திருமுகங்கள்வேந்தர்யார்க்கும்விடுத்துநகர்
வரைவுகாள்செய்தணிசெய்யமன்றன்முரசமறைவித்தார். (கo)

மாடம்புதுக்கிப்பூகதமுங்கதலிக்காடுமறுகெங்கு
நீடுநிரைத்துப்பாலிகையுநிறைபொற்குடமுமுறைநிறுத்தி
யாடுகொடியுந்தோரணமும்புனைவித்தழகுக்கழகாகக்
கூடநெருங்குநகரமணக்கோலம்பெருகக்கொளுத்தினரே. (கக)

தென்றமுடன்றிருமகளைத்தேவர்பெருமான்மணம்புரிய
மன்றலழகாலொருநகரொப்பதிகமின்றிமதுரைநக
ரன்றுதானேதனக்கொப்பதாகும்வண்ணமணியமைத்தா
ரின்றுதானேதனக்கதிகமென்னும்வண்ணமெழிலமைத்தார். (கஉ)

கலிவிருத்தம்.

முன்னர் மாலை முடியணி சுந்தரத்
தென்ன ரேற்றின் றிருமுகங் கண்டுதாழ்ந்
தன்னவா சகமுட் கொண்ட யற்புல
மன்னர் மாதவர் யாரும் வருவ ரால். (கங)

(எ) நிரப்பி-நிறைவேற்றி. மணஞ்சேர்திரு-கல்யாணத்துக்குவே ண்டியதிரவியம்.(அ) நென்னலெல்லை நேற்றையப்பொழுது. (கூ)நய ப்ப-நிநைக்க. புலனெனறுழையர்-அறிவுடையதுதுவர்.புலன்- அறிவு. (கo) மேல்விரவி-பின்னர்க்கலந்தா லோசனைசெய்து. (கக) பூகதம்-பாக்குமரம். கதலிக்காடு-வாழைமரங்கள். (கஉ) தென்றமு டன்-பொதியைகாடன். திருமகள்-தடாதகை. தேவர் பெருமான்- சிவபெருமான். (கங) அயற்புலம்-வெளிநாடு.

புரவி வெள்ளமும் போர்க்கரி வெள்ளமும்
வரவிற் கால்வலி மள்ளரின் வெள்ளமும்
விரவி யாழிய வெள்ளமு முள்ளுற
விரவி தன்வழித் தோன்றல் வந்தெய்திஞன். (கச)

கோடு வில் லொடு மேகக் குழாங்கண் மின்
னீடுவா ளொடு நேர்ந்தென மார்புதாழ்ந்
தாடு குண் டலக் காதுடை யாடவர்
சேட னீகத்துச சேரன்வந் தீண்டிஞன். (கரு)

கடலு முள்ளமுங் காற்றும்பல் வண்ணமு
முடலுங் கொண்டன வந்துறு வாம்பரிப்
படுகடற் குட்பரிதியிற் ரூன் றிஞ
னடுபரிப்பதி யாகிய வேந்தனே. (கசு)

அலகி லாவுத யந்தொறு மாதவ
ரலகி லாருதித் தென்னப் பொன்ஞடைசே
ரலகி லானைய னீகமொ டெய்திஞ
னலகி லாற்றற் கயபதி யண்ணலே. (கள)

தொக்க மள்ள ரடிப்படு தூளிபோய்த்
திக்கடங் கவிழுங கித்திரைக் கட
லெக்கர்செய்ய வெழுந்தியங் கல்லென
ஈக்க வேற்கை நரபதி நண்ணினன். (கஅ)

மீன வேலையிற் கந்துக மேற்கொடு
கூனல் வார் சிலை வஞ்சக் கொடுஞ்சமர்க்
கான வாழ்க்கைய ரட்டக் கரும்படை
மான வேற்குறு மன்னவர் நண்ணினர். (கக)

சீனர் சோனகர் சிங்களர் கொங்கணர்
மான வேல்வல மாளவர் சாளுவர்
தான மாநிரைச் சாவக ராதியா
மேனை நாட்டுள மன்னரு மீண்டினர். (உ0)

(கச) புரவி-குதிரை. கரி-யானை. கால்வலி-வாயுவினையொத்தவே கத்தினையுடைய. மள்ளர்-பதாதி.ஆழிய-ஆழ்ந்த. வெள்ளம்-சமுத்திரம். (கசு) உடலங்கொண்டன-சரீரமெய்தி நின்றாற்போல. வாம்பரி-தாவுங்குதிரை. (கள) உதையம்-உதயகிரி.ஆதவர்-சூரியர். (கஅ) மள்ளர் - வீரர். எக்கர்-திடர். ஈக்க-விளங்குகின்ற. (கக) கந்துகம்-குதிரை.கூனல்- வளைந்த. அரட்டர்-குறுநிலமன்னர். (உ0) மான-பெரிய. தானமா - மதநீரினையுடையயானை.

நூலொடுங் தூவக்குண்டி நுடங்கு மான்
மேலவர் தூங்கு சுருக்குடைத் தானையர்
கோல முஞ்சியர் கிஞ்சுகக் கோவினர்
நாலு நூல்பயி லுவினர் நண்ணினூர். (உக)

வட்ட நீர்க்கலக்கையினர் வார்ந்து தோன்
விட்ட குண்டலக் காதினர் வேட்டதீத்
தொட்ட கோலினர் வேள்வியிற் சுட்டநீ
றிட்ட நெற்றிய ரில்லொடு நண்ணினூர். (உஉ)

முண்ட நெற்றியர் வெண்ணிற மூரலர்
குண்டிகைக் கையர் கோவணம் வீக்கிய
தண்டு கையர் கற்றூனியர் மெய்யினைக்
கண்டு பொய்யினைக் காய்ந்தவர் நண்ணினூர். (உங)

தீந்தண் பாற்கடல் செந்துகிர்க் காட்டொடும்
போந்த போன்மெயிற் புண்ணியப் பூச்சினர்
சேந்த வேணியர் வேத சிரப்பொரு
ளாய்ந்த கேள்வி யருந்தவ ரெய்தினூர். (உச)

ஆதி சைவர் முதற்சைவ ரைவருங்
கோதி லாவகச் சைவக் குழாங்களும்
பூதி மேனியர் புண்ணிய வைந்தெழுத்
தோது நாவின ரொல்லேவந் தெய்தினூர். (உஞ)

வெண் களிற்றவன் வேரியந் தாமரைப்
பெண் களிப்புறு மார்பன் பிரமனே
டொண் களிப் புற வும்பர் முதற்பதி
னென்கணத் தவர்யாவரு மீண்டினூர். (உசு)

அணைந்து கோயி லடைந் தரிச் சேக்கைமேற்
குணங்க டந்தவன் கோமள வல்லியோ
டிணங்கினை குமிருக் கைகண் டேத்தினூர்
வணங்கினூர் வணங்கும் முறை வாழ்த்தினூர். (உஎ)

(உக) நூல்-உபவீதம். முஞ்சியர்-முஞ்சிப்புல்லினையுடையவர். கிஞ்சுகம்-புரசு. நாலுநூல்பயிலுவினர்-நான்குவேதங்களோப்பயின்ற நாவினையுடையோர். (உஉ) வட்டநீர்க்கலக்கையினர் - வட்டமான கமண்டல நீரேந்தியகையினர். (உங) முண்டம்-திரிபுண்டரம். மூரலர்-தந்தங்களையுடையோர். (உச) வேணியர்-சடையர். (உஞ) ஆதிசைவர் முதற்சைவரைவராவர். ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர் என்பவர்; இவரோடு அந்தியசைவரையுங்கூட்டி அறுவராகவழங்குவதுமுண்டு. (உசு) பதினெண்கணத்தவர் சித்தவித்தியாதராதி தேவசாமானியர். (உஎ) கோயில்-அரசமாளிகை. அரிச்சேக்கை. சிங்காதனம்.

விரைசெய் தார்முடிச் சுந்தர மீனவன்
சுரர்கண் மாதவர் வேந்தர்க் குத்தொண் முறை
வரிசை நல்கி யிருந்தனன் மன்னவன்
நிருமகன் மணஞ்செய் திறஞ் செப்புவாம். (உஅ)

சோம சேகரன் ரோகை வனப்பெலாங்
கோமகன் கண் டெவ்பவக் கொள்கைகண்
டேம மேனிய னூல்வழி யார்க்குமத்
தேமன் கோதை யுறுப்பிய றேற்றுவான். (உக)

எழுசீர்க்கழி நேடிலடி யாசிரியவிருத்தம்.

பெருகநீண்டறவுங்குறுகிடாவாகிப்பிளந்திடாக்கடையவாய்த் தழைத்துக், கருவிவான்வண்டின்கண்மெனக்கறுத்துக்கடைகுழன் றியன்மணங்கான்று, புரையறச்செறிந்துநெறித்துமெல்லென்றுபுந் திகண்கவரநெய்த்திருண்ட, மருமலர்க்குழலாடன்பதிக்கினியமல் லல்வான்செல்வமுண்டாகும். (உ0)

திண்மத வேழ மத்தகம்போலத் திரண்டுயர்சென்னியாளவட, னுண்மகிழ்கணவனுயுணீண்டகிலவுலகரசுரியனுமெட்டாந், தண்ம திபோன்றுமயிர்நரம்பகன்றுதசைந்தமூவிரலிடையகன்ற, வொண்மதிறுதறன்பதிக்குநற்றிருவொடுலப்பிலாரோக்கியமுண்டாம். ()

கண்கடைசிவந்தான்பாலெனவெளுத்துநடுவிழிகழியவுங்கரிதா யெண்கவினடைந்துகோமளமாகியிமைகருமயிர்த்தெனினினிய வொண்கரும்புருவங்குனிசிலையொத்தத்தமிலொத்திருதூலையும் பண்கொளவுருண்டுதுண்டமெட்போதுபதுமமேற்பூத்ததுபோலும்

வள்ளைபோல்வார்ந்துதாழ்ந்திருசெவியு மடற்சுழிநல்லவாய்மு ன்னர்த்,தள்ளியகாதமலேகரமாகுந்தன்மையானண்மையேதழை க்கு, மொள்ளியகபோலம்வட்டமாய்த்தசைந்திட்டுயர்ந்துகண்ணுடி மண்டலம்போற், றெள்ளியவூற்றமினியதாண்டென்ரோதிலுன்றி ரைகட்செல்வன். (உஉ)

(உஅ) மீனவன்-பாண்டியன். (உக) கோமகன்-சௌந்தரபாண்டி யன். ஏமமேனியன்-வியாழபகவான். (உ0) அறவும்-மிகவும். கருவி வான்-சூல்கொண்டமேகம். (உக) தண்மதி-குளிர்ந்த சந்திரன். உலப்பிலா-கெடாத. (உஉ) கண்கடை-கண்ணின்ஓரம். ஆன்பால்-பசும்பால். கழியவும் மிகவும். கோமளம்-மென்மை,அழகுமாம். தண் டம்-நாசி. (உஊ) வள்ளை-ஓர்கீரை; ஓர்கொடியென்ப.கபோலம்-கன் னம். மண்டலம்-வட்டலம்.

கொவ்வைவாயதரந்திரண்டிருபுடையுங்குவிந்துசேந்திரேகை நேர்கிடந்தா, லவ்வணியிழைதன்னன்பனுக்கென்றுகண்புருவாகு மெண்ணென்கு, வல்லவாளெயிறுமிடை வெளியின்றிவார்ந்துமேல்கீழி ரண்டொழுங்குஞ், செவ்வனேர்ந்தாவின்பாலெனவெள்கித்திகழின ன்றென்பார்நூறெளிந்தோர். (கூசு)

மெல்லிதாய்ச்சிவந்துகோமளமானநாவினுள்வேட்டவேட்டாங்கே வல்லவந்தெய்ததுகர்ந்திடுந்தசைந்துவட்டமாயங்குலமிரண்டி னெல்லியதாகிமஞ்சுளமாகியிருப்பதுசுபுகமன்றென்ப ரல்லியங்கமலம்போன்மணந்திருவீர்ந்தவிர்மதிபோல்வதுமுகமே.(கூஎ)

திரைவளைக்கழுத்துத்தசைந்துநால்விரலினளவுதாய்த்திரண்டு மூன்றிரேகை, வரைபடிற்கொழுநனகிலமன்னவனுமார்பகந்தசை ந்துழுவாறு, விரலளவுகன்று மயிர்நரம்பகன்று மிதந்தேல்விழுமி தாம்வெய்த்தோள், புரையறத்தசைந்துமயிரகன்றென்புபுலப்படா மொழியகோமளமாம். (கூஏ)

செங்கைநீண்டிருண்டுகணுக்கள்பெற்றடைவே சிறுத்திடற்செ ல்வமோடின்பந், தங்குமள்ளுகிர்சேந்திருண்டுகண்ணுள்ளங்கவர் வதாய்ச்சரசரப்பகன்று, லங்கவைநல்லவகங்கைமெல்லெனச்சேந் திடைவெளியகன்றிடையுயர்ந்து, மங்கலமாய்ச்சில் வரைகளினல் லவிலக்கணவரையுளமாதோ. (கூஐ)

முத்தணிதனங்கள்கடினமாய்த்தசைந்துவட்டமாய் முகிழ்த் திருகடநே,ரொத்திறுமாந்தீர்க்கிடையறநெருங்கியுள்ளனமெலிந்த மர்ந்துரோம, பத்திபெற்றயலே மயிர்நரம்பகன்றபண்டியாளுண்டி வேட்டாங்கே, துய்த்திநோபிவலுஞ்சுழித்தாழ்ந்தாற்றெலிவிலாத் திருவளம்பெருகும். (கூஅ)

இடைமயிர்நரம்பற்றிருபதோடொருநான்கெழில்விரலளவொ டெட்ட, வடிவுதாய்ச்சிறுகிமெலிவதுதிதம்பமத்தகம்யாமையின்புறம் போற், படிவநேரொத்தணன்றிருகுறங்கும்பமியரென்பகன்றியா னேத், தடவுடைக்கையுங்கரபமுங்கதலித்தண்டுமொத்திருக்கினன் றென்ப. (கூக)

(கூச) அதரம்-உதடு. வெள்கி-வெளுத்து. (கூடு) கோமளம்-அழகு. வேட்டவேட்டாங்கே-விரும்பினவற்றை விரும்பியவண்ண மே. மஞ்சுளம்-மனோகரம். சுபுகம்-முகவாய். (கூசு) திரைவளை-கட ற்சங்கு. திரைஆகுபெயர். மிதந்தேல்-மேலுயர்ந்துநிற்குமேல். விழுமிதாம்-சிறப்பாம். (கூஎ) வள்ளுகிர்-கூரியநகம். (கூஅ) முகிழ்த் து-குவிந்து. கடம்-குடம். பண்டி-வயிறு. (கூக) படிவம் - வடிவம். குறங்கு-தொடை. தடவு-பெருமை. கரபம்-கையினடி.

அங்கமுண்மறைந்துவட்டமாய்த்தசைவதணிமுழங்தாண்மயிர்
நாம்பு, தங்கிடாதடைவேயுருட்சியாய்ச் சிறுத்துச்சமவடிவாயழக
டைந்த, சங்கமாஞ்சிரையென்பறத்தசைந்தியாமைமுதுகெனத்தி
ரண்டியர்ந்தழகு,மங்கலம்பொலிந்தபுறவடிமடந்தைமன்னவன்பன்
னியாமன்னே. (சo)

அல்லியங்கமலக்கால்விரலுயர்ந்துதூயவாயழகவாய்க்கழுநீர் [ளவு
மெல்லிதழ்நிரைத்தாங்கொழுங்குறத்திரண்டுவாலுகிர்வெண்மதிப்பி
புல்லியபோன்றுமெல்லியவாகிப்புகரறத்தசைந்தனவகத்தாள்
சொல்லியதசைவுமென்மையுஞ்சமமுந்துகளறப்படைத்தனநன்ரூல்

வண்ணமாந்தளிர்போற்சிவந்தெரிபொன்போல்வைகலும்வெ
யர்வையற்ரூக, முண்ணமாயிருக்கிற்செல்வமுண்டாகுமொண்மண
ம்பாடலங்குவனே; தண்ணரூமுளரிமல்லிகைநறுந்தண்சண்பகம்போ
ல்வனவாகும், பண்ணவாக்கிளவிகுயில்கிளியாழிற்படின்வரும்பாக்
கியமென்ரூ. (சஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருங்குழற்கற்றைதொட்டுச்செம்மலர்க்காலினல்லே
மருங்குனல்கூர்ந்தகன்னிவடிவெலாம்வாக்கின்செல்வ
ரெருங்குநூலுணர்வாற்றெள்ளியிம்பரின்றும்பர்தேத்து
பிரங்குபிக்குயிலன்ரூண்மெய்யிலக்கணமரியதென்ரூன். (சங)

அங்கதுகேட்டோர்யாருமகங்களிதூரும்பவிப்பாற்
கொங்கலர்நறுந்தார்க்குஞ்சியுக்கிரகுமரன்போந்து
மங்கலவரிசைமானமத்தமான்சுமந்தவைகைச்
சங்கெறிதுறைநீராடித்தகுங்கடிவனப்புக்கொள்வான். (சச)

கட்டவிழ்க்கண்ணிவேய்ந்துமான்மதக்கலவைச்சாந்த
மட்டனஞ்செய்துமுத்தான்மாண்கலன்முழுதுந்தாங்கி
விட்டவிர்கலவான்றிங்கள்வெண்கதிர்ச்செல்வன்போல்வந்
திட்டபூந்தவிசின்மேற்கொண்டிருந்தனன்சங்கமேங்க. (சஙி)

(சo) அங்கம்-எலும்பு. சங்கை-கணைக்கால். சிரை-நரம்பு. மன்
னவன்-அரசன். (சக) அல்லி-அகவிதழ். புகர்-குற்றம். (சஉ) உண்
ணம்-மேன்மை. பாடலம்-பாதிரி. பண்-இசை. கிளவி-சொல். (சஙி)
மருங்குல்-இடை. நல்கூர்ந்த-வறுமையுற்ற. வாக்கின்செல்வன்-பிரக
ஸ்பதி. இம்பர்-இவ்வுலகம். (சச) கொங்கு-வாசனை. மான-பெரிய.
மத்தமான்-மதமயக்கமுள்ளயானை. (சஙி) கட்டு-மூறுக்கு. மட்ட
னம்-பூசுதல்.

அங்கிலமணநீராட்டியருங்கலப்போர்வைபோர்த்த
கன்னியைக்கொணர்ந்துநம்பிவலவயிற்கலினவைத்தார்
பன்னியோடெழுந்துசோமசேகரன்பரணும்பங்கின்
மன்னியவுமையுமாகமதித்துநீர்ச்சிரகந்தாங்கி. (சக)

மங்கலநீரானம்பிமலரடிவிளக்கியாசக்
கொங்கலர்மாலைசூட்டிக்குளிர்மதுபருக்கமூட்டி
நங்கைதன்கையைப்பற்றிநம்பித்தன்கையிலேற்றிப்
புங்கவரறியநன்னீர்மந்திரம்புகன்றுபெய்வான். (சஎ)

இரவிதன்மருமான்சேர்மசேகரனென்பேர்திகழ்கண்
மரபினைவிளக்கவந்தசுந்தரமாறன்மைந்த
னுரவுநீர்ஞாலந்தாங்குமுக்கிரவருமற்கின்றென்
குரவலர்க்கோதைமாதைக்கொடுத்தனனெனநீர்வார்த்தான். (சஅ)

மைந்துறுமடங்கற்றிண்கான்மணிவடவயிரவூச
லுந்துடன்பதஞ்செய்பஞ்சியணையிலுடன்னதானவிப்
பைந்துகிலணையைநீந்துபவளவாய்ப்பசும்பொன்மேனி
யிந்திரமணிக்கட்பாவைவிளக்குநான்கிரட்டியென்ப. (சக)

அட்டில்வாயடுக்குஞ்செம்பொற்கலங்களுறைம்பொன்வாக்கி
யிட்டிழைமணிக்களாஞ்சியேழுபொற்கவரியெட்டு
விட்டொளிர்பசும்பொற்கிண்ணப்பந்திருஞ்விளங்கநாப்ப
ணட்டபொற்காலிலுடுநகைமணிக்கலநூறென்ப. (கo)

பெருவிலையாரப்பேழையாயிரம்பெற்றநுண்டே
சருவிலைப்பட்டுவெவ்வேறமைத்தனபேழைமுந்நூ
றுருவமுதெழுதிச்செய்தவோவியப்பாவையன்னார்
திருமணிக்கலமுடேவற்சேடியரெழுநூற்றைவர். (கக)

(சக) மணநீர்-வெட்டிவேர்முதலிய நறுமணப்பொருள்களால் மணமேறியநீர். மணம்-வாசனை. நலங்கென்ப. (சஎ) மதுபர்க்கம்-கனிகுளகிர்தாதிகளாலானவுணவு. (சஅ) இரவி-சூரியன். மருமான் வழித்தோன்றல். (சக) மைந்து-வன்மை. அன்னத்தூவி-அன்னப் பறவையினடியிறகு. பாவைவிளக்கு. பதுமை-விளக்கு. (கo) அட்டில்-சமையற்சாலை. கவரி-சாய்மரம். (கக) ஓரப்பேழை-மூத்தாரம் வைத்த பெட்டகம்.

வீளைவொடுமென்றுமுதுதார்மின்னுவிட்டெறியுஞ்செம்பொ
னளவிருகோடியின்னவரும்பெறன்மகட்குச்செல்வ
வளமுறவரிசையாகவழங்கிஞன்முழங்கிவண்டு
நிளமதுக்கண்ணிச்சோமசேகரமன்னன்மாதோ. (இஉ)

ஆர்த்தனவியங்களெல்லாமமரர்மந்தாரமாரி
தூர்த்தனர்வேள்விச்செந்தீச்சுழித்ததுவலமாய்த்துள்ளி
வார்த்தனமடவார்நாவின்முளைத்தனவாழ்த்துமன்றல்
பார்த்தனர்கண்களெல்லாம்பெற்றனபடைத்தபேறு. (இங)

பொதியவிழ்கடப்பந்தண்டார்ப்புயத்திளங்காளையன்ஞன்
முதியவர்செந்தீயோம்பவின்னியமுழங்கக்காந்தி
மதியைமங்கலநாண்பூட்டிவரிவளைச்செங்கைபற்றி
விதிவழியேனமன்றல்வினையெலாநிரம்பச்செய்தான். (இச)

மேற்படி-வேறு.

எண்ணிலாதவளத்திலெஞ்மிரவிமருமான்மடப்பிடியைப்
பண்ணிலாவுமறையொழுக்கம்பயப்பவேள்விவினைமுடித்துத்
தண்ணிலாவெண்கலைமதியுந்தாராகணமுந்தவழ்ந்தழல
விண்ணிலாவுமணிமாடவீதிவலமாய்வருமெல்லை. (இடி)

மின்னேர்பொன்னந்தொடியினருமென்செம்பஞ்சியடியினரும்
பொன்னேர்மணிப்பூண்முலையினரும்புலம்புமணிமேகலையினரு
மன்னேரோதித்தாரினருமாகிக்கண்ணுமனமுமவன்
முன்னேதுதுடப்படுதெனநடப்பநடந்தார்முகிழ்முலையார். (இசு)

சுருங்குமிடையார் தன்பவனிதொழுதுவருவார் தமக்கிரங்கி,
மருங்குற்பாரங்கழிப்பான்போற் கலையைக்கவர்ந்தும்வளைத்தோண்
மே, லொருங்குபாரங்கழிப்பான்போல்வளையைக்கவர்ந்துமுள்ளத்
து, ணெருங்குபாரங்கழிப்பான்போனிறையைக்கவர்ந்துநெறிச்செ
ல்வான். (இஎ)

(இஉ) மின்னுவிட்டெறியும்-ஒளிவீசும். (இங) வார்த்தனமட வார்-கச்சணிந்த தனத்தினரான பெண்கள். (இச) பொதி-முறுக்கு. கடப்பந்தண்டார்-கடம்பமலராலானகுளிர்ந்தமாலை. காளை-ருமரவேள். (இடி) மடப்பிடியை-இளம்யானை போல்பவளை. பயப்பதோன்ற. (இசு) புலம்பும்-சத்திக்கின்ற. அல்நேரோதித்தாரினர்-இருளையகூந்தலின் மாலையணிந்தவர்களும். (இஎ) நிறை-கற்பு. அன்றி-மனநிலையுமாம்.

வானமதிசேர்முடிமறைத்தவழுதிமகனேயிவனென்ரு
லானையெருத்திற்சிங்கவிளவடலேறென்னவயல்வேந்தர்
சேனைதழுவவரும்பவனிக்கொப்பேதொப்புச்செப்புங்கால்
யானைமகளேமணந்துவருமிளையோன்பவனிச்செல்வமே. (நஅ)

இம்மைதனிலுநன்மைதருமீசன்றனையும்வாசவற்கு
வெம்மைதருவன்பழிதவிர்த்தவிமலன்றனையுமங்கயற்க
ணம்மைதனையும்பணிந்துமீண்டரசன்கோயிலடைந்தின்ரூர்
தம்மைமுறையாலடிக்கமலந்தலையிற்பணிந்தான்றனிக்குமரன். ()

ஆனுவாறுசுவையடிசிலயில்வோர்தம்மையயில்வித்து
நானுவரிசைவரன்முறையானல்கிவிடையுநல்கிப்பின்
வானுடவர்க்கும்விடைகொடுத்துமதிக்கோனுழுகையைநாட்
டேனுர்கண்ணித்திருமகனுக்கிதனேசெப்பியிதுசெய்வான். (சுO)

மைந்தகேட்டியிந்திரனுங்கடலுமுனக்குவான்பகையாஞ்
சந்தமேருத்தருக்கடையுஞ்சதவேள்விக்கோன்முடிசிதற
விந்தவளைகொண்டெறிகடலிலிவ்வேல்விடுதியிச்செண்டா
லந்தமேருதனேப்புடையென்றெடுத்துக்கொடுத்தானவைமூன்றும்.

அன்னமூன்றுபடைக்கலமுந்தொழுதுவாங்கியடலேறு
தன்னைநேராயெதிர்நிற்குந்தனயன்றனையுக்கிரவழுதி
யென்னவாதிமறைமுழங்கவியங்களேங்கமுடிகவித்துத்
தன்னதாணையரசுரிமைதனிச்செங்கோலுந்தானல்கா. (சுஉ)

சூட்சிவினையிற்பொன்னனேயசுமதிதன்னேத்தொன்னூலின்
மாட்சியறிஞர்தமைநோக்கிவம்மினிவனேக்கண்ணிமைபோற்
காட்சிபயக்குங்கல்வியும்போற்காப்பீரிதுநுங்கடனிம்ம
ணூட்சியிவனதென்றிளையவரியேறனையான்றனைநல்கா. (சுஙூ)

(நஅ) எருத்து-பிடரி. யானைமகள்-தேவயானை. தேவசேனைக்கும் தேவயானைக்கும் வித்தியாசமுணராத சிலர்யானைமகள் என்பதற்குத் தேவசேனை என்று பொருள்கூறுகின்றனர். தேவகுஞ்சரியென்பவளே தேவயானை. தேவசேனை அல்லள். இளையோன்-குமரவேள். (நகூ) இம்மைதனிலுநன்மைதருமீசர்-சோமசுந்தரபாண்டியனுல் தாபித்துப்பூசிக்கப்பட்ட. இஹாபீஷ்டப்ரதேசுவரர். (சுO) வானுடர்-தேவர். (சுக) சந்தம்-அழகு. (சுஉ) அன்ன-சுட்டு; அந்தஎன்றுபொருள். அடல்ஏறு-கொலைத்தொழிலமைந்த சிங்கம். (சுஙூ) சூழ்ச்சி-ஆலோசனை. பொன்-வியாழன். காட்சி-பிரத்தியட்சானுபவம்.

மேற்படி - வேறு.

வெய்யவேற்காளையன்ஞன்றன்னையும்வேறுநோக்கி
யையவிவ்வையந்தாங்கியளித்தனனெநாளிந்த
மையறுமனத்தார்சொல்லும்வாய்மையாறெழுகிநீயுஞ்
செய்யகோன்முறைசெய்தாண்டுதிருவொடும்பொலிகவென்ரூன்.()

பன்னருங்கணங்களெல்லாம்பண்டையவடிவமாகத்
தன்னருட்டுணையாய்வந்ததடாதகைப்பிராட்டியோடும்
பொன்னெடுங்கோயில்புக்குப்பொலிந்தனனிச்சைதன்ஞ
லின்னருட்படிவங்கொள்ளுநீலாவின்பமூர்த்தி. (சுடு)

கலிவிருத்தம்.

பின்னருக்கிரப் பெயர்தரித்தவத்
தென்னர்கோமகன் றெய்வநான்மறை
மன்னுநல்லறம்வளரவையகங்
கன்னதாணையாற்ருங்கிவைகிஞன். (சுசு)

உக்கிரபாண்டியருக்கு
வேல்வகாசெண்டு கொடுத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - உக-க்கு திருவிருத்தம் - கoசுக.

பதினேழன்றவது.

கடல்சுவற வேல்விட்டபடலம்.

கலிவிருத்தம்.

வகாயொடு செண்டு வேண்மைத்தற் கஞ்சுரும்
பகாயவேம் பணிந்தகோ னளித்தயா றிதத
குளையவிழ் தாரிஞன் றனயன் வேலேமே
லிகாயவ னென்னவே லெறிந்த தோதுவாம். (க)

திங்களி னுக்கிரச் செழியன் வெண்குடை
யெங்கணு நிழற்ற வீற்றிருக்கு நாள்வயிற்
சுவகை யில்லாதமா தரும வேள்விகள்
புங்கவர் புடைதழீ இப்போற்ற வாற்றுநாள். (உ)

(சுச) மையறுமனத்தார்-குற்றமற்றமனத்தார். (சுடு) கணங்கள்-பூதங்கள். ஈறிலா-அழியாத. (சுசு) கோமகன்-அரசன். வையகம்-உலகம். (க) இளையவன்-முருகக்கடவுள். (உ) திங்களின்-சந்திரனைப்போல. தருத்தோன்றல்-இந்திரன்.

அரும்பரிமகந்தொணுற்றுருசெய்துழிச்
சுரும்பரினிசைத்தருத்தோன்றறண்ணரு
விரும்பரிமுரன்றுசூழ்வேம்பினங்குழைப்
பொரும்பரிவீரன்மேற்பொரதுபொங்கினான். (ஈ)

மன்னியநாடெலாம்வளஞ்சுரந்துவான்
பொன்னியலுடம்போற்பொலிதலாலிந்த
மின்னியவேலினன்வேள்விசெய்வதென்
றுன்னியமனத்தனேர்சூழ்ச்சியுன்னினான். (உ)

பொருங்கடல்வேந்தனைக்கூவிப்பொள்ளென
விருங்கடலுடுத்தபாரேழுமுழிநா
ளொருங்குடுவெள்ளமொத்துருத்துப்போய்வளந்
தருங்கடிமதுரையையழித்தியாலென்றான். (ஊ)

விளைவதுதெரிகிலன்வேலைவேந்தனும்
வளையன்மதுரையைவளைந்திட்டிம்மெனக்
களைவதுகருதினன்பேயுங்கண்படை
கொளவருநனந்தலைக்குருட்டுக்கங்குல்வாய். (ஊ)

கலிவிருத்தம்.

கொதித்தலைக்கரங்களண்டகூடமெங்குமூடுபோ
யதிர்த்தலைக்கவுழிநாளிலார்த்தலைக்குநீத்தமாய்
மதித்தலத்தையெட்டிமுட்டிவருமொரஞ்சனப்பொருப்
புதித்தலொத்துமண்ணும்விண்ணுமுட்கவந்ததுதகியே. (எ)

வங்கவேலைவெள்ளமாடமதுரைமீதுவருசெயல்
கங்குல்வாயதிங்கண்மீதுகாரிவாயகாருடல்
வெங்கண்வாளராவிழுங்கவீழ்வதொக்குமலதுகா
ரங்கண்மூடவருவதொக்குமல்லதேதுசொல்வதே. (அ)

வட்டயாமைபலகைவீசுவாளைவாள்கண்மகரமே
பட்டயானைபாய்திரைப்பரப்புவாம்பரித்திரள்
விட்டதோணியிரதமென்னவிரவுதானையொடுகட
லட்டமாகவழுதிமேலமர்க்கெழுந்ததொக்குமே. (கூ)

(ச) சூழ்ச்சி-தந்திரம். (இ) உருத்து-சீறி. (ஈ) நனந்தலைக்குருட்டுக்கங்குல். பாதியிரவிலுண்டாகும்பேரிருள். (எ) உதகி-சமுத்திரம். மதிதலம்-சந்திரமண்டலம். அஞ்சனப்பொருப்பு-நீலமலை. உட்கு-நடுங்க; வெட்கவுமாம். (அ) காரி-விஷம். அரா-பாம்பு. (கூ) அட்டம்-கோர்.

இன்னவாறெழுந்தவேலைமஞ்சுமறுங்குமிஞ்சிசூழ்
நன்னகர்க்குணக்கின்வந்துணுகுமெல்லையரையிரா
மன்னவன்கனலின்வெள்ளிமன்றவாணர்சித்தராய்
முன்னர்வந்திருந்தரும்புமுவரேற்றமொழிகுவார். (கo)

கழுதியுன்றனகரழிக்கவருவதாழிவல்லீ
யெழுதிபோதிவென்றிவேலெறிந்துவாகைபெறுகெனத்
தொழுதசெங்கரத்தினுன்றுதிக்குநாவினுளெழீஇக்
கழுதுறங்குகங்குலிற்கனலுணர்ந்துகாவலான். (கக)

கண்ணிறைந்தவமளியிற்கழிந்துவாயில்பலகடந்
துண்ணிறைந்தமதியமைச்சருடன்விரைந்துகுறுகியே
மண்ணிறைந்தசெனமுழங்கிவருதரங்கவாரிகண்
டெண்ணிறைந்தவதிசயத்தலைகிநிற்குமெல்லைவாய். (கஉ)

கனவில்வந்தசித்தவேடர்நனவில்வந்துகாவலோ
னினைவுகண்டுபொழுதுதாழநிற்பதென்கொலப்பனே
சினவிவேலைபோலவந்தகெவ்வைமானவலிகெட
முனையவேலெறிந்துலாலமுடிவுதீர்த்தியாலெனா. (கங)

எடுத்தவேல்உலந்திரித்தெறிந்தவேலைவேன்முனை
மடுத்தவேலைசூழ்மெனவுறுமானவலிகெட
உடுத்துவேரிவாகையின்றியடிவணங்குதெவ்வரைக்
கடுத்தவேல்வலான்கணைக்காலின்மட்டதானதே. (கச)

சதமெவதவேள்வியைத்தடுப்பதன்றியுலகெலாஞ்
சிந்தவேறுசூழ்சசிசெய்ததேகோவினையலால
வந்தவேலைவலியழித்தவஞ்சகர்க்குரன்றிசெய்
திந்தவேலைவலியிழப்பதென்றுமுள்ளதேகொலாம். (கஙி)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புண்ணிடைநுழைந்தவேலாறுபுணரியைப்புறங்கண்டோன்பான்
மண்ணிடைநின்றசித்தர்வானிடைமறைந்துஞானக்

(கo) இஞ்சி-மதில். வாணர்-வாழ்நர். (கக) கழுதுறங்குகங்குல்-பிசாசுஞாங்கும பாதியிரவு. (கஉ) கண்ணிறைந்தீ-மலர்த்தேன் மலிந்த. (கங) தெவ்வை-பகையை. (கச) ஏறிந்தவேலை-எறிந்தபொழுது. (கஙி) வேலைவலியிழப்பது என்று முள்ளது என்பது. பண்டு சூரசங்காரகாலத்து வலியிழந்தமையின்.

கண்ணிடைநிறைந்துதோன்றுங்கருணையால்வடிவங்கொண்டு
விண்ணிடையணங்கிலேவிடையிடைவிளங்கிநின்றார். (கக)

முக்கணும்புயங்கணென்குமுளைமதிக்கண்ணிவேய்ந்த
செக்கரஞ்சடையுங்காளகண்டமுந்தெரித்துதென்னன்
பக்கமேபணிந்தெழுந்துபரந்தபேரன்புந்தானும்
தக்கவஞ்சலிசெய்தேத்தித்தரைமிசைநடந்துசெல்வான். (கஎ)

தூந்துபியைந்துமார்ப்பப்பாரிடந்தொழுதுபோர்ப்பத்
தந்திரவேதகீதந்ததும்பியெண்டிசையுநதாக்க
வந்தரநாடரேத்தவகல்விசும்பாறதாக
வந்துதன்கோயில்புக்கான்வரவுபோக்கிறந்தவள்ளல். (கஅ)

அஞ்சலிமுகிழ்த்துச்சேவித்தருகுறவந்தவேந்த
னிஞ்சிசூழ்கோயிலெய்தியிறைஞ்சினன்விடைகொண்டேகிப்
பஞ்சின்மெல்லடியாரட்டமங்கலம்பரிப்பநோக்கி
மஞ்சிவர்குடுமிமாடமாளிகைபுகுந்தான்மன்னோ. (கங)

வளையெயின்மதுரைமூதூர்மறிகடலிவற்றிணைப்பண்
விளையுவனகரமெல்லாம்வெள்ளியம்பலத்தளாடுந்
தளையவிழ்கொன்றைவேணிந்தம்பிரான்றனக்கேசேர்த்துக்
களைகணுலகுக்கெல்லாமிருந்தனன்காவல்வேந்தன். (உ0)

கடல்சுவற வேல்விட்டபடலம் முற்றிற்று.

ஆ படலம். உஉ-க்கு திருவிருத்தம்-க0ருக.

பதினான்காவது,

இந்திரன்முடிமேல் வளையெறிந்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நின்னவிர்மணிப்பூண்மார்பன்வேலையைவேலாற்வென்று
பொன்னவிர்வாகைவேய்ந்தபுகழுரைசெய்தேனுக

(கசு) மண்ணிடை நின்றசித்தர்-சோமசுந்தரக் கடவுள். (கஎ) முளைமதிக்கண்ணி - இளஞ்சந்திர கலையாகியகண்ணி, (கஅ) தந்திரம்-ஆகமாதிநூல்கள். (கக) அஞ்சலிமுகிழ்த்து-வணக்கத்திற்காகக் கரங்களைத் தலைமீது குவித்து. (உ0)களைகணுய்-ஆதாரமானவனுய்.

நன்னகராளிசெம்பொனகைமுடிசிந்தவந்த
மன்னவன்வாளெகொண்டோச்சிவென்றதும்வகுத்துச்சொல்வாம். ()

கோமகனிகழுநாளிற்கோணிலைபிழைத்துக்கொண்மூ
மாமழைமறுப்பப்பைங்கூழ்வறந்துபுற்றலைகடந்து
காமருநாடுமூன்றுங்கையறவெய்தமன்னர்
தாமதுதீர்வுநோக்கித்தமிழ்முனியிருக்கைசார்ந்தார். (உ)

முளிவனையடைந்துவேந்தர்மூவருந்தங்களுட்டிற்
பனிவருமாரியின்றியிறந்தமைபகரமேருக்
குனிவருசிலையார்க்கன்பர்கோணிலைகுறித்துநோக்கி
யினிவருமாரியிலையாதிஞலென்னிற்கேண்மின். (ஙு)

காய்சினவெய்யோன்சேயோன்முன்செலக்கதிர்கால்வெள்ளித்
தேசிகன்பின்புசென்றுநடக்குமிசையலான்முந்நீர்த்
தூசினவுலகிற்பன்னீராண்டியான்சுருங்குமென்று
பேசினநூல்கண்மாரிபெய்விப்போற்சென்றுகேண்மின். (ச)

என்றவனெதிர்யாமெய்வாறுதுமென்றுரைத்தும்
வென்றவன்சோமவாரவிரதர்நோற்றுவெள்ளி
மன்றவனருளப்பெற்றுவான்வழிச்சென்மினென்றக்
குன்றவன்சிலையாரேறுன்பின்விதியினைக்கூறுகின்றான். (ஞ)

உத்தமவானோர்நம்முளுத்தமருகுமீச
னுத்தமசந்திமாருளுத்தமியுருத்திராணி
யுத்தமவிருநம்மூலருத்தமந்திரமெணென்பென்
றுத்தமமறைநூலாதிபுரைக்குரிச்சோமவாரம். (சு)

மந்தரங்காசியாதிபதிகளில்வதிந்துநோற்கத்
தந்திடும்பயனிற்கோடிதழைத்திடுமதுரைதன்னி

(க) நாகம்-ஆகாயம். நன்னகர் - சுவர்க்கவுலகம். (உ) கோள்-நவகோள். கையறவு-தரித்திரம். பைங்கூழ்-பயிர். காமரு-அழகுபொருந்திய. நாடுமூன்று-சேரசோழபாண்டி நாடெளாகியமூன்று. (ஙு) முனைவன்-அகத்தியன். கோணிலை-நவக்கிரகநிலை.(ச) வெய்யோன் சூரியன். சேயோன்-செவ்வாய்.வெள்ளித்தேசிகன்-அசுரகுரவனுசுக்கிரன். இச்செயல்-இத்தன்மை. (ஞ) என்றவன் - அகத்தியன். நோற்று-அநுட்டித்து. சென்மின் - செல்லுங்கள். (சு) உருத்திராணி-பார்வதிதேவி.

லிந்தநல்விரதநோற்போர்க்கதிகம்யாதென்னிற்சோம
சுந்தரனுரியவாரமாதலாற்சோமவாரம். (எ)

அங்கதின திகப்பேறுண்டருக்கனின்மதிதோய்ந்தொன்றித்
தங்கியதிங்களேனும்புதகுதியிலேற்கவல்லார்க்
கிங்கதின திகரீதியீட்டியபொருள்கொண்டாற்று
மங்கலவிரதப்பேரொன்றனந்தமாய்வளருமன்றே. (அ)

கலமலிவிரதநோற்கத்தொடங்குநாணவில்வாந்தேளிற்
சிலையினிலாதலன்றியிரட்டியதெரிசஞ்சேர்ந்த
மலமதியொழித்துமற்றைமதியிலுமூன்றைப்பக்கத்
தலர்கதிர்வாரத்தல்லாணயின்றிடாவயலிற்றுஞ்சா. (கூ)

வைகறையெழுந்துசேற்கண்மலருளனையுள்கியற்றைச்
செய்கடனீறிஇக்காமாதிசிந்தைநீத்தலர்பொற்கஞ்சப்
பொய்கையையடைந்துகையிற்பவித்திரம்புனைந்துவாக்கு
மெய்கருத்தொருப்பாடெய்தச்சங்கற்பம்விதந்துகூறி. (கஎ)

கடம்படிமுளைத்தமுக்கட்கரும்பினைநினைந்துளாலத்
திடம்படுதீர்த்தமெல்லாமாடியபயனேயீண்டித்
திடம்படத்தருதியென்னத்திரைத்தடம்படிந்துவெண்ணீ
றுடம்பணிந்தக்கமாலையொளிபெறவிதியாற்ருங்கி. (கக)

வெள்ளைமந்தாரமுல்லைமல்லிகைவெடிவாய்ச்சாதி
கள்ளவிழ்மயிலையாதிவெண்மலர்கவர்ந்துவேழப்
பிள்ளையைமுன்கப்பூசித்திரந்துசங்கற்பம்பேசி
யுள்ளணைந்துச்சிமேற்பன்னிருவிரலுயர்ச்சிக்கும்பர். (கஉ)

சத்தியஞானனந்ததத்துவந்தன்னையுள்கி
வைத்ததன்வடிவங்கொண்டுமண்முதற்சிவமீருன

(எ) மந்தரம்-ஓர் சிவதலம். தழைந்திடும்-அதிகமாகும். (அ) அருகனில்-சூரியனில். மதிதோய்ந்து-சந்திரன்கலந்து. திங்கள்தோன்பு-சோமவாரவிரதம். (கூ) தேள்-விருச்சிகமாதம்; கார்த்திகைமாதம். தனு-மார்கழிமாதம். தெரிசம்-அமாவாசை. மலமதி-மலமாதம்; அது இரண்டமாவாசை வருமாதம். முன்றைப்பக்கம்- பூர்வபக்கம்; சுக்கிலபட்சமுமது. (கஎ) பவித்திரம் தூய்மையைக்குறிக்குமொருபுன்மோதிரம். ஒருப்பாடு-ஒற்றுமை. (கக) அக்கமாலை-உருத்திராக்கம். (கஉ) சாதி-பிச்சி. மயிலை-இருவாட்சி.

வத்துவவிலிங்கந்தன்னையாசனமூர்த்திமூல
வித்தைமற்றுலுநூலின்விதியினற்பூசைசெய்க. (கஈ)

ஐந்தமுதாவினைந்துநறுங்கனியையந்துசெந்தேன்
சந்தனதோயம்புட்பத்தண்புனன்மணிநீராட்டிச
சுந்தரவெண்பட்டாடைகருப்புரச்சுண்ணஞ்சாந்தங்
கந்தமல்லிகைமுன்ஞனவெண்மலர்க்கண்ணிசாத்தி. (கச)

காசணிபொலம்பூண்சாத்திக்கனைகழலாதியங்க
பூசனைசெய்துசேற்கட்பூரணபரையையவ்வா
நீசனைந்தெழுத்தைப்பெண்பாற்கிசையவுச்சரித்துப்பூசித்
தாசறுசாபித்தீம்பாலட்டவின்னமுதிஞேடும். (கடி)

பண்ணியவகைபானீயநீவேதனம்பண்ணிவாச
நண்ணியவடைக்காய்நல்கிநறுவிரைத்தூபந்தீப
மெண்ணியவகையாற்கோட்டிக்கண்ணடியேனைமற்றும்
புணணியன்றிருமுன்காட்டிவில்வத்தாற்பூசைசெய்தல் (கஉ)

புரணிச்சாஞானக்கிரியையாய்ப்போற்தவில்வ
மாமுதலடைந்துமூன்றுவைகலுணுறக்கமின்றி
யரகரமுழக்கஞ்செய்வோரைம்பெரும்பாதகங்கள்
விரகில்செய்கொலைகடீருமாதலால்விசேடம்வில்வம். (கஎ)

மடங்கிதழ்சுருங்கல்வாடியுலர்ந்ததுமயிர்ச்சிக்குண்டன்
முடங்குகாற்கிலம்பிக்கூடுபுழுக்கடிமுதலாங்குற்ற
மடங்கினுங்குற்றமில்லையுத்தமமாகும்வில்வந்
தடங்கைகொண்டீசனுமமாயிரஞ்சாற்றிச்சாத்தல். (கஅ)

அடியனேன்செய்யுங்குற்றமன்றைக்கன்றனந்தமாகுங்
கொடியநஞ்சமுதாக்கொண்டாய்குற்றமுங்குணமாக்கொண்டு
படியெழுதரியமங்கைபங்கனேகாத்தியென்று
முடியுறவடியில்வீழ்ந்துமும்முறைவலஞ்செய்தேத்தி. (கஙு)

(கஈ) சத்தியஞானனந்ததத்துவம்-உண்மை யறிவானந்தவுருவான இவம். (கச) சந்தனதோயம்-சந்தனத்தேய்வைகரைத்தநீர். (கடி) காசு-பொற்காசு. பொலம்-அழகு. (கஉ) பண்ணியவகை-பல காரவகை. பானீயம்-பாயசம், அடை, வெற்றிலை, காய், பாக்கு. வகையாற்கோட்டி-முறையாகச்சுற்றி.(கஎ) விரகில்-அறிவில்லாத. (கஅ) ஈசனுமமாயிரம் - சிவசகத்திரநாமம். (கஙு) படி-ஒப்பு.

வன்மனங் கரையநின்றுவேண்டியவரங்கள்வேண்ட
நன்மணப்பேறுமக்கட்பேறுநல்வாக்குக்கல்வி
பொன்மனக்கினியபோகந்தெவ்வரைப்புறகுகாண்ட
லிம்மையிலரசுமற்றுமெண்ணியாங்கெய்துமன்னே. (உ0)

ஆதியிவ்விலிங்கந்தீண்டற்கருகரல்லாதவேத
வேதியர்முதலோரிட்டவிலிங்கத்திவ்வியாலர்சனித்
தோதியவிரதநோற்கவர்சனேக்குரியரல்லாச்
சாதியர்பொருணேர்ந்தாதிசைவராற்பூசைசெய்தல். (உக)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொருவிலிவ்விரதமைவகைத்துச்சிப் போதிலுணிரவிலுணிர
ண்டு, மொருவுதலுறங்காதிருத்தலர்சனே நால்யாமமுமுஞற்றுக
லென்னக், கருதினிவ்வைந்துமொன்றனுக் கொன்றுகழியவுமதிக
மாநோற்கும்,வருடமொன்றிரண்டுமூன்றுபன்னிரண்டுவருடம்வாழ்
நாளளவிவற்றுள். (உஉ)

உடலளவெண்ணிநோற்பவர்முந்தவுத்தியாபனஞ்செய்துநோற்கக
கடவாவ்வருடக்கட்டளைக்கிறுதிகழிப்பதுத்தாபனவிதிதான்
மடலவிழ்மாலைமண்டபங்குண்டமண்டலம்வகுத்துமாபதியைப்
படரொளிவெள்ளிமுப்பதுகழஞ்சிற்படிமையானிருமிதஞ்செய்து (ஊ)

காலையிலாசான்சொல்வழிநித்தக்கடன்முடித்துசிதொட்டந்தி
மாலையினளவும்புராணநூல் கேட்டுமாலைதொட்டியாமமோநான்
சேலனகண்ணுள்பங்கனேப்பூசைசெய்கவப்பூசனேமுடிவின் [குஞ்
மூலமந்திரநூற்றெட்டுநூற்றெட்டுமுறையினுலாகுதிமுடித்தல். (எ)

வில்லமாயிரங்கொண்டாயிரநாமம்விளம்பிநால்யாமமுஞ்சாத்த[தத
னல்லவைந்தெழுத்தாலேந்தெழுத்திருவிஞதனுக்கருக்கியங்கொடு
லெல்லையின்மூலமந்திரத்தாலுமேனைமந்திரங்களினுலும்
வில்லழலோம்பிப்பூரணுகுதிசெய்தீறிலான்வேள்வியைமுடித்தல். (ஏ)

புலர்ந்தபின்னித்தவினைமுடித்தரம்பைப் பொதுளும்பாசிலைப
தின்மூன்றி, னலந்தருதூவெள்ளரிசிபெய்தினிய நறியகாய்கறியொ

(உ0) வன்மனம் - கடினமான மனம். (உக) வேதவேதியர்-சிவத்துசரல்லாத வைதிக மறையவர். இட்டவிலிங்கம்-ஆன்மார்த்தவுடையவர்.(உஉ)பொருவில்-ஒப்பற்ற. ஒருவுதல்-நீங்குதல். (உங) கட்டளை-ஏற்பாடு. (உச) ஆசான்-குரு. (உடு) வில்-ஒளி.

பெரப்பி, யலந்தரவான்பானிறைகுடம்பதின்மூண்றரிசிமேல்வைத்த
ரனடியிற்,கலந்தவன்பினராய்ச்சிவார்ச்சனைக்குரியகடவுள்வேதியர்
கலைவரித்து. (உசு)

காதணிகலலுங்கையணிகலலுங்கவின்பெறவளித்தரலைக
வாதரம்பெருகநினைந்தருசசனைசெய்தரியதக்கிணையொடும்பாதப்
போதணிகாப்புவிசிறிதண்கவிகைதூந்துகின்முதற்பலவுடனே
மேதகுதானஞ்செய்துபின்குருவைக்கற்புடைமின்னிடையோடும்.()

ஆசனத்திருத்திப்பொலந்துகில் காதற்கணிகள்கைக்கணிகளுமணி
வாசகன்மலரிட்டருச்சனைசெய்தமலைமகடலவனைவரைந்து [ந்து
பூசனைசெய்தபடிமையோடம்பொன்பூதலம்பதாதிகள்பிறவுந்
தாசலர்மாலைகோட்டணிபுனைந்தசுரபிமாதானமுஞ்செய்து. (உஅ)

இனையவாறுத்தாபனமுடித்தசானைவலாற்சிவனடிக்கன்பர்,
தனையரோ டொக்கலுடனமுதருந்தமுதி யிவ்விரதமுன்கண்ணு,
னனையதாமரையோனிந்திரன் முதல்வானுடையர்மூவறுகணத்தோ,
மனைவருநோற்றுமனிதருமனுட்டித்தரும்பெறற்போகம்வீடடைந்
தார். (உக)

ஈதுநோற்பவர்வெம்பரைமன தையர் தீர்ந்தாயிரம்பிறவியிலிய
யற்றுந், தீதுசேர்வினைதீர்ந்தெடுத்தயாக்கையினிற் சிவகதியடைவ
ரிவ்விரத, மோதினேர்கேட்டோர்மனைவியர்மக்களொக்கலோடினி
தாவாழ்ந்தும்பர், மேதகுபதினெலிந்திரன்பதத்தில் வீற்றினிதிருப்ப
ரென்றறையோன். (ஈ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லியநெறியாற்சோமசுந்தரன்விரதநோற்பான்
வில்லிடமணிப்பூண்வேந்தர்முனிவகோவிடைகொண்டேகி
யல்லியங்கனகக்கஞ்சத்தாடியங்கயற்கண்வல்லி
புல்லியபாகன்றன்னைவழிபடஇப்போற்றிநோற்றார். (ஈக)

சுந்தரன்றன்னைப்பூசைத்தொழில்செய்துவரம்பெற்றேகி
யந்தரத்தாறுசெல்வாரஃதறிந்தமரர்வேந்தன்

(உசு)புலர்ந்தபின்-விடிந்தபின்னர்,அலந்தர-அமைதியாக. (உஎ)பாதப் போதணிகாப்பு-பாதுகை.(உஅ)சுரபி-பசு. (உக)ஒக்கல்-சுற்றம். அனையதாமரையோன்-அத்திருமாலுந்தியிற் பிறந்தபிரமன். (ஈ0) பதினெலிந்திரன் பதம்-பிரமனதொருபகலான ஆயிரஞ்சதுர்யுகம். (ஈக) யாக்கை-சரீரம்.

வந்தவரிருக்கவேறுமடங்கன்மான்றவிசுமூன்று
தந்திடப்பணித்தானிட்டார்தனதரியணையிற்றழை. (கூஉ)

வான்வழிவந்தமூன்றுமன்னரும்பொன்னெடுய்தி
யூன்வழிகுலிசவைவேலும்பர்கோன்மருங்கிற்புக்கார்
தேன்வழிபோந்தின்கண்ணிச்சேரனுமார்த்தார்வேந்தன்
கான்வழிதாருநாடன்காட்டியதவிசின்வைக. (கூங)

மைக்கடல்வறப்பவென்றவாகைவேற்செழியன்மௌலிச்
செக்கர்மாமணிவிற்காலத்தேவர்கோன்றவிசிலேறி
யொக்கவீற்றிருந்தாஞகவும்பர்கோனமுக்காறெய்திப்
பக்கமேயிருந்தவேனப்பார்த்திபர்முகத்தைப்பாரா. (கூச)

முகமனன்கியம்பிமீவிர்வந்ததென்மொழிமினென்ன
மகபதியெங்கணூட்டின்மழைமறுத்தடைந்தேமென்ரு
ரகமலர்ந்தனையார்நாட்டினளவும்வான்சுரக்கநல்கி
நகைமணிக்கலன்பொன்னுடைநல்கிமீர்போமினென்ருன். (கூஞ)

அன்னவரகன்றபின்னையமர்கோன்கன்னிநாடன்
றன்னரியணைமேலொக்கத்தருக்கிஞெடிருக்குமாறும்
பின்னருமாரிவேண்டாப்பெருமிதவீறுநோக்கி
யின்னதுபுலப்படாமையினையதோர்வினயமுன்ஞ. (கூசு)

பொற்புறவரிசைசெய்வான்போலளவிறந்தோர்காங்கி
வெற்புறழ்திணிதோளாற்றன்மெலிவதோராதன்னை
யற்புறவளித்தான்வாங்கியலர்மதத்தார்போலீசன்
கற்புடையுமையாண்மைந்தன்கதுமெனக்கழுத்திலிட்டான். (கூள)

கண்டனன்கடவுணுதன்கழியவுமிறும்பூதுள்ளங்
கொண்டனனின்றுதொட்டுக்குரையளிதுழாவுநிம்பத்
தண்டழைமார்பவாரந்தாங்குபாண்டியனென்றுன்னை
மண்டலமதிக்கவென்றுன்வானவர்நாடுடையமன்னன். (கூஅ)

(கூஉ) சுந்தரன்றன்னை-சோமசுந்தரக்கடவுளை. (கூங) போந்தை-பனை. ஆர்-ஆத்தி. தாருநாடன்-இந்திரன். (கூச) மைக்கடல்-கருங்கடல். வறப்ப-வற்ற. வாகைவேல்-வெற்றிவேல். (கூஞ) மூகமன்-உபசாரமொழி. (கூசு) வீறு-செருக்கு. புலப்படாமை-அறிவுக்கெட்டாமை. (கூள) கதுமென-விரைந்து. (கூஅ) கடவுள்நாதன்-இந்திரன். இறும்பூது-ஆச்சரியம்

அன்னதுசிறிதுமெண்ணுதற்குமின்றிழிந்துதென்னன்
றன்னகரடைந்தானிப்பாற்சதமகஞேயர்லம்
மன்னவரிருவர்நாடுமழைவளம்பெருகப்பெய்த
தென்னவனுடுபண்டைச்செயலதாயிருந்ததன்றே. (௬௯)

ஆயதோர்வைகல்வேட்டையாடுவானண்ணல்விண்ணந்
தாயதோர்பொதியக்குன்றிற்சந்தனச்சாரணண்ணி
மேயதோலரிமானேனம்வேங்கையெண்கிரலேயின்ன
தீயதோர்விலங்குவேட்டஞ்செய்துயிர்செகுக்குமெல்லே. (௭0)

பொன்றத்துமருவிக்குன்றிற்புட்கலாவருத்தமாதி
மின்றத்துமேகமான்கும்வீழ்ந்தனமேயக்கண்டு
குன்றத்தினெடியதிண்டோட்கொற்றவனவற்றைப்பற்றிக்
கன்றத்திண்களிறுபோலக்கடிந்தளிக்கயாத்தான். (௭௬)

வேட்டத்திற்பட்டசெங்கண்வேழம்போற்கொண்டுபோகிக்
கோட்டத்திலிட்டாளைக்குன்றிறகரிந்தவென்றி
நாட்டத்துப்படிவத்தண்டநாடன்மற்றதனைக்கேட்டுக்
காட்டத்துக்கனல்போற்சீறிக்கடுஞ்சமர்குறித்துச்செல்வான். (௭௨)

வாங்குநீர்வறப்பவேலைவிடுத்ததும்வலியவாரந்
தாங்கியசெருக்குங்காரைத்தளையிடுதருக்குநோக்கி
யீங்கொருமனிதயாக்கைக்கித்துணைவலியாதென்னு
வீங்கியமானமூக்கமீனவன்மதுரைசூழ்ந்தான். (௭௩)

கலிவிருத்தம்.

ஓடின ரொற்றர்போய்ச் செழிய ரெண்கழல்
சூடினர் நகர்ப்புறஞ் சூரர்கள் சேனைகண்
மூடின வென்னலு முனிவு மானமு
நீடின னரியணை யிருந்து நீங்குவான். (௭௭)

பண்ணுக தேர்பரி பகடு வீரர்முன்
னண்ணுக கடிதென நடத்தி யாவரென்

(௬௯) இழிந்து-இறங்கி. (௭0) விண்ணம்-விண்ணுலகம். தோல்-யானை. அரிமான்-சிங்கம். எண்கு-கரடி. இரலை-மான். (௭௬) வீழ்ந்தன-இறங்கி. புட்கலாவருத்தமாதி-புட்கலாவருத்தமுதலிய. (௭௨) வேட்டத்தில்-வேட்டையாடுவதில். கோட்டம்-சிறைக்கூடம். நாட்டத்துப் படிவத்தண்டநாதன்-கண்கள் நிறைந்தவுடலினனை இந்திரன். (௭௩) ஊக்க-செலுத்த. (௭௭) ஒற்றர்-தூதர்.

தெண்ணலன் மதமலை யெருத்த மேற்கொடி
கண்ணகன் கடிநகர்க் காப்பு நீங்குமுன். (சஙி)

அடித்தனர் வானவ ரார்த்துப் பல்படை
யெடுத்தனர் வீசினர் சிலையி லெய்கணை
தொடுத்தன நிறுதிநாட் சொரியு மாரிபோல்
விடுத்தனர் மதிக்குல வீரன் சேனைமேல். (சசு)

ஆர்த்தனர் மலயவெற் பரையன் சேனையோர்
பார்த்தனர் வேறுபல் படைக் கலக்குவை
தூர்த்தனர் குனிசிலை தொடுத்து வாளியாற்
போர்த்தன ரமரர்மெய் புதைத்த வெம்பவே. (சஎ)

தறிந்தன தாள்கிரந்தகர்ந்ததோள்கரம்
பறிந்தனகுருதிநீர்கடலிற்பாய்ந்தன
செறிந்தன பாரிடஞ்சேனங்கூளிகண்
முறிந்தனவானவர்முதல்வன்சேனையே. (சஅ)

ஆடினகுறைத்தலையவிந்தபோர்க்களம்
பாடினபாரிடம்விந்தைப்பாவைதாள்
சூடினகூளிகள்சோரிசோரப்பார்
மூடினபிணக்குவையண்டமுட்டவே. (சகூ)

வெஞ்சினவலாரிதன்வீரச்சேனைக
டிஞ்சினகண்டெரிசொரியுங்கண்ணலுய்ப்
பஞ்சின்முன்னெரியெனப்பதைத்துத்தெய்வத
வஞ்சினப்படைகளான்மலைவதுன்னினான். (டo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெங்கதிர்ப்படைவிட்டார்த்தான்விண்ணவனதனைத்திங்கட்
பைங்கதிர்ப்படைதொட்டோச்சியவித்தனன்பாராள்வேந்தன்
சிங்கவெம்படைவிட்டார்த்தான்றேவர்கோனதனைச்சிம்புட்
புங்கவன்படைதொட்டோச்சியடக்கினனன்புணரிவென்றோன். ()

(சஙி) பகடு-யானை. மதமலை-ஐராவதம். காப்பு-மதில். (சசு) வானவர்-தேவர். மாரி-மழை. (சஎ) மலையவெற்பரையன் - உக்கிரகுமாரபாண்டியன். (சஅ) குருதிநீர்-இரத்தம். பாரிடம்-பூதம். கூளி-பிசாசு. (சகூ) குறைத்தலை-தலையிலாவுடல். (டo) வஞ்சினம்-நெடுமொழி. சபதமென்ப-போர்முகத்திற் சமர வீரத்தைப்புகழ்ந்து பேசலுமாம். (டக) சிங்கப்படை-நாரசிங்காத்திரம். சிம்புட்படை-சரபாத்திரம்.

தானவர்பகைவன்மோகசரந்தொடுத்தெறிந்தாளுக
மீனவனதனைஞானவாளியால்விளித்துமாய்ந்து
போனபின்மற்போராற்றிப்புக்கனர்புக்கார்தம்மில்
வானவன்மண்ணிஞன்மேல்வச்சிரம்வீசியார்த்தான். (இஉ)

காய்சினமடங்கலன்ஞன்கைவளைசுழற்றிவல்லே
வீசினன்குலிசந்தன்னைவீழ்த்தபதுவீழ்த்தான்சென்னிச்
தேசினன்மகுடந்தள்ளிச்சிதைத்ததுசிதைத்தலோடுங்
கூசினஞ்சிப்போஞன்குன்றிறகரிந்தவீரன். (இங)

இந்திரண்டானையகூர்ம்பல்லிருள்வரைநெஞ்சுபோழ்ந்த
மைந்தனில்வலியகாலைவரைந்தெறிநேமிசென்னி
சிந்திடாதாகியம்பொன்மணிமுடிசிதறச்சோம
சுந்தரநாதன்பூசைத்தொழிற்பயனளித்ததென்ஞ. (இச)

போரினுக்காற்றுதோடிப்பொன்னசர்புகுந்தவென்றித்
தாரினுக்கிசைந்தகூர்வேற்சதமகன்பின்புதன்ஞட்
சேரினுக்கெல்லாமாரியுதவுவேனிகளகீக்கிக்
காரினேத்தருகவென்ஞக்கவுரியற்கோலவிட்டான். (இடு)

மூடங்கல்கொண்டணைந்ததுதன்முடிகெழுவேந்தன்பாதத்
தொடுங்கிநின்ஞலேநீட்டவுழையுளானெருவன்வாங்கி
மடங்கலேறனையான்முன்னர்வாசித்துக்காட்டக்கேட்டு
விடங்கலுழ்வேலான்விண்ணோர்வேந்தரைதேற்ஞனுகி. (இசு)

இட்டவன்சிறையைநீக்கியெழிலியைவிடாதமாறு
பட்டசிந்தையனேயாகப்பாகசாதனனுக்கென்று
கட்டவளெருவேளாளஞன்பிணையென்றுதாழ்ந்தான்
மட்டவிழ்ந்தொழுகுநம்பமாலிகைமார்பினனும். (இஎ)

இகக்கண்வந்துயிர்க்குமூற்றமெய்தினும்வாய்மைகாத்து
வகக்களம்தொழுகுநாளாமரபினனுரையையாத்த
னெனத்தரைமறைபோற்சூழ்ந்துசிறைக்களத்திட்டயாப்பு
விடுத்தனன்பகடுபோலமீண்டனமேகமெல்லாம். (இஅ)

(இஉ) தானவர்-அசுரர். (இங) காய்சினமடங்கல்-கொல்லத் தக்க கோபமுள்ளசிங்கம்(இச) இந்து-சந்திரன். இருள்வரை-கிரவுஞ்சமலை. (இடு) கூர்வேல்-கூரியவச்சிரம். நிகளம்-விலங்கு. (இசு)மூடங்கல்-ஓலை.உழை-அருகு. (இஎ) பாகசாதனன்-இந்திரன். (இஅ)இகக்கண்-தரித்திரம். வாய்மை-சத்தியம்.

தேவர்கோனேவலாலேதிங்கண்மும்மாரிபெய்து
வாவியுங்குளனும்யாறுமலைக்களுமடித்துக்கள்வாய்க்
காவிசூழ்வயலுஞ்செய்யுஞ்செந்நெலுங்கன்னற்காடும்
பூவிரிபொழிலுங்காவும்பொலிந்ததுகன்னிநாடு (ருக)

இந்திரன்முடிமேல் வளையேறிந்த படலம் முற்றிற்று.

ஆ படலம். உக-க்கு திருவிருத்தம்-ககக0.

பதினேந்தாவது,

மேருவைச் செண்டாலடித்தபடலம்.



கலிவிருத்தம்.

ஆண்டரஞ்சவமருழந்தவமார்கோனையரசர்கோன்
வண்டலம்புமௌலிசிந்தவளையெறிந்துவெம்புறங்
கண்டவண்ணமின்னதன்னகன்னிநாடன்மேருவிற்
செண்டெறிந்துவைப்பெடுத்தசெயலுநன்குசெப்புவாம். (க)

மன்னவன்றனக்குமுன்னர்மலயவெற்பின்முனிவர்கோன்
சொன்னதிங்கள்விரதமன்றுதொட்டுநோற்றுவரலுமந்
நன்னலஞ்செய்பேறுபோலநங்கைகாந்திமதியிற்
றுன்னறுஞ்சயங்கொண்மைந்தனொருவன்வந்துதோன்றினான். (உ)

வயந்தனேப்பயந்தென்னமைந்தனேப்பயந்தபோ
தியந்துவைத்தநகர்களிப்பவினிதிருந்தபுரவலன்
சயந்தழைக்கவிந்திரன்சயந்தனேப்பயந்தநாள்
வியந்தகத்தடைந்தவின்பம்வீளைமழிழ்க்கியெய்தினான். (ங)

தென்னரேறுசாதகாதிசெய்துவீரபாண்டிய
னென்னநாமவினைநிரப்பியெழுதிணைகலேமுதற்

(ருக) தேவர்கோன்-தேவராசன். மும்மாரி-மூன்றுமழை. மடுத்து-நிறைந்து. காவி-சுவளை. வயல்-வீளைநிலம். செய்-கழனி. பொழில்-பூந்தோட்டம். கா-பயன்தருசோலை. (க) அண்டர்-தேவர். அமருழந்த-போர்புரிந்த. மௌலி-முடி. வெம்-முதுகு. வைப்பு-புதைபொருள். (உ) மலயவெற்பின்முனிவர்கோன் - பொதிகையிலுள்ள முனிவர்தலைவரான அகத்தியர். (ங) வயந்தனேப்பயந்தபோதென்ன-இந்திரனேபொருது வெற்றிபெற்றகாலத்திற்போல. சயந்தன்-இந்திரகுமரன்.

பன்னுகேள்விகரிகடேர்கள்பரிபடைக்கலம்பயின்
றன்னகாதலான்விளங்கவகமகிழ்ச்சியடையுநாள். (சு)

மல்குமாறுகோடிரிந்துமழைசுருங்கிநதியுநீ
ரொல்குமாறுபருவமாறியுணவுமாறியுயிரெலா
மெல்குமாறுபசியுழந்துவேந்தனுக்குவிளைபொரு
ணல்குமாறிலாமையின்னகலியவந்தாடெலாம். (டு)

மழைவறந்ததென்கொலென்றுவழுதிகூறமுழுதுணர்ந்
தழிவிலாதபிரமகற்பமளவுமெல்லைகண்டநூ
லுழவர்கோள்களிரவிதன்னையுற்றுநோக்கிநிற்றலாற்
றழையுமாரிவருடியாதொர்வருடமென்றுசாற்றினார். (சு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மகவுறுநோயைநோக்கிவருந்துறுதாய்போன்மன்னன்
பகவுறுமதியஞ்சூடும்பழஞ்சுடர்முன்போய்த்தாழ்ந்து
மிகவுறுபசியால்வையமெலிவதையெண்ணித்
தகவுறவிரங்கிக்கண்ணீர்தூம்பிற்பிரிந்துவேண்ட. (எ)

திரைக்கடல்விடஞ்சேர்கண்டர்காலத்தின்செவ்விநோக்கி
யிரக்கமில்லவர்போல்வாளாவிருத்தலுமருத்தார்மார்பன்
கரைக்கரிதாயதுன்பக்கடலில்வீழ்ந்திருக்கைபுக்கா
னரக்கர்போர்க்கடலினீந்தியருக்கனீர்க்கடலில்வீழ்ந்தான். (அ)

வள்ளறன்குடைக்கீழ்த்தங்குமுயிர்ப்பசிவருத்தமெல்லாங்
கொள்ளைகொண்டிருந்தநெஞ்சிற்குளிர்முகச்செவ்விகுன்றத்
தள்ளருந்துயரின்மூழ்கித்தரையிடைத்துயின்றுகை
வெள்ளிமன்றுடையார்சித்தவேடமாய்க்கனவில்வந்தார். (கூ)

அடற்கதிர்வேலோய்மாரியரிதிப்போதுதானேவேண்டி
யிடர்ப்படல்வரைக்குவேந்தாயிருக்கின்றவெரிபொன்மேருத்

(சு) எழுதொணாதகலை-வேதம். (டு) மல்கு-வளந்தருகின்ற. ஆறு கோடிரிந்து-ஆறு, கோள், திரிந்து. ஆறுகோள். சனியங்காரகன் குருசூரியன் இராகுகேதுக்கள். பருவம்-கார்ப்பருவம். (சு) நூலுழவர்-கணிதநூற்புலவர். கோள் கிரகங்கள். இரவி-சூரியன். உற்றுநோக்கிநிற்றல்-எதிர்நோக்கி வக்கிரித்துநிற்றல். (எ) மகவு-தாம் பெற்ற குழந்தை. பகவு-பிளவு. (அ) மருத்தார்-மணமுள்ளமாலை. அரக்கர்-மந் தேகரென்னு மசுரர். போர்க்கடல்-சண்டையாகிய சமுத்திரம். (கூ) வள்ளல்-உக்கிரபாண்டியன்.

தடப்பெருவரையின்மாடோர்தனிப்பெருமுழையிலிட்டுக்
கிடப்பதோரெல்லையில்லாக்கேடிலாச்சேமவைப்பு. (கo)

கிடைத்துமற்றனையமேருகிரிச்செருக்கடங்கச்சண்டாற்
புடைத்துநின்னுணைத்தாக்கிப்பொன்னறைபொதிந்தபாறை
துடைத்துநீவேண்டுங்காறுந்தொட்டெடுத்ததனைமீள
வடைத்துநின்குறியிட்டையவருதியென்றடிகள்கூற. (கக)

விழித்தனைமூமான்றேரோன்விழிக்குமுன்கடன்களெல்லாங்
கழித்தனன்மீனநோக்கிகணவனைவலமாய்ப்போந்து
சுழித்தெறிகடலனீகத்தொகைபுறஞ்சூழக்கொண்டல்
கிழித்தெழுவாயினீங்கிக்கீழ்திசைநோக்கிச்செல்வான். (கஉ)

அதிர்ந்தனமுரசஞ்சங்கமதிர்ந்தனவியங்களண்டம்
பிதிர்ந்தனவென்னவார்ப்பப்பெயர்ந்துவெண்கவரிதுள்ள
முதிர்ந்தநான்மறையோராசிமொழியநாவல்லோரேத்தப்
பதிந்துபார்கிழியத்தின்டேர்பாகுமுன்செலுத்தவூர்ந்தான். (கங)

பவளக்காற்பிச்சம்பொற்காற்பன்மணிக்கவிகைமுத்தத்
தவளக்காற்பதாகைக்காதெனவானருவிதூங்குங்
கவளக்காற்பொருப்பும்பாய்மாக்கடலுமண்டமடந்தையாகத்
துவளக்கால்வயவர்மான்றேர்த்தொகுதியுஞ்சூழல்போக. (கச)

கோழினார்ஞாழலன்னகோட்டுகிர்ப்புலவுப்பேழ்வாய்த்
தாழ்சினவுழுவையொற்றைத்தனிப்பெருங்கொடியுங்கூனற்
காழ்சிலைக்கொடியுஞ்சூழக்கயற்கொடிநிலந்துழாங்கை
யேழுயர்வரைமேற்றோன்றியிருவிசும்பகடுகிற. (கஙு)

தென்கடல்வடபாலேங்கிச்செல்வதுபோலத்தென்னன்
றன்கடலனிகங்கன்னித்தண்டமிழ்நாடுநீந்தி
வன்கடநெறிக்கொண்டேகிவளவர்கோனெதிர்கொண்டாற்று
நன்கடன்மூகமனேற்றுநளிர்புனலுநீந்தி. (கசு)

(கo) இடர்ப்படல்-வருந்தற்க. கிடைத்து-அடைந்து. குறி-இலச்சினை. முத்திரையென்ப. (கஉ) எழுமான்-சத்தமாவென்னுங் குதிரை. கொண்டல் இழித்தெழு-மேகமண்டலத்திற்கு மேற்போகிய. (கங) பாகு-தேர்ப்பாகன். (கச) பிச்சம்-பீலிக்குடை. தானவானருவி-மதமாகியபெரியஅருவி. தூங்கும்-ஒழுக்கும். கவளக்காற்பொருப்பு-கவளம்உண்பதுவுங்காலுடையதுமானபொருப்பு-யானையென்னுபொருள். (கஙு) ஞாழல்-புலிநகக்கொன்றை. உழுவை-புலி. ஏழுயர்வரை. (கசு) ஏழிடமுயர்ந்த-யானை. அனிகம்-சேனை.

தண்டகநாடுதள்ளித்தெலுங்கநாடகன்றுசாய்தாட்
கண்டகக்கைகதைவேலிக்கருநடங்கடந்துகாடுந்
தொண்டகந்துவைக்குங்குன்றுநதிகளுந்துறந்துகள்வாய்
வண்டகமலர்க்காவேலிமாளவதேசநண்ணி. (கஎ)

அங்குநின்றெழுந்துதீவாயருஞ்சுரநெறிபட்டேகி
மங்குனின்றஇருஞ்செம்பொன்மாடநீள்விராடநண்ணிக்
கொங்குநின்றவிழுங்கானங்குன்றெரீஇவாளபாயத்
தெங்குநின்றிளநீர்சிந்துமத்தியதேயத்தெய்தி. (கஅ)

அந்நெடுநாடுநீங்கியாடலேறுயர்த்ததோன்றல்
பொன்னெடுஞ்சடையிற்றுழ்ந்துபுனிதமாந்தீர்த்தக்காசி
நன்னெடுநகரமெய்திநளிர்புனற்கங்கைநீந்திக்
கன்னெடுநெறியனேககாவதங்கடந்தபின்னர். (கக)

மடங்கன்மாநாகம்யாளிவழங்கலான்மனிதர்செல்லா
விடங்கடந்தகவைஞ்ஞூற்றிரட்டியோசனைத்தாமெல்லைக்
கடங்கெழுகுமரிகண்டங்கடந்துமற்றதுபோலெட்டுத்
தடங்கெழுகண்டங்கொண்டபாரதவருடந்தள்ளி. (உ0)

யாவையுமீன்றுடன்னையீன்றபொன்னிமயந்தன்னைத்
தாவியப்புறம்போய்ப்போகந்ததும்புகிம்புருடகண்ட
மேவியங்கதுநீத்தேமவெற்படைந்ததுபின்னுக
வோவியப்புறத்துத்தோன்றுமரிவருடத்தையுற்று. (உக)

உற்றதுகழிந்தப்பாற்போய்நிடதவெற்பொழிந்துசம்புப்
பொற்றருக்கனிகால்யாறுபோகிளாவிரதகண்டத்
துற்றனன்கண்டான்மூன்றுரொருங்குஞான்றுகூனி
வெற்றிவெஞ்சிலையாய்நின்றவெற்பினமலையவெற்பன். (உஉ)

வெம்படைமறவர்சேனைவெள்ளநீத்தேகித்தென்பாற்
சம்புவின்கனியின்சாறுவலம்படத்தழுவியோடு
மம்பொனீராறுமாற்றினருகுபொன்மயமாய்நிற்கும்
பைம்புனங்கானநோக்கிவிளைந்துதென்பால்வந்தெய்தா. (உங)

(கஎ) தண்டகநாடு-தொண்டைநாடு. (கஅ)சுரம்-பாலை. (கக) நீந்திகடந்து. (உ0) மடங்கல்-சிங்கம். மாநாகம்-யானை; பெரும்பாம்பு மாம். (உக) தாவி-கடந்து. ஏமவெற்பு-ஏமகூடம் என்னுமலை. (உஉ) இளாவிருதகண்டம்-மேருவின் ருள்வரையிலுள்ள ஒரு பூமி.

அவ்வரையரசைநோக்கிவரைகளுக்கரசேயென்தை
கைவரிசிலேயேபாரின்கலாகணேயளவில்வானந்
தைவருசுடருங்கோளுநாள்களுந்தழுவிச்சூழுந்
தெய்வதவரையேமேலத்தேவராலயமேயென்ரு. (உச)

மாணிக்கமிமைக்கும்பூணன்விளித்தலும்வரைக்குவேந்தன்
பாணித்துவரவுதாழ்ப்பப்பாகசாதனனேவென்ரே
ணித்தன்சினமுமேருநகைவரைச்செருக்குமாறச்
சேணுற்றசிகரந்தன்னிற்செண்டிளுலடித்துநின்ரான். (உடு)

அடித்தலுமசையாமேருவசைந்துபொற்பந்துபோலத்
துடித்ததுசிகரபந்திசுரர்பயில்மாடப்பந்தி
வெடித்தனதருணபானுமண்டிலம்விண்டுதூளாய்ப்
படித்தலேதெறித்தாலென்னப்பன்மணியுதிர்ந்தவன்றே. (உசு)

புடைவரைக்குலங்களெட்டும்புறந்தழீஇக்கிடக்குஞ்செம்பொ
னடைகலோர்நான்குநான்குதிடங்கருமலர்ந்தநான்கு
தடமலர்ப்பொழிலுநான்குதருக்களுஞ்சலித்தவம்மா
வுடையவனிடையூறுற்ரூலடித்தவர்க்குவகையுண்டோ. (உஎ)

புடைத்தபின்மேருத்தெய்வம்புடைக்குலவரையெட்டென்னப்
படைத்தவெண்டோளுநான்குமுடியுமேற்படுவெண்சோதி
யுடைத்தனிக்குடையுங்கொண்டவருவிஞ்சைடெழுந்துநாணிக்
கிடைத்ததுகருணைவேந்தன்கிளர்சினந்தணிந்துநோக்கா. (உஅ)

இத்தனைவரவுதாழ்த்ததென்னைமேருத்தெய்வம்
வித்தகரும்பிகேட்டிடீமெனைங்கண்ணியோடும்
பைத்தலையரவம்பூண்டபரனையிப்படிவங்கொண்டு
நித்தலும்போகிப்போகிவழிபடுநியமம்பூண்டேன். (உக)

இன்றுகேட்டிலையோவையாவேந்திழையொருத்திகாமந்
துன்றுமாகடலின்மோகச்சுழித்தலைப்பட்டுவெள்ளி
மன்றுளாடியபொற்பாதம்வழிபடன்மறந்துதாழ்ந்து
நின்றுளேனினையதீங்கினிமித்திலுலடியும்பட்டேன். (ஈ0)

(உடு) பாணித்து - தாமதித்து. (உசு) சிகரபந்தி - கொடுமுடி வரிசை. (உஎ) அடைகல் - உறுதியாக நிறுத்தப்பட்ட மலை. (உஅ) புடைத்தபின் - அடித்த பின்னர். (உக) மேருத்தெய்வம் - மேரு வாகிய தெய்வம்.

திருவடிபிழைத்ததீங்குதீர்த்தனேயிதனிலேயன்
றருவதோருறுதிதானுந்தக்கதோர்கைம்மாறென்னுல்
வருவதுமுண்டாங்கொல்லோமற்றதுநிற்கமன்றற்
பருவரைமார்பவந்தபரிசென்கொல்பகர்தியென்ன. (ஈக)

மன்னவன்வெறுக்கைவேண்டிவந்தனனென்றனேய
வுன்னதுபுலத்தோர்கேற்பவுரைபடுமாற்றதாய
பொன்னவிர்தேமாநீழற்புதைபடக்கிடக்குஞ்செம்பொ
னென்னவங்கையாற்சுட்டிக்காட்டியதெரிபொற்குன்றம். (ஈஉ)

பின்னகுவேலான்முந்நீர்வேலையைவணக்கங்கண்டோன்
பொன்னறைமருங்கிற்போகிப்பொத்தியபாறைநீக்கித்
தன்னவாவளவிற்றூயதமனியமுகந்துமூடிப்
பின்னதுந்தன்னதாகப்பெயரிலச்சினேயுந்தீட்டா. (ஈஈ)

மின்றிகழ்மணிப்பூண்மார்பன்மீண்டதன்றூனேயோடுங்
தென்றிசைநோக்கிப்பாகன்செலுத்தமான்றடந்தேரூர்ந்து
பொன்றிகழ்வரையும்போகபூமியும்பிறவுநீத்து
நன்றிகொண்மனிதர்வைப்பினண்ணுவானண்ணுமெல்லை. (ஈசு)

மாத்திமர்விராடமன்னர்மாளவர்தெலுங்கதேயப்
பார்த்திபர்பிறருந்தத்தம்பதிதொறும்வரவுநோக்கித்
தேர்த்திகழனிகத்தோடுஞ்சென்றெதிர்முகமன்செய்யத்
தார்த்திருமார்பன்கன்னித்தண்டமிழ்நாடுசார்ந்தான். (ஈடு)

கன்னிப்பொன்னெயில்சூழ்செம்பொற்கடிநகர்க்கணியஞுகிப்
பொன்னிற்செய்திழைத்தநீள்கோபுரத்தினேக்கண்டுதாழ
வுன்னித்தேரிழிந்தெட்டோடைந்துறுப்பிஞுற்பணிந்தெழுந்து
வன்னிச்செஞ்சுடர்க்கணைற்றிமன்னவன்மதுரைசார்ந்தான். (ஈசு)

அறத்துறையந்தணாளர்துறந்தவரரன்ருள்பற்றிப்
புறத்துறையகன்றசைவபூதியர்புனிதன்கோயிற்
றிறத்துறையகத்துத்தொண்டர்திரண்டெதிர்கொள்ளமுத்தி
னிறத்துறைவைகைநீத்துநெடுமதில்வாயில்புக்கான். (ஈஎ)

(ஈஉ) உன்னது புலத்தோர் - உன்னூட்டி வுள்ளோர். (ஈஈ) பொத்திய - மூடிய. இலச்சினே - முத்திரை. (ஈசு) மான்-குதிரை. (ஈடு) பார்த்திபர் - அரசர். முகமன் - உபசாரம். (ஈசு) கன்னி - அழியாத. பொன் னெயில் - பொன்மதில்.(ஈஎ) அறத்துறை-தரு மவழி. புறத்துறை - வெளி மார்க்கம்.

கொங்கலர்கோதைமாதர்குங்குமம்பணிப்பச்சிந்து
மங்கலமறுகினேகிமறைகள்சூழ்கோயிலெய்தித்
தங்களுயகனேச்சூழ்ந்துதாழ்ந்தெழுந்தேத்திப்போந்து
திங்களூர்குடுமிச்செல்வத்திருமணிக்கோயில்புக்கான். (ஈஅ)

பொன்மலைக்கடவுளீந்தபுண்ணியநிதியையந்த
ரன்மலைமானக்கூப்பிநல்கிப்பல்குடியுமோம்பித்
தென்மலைக்கிழவன்றெய்வந்தென்புலவாணரொக்க
றன்மனைவிருந்துகாத்துத்தருக்கிளைஞருக்குநாளில். (ஈக)

ஐவினைநடத்துமீசனுயானடக்குங்கோளுஞ்
செய்வினைத்திரிவுமாறத்தென்னனுடெங்குமாரி
பெய்வினையுடையதாகிப்பெருவளம்பகிர்ந்துநல்க
வுய்வினையுடையவாகியுயிரெலாந்தழைத்தவன்றே. (சஅ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புவனியிம்முறையாற்புரந்தளித்தாரம்பூண்ட பாண்டியன்றிருமகனு
கவனியேழறியவீரபாண்டியனென்றணிமுடிகவித்தரசளித்து [க்
ஙவனிரதிசயபூரணவின்பஞானநோக்கருளியமதுரைச்
சிவனடிநிழலிற்பிளப்பறப்பழையதேசொடுநிறைந்துவீற்றிருந்தான்.

மேருவைச்சேண்டாலடித்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ககஙூ.



பதினாறவது,

வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம்.



எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலம்பொருதடந்தோளுக்கிரச்செழியனுயரியமேருமால்வரை
யைப், பொலம்புரிசெண்டாற்புடைத்துவைப்பெடுத்துப்போந்தரு
ளடைந்தவாபுகன்றும், வலம்படுதிணிதோள்வீரபாண்டியன்கோல்வ
ழங்குநாண்மதுரையம்பெருமான், புலம்பொருமுனிவர்தேறநால்
வேதப்பொருளுணர்த்தியதிறம்புகல்வாம். (க)

(ஈஅ) கொங்கு - வாசனை. (ஈக) தென்மலைக் கிழவன் - பொதிகைமலைக்குரிய பாண்டியன். (சஅ) ஐவினை - பஞ்சகிருத்தியம். (சக) பிளப்பற - வேறுபாடற. நவம் - புதுமை. (க) உலம் - உருண்டகல்.

ஐம்பெரும்பூதநிலைதிரிந்தீரேழுலக்கியவுலகொடுமையன்மா, லும் பர்வான்பதமுமுதித்தவாறெங்கவருத்தநாழிவன்தெய்தச், செம்பொருண்மறையு மொடுங்கியவழிநாட் செஞ்சுடர்க்கடவுண்முன் மலரும், வம்பவிழ்கமலமெனவரன்றிருமுன்மலர்ந்ததாலகிலமுமாதோ. (உ)

பண்டுபோற்பின்னுமுத்தொழினடத்தப் பராபரஞ்சுடர்திருவுள்ளங, கொண்டுபோர்த்திகிரிவலவனேத்தரவிக்குரிசிறன்னுபிமுண்டகத்தில், வண்டுபோற்பிரமனுதித்துமூவுலகும்வரன்முறைபடைக்குநாணஞ்ச, முண்டுபோற்றியவானவர்க்குயிரளித்தவம்பர்நாயகன்றிருவாக்கில். (ஊ)

பிரணவமுதித்ததனிடைவேதம்பிறந்தனநைமிசாரணியத் தருணிறைமுனிவர்கண்ணுவர்கருக்கராதியோரதிகரித்தவற்றின் பொருணிலைதெரியாதுள்ளமுமுகமும்புலந்தனரிருப்பவப்போதத் திருண்மலவலிவென்றவனரபத்தனென்றொருவேதியன்வந்தான்.

வந்தவேதியனேயிருந்தவேதியர்கள்வரவெதிர்ந்திறைஞ்சிவேறிருக்கை, தந்தவேலையிலம்மறையவன்முனிவர்தமைமுகநோக்கியீதுரைப்பான், பந்தவேதனைசாலவாவெறுப்பிகந்தபண்பினாயினீர்கீவிர், சிந்தைவேறுகிமுகம்புலர்ந்திருக்குஞ்செய்தியாதெனவவர்சொல்வார். (எ)

மருட்படுமாயைகழிந்தவன்மொழிந்தமறைபயின்றுரைசெய்தேசிகனற், றிருட்படுமனத்தேமிருத்துமாலையாதுசூழிதற்கெனக்கேட்ட, தெருட்படுமனத்தோன்செப்புவான்வேதஞ்செப்பியசிவபரஞ்சுடரே, யருட்படிவெடுத்துப்பொருளையுமுணர்த்துமல்லதுசூழ்ச்சியாதறைவீர். (ஏ)

பண்ணியதவத்தாலன்றியாதானும்படுபொருள்பிறிதிலேதவமும்
புண்ணியதலத்தினல்லதுபலியாபுண்ணியதலத்தினும்விழுப்ப
நண்ணியசைவதலத்தினிலியற்றினல்குமச்சிவதலங்களினு
மெண்ணியவதிகதலத்தினிலியற்றினிருந்தவமெளிதுடன்பயக்கும்.

(உ) நிலைதிரிந்து - இருக்கவேண்டிய நிலையினின்றும் மாறி. (ஊ) முத்தொழில் - ஆக்கல் காத்தல் அழித்தல். (எ) பிரணவம் - ஓங்காரம். (ஐ) பந்தவேதனை - பரிசத்துன்பம். (ஈ) சூழ் - தந்திரம். (ஏ) அதிக தலம்-உயர்ந்த தலம்.

அத்தகுதலமற்றியாதெனிலுலகமகிலமுந்தன்னுடம்பான
வித்தகன்சென்னிப்பன்னிருவிரன்மேல்விளங்கியதலமதுசீவன்
முத்தராயெண்ணில்வானவர்முனிவோர்முயன்றுமாதவப்பயனடை
ந்து, சித்தமாசகன்றுவதிவதென்றறநூல்செப்பியமதுரையங்ஙகரில்.

தெளிதருவிசும்பி னிழிந்ததோர்விமானசிகாமணியருகுதென்
மருங்கின், முளிதருபராரைவடதிழல்பிரியாமுழுமுதல்வழிபடுமற
வோர்க், களிதருகருணைமுகமலர்ந்தளவாவருங்கலையனேத்தையுந்
தெளிவித், தொளிதருமனையமூர்த்தியேநுங்கட்கோதியமறைப்பொ
ருளுணர்த்தும். (கூ)

அங்கவன்றிருமுனருந்தவவிரதமாற்றுவான்செல்லுமினனவப்
புங்கவனருள்போல்வந்தமாதவன்பின்புனிதமாமுனிவருமங்கை
பங்கவன்மதுரைப்பதிபுகுந்தம்பொற்பன்மணிக்கோயில்புக்காழிச்
சங்கவன்கைபோல்வளைசெறிசெழும்பொற்றுமரைத்தடாகநீராடி.

கரைகடந்துள்ளங் கடந்தவன்புந்தக்கடிதுபோய்நான்கிருவெ
ள்ளி, வரைகடம்பிடரிற்கிடந்ததோர்மேருவரைபுரைவிமானமேற்
காணு, வுரைகடம்பொருளேக்கண்களாற்கண்டாங்கும்பர்தம்பிரா
னேநேர்கண்டு, திரைகடந்திடும்பேரின்பவாரியிலுஞ்சேணிலத்திலு
ம்விழுந்தெழுந்தார். (கக)

கைதலைமுகிழ்த்துக்கரசரணங்கள்கம்பிதஞ்செய்துகண்ணருவி
பெய்தலைவெள்ளத்தாழ்ந்துவாய்குழறிப்பிரமன்மாலின்னமுந்தேரு
மைதழைகண்டவெள்ளிமன்றுடும்வானவர்நாயகவாஎ
ருய்தரவிடமுண்டமுதருள்புரிந்தவுத்தமபோற்றியென்றேத்தா. ()

மறைபொருள்காணுதுள்ளமாலுழந்துவாடியவெமக்குநீயேயந்,
நிறைபொருளாகிநின்றனையதற்குநீயலாற்பொருள்பிறிதியாதென்,
றிறைவனையிறைவன்பங்கிலங்கயற்கணிறைவியையம்முறையேத்தி,
முறைவலஞ்செய்துவட திழலமர்ந்தமூர்த்தி முன்னெய்தினர்முனி
வோர். (கஙூ)

சீதளப்பளிக்குமேனியும்பளிக்குச்செழுமலபதித்ததுப்பன்ன,
பாதமுஞ்செவ்வாய்மலரு முக்கண்ணும்பங்கயச் செங்கரநான்கும்,

(அ) வித்தகன் - அறிவுடைய புருடன். (கூ) அறவோர் - முனி வோர். (கo) ஆற்றுவான் - செய்வான். (கக) வெள்ளிவரை - ஈண் டுவெண்ணிற யானைகள். (கஉ) கம்பிதம் - நடுக்கம். (கஙூ) முறை- கிரமமாக.

வேதபுத்தகமுமமுதகும்ப முந்தன்விழிமணிவடமு மெய்ஞ்ஞான, போதமுத்திரையுந்தரித்ததோர்தனிமைப்போதன்முன்ரூழ்ந்தெழு ந்தேத்தா. (கச)

வடநிழலமர்ந்தமறைமுதன்மேதாமனு வெழுத்திருபதுமிரண் டுந், திடமுறவரபத்தன்றனுற்றெளிந்து தேணிறைமதிமுதலடை வீற், படிமதியனவுந்தருப்பணமோமம்பார்ப்பனவுண்டிமுப்போது, மடைவுறநுவன்றுநோற்குமாதவர்முனருமறைப்பொருள்வெளிவரு மால். (கடி)

கலிவிருத்தம்.

மானமுனிவோரதிசயிப்பவடநீழன்
மோனவடிவாகியமுதற்குரவனெண்ணுன்
கூனமிலிலக்கணவுறுப்பகவைநாளுன்
கானவொருகாளமறையோன்வடிவமாகி. (கசு)

நீண்டதிரிமுண்டமழனெற்றிவிழிபொத்தக்
காண்டகையகண்டிகைவளைந்தொழுகுகாதிற்
பூண்டகுழைகௌவியபொலன்செய்பலகாசு
சேண்டவழிளங்கதிர்சிரித்திருள்சிதைப்ப. (கஎ)

உத்தரியவெண்படம்வலம்படவொதுங்க
முத்தவளநூலிலெடுமுத்தமிடையிட்டு
வைத்தணியுமக்கவடமாலையெறிவாளாற்
பத்தரைமறைத்தமலபந்தவிருள்சிந்த. (கஅ)

கண்டிகைதொடுத்திருகரத்திலெடுவாகு
தண்டினிடுமாலைவிடவாளரவுதள்ள
வெண்டுகிலிலுனவிரிகோவணமருங்கிற்
றண்டரியபட்டிகைவளைந்தொளிதழைப்ப. (ககூ)

வண்டுவரிபாடுவனபோலமலர்பாத
புண்டரிகமேலுழல்சிலம்புகள்புலம்பத்
தொண்டரகமாசிருடுணித்துமுடிசூட்டு
முண்டகமலர்ப்புறம்விறற்கழன்முழங்க. (௨0)

(கச) போதன்-ஞானுசாரியனுன தட்சிணமூர்த்தி. (கடி) மேதா மனு - மேதா தட்சிணு மூர்த்தி மந்திரம். (கசு) மானம் - உயர்ச்சி. (கஎ) பொத்த - மூட. (கஅ) வாள் - பிரகாசம். (ககூ) தண்டரிய - விலகாத. (௨0) விறல் - வெற்றி.

ஏதமில்பவித்திரம்வலக்கரனிமைப்பப்
போதம்வரைபுத்தகமிடக்கையதுபொற்ப
வோதியுணராதலறியோலமிடும்வேதம்
பாதுகைகளாகியிருபாதமலர்சூட. (உக)

கள்ளமுளரிக்குண்முரல்காலையறுகால
புள்ளொலியினுமிதமும்புடைபெயர்ந்து
துள்ளவெழுவேதவொலிதொண்டர்செவியாற்ற
லுள்ளவயல்புக்குவகையொண்பயிர்வளர்ப்ப. (உஉ)

சீதமணிமூரறிருவாய்சிறிதரும்ப
மாதவர்கள்காணவெளிவந்துவெளிநின்ரு
ஞதமுடிவாயளவினன்மறையினந்த
போதவடிவாகிநிறைபூரணபுராணன். (உங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வட்டவாண்மதிகண்டார்க்குமுவாக்கடன்மானமாண்ட
சிட்டராமுனிவர்காலத்தேசிகவடிவநோக்கி
யொட்டருவுவகைவெள்ளமேற்கொளவுருத்தகூற்றை
யட்டதாமரைதஞ்சென்னிக்கணிமலராகத்தாழ்ந்தார். (உச)

அளவறுகலைகட்கெல்லாமுறைவிடமாகிவேத
வினைபொருளாகிநின்றவேதியசரணமென்ற
வளவுறுமனத்தினுரைத்தேசிகவள்ளலுக்கிப்
பளகறுதவத்தீர்வேட்கையாதெனப்பணிந்துசொல்வார். (உடு)

அடியரேமுய்யுமாறுமுலகெலாமளிக்குமாறும்
படியிலாவரத்தவேதப்பயனருள்செய்தியென்னக்
கொடியமாபாசந்தீர்ப்பான்குரவனம்முனிவரோடு
முடிவிலாவிலிங்கமுன்போய்மறைப்பொருண்மொழிவதானான். ()

அந்தணிர்கேண்மின்சாலவருமறைப்பொருள்களெல்லா
மந்தணமாகுமிந்தமறைப்பொருளறிதருனே
நந்தலில்லாதபோகப்பயனுக்குநலியும்பாச
பந்தனைகழிக்கும்வீட்டின்பயனுக்குங்கருவியாகும். (உஎ)

(உக) போதம் - சிவஞானபோதம். (உஉ) கள்ளமுளரி - தேனினையுடைய தாமரை. (உங) மூரல் - பற்கள். (உச) வால் - வெளுத்த. உவா - நிறைவு. சிட்டர் - பெரியர். (உசு) படி-ஒப்பு. (உஎ) மந்தணம் - ரகசியம். நந்தலில்லாத - கெடாத.

உத்தமசயம்புக்குள்ளுமுத்தமதரமாய்மேலாந்
தத்துவமாகுமிந்தச்சுந்தரசயம்புலிங்க
நித்தமாய்மறைகட்கெல்லாநிதானமாம்பொருளாயுண்மைச்
சுத்தவத்துவிதமானசுயம்பிரகாசமாகும். (உஅ)

நிறைபராபரம்விஞ்ஞானநிராமயமென்றுநூல்க
ளறைபரம்பிரமமாகுமிதனுருவாகுமேக
மறையிதன்பொருளே யிந்தச்சுந்தரவடிவாயிங்கு
னுறைசிவலிங்கமொன்றேயென்பர் நூலுணர்ந்தநல்லோர். (உக)

ஆகையான்மறையுமொன்றேயருமறைப்பொருளுமொன்றே
சாகையாலனந்தமாகித்தழைத்த தச்சாகையெல்லா
மோகையாலிவனேயேத்துமுலகுதயாதிக்கிந்த
வேகனுணையினன்மூன்றுமூர்த்தியாயிருந்தானன்றே. (ஈ0)

மலர்மகனுகிமூன்றுவையமும்படைத்துமாலா
யலைவறநிறுத்தி முக்கணுதியாயழித்தம்மூவர்
தலைவனுய்ப் பரமாகாசசரீரியாய் முதலீறின்றித்
தொலைவருஞ்சோதிவடிவித்சுந்தரவிலிங்கந்தன்னில். (ஈக)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆதியிலான்மதத்துவமானவலர்மகன்பாகமுநடுவி
னீதியில்விச்சாதத்துவமானநெடியவன்பாகமு முடிவி
லோதியசிவதத்துவமெனலானவருத்திரபாகமுமுதிக்கும் [யால்.
பேதிபிம்மூன்றிலெண்ணிறத்துவங்கள் பிறக்குமிம்மூன்றினுமுறை

ஓத்ருமகாரமுகாரமேமகாரமுதித்திடும் பிரணவம்விந்து. நாத
மோடுதிக்கும் வியத்தாரகத்தினல்லகாயத்திரிமூன்று, பேதமாம்
பதத்தாற்பிறக்குமிக்காயத்திரியிருபேதமாம்பேதம், யாதெனிற்சம
ட்டிவியட்டியென்றிரண்டுமேதுவாம்வேட்டவைக்கெல்லாம்.

இன்னவையிரண்டுமினருள்வலியாலீன்ற நான்மறையையந்
நான்கும், பின்னினனருளாலளவிலவான பிரணவமாதிமந்திரமு,

(உஅ) தத்துவம் - அழியாதது. தத்துவமென்பதற்கு நாதவிந்துக்
களின் பொருளாய் விளங்கி நிற்றலென்றுங் கூறுப. (உக) பராப
ரம் - பரைக்கு மேலானது. (ஈ0) ஆணை - கட்டளை. அருட்சத்தி
யென்றுங் கூறுப. (ஈக) மலர்மகன்-பிரமன். (ஈஉ) எண்ணில் தத்
துவம் - அளவற்ற தத்துவம். (ஈங) வியத்தம் - வியட்டி. தாரகம் -
ஆதாரம் ; அது பிரணவம்.

மன்னவாருன தாரகத்தகாரமாதியக்கரங்களுமுதித்த, சொன்ன யக்கரத்திற்சிவாகமநூலிச்சுரவரனமுகத்துதித்த. (கச)

கீட்டிசைமுகத்தொன்றடுத்த நாலைந்திற்கிளைத்ததாலிருக்கது தென்பா, லீட்டியவிரண்டாம்வேதநூறுருவோடெழுந்தது வடதிசைமுகத்தி, னீட்டியசாமமாயிரமுகத்தானிமிர்ந்தது குடதிசைமுகத்தி, னுட்டியவொன்பதருவொடுகிளைத்துநடந்ததுநான்கதாமறையே. (கரு)

அருமறைநால்வேறுகையால்வருணமாச் சிரமங்களுநான்காந், தருமம்யாகாதிகருமமுமறையின்றகைமையிற்றோன்றினமறையுங், கருமநூன்ஞானநூலெனவிரண்டாங் கருமநூலிவனருச்சனைக்கு, வரும்வினையுணர்த்து ஞானநூலிவன்றன்வடிவிலாவடிவினையுணர்த்திம். (கக)

முதனுகர்ரீராற்சினைகுழைத்தாங்கிம் முழுமூதுருருத்துநல்லவியின் பதமிவன்வடிவப்பண்ணவர் பிறர்க்குந்தருத்தியாம் பரனிவன்முகத்விதமுறுநித்தமாதிமூவினைக்கும்வேண்டியாங்குலகவர்போகந்[தின் கதிபெறவியற்றுஞ்சிவார்ச்சனைவினைக்குங்[ணமிச்சிவகோசம். ()

மறைபலமுகங்கொண்ட லறிவாயிளைத்துமயங்க வேறகண்ட பூரணமாய், நிறைபரம்பிரமமாரு மிக்குறியைக் கருமநன்னெறிவழாப்பூசை, முறையினுஞானநெறியினிப்பொருளேயருளிஞன்முயக்கறமுயங்கு, மறிவினுந் தெளிவதுமக்குநாமுரைத்தவருமறைப்பொருள் பிறர்க்கரிதால். (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கருமத்தான்ஞானமுண்டாங் கருமத்தைச்சித்தசுத்தி
தருமத்தாலிகந்தசித்தசுத்தியைத்தருமமல்கு
மருமைத்தாந்தருமத்தாலேசாந்தியுண்டாகுமாண்ட
பெருமைத்தாஞ்சாந்தியாலேபிறப்பதட்டாங்கயோகம். (கக)

கிரியையான்ஞானந்தன்னற்கிளர்சிவபத்திபூசை
தரிசனஞ்சைவலிங்கதாபனஞ்செய்தலீசற்
குரியமெய்யன்பர்பூசையுருத்திரசின்னந்தாங்க
லரியதேசிகன்பாற்பத்தியனேதீதையுந்தெரியலாகும். (சஅ)

(கச) பிரணவமாதி மந்திரம் - பஞ்சப் பிரணவாதி மந்திரம். (கரு) கீட்டிசைமுகம் - கிழக்கு முகம். (கசு) வினை - தொழில். (கஎ) முதல் - வேர். குழைத்தல் - தளிர்த்தல். (கஅ) பலமுகம். அநேகசாகை. (கக) கருமம். கிரியை. (சஅ) சின்னம் அடையாளம்.

மறைவழிமதங்கட்கெல்லாமறைபிரமாண்ம்பின்சென்
றறைதருமிருதியெல்லாமவைக்கனுகுணமாமின்ன
முறையினுன்மார்த்தமென்றுமொழிவதம்மார்த்தஞ்சேர்ந்த
துறைகள்வைதிகமாமேலாச்சொல்வதிச்சுத்தமார்க்கம். (சக)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.


தெருட்பெறுபோகம்வீடுகோரணமாய்ச்சிவமயமாமறைப்பொ
ருளை,யிருட்கெடவுரைத்தேமிப்பொருட்கதிகமில்லையிப்பொருளை
லாமுமக்கு, மருட்கெடத்தெளிவதாகெனவினையவழிவழாமாதவர்பு
றத்தை, யருட்கையாற்றடவியிலிங்கத்துட்புகுந்தானருள்பழுத்தன்
னைதேசிகனே. (சஉ)

வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ககசுஉ.

ப் தி னே ழ ா வ து

மாணிக்கம்விற்ற படலம்.



கலிநிலைத்துறை.

சுகந்தவார்பொழின்மதுரையெம்பிரான்றனதுணைத்தா
ளுகந்தவாவறுகண்ணுவமுனிமுதலோது
மகந்தவாதபோன்பருக்கருமறைப்பொருளைப்
பகர்ந்தவாறிதுமாணிக்கம்பகர்ந்தவாபகர்வாம். (க)

அன்னநாள்வயின்வீரபாண்டியற்கணங்களனைய
மின்னனூருளைம்போகமும்விளைநிலமனைய
பொன்னனூர்பெறுகாளையரைங்கணைப்புத்தே
ளென்னவீறினூர்வான்பயிர்க்கெழுகளேயென்ன. (உ)

பின்னரும்பெறற்குமானைப்பெறுவதுகருதி
மன்னனுங்குலத்தேவியுங்கயற்கணிமஞ்ளன்
றன்னைநோக்கியட்டமிசதுர்த்தசிமதிவார
மின்னநோன்புநோற்றெழுகுவாரிறைவனின்னருளால். (ஊ)

(சக) மறைவழி மதங்கள்-வைதிகமார்க்க மதங்கள். (சஉ) புறம் - முதுகு. (க) அகம் - உள்ளம். (உ) ஐம்போகம்-பஞ்சேந்திரியசுகம். (ஊ) குலத்தேவி - பட்டத்தரசி.

சிறிதுநாள்கழிந்தகன்றபின்கங்கையிற்சிறந்த
மறுவிலாவடமீன்புரைகற்பிலுள்ளயிற்றிற்
குறியவாலவித்தங்குரம்போன்றருருகுமர
னிறையுநீருலகருட்குடைநிழற்றவந்துதித்தான். (ச)

அத்தனிசசிறுகுமரனுக்ககங்களிசிறப்ப
மெய்த்தநூன்முறைசாதகவினைமுதல்வினையும்
வைத்தருன்பொலிவெய்துநாண்மன்னவனுழ்வர்
சொத்தநாள்வரவேட்டைபுக்குழுவைகோட்பட்டான். (ரு)

வேங்கைவாய்ப்படுமீனவன்விண்விருந்தாக
வாங்குநூன்மருங்கிறக்கரமார்பெறிந்தாரந்
தாங்குகொங்கைசாந்தழிந்திடத்தடங்கண்முத்திறைப்ப
வேங்கமாதர்பொன்னகருளார்யாவருமிரங்க. (கூ)

மற்றவேலைகாமக்கிழத்தியர்பெறுமைந்த
ரற்றநோக்கியீதமையமென்றுனைமாவாதி
யுற்றபல்பிறபொருணிதியொண்கலமேந்துங
கொற்றமௌலியுங்கவர்ந்தனர்கொண்டுபோய்மறைந்தார். (எ)

மன்னனுவேயாரெழுகியமந்திரக்கிழவர்
மின்னுவேலிளங்குமரனைக்கொண்டுவிண்ணடைந்த
தென்னர்கோமகற்கிறுதிபிற்செய்வினைபரப்பி
யன்னகாதலற்கணிமுடிசூட்டுவானமைந்தார். (அ)

நாடிப்பொன்னறைபுகுந்தனர்நவமணிமகுடந்
தேடிக்கண்டிலர்திகிலகண்டிலர்திகைத்து
வாடிசசிந்தைநோயுழந்திதுமாற்றவர்கூட்டுண்
டோடிப்போயினதாகுமென்றுணர்ந்திதுநினைவார். (கூ)

வேறுமாமுடிசெய்துமாலென்னிலேனுலிலிமிக்
கேறுமாமணியிலையரசிருக்கையின்றின்றேற்
றேறுநீருலகிலையுமென்செய்வதிங்கென்னு
மாறுசேர்சடையாரருள்காண்டுமென்றமைசசர். (கo)

(ச) வடமீன்-அருந்ததி. அறுகுரம்-முளை. (ரு) உழுவை-புலி. (கூ) வாங்குநூல்-துவளுநூல். மருங்கு-இடை. (எ) காமக்கிழத்தியர். "சேரிப்பரத்தையர்மகளீராகிக்காமக்குவைந்தோர் காமக்கிழத்தியர்." (அ) மந்திரம்-ஆலோசனை. கிழவர்-உரியர். (கூ) பொன்னறை-பண்டாரம். (கo) அலையும்-நிலைகெடும்.

கரைசெயாப்பெருங்கவலைசூழ்மனத்தராய்க்கறங்கு
முரசுகண்படாக்கடிமனைமுற்றநீத்தருமை
யரசிளந்தனிக்கொழுந்தினைக்கொண்டுபோயம்பொன்
வரைசெய்கோபுரவாயின்முன்வருகுவார்வருமுன். (கக)

எற்றதும்புகோவணவுடையிடம்படப்பிறங்கத்
தூற்றபல்கதிர்மணிப்பொதிசுவன்மிசைத்தூங்க
மற்றடம்புயவரைமிசைவரம்பிலாவிலைகள்
பெற்றவங்கதம்பரிதியிற்பேர்ந்துபேர்ந்திமைப்ப. (கஉ)

மந்திரப்புரிநூலதுவலம்படப்பிறழ
விந்திரத்திருவில்லெனவாரமார்பிலங்கச
சுந்தரக்குழைகுண்டலந்தோள்புரண்டாடத்
தந்திரத்தருமறைகளிதாணிலந்தோய. (கங)

கலிவிருத்தம்.

பொன்னவிர்ந் திலங்குகோ புரமுன் போதுவார்
முன்னவர் துனிவுகூர் முன்ன நீக்கிய
தென்னவர் குலப்பெருந் தெய்வ மாகிய
மன்னவர் வணிகராய் வந்து தோன்றினர். (கச)

வந்தவ ரெதிர்வரு வாரை மம்மர்கொள்
சிந்தைய ராய்வரு செய்தி யாதென
முந்தையில் விளைவெலா முறையிற் கூறினர்க்
கெந்தையாம் வணிகரீ தியம்பு மாலரோ. (கஞ)

என்பட ரெய்துகின் றீர்க ளென்வயி
னொன்பது மணிகளு முள்ள வாலவை
பொன்பதி னூயிரங் கோடி போனதென்
றன்புற மணியெலா மடைவிற் காட்டுவார். (கசு)

இருந்தனர் கீழ்த்திசை நோக்கி யிட்டதோர்
கருந்துகி னடுவுமிந் திராதி காவல
ரருந்திசை யெட்டினு மடைவிற் செம்மணி
பெருந்தண்முத் தாதியெண் மணியும் பெய்தரோ. (கஎ)

(கஉ) எல்-பிரகாசம். சுவல்-பிடர். தூங்க-தொங்க.(கங)புரிநூல்-எக்ஞோபவீதநூல். குண்டலம்-மகரகுண்டலம். (கச) துனிவு-துன்பம். முன்னம்-குறிப்பு. (கஞ) மம்மர்-மயக்கம். (கசு) படர்-துன்பம். (கஎ) கருந்துகில்-கரியகம்பலம்.

இம்மணி வலனுடற் சின்ன மென்னவக்
கைம்மறி கரந்தவர் கூறக் கற்றனூற்
செம்மதி யமைச்சரச் செம்மல் யாரவன்
மெய்ம்மணி யாயதென் விளம்பு கென்னவே. (கஅ)

மேவரும் வலனெனு மவுணன் மேலோராண்
மூவரின் விளங்கிய முக்கண் மூர்த்திசெஞ்
சேவடி யருச்சனைத் தவத்தின் செய்தியால்
யாவது வேண்டுமென் றிறைவன் கூறலும். (ககூ)

தாழ்ந்துநின் றியம்பும்யான் சமரில் யாரினும்
போழ்ந்திற வாவரம் புரிதி யூழ்வினை
சூழ்ந்திறந் தாலென்மெய் துறந்த மாந்தரும்
வீழ்ந்திட நவமணி யாதல் வேண்டுமால். (உ0)

என்றுவேண் டலும்வர மீச னல்கிஞ
னன்றுபோ யமர்குறித் தமரர் கோஞ்டு
சென்றுபோ ராற்றலுந் தேவர் கோனைதிர்
நின்றுபோ ராற்றல னீங்கிப் போயினன். (உக)

தோற்றவா னுடவன் மீண்டு சூழ்ந்தம
ராற்றினும் வெல்லரி தழிவி லாவர
மேற்றவ னுதலா லிவனைச் சூழ்ச்சியாற்
கூற்றினூ ரேற்றுதல் குறிப்பென் றுன்னியே. (உஉ)

விடங்கலுழ் படைக்கல னின்றி விண்ணவ
ரடங்கலுந் தழீஇக்கொள வடுத்துத் தானவ
மடங்கலே வருகென நோக்கி வானவக்
கடங்கலுழ் யானைபோற் கரைந்து கூறுவான். (உங)

விசைபயின் றேர்வல்வலி வென்றி வீக்கமெத்
திசையினும் பரந்ததச் சீர்த்தி நோக்கியுண்

(கஅ) சின்னம்-அங்கம். உறுப்பின் பேதமுமாம். (ககூ) மூவரின்-திரிமூர்த்திகளில். விளங்கிய-வேருகவிளங்கிய. அதுதுரிய சிவனெயுணர்த்துதல் காண்க. (உ0) போழ்ந்து-பிளவுண்டு. ஊழ்-போகூழ். (உக) ஆற்றலன்-செய்யவன்மையற்றவன். (உஉ) சூழ்ந்து-ஆலோசித்து. சூழ்ச்சி-தந்திரம். (உங) தானவமடங்கல்-தனுவின்புத்திரனுகிய சிங்கம்.

ணசையரு மகிழ்ச்சியா னல்கு வேனுனக்
கிசையவேண் டியவரம் யாது கேளென. (உச)

கடிபடு கற்பக நாடு காவலோ
ஞெடியுரை செவித்துளோ நுழையத் தானவ
னெடியகை புடைத்துட னிமிர்ந்து கார்படு
மிடியென நகைத்திகழ்ந் தினைய கூறுவான். (உடு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நன்றிதுமொழிந்தாயாருநகைக்கநீயெனைவெங்கண்ட
வென்றியுமதனற்பெற்றபுகழுநின்வீறுபாடு
மின்றுநின்போரிற்காணப்பட்டவேயிசைபோயெங்கு
நின்றதேயிதுபோனின்கைவண்மையுநிற்பதன்றே. (உசு)

ஈறிலானளித்தநல்லவரமெனக்கிருக்கநின்பால்
வேறுநான்பெறுவதுண்டோவேண்டுவதனக்கியாதென்பாற்
கூறுநீயதனையின்னேகொடுக்கலேனுகினின்போற்
பாறுவீழ்களத்திற்றோற்றபழிப்புகழ்பெறுவனென்றான். (உஎ)

மாதண்டவவுணன்மாற்றமகபதிகேட்டுவந்து
கோதண்டமேருக்கோட்டிக்கொடும்புரம்பொடித்தான்வெள்ளி
வேதண்டமெய்தியாங்கோர்வேள்வியான்புரிவனுனப்
போதண்டர்க்கூட்டவாவாய்ப்போதுவாய்வல்லையென்றான். (உஅ)

அன்றெருதவத்தோனென்புவச்சிரமொன்றேயாக
வொன்றியகொடையாற்பெற்றபுகழுடம்பொன்றேயென்போல்
வென்றியினுலும்வீயாமெய்யெலாமணிகளாகப்
பொன்றியகொடையினுலும்புகழுடம்பிரண்டுண்டாமே. (உக)

மேவலனல்லீயேநட்டவன்மேலவரினோர்
யாவருமருந்துமாற்றுலறம்புகழெனக்கேயாக
வாவுருவாதியென்றுயன்னதேசெய்வேனென்று
னீவதேபெருமையன்றியிரக்கின்றதிழிபேயன்றே. (ஈ0)

அதற்கிசைந்தவுணர்வேந்தனமரர்வேந்தனைமுன்போக்கி
மதர்க்கடுங்குருதிச்செங்கண்மைந்தனுக்கிறைமையீந்து

(உச) விசையய்!-வெற்றியுடையோய். (உடு) நொடி-சொல். (உசு) வீறு-செருக்கு. வண்மை-வள்ளன்மை. (உஎ) பாறு-பருந்து. (உஅ) வேதண்டம்-மலை. வல்லை-விரைவு. ஆ-பசு. (உக) தவத்தோன்-ததீசி. (ஈ0) நட்டவன்-சிநேகிதன்.

முதற்பெருங்கலையாம்வேதமொழிமரபமைந்தவாளுய்ப்
புதர்க்கடவேள்விச்சாலைப்புறத்துவந்திறுத்துநின்றான். (ரூக)

வாய்மையான்மாண்டநின்போல்வள்ளல்யாரென்றுதேவர்
கோமகன்வியந்துகூறத்தருக்குமேற்கொண்டுமேரு
நேமியோடிகலும்விந்தவரையெனநிமிர்ந்துவேள்விக்
காமெனேயூபத்தோடும்யாமினென்றடுத்துநின்றான். (ரூஉ)

யாத்தனர்தருப்பைத்தாம்பாலூர்ணையால்யாத்தசிங்கப்
போத்தெனநின்றான்வாயைப்புதைத்துயிர்ப்படங்கவீட்டி
மாய்த்தனர்மாய்ந்தவள்ளல்வலனுமந்தாரமாரி
தூர்த்திடவிமானமேறித்தொல்விதியுலகஞ்சேர்ந்தான். (ரூங)

மணித்தலமலையின்பக்கமாய்த்தவன்வயிரவேலாற்
பிணித்துயிர்செகுத்தவள்ளற்பெருந்தகையாவைவேதம்
பணித்திடும்வபையையாங்கிப்படரொளிசுவைமுன்பார்க்கக்
குணித்தவாளுடர்க்கூட்டிக்கோதிலாவேள்விசெய்தான். (ரூச)

அத்தகையாவின்சோரிமாணிக்கமாம்பன்முத்தம்
பித்தைவையேமென்புவச்சிரம்பித்தம்பச்சை
நெய்த்தவெண்ணிணங்கோமேதந்தசைதுகிர்நெடுங்கணீல
மெய்த்தவைபுருடராகமிவைநவமணியின்றோற்றம். (ரூஞ)

இவ்வடிவெடுத்துத்தோன்றியிருண்முகம்பிளப்பக்காந்தி
தைவருமனியொன்மானுஞ்சார்விடநிறங்கள்சாதி
தெய்வதமொளிமாசெள்ளிச்சோதனைசெய்துதேசு
மெய்வரவணிவோரெய்தும்பயனிவைவிதியாற்கேண்மின். (ரூசு)

மேற்படி - வேறு.

வாளவிருமாணிக்கங்கிரேதமுதலுகநான்கும்வழியேமக்கங்
காளபுரந்தும்புரஞ்சிங்களமிந்நான்கிடைப்படுமக்கமலராக
மாளுநிறமொன்பதரவிந்தமாதுளம்பூவித்தழல்கல்லாரம்
கோளரியகச்சோதநரந்தநறும்பலந்தீபங்கோபமென்ன. (ரூஎ)

(ரூக) புதர்-தேவர். (ரூஉ) யூபம். யாகப்பசுவைக்கட்டுந்தறி. (ரூங) ஊர்ணை-சிலம்பிநூல். (ரூச) பக்கம்-சிறகு. வபை-வெண்ணிணம். (ரூஞ) ஐ-கபம். (ரூசு) எள்ளி-தள்ளி. (ரூஎ) கமலராகம்-பத்மராகம். கல்லாரம்-செங்குவளை. கச்சோதம்-மின்மினி. கோபம்-பட்டுப்பூச்சி. இந்திரகோபமென்ப.

இங்கிறத்தபொதுவாயமாணிக்கமறையவர்முன்னியலுற்சாதி, தன்னியல்பாற்சாதரங்கங்குருவிந்தஞ்சௌகந்திகங்கோவாங்க,மெ ன்னுமிவற்றுற்சிறந்தநான்காகுமிவ்வடைவேயிந்நான்கிற்குஞ், சொ ன்னவொளிபத்திருநான்கிருமூன்றுநான்கவையுஞ்சொல் லக்கேண் மின். (ஈஅ)

சாதரங்கநிறங்கமலங்கருநெய்தலிரவியொளிதழல்கச்சோத, மா துளம்போததன்வித்துக்கார்விளக்குக்கோபமெனவகுத்தபத்து,மே தகையகுருவிந்தநிறங்குன்றிமுயற்குருதிவெள்ளிலோத்தம்,போதுப லாசலர்திலகஞ்செவ்வரத்தம்விதாரமெரிபொன்போலெட்டு. ()

களிதருசௌகந்திகத்தினிறமிலவம்போது குயிற்கண்ணசோ கங், தளிரவிர்பொன்செம்பஞ்சியைவண்ணமெனவாறுந்தகுகாவா ங்க, வொளிருரவுகுசும்பைமலர்செங்கல்கொவ்வைக்கனியென்றி ருநான்கந்த, மிளிர்பதுமராகத்தைப்பொதுமையிலுற் சோதிக்க வேண்டுமெல்லை (சஏ)

திண்ணியதாய்மேல்கீழ் சூழ்பக்கமுற வொளிவிதெல்செய்தாற் செவ்வை,யண்ணியவுத்தமமுதன்மூன்றுமென்பர்சாதரங்கமணிவோ ர்விச்சை,புண்ணியவான்கன்னியறுசுவையன்ன முதலானபுனிததா னம், பண்ணியதும்பரிமேதயாக முதன்மகம்புரிந்தபயனுஞ்சேர்வர்.

குருவிந்தந்தரிப்பவர்பார் முழுதுமொருகுடைநிழலிற்குளிப்ப வாண்டு, திருவிந்தையுடனிருப்பர்சௌகந்திகந்தரிப்போர்செல்வங் கீர்த்தி, மருவிந்தைப்பயனடைவர் காவாங்கந்தரிப்போர்தம் மனை யிற்பாலும், பெருவிந்தமெனச்சாலிமுதற்பண்டமுடன்செல்வப்பெ ருக்குமுண்டாம். (சஉ)

எள்ளியிகுற்றமெலாமிகந்துகுணனேற்றுளிவிட்டிருள்கால்சீத் தள்ளியவிச்செம்பதுமராகமதுபுனைதக்கோர்தம்பாலேனைத் [துத் தெள்ளியமுத்துள்ளிட்டபன்மணியும்வந்தோங்குஞ்செய்யாளோடு மொள்ளியநற்செல்வமதற்கொப்பநெடும்பாற்கடலினுங்குமாலோ.

(ஈக) வெள்ளிலோத்தம்போது-லோத்திரபுட்பம். இதனை விளா மலரென்று சிலர் கூறுவர். விதாரம்-முள்ளிலவு. (சஏ) ஐவண்ணம்-மருதோன்றி. (சக) திண்ணியதாய்-கனமானதாய். (சஉ)சாலி-நெல். (சங) இகந்து - நீங்கி. செய்யாள் - திருமகள். (சச) புள்ளி-விந்து. புள்ளடி-காகபாதம். தராசம்-நிறமழுக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிறங்கிறச்சார்புபுள்ளிபுள்ளடிபிறங்குகீற்று
மறுவறுதராசமென்னவகுத்தவைங்குற்றந்தள்ளி
யறைதருபண்புசான்றவரதனமணியும்வேந்தன்
செறுநர்வாளுற்றமின்றிச்செருமகட்கன்பனுவான். (சச)

குறுநிலக்கிழவனேனுமவன்பெருங்குடைக்கீழ்த்தங்கி
மறுகுநீர்ஞாலமெல்லாம்வாழுமற்றவனேப்பாம்பு
தெறுவிலங்கலகைபூதஞ்சிறுதெய்வம்வறுமைநோய்தீக்
கறுவுகொள்கூற்றச்சீற்றங்கலங்கிடவாதியாவாம். (சஞ)

முன்னவரென்பகற்றேர்வச்சிரமுந்நீர்முத்த
மன்னவரென்பதுப்புமாணிக்கம்வணிகரென்ப
மின்னிவிராபுருடராகம்வயிரியம்வெயிற்கோமேதம்
பின்னவரென்பநீலமரகதம்பெற்றசாதி. (சட)

பார்த்திவர்மதிக்குமுத்தம்பளிங்கன்றிப்பச்சைதானுஞ்
சாத்திகந்துகிர்மாணிக்கங்கோமேதந்தாமேயன்றி
மாத்திகழ்புருடராகம்வயிரியம்வயிரந்தாமு
மேத்திராசதமாநீலந்தாமதமென்பராய்ந்தோர். (சள)

இனையவையளந்துகண்டுமதிக்குநாளெழுமான்பொற்றேர்
முனைவனுண்முதலாவேழின்முறையினுற்பதுமராகங்
கனைகதிர்முத்தந்துப்புக்காருடம்புருடராகம்
புனையொளிவயிரநீலமென்மனுர்புலமைசான்றோர். (சஅ)

வெய்யவன்கிழமைதானேமேதகுமணிக்குமாகு
மையறுதிங்கடானேவயிரியேமணிக்குமாகு
மையறவிவையொன்பானுமாய்பவரகம்புறம்பு
துய்யராயறவோராய்முன்சொன்னநாளடைவேயாய்வர். (சக)

அல்லியம்பதுமஞ்சாதியரத்தம்வாயாம்பல்கோடல்
வல்லிசேர்மௌவற்போதுநூற்றிதழ்மரைகாலேய
மெல்லிதழ்க்கழுநீர்பேழ்வாய்வெள்ளைமந்தாரமின்ன
செல்லியமுறையால்வண்டுசூழத்தன்முடிமேற்சூடி. (கூ0)

(சஞ) குறுநிலக்கிழவன்-சாமந்தன். சிற்றரசனென்ப. (சட) முன்னவர்-அந்தணர். பின்னவர்-சூத்திரர். (சள) பார்த்திவர்-அரசர். (சஅ) எழுமான்-சத்தமாவெனுங் குதிரை. (சக) வெய்யவன்-சூரியன். (கூ0) அல்லி-அகவிதழ். சாதி-பிச்சி. கோடல்-காந்தள். மௌவல்-கொடிமல்லிகை.

தலத்தினைச்சுத்திசெய்துதவிசினையிட்டேத்திய
கலத்துகில்விரித்துத்தெய்வமாணிக்கநடுவேவைத்துக்
குலத்தமுத்தாதியெட்டுங்குணதிசைமுதலெண்டிக்கும்
வலப்படமுறையேபானுமண்டலமாகவைத்து. (நிக)

அன்புறுபதுமராகமாதியாமரதனங்க
ளொன்பதுங்கதிரோனுதியொன்பதுகோளுமேற்றி
முன்புரைகமலப்போதுமுதலொன்பான்மலருஞ்சாத்தி
யின்புறநினைந்துபூசையியன்முறைவழாதுசெய்தல். (நிஉ)

தக்கமுத்திரண்டுவேறுதலசமேசலசமென்ன
விக்கதிர்முத்தந்தோன்றுமிடன்பதின்மூன்றுசங்க
மைக்கருமுகில்வேய்பாம்பின்மத்தகம்பன்றிக்கோடு
மிக்கவெண்சாலியிப்பிமீன்றலேவழக்கன்னல். (நிங)

கரிமருப்பைவாய்மான்கைகற்புடைமடவார்கண்ட
மிருஞிறைக்கொக்கின்கண்டமெனக்கடைகிடந்தமூன்று
மரியனவாதிப்பத்துநிறங்களுமணங்குந்தங்கட்
குரியனநிறுத்தவாறேயெனவுமுரைப்பக்கேண்மின். (நிச)

மாடவெண்புறவின்முட்டைவடிவெனத்திரண்டபேழ்வாய்க்
கோடுகான்முத்தம்வெள்ளைநிறத்ததுகொண்மூமுத்த
கீடுசெம்பரியன்னநிறத்ததுகிளைமுத்தாலி
பீடுசொனிறத்தராவின்பெருமுத்தநீலத்தாமால். (நிஞ)

ஏனமாவாரஞ்சோரியீர்ஞுவைச்சாலிமுத்த
மானதுபசுமைத்தாகும்பாதிரியனையதாகு
மீனதுதாரளம்வேழமிரண்டினும்விளையுமுத்தந்
தானதுபொன்னின்சோதிதெய்வதஞ்சாற்றக்கேண்மின். (நிசு)

(நிக) குலத்த-சிரேட்டமான. (நிஉ) கோள்-கிரகம். (நிங) தலசம்-தரையிற் பிறப்பது. (நிச) ஐவாய்-வட்டவாய். இது வாயினையுடைய முகத்தினையுணர்த்திநின்றது. மான்-சிங்கம். பஞ்சமென்பதற்கு-ஆரியத்தில் வட்டமென்று பொருளாதலேக்கொண்டு தமிழிலப்பொருள்பயப்ப ஐவாயெயென்றும் ஐயானனமென்றுங்கூறுப. ஐவாய்மான் - அரசாகப்பொருந்திய சிங்கமென்னினு மிழுக்காது. (நிஞ) கோடு - சங்கு. கிளை - மூங்கில்-கொண்மூ - மேகம் - ஆலி-மழை. (நிசு) வேழமிரண்டு - யானையுங் கரும்பும்.

பான்முத்தம்வருணன்முத்தம்பகன்முத்தம்பகலோன்முத்த
மான்முத்தநீலமுத்தமாசறுகுருதிமுத்தங்
கான்முத்தம்பசியமுத்தங்காலன்றன்முத்தந்தேவர் [ம்.
கோன்முத்தம்பொன்போன்முத்தங்குணங்களும்பயனுஞ்சொல்வா

உடுத்திரளனையகாட்சியுருட்சிமாசின்மைகையா
லெடுத்திடிற்றிண்மைபார்வைக்கின்புறல்புடிதமென்ன
வடுத்திடுகுணமாறின்னவணியின்மூதணங்கோடின்மை
விடுத்திடுந்திருவந்தெய்தும்விளிந்திடுஞ்செல்வம்வாழ்நாள். (நிஅ)

மாசறுதவத்தோனென்பும்வலாசுரனென்பும்வீழ்ந்த
கோசலமாநிநாட்டிற்பட்டதுகுணத்தான்மாண்ட
தேசதாயிலேசதாகித்தெள்ளிதாயளக்கினெல்லை
வீசியவீலயதாகிமேம்படுவயிரந்தன்னை. (நிக)

குறுநிலத்தரசுந்தாங்கிற்குறைவுதீர்செல்வமெய்தி
யுறுபகையெறிந்துதங்கோன்முழுதுலகோச்சிக்காக்கும்
வறுமைநோய்விலங்குசாராவரைந்தநாளன்றிச்செல்லுங்
கறுவுகொள்கூற்றம்பூதங்கணங்களுமணங்குசெய்யா. (சுo)

மாமணிமரபுக்கெல்லாம்வயிரமேமுதன்மைச்சாதி
யாமெனவுரைப்பர்நூலோரதிகம்யாதென்னிலேனைக்
காமருமணிகட்கெல்லாந்தமரிடுகருவியாமத்
தூமணிதனக்குந்தானேதுளையிடுங்கருவியாகும். (சுக)

மரகதத்தோற்றங்கேண்மின்வலாசுரன்பித்தந்தன்னை
யிரைதமக்காகக்கௌவிப்பறந்தபுள்ளீர்ந்தண்டில்லித்
தரைதனிற்சிதறலீழ்ந்துதங்கியதோற்றமாகு
முரைதருதோற்றமின்னும்வேறுவேறுள்ளகேண்மின். (சுஉ)

விதிர்த்தவேலனையவாட்கண்வினதைமாதருணச்செல்வ
னுதித்தவான்முட்டையோட்டையுவணவேற்றரையில்யாப்பக்
கதிர்த்தவோடரையிற்றப்பிவீழ்ந்தொருகடல்சூழ்வைப்பி
லுதித்தவாறுகுமின்னுமுண்டொருவகையாற்றோற்றம். (சுங)

முள்ளரைமுளரிக்கண்ணன்மோகினியணங்காயோட
வள்ளரைமதியஞ்சூடிமந்தரவரைமட்டாகத்

(நிஎ) கால்-வாயு. (நிஅ) உடு-நட்சத்திரம். (நிக) கோசலம் - ஒரு தேசம். (சுo) வரைந்த-இறுதியாகின்ற. (சுக) தமர்-துளை. (சுஉ) புள்-கருடன். பித்தம்-பித்தநீர். (சுங) உவணவேறு - கருடன்.

துள்ளரியேறுபோலத்தொடர்ந்தொருவிலையாட்டாலே
யெள்ளரிதாயசெந்தீயிந்தியக்கலனஞ்செய்தான். (சுசு)

அப்பொழுதமலவித்திலரியரகுமரன்கான
வைபபுறைதெய்வத்தோடும்வந்தனனந்தவிந்து
திப்புறுகருடன்கௌவிக்கடலினுந்துருக்கநாட்டும்
பப்புறவிடித்தவாறேபட்டதுகலுழப்பச்சை. (சுடு)

மேற்படி - வேறு.

காடமேசுப்பிரமேகாளமெனக்குணமூன்றுங்கருடப்பச்சைக்
கீடறுகினிதழ்நிறத்தகாடமதுசாதியிலுலிருவேறுருஞ்
சாடரியசகுணமெனசசதோடமெனவவையிரண்டிற்சகுணமாறும்
பீடுபெறுகாடமொடுமுல்லசிதம்பேசலம்பித்தகமேமுத்தம். (சுசு)

புல்லரியபிதுகமெனவிவையாறிற்காடமதுபுல்லின்வண்ண
முல்லசிதமெலிதாகும்பேசலமேகுளசசெநெலொண்டாளம்போலு
மல்லருடம்பித்தகமேபசுங்கிளியின்சிறைநிறத்தாகுமுத்தங
குல்லநிறம்பிதுகமரையிலையினிறஞ்சதோடத்தின்குணனேந்தாகும்.

தோடலேசாஞ்சிதமேதட்டமேதோடமூர்சிதமேவெய்ய
நோடலேசமதிலெருசும்மந்தோடமெனத்தொகுத்தவைந்திற்
றோடலேசாஞ்சிதஞ்சுப்பிரவிலையாமலரியிலைதட்டநீலத்
தோடகாம்புல்லினிறந்தோடமூர்சிதமுளரிதோடலேசம். (சுஅ)

மந்தோடங்கலபமயிலிறகினிறமாமிஷகுத்தோடஞ்
சிநதவாலுதகுணமணியணவோர்நாற்கருவிசசேனவாழ்நா [கு
ளுந்தவாழ்வார்வலன்கணீலமிரண்டரன்கண்டத்தொளிவிட்டோங
மிந்திரநீலந்தான்மாநீலமெனவேறிரண்டுண்டின்னுநீலம். (சுக)

முந்தியவிந்திரநீலம்விச்சுவரூபனேமகவான்முடித்தநாளி
னந்தியபெழிதவிர்ப்பான்புரியுமகப்பரிமகத்தினறியதூம
முந்தியரும்பரியிமையாநாட்டபுழைந்தளிசேற்றிலெழுகும்பீலை
சிந்தியவாற்றிடைப்படுமொன்றிந்திரவின்னீலமெனத்திகழுநீலம். ()

(சுசு) வள்-கூரிய. இந்தியக்கலனம். சுக்கிலகலிதம். (சுடு) வித்தில்-விந்தில். அரியரகுமரன் - மகாசாத்தன். பப்புற-பரவ. (சுசு) சகுணம்-குணத்தைகூடியது. (சுஎ)குல்லை-துளசி. (சுஅ) சம்பீரம் எலுமிச்சை(சுக) ஆறுத-நீங்காத.மாநீலமெனுமிரண்டிலிரண்டிந்திரநீலம் என்னும் பாடாந்தரம். (எ0) மகவான்-இந்திரன்.

சஞ்சையாம்பகற்கடவுண்மனேவியவன்கனலுடலந்தழுவலாற்ரு
தஞ்சுவாடன்னிழலேத்தன்னுருவாகிறுவிவனமடைந்துநோற்க
விஞ்சையாலறிந்திரவிபின்ரெடரமாப்பரியாமின்னேத்தாணுஞ்
செஞ்செவேவயப்பரியாய்மையல்பொருந்தியத்தைச்சிந்திஞனே.

அவைசிதறும்புலந்தோன்றுநீலமாநீலமிவையணிவோர்வாஞேர்
நவையறுசீர்மானவரிந்நகைநீலஞ்சாதியிஞல்வேறந்தங் [ந்
கவலரியவெள்ளேசிவப்பெரிபொன்மைகலந்திருக்கிற்கரிதாய்முற்று
தவலரிதாயிருக்கிலிருபிறப்பாளர்முதன்முதஞற்சாதிக்காகும். (எஉ)

இலங்கொளியவிந்நீலமெய்ப்படுப்போர்மங்கலஞ் சேர்ந்திருப்பாரே
னே, யலங்குகதிர்நீலத்திற்பெருவிலேயாயிரப்பத்தினளவைத்தாயுந்,
தலங்குவதான்பாற்கடத்தி ஞறுகுணச்சிறப்படைந்துந்தோற்றுஞ்
சோதி, கலங்குகடலுடைவைப்பிலரிதிந்திரன்பேர்க்கரியநீலம்.

மைந்துறுசெம்மணிமுத்துவாள்வயிரம்பச்சையொளிவழங்குநீல
மைந்திவைமேற்கோமேதமுதற்பவளமீருகவறைந்தநான்கு
ரந்தொளியவேனுமவைசிறுவேட்கைபயப்பவழனகுசெங்குஞ்சி
வெந்தறுகண்வலனிணங்கள்சிதறுமிடைப்படுவனகோமேதமென்ப.

உருக்குநறுநெய்த்துளிதென்றுளிநல்லான்புண்ணியநீரொத்து
சசேந்து, செருக்குபசும்பொன்னிறமும்பெற்றுமெலிதாய்த்தாய்
த்திண்ணிதாகி, யிருக்குமதுதரிக்கினிருட்பாவம்போம்பரிசுத்தி
யெய்தும்வென்றித், தருக்குவலன்கபம்விழுந்தவிடைப்புருடராக
மொளிதழையத்தோன்றும். (எடு)

தாழ்ந்தபிலத்திழிந்தெரிபொற்கண்ணவுணனுயிர்குடிக்குந்தறு
கட்பன்றி, போழ்ந்தமுழைவாய்கிறந்துதிசைசெவிடுபடநகைத்துப்
பொன்போற்கக்கி, வீழ்ந்தகபம்படுதீவிற்படுமுச்சிவட்டமாய்மெலி
தாய்ப்பொன்போற், சூழ்ந்தொளிவிட்டவிர்தழல்போற்றெளிவெய்
திமனங்கவர்ந்துதோற்றஞ்செய்யும். (எசு)

இந்தமணிபாரியாத்திரகிரியிற்கொடுமுடியாவிலங்குந்தெய்வ
மந்தரமால்வரைப்புறஞ்சூழ்மேகலையாமயனிந்தமணியிஞலே
யந்தரநாடவனகருமரசிருப்புமண்டபமுமமைத்தானிந்தச்
சந்தமணிதரிப்பவரேதரியார்வெந்திடவாகைதரிக்கவல்லார். (எஎ)

(எக) சஞ்சை-சூரியன்மனேவி. (எஉ) புலம் - இடம். மானவர்-மனிதர். (எஙு) இலங்கு - விளங்குகின்ற. (எசு) மைந்து-வன்மை. (எடு) புண்ணியநீர்-கோசலம். (எசு) பிலம்-பாதலம். பொற்கண்ணவுணன்-இரணியாட்சனென்னு மசுரன். (எஎ) மேகலே-அடிப்புறம்

வலண்மயிராம்வயியேமிளாவிரதகண்டத்தில்வந்துதோன்றிப்
பலர்புகழுங்கோரக்கமகதஞ்சிங்களமலயம்பாரசீக
மிலகுதிரிகூடாதிதேயங்கள்பிறதீபமெங்குந்தோற்று
மலைகடலும்பமிறுதிக்காரிடிக்கும்போதுநிறமதற்கியாதென்னில்.

கழையிலைகார்மயிலெருத்தம் வெருகின்கண்ணிறத்ததாய்க்கனத்த
விழைவுதருதெளிதாகித்திண்ணிதாய்மெலிதாகிவிளங்குமீதி [தாகி
லழகுபெறவலமிடமேல்கீழொளிவிட்டனமுறையேயறவோராதித்
தழைவுறுநாற்சாதிகளாந்தினமிதனைப்பூசித்துத்தரிக்கசான்றோர்.()

வலத்தவுணன்றசைவீழ்ந்தவழிபடுதுப்பயன்சந்திவடிவமாத்தென்;புலத்தவரைவிதிக்குமிடத்தவனுடன்மாசிழிபுலத்தும்புயல்போல்வண்ணன், வலத்தமதுகைடவரைக்குறைகுருதிவழிநிலத்துமகவான்வெற்பின், குலத்தையிறகரிசோரிசிதறிடத்தும்வந்துகுடிகொண்டுதோன்றும். (அ0)

அவ்வழியிற்பெவளமுருக்கம்பூப்பசுங்கிளிமூக்கலர்ந்தசெவ்விச், செவ்வரத்தமலர்கொவ்வைக்கனிபோலுங்குணங்குற்றந்திருகிக்கோட, லெவ்வமுறப்புழுவரித்தன்முகமொடிதல்பெரும்பாலுமிப்பூணேந்தல், பெய்வளையார்தமக்கேயாந்தரிக்கின்மகப்பேறுமுதற்பேறுண்டாகும். (அக)

இரவியெதிரெரியிறைக்குங் கல்லுமதியெதிர்செழுநீரிறைக்குங் கல்லு, முரையிடுமொன்பதிலொன்றிலுட்கிடையாய்க்கிடக்குமெனவொன்பான்வேறு, மரபுரைத்துவணிகரேறுகியவானவரேறுவடபாலுக்கிப், பரவியிருந்தருச்சித்துமணிகைக்கொண்டெதிர்மதுரைப்பரனேநோக்கா. (அஉ)

அஞ்சலிசெய்தகநோக்கா லிக்குமரற்களவிறந்தவாயுள்செல்வம், விஞ்சுகவென்றளித்தருளாவிறைமகனும்விண்ணிழிந்தவிமானநோக்கிச், செஞ்சரணம்பணிந்திருகைத்தாமரையும்விரித்தேற்றுன்செல்வநாய்கர், மஞ்சனேயும்புடைநின்றவமைச்சரையுநோக்கிமுகமலர்ந்துசொல்வார். (அங)

(எஅ) இறுதிக்கார்-ஊழிகாலமேகம். (எக) கழை-மூங்கில். வெருகு-பூனை. அறவோர்-அந்தணர். (அ0) மாசு - அழுக்கு. (அக) கோடல்-வளைதல். எவ்வம்-குற்றம். வந்தல்-அணிதல். (அஉ) எரியிறைக்குங்கல்-சூரியகாந்தக்கல். நீரிறைக்குங்கல்-சந்திரகாந்தக்கல். (அங) அகநோக்கு - உன்னாட்டம். மஞ்சனேயும்-மைந்தனேயும்.

இம்மணியாலிழைத்தநவமுடிசூட்டியிச்சிங்க விளவேறன்ன, செம்மறனையபிடேகபாண்டியனென் றியம்புமெனச்செம்பொன்னூக்கிக், கைம்மறியில்வணிகருக்குவிலைகொடுப்பான்வருவார்முன்கருணைநாட்ட, மம்மகன்மேனிரப்பியிளநகையரும்பிநின்றுரையங்குக்காணுர். (அச)

ஒருருவாய்நேர்நின்றவணிகேசர்விடையின்மேலுமையாளோடு
மீருருவாய்முக்கண்ணுநாற்கரமுமஞ்சமாரிறவாவாறு
காருருவாயெழுமிடறுங்காட்டித்தங்கோயில்புகக்கண்டாரின்று
பாருருவாய்நின்றவணிகேசரிவரெனவேபின்பற்றிப்போவார். (அடு)

தேன்செய்தகொன்றைநெடுஞ்சடையார்முன்றழ்ந்தெழுந்து செங்கைகூப்பி, யான்செய்யுங்கைம்மாறுயெம்பிராற்கொன்றுண்டோயானுமென்ன, தான்செயுடலும்பொருளுமுயிருமெனினவையாவுமுனவேயையா, வான்செய்யுநன்றிக்குவையகத்தோர்செய்யுங்கைம்மாறுண்டேயோ. (அசு)

என்னுமுன்வழுத்தலுறும்விறன்மாறன் கோக்கொழுந்தையிகல்வேமன்னுகுமிவற்குமனவாக்கிறந்தபூரணமாமதுரைநாதன் [ல்லிந்தை
பொன்னுருமணிமகுடஞ்சூடமணிநல்குதலாற்புவியனேகம்
பன்னுளுமுறைபுரியத்தக்கதெனவாழ்த்திஞர்பல்சான்றேரும்.

ஏத்திவலங்கொண்டிருநான் கிபந்தழுவப்பெற்றேங்கியிருக்கு மட்ட,மூர்த்திவிடையருள்பெற்றுமூவாநன்மறையாசிமுனிவர்கூறப் பார்த்திவன்றன்பொலன்மாடமனைபுகுந்தானிறைமணிப்பண்பாயுங்கேள்விச்,சாத்திரருமந்திரருமணிநோக்கிவியப்படைந்தார்சங்கைகூர்ந்தார். (அஅ)

மேற்படி-வேறு.

வேளெனவந்தநாய்கர்சுந்தரவிடங்கராளு
ஞள்களுங்கோளும்பற்றிநவமணியாக்கினுரோ
தாள்களுந்தோளுமார்புந்தரித்தநீணகமீன்ற
வாள்விடுமணியோவீந்தார்யாதெனமதிக்கற்பாலேம். (அக)

இந்திரக்கடவுணட்டமிம்மணியியலெவன்னு
மந்திரக்கிழவர்நல்கிமயனினுமாண்டகேள்வித்

(அச) தூக்கி-நிறுத்து. (அடு) பாருருவாய்-பாரிலுள்ளாருருவாய். (அசு) கைம்மாறு-பிரதியுபகாரம். (அள) மாறன்-பாண்டியன். (அஅ) இபம்-யானை. (அக) வேள்-முருகவேள். நாய்கர்-வணிகர்.

தந்திரக்கனகக்கொல்லர்க்குவப்பனததும்பவீசிச்
செந்திருமார்பினுற்குத்திருமணிமகுடஞ்செய்தார். (கo)

மங்கலமரபான்மாலைமணிமுடிசூட்டிநாமஞ்
செங்கணேறுயர்த்தநாய்கர்செப்பியமுறையால்வேத
புங்கவரிசைப்பவீதிவலஞ்செய்துபுனிதன்பாத
பங்கயமிறைஞ்சிவேந்தன்பண்மணிக்கோயிலெய்தா. (கக)

போர்மகட்குறையுளானபுயத்தபிடேகத்தென்னன்
றேர்முதற்கருவித்தானைத்தெவ்வர்நீண்முடியெலாந்தன்
வார்கழற்கமலஞ்சூடமனுமுறைபைங்கூழ்காக்குங்
காரெனக்கருணைபெய்தவையகங்காக்குநாளில். (கஉ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தந்தைதன்காமக்கிழத்தியீன்ற தனயராய்த்தனக்குமுன்னவ
ராய், முந்தைநாளரசன்பொன்னறைமுரித்து முடிமுதற்பொருள்
கவர்ந்துட்குஞ், சிந்தையராகிமறுபுலத்தொளித்ததெவ்வரைச்சிலர்
கொடுவிடுப்ப, வந்தவர்கவர்ந்ததனமெலாமீளவாங்கீஞனீர்ங்கதிர்
மருமான். (கங)

மாணிக்கம்விற்றபடலம் முற்றிற்று.

ஆ படலம். உசு-க்கு திருவிருத்தம் - கஉஅள.

பதினேட்டாவது,

வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காழ்கெழுகண்டத்தண்ணல்கௌரியன்மகுடஞ்சூட
வீழ்கதிர்மணிகளீந்தவியப்பிதுவிடையோன்சென்னி
வாழ்கருமுகிலேப்போக்கிமதுரைமேல்வருணன்விட்ட
வாழ்கடல்வறப்பக்கண்டவாடலைப்பாடல்செய்வாம். (க)

(கo) இந்திரக்கடவுள்நாடு-சுவர்க்கம். (கக) புனிதன்-சோமசுந்தரக்கடவுள். (கஉ) போர்மகள்-வீரதிரு. (கங) உட்கல்-திடுக்கிடல். (க) காழ்-கருமை. கௌரியன்-பாண்டியன். வீழ்கதிர் - ஒளிவிடுகின்ற.

நித்திரைமதியிற்சேர்ந்தசித்திரைநாளிற்றென்னன்
மைத்திரண்மிடற்றுவெள்ளிமன்றுளாற்களவுமாண்ட
பத்திமைவிதியிற்பண்டம்பற்பலசிறப்பநல்கிப்
புத்தியும்வீடுநல்கும்பூசனைநடத்தலுற்றான். (உ)

நறியநெய்யாதியாரநறுங்குழம்பீருவாட்டி
வெறியகர்ப்புரநீராட்டியற்புதவெள்ளம்பொங்க
விறைவனெனவியந்துநோக்கியேத்துவானெறிநீர்வைகைத்
துறைவனீயென்கர்ப்பூரசுந்தரனேயோவென்றான். (ஊ)

பூசனைபுரியுமெல்லைப்பொன்னகர்க்கிறைமைபூண்ட
வாசவன்வருடந்தோறும்பூசித்துவருவானன்ன
காசறுமனத்தான்பூசைகழிவுறுமளவுந்தாழ்த்து
தேசமைசிறப்பார்பூசைசெய்துதன்னுபுக்கான். (எ)

அன்றுநீர்க்கடவுள்வேள்விநாயகனவையத்தெய்தி
நின்றவன்றன்னெய்தீருஞ்செவ்வியினிகழ்ச்சிதோன்றக்
குன்றவன்சிதகரிந்தகொற்றவன்முகத்தைநோக்கி
யின்றுநீசிறிதுதேம்பியிருத்தியாலிதென்கொலென்றான். (ஙி)

சிலைப்படுமுகிலூரண்ணல்செப்புவானிருடீரன்பின்
வலைப்படுபெருமானெம்மான்மதுரையெம்பிரானையன்பு
தலைப்படுபூசைசெய்யத்தாழ்த்ததின்றதனுலிப்போ
தலைப்படச்சிறிதெனுள்ளமாகுலமடைந்ததுண்டால். (சு)

என்னவவ்விலிங்கந்தான்மாவிலிங்கமோவென்றுமுந்நீர்
மன்னவன்வினவலோடுமகபதிமொழிவான்முன்பென்
றன்னரும்பழியும்வேழச்சாபமுந்தொலைத்ததன்றே
வன்னதையறிந்திலாய்கொலென்னநீரண்ணல்கூறும். (எ)

அற்றதுவாகிற்றெய்வமருத்துவராலுந்தீரச்
செற்றிடவரிதாயென்னத்தெறும்பெருவயிற்றுநோயை
வற்றிமொறுதீர்க்குங்கொல்லெனவலாரியைய
முற்றுநீவினுயதென்னென்றுண்ணகையரும்பிச்சொல்வான். (அ)

அரியயராலுந்தீராப்பிறவிநோயறுக்கவல்ல
பெரியவனிந்தயாக்கைப்பெரும்பிணிபிறவுந்தீர்த்தற்

(உ) மதி-மாதம். (ஙி) வேள்விநாயகன்-இந்திரன். தேம்பி-வருந்தி. (சு) சிலை-வில். முகிலூரண்ணல் - மேகவாகனனுகிய இந்திரன். (எ) நீரண்ணல்-வருணன். (அ) தீரச்செற்றிட-முற்றிலுமொழிக்க.

கரியனேவையன்செய்யுந்திருவிளையாட்டையின்னே
தெரியநீசோதியென்னத்தெண்கடற்சேர்ப்பன்சொல்வான். (கூ)

கல்லிறகரிந்தோயிங்குநான்வருங்காலவேட்டார்க்
கெல்லையில்காமநல்குஞ்சுரபியுமின்பால்சோரப்
புல்லியகன்றுமாற்றுப்பட்டவப்போதுகண்ட
நல்லசோபனத்தாலிந்தநன்மொழிகேட்டேனென்ன. (கo)

வருணனுமேகிவெள்ளிமன்றுடையடிகள்செய்யுந்
திருவிளையாடல்கண்டுவியிற்றுநீங்தீர்ப்பானெண்ணி
முரசதிர்மதுரைமூதூர்முற்றுமியழித்தியென்னக்
குரைகடறன்னைவல்லேகுவிளனேவினனே. (கக)

கோச்சகக்கலிப்பா.

கொதித்தெழுந்தாருக்களிறக்கொத்தியெடுத்தெத்திசையு
மதிர்த்தெறிந்துவரைகளெல்லாமகழ்ந்துதிசைப்புறஞ்செல்லப்
பிதிர்த்தெறிந்துமாடகிரைபெயர்த்தெறிந்துபிரளயத்தி
லுதித்தெழுந்துவருவதெனவோங்குதிரைக்கடல்வருமால். (கஉ)

கந்தமலர்த்தனிக்கடவுள்கற்பத்துமழியாத
விந்தவளம்பதிக்கிடையூறெய்தியதெம்பதிக்குமினி
வந்ததெனச்சுந்தரனைவந்திறைஞ்சிவானவருஞ்
சிந்தைகலங்கினர்வருணன்செய்தசெயறெளியாதார். (கங)

சூலமோடழலேந்துஞ்சொக்கர்திருவிளையாட்டின்
சீலமோநாமிழைத்ததீவினையின்றிறமிதுவோ
வாலமோவுலகமெலாமழியவரும்பேரூழிக்
காலமோவெனக்கலங்கிக்கடிநகரம்பனிப்பெய்த. (கச)

மண்புதைக்கத்திசைபுதைக்கமயங்கிருள்போல்வருநீத்தம்
விண்புதைக்கவெழுமாடவியனகரின்புறத்திரவி
கண்புதைக்கவருமளவிற்கண்டரசனடுங்கிப்
பெண்புதைக்குமொருபாகப்பிரானடியேசரணென்ன. (கஞ)

ஆலமெழுந்திமையவர்மேலடரவரும்பொழுதஞ்சு
மாலெனவுந்தன்னுயிர்மேன்மறலிவருமபொழுதஞ்சும்

(கூ) கடற்சேர்ப்பன் - நெய்தற்றலைவனுனை வருணன். (கo) கல்-மலை. காமம்-இச்சித்த பொருள். (கக) குரைகடல்-ஒலிக்குங்கடல். (கஉ) கொத்தி-தோண்டி. (கங) கற்பம். ஊழி. (கச) கடி-காவல். வியன்-பெரிய.

பாலனெனவுங்கலங்கிப்பசுபதிசேவடியில்விழுந்
தேர்லமெனமுறையிட்டானுலகுபுகழுறையிட்டான். (கசு)

முறையிட்டசெழியனெதிர்முறுவலித்தஞ்சலியென்னுக்
கறையிட்டவிண்புரந்தகந்தரசுந்தரக்கடவு
ளுறையிட்டவிருகடலேச்சுவறப்போய்ப்பருகுமெனப்
பிறையிட்டதிருச்சடையிற்பெயனுன்கும்வரவிடுத்தான். (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிவப்புறவெழுந்தநான்குமேகமுநிமிர்ந்துவாய்விட்
டுவர்ப்புறுகடலேவாரியுறிஞ்சினவுறிஞ்சலோடுஞ்
சிவப்பெருங்கடவுள்யார்க்குந்தேவனத்தெளிந்தோரேழு
பவப்பெரும்பௌவம்போலப்பசையறவறந்தவன்றே. (கஅ)

அந்நிலைகருளாரும்வானவாதியோருந்
தென்னவர்பிரானுமெந்தைதிருவிளையாடலுக்கிப்
பன்னருமகிழ்ச்சிபொங்கப்பன்முறைபுகழ்ந்துபாடி
யின்னதீர்மனத்தராகியீறிலாவின்பத்தாழ்ந்தார். (கஆ)

வருணன்விட்டகடலேவற்றச்செய்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - உஎ - க்கு - திருவிருத்தம் - கஉ0சு.

மதுரைக்காண்டம் - முற்றிற்று.

கூடற்காண்டம்.

பத்தொன்பதாவது,

நான்மாடக்கூடலானபடலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூதங்களல்லபொறியல்லவேறுபுலனல்லவுள்ளமதியின்
பேதங்களல்லவிவையன்றிநின்றபிறிதல்லவென்றுபெருநூல்
வேதங்கிடந்ததுதமோறும்வஞ்சவெளியென்பகூடன்மறுகிற்
பாதங்களேவவளையிந்தனுகிபகர்வாரையாயுமவரே. (க)

(கசு) பாலன்-மார்க்கண்டன். (கஎ) செழியன்-பாண்டியன். புரந்த-காத்த. பெயனுன்கு-மேகநான்கு. (கஅ) பௌவம்-கடல். (கஆ) இன்னல்-துன்பம். ஈறிலா-முடிவற்ற. (க) தமோறும்-மாறிமாறியுரைக்கும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமகள்வலக்கண்வாக்கின்சேயிழையிடக்கண்ஞானப்
பெருமகணுதற்கணைகப்பெற்றுவான்செல்வங்கல்வி
யருமைவீடளிப்பாள்யாவளவளுயிர்த்துணைவன்காண
வொருமுலைமறைந்துநாணியொசிந்தபூங்கொம்பினின்ரூள். (உ)

கதிர்மதிமிலைந்தவேணிக்கண்ணுதல்வருணனேய
வதிர்கடல்வறப்பச்செய்தவாடலீதனேயானேய
முதிர்மழையேழின்மேலுமுன்னேநான்முகிலும்போக்கி
மதுரைநான்மாடக்கூடலாக்கியவண்ணஞ்சொல்வாம். (ஊ)

எற்றுதெண்டிரைநீர்ச்சேர்ப்பன்றன்செயலிழிக்கிநாண
முற்றிருகண்ணுஞ்சேப்பவுடன்றெழுகோபச்செந்தீப்
பற்றிடவாகம்வெம்பிப்பரவையும்யாறும்வெந்து
வற்றிடவெருண்டுநின்ரூன்மானமும்வலியுங்குன்ரூன். (எ)

நளிர்புனன்மதுரைமூதூர்நாயகனுடறன்னேத்
தெளிகிலனுகிப்பின்னுஞ்செழுமுகிலேழுங்கூவிக்
குளிர்கடல்வறந்ததென்னக்குடித்தெழுந்திடித்துப்பெய்யா
வொளிவளர்மதுரைமுற்றுமொல்லெனக்களமினென்ரூன். (ஙு)

பொள்ளெனமேகமேழும்புகுந்துபார்தெரியமுந்நீர்ப்
பள்ளமும்வறப்பமுற்றப்பருகிமெய்கருகிமின்னித்
தெள்ளருந்திசையும்வானுஞ்செவிடுறப்பிலமும்பாரும்
விள்ளமால்வரைகளெட்டும்வெடிபடமேருச்சாய. (சு)

ஊழிநாள்வெடிக்குமண்டகடாகத்திலெலிபோலார்த்துப்
பாழிவானுருமுவீழப்பணடவிமணிகள்சிந்தி
யாழிநீர்ஞாலந்தாங்குமராவுடனெளியத்திக்கிற்
சூழிமால்யானேநின்றநிலைகெடத்துணுக்கங்கொள்ள. (எ)

வெள்ளியநீறுபூத்துமுழவெனவீங்குகாய்போற்
றெள்ளியவாலிஞந்தத்திரண்டதிண்பளிக்குத்தூண்போ
லொள்ளியதாரைசோரவும்பர்மீன்கணங்களோடுந்
துள்ளியதிரையிலாடுமீன்கணந்துடித்துவீழ. (அ)

(உ) வீடு-முத்தி. (ஊ) எய-அனுப்பிய.(எ) இழிக்கி-தவறி. பரவை-கடல். (ஙு) நளிர்-குளிர்ச்சி. (சு) பொள்ளென-விரைந்து. விள்ள-பிளக்க. (எ) பாழி-பெரிய. (அ) முழவென-தண்ணுமைபோல.

ஆர்த்தெழுகொண்மூவேழுஞ்சராசரமனைத்துஞ்சூழ்ந்து
போர்த்தனஞாலமுண்ணப்புக்கதோர்வடிவங்கொண்ட
தீர்த்தனில்விசும்பும்பாருந்திசைகளுந்தெரியாவாகப்
பார்த்தகண்ணுழையாவாகப்பரந்திருள்கான்றவன்றே. (கூ)

பைஞ்சுடரெறிக்கும்பச்சைகாரொளிபரப்புநீலம்
புஞ்சவாளுடுக்களன்னநித்திலம்பொன்னங்குப்பை
செஞ்சுடர்மணிகடுப்புச்சிதறுவகணவரோடும்
விஞ்சையர்மகளிரூடிவெறுத்தெறிகலன்கள்போல. (கo)

கடியகாலுதைப்பப்பெய்யுங்கடுஞ்செலவெழிலிமாடக்
கொடியநீணகரைச்சூழ்ந்துபுதைத்தலுங்கோலொன்றோசிப்
படியெலாம்புரக்குங்கோனுநகருளார்பலருஞால
மடியுநாளிதுவேயென்னுமயங்கினருயங்கினரே. (கக)

கண்ணுதன்மூர்த்திதானேயின்னமுங்காக்குமென்னுப்
புண்ணியநகராரோடும்பொருக்கெனக்கோயிலெய்தி
விண்ணிழிவிமானவாழ்க்கைவிடையவனடிக்கீழ்வீழ்ந்தா
னண்ணலாராடன்முன்னுமறிந்துகைகண்டவேந்தன். (கஉ)

விடையினையாலமுண்டமிடற்றினைகங்கைதாங்குஞ்
சடையினைகூற்றைவென்றதாளினைமேருச்சாபப்
படையினையடியேந்தன்பப்பாட்டினைநீக்கியாளு
நடையினையாகியெங்கணல்லுயிர்காத்தல்வேண்டும். (கங)

என்னலுந்தென்னனர்க்கென்றுமெய்தியவிடுக்கண்டீர்க்கு
முன்னவன்முன்போனுன்குமுகிலையுநோக்கியின்ன
தொன்னகரெல்லைநான்குஞ்சூழ்ந்துநான்மாடமாகி
வின்னெடுமாரியேழும்விலக்குமினெனவிடுத்தான். (கச)

வந்துநான்மாடமாகிவளைந்துநாற்றிசையுஞ்சூழ்ந்து
சந்துவாய்தெரியாதொன்றித்தாமொருகுடிலாய்மாடப்
பந்திகோபுரஞ்செய்குன்றங்கால்கள்போற்பரிப்பப்போர்த்த
விந்துவார்சடையோனேயவெழிலிமாநகரமெங்கும். (கஞ)

அன்னநான்மாடத்துள்ளுநகருளாரமைச்சர்வேந்தன்
றன்னநாற்கருவித்தானேசராசரம்பிறவுந்தாழ்ந்து

(கூ) தீர்த்தன்-சிவபெருமான். (கo) புஞ்சம்-திரட்சி. (கக)எழிலி-மேகம். பொருக்கென-விரைவாக. (கங) சாபப்படை-விற்படை. (கச) இடுக்கண் - துன்பம். (கஞ) குடில்-படமண்டபம்; இதனைக் கூடாரமென்ப.

முன்னேநாடனினுமின்பமுழ்கிநன்கிருந்தாரூழிற்
பொன்னஞள்பாகன்ருளிற்புக்கமர்ந்திருந்தாரொத்தார். (ககூ)

கழைகெழுவரையினுச்சிகவிழ்கின்றபுயல்போற்கார்சூழ்ந்
திழைமணிமாடத்தும்பரெறிதுளியுடைந்துதுள்ளத்
தழைகடல்வறப்பவாங்கித்தன்னுடல்வறப்பப்பெய்து
மழைகளும்வெள்கிநின்றவருணனும்வெள்கிநின்ருன். (கஎ)

நடுங்கினன்கழிந்தவச்சநாணமீதூரமான
மொடுங்கினனுள்ளத்துள்ளோருவகைகவந்தெய்தப்பொற்பூத்
தடங்கரைருறுகாமுன்ஞெய்தணிந்துபின்ருேய்ந்துபாச
மடங்கினன்மடங்காவன்பின்வள்ளலேப்பூசைசெய்வான். (கஅ)

புனிதநீருடிக்கண்டிபூண்டுவான்கங்கையாதி
வனிதையர்பசும்பொற்கும்பவாசநீர்வடித்துநீட்டப்
பனிமலர்சந்தங்கந்தமணிக்கலம்பசும்பொனுடை
யினேயனபிறவுமீன்றுகற்பகமெடுத்துக்காட்ட. (ககூ)

ஐங்கனியமுதமைந்துகௌவியமமுதுதூபஞ்
செங்கதிர்விளக்கமின்னதேவரான்கொடுப்பச்சேற்க
ணங்கைகதன்பதியைப்பூசித்தாயிரநாமங்கூறிப்
பைங்கதிர்முத்தஞ்சாத்தித்தொழுதடிபணிந்துநின்ருன். (உ0)

அருச்சனையுவந்தவாதியமலனீயாதுவேண்டிற்
றுரைத்தியென்ருேதநீர்க்கோஞல்லேதாழ்ந்தொன்றினுலுங்
கரைத்திடவரியவிந்தக்கடியவென்வயிற்றுநோய்நின்
றிரைத்தடமாடுமூன்னேதீர்ந்திடப்பெற்றேனெந்தாய். (உக)

மேற்படி - வேறு.

வேதமுதற்கலைகாட்சி முதலளவைவிரிஞ்சன்முதல்விண்ணேர்
செய்யுஞ், சோதனையுளகப்படாச்சோதியுனைச் சோதிக்கத்துணிந்
தேனந்தோ, பேதமையேனிடத்தென்னகுணங்கண்டென்பிணிதீர்
த்தென்பெற்ருயாசை, கோதமிலாய்குற்றமேகுணமாகக்கொள்வது
நின்குணமோவையா. (உஉ)

பொன்னகரான் காலந்தாழ்த் தனையருச்சித்தயர்ச்சியொடும்
போனவாறு, மென்னெனயான்வினவியதும்வலாரியிறைகொடுத்த

(ககூ) வனிதையர் - பெண்கள். தேவரான்-காமதேனுவெண்ணுஞ் தெய்வப்பசு. (உக) ஒல்லே-விரைந்து. (உஉ) காட்சிமுதலளவை-பிரத்தியட்ச முதலியபிரமாணம்.

தமவ்விறைக்குநேர்யான்,பின்னேவினையதுமவன்சொல்வழியுன்னே சசோதித்தபெற்றிதானு, முன்னவனேயுன்னருளாலென்பிணிக்கு மருந்தாகிமுடிந்தவாறே. (உங)

ஆறுமதிமுடியணிந்தவருட்கடலேவயிற்றுநோயன்றிமேலுண், மா றுபடுமிருவினையுமலவலியுங்கெடவீட்டின்வழியும்பெற்றேன், வே றினிமந்திரமென்னேமணியென்னேமருந்தென்னேமெய்ம்மையாகத், தேறுமவர்க்கிப்புனிததீர்த்தமேபிணியனேத்துந்தீர்ப்பதன்றே. ()

மேற்படி - வேறு.

அடியனேன்முன்னஞ்செய்தவபராதமிரண்டுந்தீரும்
படிபொறுத்தருள்வாயென்றுபன்முறைபரவித்தாழ்ந்து
மடிவிலாமகிழ்ச்சிபொங்கவரங்களுஞ்சிறிதுவேண்டிக்
கடியதன்னகரம்புக்கான்குடதிசைக்காவல்வேந்தன். (உடு)

வன்றிறல்வருணன்விட்டமாரியைவிலக்கவீசன்
மின்றிகழ்சடையினின்றுநீங்கியமேகநான்குங்
குன்றுபோனிவந்துநான்குகூடமாக்கூடலாலே
யன்றுநான்மாடக்கூடலானதான்மதுரைமூதூர். (உசு)

நான்மாடக்கூடலானபடலம் முற்றிற்று.

ஷைபடலம் - உஅ - க்கு -. திருவிருத்தம் - கஙஙஉ.

இருபதாவது,

எல்லாம்வல்லசித்தர்திருவிளையாடற்படலம்.



கலிநிலைத்துறை.

சத்தநான்மறைப்பொருள்வரைதள்ளுநீண்முடிமேற்
வைத்தகார்கணன்மாடமாமதுரைமேல்வருண
னுய்த்தமாரியைத்தடுத்தவாறுரைத்துமேறுயர்த்தோர்
சித்தராய்விளையாடியசெயல்சிறிதுரைப்பாம். (க)

தேடருங்கதிர்மணிமுடிச்செழியனும்பாண்டி
நாடருந்திருவெய்திமேனல்லவீடெய்தக்

(உங) இறை கொடுத்ததும்-பதிலுரைத்ததும். (உஅ) புனிதம்-தூ ய்மை. (உடு) குடதிசை-மேற்குத்திசை. (க) சத்தநான்மறை-இலக் கணமைந்த சதுர்வேதம்.

கூடலம்பதிமேவியகுணங்குறிகடந்த
வேடரங்கொருசித்தமெய்வேடராய்வருவார். (உ)

வட்டவார்சடைக்குஞ்சியும்பூணநூன்மார்பு
மிட்டநீறணிதிலகமுமிணைக்குழைதூங்க
விட்டவெள்ளமூத்திரையுந்தோல்விரித்தபட்டிகையுஞ்
சுட்டவெண்பொடிப்பொக்கணந்தாக்கியதோளும். (ஊ)

துய்யவெண்பொடியணிந்துமெய்சிவந்திடச்சுவடு
செய்யும்வெண்டிரட்படிகநீண்மாலையுஞ்சிவந்த
கையிலங்குகட்டங்கமுங்கண்டவர்மனஞ்சென்
றுய்யவன்புறவீக்கியவுதரபந்தனமும். (ஈ)

அட்டவேங்கையீருரிவைகீண்டசைத்தகோவணமு
மொட்டவீக்கியபுலியதளுடுக்கையுமிடத்தோ
ளிட்டயோசபட்டிகையும்பொன்னிடையிடைகட்டப்
பட்டசுஃறெலிவேத்திரப்படைக்கையும்படைத்து. (டு)

வேதகிண்கிணிசிலம்புசூழ்ந்தடிகளின்மிழற்ற
வோதரும்பதமுளரியூறருண்மதுவொழுகப்
போதவானந்தமதுநுகர்ந்தலர்முகம்பொலியப்
பாதபங்கயமுபநிடப்பாதுகைசூட. (சு)

கிறிதுமூரலும்வெயர்வையுந்திருமுகத்தரும்பக்
குறுகியாவணஞ்சித்திரகூடநாற்சந்தி
மறுகுசூளிகையுபரிகைமாளிகைவாயி
லறுசுசூழ்நிரைத்தெற்றியிவ்விடந்தொறுமடைந்து (எ)

தெற்கிருப்பவர்போல்வடதிசையிற்சென்று
புக்கிருப்பதுங்கிழக்குளார்போலமேற்றிசையி
னக்கிருப்பதும்யாவருநாடினரறியத்
தக்கதன்றியேயிந்திரசாலமாத்தணந்தும். (அ)

சேயவெற்பினேயணியதாச்செய்துமற்றணித்தாய்
மேயவெற்பினேச்சேயதாவிடித்துமெய்முதுமூப்

(உ) வேடர்-உருவினர். (ஊ) பொக்கணம்-பை. இது திசைமொழியென்றுணராதார் பலவாறு பொருள்கூறுப. (ஈ) கட்டங்கம்-யோகதண்டம். உதரபந்தம்-இடையாடைமீதுகட்டுமொருவகைப்பட்டிகை. அதள்-தோல். (எ) மூரல்-நகை. அரும்ப-உண்டாக. ஆவணம்-கடைவீதி. (அ) நக்கு-வினங்கி. அல்லது-சிரித்து.

பாயமக்களையினை ராக்கியுங்குதலை
வாயமக்களைக்கழிமுதுமக்களாவகுத்தும். (கூ)

ஆணைப்பெண்ணுருவாக்கியும்பெண்ணையாணுருவ
மாணைக்காட்டியுமழையைமகப்பெறச்செய்தும்
கோணைக்கூன்செவ்வேமைகள் ருபெங்கெவருங்
காணத்தீர்த்துநாலுலோகமூப்கனகமாச்செய்தும். (கo)

செல்வர்தம்மனைப்பொருளெலாம்வறுமையிற்சிறந்தோ
ரில்லமெய்தவுநட்டவரிகலின்றித்தம்மின்
மல்லுவெஞ்சமரிழைப்பவுங்காஞ்சிரமரத்தி
னல்லதீங்கனிபழுப்பவும்விரி சகணயந்தும். (கக)

பருவமாறியபருவத்தில்வைகைநீர்பரந்து
வருவதாக்கியுமீளவும்வறந்திடச்செய்தும்
பொருவிலீஞ்சுவையோடையும்பொய்கையுமுவர்ப்புத்
தருவவாக்கியுமுவரியின்சுவையவாத்தந்தும். (கஉ)

வீசுமாத்திரைக்கோலினவின்னினட்டதன்மே
லூசிநாட்டியிட்டேமேற்பெருவிரலூன்றி
யாசிலாடியுமூசிமேற்றலைகிழக்காக
மாசில்சேவடிப்போதுவான்மலர்ந்திடச்சுழன்றும். (கங)

கண்டவெம்பணிப்பகையெனப்பறந்துவிண்டாவிக்
கொண்டலைப்பிடித்திடியொடுங்குடித்தநீர்பிழிந்து
கண்டவர்க்கதிசயம்பெறக்காட்டியுங்காண
விண்டலத்தினிற்பண்டுபோலிறைகொளவிடுத்தும். (கச)

எல்லிடைப்படும்பொருள்களையிராவெழப்பார்த்து
மல்லிடைப்படும்பொருள்களைப்பகல்வரவமைத்தும்
வல்லழற்புனலுளர்வளிவலிகெடப்பார்த்து
நல்லபோதுகாய்கனியிலாநாள்படக்கண்டும். (கடு)

பீலிகால்விழிக்கிழவரைப்பிரம்பிலுல்வருடிக்
காலையாடவராக்கியக்கணவருக்கிசைய

(கூ) முதுமக்கள்-கிழமனிதர். (கo) பங்கு-மூடம். நாலுலோகம். வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். (கக) காஞ்சிரம்-எட்டி. (கஉ) உவரி-உப்புநீர். (கங) ஆசில்-குற்றமின்றி. கிழக்காக-கீழாக. (கச) இறை கொள-தங்க. (கடு) எல்-பகல். அல் - இரா. பட-உண்டாக, கண்டும் செய்தும்.

ஸீளைவாய்மூதுகற்பினர்கருவடைந்திளமை
யாளவேத்திரம்வருடிநீளித்தருள்செய்தும். (கசு)

அகரமாதிமூன்றுகியவாகருடணமே
புகரிலாவதிரிச்சியமஞ்சனம்பொருவில்
வகரமாதிமூன்றுகியவஞ்சியமேவாத
மிகலிலாவயத்தம்பமென்றின்னவைசெய்தும். (கஎ)

வேதநூறெளியார்களெக்கலைகளும்விளங்கப்
பூதிநாவினிற்சிதறியும்பூழியன்காதன்
மாதராரொடும்பயில்புதுமணமலர்க்காவிற்
காதநீண்டகோட்டெங்கினேக்கரும்பனைசெய்தும். (கஅ)

ஏனைவான்றருக்குலங்களைப்புட்களையிருகோட்
டானையாதிபல்விலங்கினையொன்றையொன்றுக
ஞானநோக்கினுளுணக்கியுநாடியவிளையோர்
மானினேக்கியராகிலோமெனவெழில்வாய்த்தும். (கஈ)

ஈகநாடுபொன்னுட்டிளைபொருளுமந்தகரு
ளாகவாக்கியுமின்னணம்விச்சைகளனந்த
மாகநாயகன்மலைமகளுயகன் மதுரை
யேகநாயகன்திருவிளையாடல்செய்திருந்தான். (உ0)

சித்தயோகிகள்செய்கின்றவாடன்மேற்செலுத்தி
வைத்தகண்களுஞ்சிந்தையும்வாங்கலர்திகைத்துத்
தத்தமாள்வினைத்தொழின்மறந்திருந்தனர்தலைகசான்
முத்தவேதியராதியமுதுநகர்மாக்கள். (உக)

இனையசெய்தியையுழையராலிறைமகனறிந்தா
னனையசித்தரையிங்ஙனந்தருகெனவடித்தார்
தனையகற்றினன்சித்தரைச்சார்ந்தவர்தாமும்
வினையைவென்றவராடலெலியந்துகண்டிருந்தார். (உஉ)

அமைச்சர்தங்களைவிடுத்தனனமைச்சருஞ்சித்தர்
தமைச்சரண்பணிந்தரசன்முன்வருகெனத்தவத்தோ
ரெமக்குமன்னனுலென்பயனெனமறுத்திடமண்
சுமக்குமன்னவன்றம்மவர்தொழுதனர்போனார். (உங)

(கசு) ஸீளை-ஒருவகையழுக்கு. ஈளை-வாயிலொழுகு மொருவகை நீர். (கஎ) அகரமாதி-அகரத்தைமுதலாக உடைய.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மன்னன்முனமைசசர்சித்தர்மறுத்துரைமாற்றங்கூற
முன்னவனருள்பெற்றிம்மைமறுமையுமுனிந்தயோக
ரிங்கிலவேந்தர்மட்டோவிந்திரனயன்மாலேனோர்
தன்னையுமதிப்பரோவென்றிருந்தனன்றருமவேந்தன். (உசு)

எல்லாம்வல்லசித்தர்திருவிளையாடற்படலம் முற்றிற்று.

ஆ படலம் - உகூ - க்கு - திருவிருத்தம் - கஈகுசு.

இருபத்தோராவது,

கல்லானேக்குக்கரும்பருத்தியபடலம்.



கலிநிலைத்துறை.

செல்லார்பொழில்சூழ்மதுராபுரிச்சித்தரெல்லாம்
வல்லாரவராடலையாருரைசெய்யவல்லா
ரெல்லாரும்வியப்புறவித்தனிச்சித்தசாமி
கல்லானேதின்னக்கரும்பீந்தகதையுஞ்சொல்வாம். (க)

பின்னேயமச்சம்பெருகப்பெரியோரையெண்ணு
தென்னேயெளியாரெனையானிகழ்ந்திங்ஙனீண்டச்
சொன்னேனவர்க்கென்குறையென்னிற்றுருவிநானே
தன்னேரிலாதார்தமைக்காணத்தகுவதென்ஞ. (உ)

ஆனந்தசித்தர்தமைக்காண்பலென்றன்புகூர்ந்த
மீனந்தரித்தகொடிவேந்தன்குறிப்புநோக்கி
மோனந்தரித்தசிவயோகருமுந்தித்தம்பொன்
மானந்தனக்குவடமேற்றிசைவந்திருந்தார். (ஊ)

அருகாதசெல்வத்தவனன்றுதைத்திங்கடோற்றம்
வருகாலமாகமதுரேசனேவந்துவந்தித்
துருகாதரத்தாற்கழிந்துள்வலமாகமீள
வருவானவன்முன்வருகாஞ்சுகிவன்கண்மாக்கள். (எ)

(உ) ஈண்ட-வருமாறு. துருவி-தேடி. (ஊ) பொன்மானம்-சுவர்ணவிமானம். (எ) காஞ்சுகிவன் கண்மாக்கள். கஞ்சுகமணிந்தஅஞ்சாமையினையுடைய ஏவலர்.

சீறிட்டவேங்கையதட்சேக்கையர்சிறியைந்தும்
பாறிட்டவேடர்யோகபட்டத்தர்கட்டங்கத்தி
லேறிட்டகையரிறுமாந்திருப்பாரைநோக்கி
மாறிட்டுநீக்கியெழப்போகெனவந்துசொன்னார். (கு)

பின்னுவருதென்னர்பிரான்பெரியோரைநோக்கி
யென்னுதும்மூருமக்கென்வரும்யாதுவேண்டு
நுந்நாமமேதுநுவன்மின்னெனவையரெந்த
நன்னுடிமைந்தகருள்ளுந்திரிவமப்பா. (சு)

ஆனலுமிப்போதணிகான்மிரநாட்டிற்காசி
காணுமிருக்குந்தலமாகுநாதராகி
யானதபிச்சைப்பெருவாழ்வுடையார்நமரா
நாணுளும்விஞ்சைநடாஅய்த்திரிசித்தரேயாம். (எ)

ஆனந்தகானந்தொடுத்திங்குளவானசைவத்
தானம்பலவுந்தொழுந்தற்பரமாகிவந்தேம்
ஞானந்தருமிந்நகரிம்மையிற்சிவன்முத்தி
மானந்தமானபரமுத்திமறுமைநல்கும். (அ)

ஈண்டுள்ளவர்க்கெம்விளையாடலைக்காட்டியிச்சை
வேண்டும்பலசித்தியுநல்குவம்வேதமாதி
மாண்டங்குமெண்ணெண்கலைஞானமும்வல்லமல்லாற்
சேண்டங்குமெல்லாப்பொருளும்வலசித்தரேம்யாம். (கூ)

உன்னுனமக்குப்பெறல்வேண்டுவதொன்றுமில்லை
தென்னுவெனவுண்ணைகைசெய்தனர்சித்தயோகர்
மன்னுமிவர்தம்மிறுமாப்புஞ்செருக்கும்வீறு
மென்னுளவிட்டறிவேனெனவெண்ணித்தேர்வான். (கo)

தேரும்பொழுதோருழவன்னெருசெல்வக்கன்ன
லாருங்கமுகென்னவயிர்ப்புறக்கொண்டுதாழப்
பாருந்திசையும்புகழ்பங்கயசெங்கைதாங்கி
நீரும்பிறையுங்கரந்தார்தமைநேர்ந்துசொல்வான். (கக)

வல்லாரில்வல்லேமெனவும்மைமதித்தநீரிக்
கல்லானேக்கிந்தக்கரும்பையருத்தினெல்லாம்

(கு) சேக்கை-ஆசனம். (சு) நுவன்மினென-சொல்லுங்களென. (எ) கான்மிரம் - காஸ்மீரம். தற்பரம் - ஆசை. (அ) ஆனந்தகானம்-காசி. (கக) செல்வக்கன்னல் - தழைந்தகரும்பு.

வல்லாருநீரேமதுரைப்பெருமானுநீரே
யல்லாலெவர்நும்மனம்வேட்டதளிப்பனென்றான். (கஉ)

என்னுமுகிலெத்தளையிட்டவன்கூறக்கேட்டுத்
தென்னவருதியெனப்புன்னகைசெய்துசித்தர்
நின்னல்வருவதெமக்கேதுநினக்குநாமே
யுன்னுசைதீரத்தருகின்றதலாமலுண்டோ. (கங)

செல்லாவுலகத்தினுஞ்சென்றருவிஞ்சைகற்றோர்
பல்லாருநன்குமதிக்கப்பயனெய்துவார்க
ளெல்லாமறிந்தவெமக்கொன்றிலுமாசையில்லை
கல்லானேகன்னல்கறிக்கின்றதுகாண்டியென்றார். (கச)

கடைக்கண்சிறிதேகுறித்தார்முன்கடாக்கல்யானை
மடைக்கண்டிறந்துமதமூன்றும்வழியவிண்வா
யடைக்கும்படிவாய்திறந்தார்த்துப்புழைக்கைநீட்டிக்
தொடைக்குன்றனுன்கைச்சுவைத்தண்டைப்பறித்ததன்றே. (கஞ)

பறித்துக்கடைவாய்வழிசாரளிபாய்ந்துநக்கக்
கறித்துக்குதட்டிப்பருகிக்கரமுசலாட
நெறித்துத்தருக்கிநிழல்சிறிமிர்ந்துநிற்ப
மறித்துக்கடைக்கண்குறித்தார்பினுமாயம்வல்லார். (கசு)

மட்டேற்றதாரான்கழுத்திற்கண்டமாலைதன்னை
யெட்டிப்பறித்ததிகல்காஞ்சுகிமாக்கள்சீறிக்
கிட்டிக்களிற்றைப்புடைப்பான்கிளர்கோல்கொண்டோச்சச
சிட்டத்தவர்கண்சிவந்தானையைச்சிறிதோக்க. (கஎ)

கண்டாவளியைக்களிறுண்டதுகண்கள்சேப்புக்
கொண்டானரசன்சிவியோகரிற்கோபமூளத்
தண்டாவரசன்றமருட்டறுகண்ணர்சீறி
வண்டாரிதழிமறைத்தாரையடிக்கவந்தார். (கஅ)

அப்போதிளமூரலரும்பியசித்தசாமி
கைப்போதமைத்துக்கடிந்தோர்தமைநின்மினென்ன
மைப்போதகமன்னவர்வைத்தடிபோற்கலாற்ற
தொப்போதரியநிலையோவியம்போலநின்றார். (க�கூ)

மத்தக்களிற்றுன்வெகுளித்தழன்மாறியன்பு
பொத்தப்புதைந்தமனத்தற்புதம்பொங்கிச்சோரச்

(கஞ) வின் - மேகம். (கஎ) கண்டமாலை - கழுத்தி லணியுமோ ராபரணம். (ககூ) மைப்போதகம் - கரியயானை.

சித்தப்பெருமானடிமாமுடிதீண்டப்பாச
பெத்தத்தமியேன்பிழையைப்பொறுமென்றுவீழ்ந்தான். (௨0)

அன்புக்கிரங்குங்கருணைக்கடலானவைய
ரின்புற்றுவேண்டு வரங்கேளெனத்தாழ்ந்துவேந்த
னன்புத்திரப்பேறருள்வாயெனநல்கிச்செங்கை
வன்புற்றவேழமிசைவைத்தருணட்டம்வைத்தார். (௨௧)

கலிவிருத்தம்.

தழைக்கு நீள்கதிர்த் தண்முத்த மாலையை
புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதக
மழைக்கை நீட்டினன் வாங்கின னீதியிற்
பிழைக்க லாத பெருந்தகை வேந்தனே. (௨௨)

முத்த மாலிகை வாங்குமுன் முன்னின்ற
சித்த சாரி திருவுருக் கண்டிலன்
மத்த யானை வடிவமு மேனைய
வொத்த தாக வுரவோன் வெருவினான். (௨௩)

இந்த வாட லெமக்குபி ராயவிவ்
வந்த மில்லி யருள்வீ யாட்டெனு
முந்தை வேத முதல்வனே மீளவும்
வந்து வந்தனை செய்தனன் மன்னனே. (௨௪)

முழுது ணர்ந்த முதல்வ நின்னுடலே
யிழுதை யேனறி யாதளந் தேனெனு
வழுதி றைஞ்சிய பராத மீந்தகை
தொழுது நின்று துதிக்கத் தொடங்கினான். (௨௫)

கோச்சகக்கலிப்பா.

வேதியாய்வேதவிளைபொருளாய்வேதத்தி
னீதியாய்நீதிநெறிகடந்தநீளொளியா
யாதியாயீரும்நவாயவைசழிந்த
சோதியாய்நின்ரூயென்சோதனைத்தோநின்னியல்பே. (௨௬)

நின்னென்மொழிந்தமறைநின்னடிகள்வந்தித்தும்
பன்னளருச்சித்தும்பாதந்தலைசுழந்து
முன்னமம்வாசித்துமுன்னையறியேனென்று
சொன்னலடியனேன்சோதனைத்தோநின்னியல்பே. (௨௭)

(௨0) பொத்தல்-மூடல். பெத்தம்-பந்தம். (௨௪)வண்புற்றவேழம்-கல்யானை. (௨௫) இழுதை-மூடன். (௨௭) மறை - வேதம்.

பெரியதினும்பெரியதுமாய்ச்சிறியதினுஞ்சிறியதுமா
யரியதினுமரியதுமாயெளியதினுமெளியதுமாய்க்
கரியதுமாய்க்காண்பானுங்காட்சியுமாயவைகடந்த
தூரியமுமாய்நின்றுயென்சோதனைத்தோணின்னியல்பே. (உஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுபலமுறைபழிச்சிமனையெய்திவிக்கிரமனையீன்றுபன்னுட்,
டொன்றுமுறைகோலோச்சி விக்கிரமன்சுவன்மிசைப்பார்சுமத்திப்
பாசம், வென்றுகளந்தருட்சித்தசாமிதிருவருணேக்கால்விளைபோரி
ன்ப,மன்றமதுவீழ்வண்டிற்கலந்திருந்தானபிடேகமாறன்மன்னே.

கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம் முற்றிற்று.

ஆ படலம்-ஈ0-க்கு திருவிருத்தம்-கஈஅடி.

இருபத்திரண்டாவது,

யானையெய்தபடலம்.

கலிவிருத்தம்.

கட்டவிழ் கடுக்கையர் கலானை கழைதின்ன
விட்டதிது பஞ்சவ னிடத்தமண ரேவி
விட்டமத யானைவிழ மேவலர் புரத்தைச்
சுட்டகணை விட்டெயிர் தொலைத்தமுறை சொல்வாம். (க)

விக்கிரம பாண்டியன் வெலற்கரிய செங்கோ
றிக்குநில னுந்திறைகொள் செல்வநிறை வெய்த
வக்கிரம வெங்கலி யரும்பகை யொதுங்கச்
சக்கர முருட்டியிடர் சாய்த்துமுறை செய்வான். (உ)

புத்தரம ணுதிய புறக்களை யகழ்ந்து
சித்தமறை யாகம நெறிப்பயிர் வளர்த்து
மெய்த்தவிதி பத்தியின் விளைந்தபயன் யாருந்
துய்த்திட மநுத்தொழி னடத்திவரு தூயோன். (ங)

(உஅ) பெரிது - மகத்து, தூரியம் - நான்காவதானசிவம். "தூரியோசிவ" என்பதனை யுணர்க. (க) பஞ்சவன்-விக்கிரமபாண்டியன். (ங) புறக்களை-அவைதிகமான சமயக்களை.

மருவிதழி யானுறையும் வானிழிவி மானத்
தருகுவட பக்கமுற வாலய மெழுப்பி
யுருவரு விரண்டினையு மொருவிவரு சித்தர்
திருவுருவு கண்டுபணி செய்தொழுகு நாளில். (ச)

செய்யகதி ரோன்வழிய செம்பிய னெருத்தன்
கையனவன் வென்றிபயில் காஞ்சிநக ருள்ளான்
பொய்யமணர் கட்டுரை புறத்துறையி னின்றான்
மையின்மதி மாறனெடு மாறுபட நின்றான். (ஞ)

முடங்கன்மதி செஞ்சடை முடித்துவிடை யேறும்
விடங்கரது சேவடி விழுங்கிய மனத்து
மடங்கனிகர் தென்னனெதிர் வந்துபொர லாற்ற
தடங்கலனெர் வஞ்சனையி னுலட மதித்தான். (ட)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அஞ்சனங்கவுஞ்சங்கோவதனந்திரிகூடங்காஞ்சி
குஞ்சரசையமேமகூடமேவிந்தமென்னு
மஞ்சிவர்வரைகளெட்டும்வைகுறுமமணர்தம்மி
லெஞ்சலில்குரவர்க்கோலவேறுவேறெழுதிவிட்டான். (எ)

வடிவுபோலுள்ளமெல்லாமாசிருள்புதையநின்ற
வடிகண்மாராவாரெண்ணுயிரவருமார்த்தார்வேய்ந்த
முடிகெழுவேந்தன்விட்டமுடங்கலநிமிர்த்துவாசித்
திடிகெழுகார்போற்குன்றினிழிந்துவேறிடத்திற்செல்வார். (அ)

யாவருமொருங்குகூடியிருள்வழிகொள்வதெய்ப்பக்
காவல்வல்லரணஞ்சூழ்ந்தகாஞ்சிமாநகரத்தெய்திப்
பூவலர்தாரான்கோயிற்புறங்கடைபுகுந்துவேந்த
னேவலர்விடுப்பவுள்போயிறைமகனிருக்கைபுக்கார். (கூ)

மன்னவன்முடிமேற்பீலிவைத்தனராக்கங்கூற
வன்னவனவரைநோக்கிவசியமுன்னுறும்வல்லீர்
தென்னனையாபிசாரஞ்செய்துயிர்செகுத்தாலுங்கட்
கென்னதுநாபொதிதருவல்போயியற்றுமென்றான். (கo)

தவம்புரிந்தவமேசெய்வார்தாமதற்குடன்பட்டேகி
நிவந்ததெண்டிரைநீர்ப்பாலிநெடுங்கரைக்காதமூன்றிற்

(எ) கவுஞ்சம்-கிரவுஞ்சமெனுமொரு மலை. குஞ்சரசையம்-யானை மலை. (அ) அடிகள்-சமணத்துறவிகள். (கூ) எய்ப்ப-ஒப்ப. (கo) பீலி-மயிலிறகு. வசியமுன்னுறு-வசியவயத்தம்பவாத வதிசிசய வஞ்சனை கருடனெனுமிவை.

கவர்ந்தகன்சாலேகோலியோசனேயகலங்கல்லி
யவம்படவேள்விக்குண்டங்கோணமெட்டாகக்கண்டார். (கக)

விடம்பொதிகாட்டம்பெய்துநிம்பநெய்விராயநஞ்சி
னுடம்புடையுயிரின்கோழுன்கறிப்பொடியூறுமெண்ணெ
யிடம்படவாயங்காந்தவெரிக்குழிபுதையப்பெய்து
கொடும்பழிவேள்விசெய்தார்கொல்லாதவிரதம்பூண்டார். (கஉ)

மாலேபொதும்பர்நந்தாவனமுளசோலையுள்ள
காலேகருகிச்சாயக்கயலுளவோடையுள்ள
கோலேவாவியுள்ளகுளமுளவறப்பத்தாவிச
சேலேமுகிலுந்தீயசிகையெழுகுண்டத்தீவாய். (கங)

கூற்றெழுதோற்றம்போலவஞ்சனக்குன்றம்போலக்
காற்றெழுசெவியுநால்வாய்கௌவியமருப்புமாரு
ஆற்றெழுமதமுமூசலாடியவொற்றைக்கையு
மேற்றெழுவிடம்போற்சீறியெழுந்தபோர்தறுகண்யானே (கச)

அந்தமாவேள்வித்தீயுமவியமும்மதமுஞ்சோர
வந்தமாகளிற்றைநீபோய்வழுதியைமதுரையோடுஞ்
சிந்தவேதாலத்தியென்னுத்தென்றிசைச்செல்லவேவி
முந்தவேவிடுத்தமாசுமூழ்குடலமணப்பேய்கள். (கஞ)

கலிவிருத்தம்.

அருளற்றிருளுடலிற்புதையமணக்கயவர்களுட்
டெருளற்றருமறையிற்படர்செயலற்றிகபரமெய்ப்
பொருளற்றவனனிகத்தொடுபுறமொய்த்திடமதமா
வெருளற்றிடுகுரலிற்படிவெடிபட்டிடவருமால். (கசு)

அடியின்னளவகல்பாதலமுடியின்னளவண்ட
மிடியின்னளவெழுகார்செவியெறிகாலளவகில
மடியும்மளவுளர்கான்மதமழையின்னளவுலக
முடிவின்னெழுகடல்கண்ணழலளவாமுதுவடவை. (கஎ)

கூற்றஞ்சிடவருமிக்கரிகுரலஞ்செவிமுழைவா
யேற்றஞ்செயமடங்குஞ்செவியெறிகால்வழிவிழித்தீ

(கஉ) விடம்பொதிகாட்டம் - எட்டிவிறகு. நிம்பநெய் - வேப்ப நெய். நஞ்சினுடம்புடையுயிரின்கோழுன்-விடம்பொருந்திய சரீரத் தினையுடைய பிராணிகளின் கொழுத்ததசை. கறிப்பொடி-மிளகுத் தூள். (கங) பொதும்பர்-சோலே. (கஎ) பாதலம்-பாதாளம். அண் டம் - மேலுலகம்.

யூற்றஞ்செயமடைவாயுடைந்தொழுகுங்கடமதநீர்
நாற்றஞ்செயத்திசைவேழமுங்கிக்கஞ்செய்துநலியும். (கஅ)

இடிக்கும்புயல்வயிற்றைக்கிழித்திடியேற்றினையுகிர்க்கும்
வெடிக்கும்பிளிறெலியாற்றிசைவிழுங்கிச்செவிடாக்குந்
துடிக்கும்புழைக்கையோச்சிவிண்டொடுகுன்றினைச்சுற்றிப்
பிடிக்குங்கடல்கலக்குந்தனிப்பெருமத்தெனத்திரிக்கும். (ககூ)

உருமுக்குரலொலியிற்றுளரொலிவிட்டெறிசெவியிற்
றிருமுட்பிறையெயிறிற்றழலெறிகட்டிருளுடலிற்
றருமுக்கடவருவித்தரலடியிற்றெனநிலமேல்
வருமுக்கிரவடவைக்கனல்வரிஞெப்பதமதமா. (உ0)

தெழிபட்டதிக்கயத்தின்செவிதீயப்பகையோடும்
வழிபட்டொருகடுங்கூற்றெனவருகுஞ்சரவரவை
வழிபட்டவர்மொழியாலுணர்விரைபட்டலர்வேம்பன்
சுழிபட்டலோபுனல்போன்மனஞ்சுழன்முனிஞ்தழன்முன். (உக)

மைப்போதகம்பொறையாற்றியமணிக்கோயின்முன்குறுகாக்
கைப்போதகமுரித்தான்கழற்காற்போதகமுறத்தாழ்ந்
திப்போதகந்தனையுந்தொலைத்தெனக்காத்தியென்றிரந்தா
னப்போதகல்வானின்முருகிருவாக்கெழுந்தன்றே. (உஉ)

விட்டார்வலிகெடநாமொருவிற்சேவகனுகி
மொட்டார்விடவருவெங்கரியுயிர்வௌவுதுமுதனின்
மட்டார்பொழிற்கடிமாகரயற்கீட்டிசைமருங்கோ
ரட்டாலமண்டபஞ்செய்யெனவதுகேட்டெழுந்தரசன். (உங)

அகங்கவ்வியகளிப்பெய்திவந்தட்டாலமண்டபம்பொன்
னகங்கவ்வியதெனத்தூணெருநாணெங்கினிலெடுத்தே
சகங்கவ்வியபுகழான்செயத்தறுகட்கணைமதமா
முகங்கவ்வியவிற்சேவகன்வருவானதுமொழிவாம். (உச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீனிறநீத்தநீர் நிழன்மதியிரண்டெண்டென்ன
வானிறவலயச்சங்கவார்குழைநுழைவித்தம்பூம்

(கஅ) முழைவாய்-முழையின்வழி. முழை-குகை. (ககூ) பிளிறல்-முழங்கல். திரிக்கும் - சுழற்றும். (உ0) உருமுக்குரல்-இடியொலி. (உக) தெழிபட்ட - கர்ச்சிக்கின்ற. (உங) ஒட்டார் - பகைவர். (உச) பொன்னகம்-மகமேரு.

பானிறவெகினங்காணுப்படர்சடைமறைத்துத்தோற்றுங்
கானிறைகுஞ்சிச்சூட்டிற்களிமயிற்கலாபஞ்சூடி. (உடு)

கருங்கடன்முளைத்தசெக்கர்க்கதிரெனக்குருதிக்கச்சை
மருங்குறவீக்கிச்சோரிவாயுடைவாளுங்கட்டி
யிரங்குநான்மறைகளேங்கவிருநிலந்தீண்டுதாளிற்
பொருங்கழல்வளைத்துவாளிப்புட்டிலும்புறத்துவீக்கி. (உசு)

வீங்கியதடந்தோளிட்டவார்சிலம்பில்லிஞேமும்
பாங்குறையிமயப்பாவைபாதியேயன் றிமுற்றும்
வாங்கியவண்ணம்போன்றுமல்லதுமாலுமோர்பா
லோங்கியவண்ணம்போன்றுமொளிநிறம்பசந்துதோன்றி. (உஎ)

காமனுங்காமுற்றஞ்சுங்காலையாம்பருவந்தோன்றத்
தாமுலகளந்தவென்றித்தனிவிற்சேவகனுய்த்தோன்றி
மாமறைமகுடமன்னமண்டபத்தேறித்தென்னர்
கோமகனிடுக்கண்டீர்ப்பான்குஞ்சரவரவுநோக்கா. (உஅ)

அஞ்சுகூவிளிச்சேய்த்தென்னவதுவரவறனிலாதான்
வெஞ்சினக்கோலிஞேன்றுண்மிதித்துமெய்குழையவாங்கிச்
செஞ்சிலைநெடுநாண்பூட்டித்திருவிரறெறித்துத்தாக்கிக்
குஞ்சரமெட்டுமெஞ்சக்கோளரிமுழக்கங்காட்டி. (உக)

இங்கிதநெடுங்கோதண்டமிடங்கையிலெடுத்துநார
சிங்கவெங்கணைதொட்டாகந்திருகமுன்னிடத்தான்செல்ல
வங்குலியிரண்டாலையன்செவியுறவலித்துவிட்டான்
மிங்குலின்முழங்கும்வேழமத்தகங்கிழிந்ததன்றே. (ஈ0)

கொண்டலினலறிச்சீறிவீழ்ந்ததுகொடியவேழம்
பிண்டதுபாருஞ்சேடன்சென்னியும்பிளந்ததண்டம்
விண்டதுபோலுமென்னத்துண்ணெனவெருவிப்போன
பண்டையதருக்கும்வீறும்படைத்தனதிசைமால்யானை. (ஈக)

புதைபடக்கரித்தோல்போர்த்தபுண்ணியமூர்த்திதாளா
லுதைபடக்கிடந்தீகூற்றமொத்ததுமத்தயானை

(உடு) நீத்தம்-வெள்ளம். வலயம்-வட்டவடிவம். பானிறவெகினம்-வெண்ணிறவண்ணம். சூடு-தலேப்பூ. உச்சிக்கொண்டையென்ப. குருதிக்கச்சை-அரத்தநிறமானகச்சை. வாளிப்புட்டில்-அம்பறாத்தூணி. (உக) கூவிளிச்சேய்த்தது - கூப்பிடுதூரத்தது. வெஞ்சினக்கோல் - கொடுங்கோல். (ஈ0) ஆகந்திருக - வலப்புறமார்பம்பின்னேக்கி நெளிய.

சுதைபடுமதிக்கோவேந்தன்றொழுகுலச்சிறுவனெனத்தான்
பதைபடுமமணர்காலபடரெனப்படரிற்பட்டார். (உ)

இருள்கிடந்தனையதானையிட்டசிந்துரங்கார்மாலை
யிருண்முகத்தொதுங்கிச்செல்லுமிரவிசெங்கிரணம்போன்ற
திருண்முழுதுண்ணக்காலையெழுகதிர்வட்டமன்ன
திருளினைமறைத்தகண்டனெய்தவாய்ப்பெய்யுஞ்செந்நீர். (ஊ)

பொய்யருமனத்தார்தேற்றும்புன்னெறியொழுக்கம்பூண்ட
வெய்யகோன்கொடுங்கோறன்னெவெண்மருப்பாகத்தாங்கி
மையன்மாவடிவங்கொண்டுவந்தவெங்கலியைத்தென்னன்
செய்யகோலையன்சிங்கவாளியாய்ச்சிதைத்ததன்றே. (ஈ)

உருமுவீழ்ப்புண்டகுன்றினும்பன்மாவம்புதொட்ட
பெருமுழைவாயும்வாயும்பெருகினவருவிச்சோரி
கருமுகின்மானச்சேனங்கழுதுகள்பூதமொய்த்த
திருமணித்தடந்தோள்வீங்கத்தென்னவனுவகைபூத்தான். (ஒ)

ஆனையின்புண்ணீருண்ணவடுத்தகாருடற்பேயென்னச்
சேனைபின்செல்லப்போந்தகிணியிருளமணர்தம்மை
மீனவன்கண்டுசீறவேந்தவன்குறிப்பினிற்கு
மானவெஞ்சினவேன்மள்ளர்வல்லேபோய்முடுக்கலுற்றார். (ஊ)

எடுத்தனர்கையிற்றண்டமெறிந்தனர்மறிந்துசூழ்போய்த்
தடுத்தனர்கரகந்தூளாத்தகர்த்தனர்பீலியோடுங்
கொடுத்தனருடுத்தபாயைத்துணிபடக்கிழித்துக்கால்வாய்
விடுத்தனர்மானம்போக்கிவிட்டனர்சில்லோர்தம்மை. (எ)

எறியுண்டுசெய்தமாயமிழப்புண்டுசேனையோடு
முறியுண்டுருக்கம்பாவுமுழங்குண்மொழிச்சாம்பிப்
பறியுண்டதலையர்யாரும்பழிப்புண்பொயுந்தாமு
முறியுண்டகரகத்தோடுமொதுங்குண்பதுங்கிப்போனார். (அ)

மாதங்கந்தடிந்தட்டாலமண்டபத்திருந்தவீரன்
பாதங்கள்கையாற்பற்றிப்பாண்டியனிரந்துவேண்டிப்
போதங்கள்கடந்தாயென்றும்பொலியவிங்கிருத்தியென்ன
வேதங்கட்கருத்தஞ்சொன்னவேதியனதற்குநேர்ந்தான். (கூ)

(உ) சுதை - அமுதம். தொழுகுலச்சிறுவன்-பார்ப்பனச் சிறுவனை மார்க்கண்டன். (ஈ) வெய்யகோன்-சோழன். (ஊ) முழை-மலைக்குகை. (எ) கரகம்-கமண்டலம். (அ) பதுங்கி-ஒளித்து.

பின்னுஞ்சில்வரங்கணல்கப்பெற்றுநான்மாடக்கூடன்
மன்னுஞ்சின்மயனேவந்துவந்தித்துவருநாட்காம
னென்னுஞ்சின்மலர்ப்பூந்தண்டாரிராசசேகரனேப்பெற்று
மின்னுஞ்சில்லியந்தேர்வேந்தன்மேதினிபுரக்குமன்னே. (೫0)

வம்புளாய்மலர்ந்தவாரான்வரவிடுமத்தக்குன்றிற்
சிம்புகளாய்வடிவங்கொண்டசேவகனேவல்செய்த
வம்புளாய்த்தூணம்விள்ளவன்றவதரித்தவாபோற்
செம்புகளாய்க்கொடியநாரசிங்கமாயிருந்ததன்றே. (೫೫)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாமழித்துமீளவுண்டாக்குமுருத்திரன் வீரசத்தியினிற், சிலதரித்திறவாவவுணன்மார்பிடந்தசிங்கநாயகனேயங்கெய்தி, யலகின்மாதவஞ் செய்துரோமசன்றன்போறியவோர்தீர்த்தமுண்டாக்கி,யிலகுபேறடைந்தான்பிரகலாதனுநோற்றிலாப்பெருவாழ்வடைந்தான். (೫೨)

யானையெய்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ஈக - க்கு திருவிருத்தம் - கசஉ೬.

இருபத்துழன்றவது,

விருத்தகுமாரபாலரானபடலம்.



கலிநிலைத்துறை.

தழையுலாங்கையரேவியதந்திமேல்விடைமே
லழகர்சேவகஞ்செய்தவாறறைந்தனமவரே
கிழவனுகிப்பின்காலாயாய்க்கிஞ்சுகச்செவ்வாய்க்
குழவியாய்விளையாடியகொள்கையைப்பகர்வாம். (க)

தென்னன்விக்கிரமன்புயத்திருநிலச்செல்வி
மன்னிவாழுநாண்மதுரையின்மறையவனெருவ

---

(೫0) சின்மயன்-ஞானவுருவன். சில்லி-தேருருள். (೫೫) வம்பு. வாசனை. மதக்குன்று - யானை. சிம்புள் - சரபம். செம்புள்-பருந்து. ஆய் - ஆராயும். (೫೨) வீரசத்தி - அதிகாரசத்தி. (க) தழை - மயிற்றோகை.

னன்னவன்விரூபாக்கனுமவன்குடிவாழ்க்கை
மின்னனுள்வடமீனனுள்பெயர்சுபவிரதை. (உ)

அனையர்தங்களுக்கரும்பெறன்மகவின்றியனந்தம்
புனிதநல்லறஞ்செய்தொழிலொழுக்கமும்பூண்டு
நனையவார்குழலன்னையரெழுவர்பானண்ணி
யினியமாதவஞ்செய்தொருபெண்மகவீன்ரூர். (ஈ)

பேருங்கௌரியென்றழைத்தனர்பிராயமோரைந்திற்
சாருங்கௌரியும்பிறவிநோய்தணிப்பதற்குறுதி
தேருஞ்சிந்தையாடந்தையவணங்கியிச்சனன
மீருந்தெய்வதமந்திரமியாதெனவினவ. (கூ)

அந்தணனளுமதிசயித்தரும்பெறன்மகட்குச்
சிந்தையார்வமோடிறைவிதன்மனுவினச்செப்பத்
தந்தைபாலதுதெளிந்துநாத்தழும்புறப்பயின்ரு ண்
முந்தைநாளருந்தவக்குறைமுடித்திடவந்தாள். (ரு)

தாதைதன்றவக்கொழுந்தினுக்கிசையமாசைவ
மாதவத்தனுயாதியாச்சிரமத்தில்வழங்கும்
வேதவித்துமாய்மரபினுன்மேம்படுவானைப்
போதுபோதுமென்றளத்தொடுபுகன்றுகொண்டிருந்தான். (சு)

பருவநாலிரண்டாகமேற்கடிமணப்பருவம்
வருவதாகவங்கொருபகல்வணவப்படிவப்
பிரமசாரியாய்க்கடைதொறும்பிச்சைபுக்குண்பா
னெருவன்வந்தனன்பலிக்கவணயற்புலத்துள்ளான். (எ)

பிச்சைவேண்டினனவற்குத்தன்பெண்ணினைக்கொடுப்பா
னிச்சைகூர்ந்தருந்தவத்திலெல்வருந்தியீன்றெடுத்த
விச்சைவேதியன்மனையொசுற்றமும்வினவா
தச்சமின்றிநீரெடுத்தவனங்கையிற்பெய்தான். (அ)

கலிக்குரூபுரச்சீறடிக்கன்னிதன்விதியும்
பலிக்குவந்தவனல்வினைப்பகுதியுந்துரப்ப

(உ) விரூபாக்கன் - வக்கிரநயனன். அதாவது மேலேக்கிய நற்றிக்கண்ணுடைய ஞதலின் சிவபெருமானுக்கது பெயராயிற்று. (ஈ) புனித நல்லறம் - தூய்மையான நல்ல தருமம். அது, பதி புண்ணியம். அன்னைய ரெழுவர் - சத்த மாதர். அவர் அபிராமி, மாகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, நாராயணி, இந்திராணியர். (கூ) தெளிந்து - உணர்ந்து. (சு) மாசைவன் - வைதிக சைவன். (எ) பருவம் - வயது.

வொலிக்குமந்திரச்சிரகநீமொழுக்கினுன்முந்திச்
சலிக்குமன்னையுந்தமக்களுங்கேட்டுளந்தளர்வார். (கூ)

குலனுமோர்கிலன்கோத்திரமோர்கிலன்குடிமை
நலனுமோர்கிலனெழுக்கமுங்கல்வியுநண்ணுந்
தலனுமோர்கிலன்கன்னியைத்தத்தஞ்செய்தானெப்
புலனுமோர்ந்தவன்விதிவழிமதியெனப்புலந்தார். (கo)

மற்றவன்குடிகோத்திரஞ்சூத்திரமற்று
முற்றறிந்துநம்மரபினுக்கொக்குமான்மாயோன்
சொற்றதந்திரவயிணவத்தொடக்குண்டுதிரியுங்
குற்றமொன்றினிமறுப்பதென்கொடுப்பதென்றிசைந்தார். (கக)

தாயுமொக்கலுமொத்தபின்றுதையும்வேதத்
தாயுமெண்மணத்தாதியாமறநிலையாற்றுற்
றேயுநுண்ணிடைக்கன்னியைச்செம்பொனுற்புதைத்திக்
காயுமாரழன்மூன்னரக்காளைகைக்கொடுத்தான். (கஉ)

தெய்வமங்கலவரிசைகள்செய்துதான்பயந்த
மெளவலங்குழற்கன்னியைமணமகளுகெங்
கௌவையம்புனல்வேலிசூழ்கடிநகர்விடுத்தான்
சைவமங்கலவேதியத்தாபதனிப்பால். (கங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இல்லார்க்குக்கிழி யீடுநேர்பட்டா லெனப்பல்லா ரில்லந்தோ றுஞ், செல்லாநின்றிரந்துண்டுதிரிந்தமகன்மணமகளுய்ச் செல்வநல் க, வல்லாளேமணந்து வருவான் போற்றம்மனே புகுதவன்கட்சீலப், பொல்லாராய் வையைவத்துப் புக்கொழுகு தாய் தந்தை பொருர் களாகி. (கச)

வந்தமணவாட்டிசிவசித்தனே யுஞ்சைவதவவடிவுநோக்கி, வெந்த வுடல்போன்மனமும்வெந்தவளேவேறுதுக்கிவேண்டாராகி, நிந்த னைசெய்தொழுகுவாரவளையொருநாணீத்துநீங்கிவேற்றூர்த், தந்த மர்மங்கலங்காண்பான்றனியேவைத்தகம்பூட்டித்தாங்கள்போனுர்.

(கூ) துரப்ப - செலுத்த. (கo) புலன் - அறிவு. (கக) மாயோன் சொற்றதந்திரம் - பாஞ்சராத்திராகமம். (கஉ) எண்மணத்தாதி - பிரமமணம். எண்மணமாவன-பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராக்கதம், பைசாசம் என்பன. (கங) மெளவல் - வனமல்லிகை.

உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக்கேட்டு, மண்மாசுபடப்பூசும் வடிவுடையா ரகன்றதற்பின் மனையில்வைகும், பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக்காணப் பெருமலின் றென், கண்மாசு படுவதெனக் கனிந்தொழுகு தலையன்பாற்கவலை கூர்வாள். (கசு

சிவனடியார்க்கன்பிலாச்சிந்தையேயிரும்பேவல் செய்துநாளு, மவனடியார்திறத்தொழுகா வாக்கையேமரஞ் செவிகண்ணுதியைந்தும், பவனடியாரிடைச் செலுத்தாப் படிவமேபாவை மறை பரவுஞ் சைவ - தவநெறியல்லா நெறியேபவநெறி யென்றளியளாய்த்தளர்வாள்பின்னும். (கள)

எனைத்துயிர்க்கு முறுதியிகபரமென்பவவைகொடுப்பானெல்லாந்தாளு, யனைத்துயிர்க்குமுயிராகுமரனென்பவனறிவார்க்கங்கம்வாக்கு, மனத்துறுமெய்ப்பத்திவழிவருமென்பவப்பத்திவழிநிற்பார்க்கு, வினைத்துயர்தீர்த்திடவெடுத்தவடிவென்பதவனடியார்வேடமன்றே. (கஅ)

என்னவிருந்தலமருவாளிருக்குமிடத்தவளுள்ளத்தெண்ணியாங்கே, தென்னவனுயிருந்தரசுசெய்தபிரானவட்கருளுஞ்செவ்விநோக்கிக், கன்னமுரங்கரஞ்சிரந்தோள்கண்டமுங்கண்டிகைபூண்டிகையிற்றம்போற், பன்னெடுநாட்பழகியதோர்தனிப்பெரியபுத்தகமும் பக்கஞ்சேர்த்தி. (கக)

கரிந்தநீள்கயன் முள்ளினரையு முதுதிரைகவுளுங்கனைக்குரைஞ்சுஞ், சரிந்தகோவண வுடையுந்தலைப் பனிப்புமுத்தரியந்தாங்குதோளும், புரிந்தநூல்கிடந்தலையும்புண்ணியநீறணிமார்பும்பொலிய நீழல், விரிந்ததோர்தனிக்குடையுந்தண்டேந்திக்கவிழ்ந்தசையுமெய்யுந்தாங்கி. (உ0)

ஒருத்தராயுண்டிபலபகல்கழிந்தபினினர்போலுயங்கிவாடி. விருத்தவேதியராய்வந்தகம்புகுதக்கண்டெழுந்துமீதூரன்பின், கருத்

(கச) கிழியீடு - பொன் முடிப்பு. செல்வகல்க வல்லாள் - திருமகள். வன்கண் - கொடுமை. (கடு) வெந்த வுடல்-சுட்டதனுற்புண்பட்ட தோள்களையுடைய உடல். தமர் - சுற்றம். (கசு) உண்மாசு - அகத்தழுக்கு. தலையன்பு-சிவநேயம். (கள)பவநெறி-பாவமார்க்கம். அளியள்-இரக்கமுடையவள். (கஅ) எனைத்துயிர்க்கும் - எல்லாவுயிர்கட்கும். (கக) அலமருவாள்-வருந்துவாள். கன்னம்-காது.(உ0) கரிந்த-உலர்ந்த. கயன்முள்-சிறுமீன்முள்.கவுள்-கபோலம்.பனிப்பு-நடுக்கம்.

தளாய்த்தவிசிருத்திக்கைதொழுதுசிவனேயிங்குக்காணவென்ன,வரு
த்தமாதவமுடையேனெனமுனிவர்பசித்துன்பால்வந்தேமென்றார்.

இற்பூட்டிப்போயினுரைமரங்களெனக்களரியியம்பமேரு
விற்பூட்டிப்புரம்பொடித்தவேதியர்நின்கைதொட்டுவிடுமுன்யாத்த
கொற்பூட்டுவிடுந்திறந்துகடிதடிசில்சமைத்தியெனக்குமரிதாளி
லற்பூட்டுமடவரலுமவ்வாறேயட்டில்புகுந்தடிசிலாக்கி. (உஉ)

தையன்மாதவக்கொழுந்துபுறம்போந்துசிரகநீர்தளிர்க்கைதாங்கி
யையனேயமுதுசெயவெழுந்தருளுமெனவெழுந்தவடிகள்பாதச்
செய்யதாமரைவிளக்கியந்நீர்தன்சென்னியின்மேற்றெளித்துப்பாச
மையன்மாசிருள்கழுவியகம்புகுவித்தாசனமேல்வைத்துப்பின்னர்.

நகைமலரிட்டருச்சித்துநல்லபரிகலந்திருத்திநறுவீமுல்லை,மு
கையனேயபாலடிசில்வெள்ளிமலையெனப்பருப்புமுதுகிற்செம்பொ
ற், சிகரமெனப்பல்வேறுகருனைபுறந்தழீஇக்கிடந்தசிறுகுன்றிட்ட,
வகையென நெய்யருவியெனப் படைத்தனைய சிற்றுண்டிவகையும்
பெய்து. (உச)

செய்யவாயிடையிடையேமுகமனுரையின்னமுதுசெவியிலூட்டத்
தையலாள்வளைக்கையறுசுவையமுதுவாயூட்டத்தளர்ந்தயாக்கை
யையர்தாந்திருவமுதுசெய்தமுதுண்டவரெனமூப்பகன்றுபூவிற்
கையதேமலர்வாளிக்காளைவடிவாயிருந்தார்கன்னிகாண. (உரு)

பூசியவெண்ணீறுபோய்க்கலவையாய்க்கண்டிகைபோய்ப்பொ
ன்செய்பூணுங், காசணிபொற்குண்டலமுங்கடகமுமாய்மூப்புப்போ
ய்க்காளையான, தேசுருவங்கண்டுநடுநடுங்கிவளைக்கரகெரித்துத்தி
கைத்துவேர்த்துக், கூசியொருபுறத்தொதுங்கிநின்றுளக்கற்புமலர்
க்கொம்பரன்னாள். (உசு)

ஆனபொழுதருங்கடிநன்மணங்குறித்துமனையிற்றீர்ந்தயலூர்பு
க்க,தேனெழுகுதழாயலங்கற்றீர்த்தனுக்கன்புடையார்போற்றியு

(உக) உயங்கி-மயங்கி. தவிசு-ஆசனம். (உஉ) கொற்பூட்டு-கொல்
லனையுடைய பூட்டு. கொல் என்பது பூட்டினுக்குரங்கம். (உங) சிர
கம்-கமண்டலம். மையல்-மயக்கத்தைத்தருகின்ற. (உச) பரிகலம்-
உண்கலம். திருத்தி-வைக்கவேண்டுமுறையில் வைத்து. கருனை-
பொரிக்கறி. (உரு)முகமன்-உபசாரம். அமுது-தேவாமிர்தம்.பூவில்-
மலராலாகிய வில்.இது மன்மதனுக்குரியது.இதனை"புட்பதன்வா"
என அவனுக்குப் பெயரிருத்தலே விளக்கும். (உசு) கலவை-கூட்டு
வர்க்கச்சந்தனம்.

ம்வஞ்ச, மானமுடையார்மீண்டுமனுபுகலும்பதினுறுவயதின்மேய, பானண்மணிகண்டனுதற்காப்பணிந்தோர்பசுங்குழவிப்படிவங்கொண்டான். (உஎ)

எழுதரியமறைச்சிலம்புகிடந்துபுறத்தலம்பவன்பரிதயமென்னுஞ், செழுமலரோடையின்மலர்ந்துகிவானந்தத்தேன்றதும்பு தெய்வக்கஞ்சத், தொழுதகுசிற்றடிப்பெரியவிரல்சுவைத்துமைக்கணீர்துளும்பவாய்விட், டழுதணையாடையிற்கிடந்தானனைத்துயிருமீன்று காத்தழிக்குமப்பன். (உஅ)

தாய்விட்டுப்போனதொருதனிக்குழவியெனக்கலங்கித்தாங்கித்தேடி, யாய்விட்டுப்பிரமனழமறைகளழவன்புடையாளன்பிற்பட்டு, வாய்விட்டுக்கிடந்தழுதமகவினைக்கண்டணங்கனையாண்மாமியென்னுங், காய்விட்டுமுக்கொடியாளிம்மகவேதெனக்கேட்டாள்கௌரிதன்னை. (உக)

நத்தனையன்றனக்கரியநாயகனுக்கன்புடையாணவில்வாடேவ, தத்தனையந்தருமனைவியொடுபோந்துகிறுபோதுதையலாயீண், டித்தனையன்றனைப்பார்த்துக் கோடியெனவைத்தகன்றுனென்னுமுன்னஞ், சித்தகயனங்கலங்கச் சீறிமணவாட்டிதன்மேற் செற்றங்கொண்டாள். (கூ0)

என்புபூண்டிகோட்டிற்பொடியாடுமுருத்திரனுக்கிடையுரைத, வன்புபூண்டான்மகவுக்கன்புடையாய்நீயுமெமக்காகாயென்று, துன்புபூண்டயர்வாளைமகவையுங்கொண்டகத்தைவிடத்துரத்தினுர்கள், வன்புபூண்டொழுகு வைணவம்பூண்டு பொறையிரக்கமானீத்தார். (கூக)

தாயிலாப்பிள்ளைமுகந்தனைநோக்கித்தெருவினிடைத்தளர்வாளுள்ளங், கோயிலாக்கொண்டுறையுங்கூடலையகனைமனக்குறிப்பிற்கண்டு, வேயிலாக்கியதடந் தோட்கௌரி திருமந்திரத்தை விளம்பலோடுஞ், சேயிலாக்கிடந்தழுத குழவிவிசும்பிடை விடைமேற்றெரியக்கண்டாள். (கூஉ)

(உஎ) பானல்-நீலோற்பலம். அலம்ப-சத்திக்க. (உக)விட்டுமதம்-விஷ்ணுமதம். நத்தன்-சங்கினையுடைய நாராயணன். (கூ0) தேவதத்தன் என்பது பொதுவாக ஒரு புருடனை உணர்த்துவதோர்மொழி. (கூக) இடுகாட்டில்-பிணத்தினையிடுகின்ற சுடுகாட்டில். (கூஉ) சேயில்ஆய் - குழந்தை யுருவமாகி-எ-ம். சமீபமாகி என்றும் ஆம்.

மழவுருநீத்தடலேற்றின்வருவார் தம்மிடத்தணங்கின் மனுவை
யோதிப், பழகியபார்ப்பனமகளேப்பார்ப்பதியின் வடிவாக்கிப்பலரு
ங்கண்டு, தொழவிடைமேலேற்றிவிசும்பாருமகமலர்மாரிசுரர்கடேற்ற,
வழகெழுந்தளிஞர்களிதூங்கியதிசயித்தாரவனிமாக்கள். (கூஎ)

விருத்தகுமாரபாலரானபடலம் முற்றிற்று.

ஆ படலம் - கூஉ-க்கு - திருவிருத்தம் - கசசுo.

இருபத்துநான்காவது,

மாறியாடினபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருத்தராய்மதுராபுரிமேவியசித்தராகியசெல்வர்
விருத்தராயிளையவருமாய்மழவுமாய்வேடங்கொண்டடலேற்றி
னெருத்தராய்விளையாடியவாடலையுரைத்தனமினிமன்று
ணிருத்தராயவர்மாறிநின்றாடியசிலசிறிதுரைசெய்வாம். (க)

வேந்தன்மீனவன்கொடியவனுகியவிக்கிரமன்றன்றே
ளேந்துமண்பொறையிராசசேகரன்புயத்திறக்கியைந்தருநாடன்
பூந்தண்மாமலர்வேதியன்மாதவன்புரத்தின்மேற் பொலிந்தோங்கு
சாந்தநீறெனச்சண்ணித்தபுண்ணியத்தனிமுதனகர்சார்ந்தான். (ஞ)

கண்ணகன்புவியிராசசேகரன்பொதுக்கூடிந்துசெங்கோலோச்சி
வண்ணவெண்குடைநிழற்றுவானுனந்தவடிவமாய்த்தனிமன்று
ளண்ணலாடியதிருநடத்தன்பிளுலாடனூலொழித்தேனை
யெண்ணுமூவிருபத்துமூக்கலேயுங்கற்றிறைமுறைசெயுநாளில். (ஙு)

சிலம்பிவாயினூலிழைத்திடுபந்தரிற்செங்கண்மாறுழைவரு [பு
மலம்புதெண்டிரைப்பொன்னியந்தண்டுறையானைக்காவிறைக்கன்
கலந்தசிந்தையான்மூவிருபத்துநாற்கலேளும்பயின்றுள்ள
மலர்ந்தவன்கரிகாற்பெருவளத்தவன்வையகம்புரக்கின்றுன். (ச)

(க) திருத்தராய் - ஒழுக்க முடையவராகி. அடல் - வன்மை. (உ) மீனவன் கொடியவன் - வலிய மச்சகொடியினை யுடையவன். மாமலர் - சிறந்த தாமரை மலர். மாதவன் - திருமகள் நாதனுன நாராயணன். சண்ணித்த - பூசிய. (ஙு) மூவிருபத்து மூக்கலே - அறுபத்து மூன்று கலேக்கியானம். (ச) கரிகாற்பெருவளத்தவன் - கரிகாற் சோழன். இவனைக் காடுவெட்டிய சோழனென்றுங் கூறுவார்கள்.

பொன்னிநாடவன்வாயிலுள்ளாளெருபுலவன்வந்தலர்வேம்பின்
கன்னிநாடனைக்கண்டுமென்பரவுவான்கனைகழற்காலெம்
மன்னவற்கறுபத்தாறாற்கலைகளும்வரும்வராதுணக்கொன்று
தென்னரேறனையாயதுபரதநூறெரிந்திலையெனச்சொன்னன். (இ)

கேட்டமீனவன்மறுபுலவிஞ்சையன்கிளத்துசொல்லிகன்மான
மூட்டவாகுலமூழ்கியமனத்தனையுமுதுமறைச்சிரமன்று
ணூட்டமூன்றுடைநாயகனுடலுநானுமாதிதற்குள்ளம்
வேட்டதேகொலாமிதுவுமெம்பிரானருள்விதியெனவதுசற்பான்.()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆடனூல்வரம்புகண்டவராகியவ்வழியாடலும்பயின்ற,நாடகந
டைதேர்புலவரைத்திருவிருக்ணியவவர்க்கெலாமகிழ்ச்சி,வீடருஞ்
சிறப்பாலறுவையும்பூணும்வெறுக்கையும்வெறுத்திடக்கொடுத்துப்,
பாடல்வண்டரற்றுந்தாரிஞன்பரதப்பனுவலுங்கசடறப்பயில்வான்.

பாவமோடராகந்தாளமிம்மூன்றும்பகர்ந்திமுறையினுற்பரத
மாவையினங்கமுபாங்கமேபிரத்தியாங்கமேயலர்முகராக
மோவறுசீர்சால்கரப்பிரசாரமுவமையில்சிரக்கரகருமந்
தாவறுகரகேத்திரங்கரகரணந்தானகமேசுத்தசாரி. (அ)

விண்டிடாத்தேசிசாரியேகியாயம்விரித்தியேபிரவிசாரம்பூ
மண்டலமுடனுகாசமண்டலமேமாசில்சுத்தக்கரணஞ்சீர்
கண்டவுற்புலிதகரணமேயங்ககாரமேயிரேசிலமென்னக்
கொண்டநாலந்துபேதமுங்கற்றுக்கோதறப்பயின்றபினவற்றுள்.()

வருத்தமின்மனேபாவாதியாமெட்டுவகைநிருத்தங்களிற்சாரி
நிருத்தமாகியதாண்டவமகமார்க்கநிகழ்த்திடுந்தேசியேவடுகே
யருத்தமாகியிங்களமெனமூன்றுமதுநிலேயாறுமூவிரண்டு
திருத்தமாம்பதமுந்திகழிரெகாதிசெப்பியவங்கமீரெட்டும். (கo)

(இ) வாயிலுள்ளான்-சமுகத்தி லுள்ளவன். புலவன்-வித்துவான். (உ) விஞ்சையன் - வித்தையுடையவன். ஆகுலம் - வருத்தம். (எ) ஆடல்நூல்-நடனநூலான பரதம்.திருவி-தேடியழைத்து. அறுவை-ஆடை. வெறுக்கை-பொன். (அ) பாவம்-மெய்ப்பாடு முதலியவைக ளைக்குறிக்கு முகநயமுத்திரையாகிய. (க) தேசிசாரியாகிய-நடன விகற்பங்கள். (கo) அகமார்க்கம்-அகக்கூத்து. அது, அகச்சுவைபற் றிநிற்பது. தேசி-தேசத்துக்கு அடிசாரி முதலாக காலாற் சுழறல்-எறிதலாகிய. வடுகு-கால்களுமுடற்றுக்கு முதலியவுடையது. சிங்க ளம்-இவ்விரண்டின் கலப்புடைக்கூத்து. சிங்களம்-மெய்த்தொழிக கூத்துமாம்.

நால்வகைத்தாகுங்கரணமுமேலோர்நாட்டியவிருவகைக்கரமுங்
கால்வகைபுரிகைமுதற்பதினைஞ்சுங்கவான்மனையாதியாமிரண்டு
பாலதுமடிப்புவகையெழுநான்கும்பழிப்பறுசுத்தசாரியெனு
மேலுறுபூசாரிகள்பதினைமித்துணைக்கனசாரிகளும். (கச)

ஏற்றதிக்கிராந்தமாதியாமுப்பத்திருவகைத்தேசிசாரிகளுங்
காற்றினுங்கடுந்தேர்ச்சக்கரமுதலாங்கனசாரிகைகளேழைந்துஞ்
சாற்றுவித்துவற்பிராந்தமாதியவாஞ்சாரிபத்தொன்பதுமாகப் [கள்.
போற்றிவையனைத்துமுட்படப்புட்பபுடத்திலக்கண முதற்பொருள்

ஆசவாத்தியமுன்பொருண்முதற்களாசமாதியாம்பாடபேதங்கள்
பேசியபதினைறென்பதும்படகபேதமொன்றெழிந்தநாலைந்து
மாசறுமளகமாதியாம்பாடவகைகணலேழுமற்றவற்றிற் [ம்.
பூசல்வாத்தியந்தொட்டைவகைச்சச்ச புடாதியாந்தாளமாத்திரையு

கிளந்தமாத்திரையின்கதிகளுஞ்சொல்லுங்கீதமும்பாடமுமெழுத்து
ம், வளந்தருமணிபந்தாதிகீதத்தின்வகுத்தகட்டளையெழுநான்கு
மளந்திசைரளையாதிகட்டளையேழைந்தநன்கமைந்துபாவாதி
வினம்பியமூன்றுகலப்புமீறுகவிளைத்திடுங்கூத்தகமார்க்கம். (கச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உரைத்தவிக்கூத்துக்கற்கும்போதுதன்னுடம்பிற்சால
வருத்தநோயெய்தியிந்தவருத்தநான்மறையுந்தேரு
வருத்தமாயறிவாய்வெள்ளியம்பலத்தாடிகின்ற
நிருத்தனுர்த்தமக்குமுண்டேயென்பதுநினைவிற்கொண்டான் (கரு)

கரியதாமரைக்கண்ணனுங்கமலநான்முகனுங்காண்டற்
கரியதாளொன்றேநோவவாற்றநாணிற்பதந்தோ
வுரியதாமிதனைக்கற்றுவருத்தமுற்றோர்ந்துமீது
தெரியநானிருப்பதேயோவறனெனச்சிந்தைநோவான். (கசு)

வடுப்படுபிறவிப்பௌவவரம்புகாண்கின்றநாள்வந்
தடுப்பவர்யாவரேனுமவர்க்கெலாம்போகம்வீடு
கொடுப்பவர்செய்யுமிந்தக்கூத்தையெப்படிநாஞ்சென்று
தடுப்பதுதகாதன்றேனும்வருந்துமேசரணமென்னு. (கள)

(கக) இருவகைக்கரம் - எழிற்கை. தொழிற்கையாதிய. (கஉ) திக்கிராந்தம் - தேசிச்சாரியிலொரு பேதம். (கங) களாசம் - ஒரு வகைமுத்திரை. (கச)கிளந்த-கூறிய. கதி-செலவு. (கரு) சால-மிக. அருத்தம்-பொருள். (கசு) தெரிய-தெரிந்து. அறன் - நியாயம். (கள) வடு - குற்றம். வந்தடுப்பவர் - ஆசாரிய மூர்த்தமாகவந்து சேருபவர். அன்றியும் நாள்வந்தடுப்பவர் யாவரேனும் - இருவினையொப்பினையுடைய மலபரிபாகமுடையரா யெவராயினும், என்றுமாம். போகம்வீடுகொடுப்பவர். போகத்தையும் வீட்டையும்கொடுப்பவரென்றும் போகத்தை ஒழிப்பவரென்றுமாம். (கஅ)கதம்-சீற்றம்.

இதற்கிதுதுணிவென்றுன்னியெழுந்துபோய்ச்சிவனிராவிற்
கதக்களிற்றுருத்தலேந்துங்கதிர்மணிக்குடுமிக்கோயின்
மதக்கரியுரியினுற்குவரம்பறச்சிறந்தபூசை
விதப்படியாமகான்கும்விதிவழியியற்றல்செய்யா. (கஅ)

விண்டகமலர்த்தாளேத்திவெள்ளியம்பலத்துளன்பர்
தொண்டகமலரநின்றசோதிமெய்ஞ்ஞானக்கூத்தைக்
கண்டகமகிழ்ந்துதாழ்ந்துகட்புனல்சோரச்செங்கை
முண்டகமுடிமேலேற்றிமுகிழ்த்துநின்றினனேவேண்டும். (கக)

நின்றதாளெடுத்துவீசியெடுத்ததாணிலமீதூன்றி
யின்றுநான்காணமாறியாடியென்வருத்தமெல்லாம்
பொன்றுமாசெய்தியன்றேற்பொன்றுவலென்னுவன்பின்
குன்றனுன்சுரிகைவாண்மேற்குப்புறவீழ்வேனென்னு. (உ0)

நாட்டினுன்குறித்துப்பாயநண்ணுமுன்னிடத்தாலூன்றி
நீட்டினுன்வலத்தாள்வீசிநிருமலன்மாறியாடிக்
காட்டினுன்கன்னிநாடன்கவலையும்பாசமூன்றும்
வீட்டினுன்பரமானந்தவேலையுள்வீட்டினுனே. (உக)

வினைகள்வாய்வீழ்ந்தவண்டின்மெய்யறிவின்பமென்னு
மளவிலாமுந்நீர்வெள்ளத்தாழ்ந்தவனெழுந்துபின்னு
முளமும்வாசகமுமெய்யுமுடையவனதுவேயாகப்
பளகிலாவன்புதானேபடிவமாய்ப்பழிச்சலுற்றான். (உஉ)

கலிவிருத்தம்.

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியாகியவங் கணனே சரண
மரியா யெளியா யடிமா றிடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம். (உங)

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர்தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம். (உச)

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண்மழுவா

(கக) முகிழ்த்து-குவித்து. (உ0) பொன்றுவல்-இறப்பேன். சுரிகைவாள்-உடைவாள். (உக) நாட்டினுன்-நட்டான். (உஉ) வினை-ஊறிய. வண்டின்-வண்டைப்போல. முந்நீர்-கடல். (உங) சிறியாய்-அணுவுக்கணுவானவனே!

ஞழையாய் சரணம் முருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம். (உடு)

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளாக நினைந்து புரந்த ரண்மா
றெருளா தநடந் தெரிவித் தெனையா
ளருளாய் சரணம் மழகா சரணம். (உசு)

அயனத் தனைனப் படுமாடரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசே
னயனத் தவணு யகனே சரணம். (உஎ)

கதவெங் கரியின் னுரியாய் சரண
முதலந் தமிலா முதலே சரணென்
றதிர்பைங் கழனூ புரவண் டலறும்
பதபங் கயமுன்பு பணிந் தரசன். (உஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுமிப்படியேயிந்தத்திருநடம்யாருங்காண
நின்றருள்செய்யவேண்டுநிருமலமானவெள்ளி
மன்றவடியேன்வேண்டும்வரமிதுவென்றுதாழ்ந்தா
னன்றுதொட்டின்றுமெங்கோனந்நடநிலையாய்நின்றான். (உக)

மாறியாடினபடலம் முற்றிற்று.

ஆ படலம் - நூ-க்கு - திருவிருத்தம் - கசஅக.

இருபத்தைந்தாவது,

பழியஞ்சினபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈறிலான்செழியனன்புக்கெளியவனுகிமன்றுண்
மாறியாடியகூத்தென்சொல்வரம்பினதாமேகங்கை
யாறுசேர்சடையான்றனேரரும்பழியஞ்சித்தென்னன்
றேறலாமனத்தைத்தேற்றுந்திருவிளையாடல்சொல்வாம். (க)

(உஎ) கால்வயனத்தவ - நான்கு வசனங்களையுடையவனே. வசனம்-வேதம். சேனயனத்தவள்-மீனாட்சி. (உஅ) முதலந்தமிலா-ஆதியந்தமில்லாத. அலறும்-முழங்கும். (உக) மன்றவ - அம்பலத்தினையுடையாய். (க) ஈறிலான்-மிருத்துஞ்சயனன சிவபெருமான்.

இனையநாட்சிறிதுசெல்லவிராசசேகரன்றன்காதற்
றனையனுங்குலோத்துங்கற்குத்தன்னரசிருக்கைதல்கி
வினையெலாம்வெண்ணுஞானவெள்ளியம்பலத்துளாடுங்
கனைகழனிழலிற்பின்னிக்கலந்துபேரின்பமுற்றான். (உ)

குரவன்செங்கோல்கைக்கொண்டகுலோத்துங்கவழுதிசெங்க
ணரவங்கம்பூண்டகூடலாதிநாயகனேநித்தம்
பரவன்பின்வழிபாடாஞப்பத்திமைநியமம்பூண்டா
னிரவுஞ்சுங்கதுப்பினல்லாரீரையாயிரவருள்ளான். (ஊ)

கோச்சகக்கலிப்பா.

அப்பதினாயிரவர்க்குமொவ்வொருத்திக்கவ்வாரு
யொப்பரியவறுபதினாயிரங்குமரருளரவருட்
செப்பரியவல்லாண்மைச்சிங்கவிளவேறனையான்
வைப்பனையான்முதற்பிறந்தமைந்தன்பேரனந்தகுணன். (ச)

கலபயின்றுபரிநெடுந்தேர்கரிபயின்றுபலவகைவாள்
சிலபயின்றுவருகுமரர்திறநோக்கிமகிழ்வேந்த
னிலபயின்றகடலாடைநிலமகளையடலணிதோண்
மலபயின்றுகுளிர்தூங்கமகிழ்வித்துவாழ்நாள். (ஞ)

செய்யேந்துதிருப்புத்தூர்நின்றுமொருசெழுமறையோன்
பையேந்துமரவல்குன்மனைவியொடும்பானல்வாய்க்
கையேந்துகுழவியொடுங்கடம்புகுந்துமாதுலன்பான்
மையேந்துபொழின்மதுரைநகர்நோக்கிவருகின்றான். (சு)

வருவானுண்ணீர்வேட்டுவருவானிலவழிநிற்கும்
பெருவானந்தடவுமொருபேராலினீழலின்கீ
ழொருவாதபசுங்குழவியுடனிருத்திநீர்தேடித்
தருவான்போய்மீண்டுமனையிருக்குமிடந்தலைப்படுமுன். (எ)

இலத்தலையபழுமரத்தின்மிசைமுன்னுளைத்ததொரு
கொலத்தலையகூர்வாளிகோப்புண்டுகிடந்ததுகா
லலத்தலையவீழ்ந்தும்மைவினையுலப்பவாங்கிருந்த
வலத்தலையமானேக்கிவயிறுருவத்தைத்தன்றால். (அ)

(உ) கனை - முழங்குகின்ற. (ஊ) குரவன் - தந்தை. ஆனை - நீங்காத. (ச) வைப்பனையான் - புதையொருள் போல்பவன். (ஞ) அடல் - வெற்றி. (சு) செய்யேந்து - வயல்கள்சூழ்ந்த. பானல் - கருநெய்தல். கடம் - காடு. மாதுலன் - மாமன். மை - மேகம். (எ) ஒருவாத - விட்டுநீங்காத. தலைப்படுமுன் - எய்துமுன். (அ) பழுமரம் - ஆலமரம். கோப்புண்டு - கோக்கப்பட்டு. கால் - காற்று. உம்மை - முன்செய்த. வினை - கன்மம்.

அவ்வா றவ்வணங்கனையாளுயிரிழந்தாளவ்வேலைச்
செவ்வாளியேறிட்டசிலையுடையாளொருவேடன்
வெவ்வாளியேறனையான்வெயிற்கொதுங்குநிழறேடி
யவ்வாலநிழலெய்தியயனின்ருனிளைப்பாற. (கூ)

தண்ணீர்க்குப்போயாவிதலைப்பட்டமறையவனு
முண்ணீர்கைக்கொண்டுமீண்டொருங்கிருந்தகுழவியோடும்
புண்ணீர்வெள்ளத்துக்காருழ்ந்துயிரைப்புறங்கொடுத்த
பண்ணீரமழலைமொழிப்பார்ப்பனியைக்கண்ணுற்ருன். (கo)

அயில்போலுங்கணையேறுண்டவ்வழிபுண்ணீர்சோர
மயில்போலவுயிர்போக்கிக்கிடக்கின்ருண்மருங்கணைந்தென்
னுயிர்போல்வாயுனக்கிதுவென் னுற்றதென மத்தெறிதண்
டயிர்போலக்கலங்கியறிவழிந்தமனஞ்சாம்பிஞன். (கக)

இனையதோர்பெண்பழியையாரேற்ருரெனத்தேர்வா
னனையதோர்பழுமரத்தின்புறத்தொருசாரழல்காலு
முனையதோர்கணையோடுமுடக்கியகைச்சிலையேந்தி
வினையதோர்ந்தெதிர்நின்றவிறல்வேடன்றனைக்கண்டான். (கஉ)

கலிநீலத்துறை.

காப்பணிதாளன்வாளொடுவீக்கியகச்சாளன்
கூர்ப்பகழிக்கோலேறிடவில்லன்கொலைசெய்வா
னேற்பனகைகளெகொண்டிவ்விடைநின்ருனிவனேயென்
பார்ப்பனியைக்கொன்றின்னுயிருண்டுபழிபூண்டான். (கங)

என்னமதித்தேயேடாவேடாவென்னேழை
தன்னையதைத்தாய்நீயேயென்ருத்தழல்கால்கண்
மின்னலெயிற்றுக்கூற்றெனவல்வாய்விட்டார்த்து
மன்னவனுணைப்பாசமெறிந்துவலித்தேகும். (கச)

மாண்டவளைத்தன்வெங்கிடையிட்டான்மகவொக்கற்
ருண்டவனைத்தான்ருய்முலைவேட்டழுதன்சேயைக்

(கூ) ஆளிஏறு - ஆண்சிங்கம். (கo) ஆவி-நீரோடை. கால்-வாய்க்கால். புறங்கொடுத்த - வெளிவிடுத்த. (கக) அயில்போலும்-வேல்போன்ற. கணை-அம்பு. சாம்பிஞன். ஓய்ந்தான்-மூர்ச்சித்தானென்றபொருள். (கஉ) வினையதோர்ந்து-தன்றொழிலே எண்ணி. விறல்-வெற்றி. (கங) காப்பணிதாளன் - செருப்பணிந்த காலினையுடையவன். வீக்கிய-கட்டிய. (கச) ஏடா-அடே. என் ஏழைதன்னை-என் மனைவியை. கூற்றென-யமனேயொப்ப. ஆணைப்பாசம்-ஆணையாகிய கயிறு. எறிந்து-வீசி.

காண்டொறும்விம்மாக்கண்புனல்சோரக்கடிதேகா
வாண்டகைமாறன்கூடலணைந்தானளியன்ரான். (கஙி)

மட்டவிழ்தாரான்வாயின்மருங்கேவந்தெய்தா
வுட்கெளில்லாவேடனைமுன்விட்டெயிரன்ஞள்
சட்டகநேரேயிட்டெதிர்மாறன்றமர்கேட்பக்
கட்டழல்சிந்தாமுறையிதென்ரான்கையோச்சா. (கசு)

கோமுறைகோடாக்கொற்றவரேறேமுறையேயோ
தாமரையாள்வாழ்த்தண்கடிமார்பாமுறையேயோ
மாமறிவாளனைவழிவருமைந்தாமுறையேயோ
தீமைசெய்தாய்போற்செங்கைகுறைத்தாய்முறையேயோ. (கள)

பிறங்குங்கோலான்மாறமெகொற்றம்பெறுவேந்த
னுறங்கும்போதுந்தன்னருளாணையுலகெங்கு
மறங்குன்ருவாக்காப்பதையென்பவஃதியாதிம்
மறங்குன்ருதான்செய்கொலைகாவாவழியென்ரான். (கஅ)

வாயிலுளார்தமன்னவன்முன்போய்மன்னுநங்
கோயிலின்மாடோர்வேதியன்மாதைக்கொலைசெய்தா
னையினனென்ரோர்வேடனைமுன்விட்டவிந்தாளைத்
தாயினன்வந்திங்கிட்டயர்கின்ருன்றமியென்ரார். (கக)

இறைமகனஞ்சாயென்குடைநன்ருலென்காவ
லறமலிசெங்கோலஞ்சுபயந்தீர்த்தரசாளு
முறைமையுநன்ருன்மண்கலிமூழ்கமுயன்றேந்தும்
பொறைமையுநன்ருலென்றுபுலந்துபுறம்போந்தான். (உ0)

மீனதியனிற்குந்தன்மைதெரிந்தான்மெலிவுற்ருன்
சாதியின்மிக்காய்வந்ததனக்கென்றளர்கின்ரு
யோதுதியென்னக்காவலனேப்பார்த்துரைசான்ற
நீதியுளாய்கேளென்றுரைசெய்வானிகழ்செய்தி (உக)

(கஙி) வெந்நிடை - முதுகில். ஒக்கல்-இடையில். ஏகா-சென்று. (கசு) துகள்-குற்றம். சட்டகம்-உடலம். (கள) கோமுறை-இராச நீதி. (கஅ) மாறு-பகை. கொற்றம்-வெற்றி. (கக) கோயில்-அரசமாளிகை. அவிந்தாளை இறந்தவளை. தமி-தனியே. (உ0) அஞ்சுபயம்-தன்னுலுந் தனது பரிசனத்தாலும் பகைவராலும்சோரராலும் மிருகாதிகளாலும் உண்டாகும் அச்சம். கலி-துன்பம். புலத்து-வருந்தி. (உக) உரைசான்ற-உயர்ச்சிபிக்க.

இன்றிவளைக்கொண்டோர்வடநீழலிடைவிட்டுச்
சென்றுதணீர்கொண்டியான்வருமுன்னிச்சிலைவேடன்
கொன்றயனின்றனென்றுலையூட்டுங்கொலைவேல்போல்
வன்றிறன்மாறன்செவிதுழைவித்தான்மறையோனால். (உஉ)

அந்தணன்மாற்றந்தன்னையுமுட்கொண்டதுநோக்குஞ்
சந்தனவெற்பன்மறவனைநோக்கத்தாழ்ந்தன்னை
னெந்தைபிரானேநாயடியேனின்றெய்ப்பாற
வந்துபுகுந்தேனந்தமரத்தின்மருங்கோர்சார். (உங)

ஐயநானுங்கொன்றவனல்லேன்கொன்றுரைக்
கையேன்வேறுங்கண்டிலனென்றுனிவளாகத்
தெய்யேறுண்டவாறெவனென்றுரெதிர்நின்றுர்
மெய்யேயையானறியேனிவ்வினைவென்றான். (உச)

இக்கொலைசெய்தான்யானலனென்னுதுளனென்ன
தக்கவனேயோதறுகண்மறவனுரைமெய்யோ
சிக்கவொறுத்தாலல்லதையுண்மைசெப்பானென்
றுக்கவுரைத்தார்மந்திரருள்ளார்பிறரெல்லாம். (உரு)

மன்னன்றனுமற்றதுசெய்மின்னெனமள்ளர்
பின்னந்தண்டஞ்செய்தனர்கேட்கப்பிழையில்லான்
முன்னஞ்சொன்னசொற்பெயராலுய்மொழியாநின்
றின்னந்தீரத்தேருமினென்றுனென்செய்வான். (உசு)

ஆற்றவொறுக்குந்தண்டமுமஞ்சானறைகின்ற
கூற்றமுமொன்றேகொன்றருறிப்புமுகந்தோற்றான்
மாற்றவரேயோமாவோபுள்ளோவழிவந்த
கோற்றொடியைக்கொன்றென்பெறவல்லான்கொலைசெய்வான். ()

கைதவனுமிக்கானவனேயோபிறரேயோ
செய்தவர்யாரேயிக்கொலைவேட்டஞ்செய்தோர்மா
வெய்தவிலக்கிற்றப்பியகோறுனேறுண்டிம்
மைதவழ்கண்ணுன்மாய்ந்தனளேயோவறியேனால். (உஅ)

(உஉ) வடம்-ஆலமரம். (உங) சந்தனவெற்பன்-சந்தனமரங்களையுடைய பொதிகைமலைக்குரிய பாண்டியன். மறவன்-வேடன்-(உச) கையேன்-இழிகுலத்தவனுகிய யான். (உரு) தறுகண்-அஞ்சாமை. (உசு) மள்ளர்-படைவீரர். (உஎ) கோற்றொடி-அழகியவளையலணிந்த கரத்தினையுடையாள். (உஅ) கானவன்-வேடன்.

என்னுமுன்னித்தென்னவனின்னமிதுமுன்னூ
றன்னுலாயத்தக்கதையென்ருன்றகவிற்றன்
னன்னுரந்நூலாய்ந்திதுநூலாலமையாதான்
மன்னுதெய்வத்தாலேதேறும்வழியென்ருர். (உக)

வேந்தர்கள்சிங்கம்வேதியனேப்பார்த்திதீர
வாய்ந்தன துள்ளக்கவலையொழிப்பேனஞ்சேனின்
னேந்திழையீமக்கடனிறுவிப்போதென்றேவித்
தேந்துணர்வேங்கைத்தார்மறவோனேச்சிறைசெய்தான். (ஈ0)

மின்னனேயாடன்செய்கடன்முற்றுமீண்டோனேத்
தன்னமர்கோயிற்கடைவயின்வைத்துத்தானேகிக்
கொன்னவில்வேலான்றங்கள்குடிக்கோர்குலதெய்வ
மென்னவிருந்தாரடிகள்பணிந்தானிதுகூறும். (ஊக)

கோசிசகக்கலிப்பா.

மன்ருமெணியேயிம்மறவன்ருன்பார்ப்பனியைக்
கொன்ருனேபிறர்பிறிதாற்கொன்றதோவிதுவறநூ
லொன்ருலுமளப்பரிதாக்கிடந்ததாலுன்னருளா
லென்ருழ்வுகெடத்தேற்ருயென்றிரந்தானவ்வேலை. (ஈஉ)

திருநகரின்புறம்பொருசார்குலவணிகத்தெருவின்க
ணெருமனேயின்மணமுளதங்கந்தணனேடொருங்குசீ
வருதியுனதுளந்தேறுமாற்றமெலாந்தேற்றுதிமென்
றிருவிசும்பினகடுகிழித்தெழுந்ததாலொருவாக்கு. (ஈஈ)

திருவாக்குச்செவிமடுத்துச்செழியன்றன்புறங்கடையிற்
பெருவாக்குமறையவனேடொருங்கெய்திப்பெரும்பகல்போய்க்
கருவாக்குமருண்மாலைக்கங்குல்வாய்த்தன்னேவேற்
றுருவாக்கிக்கடிமனேபோயொருசிறைபுக்கினிதிருந்தான். (ஈசு)

அன்றிறைவனருளாலங்கவர்கேட்கவம்மனேயின்
மன்றன்மகன்றனக்களந்தநாளுலப்பமறலியிருட்

(உக) தகவில்தம்அண்ணர் - தகுதியில் தமக்குத்தாமே யொப்பா யுள்ளார். வழி-நியாயம். (ஈ0) ஈமம் - சுடுகாடு. வேங்கை - குறிஞ்சி நிலமரம். துணர் - கொத்து. (ஊக) கடைவயின் - முன்வாசலில். (ஊஉ) அளப்பரிது - அறிதற்கரிது. (ஊஈ) குலம்-சிரேட்டம். தேறு-தெளியாத. விசும்பு - ஆகாயம். அகடு-நடு.(ஈசு)பெருவாக்கு-உயர்ந்தவாக்கு. அது வேதவாக்கு. (ஈடு)மன்றன்மகன்-மணமகன். அளந்தநாள்-ஏற்பட்டகாலம். உலப்ப-ஒழிய. இருட்குன்றம்-இருண்மலை.

குன்றமிரண்டெனவிடித்தகொடும்பாசக்கையினர்வாய்
மென்றுவருஞ்சினத்தவரிலொருவனிதுவினவுமால். (நஙி)

இன்றேயிங்கிவனுயிரைத்தருதிரெனுமிரும்பகட்டுக்
குன்றேறுங்கோனுரையாற்கொள்வதெவன்பிணியுடம்பி
லொன்றேனுமிலலொருகாரணமின்றியுயிர்கொள்வ
தன்றேயென்செய்துமெனமற்றவனீதறைகிற்பான். (நசு)

ஆற்றலேறுண்டகணையருகொதுங்கும்பார்ப்பனியைக்
காற்றல்வீழ்த்தெவ்வாறுகவர்ந்தேமப்படியிந்தச்
சாற்றரவாரத்திற்றும்பறுத்துப்புறநின்ற
வீற்றுவைவெருளவிடித்திவருவிகவர்கென்றான். (நஎ)

அந்தமொழிகேட்டரசனருமறையோய்கேட்டனையோ
விந்தமொழியெனப்பனவனிவனிவ்வாறிறந்தாலென்
பைந்தொடியாளிறந்ததுமப்படியேயென்மனக்கவலை
சிந்தவிதுகாண்பேனென்றொருங்கிருந்தான்றென்னனெடும். (நஅ)

ஒட்டியபல்கிளைதுவன்றியொல்லொலிமங்கலந்தொடங்கக்
கொட்டியபல்லியமுழங்கக்குழுமியவோசையின்வெருண்டு
கட்டியதாம்பிறப்புனிற்றுக்கற்றொவ்வொன்றெதிர்ந்தோடி
முட்டியதான்மணமகனேமுடிந்ததாலவலுவி. (நகக)

மணமகனேபிணமகனுய்மணப்பறையேபிணப்பறையா
யணியிழையார்வாழ்த்தொலிபோயழுகையொலியாய்க்கழியக்
கணமதனிற்பிறந்திறுமிக்காயத்தின்வரும்பயனே
யுணர்வுடையார்பெறுவருணர்வொன்றுமிலார்க்கொன்றுமிலை. (சO)

கண்டானந்தணனென்னகாரியஞ்செய்தேனெனத்தன்
வண்டார்பூங்குழன்மனைவிமாட்சியினுங்கழிதுன்பங்
கொண்டான்மற்றவளெடுந்தன்கோயில்புகுந்தலர்வேப்பந்
தண்டாரானமைச்சர்க்கும்பிறர்க்குமிதுசாற்றினனன். (சக)

(நசு) இரும்பகட்டு-பெரிய கடாவாகனத்தினையுடைய.(நஎ) ஆற்றல்-வழியிலுள்ள ஆலமரத்தில். சாற்றரவாரம்-கலியாணமுழக்கம். தாம்பறுத்து - கயிறறுத்து. (நஅ) பனவன் - பார்ப்பான். பைந்தொடியாள் - பசியவளையலணிந்த மனைவி. ஒருங்கு-உடன். (நகக) ஒட்டிய - நெருங்கிய. புனிற்றுக்கற்று-இளமைவாய்ந்த கன்றினையுடையபசு. (சO) கழிய-மாறிநிற்க. (சக) மாட்சியினும் - மாண்டனிலும்.

மறையவனேயின்னுமொருமண்முடித்துக்கோடியென
நிறையவரும்பொருளீந்துநீபோதியெனவிடுத்துச்
சிறையழுவத்திடைக்கிடந்தசெடித்தலையவிடிக்குரல
கறையுடல்வேடனைத்தொடுத்தகால்யாப்புக்கழல்வித்தது. (சஉ)

தெளியாதேயாமிழைத்தநீத்தண்டம்பொறுத்தியென
வினியாவின்னருள்சுரந்துவேண்டுவனகனிகல்கி
யளியாளுமனத்தரசனவனேயவனிடைசெலுத்திக்
களியானேவிழவெய்தகளியனேப்போய்ப்பணிவான. (சஊ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.


ஆதரம்பெருகப்பாவியேன்பொருட்டெம் மடிகணீரரும்பழிய ஞசு,நாதரர்யிருந்தீரென்தையார்க்குண்டேநான்செயத்தக்கதொன் றென்னுக், காதலிற்புகழ்ந்துபன்முறைபழிசகிக்கரையின்மாபூசனை நிறப்பித், தேதமதகற்றியுலகினுக் குயிராயிருந்தன னிறைகுலோத துங்கன். (சஎ)

பழியஞ்சினபடலம் முற்றிற்று.

ஆ படலம் - நூசு-க்கு-திருவிருத்தம் - கஞ்சுகூ.

இருபத்தாறவது,

மாபாதகந்தீர்த்தபடலம்.



கலிவிருத்தம்.

வேத நாயகன் வெம்பழி யஞ்சிய
நாத னுனை நலனிது நல்கிய
தாதை யைக்கொலை செய்த தனயன்மர்
பாத கந்தனைத் தீர்த்ததமை பாடுவாம். (க)

வீரைசெய் மாலைக் குலோத்துங்க மீனவன்
றிரைசெய் நீர்நிலஞ் செங்கோல் செலத்தனி
யரசுசெய் யுமந் நாளி லவந்தியென்
றுரைசெய் மாநக ராளுரு பூசுரன். (உ)

(சஉ) கோடி-கொள்வாயாக. சிறையழுவம் -சிறையாகிய கொடி யநிலம். செடி-மூடைநாற்றம். கால்யாப்பு - காற்கட்டு. விலங்கு மாம். (சஎ) ஆதரம் - அன்பு. ஏதம் - குற்றம். (உ) பூசுரன் -மறை யோன்.

வெருவுங் காய்சின மாறிய வேலியன்
மருவுங் காதன் மனையெனும் பேரினு
டிருவுங் காவினற் தேவியு மண்புனை
யுருவுங் காமுறு மொப்பில் வனப்பினுள். (ங)

படியி லோவியப் பாவையொப் பாகிய
வடிவி னுளவள் பான்மக னென்றொரு
கொடிய பாவி பிறந்து கொலைமுதற்
கடிய பாவக் கலன்போல் வளருநாள். (ச)

கோடி கோடி யஞ்சிலை கோட்டியே
கோடி கோடி கொடுங்கணை பூட்டியே
கோடி கோடி விகாரமுங் கூட்டியே
கோடி கோடி யனங்கரெய் தார்கொலோ. (ஞ)

இளமைச் செவ்வீய யாக்கையன் மையல்கூர்
வளமைக் காமமும் வல்வினை யுந்நிறைத்
தூவிட் டூர்த்தலிற் றன்னை வயிற்றிடை
வீவெவித் தீன்றவ டன்னை விரும்பினுன். (ட)

அன்னை யென்னு மழிதகை யாளகத்
தின்னு யிர்த்துணை யும்மனக் காவலாய்
மன்னு நாண மடமுத லுல்வருந்
தன்னை நீங்கலிற் ருனுமொத் தாளரோ. (ண)

இன்ப மோசிறி தாகுமி தில்வருந்
துன்ப மோகரை யில்லாத் தொகுகட
லென்ப தாரு மிவனு லறியவிவ்
வன்பதான வினையால் வருந்துவான். (அ)

மையனுக மதியை விழுங்கவக்
கையனுயைக் கலந்தொழு குஞ்செய
லெயன் ருன்குறிப் பாற்கண் டயற்செவிக்
குய்யலா வண்ண முள்ளத் தடக்கினுன். (கூ)

(ங) மண்புனையுருவு-மண்ணுற்செய்த வடிவம். காமுறும்-இச்சிக்கும். (ச) கொலைமுதற்கடியபாவம்-கொலைகளவுகள்காமம்பொய் யாதியபஞ்சமகாபாதகங்கள். (ஞ) விகாரம்-சுப்பிரயோக.விப்பிரயோக-சோக, மோகமரணாதிய. (ட) நிறைத்தூவி-அமைதியாகியபாசம். விட்டு-நீக்கி. (ண) அழிதகையாள்-அழிந்ததருதியினையுடையவள். தகைகற்பு. (அ) தொகுகடல்-தோண்டியகடல். (கூ) மையல்நாகம்-காமமயக்கமாகிய பாம்பு. மதியை-புத்தியை. ஆய்-அன்னை.

வேற்றேர் வைகல் வெளிப்படக் கண்டறஞ்
சாற்று நாவினன் வேறொன்றுஞ் சாற்றிலன்
சீற்ற மேல்கொடு செல்வன்கொல் வேணனே
வேற்றெழுந்தன னீன்ரூள் விலக்குவாள். (கo)

தாயி லின்ப நுகர்ந்தனே தந்தையைக்
காயி லென்பெறு வாயெனக் காமுகர்க்
காயி லன்னேயி லப்பனி லென்பய
னேயி லின்னரு ளென்னற மென்னென்றான் (கக)

மண்டொடுங்கரு விப்படை வண்கையிற்
கொண்டு தாதை குரவனென் றேர்கிலான்
றுண்ட மாகத துணித்தானுய் வாய்மூகந்
துண்டகாம நறவா லுணர்வி லான். (கஉ)

மைக்கருங் கருஞல் வாய்க் கொன்ற தாதைகருத்
தக்கதீத்தவி சிட்டன்னே தன்னெடுங
கைக்கடுங்கு பொருளொடுங் கன்னெறி
புக்க னன்புடை சூழ்ந்தார் புளிறரே. (கங)

எய்யுங் கோறொடு வில்லரிடிக்கு நேர்
செய்யுஞ் சொல்லினர் செல்லலே நில்லெனக
கையிலுள்ள வுடுகைக கொண்டு காரிகைத
தையறன் னேயுந்தாங் கொடுபோயினர். (கச)

சென்று சேணிடைச சிக்கற வாழலா
மென்ற வெண்ணை மொன்றெய்திய வண்ணமொன்
றொன்று நாமெண்ணத் தெய்வமொன் றெண்ணிய
தென்ற வாததை யிவனிடைப் பட்டதால். (கஞ)

தாதைதன்றணையற்கினியார்தூணை
மாதர்யாயைமறவர்கைக்கொள்ளவிப்
போதுதான்றூணையென்பவன் போன்றுமா
பாதகத்துருவாய்வந்துபற்றினன். (கசு)

(கக) நேயில் - அன்பினுல். நே-அன்பு (கங) தீத்தவிசிட்டு-தீயா கியதவிசில் வைத்து. தவிசு - ஆசனம். கல்நெறி - மலைவழி. (கச) கோல் - அம்பு. காரிகை-அழகினையுடைய. (கஞ) சேணிடை-தூரத் தில். சிக்கற - மயக்கமின்றி. (கசு) மாதர் - அழகு.

ஆவவென்னு மழுஞ்சிவ தாவெனும்
பாவம்பாவம் பழியிது வோவைய
கோவெனுங்கை குலத்தெறி யுங்கிழற்
பாபைபோல விடாதுபின் பற்றுமால். (கள)

மேற்படி - வேறு.

கல்லதீர்த்தஞ்சிவதலநலோர்பக்கமுஞ்
செல்லவொட்டாதரன்சீர்த்திநாமஞ்செவிப்
புல்லவொட்டாதுளம்புகுதவொட்டாதுநாச
சொல்லவொட்டாதுகண்டியிலவொட்டாததோ. (கஅ)

சுற்றுமுன்பின்புறச்சூழ்ந்துதன்கொடுக்கிறப்
பற்றிநின்றீர்க்குமாபாதகத்தாலலர்
தெற்றினிச்செய்வதென்றுற்றலாதிடருழந்
துற்றுவேறுலகெலாமச்சமுற்றுழலுமால். (கக)

உறுகணேயாற்றநாளுற்றுழன்றுலகெலா
மறுகவேதிரியுமாபாதகன்வலியெலாஞ்
சிறுகுவான்சிவனருட்செயலினிப்பாதக
குறுகுநாள்குறுகுநாள்கூடலேக்குறுகினன். (உ0)

அறுசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அழிதகன்குறுகுவான்முன்னங்கயற்கண்ணிதந்தக்
குழையிருகாதுங்கோத்துக்கொலைகெழுபுலிப்பற்றுவி
நுழைமயிர்நெடுநாண்பின்னனுன்பிடரிலேப்பப்பூண்டோர்
பழிதகையாதவேடப்பாவையாய்ப்படிவங்கொள்ள. (உக)

கொலையிரும்பழிக்கன்றஞ்சுங்கூடலெம்பெருமான்கொன்றை
நிலையிருங்குஞ்சிவேங்கைமெல்லிணர்க்கண்ணிவேய்ந்து
கலையிருமருப்பிற்கோடிக்காதளவோடுந்தாடிச
சிலையிருந்தடக்கைவேடத்திருவுருக்கொண்டுதோன்றி. (உஉ)

கொண்டல்கண்படுக்குமாடக்கோபுரமருங்கிற்போந்தின்
கண்டகக்கருக்குவாயகுரைக்குநாய்கதுவிக்காப்பப்

(கள) ஆவ - ஐயோ. சிவதா - அபயமொழி. (கக) கொடுக்கு - முன்னுனே. (உ0) குறுகுநாள்குறுகுநாள் - குறையுங்காலஞ்சமீபித்தவுடனே. (உக) அழிதகன் - கெட்டதகுதியினையுடையவன் - தந்தக்குழை. யானைத்தந்தத்தாலானகாதணி. மயிர்நெடுநாண்-மயிரானான நெடியகயிறு. (உஉ) தாடி - முகவாய் உரோமம்.

புண்டலேவாளிவில்லோர்புறங்கிடந்திரை ப்பத்திங்கட்
டெண்டவாணுதலாளோடுஞ்சூதுபோராடல்செய்வான். (உங)

வெருவருவேழமுண்டவெள்ளில்போல்வறியஞெகிப்
பருவரலுடனெங்கெய்தும்பாதகன்வரவுநோக்கி
யொருவருமுள்ளத்தாலுமுண்ணருங்கொடியபாவி
யுருவதுகாண்டியென்னுமாதரைநோக்கிக்கூறும். (உச)

அணங்குநோயெவர்க்குஞ்செய்யுமனங்களுலலைப்புண்டாவி
யுணங்கினுருள்ளஞ்செல்லுமிடனறிந்தோடிச்செல்லா
குணங்குலனெழுக்கங்குன்றல்கொலைபழிபாவம்பாரா
வினங்குமின்னுயிர்க்குமாங்கேயிறுதிவந்துறுவதெண்ணு. (உடு)

கள்ளுண்டல்காமமென்பகருத்தறைபோக்குச்செய்வ
தெள்ளுண்டகாமம்போலவெண்ணினிற்காணிற்கேட்கிற்
றள்ளுண்டவிடத்தினஞ்சந்தலைக்கொண்டாலென்னவாங்கே
யுள்ளுண்டவுணர்வுபோக்காதுண்டபோதழிக்குங்கள்ளுண். (உசு)

காமமேகொலைகட்கெல்லாங்காரணங்கண்ணோடாத
காமமேகளவுக்கெல்லாங்காரணங்கூற்றமஞ்சுங்
காமமேகள்ளுண்டற்குங்காரணமாதலாலே
காமமேநரகபூமிகாணியாக்கொடுப்பதென்றான். (உஎ)

கொலைப்பழிகோட்பட்டாங்கேகுறுகியான்முகங்கண்டேட
வலைப்படருழந்துசாம்பியழிவதென்பார்ப்பானென்னக்
கலைப்படுதிங்கள்வேணிக்கானவனருட்கணேக்கந்
தலைப்படசிறிதுபாவந்தணிந்துதன்னறிவுதோன்ற. (உஅ)

முற்பகலிழைத்தபாவமுதிர்ச்சியாற்பிறந்துதந்தை
தற்பகனனவாறுந்தாதையையதைத்தவாறும்
பிற்பகலந்தப்பாவம்பிடித்தலைத்தெங்குந்தீரா
திப்பதிபுகுந்தவாறுமெடுத்துரைத்திரங்கிநின்றான். (உக)

(உங) போந்து - பனை. கண்டகம்-முள். (உச) பருவரல்-துன்பம். வேழம் - யானை. வெள்ளில் - விளாம்பழம். (உடு) அணங்கு நோய் - பெண்ணேய். (உசு) அறைபோக்குச்செய்வ. முழையாகச் செய்வ. (உஅ) கொலைப்பழி. பிரமகத்தி. கோட்பட்டு. கொள்ளப்பட்டு. கானவன் - வேடனாகியசுவாமி. ஏடா-அடே. (உக) தந்தை தற்பகன். பிதாவின்சயனத்தையடைந்தவன்.

மறப்பெரும்படிவங்கொண்மெனத்தருள்சுரந்துநின்ற
வறப்பெருங்கருணைமூர்த்தியழதகையவனைப்பார்த்தித்
திறப்பழியாங்குச்சென்றுமீங்கன்றித்தீராதென்றக்
கறைப்பழிதீரும்வண்ணங்கருதியோருறுதிகூறும். (கூ0)

வருதிநின்னுமஞ்சொன்னேர்வருக்கமுரகில்வீழக்
கருதிசெய்தபாவங்கழிப்பவரெவர்யாநோக்கந்
தருதலாலெளிதிற்றீரச்சாற்றுதுமையங்கையேற்
ரொருபொழுதண்டியீசனுறுதவரேவல்செய்தி. (கூக)

செங்கதிர்க்கடவுள்வானந்தீண்டுமுன்னெழுந்துதீந்தண்
பைங்கதிரறுகுகொய்துபசுக்களையருத்தியார்வம்
பொங்கமுப்போதுங்கோயிற்புறத்தொட்டித்தீர்த்தமாடிச்
சங்கரன்றனைநூற்றெட்டுமெய்வலஞ்சாரச்செய்தி. (கூஉ)

இத்தவநெறியினின்றுலிப்பழிகழியுமென்னுச்
சித்தவன் புடையவேடத்திருவுருக்கொண்டகொன்றைக்
கொத்தவனுரைத்தான்கேட்டுக்கொடிச்சியாயிருந்தவம்மை
மத்தவன்கரித்தோல்போர்த்தமறவனேவினவுகின்றாள். (கூங)

ஐயவிக்கொடியோன்செய்தபாவத்துக்களவில்காலம்
வெய்யநாலேழுகோடிநரகிடைவீழ்ந்தானேனு
மூய்வகையிலாதபாவியிவனுக்கென்னுய்யுந்தேற்றஞ்
செய்வகையென்றுகேட்பச்செங்கண்மால்விடையோன்செப்பும். ()

அடுபழியஞ்சாநீசராயினுநினைக்கினச்சம்
படுபழியஞ்சான்செய்தபாதகத்தொடக்குண்டெங்கும்
விடுவதையின்றிவேறுகாலகணுமின்றிவீயக்
கடவனைக்காப்பதன்றேகாப்பென்றன்கருணைமூர்த்தி. (கூஙி)

நெய்தற்போதனையவுண்கணேரிழைநீயாதொன்று
செய்தற்குஞ்செய்யாமைக்கும்வேரொன்றுசெயற்குமாற்றன்
மெய்தக்ககருணைவள்ளல்வேண்டினெவ்வினைஞரேனு
மூய்தக்கோராதல்செய்கையுன்னருள்விளையாட்டன்றே (கூசு)

(கூ0)கறை-குற்றம். (கூக) வருக்கம்-மரபு. தவர்-தவமுடையோர். (கூஉ)புறத்தொட்டி-வெளித்தொட்டி. முப்போது-காலையுச்சிமாலை. (கூங) கொடிச்சி-வேடமாது. (கூஙி) களகண்-ஆதாரம் (கூசு)நெய்தற்போது-கருங்குவளைப்பூ.

என்றகமகிழ்ச்சிபொங்கவியம்பிஞளியம்பலோடுங்
குன்றகநாட்டவேடக்குழகனுமறைந்துவெள்ளி
மன்றகநிறைந்தான்மேகமறைந்திடமறைந்துசெல்லு
மின்றகவிடாதுபின்போம்விளங்கிழைமடந்தையோடும். (ரூஎ)

ஆதாயியுங்கண்டாளுவற்புதமடைந்துகூட
ஞதஞர்நவின்றவாற்ரூனன்னெறிவிரதச்செய்கை
மாதவவொழுக்கந்தாங்கிவருமுறைமதியமூன்றிற்
பாதகங்கழிந்துதெய்வப்பார்ப்பனவடிவமாளுன். (ரூஅ)

சொற்பதங்கடந்தவெந்தைசுந்தரநாதன்ரூளிற்
பற்பலவடசொன்மாலபத்தியிற்ரெடுத்துச்சாத்தித்
தற்பரவறிவானந்தத்தனியுருவுடையசோதி
பொற்பதமருங்கிற்புக்கான்புண்ணியமறையோனம்ம. (ரூக)

அன்னையைப்புணர்ந்துதாதைகுரவனுமந்தணாளன்
றன்னையுங்கொன்றபாவந்தணித்துவீடளித்தென்ரூற்
பின்னைநீரிழிநோய்குட்டம்பெருவயிறீளைவெப்பென்
றின்னநோய்தீர்க்குந்தீர்த்தமென்பதோவிதற்குமேன்மை. (சஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அழிந்தவேதியன்மாபாதகந்தீர்த்ததறிந்துவேந்தமைச்சரூருள்
ளா, ரொழிந்தபாருள்ளார்வானுளார்வியப்பமுற்றுநல் லுரையுணர்
வெல்லாங், கழிந்தபேரருளிக்கயவன்மேல்வைத்தகாரணம்யாதெ
னக்கண்ணீர், வழிந்துநான்மாடக்கூடலையனேவழுத்திஞர்மகிழ்ச
சியுட்டிளைத்தார். (சக)

மாபாதகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ரூஞ - க்கு - திருவிருத்தம் - கருஎச.

இருபத்தேழாவது,

அங்கம்வெட்டினபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேதகந்தரத்துமுக்கண்வேதியன்மறையோன்செய்த
பாதகந்தவிர்த்தவாறுபகர்ந்தனம்விஞ்சையீந்த

(ரூஎ) மின்தக-மின்னலையொப்ப. (ரூஅ) ஆதாயி - மாபாதகன். (ரூக) சொற்பதம்-சொல்லும்பொருளும். (சஅ) தாதைகுரவனும் - பிதாவும் ஆசாரியனுமான. (சக) கயவன்மேல்-இழிஞன்மேல். (க) கந்தரம்-கழுத்து.

போதகண்மனைக்குத்தீங்குபுந்திமுன்னுகச்செய்த
சாதகன்றனைப்போராற்றிதண்டித்ததண்டஞ்சொல்வாம். (க)

கூர்த்தவெண்கோட்டியானைக்குலோத்துங்கவழுதிஞாலங
காத்தரசளிக்குநாளிற்கடிமதிலுடுத்தகூடன்
மாத்தனிநகருள்வந்துமறுபுலத்தவனையாக்கை
மூத்தவனெனுவன்வைகிமுனையவாள்பயிற்றிவாழ்வான். (உ)

வாள்வினைக்குரவனன்னவல்லமண்விடுத்தவேழந்
தோள்வினைவலியாலட்டசுந்தரவிடங்கன்றன்னை
யாள்வினையன்புந்தானும்வைகலுமடைந்துதாழ்ந்து
மூள்வினைவலியையெல்லுமுதறிவுடையனம்ம. (ங)

கைவினைமறவாள்விஞ்சைக்காவலனவனைத்தாழ்ந்து
தெவ்வினைவெல்வான்கற்குஞ்சிங்கவேறனையார்தம்மு
ளெய்வினையுணராப்பாவிசித்தனென்றொருவனுள்ளா
னவ்வினைநிரம்பக்கற்றனைகலுழ்வலியாலன்னன். (ச)

மானவாள்விஞ்சையாலேதனைநன்குமதிக்கத்தக்க
தானதோர்செருக்கினுற்றன்னுசிரியர்க்குமாறுய்த்
தானுமோர்விஞ்சைக்கூடஞ்சமைத்துவாள்பலருங்கற்க
வூனுலாம்படைவல்லானிலூதியமிதப்பக்கொள்வான். (ஞ)

ஒருத்தனேயிருவர்வாளின்விருத்தியுமொருங்குகொள்ளு
கருத்தனுய்விருத்தனூரிற்கழிவதுகருதியன்னன்
வருத்துவாளிலையர்தன்பால்வரமனந்திரித்துநாளும்
விருத்தமேசெய்வான்முயைவிரும்பிஞற்கிளையோனன்னன். (சு)

தொடத்தொடப்பொறுக்குந்திண்மைத்தொன்னிலமனையானில்லா
விடத்தவன்றேவிபாற்போயிடனுண்டேயிடனுண்டேயென்
றுடைத்துடைத்தஞ்சாதென்றுங்கேட்டுக்கேட்டகல்வானுக
கடைத்தொழிற்பாவையன்னநங்கைவாளாதிருந்தாள். (எ)

(க) போதகன்-ஆசிரியன். புந்திமுன்னுக-மனப்பூர்வமாக. சாதகன்-மாணவன். (உ) மறுபுலத்தவன்-வேற்றூரான். (ங) ஆள்வினை-ஆளும்வினை அது சிவத்தொண்டு. மூள்வினை-மூளும்வினை. மூளுதல் அதிகரித்தல். அதுஆகாமியவினை. (ச) கைவினை-கைத்தொழில். காவலன்-தலைவன். தெவ்வினை-பகையை. (ஞ) படைவல்லான்-வாளாசிரியன். (சு) விருத்தி-ஊதியம். திரித்து-மாறுபடுத்தி. விருத்தம்-வேறுபாடு. பாவை-பிரதிமை.

பின்னொருபகல்போய்ச்செங்கைபிடித்தனன்வலிப்பத்தள்ளி
வன்னிலேக்கதவுநூக்கித்தாழ்க்கோல்வலித்துமாண்ட
தன்னிலேக்காப்புச்செய்தாடனிமனக்காவல்பூண்டா
ளந்நிலேப்பழித்தநீயோனணங்கத்தீவெதுப்பப்போனன். (அ)

அறங்கடைநின்றருள்ளுமாற்றவுங்கடையனுகிப்
புறங்கடைநின்றன்செய்தபுலேமைநன்பதிக்குந்தேற்றண்
மறந்தவிர்கற்பினுடன்மனம்பொதிந்துயிர்நடோறு
நிறைந்தநான்மாடக்கூடனிமலனேநினேந்துநொந்தாள். (கூ)

தாதகநிறைந்தகொன்றைச்சடையன்வன்புறம்புசெய்த
பாதகமறுக்குங்கூடற்பகவனெவ்வுயிர்க்குந்தானே
போதகளுகித்தேற்றும்புண்ணியன்புலேஞன்செய்த
தீதகமுணர்ந்ததண்டஞ்செய்வதற்குள்ளநங்கொண்டான். (கo)

கோளுடைக்குரவனேபோற்சித்தனேக்குறுகிச்சித்தா
காலேயாசியுஞ்சாலக்கழியமூப்படைந்தயாமும்
வாளமாடிநந்தம்வலிகளுமளந்தகாண்டு
நாலேவாவருதுநாமுநகர்ப்புறத்தொருசாரென்றான். (கக)

நாதனுங்குரவன்கூறநன்றெனவுங்ஙநாலாம்
பாதகனதற்குநேர்ந்தான்படைக்கலக்குரவன்மீண்டு
போதருமளவில்லையம்புதையிருள்வெள்ளத்தாழ
வாதவன்வையமுந்நீர்வெள்ளத்தளாழ்ந்ததம்ம. (கஉ)

அசினன்குரவர்க்கின்னுவாற்றிலேன்பாவம்போல
மாசிருடணிந்தகங்குல்வலிகெடவடிவாள்விஞ்சைத்
தேசிகலேருவனன்னுன்றிணியுடல்சிதைப்பத்தீட்டுங்
காய்சினவாள்போற்கீழைக்கல்லிடைமூளேத்தான்வெய்யோன். ()

சண்றியைக்கொன்றுதின்றேருயசுணேக்கஞ்சும்
வன்றிறலரிமாவூர்த்தெய்வதம்வழிபட்டேகுதி
வென்றியாள்பரவிக்கச்சுவீக்கிவாள்பலகையேந்திச்
சென்றுவாளுழவன்சொன்னசெருக்களங்குறுகினனே. (கச)

மதுகைவாளமர்க்குநென்னல்வந்தறைகூவிப்போன
முதுகேம்புலியேறன்னமுடங்குடற்குரவன்றனே

(அ) நூக்கி-தாழிட்டு. (கூ) அறங்கடை - பாவம். மறந்தவிர்கற்பு-பாவமற்றகற்பு. அதி அறக்கற்பு. (கo) புறம்பு-அயல்நாடு. பகவன்-ஆறுகுணங்களோ டுடையவன். ஆறுகுணங்களாவன. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம், என்பன. (கஉ) நாலாம் பாதகம்-காமம். (கஙு) ஆசு - குற்றம். (கச) அரிமான் - சிங்கம்.

மதிர்கழல்வீக்கிக்கச்சுமசைத்துவெண்ணீறுஞ்சாத்திக்
கதிர்கொள்வாள்பலகைதாங்கிக்கயவனுக்கெதிரேவந்தான். (கஞ)

மடங்கலேறென்றும்பைங்கணரியொன்றுமலைந்தாலென்ன
முடங்கல்வான்றிங்களொன்றுமுக்கணுநான்குதோளும்
விடங்கலுழ்மிடறுந்தோற்றுவென்றிவாள்விஞ்சைவேந்து
மடங்கலன்றனுநேரிட்டாடமராடல்செய்வார். (கசு)

எதிர்ப்பர்பின்பறிவர்நேர்போயெழுந்துவானேறுபோல
வதிர்ப்பர்கேடகத்தட்டாழ்வுற்றடங்குவர்மூளப்பர்வாளை
விதிர்ப்பர்சாரிகைபோய்வீசிவெட்டுவர்விலக்கிநீள்வர்
கொதிப்பர்போய்நகைப்பராண்மைகூறுவர்மாறிநேர்வர். (கஎ)

வெந்நிலவார்போற்போவர்வட்டித்துவிளித்துமீள்வர்
கொன்னிலவாண்மார்பேற்பர்குறிவழிபிழைத்துநிற்ப
ரிந்நிலையாலங்கன்னலெல்லாநின்றுடல்செய்தா
ரந்நிலையுபோர்காண்பானேவருங்கேட்கவையன். (கஅ)

சுரத்தியைநினைத்தநெஞ்சைக்குறித்துரைநாவைத்தொட்ட
கரத்தினைப்பார்த்தகண்ணைக்காத்தனைகோடியென்றென்
றுரைத்துரைத்தவற்றுக்கெல்லாமுறுமுறைதண்டஞ்செய்து
சிரத்தினைத்தடிந்துவீட்டித்திருவருமறைந்தநின்றான். (ககூ)

போர்கெழுகளங்கண்டாருட்பொருபடைக்கேள்விச்செல்வர்
வார்கெழுகழற்காலானைக்கண்டிலர்மனம்பிற்றேடி
யேர்கெழுகற்பினாளையெங்குற்றானுரையெனன்னைக்
கூர்கெழுவடிவேற்கண்ணுள்போயினர்கோயிற்கென்றான். (உ0)

என்றவப்போதேகோயிற்கேகினன்மீண்டான்றேடிச்
சென்றவர்சித்தன்றன்னைச்செருக்களத்துபோர்செய்து
வென்றனையேயின்னந்தவெங்களத்தெங்குற்றேடி
நின்றனைக்காணுதிங்குநேர்ந்தனம்யாங்களென்றார். (உக)

விரைசெய்தாரவன்யானங்கம்வெட்டினனல்லேனீங்க
ளுரைசெய்வதெவன்யாரென்போற்சித்தனையுடன்றுமாய்த்து
வரைசெய்தோள்விந்தைக்கீந்தார்மற்றிதுசுற்றுமவைகைத்
திரைசெய்நீர்க்கூடலெந்தைதிருவுளச்செயல்கொலென்றான். (உஉ)

(கஞ) மதுனை-உண்மை. நென்னல்-நேற்று. அறைகூவல்-போருக்கழைத்தல். (கசு) மடங்கலேறு-ஆண்சிங்கம். அடங்கலன் - பகைவன். (கஎ) பறிவர்-விலகுவர். (கஅ) வெந்-முதுகு. வட்டித்து-சுழன்று. (ககூ) வீட்டி-ஒழித்து. (உ0) பொருபடைக்கேள்விச்செல்வர்-பொருதற்குரிய ஆயுதப்பயிற்சியினையுடையமாணவர். (உக) நேர்ந்தனம்-எதிர்ப்பட்டேம். (உஉ) விரை-வாசனை. தாரவன்-மாலையினையுடையவன்

மட்டித்தகலவைக்கொங்கைமனவியுஞ்சித்தன்றன்னைக்
கிட்டிப்பல்காலும்வந்துகேட்டதுநெருநல்வாய்வந்
தொட்டித்தன்கையைப்பற்றியீர்த்ததுமுள்ளம்வெந்து
கட்டிப்போய்க்கதவந்தாழிட்டிருந்ததுஞ்சாற்றினளே. (உ)

அம்மனையருளிச்சொன்னபடியெலாமருளிச்செய்து
தெம்முனையடுவாள்வீரர்சித்தனைமாய்த்தாரீது
மெய்மையாமென்றுகண்டமைந்தரும்விளம்பக்கேட்டா
னெம்மையாளுடையகூடலிறைவிளையாட்டேயென்றான். (உச)

கொடியைநேரிடையாளோடுங்கொற்றவாளிளையரோடுங்
கடியதான்மாடக்கூடற்கண்ணுதலடிக்கீழ்த்தாழ்ந்து
நெடியதானமுகனுந்தேறுநெறியதுசிறியவேழை
யடியனேனளவிற்றேறின்னருள்விளையாடலென்றான். (உஞ)

தண்மதிவழிவந்தோனுநகருளார்தாமும்பாதி
விண்மதிமிலந்தவேணிவிடையவனுடனேகிக்கி
கண்மலர்வெள்ளத்தாழ்ந்துகனைகழலடியிற்றாழ்ந்து
பண்மலர்கீதம்பாடியாடினர்பழிச்சிநின்றார். (உசு)

மேற்படி-வேறு.

அடியவருக்கெளியரிவர் பரதேசிகாவலரென்றடிவீழ்ந்தேத்தி,
வடியயில்வேற்குலோத்துங்கன் மாணிக்கமாலையெனுமனையாளோடுந்,
தொடியணிதோண் முதுமகனைக்களிறேற்றிநகரைவலஞ்சூழ்வித்திப்பான்,
முடியணிவித்தனந்தகுணபாண்டியற்குத்தன்னிறைமைமுழுதுமீந்தான். (உஎ)

நிலைநிலையாப்பொருளுணர்ந்து பற்றிகந்துகரணமொருநெறியேசெல்லப்,
புலநெறிநீத்தருள்வழிபோய்ப்போதமாந்தன்வலியைப்பொத்திநின்ற,
மலவலிவிட்டகலவரா வமிழ்ந்தமதிபோல்விளங்கிமாறியாடுந்,
தலைவனடிநிழல்பிரியாப் பேரின்பக்கதியடைந்தான்றமிழ்கோமான். (உஅ)

அங்கம்வெட்டினபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ருசு - க்கு திருவிருத்தம் - கசுஉ.

(உ) மட்டித்த-பூசப்பெற்ற.நெருநல்வாய்-நேற்று.(உசு)பண்மலர்-இசைபரந்த. (உஎ) மாணிக்கமாலை - வாட்போர்பயிற்றுமுதியோன் மனைவிபெயர். (உஅ) புலநெறி - இந்திரியவழி.

இருபத்தெட்டாவது,
நாகமெய்த படலம்.



எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செங்கண்மால்விடைமேல்விடங்கர்செருக்களத்திடைவாளெடுத்
தங்கம்வெட்டியசேவகத்தையறைந்தனந்தமிழ்மாறன்மேற்
சங்கையிட்டமணீசராற்றியதறுகண்வேள்விமுளைத்ததோர்
வெங்கண்வாளரவைத்துணித்துவிளித்தவாறும்விளம்புவாம். (க)

சோதிலாதகுணத்தனந்தகுணப்பெருந்தகைமீனவ
ஞாதிநாயகனுருவமாகியவைந்தெழுத்தொடுகண்டிவெண்
பூதிசாதனமாவதேபொருளென்றுபத்திமைபூண்டதன்
ரூதையேமுதலாயமன்னவர்தம்மினுந்தலையாயினன். (உ)

அத்தகைச்சிவசாதனந்தனிலன்புமிக்கவெனிழகலா
லத்தன்மெய்த்திருவைந்தெழுத்தொலியாலுநீற்றொளியாலுமுட்
பைத்தவல்லிருளும்புறத்திருளுஞ்சிதைந்துபராபரன்
வித்தகத்திருவேடமாயினமீனவன்றிருநாடெலாம். (ங)

ஈயினுங்கடையான மாசுடனள்ளிருட்புரைநெஞ்சரெண்
ணூயிரஞ்சமண்வேடரன்னதறிந்துகொண்டுவெகுண்டழற்
றீயிரும்பெனமானவெங்கனல்சுட்டிடத்தரியார்களாய்
மாயிருந்தமிழ்மாறனைத்தெறவஞ்சவேள்வியியற்றுவார். (ச)

எல்லைகாதமளந்துசாலையெடுத்தழற்படுகுண்டமுங்
கல்லியாழலிட்டெழும்புகைகௌவியெண்டிசைகளுமுறச்
செல்லவானவுடுக்களும்பொரியிற்பொரிந்தனசிதறநீண்
டொல்லைதாவிவிசும்புதைவரவோட்டிவெங்கனன்மூட்டினார். (ஞ)

அத்தழன்றெரிகுண்டநின்றுமகன்பிலத்தெழுவானெனப்
பைத்ததுஞ்சிருள்வாயும்வாயிருபாலும்வாலியபகிர்மதிக்
கொத்தநஞ்சினமொழுகுபற்களுமூழியாரழல்விழிகளும்
வைத்தசைந்தொருவெற்புவந்தெனவந்தளாவெரிதானவன். (சு)

(க) செங்கண்மால்விடை - செவ்வியநயனங்களையுடைய திருமாலாகியஇடபம். விடங்கர்-சுயம்புமூர்த்தி. (உ) தலையாயினன்-முதன்மைப்பட்டவனானன். (ங) வித்தகத்திருவேடம்-ஞானசம்பந்தியினையுடைய சைவவேடம். (ச) தெற - கொல்ல. வஞ்சவேள்வி-ஆபிசாரவோமம்.(ஞ)தைவரல்-தடவல். (சு) தழன்று-கொதித்து. பைத்த-பரந்த. வாலிய - வெளுத்த.

உதித்தசெங்கணரக்கவஞ்சனுருத்தெழுந்தெரிவடவையிற்
கொதித்தம்பசிதாகமுங்கொடிதாலெனக்கொடியோரைநீர்
விதித்திம்பணியாதெனக்கென மீனவன்றனேமதுரையோ
டெதிர்த்தெதித்துவிழுங்கிவாவெனவேவினருடனேகினன். (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாயுடையவர்விடவிடநாகப் படிவுகொணிசிசரனிலனண்டங்,
தோயுடலினனுடல்விடமூறிச் சொரிதலேயெயிறினன் வடவைச்
செங், தீயுடையனவெனவெரிகண்ணன் றிணியிருள்வரைமுழையெ
னவிண்ட, வாயுடையவனெடுநெறிமுன்னி மழைநுழைவரையென
வருகின்றான். (அ)

அரவிறையுறைபிலம்வெளிகாண வரையுடல் புதைபடநிலம்
விள்ள, வருவிழியழலெழவுயிர்கான் முன்வளியுளர்கிளர்வலிவிளி
வெய்தப், பொருசினவிழியெதிர்படுபைங்கூழ்புகையெழவனமரை
பொரிபொங்கர், கருகிடமுதுசினையிறைகொள்ளுங்ககநிரைசிறை
சுருள்படவீழ. (கூ)

அகனிலம்வெருவுறநிலனேந்துமரவிறைவெருவுறவெயில்காலும்
பகன்மதிவெருவுறவிவைகௌவும்பணிகளும்வெருவுறவகறிக்கின்
புகர்மலைவெருவுறவுதண்டப்புரவலன் வெருவுறவருசெங்கண்
ணைகமதிபுரையெயிறவன்மாடரகரெதிர்குடவயின்வருமெல்லை. ()

கண்டவர்கடிநகர்கடிதோடிக்கௌளியனடிதொழுதடிகேணங்
கொண்டல்கண்வளர்மதில்வளைகூடற் குடவயிலொருபெருவிடநாக
மண்டமுமகிலமுமொருவாயிட்டயிறவருவதையெனநீள்வாய் [ண்
விண்டுகொண்டணைவதையெனலோடும்வெருவலன்மதிகுலமறவீர

மற்றிதுமுனமதகரிவிட்டோர்வரவிடவருவதையெனவெண்ண,
முற்றிதுதனையும்விளித்தறகெம் முடையவர்விடையவர்விடநாகஞ்
சுற்றியசடையினருளரென்னுச்சுரருலகிழிசுடரெனநிற்குங், கற்ற
ளியிடையுறையிறைமுன்போய்க்கனகழலடி தொழுதறைகிற்பான்.

(அ) நிசிசரன் - அசுரன். (கூ) அரவிறை - ஆதிசேடன். கால் - சுவாசம். வளி - வாயு. பொங்கர் - சோலை. ககநிரை - பறவைக்கூட்டம். (கஎ) இவை - இச்சந்திரசூரியர்கள். பணிகளும் - இராகு கேதுக்களும். புகர்மலை - யானை. தண்டப்புரவலன் - யமன். குடவயின் - மேற்புறத்தில். (கக) விளித்தற்கு - கொல்லுதற்கு. (கஉ) கற்றளி - மாணிக்கவிமானம்.

வழிவழியடிமைசெய்தொருபோதுமறவலன்வழிபடுமடியேனின்
மொழிவழிமுறைசெய்துவருவேனிம்முதுநகரடையவுமமணீச
ரழிவதுகருதினர்விடுநாகமடைவதுணருள்வழியதனுவி
கழிவதுகருதியவடியேனேக்கருணைசெய்,தருளிதுகடனென்றான். ()

அனுமதிகொடுதொழுதிறைபாதமகமதிகொடுபுறனடைகின்ற
பனிமதிவழிவருதமிழ்மாறன்பகழியொடடுகிலேயினனேகிக்
குனிமதிதவழ்தருமதினீங்கொடியணிகுடகடைகுறுகாமுன்
றனிவரையெனநிகர்தருகோபத்தழல்விழியரவினையெரிக்கண்டான்

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பல்பொறிப்பருவாய்ப் படம்புடைபரப்பிப்பக்க மெண்டிசை
யொடிவிசும்பிற்,செல்கதிர்புதைத்தத்திணியிருள்பரப்பித்,திங்களின்
பகிர்புரைநஞ்சம், பில்கெயிறதுக்கிப்பெரிதுயிர்த்தகல்வாய் பிளந்து
மாநகரெலாமொருங்கே, யொல்லெனக்கௌவிவீழுங்குவான்றீ
யுருத்தனனுரகவாளவுணன். (கரு)

அடுத்தனனரசசிங்கவேறிடியேறஞ் சவார்த்தங கையிற்சாப,
மெடுத்தனனெநாணிருதலைவணக்கி யெரிமுகக்கூர்ங்கணைதொடு
த்து, விடுத்தனன்விடுத்தசரமெலாமுரகன் வெறுந்தகள்படக்கறித்
துமிழ்ந்து, படுத்தனன்பொருதபஞ்சவன்புராரி பங்கயச்சேவடி
நினையா. (கசு)

கொடியதோர்பிறைவாயம்பினைவிடுத்துக் கோளராவினையுடறு
ணித்தா, னிடியதோவெனவார்த்தெரிறக்குருதி யிரங்கிவீழருவி
யிற்கவிழ,நெடியதோருடலம்புரள்படக்கூர்வானெளிதரவிளிபவன்
மேலைக், கடியதோராலகாலவெள்ளம்போலக் கக்கினுங்கறையிரு
ணஞ்சம். (கஎ)

தீவிடமுருத்துத்திணியிருள்கடுப்பத் திருநகரெங்கணுஞ்செறிந்
த, காவிடங்கூவல்கயந்தலைசதுக்கங்கழகமாவணமகழிஞ்சி, கோவி
டமாடமுபரிகைமேடைகோபுரமரங்கெலாம்பரந்து, தாவிடமயங்கி
யுறங்கினரோபோலச்சாம்பினர்தனிநகர்மாக்கள். (கஅ)

நிலைதளர்ந்துடலந்திமிர்ந்துவேர்வரும்பி நிறைபுலன்பொறிகர
ணங்க, டலைதடுமாறியுரைமொழிகுழறித் தழுதழுப்படைந்தரவு

(கரு) பொறி-புள்ளி. பருவாய்-பிளந்தவாய். (கசு) எரிமுகம்-தீமய
மானமுகம். கறித்து-கடித்து. (கஎ) பிறைவாயம்பு-அர்த்தசந்திரபா
ணம். (கஅ) கா-சோலை. கூவல்-கிணறு. கயம்-குளம். சதுக்கம்-நா
ற்சந்தி. கழகம் - கல்விமண்டபம். இஞ்சி-மதில். கோவிடம்-அரசமா
ளிகை. அரங்கு-நாடகசாலை.

ணங்கி, மலைதருகபமெனிமிர்ந்துணர் வழிந்துமயங்கிமூச்சொடுங்கி யுள்ளாவி, யலைதரவுசலாடினுர்கிடந்தா ரன்னதொன்னகருவாவெ ல்லாம். (ககூ)

தென்னவன்விடங்கண்டஞ்சுமால்போலச்சினகரமடைந்துதா ழ்ந்தெந்தாய், முன்னவுவாதிமுதல்வவித்தின்றிமூலைத்தவமுடிவிலா முனிவ, வென்னவுவன்பர்க்கெளியவயார்க்குமிறையவவிங்ஙகர்க்கெ ன்று, மன்னவுவஞநிமறையவமுக்கண் வானவநினைச்சரணடைந் தேன். (உ0)

அடித்துவந்தலைக்குமாழியைத் தூரந்துமாழியுண்டேழுமொன் ஞகத், தொடுத்துவந்தலைக்கும்பெருமழைதடுத்துந் தூளக்கைவிண் டோவவெண்பிறைக்கோ, டெடுத்துவந்தலைக்குங்களிற்றினைவிளித தமிங்ஙகர்புரந்தனையின்று, மடித்துவந்தலைக்கும்விடத்தினுண்மயங் கும்வருத்தமுங்களைதியென்றிரந்தான். (உக)

அருட்கடலனையவாதிநாயகன்ற னவிர்சடையணிமதிக்கொழு ந்தின், பெருக்கடையமுதத்தண்டுளிசிறிது பிலிற்றினுன்பிலிற்றிட லோடும், பொருக்கெனவெங்கும்பாலினிற்பிரைபோற் புரையறக்க லந்துபண்டுள்ள, திருக்களர்மதுராகரமாப்புனிதஞ் செய்ததச்சி றுதுளியம்ம. (உஉ)


இரவிமுன்னிருளதெனவிறையருண்முன் னிருண்மலவலியெ னவெகுளும், பரவியவமுதால்விடமகன்றவசப்படி லொழிந்தியாவரு ன்பம், விரவியகளிப்பின்மேலினுரிருந்தார் மீனவர்பெருந்தகை வேங்க, னரவணிசடையார்க்கன்புருத்தானேயாகிமண்காயல்செய் திருந்தான். (உங)

நாகமெய்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ஈஎ-க்கு திருவிருத்தம் - ககூஉடு

இருபத்தொன்பதாவது,

மாயப்பசுவைவதைத்தபடலம்.



கலிநிலைத்துறை.

சுருதியின் புறத்தவர் விடுமரா வினைச்சுருதி
கருதரும் பரனருளுடைக் கௌரியன் றுணித்த
பரிதிதங்கது பொருதமண் படிறர்பின் விடுப்ப
வருபெரும் பசுவிடையினுன் மாய்த்ததும் பகர்வாம். (க)

(ககூ) திமிர்ந்து-கம்பித்து. (உ0) வித்தின்றிமூலைத்தவன் - வினையையாதாரமாகக்கொண்டு பிறவாமல் தானேகருணையாலுருக்கொண்டவன். (உங) அவசம்-துக்கம். வசக்கேடுமாம். (க) சுருதியின்புறத்தவர்-அவைதீகரானசமணர். படிறர்-வஞ்சகர்.

பணப்பெரும்பகுவாயுடைப்பாந்தளெனத்த
குணப்பெருந்தகைதுணித்தபின்பின்வருகுண்டர்
தணப்பருங்குழாங்காவினுற்றள்ளுண்டுசெல்லுங்
கணப்பெரும்புயல்போலுடைந்தோடினகலங்கி. (உ)

உடைந்துபோனவரனேவருமோரிடத்திருள்போ
லடைந்தநாமுன்புவிடித்தமால்பானேபோலின்று
தொடர்ந்தபாம்பையுந்தொலைத்தனர்மேலினிச்சூழ்ச்சி
மிடைந்துசெய்வதையாதெனவினயமொன்சேர்வார். (ஊ)

ஆவையூறுசெய்யார்பழியஞ்சுவாரதனே
யேவுவாமிதுவேபுணர்ப்பென்றுசூழ்ந்திசைந்து
பாவகாரிகள்பண்டுபோற்பழித்தழல்வளர்த்தார்
காவிலாவுருவாகியோர்தானவன்முளைத்தான். (எ)

குண்டழற்கணின்றெழுந்தவக்கொடியவெம்பசுவைப்
பண்டுபோலவர்விடித்தனர்கூடலம்பதிமே
லுண்டுமில்லையுமெனத்தடுமாற்றநூலுரைத்த
பிண்டியானுரைகொண்டுழல்பேயமண்குண்டர். (ஙு)

கலிவிருத்தம்.

மாடமலி மாளிகையி லாடுகொடி மானக்
கோடுகளி லூடுமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன் முடியுங்கதிர் கொள்சென்னி வரையுந்நா
ளாடவடி யிட்டுலவை யஞ்சிடவுயிர்த்தே. (சு)

விடித்திடு முயிர்ப்பி னெதிர்பூளை நறைவீபோ
லடித்திடு சராசர மனேத்து மிரிவெய்தக்
கடித்திடு சினக்கனலி னுக்குலக மெல்லா
மடித்திடு தழற்கடவுள் வார்புனலை மான. (எ)

உடன்றிறைகொள்புள்ளொடுவிலங்கலறியோட
மிடைந்த பழுவத்தொடு விலங்கலை மருப்பா
லிடர்ந்தெறி மருதத்தன வெறிந்தளவி லோரைத்
தொடர்ந்ததடல்சிதைத்து துயிர்தொலைத் திடியினுர்த்தே. (அ)

மறலிவரு மாறென மறப்பசு வழிக்கொண்
டறலிவர் தடம்பொரு நையாறுடைய மாறன்

(சு) உலவை-வாயு (எ) பூளைநறைவீ - பூளைச்செடியின்தேனுள்ள பூவினையொப்ப. பழுவம்-சோலை. விலங்கல்-மலை. மருத்து—காற்று.

நிறலி மலர்மங்கை யுறைதென் மதுரைமூன்ஞ
விறலி வருகின்ற தறுமீனவ னறிந்தான். (கூ)

மீனவனு மாநகருண் மிக்கவரு மூக்கண்
வானவனே மாமதிரை மன்னவனே மூன்ஞர்
தானவனே யாழிகொடு சாய்த்தவனே யேத்தா
வானதுரை செய்துமென வாலய மடைந்தார். (கo)

நாதமுறை யோபொது வின்மாறி நடமாடும்
பாதமுறை யோபல வுயிர்க்கு மறிவிக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவென விளித்தமுறை யிட்டார். (கக)

நின்றமுறை யிட்டவரை நித்தனரு ணேக்கா
னன்றருள் சுரந்திட பந்தியை விளித்துச்
சென்றமண ரேவருதி ப்பசுவை நீபோய்
வென்றுவரு வாயென விளம்பினன் விடுத்தான். (கஉ)

கலிநிலைத்துறை.

தண்டங்கெழுகூற்றமுமஞ்சத்தறுகட்செங்கட்
குண்டந்தழன்றுகொதிப்பக்கொடுநாக்கெறிந்து
துண்டந்துழாவக்கடைவாய்நுரைசோர்ந்துசென்னி
யண்டந்துழாவவெழுந்தன்றடலேறுமாே ா. (கங)

நெற்றித்தனியோடைநிமிர்ந்துமறிந்தகோட்டிற்
பற்றிச்சுடர்செம்மணிப்பூண்பிறையையநாகஞ்
சுற்றிக்கிடந்தாலெனத்தோன்றவெள்ளாழியீன்ற
கற்றைக்கதிர்போற்பருமம்புறங்கௌவிமின்ன. (கச)

கோட்டுப்பிறைகால்குளிர்வெண்கற்றைபோலச்
சூட்டுக்கவரித்தொடைத்தொங்கலுநெற்றிமுன்னுப்
பூட்டுத்தாளமுகவட்டம்பொலியப்பின்னன்
மாட்டுச்சதங்கைத்தொடைகல்லெனவாய்விட்டார்ப்ப. (கஞ)

பணிநாவசைக்கும்படியெண்ணக்கழுத்தில்வீர
மணிநாவசைப்பதகைமுத்தின்வகுத்ததண்டைப்

(கூ) அறல்-கருமணல். பொருநை-தாம்பிரபரணி. நிறலி-பகைத்து.(கo) தானவன்-அசுரனை சலந்தான். (கங) தண்டம்-காசி. அடலேறு-வன்மை பொருந்திய இடபம். (கச) ஓடை - நெற்றிப் பட்டம். வெள்ளாழி-பாற்கடல். (கஞ) கால்-கக்குகின்ற.

பிணிநாண்சிறுகிண்கிணிப்பிப்பலமாலைத்தொங்க
லணிநாணவலம்பச்சிலம்பார்ப்பவடிகணுன்கும். (கசு)

அடியிட்டுநிலங்கிளைத்தண்டமெண்டிக்கும்போர்ப்பப்
பொடியிட்டுயிர்த்துப்பொருகோட்டினிற்குத்திக்கோத்திட்
டிடியிட்டதிர்காரெதிரேற்றெழுந்தாங்குநோக்கிச்
செடியிட்டிருகண்ணழல்சிந்தநடந்ததன்றே. (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பால்கொண்டநிழல்வெண்டிங்கட்பகிர்கொண்டமருப்பிற்கொண்
சூல்கொண்டவயிற்றைக்கீண்டுதுள்ளியோர்வெள்ளிக்குன்றங் [மூச்
கால்கொண்டுநடந்தாலென்னக்கடிந்துடன்ருவைச்சீற்ற
மேல்கொண்டுநாற்றம்பற்றிவீங்குயிர்ப்பெறிந்துகிட்டா. (கஅ)

குடக்கதுகுணக்கதென்னக்குணக்கதுகுடக்கதென்ன
வடக்கதுதெற்கதென்னத்தெற்கதுவடக்கதென்ன
மூடுக்குறுமருப்பிற்கோத்துமுதுகுகீழாகத்தள்ளு
மெடுக்குறுமலையைக்கால்பேர்த்தெனத்திசைப்புறத்துவீசும். (ககூ)

கொழுமணிச்சிகரகோடிசிதைபடக்குவட்டில்வீசும்
பழுமரச்செறிவில்வான்றேய்பனையிறவெறியும்வானின்
விழுமறப்பசுப்போல்வீழவேலவாய்வீசுமிங்ஙன்
செழுமதிக்கோட்டெந்தித்தெவிளையாடல்செய்தது. (உ0)

பூரியரெண்ணியாங்கேபொருதுயிரூற்றஞ்செய்யா
தாரியவிடைதன்மாண்டவழகினைக்காட்டக்காமுற்
றீரியநறும்பூவாளியேறுபட்டாவியோடும்
வீரியம்விடுத்துவீழ்ந்துவெற்புருவாயிற்றன்றே. (உக)

வாங்கினபுரிசைமாடமாநகரானவின்பந்
தூங்கினவரவாய்வேம்பின்றோடவிழ்தாரான்றிண்டோள்
வீங்கினவிரவிதோன்றவீங்கிருளுடைந்ததென்ன
நீங்கினநாணமோடநிரையமண்குழாங்களெல்லாம். (உஉ)

உலகறிகரியாத்தன்பேருருவினையிடபக்குன்றுக்
குலவுறநிறுவிச்சுக்கவடிவுறற்குறுகிக்கூடற்

(ககூ) கிண்கிணி-சிறுசதங்தை. (கஎ) செடி-ஒளி. (கஅ) நாற்றம் பற்றி-மோப்பம் பிடித்து. (உ0) பனை-கிளை. வானில் விழும்மறப் பசு - சுவர்க்கத்தினின்றும் தவறித் துருவாச சாபத்தால் கடலில் விழுந்த காமதேனு. (உக) பூரியர்-கீழோர். ஈரிய-சீதளமான.

றலைவனெவணங்கவீசன்றண்ணருள்சுரந்துபண்டை
யிலகுருவாகியிங்ஙனிருக்கெனவிருத்திஞனே. (உங)

அந்திலோகருளாருமரசனுமகிழ்ச்சிதூங்கிச்
சன்னிதியிருந்தநந்திதாளடைந்திறைஞ்சிப்போக
மின்னவிர்சடையானந்திவென்றிசால்வீறுநோக்கி
மின்னமுதனையாளோடெங்களிசிறந்திருக்குநாளில். (உச)

அவ்விடைவரைமேன்முந்நீரார்கலியிலங்கைக்கேகுந்
தெவ்வடுதிலேயிராமன்வானரசேனைசூழ
மைவ்வரையனையதம்பிமாருதிசுக்கிரீவ
னிவ்வடல்வீரரோடுமெய்தியங்கிறுத்தான்மன்னே. (உடு)

அன்னதுதெரிந்துவிந்தமடக்கியமுனியங்கெய்தி
மன்னவற்காக்கங்கூறிமழவிடைக்கொடியோன்கூடற்
பன்னரும்புகழ்மையோதபணுவலையருளிச்செய்ய
முன்னவன்பெருமைகேட்டுமுகிழ்த்தகைமுடியோனுகி. (உசு)

முனியொருகுறுகிச்செம்பொன்முளரியுண்மூழ்கியாதித்
தனிமுதலடியைவேணிமுடியுறத்தாழ்ந்துவேத
மனுமுறைவாகமத்தின்வழிவழாதருச்சித்தேத்திக்
கனிவுறுமன்பிலாழ்ந்துமுடிமிசைக்கரங்கள்கூப்பி. (உஎ)

புங்கவனீவன்முத்திபுராதிபபுனிதபோக
மங்கலமெவற்றினுக்குங்காரணவடிவமான
சங்கரனினதுதெய்வத்தானங்களனந்தமிந்த
வங்கண்மாஞாலவட்டத்துள்ளனவைகடம்மில். (உஅ)

கலிநிலைத்துறை.

அற்புதப்பெரும்பதியிந்தமதுரையீதாற்றப்
பொற்புடைத்தென்பதெவன்பலபுவனமுநின்பாற்
கற்புவைத்துயநீசெய்தகருமத்தின்விருத்தம்
வெற்புருக்களாய்ப்புடைநின்றுவிளங்கலான்மன்னே. (உக)

கண்டவெல்லையிற்றுன்பங்கள்களைதற்குமளவைக்
கண்டரும்பெருஞ்செல்வங்களளித்தற்குங்கருணை
கொண்டுநீயுறைசிறப்பினுற்குளிர்மதிக்கண்ணி
யண்டவாணவிவ்விலிங்கத்துக்கொப்புவேறுமோ. (ஈ0)

(உங) டண்டை இலகுரு-முன்னுள்ளவிளக்கமான உருவம். (உடு) விடைவரை - இடபக்குன்று. (உசு) விந்தமடக்கியமுனி-அத்தியமுனி. (உக) அற்புதம்-ஆச்சரியம். பொற்பு-அழகு. கற்பு-கற்றல். (ஈ0) அளவைக்கண்டு-பக்குவத்தினையுணர்ந்து.

தோய்ந்திடும்பொழுதீட்டியதொல்வினைப்படல
மாய்ந்திடும்படிமாய்த்துநின்மங்கலபோக
மீந்திடும்படிக்கிருந்தமாதீர்த்தத்தினியல்பை
யாய்ந்திடும்பொழுததற்கொருதீர்த்தமொப்பாமோ. (கூக)

எத்தலத்திணுமொவ்வொன்றுவிழுமிதாமிந்த
மெய்த்தலத்திலிம்மூவகைவிழுப்பமும்விளங்கு
மத்தவாதலாலித்தலமடைந்தவரெவர்க்குஞ்
சித்தசுத்தியும்பல்வகைச்சித்தியும்பயக்கும். (கூஉ)

அடியனேனெண்ணுங்கருமமுஞ்சரதமேயாக
முடியுமாவரிதச்செயன்முடியுமெப்படியப்
படிபுரிந்தருள்கடிதெனப்பணிந்தனன்பரனு
நெடியவான்படிமமுதெனவெதிர்மொழிநிகழ்த்தும். (கூங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரவிதன்மரபின்வந்தவிராமகேளெமக்குத்தென்கீழ்
விரவியதிசையிற்போகிவிரிகடற்சேதுக்கட்டிக்
கரவியவுள்ளக்கள்வன்கதிர்முடிப்பத்துஞ்சிந்தி
யாகமேகலியுளையருஞ்சிறையழுவநீக்கி. (கூச)

நீண்டுகின்னயோத்தியெய்திவிரிகடலுலகம்பண்ணு
ளாண்டினிதிருந்துமேலுள்வைகுண்டமடைவாயாக
வீண்டுநீகவலைகொள்ளேலெனுமசரீரிகேட்டு
ரிண்டவன்மகிழ்ந்துதாழ்ந்துதிருத்தனைவிடைகொண்டேகி. (கூசு)

மறைப்பொருளுரைத்தோன்சொன்னவண்ணமேயிலங்கையெய்தி
யறத்தினேத்தின்றபாவியாவிதின்றனையான்செல்வத்
திறத்தினேயிளவற்கீந்துதிருவிராமீசங்கண்டு
கறைப்படுமிடற்றிஞனேயருச்சித்துக்கருணைவாங்கி. (கூஎ)

பற்றியபழியினீங்கியிந்திரன்பழியைத்தீர்த்த
வெற்றிகொள்விடையிஞனேமீளவும்வந்துபோற்றி
யற்றிரளனையகோதைதற்பிணக்கரசியோடுஞ்
சுற்றியசடையிராமன்றொன்னகரடைந்தானிப்பால். (கூஏ)

(கூக) நின்மங்கலபோகம்-சிவபோகம். (கூஉ) சித்தசுத்தி-மனத்தூய்மை. (கூங) சரதம்-உண்மை. (கூச) விரவிய-கலந்த. (கூசு) பாவி-இராவணன். இளவல்-விபீடணன். (கூஎ) பற்றியபழி-தொடர்ந்தபிரமகத்தி. தற்பிணக்கரசி-சீதை.

செங்கோலனந்தகுணமீனவன்றேயங்காப்பக்
கொங்கோடவிழ்தார்க்குலபூடணன்றன்னேயீன்று
பொங்கோதைஞாலப்பொறைமற்றவன்பாலிறக்கி
யெங்கோனருளாற்சிவமாகவேறினனே. (ஈஅ)

மாயப்பசுவைவதைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ஈஅ-க்கு - திருவிருத்தம் - கசுகஈ.

முப்பத்தாவது,

மெய்க்காட்டிட்டபடலம்.



கோச்சகக்கலிப்பா.

பாவமெனவடிவெடுத்தபடிற்றமணர்பழித்தழல்செய்
தேவவருமறப்பசுவையேறுயர்த்தோன்விடைநந்திக்
காவலனேவிடுத்தழித்தகதையுரைத்துமட்டாலெச
சேவகன்மெய்க்காட்டிட்டவிளையாடுந்திறமுரைப்பாம். (க)

வெவ்வியமும்மதயானைவிறற்குலபூடணன்சமண
ரவ்வியவஞ்சனைகடந்தவனந்தகுணச்செழியன்பாற்
செவ்வியசெங்கோல்வாங்கித்திகிரிதிசைசெலவுருட்டி
வவ்வியவெங்கலிதுரந்துமண்காத்துவருகின்றான். (உ)

சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனொருவன்
சிவந்தசடைமுடியண்ணலடியவரேசிவமாகக்
கவர்ந்தொழுகியருச்சிக்குங்கடப்பாட்டினைநின்றே
னுவந்தரசற்கிருமைக்குந்துணையாகியொழுகுநாள். (ஊ)

வல்வேடர்க்கதிபதியாய்வருசேதிராயனெனும்
வில்வேடனொருவனவன்விறல்வலியான்மேலிட்டுப்
பல்வேறுபரிமான்றேர்ப்பஞ்சவன்மேற்படையெடுத்துச்
செல்வேனென்றுறவலித்தான்றென்னர்பிரானஃதறிந்தான். (சு)

தன்னதுதாணிழனின்றசாமந்தன்றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ்திறந்துநிதிமுகந்தளித்துப்புகிதாக

(ஈ அ) கொங்கு-வாசனை. (க) படிற்றமணர்-வஞ்சகரானசமணர். (ஊ) தானைகாவலன் - சேனைபதி. கடப்பாடி-உறுதி. (சு) வலித்தல்-துணிதல்.

வின்னமுநீசிலசேனையெடுத்தெழுதிக்கொள்கென்ரு
னன்னதுகேட்டிசனடிக்கன்புளானென்செய்வான். (நி)

தென்னவர்கோன்பணித்தபணிபின்றள்ளச்சிந்தையிலன்
புன்னவரனருள்வந்துமுன்னீர்ப்பவொல்லைபோய்ப்
பொன்னறைதாழ்திறந்தறத்தாரீட்டியிடும்பொற்குவையுட்
டன்னதுளத்தவாவமையத்தக்கநிதிகைக்கவரா. (சு)

எண்ணிறந்தகளிப்பிலெந்திருக்கோயிலிடத்தணைந்து
கண்ணிறைந்தபொன்முளரிக்கயந்தலைநீர்படிந்துதன
துண்ணிறைந்தமெய்யன்பிலெளியருவாய்முளைத்தெழுந்த
பண்ணிறைந்தமறைப்பொருளைப்பணிந்திறைஞ்சியதுவேண்டும். (அ)

பண்ணியலுன்மறைவிரித்தபரமேட்டியெங்கோமா
னெண்ணியகாரியமுடிப்பாயினையுனக்குமுன்னடிக்கீ
ழுண்ணியமெய்யடியர்க்குமாதக்கவெனவிரந்தப்
புண்ணியமாநிதிமுழுதுமவ்வழியேபுலப்படுப்பான். (ஆ)

அண்டமுகடிளஞ்சிமிர்கோபுரமுமாயிரக்கான்
மண்டபமுங்கண்டிகையும்வயிரமணிகோளகையுங்
தண்டலமுந்தண்டரளக்குடைநிரையுங்கொடிநிரையுங்
கண்டனன்முன்னவனருளாற்பிறப்பேழுங்கரைகண்டோன். (கூ)

ஞாடர்க்கவியுணவின்வகைமுந்நூன்மன்றன்முத
னூலுவாஞ்சிறுவேள்விநான்மறையோர்க்கறுசுவையி
னூனுதவிபருண்டிதுறவடைந்தோர்க்கருத்துபலி
தானுதிபலவேறுதருமனநிதழைவித்தான். (கo)

ஏவரேனுமுருத்திரசாதனங்கண்டாலெதிர்வணங்கி
யவரேநம்பிறப்பறுக்கவடிவெடுத்தவரென்று
கவராதவன்புள்ளங்கசிந்தொழுகவருச்சித்துச்
சுவையாறினமுதருத்தியெஞ்சியவின்சுவைதெரிவான். (கக)

இன்றைக்காயிரநாளைக்கிருமடங்குவருநாட்கு
மன்றைக்கன்றிருமடங்காவரசனதுபொருளெல்லாங்

(நி) சாமந்தன் - சேனைபதியின் குடிப்பெயர். (சு) ஒல்லை - விரைவு. அறத்தாறு - தருமவழி. ஈட்டல் - சேர்த்தல். (அ) பரமேட்டி - இறந்தோன். ஆதக்க-ஆகத்தக்கன. (கூ) கோளகை - ஓராபரணம். வாகுவலயமென்ப. (கo) மூந்நூன்மன்றல் - மூணநூற்கலியாணம். (கக) உருத்திரசாதனம்-சிவசின்னம்.

கொன்றைச்செஞ்சடையார்க்குமடியார்க்குங்கொடுப்பதனைத்
தென்றற்கோன்செவிமடித்தார்சேனைக்கோனிதுசெய்வான். (கஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காவலனவையத்தெய்திக்காரியஞ்செய்வாரோடு
மேவினன்பிறநாட்டுள்ளவீரர்க்குவெறுக்கைபோக்கிச்
சேவகம்பதியவோலைசெலவிடுத்தழைப்பான்போலப்
பாவகஞ்செய்துதிட்டிப்பட்டிமையோலையுய்ப்பான். (கங)

எழுதுகதெலுங்கர்க்கோலையெழுதுககலிங்கர்க்கோலை
யெழுதுகவிராடர்க்கோலையெழுதுகமராடர்க்கோலை
யெழுதுககொங்கர்க்கோலையெழுதுகவங்கர்க்கோலை
யெழுதுகதருக்கர்க்கோலையென்றுபொய்யோலைவிட்டான். (கச)

எங்குமிப்படியேயோலைசெலவிடுத்திருப்பவாறு
திங்களினளவுமந்தச்சேவகர்வரவுகாணு
தங்கதிர்வேலான்சேனைக்கரசனையழைத்துநாளை
வெங்கதிர்படுமுன்சேனையாயையும்விளித்தியென்றான். (கஙு)

என்றமன்னவனுக்கேற்கச்சாமந்தனிசைந்துவெள்ளி
மன்றவனடிக்கீழ்வீழ்ந்துவள்ளலேயரசனீந்த
குன்றுறழ்நிதியமெல்லாங்கொண்டெனப்பணிகொண்டாயே
வன்றிறற்சேனையீட்டும்வண்ணம்யாதென்னநின்றான். (கசு)

அடியவர்குறைவுதீர்த்தாண்டருள்வதேவிரதம்பூண்ட
கொடியணிமாடக்கூடற்கோமகன்காமற்காய்ந்த
பொடியணிபுராணப்புத்தேட்புண்ணியனருளினாலே
யிடியதிர்விசும்புகீறியெழுந்ததேர்தெய்வவாக்கு. (கஎ)

சூழ்ந்தெழுசேனையோடுந்தோற்றுதுநாளைநீயும்
வீழ்ந்தரசவையத்தெய்திமேவுதியென்னவிண்ணம்
போழ்ந்தெழுமாற்றங்கேட்டுப்பொருதுமேறுவகைவெள்ளத்
தாழ்ந்தனன்முந்நீர்வெள்ளத்தலர்கதிரவனுமாழ்ந்தான். (கஅ)

மீனவன்காணமேருவில்லிதன்றமனைவன்கண்
மானவேன்மறவராக்கிவாம்பரிவீரனுகத்
தானுமோர்கூத்துக்கோலஞ்சமைந்துவந்தாடவிட்ட
நீனிறவெழினிபோலக்காரிருணிவந்ததெங்கும். (ககூ)

(கஉ) இருமடங்கு-இரண்டுபங்கு. (கங) பட்டிமை-பொய். (கஅ) மாற்றம்-சொல். (ககூ) தன்தமர்-தமதுகணங்கள். எழினி-திரைசீலை.

புண்ணியமனையிற்போகிப்புலர்வதெப்போழ்தென்றெண்ணி
யண்ணல்சாமந்தன்றுஞ்சானடிக்கடியெழுந்துவானத்
தெண்ணிறைமீனநோக்கிநாழிகையெண்ணியெண்ணிக்
கண்ணுதலெழுச்சிகாண்பானளந்தனன்கங்குலெல்லாம். (உ௭)

தெருட்டருமறைகடேரூச்சிவபரஞ்சுடரோனண்பன்
பொருட்டொருவடிவங்கொண்டுபுரவிமேற்கொண்டுபோது
மருட்படையெழுச்சிகாண்பான்போலவார்கலியின்மூழ்கி
யிருட்டுகள்கழுவித்தூயவிரவிவந்துதயஞ்செய்தான். (உ௪)

பொருநரேறனையானேர்ந்துபோந்துநான்மாடக்கூடற்
கருணைநாயகனேத்தாழ்ந்துகைதொழுதிரந்துவேண்டிப்
பரவிமீண்டொளிவெண்டிங்கட்பன்மணிக்குடைக்கீழேகிக்
குருமதிமருமான்கோயில்குறுகுவான்குறுகுமெல்லை. (உ௨)

கரைமதியெயிற்றுச்சங்குகன்னன்முன்னனைவென்றிப்
பிரமத்தகணமுங்குண்டப்பெருவயிற்றிருவனுதி
வரைபுரைகுறுந்தாட்பூதமறவருங்குழுமிவீக்கு
குரைகழல்வலியநோன்முட்கோளுடைவயவராகி. (உ௩)

நெட்டிலைவடிவாள்குந்தந்தோமரநேமிநெய்த்தோ
ரொட்டியகணிச்சிசாபமுடம்பிடிமுதலாவெண்ணப்
பட்டவெம்படைமூவாறும்பரித்தசெங்கையர்காலிற்
கட்டியகழலர்காலிற்கடியராய்ப்புறம்புகாப்ப. (உ௪)

வார்கெழுகழற்கானக்திமாகாளன்பிருங்கிவென்றித்
தார்கெழுங்கும்பன்கும்போதரன்முதற்றலைவர்யாரும்
போர்கெழுகவசந்தொட்டுப்புண்டரநுதலிற்றீட்டிக்
கூர்கெழுவடிவாளேந்திக்குதிரைசேவகராய்ச்சூழ. (உ௫)

கற்றைச்சாமரைகள்பிச்சங்கவிகைபூங்கொடிக்காடெங்கு
முற்றக்காரொலியுநாணத்தூரியமுழுதுமேங்கக்
கொற்றப்போர்விடையைத்தானேகுரங்குவப்பரியாமேற்கொண்
டொற்றைச்சேவகராய்மாறியாடியவொருவர்வந்தார். (உ௬)

பல்லியமொலிக்குமார்ப்பும்பாய்பரிகலிக்குமார்ப்புஞ்
செல்லொலிமழுங்கமள்ளர்தெழித்திடுமரர்ப்புமொன்றிக்

(உ௪) தெருள்-ஞானம். ஆர்கலி-கடல். (உ௨) பொருநர் - போர் வீரர்.குரு-நிறம். (உ௩) வீக்கல் கட்டல். நோன்மை-வலிமை.(உ௪) நெய்த்தோர்-உதிரம். கணிச்சி-கோடாரி. சாபம்-வில். உடம்பிடி-வேல். (உ௬) பிச்சம்-பீலிக்குடை. தூரியம்-வாத்தியம்.

கல்லெனுஞ்சும்மைத்தாகிக்கலந்தெழுசேனைமேனுண்
மல்லன்மாநகர்மேற்சீறிவருகடல்போன்றதன்றே. (உஎ)

சேனையின்வரவுநோக்கித்திருமகன்றிருமுன்னேகுந்
தானையர்தலைவன்றென்னன்முனிழல்குறுகிக்கூற
மீனவனுவகைபூத்துவெயின்மணிக்கடையிற்போந்தங
கானமண்டபத்திற்செம்பொனரியணைமீதுவைகி. (உஅ)

தெவ்வுமெகிழ்சிபொங்கசேனையின்செல்வநோக்கி
யெவ்வெத்தேயத்திலுள்ளாரிதுரெனவெதிரேறின்று
கௌவையின்மனச்சாமந்தன்கையிற்பொற்பிரம்புநீட்டி
யவ்வவர்தொகுதியெல்லாமணியணிறுவிக்கூறும். (உக)

கலிவிருத்தம்.

கொங்குகரி வரைய குருநாடரி வரைய
கங்குகரி வரைய கருநாடரி வரைய
வங்குகரி வரைய விவராரி யர்களைய
வங்கரி வரைய விவர்மாள வர்களைய. (ஈ0)

குலிங்குகரி வரைய விவர்கொங் கணர்களைய
தெலுங்குகரி வரைய விவர்சிங் களர்களைய
கலிங்குகரி வரைய கவுடத்தரி வரைய
வுலங்கெழு புயத்தி வர்களொட் டியர்களைய. (ஈக)

கொல்லரி வரைய விவர்கூர்ச சரர்களைய
பல்லரி வரைய விவர்பப் பரர்களைய
வில்லரி வரைய நல்விதே கரிவரைய
கல்லொலி கழற்புனே கடாரரி வரையய. (ஈஉ)

கேகயர்களா லிவர்கள் கேழ்கிளர் மணிப்பூண்
மாகதர் களாலிவர் மராடரி வர்காஞ்சி
நாகரிக ராலிவர்கணம் முடைய நாட்டோ
ராகுமிவர்தா மென மெய்காட்டி யறிவித்தான். (ஈஈ)

இத்தகைய சேட்புலனுளாரை யிவணுய்த்த
விததகைமை யென்னென வினவியருள் செய்யே
லத்தனிரும் பொருளனேத்தும் வரையாதே
யுய்த்தலி னடைந்தனர்க ளாலென வுரைத்தான். (ஈச)

(உகூ) தெவ்-பகை. (ஈக) உலம்-திரண்டகல். (ஈச) வரையாது-அளவில்லாமல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அந்நெடுஞ்சேனைதன்னுட்சேணிடையடங்மாவூர்ந்து
பின்னுறநிற்குமொற்றைசேவகப்பிரானைநோக்கி
மன்னவனிவர்யாரென்னச்சாமந்தன்வணங்கியைய
வின்னவர்சேனைவெள்ளத்தியாரையென்றறிவதென்றான். (கூடு)

அவரையிங்கழைத்தியென்றானரசன்றன்வழிச்செல்வார்போற்
கவையமிட்டவரும்போந்தார்காவலன்களிகூர்ந்தம்பொன்
னவமணிக்கலன்பொன்னுடைநல்கிஞானுள்ளத்தன்பு
தவறிலான்பொருட்டொங்கிதரிதத்தன்றமர்க்குமீந்தார். (கூசு)

ஆய்ந்தவெம்பரிமாத்தூண்டியையங்கதிருடத்திக்காட்டி
யேய்ந்ததஞ்சேனைவெள்ளகதெய்திஞரெய்துமெல்லை
வேய்ந்தகார்சுசேதிராயன்வேட்டைபோய்ப்புலிகோட்பட்டு
மாய்ந்தனனென்றோரொற்றன்வேந்தன்முன்வந்துசொன்னான் ()

முரசதிரனிகநோக்கிமுகமலர்ந்துவகைபூத்த
வரசனுமனிகவேந்தற்களவில்சீர்ஞாலமையோடும்
வரிசைகண்மிதப்பநல்கிவந்துமெயக்காட்டுதந்து
பாசியபதாதிதத்தம்பநிபுகசெலுத்தினென்றான். (கூஅ)

அறைந்தவார்கழற்காற்சேனைகாவலனளிகந்தகந்தஞ்
சிறந்தசேணுட்டிற்செல்லசெலுத்தியான்போன்றுநிற்ப
நிறைந்தநான்மாடக்கூடனிருநகனகரிலின்றுகே
மறைந்தனன்மனிதவேடங்காட்டியமறவனோடும். (கூக)

கண்டனன்பொருகைகாடன்வியந்தனன்கருதாசங்கை
கொண்டனன்குறித்துநோக்கியிதுகூடன்மேய
வண்டர்தம்பெருமான்செய்தவாடலென்றெண்ணிக்கண்ணீர
விண்டனன்புளகம்போர்ப்பமெய்யன்புவடிவமானான். (சஅ)

தனக்குயிர்த்துணையாநின்றசாமந்தன்றன்னைநோக்கி
யுனக்கெளிவந்தாகூடலுடையநாயகரேயென்று
லெனக்கவராவார்நீயேயென்றவற்கியாவுங்கல்கி
மனக்கவல்பின்றிவாழ்ந்தான்மதிவழிவந்தமைந்தன். (சக)

மெய்க்காட்டிட்டபடலம் முற்றிற்று.

ஆ படலம் - கூக - க்கு திருவிருத்தம் - கஎஅச.

(கூடு) சேண்-தூரம். (கூஎ) பரிமா-குதிரை. (கூஅ) அனிகம்-சேனை. பரசல்-துதித்தல். (சஅ) ஆசங்கை-சந்தேகம். (சக) உயிர்த்துணை-உறுதிச்சுற்றம்.

முப்பத்தோன்றாவது,

உலவாக்கிழியருளியபடலம்.



அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியார்பொருட்டுப்பரிவையவராகிச்செழியன்காணவிடைக் [ங்
கொடியார்வந்துமெய்க்காட்டக்கொடுத்தவண்ணமெடுத்துரைத்து
சுடியார்கொன்றைமுடியாரக்கன்னிநாடன்றனக்கிசைந்த
படியாலுலவாக்கிழிகொடுத்தபடியையறிந்தபடிபகர்வாம். (க)

வள்ளல்குலபூடணன் றிங்கள்வாரந்தொடுத்துச்சிவதருமம்
மூள்ளவெல்லாம்வழாதுநோற்றுழுகும்வலியாற்றன்னுட்டி
லெள்ளலில்லாவேதியரையிகழ்ந்தானதனுன்மழைமறுத்து
வெள்ளமருகவளங்குன்றிவிளாவஃகியதுநாடெல்லாம். (உ)

அறவோரெல்லாநிரப்பெய்தியாகங்கிடந்தநூலன்றி, மறைநூ
லிழந்துமுனிவேள்வியானோர்வேள்விதென்புலத்தி, னுறைவோர்
வேள்வியிழந்திழிந்ததொழில்செய்தாற்றுதியிர்வளர்ப்பான், புறநா
டூணந்தார்பசியாலேபுழுங்கியொழிந்தகுடியெல்லாம். (ஊ)

எந்நாடூணேவோமெனவிரங்கவிரங்கிமதிக்கோன்மதிநாளிற்
பொன்னுண்முளரித்தடங்குடைந்தசித்திக்களிற்றைப்பூசித்துத்
தன்னுதரவாற்கயற்கண்ணிதலைவன்றன்னையருச்சித்து
முன்னுவீழ்ந்துகரமுகிழ்த்துப்பழிச்சிமகிழ்ந்துமொழிகின்றான். (எ)

அத்தவுலகிலுயிர்க்குயிர்நீயல்லையோவவ்வுயிர்பசியா
லெய்த்தவருத்தமடியேனேவருத்துமாறென்யானீட்டி
வைத்தபொருளுந்தருமத்தின்வழியேசென்றதினியடிகள்
சித்தமலர்ந்தென்னிடும்பைவினைதீரவருட்கண்செய்கவென. (ஏ)

கோளாடரவமரைக்கசைத்தகூடற்பெருமான்குறையிரக்கு
மாளாவரசன்றவறுசிறிதகங்கொண்டதனைத்திருச்செவியிற்
கேளார்போலவாளாதேயிருப்பமனையிற்கிடைத்தமலன்
றாளாதரவுபெறநினைந்துதரையிற்கிடந்துதுயில்கின்றான். (ஐ)

அங்கண்வெள்ளியம்பலத்துளாடுமடிகளவன்கனவிற்
சங்கக்குழையும்வெண்ணீறுஞ்சாரிகோவணமுந்தயங்கவுரன்

(க) வயவர்-வீரர். உலவாக்கிழி-குறையாதகிழி. (உ) அஃகல், சுருங்கல். (ஊ) நிரப்பு - வறுமை. (எ) ஆதரவு-அன்பு. எய்த்த-இளைத்த. (ஐ) வாளாதே-சும்மா.

சிங்கநாதங்கிடந்தசையச்சித்தவடிவாயெழுந்தருளி
வெங்கண்யானைத்தென்னவர்கோன்முன்னின்றினைவிளம்புவார்.

ஏடாரலங்கல்வரைமார்பவெம்பாலென்றுமன்புடைமை
வாடாவிரதவிழுச்செல்வமுடையாய்வையமறங்கடிந்து [ன்
கோடாதளிக்குஞ்செங்கோன்மையுடையாயுனக்கோர்குறையுளது
வீடாவளஞ்சேர்நாட்டிங்ணாள்வேள்விச்செல்வமருகியதால். (அ)

மறையேநமதுபீடிகையாமறையேநமதுபாதுகையா
மறையேநமதுவாகனமாமறையேநமதுநூபுரமா
மறையேநமதுகோவணமாமறையேநமதுவிழியாகு
மறையேநமதுமொழியாகுமறையேநமதுவடிவாகும். (க)

வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்வித்திலிலக்காய்ப்
போதங்கொளுத்திங்ிலநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்க்கும்
பேதஞ்செய்யும்பிணியவிழ்த்தெம்பிரியாவீடுதருவதுதே
ஞதஞ்செய்யுந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும். (கo)

அந்தமறைகடமக்குறுதியாவாரந்நூல்வழிகலிநோய்
ங்ந்தமகத்தீவளர்த்தெம்பாற்ங்ந்தைசெலுத்துமந்தணரா
லிந்தமறையோர்வேள்விமழைக்சேதுவாகுமிவர்தம்மை
மைந்தவிகழ்ந்துகைவிட்டாயதனுன்மாரிமறுத்தன்ரூல். (கக)

மும்மைப்புவனங்களுமுய்யமுத்தீவேட்குமிவர்தம்மை
நம்மைப்போலக்கண்டொழுகினாளுநாலுவறம்பெருக்கிச்
செம்மைத்தருமக்கோலோச்சித்திகிரியுருட்டிவாழ்தியென
வும்மைப்பயன்போலெளிவந்தாருலவாக்கிழியொன்றுதவுவார். ()

இந்தக்கிழியிலெத்துணைப்பொன்னெடுத்துவழங்குந்தொறுநாங்க
டந்தவளவிற்குறையாததன்மைத்தாகுமிதுகொண்டு
வந்தவிலம்பாடகற்றென்றுகொடுத்துவேந்தன்மனக்கவலை
சிந்தத்திருநீறதுசாத்திமறைந்தாரையர்திருவுருவம். (கஙு)

கண்டகனவுநனவாகத்தொழுதானெழுந்தாகெளரியர்கோ
னண்டர்பெருமான்றிருவடிபோலம்பொற்கிழியைமுடித்தலைமேற்
கொண்டுமகிழ்ச்சிதலைசிறப்பங்ின்ரூர்முகூர்த்தங்கூத்தாடித்
தண்டாவமைச்சர்படைத்தலைவர்தமக்குங்காட்டியறிவித்தான். ()

(எ) தயங்க-விளங்க. உரன்-மார்பு. சிங்கநாதம்-மான்கொம்பாலாகிய ஒருவாத்தியம். (அ) ஏடு-இதழ். (கக) மறுத்தன்று-மறுத்தது. (கஙு) இலம்பாடு-வறுமை. (கச) நனவு-விழிப்பு.

செங்கணரிமான்பிடர்சுமந்ததெய்வமணிப்பூந்தவிசேற்றிச்
சங்கமுழங்கமறைமுழங்கச்சாந்தந்திமிர்ந்துதாதொழுகத்
தொங்கலணிந்துதசாங்கவிரைத்தூபநறுநெய்ச்சுடர்வளைத்துக்
கங்கைமிலந்தகடவுளெனக்கருதிப்பூசைவினைமுடித்தான். (கடு)

அடித்துவணங்கிவலஞ்செய்திட்டம்பொற்கிழியைப்பொதிநீக்கி
யெடுத்துமுத்தீவினைஞர்க்கும்யாகங்களுக்கும்யாவர்க்கு
மடித்துநாளும்வரையாதுவழங்கவழங்கவடியார்க்குக்
கொடுக்கக்குறையாவீட்டின்பமாயிற்றையர்கொடுத்தகிழி. (கசு)

ஆயபொதியில்விளைபொன்னுலசும்புசெய்துவிசும்பிழிந்த
கோயிலதனையகம்புறமுங்குயின்றுஞானக்கொழுந்தனைய
தாயிலறுகாற்பீடிகைவான்றடவுகொடியநெடியபெரு
வாயில்பிறவுமழகெறிப்பவேய்ந்தான்மறையின்வரம்பறிந்தான். ()

மூந்திக்குறையாதிதிக்கடலேமுகந்துமுகந்துநாடோறுஞ்
சிந்திக்குலபூடணக்கொண்டறெய்வதருமப்பயிர்வளர்ப்பப்
பந்தித்திரைமுந்நீர்மேகம்பருகிச்சொரியப்பலவளனு
நந்திக்கன்னிநாடளகைநகர்போற்செல்வந்தழைத்தன்றே. (கஅ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வையாகரணர்கணேயாயிகர் மறைவல்லோர் மறைமுடிசொல்
லாய்வோர், மெய்யாயிருதிகள்பொய்யாவிரதிகள் வேள்வித்தழல்க
ளோவாழ்விப்போர், பையாடரவணியையானனுரைபகர்வோருலகி
யலகல்வோர்க, ளெய்யாதுறைதலினேயாதளகையதென்னப்பொ
லிவதுதென்னுடு. (கக)

உலவாக்கிழியருளியபடலம் முற்றிற்று.

ஆ படலம்-சo-க்கு திருவிருத்தம் - கஎஉ.

முப்பத்திரண்டாவது,

வளையல்விற்றபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேதந்தனதுவடிவென்றுவிண்ணின்றிழிந்தவிமானமறைக்
கீதன்செழியன்றனக்குலவாக்கிழிதந்தளித்தவழியிதுவப்
போதங்கடந்தபொருள்வணிகப்புத்தேண்மாடமணிமறுகு
பாதந்தடவநடந்துவளைபகர்ந்தபரிசுபகர்கிற்பாம். (க)

(கடு) தொங்கல்-மாலை. (கஎ) அசும்பு-ஒளி. தகடென்பதுகுறிப்பு. (கஅ) நந்தி-வளர்ந்து. (கக)நையாது-கெடாது. (க)போதங்கடந்த ஆன்மபோதத்துக்கப்பாற்பட்ட. போதம்-அறிவு.

இறைவன் குலபூடணன் றிகிரியிவ்வா றுருட்டொண்முன்னூட்
சிறைவண்டறையுந்தாருவனதெய்வமுனிவர் பன்னியர்தந்
நிறைவன்றளந்துகாட்டெனெடியோன் மகனேப்பொடியாக்கு
மறவன்றூளேர்காபாலியாகிப்பலிக்குவருகின்றான். (உ)

வேதமசைக்குங்கோவணமுமெய்யினீறுமுள்ளாளக்
கீதமிசைக்குங்கனிவாயுமுள்ளேநகையுங்கிண்கிணிசூழ்
பாதமலரும்பாதுகையும்பலிகொள்கலனுங்கொண்டிரதி
மாதர்கணவன்றவவேடமெடுத்தாலொத்துவருமெல்லே. (ஊ)

விள்ளுங்கமலச்சேவடிசூழ்சிலம்பினெலியுமிடறதிரத்
துள்ளுங்கீதவொலியுங்கைத்துடியினெலியுந்தூளச்செவிகீண்
டெள்ளம்பிளந்துநிறைகளுந்தீர்த்தொல்லேவருமுன்வல்லியர்கள்
பள்ளங்கண்டெருபுனல்போற்பலிகொண்டில்லின்புறம்போந்தார்.

மேற்படி வேறு.

ஐயங்கொண்டணவாயர்பரிசத்தையமன்றிக்
கையம்பொன்வளையும்பெய்வார்கருத்துநாணன்றிக்காசு
செய்யும்பொன்மருங்குனுணுமிழப்பர்வேள்சிலையம்பன்றிக்
கொய்யுந்தண்மலர்க்கணம்புங்கொங்கையிற்சொரியச்சோர்வார். (எ)

மடமயிலனையாரெங்கள்வளையினைத்தருகிரென்றூர்
கடல்விடமயின்றூனுங்கள்கந்தரத்துள்ளதென்றான்
றடமதிக்கொம்பனெரெங்கலையினைத்தருகிரென்றூர்
மூடமதிமிலந்தானுங்கண்டகமதிபிடத்ததென்றான். (ஈ)

இடையறிந்தெம்மைச்சேர்மனென்றனிவளையரெங்கோன்
கடலமுதனையீர்நுங்கட்கிடையினிக்காணுதென்றான்
மடநலாரஃதேதற்பண்டைவண்ணமீந்திலிற்செல்ல
விடையளித்தருண்மினென்றூர்வேலைபுக்குறங்குமென்றான். (ஏ)

நங்கையர்கபாலிக்கென்றுநவிலேபோலுமென்ற
ரங்கணனவிலாமைநும்மனோர்க்கடுத்ததென்றான்
மங்கையரடிகணெஞ்சம்வலியகற்போலுமென்றூர்
கொங்கலர்கொன்றையானுங்கொங்கையேவன்கலென்றான். (அ)

காதுவேலன்னகண்ணூர்கங்கைநீர்சுமந்ததேதுக்
கோதுமினென்றூர்நும்பாலுண்பலியேற்கவென்ற

(உ) திகிரி-சக்கரம். (ஊ) அசைக்கும்-கட்டப்பட்ட. (ஈ) துடி-டமருகம். (ஊ) ஐயம்-பிச்சை. பரிகலம்-உண்கலம்.(ஈ) கந்தரம்-கழுத்து. கலை-ஆடை. (ஏ) இடை-காலம். இடை-நடு. விடை-உத்தரவு, இடபம். (அ) கல்-கல், மலை.

னேதுபோலிருந்ததையனிசைத்தசெப்பென்றுரீசன்
கோதுறுவமுதன்னீர் நுங்கொங்கைபோலிருந்ததென்றான். (கூ)

கறுத்ததையெவன்கொலேயகந்தரமென்றுர்வேளை
வெறுத்தவன்மாரிபெய்தற்கென்றனன்விழியால்வேலை
யொறுத்தவர்யாவதென்றீருத்தரமென்றுர்கூற்றைச்
செறுத்தவன்றென்பானின்றுநோக்கினுற்றெரிவதென்றான். (கo)

செக்கரஞ்சடையான்கண்ணிற்றம்முருத்தெரியநோக்கி
யிக்கொடியார்போற்கண்ணுளெம்மையுமிருத்தீரென்றுர்
நக்கனுந்தேயன்னுர்கண்ணிடைக்கண்டுநகைத்துநம்மின்
மிக்கவர்நுங்களுள்ளார்விழித்தவர்க்காண்மினென்றான். (கக)

அஞ்சலிப்போதுபெய்வார்சரணமென்றடியில்வீழ்வார்
தஞ்சனத்தளிர்க்கைநீட்டித்தழுவியகிடைக்குந்தோறு
மெஞ்சுவானெஞ்சாதேத்தியெதிர்மறையெட்டுந்தோறும்
வஞ்சனையகல்வானல்லையல்வஞ்சியர்க்கணியனுமோ. (கஉ)

அடித்தெமைத்தழாதீரேனீரவிழ்ந்தபூங்கலையாமீள
வுடித்துமினும்பால்யாங்கண்மையஞ்சுழப்பநோக்கிக்
கடித்தெமர்முனியாமுன்னங்கழற்றியவோயுங்கையி
லெடுத்திடுமென்றுர்நாமோயிதுமென்றேகினுனே. (கஙூ)

பிள்ளைவெண்டிங்கள்வேய்ந்தபிரான்கொண்டுபோனநாணு
முள்ளமுமீட்கலாற்றுதுயங்கினுர்கலையுஞ்சங்குந்
துள்ளவைங்கணையான்வாளிதூப்பவெம்பசலையாகங்
கொள்ளைகொண்டுண்ணநின்றுரந்நிலைகொழுநர்கண்டார். (கச)

பொய்தவடிவாய்வந்துநம்மனைப்பொன்னினன்னுர்
மெய்தழைகற்பைநாணவேறொடுங்களைந்துபோன
கைதவன்மாடக்கூடற்கடவுளென்றெண்ணித்தேர்ந்தார்
செய்தவவலியாற்காலமூன்றையுந்தெரியவல்லார். (கஞ)

மேற்படி - வேறு.

கற்புத்திரிந்தார்தமைநோக்கிக்கருத்துத்திரிந்தீர்நீளாழி
வெற்புத்திரிந்தமதித்கூடன்மேயவணிகர்கன்னியராய்ப்

(சு) காது-கொல்லுகின்ற. கங்கை-கங்காநதி. கம் - தலையோடு. கை-உள்ளங்கை. செப்பு-சொல், கிண்ணம். (கo) கந்தரம் - கழுத்தும் மேகமும். உத்தரம்-பதிலும், வடக்கும். (கக) கொடியார்-கொடியார், பெண்கள். நக்கன்-நிருவாணி. (கஉ) எஞ்சுவன்-விலகுவன். (கஙூ) தழாதீரேல்-சேராதாராயின். (கச) உயங்கினுர்-வருந்தினுர். (கஞ) கைதவன்-வஞ்சகன்.

பொற்புத்திரியாதவதரிப்பீர்போமென்றிட்டசாபங்கேட்
டற்புத்திரிந்தாரெங்களுக்கீதகல்வதெப்போதெனமுனிவர். (கசு)

அந்தமாடமதுரைநகர்க்கரசாகியசுந்தரக்கடவுள்
வந்துதும்மைக்கைதீண்டும்வழியிச்சாபங்கழியுமெனச்
சிந்தைதளர்ந்தபன்னியருந்தென்னர்மதுரைத்தொன்னகரிற்
கந்தமுல்லைத்தார்வணிகர்காதன்மகளிராய்ப்பிறந்தார். (கள)

வளர்ந்துபேதையிளம்பருவமாதியல்குற்புடையகன்று
தளர்ந்துகாஞ்சிமருங்கொசியத்தும்பியண்ணந்தரும்புமுலை
கிளர்ந்துசெல்லும்பருவத்திற்கிடைத்தாராகவிப்பான்மண்
ணளந்தவிடையான்வந்துவளாபகரும்வண்ணமறைகிற்பாம். (கஅ)

கங்கைகரந்துமணிகண்டங்கரந்துநுதற்கண்கரந்தொருபான்
மங்கைவடிவுங்கரந்துழையுமழுவுங்கரந்துமழவிடையூ
ரங்கணழகர்வளாவணிகராகியேனமளந்தறியாச்
செங்கமலச்சேவடியிரண்டுந்திரைநீர்ஞாலமகள்சூட. (ககூ)

பண்டுமுனிவர்பன்னியர்பாற்கவர்ந்தவளாயேபட்டுவடங் [போற்
கொண்டுதொடுத்தும்மீண்டவர்க்கேயிடுவேமெனுமுட்கோளினர்
றொண்டர்தொகுத்தவைவண்ணத்துணர்த்தார்போலத்தோள்சுமந்
மண்டுவளாயைவிலைபகர்த்துவணிகமறுகில்வருகின்றார். [தூ

மன்னுமறையின்பொருளுரைத்தமணிவாய்திறந்துவளாகொண்மி
னென்னுமளவிற்பருவமுகிலிமிழின்னிசைகேட்டெழுமயில்போற்
றுன்னுமணிமேகலைமிழற்றத்தாயவணிகர்குலமகளிர்
மின்னுமணிமாளிகைகின்றும்வீதிவாயிற்புறப்பட்டார். (உக)

வாளகளிவொறெனத்தங்கண்மனமெல்லாந்தம்புடையொதுங்கத்
தோளகளிவார்வருகின்றார்தம்மைக்கொம்மைவெம்முலையார்
தாளகளிதிங்குழலிசைபோற்சுரும்புபாடக்கருங்குழன்மேல்
வீளகளொழுகநடங்கிவருமின்போலடைந்துகண்டார்கள். (உஉ)

கண்டவடிவாற்றிளைப்பதற்குக்கழிபேரன்புகாதல்வழிக்
கொண்டுசெல்லவொருசார்தங்குணனுநாணமுதலுன்கு

(கசு) கருத்துத்திரிந்தார்-எண்ணம்மாறுபட்டவர்கள். வெற்புத்திரிந்த-மலையானது மதிலாகமாறிய. (கள) தென்னர் - பாண்டியர். (கஅ) காஞ்சி - இடையிலணியு மோராபரணம். அண்ணந்து-தலைநிமிர்ந்து. மண்ணளந்த விடையான் - திருமாலாகிய விடபத்தினையுடையவர். பகரும்-விலைகூறும். (ககூ) கரந்து-மறைத்து. மணிகண்டம்-கரிய கண்டம். பட்டு வடம்-பட்டுக்கயிறு. (உஉ) தோ-ஆசை.

மண்டியொருசார்மறுதலைப்பமனமுமுழன்றுதடுமாற
வண்டர்பெருமான்வினையாடற்கமையச்சூழ்ந்தாரமுதனையார். ()

கலிவிருத்தம்.

இரங்கு மேகலை சிலம்பன் றி யேஅய
விரும்பிய குழைதொடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனி
னரும்பிய முலையினர்க் கழகுண் டாகுமோ. (உச)

செல்வநல் வணிகிரெஞ் செங்கைக் கேற்பன
கல்வளை தெரிந்திடு மென்றுநாய் கர்முன்
வல்வள ரிளமுலை மகளிர் மின்னுமிழ்
கல்வளர் கடகமென் காந்த ணீட்டினர். (உடு)

பண்டரு கிளவியங்க யற்கட்பா வைகைத்
தண்டளிர் பற்றிய தடக்கை மாதர்கைம்
முண்டகம் பற்றியே முகிழ்த்துப் பல்வரி
வண்டுக ளேற்றுவார் மையலேற் றுவார். (உசு)

புங்கவ னிவ்வளை புடைத்து மீளவந்
தெங்களுக் கிடவிலை யிதுதி ராலெனக்
கொங்கவிழ் பைங்குழ லெருத்தங் கோட்டினின்
றங்கர நீட்டுவார் ஆசை நீட்டுவார். (உஎ)

எமக்கிது மெமக்கிது மெனப்பின் பற்றியே
யமைத்தடக் தோளினு ரங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்தவோர் சார்பிலா மையாற்
கமைப்புறு நாண்முதற் காப்பு நீங்கினர். (உஅ)

முன்னிடு வளையெலாங் கழல முன்புசூழ்ந்
தின்னவை பெரியவே றிடுமென் றிட்டபி
னன்னவு மனையவே யாக மீளவந்
தின்னமுஞ் சிறியவா விடுமென் றேந்துவார். (உக)

பின்னிடும் வளைகளுஞ் சரியப் பேதுறு
முன்னெதிர் குறுகிநீர் செறித்த மொய்வளை

(உங) கழி-மிகுதி. மறுதலைப்ப-தடுப்ப. அண்டர்-தேவர். (உடு) நாய்கர்-செட்டியார். வல்-சூதாடு கருவி. (உசு) கிளவி-சொல். முண்டகம்-தாமரை. முகிழ்த்து-குவித்து. வரி-கீற்று. வண்டுகள்-வேளையல்கள். (உஎ) புடைத்து-உடைத்து. எருத்தம்-பிடரி. (உஅ) அமைமூங்கில். கமைப்பு-பொறுமைத் தன்மை.

தன்னெடு கலைகளுஞ் சரிய தேயென
மின்னென நடங்கினர் வேனெடுங் கணர். (நo)

இவ்வளை போல்வன யாமுன் கண்டிலே
மெய்வ்வளை வணிகரிவ் வரிய வெள்வளை
யெவ்வயி னுள்ளவின் றினிய வாகியெம்
மெய்வ்வளர் பொடிப்பெழ வீக்கஞ் செய்தவே. (நக)

நாளையும் வளையிட நண்ணுமிங் கென்பார்
கோள்வளை வீலையிது கொண்டுபோ மென்பார்
வாள்விழி யீர்பிளுள் வாங்கிக் கோடுமென்
ரூளரி யேறனு ராடிப் போயினர். (நஉ)

போயின வணிகர் தம்புடையின் மின்னெனப்
பாயின மகளிரும் பலருங் காணமுன்
மேயின விண்ணிழி விமானத் துள்ளொளி
யாயின திருவுரு வாகித் தோன்றினர். (நங)

எழசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மட்டலம்புகோதையார்முன்வளைபகர்ந்தவணிகர்தாம்
பட்டிசைந்தவல்குனங்கைபாகராகுமெனவியந்
தட்டதும்புமுவகைவெள்ளமுற்றெழுந்சகுமிழிபோற்
கட்டதும்புபுனலிலாழ்ந்துகளியடைந்தகதெலாம். (நச)

உருவிலாளியுடல்பொடித்தவொருவர்கூடலிருவரான்
மருவிலார்திருக்கைதொட்டுவளைசெறித்தநீர்மையாற்
கருவின்மாதராகிநாய்கர்கன்னிமார்கண்மின்னுவேற்
பொருவில்காளையெனவரம்பில்புதல்வரைப்பயந்தனர். (நஙி)

பிறந்தமைந்தரளவிறந்தபெருமைகொண்டபெருமிதஞ்
சிறந்தவீரமாற்றலேற்றதிறல்புனைந்துவைகினர்
மறந்ததும்புவேனெடுங்கண்வணிகமாதர்சிறிதுநா
ளிறந்தரன்றனருளடைந்துதுணையடிக்கண்வைகினர். (நசு)

வளையல்விற்றபடலம் முற்றிற்று.

ஆடபடலம் - சக - க்கு திருவிருத்தம் - களடுக.

(நo) சரிய-கழல. மொய்-நெருங்கிய. வெள்வளை-சங்கு வளையல். வளர்பொடிப்பு. அதிகரிக்கின்ற உரோம கூர்ச்சிதம். (நஉ) கோள்-வாங்கிக்கொண்ட. கோடும்-கொள்ளுதும். (நங) பாயின-பரவி இருந்த. (நச) மட்டு-தேன். கோதை-மாலை. களி-மகிழ்ச்சி. (நஙி) உருவிலாளி-மன்மதன். இருவர்-பிரமவிட்டுணுக்கள். பொருவில்-ஒப்பில்லாத. (நசு) திறல்-வெற்றி. மறம்-வீரம். துறந்து-கழிந்து.

முப்பத்துமூன்றாவது,

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்.



கலிவிருத்தம்.

கொத்திலங்குகொன்றைவேய்ந்தகூடலாதிமாடகீள்
பத்தியம்பொன்மறுகணைந்துவீதிபகர்ந்தபரிசுமுன்
வைத்தியம்பிஞமியக்கமாதர்வேண்டவட்டமா
சித்திதந்ததிறமினித்தெரிந்தவாறுசெப்புவாம். (க)

மின்னலங்கல்வாகைவேல்விழுப்பெருங்குலத்தினிற்
றென்னவன்றனாணைநேமிதிசையெலாமுருட்டுநாண்
முன்னைவைகலூழிதோறுமோங்குமொய்வரைக்கணே
மன்னுதன்பராரையாலநிழன்மருங்குமறைமுதல். (உ)

அடுப்பமாசில்வெள்ளிவெற்பருகிருக்குமரகதங்
கடுப்பவாமமிசையிருந்துகனகவெற்பன்மகளெனும்
வடுப்படாதகற்பிஞண்மடித்துவெள்ளிலேச்சுருள்
கொடுப்பநேசமூறுபோகுரவனுகிவைகினன். (ங)

பிருங்கிநந்தியேமுதற்பெருந்தகைக்கணத்தரு
மருங்கிருந்தசனகனுதிமாதவத்தர்நால்வரு
மொருங்கிறைஞ்சியுண்ணவுண்ணவமுதமூறுசிவகதைக்
கரும்பருந்தவாய்மலர்ந்துகருணைசெய்யுமெல்லைவாய். (ச)

பௌவமூழ்குசூர்தடிந்தபாலனுக்குமூலைகொடுத்
தெவ்வமாயவினைகடீரியக்கமாதரறுவருந்
தெய்வநீறுமுழுதணிந்துசெய்யவேணிகண்டிகைச
சைவவேடமாதவந்தரித்துவந்துதோன்றினார். (ஞ)

மந்திரசிலம்பலம்புமலரடிக்கண்வந்திசெய்
தெந்தையட்டசித்திவேண்டுமெங்களுக்கெனத்தொழா
வந்தளிர்க்கையவரிரப்பவண்ணறன்மடித்தலந்
தந்திருக்குமாதையங்கைசுட்டியீதுசாற்றுமால். (ட)

(க) மறுகு-வீதி. (உ) வாகை-வெற்றி. ஆணை-ஆக்கினை. வரை-கை லைமலை. (ங) வாமம்-தொடை. (ஞ) சூர் சூரபன்மன். இயக்கமாதர்-ஒருவகைத் தேவசாதிப் பெண்கள். அன்னவர்கார்த்திகைமாதரல்லர். (ட) மந்திரச்சிலம்பு - வேதாரண்யபுரம். அண்ணல் - இறைவன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அலர்பசும்பொலங்கொம்பன்னவணங்கிவணிறைவாலெங்கு
மலர்பராசத்தியாகிமகேசையாயணிமாவாதிப்
பலர்புகழ்சித்தியெட்டும்பணிந்துகுற்றேவல்செய்யுஞ்
சிலதியராகிச்சூழ்ந்துசேவகஞ்செய்யவைகும். (எ)

இவளீரிஞ்சித்தான்முன்னீட்டியவினையைநீக்கித்
தவலருஞ்சித்தியெட்டுந்தருமெனக்கருணைபூத்துச்
சிவபரஞ்சோதியெட்டுச்சித்தியுந்தெளித்தல்செய்தா
னவரதமறந்தாரும்மையாழ்வினைவலத்தான்மன்னோ. (அ)

செழுமதிப்பிளவுவேய்ந்ததேவமக்குற்றநோக்கி
முழுமதிமுகத்திஞரைமுனிந்துநீர்பட்டமங்கைப்
பழுமரமுதலஞ்ஞானப்பாறையாய்க்கிடமினென்னக்
கழுமலுற்றவர்தாழ்ந்தென்றுகழிவதிச்சாபமென்றார். (கூ)

இப்படிகருங்கலாகிக்கிடத்திராயிரம்யாண்டெல்லைக்
கப்புறமதுரைநின்றுமடித்துமைத்தொடுத்தசாபத்
துப்பறநோக்கிநுங்கடொல்லுருநல்கிச்சித்தி
கைப்படுகனிபோற்காணக்காட்டுதும்போதிரென்றான். (கo)

வஞ்சிவிருத்தம்.

கொடியனுர்களறுவரு, நெடியவானிகிமிர்ந்துகார்
படியும்பட்டமங்கையா, லடியிற்பாறையாயினர். (ஙக)

கதிர்கலம்பெய்காட்சிபோ, லுதிர்பழத்தினுடலெலாம்
புதைபடக்கிடந்தனர், மதரரித்தடங்கணர். (கஉ)

பருவமாயிரங்கழிந், தொருவமாடமதுரையெங்
குரவனெண்குணத்தினன், நிருவுளந்திரும்பினன். (கங)

தன்னதிச்சைகொண்டதோ, ரின்னருட்குரவனு
யங்நெங்கலாயினர், முன்னர்வந்துதோன்றினன். (கச)

இருட்டதும்புகோதையார், மருட்டதும்புவினைகெட
வருட்டதும்புகண்ணினுற், நெருட்டதும்பநோக்கினன். (கடு)

(எ) அணங்கிவள்-தெய்வமாகியஇவள். நிறைவால்-பூரணத்தால். (அ) தவலரும்-கெடுதலற்ற. உம்மை-முற்பிறப்பு. (கூ)பட்டமங்கை-ஓ ரூர். பழுமரமூதல்-ஆலடியில். அஞ்ஞானப்பாறை-அறிவற்ற கல். (கo) எல்லை-அளவு. துப்பு-வன்மை. (ஙக)கொடியனுர்-கொடிபோல்வார். (ஙங) ஒருவ-நீங்க. (கச) தன்னதிச்சை-வினையின் றியதமது சுதந்த ரத்தன்மை. (கடு) மருட்டதும்பு-மயக்கநிறைந்த: வினை-பாவவினை.

அடிகளேக்கவம்புயங், கடிகொணெய்தல்காந்தள்பைங்
கொடிகொண்முல்லேகுமுதமேற், படியப்பூத்தபாறையே. (கசு)

தாக்கவேதகத்திரும், பாக்கமுற்றபொன்னென
நீக்கமற்றவிருண்மல, லீக்கமற்றுவிட்டதே. (கஎ)

நிறையுமன்பெனுந்நதி, பொறையெனுங்கரைகடந்
திறைவனின்னருட்கடற், றுறையின்வாய்மடுப்பவே. (கஅ)

எழுந்திறையடிக்கணே, யழுந்துநேசமொடுதவக்
கொழுந்தளிர்களறுவரும், விழுந்திறைஞ்சினரரோ. (கக)

சுமரற்கூட்டுமிளமுலே, யுமையொப்பார்கள்சென்னிமே
லமலச்சோதியங்கையாங், கமலப்போதுசூட்டினன். (உ0)

சித்தியெட்டுமெந்நலார், புத்தியிற்கொளுத்தவே
கைத்தலத்தில்வைத்ததோர், முத்தெனத்தெருட்டுவான். (உக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அணிமாமகிமாவிலகிமாவரியசரிமாப்பிராத்திமலப், பிணிமாசு
டையோர்க்கடைவரியபிராகாமியமீசத்துவமெய், துணிமாயோகர்க்
கெளியவசித்துவமென்றெட்டாமிவையுளக்கண், மணிமாசறுத்தோர்
வீளையாட்டின்வகையாமவற்றின்மரபுரைப்பாம். (உஉ)

அறவுஞ்சிறியவுயிர்தொறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்சென்
றுறையுஞ்சிறுமையணிமாவாமுவரிஞாலமுதன்மேலென்
றறையுஞ்சிவாந்தமாருறுமுள்ளும்புறனுமகலாதே
நிறையும்பெருமைதனேயன்றோமகிமாவென்னுநிரம்பியநூல். (உங)

இலகுமேருபாரம்போலிருக்கும்யோகிதனேயெடுத்தா
லிலகுவானதூலமெனவிருப்பதிலகிமாவாகு
மிலகுவானபரவணுப்போலிருக்கும்யோகிதனேயெடுத்தா
லிலகுமேருபாரமெனவிருப்பதன்றேகரிமாவாம். (உச)

பிலத்திலிருந்தோனயனுலகிற்புகுதன்மீண்டும்பிலமடைதல்
பலத்தின்மிகுந்தபிராத்தியதாம்பாகாயத்தினண்ணுதல்வான்
புலத்தினியங்கலிச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந்
தலத்தினினேன்றபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர். (உடு)

(கசு) அடிகள் - கடவுள். (கஎ) வேதகம்-ஒருமருந்து. (கஅ) பொறை-பொறுமை. (உ0) சென்னி-தலே. (உஉ) உளக்கண்மணி-ஞானவிழிமணி. மரபு-முறைமை. (உங) பரமகாட்டை-மிகச்சிறிது. காட்டைஎன்பது 15-நிமிஷங்கொண்ட காலவளவை. (உடு) பரகாயம்-வேறுசரீரம். வான்புலம்-விண்ணுலகம். முத்தொழில்-படைத்தல்-காத்தல்-அழித்தல்.

விண்ணிலிரவிதன்னுடம்பின் வெயிலால்வேத்தும் விளக்குதல்போ
மண்ணிலுளவாம்பொருள்பலவுங்காலமூன்றும்வானத்தின் [ன்
கண்ணிலுளவாம்பொருளுந்தன்காயத்தோளியாலிருத்தறித
லெண்ணிலிதுவுமறையொருசார்பிராகாமியமென்றியம்புமால். ()

ஈசனெனமுத்தொழிலுந்தன்னிச்சைவழிசெய்தெழுபுரவித்
தேசன்முதற்கோள்பணிகேட்பத்திகழ்வதீசத்துவமாகும்
பூசலவுணர்புள்விலங்குபூதமனிதர்முதலுலகும்
வாசவாதியெண்மருந்தன்வசமாக்கொள்கைவசித்துவமாம் (உஎ)

எம்மையுணர்ந்தயோகியர்க ளிவற்றைவிரும்பாரெனினுமவர், தம்
மைநிழல்போலடைந்துலகர்க்கனையார் பெருமைதனையுணர்த்துஞ்,
செம்மையுடையவிவையென்னச்சித்தியெட்டுந்தெளிவெய்தக், கொ
ம்மைமுலையா ரறுவருக்குங் கொளுத்திஞனெண் குணச்செல்வன்.

மேற்படி - வேறு.


தேவதேவபதேசித்தசித்தியைச்சிலம்பன்செல்வி
பாவனேவலத்தானன்குபயின் றுவான்வழிக்கொண்டேகிப்
பூவலர்கதுப்பினல்லா ரறுவரும்புரமூன்றட்ட
காவலனிரம்பிவைகுங்கயிலைமால்வரையிற்புக்கார். (உக)

அட்டமாசித்தி யுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆ படலம்-சஉ-க்கு திருவிருத்தம்-கஎஅ.

முப்பத்துநான்காவது,

விடையிலச்சினையிட்டபடலம்.



எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்தசூழ்மலயச்சிலம்பர்தவம்புரிந்தவியக்கிமார்க்
கந்தநாலிருசித்திதந்ததறைந்தனந்தனதடிதொழா
வந்துமீள்வளவன்பொருட்டுவடாதுவாயிறைந்தழைத்
திந்துசேகரன்விடையிலச்சினையிட்டவாறுவிளம்புவாம். (க)

தோடுவெட்டிமலைத்துவாள்விதிர்துணைவிழிக்குயிலிளமூலைக்[பைங்
கோடுவெட்டியகுறிகொண்மேனியர் சூடிகொண்மாகர்க்கடிகொள்

(உஎ) தேசன் - சூரியன். கோள்-நவக்கிரகம். (உஅ) கொளுத்திஞன் - அறிவித்தான். (உக) தேவதை - சிவபெருமான். சிலம்பன். மலையரையன். (க) இலச்சினை - முத்திரை.

காடுவெட்டியகாரணக்குறிகாடுவெட்டியசோழனென்
றேடுவெட்டியமண்டுசூழ்பொழிலெயில்சொன்கச்சியுளானவன். (உ)

உத்தமச்சிவப்பத்தரிற்பெரிதுத்தமன்புதுவிரை கலன்
மித்தையென்றுவெணீறுகண்டிகையாரமென்றணிமெய்யிலு
னித்தவேதபுராணமாதிநிகழ்த்திடும்பொருள்கண்ணுறு
லத்தனேபரதத்துவப்பொருளென்றளந்தறிகேள்வியான். (ஊ)

அங்கமாருடுவேதநான்குமறிந்துமெய்ப்பொருளாய்ந்துளஞ்
சங்கைகொண்டனுதினமன்புகழ்சாற்றுசைவபுராணநூல்
பொங்குமின்சுவையமுதுதன்செவிவாய்திறந்துபுகட்டியுண்
டெங்களையகனடியிணைக்கணிருத்துமன்புகருத்துளான். (எ)

முக்கணையகன்முப்புரத்தைமுனிந்தநாயகன்மங்கையோர்
பக்கநாயகன்மிக்கவானவர்பரவுநாயகனரவணிச்
சொக்கநாயகனுடலுஞ்செவியான்முகந்துசுவைத்தருந்
தக்கபாலொடுதேன்கலந்துதருக்கிபுண்பவளுயிலுன். (ஏ)

அங்கயற்கண்மடந்தைபாகனடித்தலந்தொழுமாசைமேற்
பொங்கிமிக்கெழுமன்பளும்மதுரேசன்மின்னுபொலங்கழற்
பங்கயப்பதமென்றுநான்பணிவேனெனப்பரிவெய்தியே
கங்குலிற்றுயில்வான்கயல்புரைகண்ணிபங்கனையுன்னியே. (ஐ)

அன்றுசெம்பியர்கோமகன்கனவின்கணேயருள்வெள்ளிமா
மன்றுணின்றவர்சித்தராயெதிர்வந்துமன்னவநின்னுளத்
தொன்றுமஞ்சலொருத்தலுகியுருத்திரிந்துதனித்துவந்
நின்றுவந்தனைசெய்துபோதியெனப்புகன்றனரேகினர். (ஒ)

கேட்டுவேந்தன்விழித்துணர்ந்துகிளர்ந்தவற்புதலுகியே
யீட்டுசேனையமைச்சுளார்பிறர்யாருமின்றிவழிக்கொளீ இ
நாட்டமூன்றவனுமவாள்கொடுநல்லருட்டுணையாய்வழி
காட்டவன்பெனுமிவுளிமேல்கொடுகங்குல்வாய்வருவானரோ. (அ)

கல்லுமாரழலத்தமும்பலகலுழியுங்குணகனேகடற்
செல்லுமாநதிபலவுமானிமிர்கன்னலுஞ்செறிசெங்கெலும்
புல்லுமாநிலனுங்கழிந்துபுறங்கிடக்கநடந்துபோய்
வல்லுமாமுலையார்கணம்பயில்வைகையந்துறையெய்தினன். (கூ)

(உ) குறி-வளைத்தழும்பு மூலத்தழும்பாதிய. ஏடுவெட்டிய-செப்பேட்டில்வரைந்த. (ஊ) விரை-வாசனை. கலன்-ஆபரணம். மித்தை-பொய். (எ) மெய்ப்பொருள் - உண்மைப்பொருள். (ஐ) கங்குல்-இரவு. (ஒ) செம்பியர்-சோழர். (அ) இவுளி-குதிரை. (கூ) அத்தம்-காடு. கலுழி-காண்யாறு. கன்னல்-கரும்பு. கணம்-கூட்டம்.

குறுகுமுன்னரதிர்ந்துவைகைகொதித்தகன்கரைகுத்திவேர்
பறியவன்சினைமுறியவிண்டொடுபைந்தருக்களையுந்தியே
மறுகிவெள்ளமெடுத்தலைத்தரமன்னவன்கரைதன்னினின்
றிறுதியில்லவனைத்தொழற்கிடையூறிதென்றஞ்சுவான். (கo)

இழுதொடுஞ்சுவையமுதுபொற்கலனிட்டுணுதிருகண்கணீர்
வழியவந்துவிலக்குவாரின்மனைந்ததாறுபகற்செயும்
பொழுதெழும்பொழுதோமறுக்கம்விளக்குமேயிகல்பூழியன்
வழுதியன்றியும்வைகையும்பகையானதென்றுவருந்திஞன். (கக)

வெள்ளநோக்கியழுங்குசெம்பியன்மெலிவுநோக்கிவிரைந்தெழீஇக்
கள்ளநோக்கிலகப்படாதவர்கனவுபோலவனனவில்வந்
துள்ளநோக்குடையன்பருக்கருளுருவமாகியசித்தர்தாம்
பள்ளநோக்கிவரும்பெரும்புனல்வற்றநோக்கினர்பார்த்தரோ. (கஉ)

வறந்தவாறுகடந்துவந்துவடக்குவாயிறிறந்துபோய்
நிறைந்தகாவல்கடந்துவீதிகணீர்திநேரியர்வேந்தனை
சிறந்தவாடகபுனிதபங்கயதிப்பியப்புனலாடுவித்
தறந்தவாதறைசாமகண்டர்தமாலயம்புகுவித்தரோ. (கங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெம்மைசெய்கதிர்கால்செம்பொன்விமானசேகரத்தின்மேய
தம்மையும்பணிவித்தெண்ணில்சராசரமனைத்துமீன்ற
வம்மையங்கயற்கண்ணளாமணங்கையும்பணிவித்துள்ளஞ்
செம்மைசெய்தின்பவெள்ளத்தழுத்திஞர்சித்தசாமி. (கச)

எண்ணியவெண்ணியாங்கேயான்பெறமுடித்தாய்போற்றி
பண்ணியன்மறைகடேறுப்பான்மொழிமணளபோற்றி
புண்ணியர்தமக்குவேதப்பொருளுரைபொருளேபோற்றி
விண்ணிழிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி. (கஞ)

எவ்வுடலெடுத்தேன்மேனுளெண்ணிலாப்பிறவிதோறு
மவ்வுடலெல்லாம்பாவமறம்பொருட்டாகவன்றே
தெவ்வுடல்பொடித்தாயுன்றன்சேவடிக்கடிமைபூண்ட
விவ்வுடலொன்றேயன்றேவெனக்குடலானதையா. (கசு)

இன்னனபலவுமேத்தியிறைஞ்சிப்டல்வரமும்வேண்டி
மின்னகுவேலினுனேவேந்தநீபோந்தவண்ணந்

(கo) அலைதர-அலைக்க. (கக) பூழியன்-பாண்டியன். (கஉ) கள்ள நோக்கில்-பொய்த்தியானத்தில். (கங) நேரியர்-சோழர். (கச) சேகரம்-கூட்டம். (கஞ) புண்ணியர்-முனிவர். (கசு) தெவ்-பகை.

தென்னவனறிந்தாலேதஞ்செய்யுமென்றூர்த்தார்க்கண்ணி
மன்னனேச்சித்தசாமியுத்தரவழிக்கொண்டேகா. (கஎ)

மண்ணினேவளர்க்கும்வைகைவடகரையளவுநண்ணிப்
புண்ணியநீற்றுக்காப்புப்புண்டரநுதலிற்சாத்தி
யுண்ணிறைகருத்துக்கேற்பவுறுதுணேயுனக்குண்டாகி
நண்ணுகவென்றுபொன்னிநாடனேவிடுத்துமீண்டு (கஅ)

கலிவிருத்தம்.

காப்புச் செய்து கதவில் விடைக்குறி
யாப்புச் செய்தமைத் தீர்ஞ்சடைச் சித்தர்போய்த்
தூப்புக் கைவரை சூழ்வட மேருவிற்
கோப்புச் செய்தபொற் கோயிலின் மேயினூர். (ககூ)

கங்குலின் கருங்கை குறைப் பாணெனச்
செங்கை நீட்டித் தினகரன் றேரூன்றலு
மெங்க ணுயக னிட்ட குறியறிந்
தங்கண் வாயிறி றப்ப வரையுரு. (உ0)

மற்றை வாயில்கண் மூன்றினும் வல்லேபோ
யுற்று நோக்கினர் தாநென்ன லொற்றிய
கொற்ற மீனக் குறிபிழை யாமைகண்
டெற்றிதாங் கொலென் றேந்தன்மு னெய்தினூர். (உக)

போற்றி மன்னநம் பொன்னங் கயற்குறி
மாற்றி யுத்தர வாயிற் கதவதி
லேற்றி லச்சினே யிட்டனர் யாரையென்
றூற்றல் வேந்தவ றிகிலம் யாமென்றூர். (உஉ)

வைகை நாடனும் வந்தது நோக்குறீஇ
யைய வின்னதோ ரற்புத மாயையைச்
செய்ய வல்லவர் யாரெனத் தேர்கிலா
னேய மெய்திய கன்மனே நண்ணினுன். (உங)

மறுத்த வுண்டியுன் மாமலர்ப் பாயலே
வெறுத்த கன்றரை மேற்பள்ளி கொள்ளவும்
பொறுத்த னன்றுயின் றூனிருட் போழ்தினிற்
கறுத்த கண்டர் கனவினிற் கூறுவார். (உச)

(கஎ) ஏதம்-துன்பம். (கஅ) ஏற்ப-தக்கவாறு. (ககூ) விடைக்குறி-இட்ப மூத்திரை. (உ0) செங்கை-செவ்விய கிரணமாகியகை. (உக) வல்லே - விரைந்து. (உஉ) உத்தர வாயில் - வடக்கு வாசல். (உங) நோக்குறீஇ-பார்த்து. (உச) பள்ளிகொள்ளவும்-கிடக்கவும்.

மட்ட லம்பிய தாதகி மாலையா
னுட்ட தும்பி யொழுகிய வன்பினுக்
கட்டி லங்கெயிற் கச்சியிற் காடெலாம்
வெட்டி நம்புடை வித்திய புத்தியான். (உஞ)

வந்து நம்மை வழிபட வேண்டிஞ
னிந்த வாயிறி றந்தழைத் தின்னரு
டந்துமீ ளவிடத் துப்பின் மூட்கொளீஇ
நந்த மால்விடை நாம்பொறித் தேமெனு. (உசு)

அருளி னுனையங் தேற்றி யகன்றபின்
மருளி னீங்கி மலர்க்கண் விழித்தெழீஇ
வெருளி னுன்வெயர்த் தான்விம்மி னுச்பல
பொருளி னுற்றுதித் தான்குல பூடணன். (உஎ)

வள்ளலன் புக்கெளி வந்த மாண்புகண்
டுள்ள வுள்ளநின் றூற்றெழு மற்புத
வெள்ள மும்பர மானந்த வெள்ளமுங்
கொள்ளை கொண்டுதன் கோமனை நீங்கினுன். (உஅ)

அளியரு மனத் தன்புடை யன்பருக்
கெளிய ராடலை யார்க்கும் வெளிப்படத்
தெளியுமாறு தெளிவித்துத் தன்னைப்போல்
விளிவிலாவின்பவெள்ளத்தழுத்தினுன். (உக)

கோச்சகக்கலிப்பா.

கோடாத செங்கோலும் வெண்குடையுங் கோமுடியு
மேடாரலங்கலிரா சேந்திரற்களித்துத்
தோடாரிதழி யான்மூட்கமலஞ்சூடிவா
னுடாளரசுரிமை பெற்றுனரபதியே. (ஈ0)

விடையிலச்சனையிட்டபடலம் முற்றிற்று.

ஆடபடலம் - சாஉ-க்கு - திருவிருத்தம் - கஅகஅ.

(உஞ) தாதகி-ஆத்தி. கட்டி-காவல். (உக) இந்தவாயில்-இந்தவடக்குவாசல். (உஎ) வெருள்-அச்சம். விம்மல்-பூரித்தல். (உஅ) அற்புத வெள்ளம்-ஆச்சரியப்பிரவாகம். (உக) அளி-இரக்கம். அல்லது, அன்பு. (ஈ0) கோடாத-வளையாத. நரபதி-குலபூடணபாண்டியன்.

முப்பத்தைந்தாவது,

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சம்புமதுரைப்பரனிரவுதனியேவங்குதனேப்பணிந்த
வெம்புகதிரோன்மருமானைவிடுத்துமீண்டுதாழிறுக்கி [கு
யம்பொற்கதவின்விடைபொறித்த தறைந்துந்தென்னனபடைக்
வம்புமலர்தோய்புனற்பந்தர்வைத்துக்காத்தவகைசொல்வாம். (க)

தென்னனரசபுரந்தரன்கோல்செலுத்துநாளிற்காடெறிந்த,மன்
னன்பின்னர்வெளிப்படையாப்போந்துபோந்தமதுரேசன், பொ
ன்னகமலத்தாள் வணங்கிப்போவான் முன்னிப் பொரும்பொரு
கைக,கன்னிநாடன்கேண்மைபெறவிடுத்தான்வரிசைக்கையுறையே

பொன்னிநாடன்வரவிடுத்தபொலம்பூணுடைமுதற்பிறவுங்
கன்னிநாடனகைகவர்ந்துதானுங்கலக்குந்தொடர்பிஞ
லுன்னிவேறுகையுறையுய்த்துறவுசெய்யவுவப்பெய்திச
சென்னிகாதன்மகட்கொடுப்பானிசைந்தானந்தச்செழியற்கு. (கூ)

செழியன்றனக்குவரையறுத்தசெய்திகேட்டுச்செம்பியர்கோன்
கழியன்புடையகுலமகளைத்தான்போய்க்கொள்வான்கருதிமதி
யுழவன்றவற்குத்தம்பியெனவந்தவரசனுகமெனும்
பழியஞ்சாதான்வஞ்சித்துப்பழனக்காஞ்சிப்பதிபுகுவான். (ச)

காஞ்சிப்பதிமுன்குறுகுமிளங்காவலோனைக்கடற்சேனை
தாஞ்சுமறியவந்தெதிர்கொடுபோய்த்தம்முன்றனகென்றிருந்தமக
ளாஞ்சிற்றிடையைமணம்புணர்த்தியந்தமருகற்கரசுநீலை
வாஞ்சிததரசபுரந்தரனேப்பிடிக்கமதித்தான்வனமெறிந்தான் (ஞ)

கலிவிருத்தம்.

மருமகன்றனுடனெழுந்துமாமனுனவளவர்கோன்
பொருமகன்றசேனையானைபுடைநெருங்கமதிவழித்
திருமகன்றன்மேலமர்த்திறங்குறித்துமுரசறைந்
திருமகன்றபல்லியம்மொலிப்பவந்துளானரோ. (ட)

(க) வம்புமலர்தோய்புனல் - வாசனையுள்ளபாதிரி முதலிய மலரி
ட்டு மணமேற்றியநீர். (கூ) பொன்னிநாடன்-காவிரிநாடன். கன்னி
நாடன்=பாண்டிநாடன். (ச) வரையறுத்த-தீர்மானித்த. (ஞ) இனவ
காவலோன்-இன்வரசன். (ட) உருமு-இடி.

திரண்டதிர்ந்தெழுந்துவந்தசென்னிசேனைதன்னகர்க்
கிரண்டியோசனைப்புறத்திறுக்குமுன்னரொற்றராற்
றெருண்டுதென்னன்மாடநீகூடன்மேயசிவனதாள்
சரண்புகுந்துவேண்டுகென்றுசார்ந்துதாழ்ந்துகூறுவான். (எ)

அன்றுபாதியிரவில்வந்தனடிபணிந்துதமியனுய்ச்
சென்றசென்னியென்னுநின்னதிருவடிக்கணன்பினு
னின்றுமந்நிலையனுயெனக்குவேண்டுவனவிடுத்
தொன்றுகேண்மைபுரிகுவானுளத்திலொன்றையுன்னினனன். (அ)

அறத்தினுக்குளாகியன்றுநின்றநீயவன்செயு
மறத்தினுக்குளாகியின்றுவன்மைசெய்வதேயறப்
புறத்தினுர்புரம்பொடித்தபுண்ணியாவெனக்கரைந்
துறைத்துவேண்டினனவேலையும்பர்நாதனருளினுல் (கூ)

மெய்துறந்தவாய்மையொன்றுவிண்ணினின்றுமண்ணிலே
யைதுதுங்கள்சேனையோடுமாகவத்துநாளோநீ
யெய்திவந்ததெவ்வரோடெதிர்ந்துருத்துநின்றுபோர்
செய்திவென்றிநின்னதாதல்செய்துமென்றெழுந்ததால். (கo)

காயவாணிசெவிநுழைந்தகாலைவேந்தரிந்திர
னையனுரடிக்கணேநயந்தவன்புமுவகையு
மாயவேலைவீழ்ந்துதாழ்ந்தகன்றுதன்னிருக்கைபோய்
மேயினனிமிர்ந்துகங்குல்விடியுமெல்லைநோக்குவான். (கக)

கழித்தகங்குலிறவிசும்புகண்விழிக்குமுன்னரே
விழித்தெழுந்துசந்தியாதிவினைமுடித்துவானநீர்
சுழித்தலம்புவேணியண்ணலாயபூசைசெய்தெழீஇத்
தெழித்தெழுந்தசேனையோடுசெருநிலத்தைநண்ணினனன். (கஉ)

அலைசிறந்தசலதிமீதோராறுசெல்லுமாறுபோன்
மலைசிறந்தநேரிவெற்பன்மள்ளர்சேனைவெள்ளமேற்
கலைசிறந்தமதிநிறைந்தகன்னிநாடுகாவலான்
சிலைசிறந்தசிறியசேனைசென்றலைத்துநின்றதே. (கங)

(எ) தெருண்டு-உணர்ந்து. (அ) தமியனுய்-தனித்தவனுய். (கூ) அறப்புறம் - பாவம். (கo) மெய்துறந்தவாய்மை - உடலற்ற உண்மை மொழி; அது அசரீரி. (கக) காயவாணி-அசரீரி. வேந்தரிந்திரன் - இராசேந்திரன். (கஉ) வீசும்புகண்விழிக்குமுன்-வானமானதுசூரியனுகியவிழியைத்திறக்குமுன். (கங) சலதி-கடல். சிலை-வில்.

உருமுவன்னகுரலினுருலவையன்னசெலவினர்
வெருவுதியின்வெகுளியார்வெடித்தவீரநகையினர்
செருவின்மானவணியினர்சினை இமடித்தவாயினர்
நிருவர்சேனைமள்ளரும்மெதிர்ந்துகைகலந்தனர். (கச)

மன்றலந்தெரியனேரிமலையவன்றமர்க்கெலாந்
தென்றலம்பொருப்பினுன்றிரண்டானான்குகருவியு
மின்றயங்குசெய்யவேணிவிடையவன்றனருளினு
லொன்றணந்தமாகவந்துருத்தெதிர்ந்துதோன்றுமால். (கடு)

தேரினேதைகந்துகஞ்சிரிக்குமோதைசொரிமதக்
காரினேதைபேரியங்கறங்குமோதைமறவர்தம்
போரினேதைவீரர்தோள்புடைக்குமோதையோடுமுந்
நீரினேதையொன்றெனக்கலந்தொடுங்கினன்றே. (கசு)

சிலபயின்றவீரரோடுசிலபயின்றவீரரே
கலபயின்றவாளரோடுகலபயின்றவாளரே
கொலபயின்றவேலரோடுகொலபயின்றவேலரே
மலபயின்றமல்லரோடுமலபயின்றமல்லரே. (கள)

கரியுகைத்தபாகரோடுகரியுகைத்தபாகரே
பரியுகைத்தமறவரோடுபரியுகைத்தமறவர்தேர்க்
கிரியுகைத்தவலவரோடுகிரியுகைத்தவலவரே
யெரியுகைத்தெதிர்ந்தகாலெனக்கலந்துமலைவரால். (கஅ)

விடுக்கும்வாளியெதிர்பிழைப்பர்வெய்யவாளியெயதுபின்
றொடுக்கும்வாளிவில்லொடுந்துணிப்பர்பின்கணிப்பற
மடுக்கும்வாளிமார்புதைப்பவாங்குமற்றைவாளிகொண்
டடுக்குமேவலாரையெய்தடர்ப்பர்கிள்ளிமள்ளரே. (கக)

சோனைமாரிபிற்சரஞ்சொரிந்துநின்றுதுள்ளுவா
ரானவாளியெதிர்பிழைத்தெதுங்குகின்றபழற்சரங
கூனல்வாளிசிலையிறத்தொடுத்தெறிந்துகூவுவார்
மீனகேதனந்துவேந்தன்வீரர்சென்னிவீரர்மேல். (உ0)

தறிந்ததாடகர்ந்தசென்னிதரையுருண்டவரையெனச்
செறிந்ததோள்சரிந்ததேர்சிதைந்தபல்படைக்கல

(கச) உருமு இடி. உலவை-காற்று. (கடு) மன்றல்-மணம். (கசு) கந்துகம்-குதிரை. கார்-யானை. (கஅ) தேர்க்கிரி-தேராகியமலை. (கக) கணிப்பு-அளவு. மேவலார்-பகைவர். கிள்ளி-சோழன். (உ0) கூனல்-வளைவு. கேதனம்-கொடி.

முறிந்தயானைகையிரமுழங்கிவீழ்ந்தசெம்புனற்
பறிந்தபாறுபாரிடங்கள்பைத்தகூளிமொய்த்தவே. (உக)

மடலினீடுதாரலங்கண்மன்னர்சேனையின்னவா
றுடலினீழலடியகத்தொடுங்கவும்பருச்சியிற்
கடலினீடுகதிர்பரப்புகடவுளெய்துமளவுநின்
றடலினீடியிடைவிடாமலமருழந்ததாலரோ. (உஉ)

அந்தநாள்னேத்தையும்மழிக்கநின்றவரணுதற்
கிந்துதீயெனக்கனன்றுருத்துநின்றுதெறுதலா
லெந்தயாறுமறவறப்பவிம்பரன்றியும்பரும்
வெந்துவானயாறும்வற்றவேனில்வந்திறுத்ததால். (உங)

மண்பிளந்துபிலநுழைந்துவரைபிளந்துநிரையவா
யெண்பிளந்துநின்றபொங்கரிலேயுகப்பிளந்துமேல்
வீண்பிளந்துபரிதிநீடுவெங்கரங்கள்யாரையுங்
கண்பிளந்தழன்றுவீசுகானலெங்குமானதெ. (உச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆயிடையலகைத்தேருமடைந்தவர்வெயர்வுமன்றித்
தூயநீர்வறந்தவந்தச்சுடுபுலந்தோய்ந்தகாலு
மீயுயர்மதிநிலாவும்வெய்யவாய்சுடுநல்லோருந்
தீயவர்தம்மைச்சேர்ந்தாற்றீயவராவரன்றே. (உரு)

விளைமதவூற்றுமாறிவெகுளியுஞ்செருக்குமாறித்
துளையுடைக்கைமம்மான்றுங்குருடையவாய்ச்சாம்பிச்சோர்ந்த
வுளர்தருமூழிக்காலிலேடுவாம்புரவியெய்த்துத்
தளர்நடையுடையவாகித்தைவருதென்றல்போன்ற. (உசு)

கானலந்தேர்மேற்சூறைக்காலெனும்பாகன்றூண்ட
வேனில்வேந்தேறிச்சீறிவெப்பமாம்படைகள்வீச
மானிலங்காவல்பூண்டமாவையிருவர்தங்க
டானையுமுடைந்துதண்ணீர்நசைசுடச்சாம்பிற்றன்றே. (உஎ)

இரக்கமில்கொடியசெல்வர்மருங்குபோயிரப்பார்போல
வுருப்பமொண்டிறைக்குங்கள்ளிநீழல்புக்கொதுங்குவாருந்

(உக) பறிந்த-ஓடின. பாறு-பருந்து. பாரிடம்-பூதம். தகர்தல்-உடைதல். (உஉ) மடல்-பூவிதழ். (உங)வேனில்-கோடை. (உச) எண்பிளந்து-அளவுகடந்து. (உரு)அலகைத்தேர்-கானனீர். தீயவர்-கொடியவர். (உசு) சாம்பி-வாடி. உளர்தரு-ஒலிக்கின்ற. (உஎ) நசை-ஆசை. சாம்பிற்று-சோர்ந்தது.

தருக்கறநிரப்பாலெய்த்தோர்தம்மினும்வறியர்பாற்சென்
றிரப்பர்போலிலேதீந்துக்கமரநிழலெய்துவாரும். (உஅ)

கொல்லிபம்பரிமான்றேரின்குறுநிழலொதுங்குவாரு
மல்லிருள்வட்டத்தோல்வெண்கவிகையுளடங்குவாருஞ்
செல்லிடம்பிறிதுகாணுர்வீரவான்சென்றுர்நின்ற
கல்லுடனிழல்சேர்வாருமாயினுர்களமரெல்லாம். (உக)

ஆயதோரமையந்தன்னிலளவிலாவுயிர்க்குமீன்ற
தாயனுர்துலேபோல்யார்க்குஞ்சமநிலேயாயகூட
லையனுர்செழியன்றனேநனந்தலேவேதநாற்காற்
பாயதோர்தண்ணீர்ப்பந்தர்பரப்பியப்பந்தர்நாப்பண். (ஈ0)

புண்டரநுதலுங்காதின்புறத்தணிமலரும்பாத
மூண்டகமலர்மேலொற்றைக்கிண்கிணிமுழக்குங்கச்சியாப்
புண்டதோலுடையுங்கண்டோருள்ளமுங்கண்ணுங்கொள்ளே
கொண்டபுன்னகையுமுள்ளக்கருணையின்குறிப்புந்தோன்ற. (ஈக)

அருமறையகத்துணின்றுங்கருந்தவராகிவேணிப்
பொருபுனல்பூரித்தாங்கோர்புண்ணியசிரகந்தாங்கி
யொருவருக்கொன்றேயாகியிலக்கருக்கிலக்கமாகித்
தருகுறும்புழையால்வாக்கித்தணித்தனர்தண்ணீர்த்தாகம். (ஈஉ)

சுந்தரப்புத்தேள்வைத்ததுறுமலர்வாசத்தெண்ணீர்ப்
பந்தர்புக்கடைந்துநன்னீர்பருகியெய்ப்பகலவாற்றல்
வந்தபின்செழியன்றன்னேர்வளவன்மேலேறிச்சீறி
யந்தமிலனிகஞ்சிந்தித்தும்பைவேய்ந்தடுபோர்செய்தார். (ஈஈ)

கடலுடைந்தென்னப்பொன்னிகாவலன்றுனேசாய
மடலுடைவாகைவேய்ந்துவளவனேமருகனேடு
மிடலுடைத்தறுகட்சேனைவீரர்வெங்கையாற்பற்றி
யடலுடைக்கன்னிநாடர்க்கரசன்முன்கொண்டுபோந்தார், (ஈசு)

கொடுவந்தவளவன்றன்னைக்கோப்பெருஞ்செழியர்கோமான்
வடுவந்ததம்பியோமொடாடீள்கூடன்மேய
கடுவந்தமிடற்றுர்முன்போய்விடுத்தெந்தைகருத்தியாதென்ன
நடுவந்தநிலேயான்கேட்பநாயகனிகழ்த்துமன்னே. (ஈஞ)

(உஅ) நிரப்பு-வறுமை. (உக) இபம்-யானை. வட்டத்தோல்-கேடகம். (ஈ0) நனந்தலை-நடு. (ஈக) புண்டரம்-விபூதிக்கிற்று. நுதல்-நெற்றி. (ஈஉ) பூரித்தல் - நிரப்பல். (ஈஈ) எய்ப்பு - இளைப்பு. (ஈசு) யாகை - வெற்றியைக்குறிக்குமாலை. (ஈஞ) வடு - குற்றம்.

அறவனீயல்லையோவுன்னகத்தினுக்கிசைந்தசெய்கென்
றிறைவனதருளால்வானின்றெழுமொழிகேட்டுவைகைத்
துறைவனுமறத்தினுற்றுற்சோழனேச்சிலமால்யானே
மறவயப்பரிபூண்மற்றும்வழங்கினனன்விடைத்தான்பின்னர். (ஈசு)


வள்ளறன்றம்பியென்னுமன்னவர்சிங்கந்தன்னைத்
தள்ளருந்தறுகணுண்மைத்தருக்கறத்தானுஞ்செல்வ
முள்ளனசிறிதுமாற்றியொதுக்கியெவ்வுயிர்க்குந்தாயாய்ப்
பள்ளநீரகலங்காத்துப்பல்வளம்பழுக்கவாழ்ந்தான். (ஈஎ)

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம்-ஈசு-க்கு திருவிருத்தம் - கஅருடு.

முப்பத்தாறவது,

இரசவாதஞ்செய்தபடலம்.



கலிநிலைத்துறை.

வரதன்மீனவன்படையிடைவந்துநீர்ப்பந்தர்
விரதனுகிரருத்தியவினையுரைசெய்தும்
பரதநூலியனுடகப்பாவையாளொருத்திக்
கிரதவாதஞ்செய்தருளியவாடலியைசப்பாம். (க)

பருங்கைமால்வரைப்பூழியன்பைந்தமிழ்நாட்டி
னிரங்குதெண்டிரைக்கரங்களாலீர்ம்புனல்வைகை
மருங்கினந்தனமலர்ந்தபன்மலர்கடூய்ப்பணியப்
புரங்கடந்தவனிருப்பதுபூவணநகரம். (உ)

எண்ணிலங்குறைசராசரமிலிங்கமென்றெண்ணி
விண்ணிலுள்ளகளுங்கோள்களும்விலங்குதியாக்கைக்
கண்ணிலுன்கதிர்முதற்பலகடவுளர்பூசை
பண்ணிவேண்டியநல்வரமடைந்ததப்பதியில். (ங)

ஞெளியுளார்பொழிற்பூவணக்கிழவர்தங்கோயிற்
றளியுளார்தவப்பேறுடனாதுகூந்தா

(ஈசு) அறவன்-நீதிகோடாதவன். (ஈஎ) வள்ளல்-வரையாதுகொடுப்போனுகியபாண்டியன். (க) வரதன்-வரமளிப்பவன். (உ) பருங்கைமால்வரை-பரியதுதிக்கையினையுடைய பெரியயானை. (ங) யாக்கைக் கண்ணிஞன்-இந்திரன்.

ளியுளார்குழலணங்களனைத்தரத்தவர்க்குங்
களியுளார்தரமயக்குறூஉங்கடலமுதனையாள். (சு)

நரம்பினேழிசையாழிசைப்பாடலுங்கடனி
னிரம்புமாடலும்பெண்ணலநீர்மையும்பிறவு
மரம்பைமாதரையொத்தனளறனெறியொழுகும்
வரம்பிலுலவர்தமக்குமேலாயிணைமண்ணே. (இ)

ஆயமாதர்பேர்பொன்னனையாளென்பவவட
னேயவாயமோடிரவிருணீங்குமுனெழுந்து
தூயநீர்குடைந்துயிர்புரைசுடர்மதிக்கண்ணி
நாயனடியருச்சனையமமுநடத்தி. (ஈ)

திருந்தர்பூவணவாணரைச்சேவித்துச்சுத்த
நிருத்தமாடிவந்தடியரைப்பொருளெனநினையுங்
கருத்தளாயருச்சித்தவர்களிப்பவின்சுவையூ
ணருத்தியெஞ்சியதருந்துவாளஃதவணியமம். (எ)

மாதரிந்நெறிவழங்குநாண்மற்றவளன்பைப்
பூதலத்திடைத்தெருட்டுவான்பொன்மலைவல்லி
காதனயகன்றிருவுருக்காணியவுள்ளத்
தாதரங்கொடுத்தருளினர்பூவணத்தையர். (அ)

ஐயர்தந்தபேரன்புருவாயினண்மழுமான்
கையர்தந்திருவுருவினைக்கருவினற்கண்டு
மையகண்ணினுள்வைகலும்வரும்பொருளெல்லாம்
பொய்யிலன்புகொண்டன்பர்தம்பூசையினேர்வாள். (கூ)

அடியர்பூசனைக்கன்றியெஞ்சாமையாலடிகள்
வடிவுகாண்பதெப்படியென்றுமடியிலச்செழியற்
கொடிவில்பொறித்திழிநல்கியவள்ளலையுன்னிப்
பிடியனளிருந்தாளஃதறிந்தனன்பெருமான். (கo)

தூய்மைநீறணிமெய்யினர்கட்டங்கந்தொட்ட
கையர்யோகபட்டத்திடைக்கட்டினர்பூதிப்
பையர்கோவணமிசையசையுடையினர்பவளச்
செய்யவேணியரங்கொருசித்தராய்வருவார். (கக)

(சு) தளி-ஆலயம். (இ) வரப்பு-எல்லை. (எ) ஆயம்-மடவார் கூட்டம். (ஏ) சுத்தநிருத்தம்-தூய்மையான நடனம். (அ) ஆதரம்-ஆசை. (கூ) நேர்வான்-செலவிடுவாள். (கo) மடி-சோம்பல். (கக) கட்டங்கம் - யோகதண்டம்.

வந்துபொன்னனையாண்மணிமாளிகைகுறுகி
யந்தமின்றிவந்தமுதுசெய்வாரொடுமணுகிச்
சிந்தைவேறுகொண்டடைந்தவர்திருவமுதருந்தா
தந்துமாளிகைப்புறங்கடையொருசிறையிருந்தார். (கஉ)

அமுதுசெய்தருந்தவரெலாமகலவேறிருந்த
வமுதவாரியையடிபணிந்தடிச்சியரைய
வமுதுசெய்வதற்குள்ளெழுந்தருள்கெனவுங்க
ளமுதனீயிங்கழைமினென்றருளுமனையார். (கஎ)

முத்தராமுகிழ்வாணகையல்குலாய்முக்க
ணத்தரானவர்தமரெலாமமுதுசெய்தகன்றூர்
சித்தராயொருதம்பிரான்சிறுகையினரா
யித்தராதலத்தரியராயிருக்கின்றுரென்றூர். (கசி)

நவமணிக்கலன்பூத்தபூங்கொம்பரினடந்து
துவரிதழ்க்கனிவாயினுள்சுவாகதங்கிலவென்
றுவமையற்றவர்க்கருக்கியமாசனமுதவிப்
பவமகற்றியவடிமலர்முடியுறப்பணிந்தாள். (கஙி)

எத்தவஞ்செய்தேனிங்கெழுந்தருளுதற்கென்னுச்
சித்தர்மேனியும்படிவெழிற்செல்வமுநோக்கி
முத்தவாணகையரும்பநின்றஞ்சலிமுகிழ்ப்ப
வத்தர்நோக்கினரருட்கணுலருள்வலைப்பட்டாள். (கசு)

ஐயருள்ளெழுந்தருளுகவடிகணீரடியே
னுய்யவேண்டியபணிதிருவுளத்தினுக்கிசையச்
செய்யவல்லனென்றஞ்சலிசெய்யவுண்ணகையா
மையலுக்கியைநோக்குமீளுக்கிதன்மனைவன். (கஎ)

வடியைநேர்விழியாய்பெருவனப்பினைசிறிதுன்
கொடியைநேரிடையெனவிளைத்தனையெனக்கொன்றை
முடியினனடியாரமென்முகிழ்முலைக்கொடிதாழ்ந்
தடியனேற்குவேறுயொருமெலிவிலையையா. (கஅ)

எங்கணையகர்திருவுருக்காண்பதற்கிதயந்
தங்குமாசையாற்கருவுருச்சமைத்தனன்முடிப்பேற்

(கஉ) ஒருசிறை - ஒருபுறம். (கசி) முத்தராம்-பாசபந்தநீங்கிய. (கஙி) துவரிதழ்-பவளம்போன்ற அதரம். சுவாகதங்கில -நல்வரவல் லவா. (கசு) அருட்கணுல் - கிருபாநேத்திரத்தால். (கஎ) உள்ந கையா - உள்ளேசிரித்து. (கஅ) வடி - மாவடு.

இங்குள்ளாடொறுமென்கையில்வரும்பொருளெல்லா
முங்கள்பூசைக்கேயல்லதையொழிந்திலவென்றாள். (௧௯)

அருந்துகல்லமுதனையவளன்புதித்திக்கத்
திருந்துதேனெனவிரங்குசொற்செவிமடுத்தையர்
முருந்துமூரலாய்செல்வமெய்யிளமைநீர்மொக்கு
ளிருந்தவெல்லையுநிலையிலவென்பதுதுணிந்தாய். (௨0)

அதிகநல்லறநிற்பதென்றறிந்தனையறத்து
ளதிகமாஞ்சிவபுண்ணியஞ்சிவார்ச்சனையவற்று
ளதிகமாஞ்சிவபூசையுளடியவர்பூசை
யதிகமென்றறிந்தன்பரையருச்சனைசெய்வாய். (௨௧)

உறுதியெய்தினையிருமையுமுன்பெயர்க்கேற்ப
விறுதியில்லவன்றிருவுருவீகையாற்காணப்
பெறுதியாகநின்மனக்கிடைப்பித்தனையீய
மறுதியான பல்கலன்களுங்கொணர்தியென்றறைந்தார். (௨௨)

ஈயஞ்செம்பிரும்பிரசிதமென்பவும்புணர்ப்பாற்
றோயும்பித்தளைவெண்கலந்தராமுதற்றொடக்கத்
தாயும்பல்வகையுலோகமுங்கல்லெனவலம்பத்
தேயுஞ்சிற்றிடைகொண்டுபோய்ச்சித்தர்முன்வைத்தாள். (௨௩)

வைத்தவேறுவேறுலோகமுமழுவுழைகரந்த
சித்தசாமிகணீற்றினைச்சிதறினர்பாவித்
தித்தைநீயிராவெரியிலிட்டெடுக்கினன்பொன்னு
மத்தைதாயகன்றிருவுருக்கொள்கெனவறைந்தார். (௨௪)

மங்கைபாகரைமடந்தையுமிங்குநீர்வதிந்து
கங்குல்வாயமுதருந்தியிக்காரியமுடித்துப்
பொங்குகாருள்புலருமுன்போமெனப்புகன்ரு
ளங்கயற்கணடனேப்பிரியாரதற்கிசையார். (௨௫)

சிறந்தமாடநீள்மதுரையிற்சித்தர்யாமென்று
மறைந்துபோயினர்மறைந்தபின்சித்தராய்வந்தா
ரறைந்தவார்கழலலம்பிடவெள்ளிமன்றுடி
நிறைந்தபேரொளியாயுறைநிருத்தரென்றறிந்தாள். (௨௬)

---

(௧௯)ஒழிந்தில-மிருந்தில. (௨0)முருந்து-பறவையிறகினடிப்புறம். (௨௧) சிவபூசையுள்-சிவபூசையினும். (௨௨) ஈகை-பொன். (௨௩) இரசிதம்-வெள்ளி. புணர்ப்பால்-சேர்க்கையால். (௨௪) பாவித்து-பொன்னுமாறுநினைத்து. (௨௫) வதிந்து- இருந்து. கங்குல்வாய்-இரவில்.

மறைந்துபோயிஞரெனச்சிறிதயர்ச்சியுமனத்தி
னிறைந்ததோர்பெருங்கவற்சியைநீக்கிஞரென்ஞச்
சிறந்ததோர்பெருமகிழ்ச்சியுமூடையளரய்ச்சித்த
ரறைந்தவாறுதீப்பெய்தனளுலோகங்களனைத்தும் (உஎ)

அழலடைந்தபினிருண்மலவலிதிரிந்தரன்ரு
ணிழலடைந்தவர்காட்சிபோனீப்பருங்களங்கங்
கழலவாடகமானதாலதுகொண்டுகனிந்த
மழலையீர்ஞ்சொலாள்கண்டனள்வடிவிலான்வடிவம். (உஅ)

அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மழவிடையுடையான்மேனிவனப்பினேநோக்கியச்சோ
வழகியபிராஞையெண்ஞவள்ளிமுத்தங்கொண்டன்பிற்
பழகியபரனேயாஞப்பரிவிஞற்பதிட்டைசெய்து
விழவுதேர்நடத்திச்சின்ஞளுள்கழிந்தபின்வீடுபெற்ருள். (உக)


கையுதுண்ணிடையினுளந்நாயகன்கபோலத்திட்ட
கையுகிர்க்குறியுஞ்சொன்னகாரணக்குறியுங்கொண்டு
வெய்யவெங்கதிர்காய்செம்பொன்மேனியேருகிநாலாம்
பொய்யுகத்தவர்க்குத்தக்கபொருந்துருவாகிமன்னும். (ரo)

இரசவாதஞ்செய்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சரு - க்கு - திருவிருத்தம் - கஅஅரு.

முப்பத்தேழாவது,

சோழனைமடுவில்வீட்டியபடலம்.



அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னனேயார்பூங்கொன்றைவேணியரிரதவாதம்
பொன்னனேயாள்முன்செய்துபோந்ததுபுகன்றேமார்த்தார்
மன்னனைமடுவில்வீட்டிமலரடிக்கன்பஞன
தென்னனேயமரிற்காத்ததிருவிளையாடல்சொல்வாம். (க)

(உஅ) இருண்மலவலி-ஆணவமலவன்மை. களங்கங்கழல - மாசுநீங்க. அயர்ச்சி-துன்பம். கவற்சி-வருத்தம். (உக) அச்சோ-ஐயோ. ஆஞ-நீங்காத. பரிவிஞல்-அன்பிஞல். (ரு) கையும்-வருந்துகின்ற. உகிர்-நகம். (க) ஆர்த்தார்மன்னனை - ஆத்திமலர் மாலையஞனசோழனை.

பொன்னெடுந்தேரிராசபுரந்தரன்புரந்தராதி
பன்னெடுந்தேவரேத்தப்பரனுலகடைந்தானிப்பா
லன்நெடுந்தகையோன்மைந்தனடலிராசேசனென்போ
னின்நெடுந்தகையோன்மைந்தனிராசகம்பீரனென்போன். (உ)

மற்றிவன்குமரன்பாண்டிவங்கியதீபனன்னன்
பொற்றிணிதடந்தோண்மைந்தன்புரந்தரசித்தாமன்னன்
வெற்றிகொள்குமரன்பாண்டிவங்கியபதாகன்வீரம்
பற்றியசுந்தரேசபாதசேகரனவன்சேய். (ஊ)

பலர்புகழ்சுந்தரேசபாதசேகரனுந்தென்ன
னலைபுனலுடுத்தகூடலடிகளுக்கன்பனுகிக்
கொலைபுணர்வேலால்வெங்கோற்குறும்பெனுங்களைகடீர்த்து
மலர்தலையுலகமென்னும்வான்பயிர்வளர்க்குநாளில். (எ)

பத்துமான்றடந்தேர்நூறுபனைக்கைமாநூற்றுப்பத்துத்
தத்துமானயுதமள்ளர்தானையிவ்வளவேயீட்ம
யித்துணைக்கேற்பநல்கியெஞ்சியபொருள்களெல்லாஞ்
சித்திருவானகூடற்சிவனுக்கேசெலுத்துமன்னோ. (ஏ)

கண்டிகைமகுடமாதிக்கலனிரைகுயின்றுந்திங்கண்
மண்டலமிடறுஞ்சென்னிக்கோபுரமாடமாதி
யெண்டிசையிருள்கால்சீப்பவெரிமணியிழைத்தவேய்ந்தந்
திண்டிறலுடையானின்னதிருப்பணிபிறவுஞ்செய்தான். (ஐ)

கல்லுமாறகன்றமார்பன்கருவியின்சிறுமைநோக்கி
மல்லுமாரததிண்டோள்வளவர்கோவெருவன்காலிற்
செல்லுமாயிரம்பரிக்கோர்சேவகனென்போன்ரூனே
வெல்லுமாறெண்ணிவஞ்சிவேய்ந்துகொண்டெழுந்துபோந்தான்.

பல்வகைக்கருவியீட்டப்படையொடும்பரவைசீறிச்
செல்வதுபோலக்கன்னித்தீம்புனலுடுநோக்கி
மல்வரையாததோளான்வரவறிந்தெழுந்துமேருக்
கல்வரிசிலையான்முன்போய்க்கைதவன்ரூழ்ந்துகூறும். (அ)

பொன்னதுவனையவேணிப்புனிதவிப்பூமிநேமி
யுன்னதுவலத்திலேயுருட்டுமென்வலத்தைநோக்கான்

(உ) புரந்தராதி - இந்திரன்முதலான. (ச) குறும்பு-சிற்றரசு. (ஞ) பனைக்கைமா - பனைபோன்ற கையினையுடையயானை. தத்தும்-தாண்டிச்செல்லும். (ஈ) குயின்றும்-செய்தும. (எ)கவ்வுமாறும்-மலையும்பகையும்.(அ) கருவியீட்டம் - ஆயுதகூட்டம்.

றன்ன துவலத்தினுலென்றனையின்சிறுமைநோக்கி
யென்ன துதேயங்கொள்வானெண்ணினுன்போலுமன்னே. (கூ)

காவிரிநாடன்சேனைக்கடலிடையெரிபோன்மூண்டு
மேவினனென்றுகூறிமீனவன்வேண்டவானிற்
பூவிரிவாகைநீயேபுனையநாம்பொருதுமென்னு
நாவிரியாதமாற்றநாயகன்கூறக்கேட்டான். (கக0)

எல்லியங்கமலச்செவ்வியெனமுகமலர்ந்துநாத
னல்லியங்கமலச்செந்தாளகந்தழீஇப்புறம்புபோந்து
பல்லியந்துவைப்பத்தானைப்பரவையுட்பரிமாவூர்ந்து
கொல்லியம்பொருப்பன்சேனைக்கடலெதிர்குறுகினனே. (ககூ)

பண்ணுதலிசைவண்டார்க்கும்பசுந்தொடைச்செழியன்றானை
யெண்ணுதலிலவாஞ்சென்னியிரும்படைக்கடனேராய்
நண்ணுதலெனப்போய்ப்பொன்னிநாடவன்றமர்கட்கெல்லாங்
கண்ணுதலருளாலங்கோர்கடலெனத்தோன்றிற்றம்ம. (கஉ)

கடலெனவருமாவூர்ந்துகைதவன்சேனைமுன்போ
யடலணிமேருக்கோட்டியாலவாய்நெடுநாண்பூட்டி
மடலவிழ்தழாய்க்கோலுட்டிவாயெரிபுரத்திலூட்டி
மிடலணிகூடற்கோமான்வேடுருவாகிநின்றான். (கங)

கங்குல்வாய்த்திங்கள்போலக்காதணிதந்தத்தோடுங்
கங்குல்வாய்முளைத்தமீன்போற்கதிர்முத்தவடமுங்குஞ்சிக்
கங்குல்வாய்ச்சிலம்போல்வெட்சிக்கண்ணிசூழ்கலாபச்சூட்டுங்
கங்குல்வாய்கிழிக்குந்தந்தக்கடகமுமின்னுக்கால. (கச)

அண்டத்தாரமரர்நாமமன்றுதொட்டடையத்தோற்று
கண்டத்தாரிருளேயெங்குங்கலந்தெனக்கறுத்தமேனி
கொண்டத்தாராரினூற்கோர்கூற்றெனக்கொல்வேலேந்திச்
சண்டத்தீயென்னநின்றான்காவிரித்தலைவன்காணே. (கஞ)

சீறியாயிரம்பரிக்கோர்சேவகன்வந்தேனென்னக்
கூறினனெதிர்த்தான்வெள்ளிக்குன்றவன்பத்துதூறு

(கூ) நேமி-சக்கரம். (கக0) நாவிரியாதமாற்றம் - நாவாலுரையாத சொல். அது-அசரீரிவாக்கு. (ககூ) எல் - பகல். அல்லி-அகவிதழ். கொல்லிப்பொருப்பன்-கொல்லிமலையினையுடைய சோழன். (கஉ) பண்ணுதல்-தூதனமாகக்கருதுமாறு. இசை-இராகங்களை. (கங) ஆலவாய்-விடவாயினையுடையவாசுகியாகியபாம்பு-தழாய்க்கோல். தாளவமணிந்தநாராயணபாணம். (கச) கலாபம் - மயிலிறகு. (கஞ) அண்டத்தாஆர்-வானுலகிற்பொருந்திய. நாமம் - பெயர்.

மாறிலாப்பரிக்குமட்டோர்வயவனீயன்றேவெண்ணி
லீறிலாப்பரிக்குமொற்றைச்சேவகன்யானேயென்றான். (கசு)

என்றசொல்லிடியேறென்னவிருசெவிதுளைப்பக்கேட்டு
நின்றவனெதிரேமின்னுநீட்டிச்சென்மேகம்போலச்
சென்றுவேல்வலந்திரித்துச்செயிர்த்தனதிர்த்துச்சீற
வன்றிறனூற்றுப்பத்துவயப்பரிக்கொருவனஞ்சா. (கள)

யாமினியிந்தவேலாலிறப்பதற்கையமில்லை
யாமெனவகன்றான்மாவோடாயிரம்பரிக்கோர்மள்ளன்.
காமனேவெகுண்டவேடன்மறைந்தனன்கங்குற்சோதி
மாமகனதுகண்டோடும்வளவனேத்துரந்துசென்றான். (கஅ)

துரந்திடுமளவிலோடுஞ்சோழனுந்திரும்பிநோக்கிக்
கருந்தடங்கண்ணிபாகங்கரந்தவேடுவனேக்காணான்
வருந்துயரச்சந்தீர்த்தான்மதுரையினளவும்பற்றிப்
புரந்தரர்ப்புறங்கண்டானேப்புறங்கண்டுமுகிக்கிப்போனான். (ககூ)

காலொன்றுமுடுக்கப்பட்டகனலொன்றுடந்தாலொத்து
வேலொன்றுசடக்கைகேரிவேந்தனுன்முடுக்குண்டோடுஞ்
சேலொன்றுகொடியினுன்றன்செழுநகர்விரைந்துசெல்வான்
மாலொன்றுகளிற்றினுங்கோர்மதமலர்க்கிடங்கில்வீழ்ந்தான். (உ0)

மீனவன்மதுரைமூதூர்மேற்றிசைக்கிடங்கில்வீழ
மானவெம்புரவியோடுவளவனும்வீழ்ந்தான்கூடற்
கோனவனருளால்வானோர்குரைகடல்கடையத்தோன்று
மானையினெழுந்தான்றென்னன்கோழிவேந்தாழ்ந்துபோனான்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிலத்தளவாழ்ந்தகடிமலர்க்கிடங்கிற்பெருந்தகையவிந்தவன்று
கில்பூண், கலத்தரும்பேழைபடைபரிமான்றேர் கரியெலாங்கவர்ந்
துதண்பொருநைத், தலத்தவன்றங்கணையகரணியத்தக்கதுசணிகல
னல்கி, நலத்தகையவர்பேரருட்கடற்கன்பு நதியெனப்பெருகிவீற்
றிருந்தான். (உஉ)

சோழனைமடுவில்வீட்டியபடலம் முற்றிற்று.

ஆ படலம்-சகூ-க்குதிருவிருத்தம்-ககஅ0எ.

(கசு) சிறி-கோபித்து. (கள) இடியேறு-ஆணிடி. (கஅ)கங்குற்சோதிமாமகன் - இரவிலொளிருமதி மரபில்வந்த சுந்தரசேபாதசேகரபாண்டியன். (ககூ) புரந்தரன் - இந்திரன். (உ0) காலொன்று-ஒருவாயு. (உக)ஆனை - ஐராவதம். (உஉ) அவிந்தவன் - இறந்தசோழன்.

முப்பத்தேட்டாவது,

உலவாக்கோட்டையருளியபடலம்.



கலிவிருத்தம்

மின்பனிக்கதிர்வேணிவானவன்மீனவன்றனேமானவேன்
முன்பனிக்கவலந்திரித்துமுடுக்கிநேரியடுக்கலான்
பின்பனிக்கமலத்தடத்திறவிட்டவாறிதுபெருமைசா
லன்பனுக்குலவாதகோட்டையளித்தவாறுகிளத்துவாம். (க)

கலிநிலைத்துறை.

பொடியார்க்குமேனிப்புனிதர்க்குப்புனிதவேற்றுக்
கொடியார்க்குவேதக்குடுமிக்கிணையானகூடற்
படியார்க்குஞ்சீர்த்திப்பதியேருழுமோருணல்லா
னடியார்க்குநல்லானறத்திற்கும்புகழ்க்குநல்லான். (உ)

அனையானறத்திற்கருள்போன்றவளான்றகற்பின்
மனையாண்மரபின்வழுவாததருமசீலை
யெனையாருநன்குமதிக்கவிருக்குநீரா
டனையாள்பதிக்குக்கதிக்குக்குத்தனிசசார்புபோல்வாள். (ஊ)

பல்லேருழவின்றொழில்பூண்டுபயன்கள்கொள்வான்
வில்லேருழவர்கடன்கொண்டுமிருந்தெல்லா
மில்லேருழத்திமடைச்செல்வமியற்றியேந்த
வல்லேறுகண்டனடியாரையருத்துநீரான். (எ)

தொகைமாண்டதொண்டர்சுவையாறுதழிஇயநான்கு
வகைமாண்டமாறுபடுமுண்டிமறுத்தருந்த
நகைமாண்டவன்பின்றலையாயவனல்கநல்கப்
பகைமாண்டசெல்வமணற்கேணியிற்பல்குநாளின். (ஏ)

இந்நீரவாயவனங்குன்றினுமின்மைகூறுத்
தன்னீர்மைகுன்றுனெனுந்தன்மைபிறர்க்குத்தேற்ற
நன்னீர்வயலின்விளைவஞ்கிநலிவுசெய்ய
றின்னீரவேணிமதுரேசர்விலக்கிலரே. (ஐ)

(க) பனிக்க-நடுங்க. அடுக்கல்-மலை. (உ) பொடி-திருநீறு. குடுமி-உசசி. உழவோர்-வேளாளர். (ஊ) ஆன்ற-மிகுந்த. (எ) கடன் - அரசிறை. மடை-சோறு. (ஏ) மாறுபடும்-ஒன்றற்கொன்று வேறான. (ஐ) அஞ்கி-சுருங்கி. நலிவு-துன்பம்.

குன்ருவிருத்திக்கடன்கொண்டுகொண்டன்பர்பூசை
கன்ருகடத்தத்தொடுத்தான்கடன்ருனுங்கிட்டா
தொன்ருலுங்கொண்டவிரதத்துக்குறுதியின்றி
நின்ருனுடம்பையொறுக்கின்றநியமம்பூண்டான். (எ)

கொடுப்பாரவரேவிலாவுங்கடன்கோளுமாற்றித்
தடுப்பாரெனின்மற்றதையாவர்தடுக்கவல்லா
ரடுப்பார்விழுமங்களாவாரடியார்க்குரல்லுண்
மடுப்பானியமந்தடைபட்டுவருந்துகின்ருன். (அ)

விண்ணுறுசூடும்விடையான்றமர்க்கூட்டியன்றி
யுண்ணுதவன்றன்னுயிர்க்குத்துணையாயகற்பிற்
பண்ணுர்மொழிதன்னெடும்பட்டினிவிட்டுநெஞ்சம்
புண்ணுகவாகம்பசித்தீயிற்புழுங்கப்பட்டான். (கூ)

இறக்குமுடம்பாற்பெறும்பேறினியாவதென்னு
மறக்குன்றனையான்மனையோடுமைடந்திசசெய்தி
நிறக்கின்றசெம்பொற்சிலையார்க்குநிகழ்த்தியாவி
துறக்கின்றதுவேதுணிவென்றுதுணிந்துபோனான். (கo)

ஐயன்றிருமுன்னரடைந்தடிதாழ்ந்துவாரே
ருய்யும்படிநஞ்சமுகண்டவொருவனுன்றன்
மெய்யன்பர்பூசைக்கிடையூறுவிளையவென்றன்
செய்யும்புலமும்விளைவின்றிச்சிதைந்தவென்னு (கக)

விடனல்குசூலப்படையாய்கடன்வேறுகாணேன்
கடனல்கவல்லார்தமைக்காட்டுதிகாட்டிலாயேன்
மடனல்குமிந்தவுடம்பின்சுமைமாற்றுவேனென்
றுடனல்குகற்புக்குரியாளொடும்வேண்டுமெல்லை. (கஉ)

பஞ்சாதிவேதப்பொருள்சொன்னபரமன்வாக்கொன்
றஞ்சாதிவேளாண்டலைவாவுனகத்திலின்றேர்
செஞ்சாதியாயசெழுவாலரிக்கோட்டையுய்த்தே
மெஞ்சாதிருக்குமெடுக்குந்தொறுமென்றுமாதோ. (கங)

நீகாளரும்பூசித்ததில்வேண்டியகொண்டுநித்த
மாளுதவன்பர்க்கமுதூட்டியெவர்க்குமன்ன

(எ) விருத்திக்கடன்-வட்டிக்கடன். (அ) விழுமம்-துன்பம். (கூ) பட்டினிவிட்டு-உணவின்றிப் பட்டினியிடந்து. (கo) அறக்குன்று-தருமமலை. (கக) செய்யும் - கழனிகளும். புலமும்-கொல்லைகளும். (கஉ) மடன்-அறியாமை. (கங) வாலரி-அரிசி.

தாளுதிகாளுதருமங்களுஞ்செய்திவீடு
மேளுளளிக்கின்றனமென்றுவிசும்பிற்கூற. (கச)

கேட்டின்பமெய்திக்கினர்விம்மிதனுகிவேதப்
பாட்டின்பயனேப்பணிக்தில்லமடைந்துபண்டை
யீட்டுந்தவப்பேறெனக்கண்டனன்முண்டர்க்கெந்தை
கூட்டுங்கதிபோலுலவாமற்கொடுத்தகோட்டை. (கரு)

வானுறுசூடிதருகோட்டையைவைகலோறும்
பூநாறுசாந்தம்புகையொண்சுடர்கொண்டருச்சித்
தானுதசெவ்வியடிசிற்குமதற்குவேண்டு
நானுகருவிவிலக்கும்மதுநல்கவாங்கா. (கசு)

மின்னுர்சடையான்றமராய்ந்தவர்வேதச்செல்வர்
தென்னுடர்தெய்வம்விருந்தொக்கல்செறிந்துநட்டோர்
முன்னுமெவர்க்கும்முகில்போல்வரையாமனல்கி
யெந்நாளுநோயின்றளகாதிபனென்னவாழ்ந்தான், (கள)

மேற்படி வேறு.

அன்பன்னடியார்க்கினியானனிநாளளந்தல்கித்
தன்பன்னியொடுமெயலார்சுற்றந்தமரோடும்
பின்பந்திலேயேயிமவான்மகளேப்பிரியாத
வின்பன்னுருவாய்ச்சிவமாநகர்சென்றிறைகொண்டான். (கஅ)

உலவாக்கோட்டையருளியபடலம் முற்றிற்று.

ஆ படலம்-சஎ-க்கு திருவிருத்தம்-ககஉரு.

முப்பத்தோன்பதாவது,

மாமனுகவந்துவழக்குரைத்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாமநாறிதழியார்தந்தமர்க்கன்பன்வறுமைப்பட்டோ
ணுமநாளுலவாக்கோட்டையருளியமுறையீதையன்
றேமஞண்முல்லைத்தீந்தார்ச்சிறுதகைவணிகற்காக
மாமனும்படிவங்கொண்டுவழக்குரைவண்ணஞ்சொல்வாம். (க)

(கரு) விம்மிதன் - ஆச்சரியமுடையோன். கோட்டை - பொதி. (கசு) அடிசில்-சோறு. நல்க-கொடுத்து. (கள) வரையாமல்-பதிலுப காரங்கருதாது. (கஅ) அல்கி-இருந்து. (க) தாமம்-மாலே. ஆம்சன்-ஆகிய அக்காலத்து.

கன்னிநான்மாடக்கூடற்கடிநகர்வணிகமாக்க
டன்னின்மாநிதிக்கோனன்னுன்றனபதியென்னும்பேரான்
மன்னிணனேயான்கற்பின்மடவரல்சுசீலையென்பாள்
பொன்னிணண்முளரிசேக்கைப்புண்ணியத்திருவினன்னுள். (உ)

எனவிவர்தமக்குமைந்தற்பேறின்றிபிரங்குநாளிற்
றனபதிமருகன்றன்னேத்தகவுசான்மகவாக்கொண்டு
மனமகிழ்சிறப்பானல்கமனேவியுந்தொழுதுவாங்கிப்
புனேவனபுனேந்துபோற்றிப்பொலிவுறவளர்த்துகொண்டாள். (ஊ)

தனபதிமகப்பேறற்றுணுயினுந்தணவாக்காதன்
மனேவிமேல்வைத்தவாசைமயக்கிணல்வருந்தியீன்ற
தனேயனேமகவாத்தந்ததங்கைமேற்றீராப்பூசல்
வினேவினேத்தொழுகவோர்நாளினேயளும்வெகுண்டுசொல்வாள். (எ)

பெருமிதமுனக்கேன்பிள்ளேப்பேறற்றபாவியீயென்
னருமைநன்மகனேலன்றேவிருமையுமடைவா யென்னப்
பொரிதுநாணடைந்துமேலக்காயினும்பிள்ளேப்பேறு
தருதவம்பூரிவேணென்னுத்தனபதிதவமேற்செல்வான். (ஏ)

தன்பெருஞ்செல்வமெல்லாமருமகன்றனக்கேயாக்கி
யன்புகொண்மனேவியோடமருந்தவநெறியிற்சென்றான்
பின்பவன்வரவுதாழ்ப்பமருமகண்பெற்றவெல்லாம்
வன்பினல்வழக்குப்பேசிவெளவினர்தாயமாக்கள். (ஐ)

வினேரினலடிமைபம்பூண்வெறுக்கைநன்பசுக்களேனே
ளனுமாற்றவர்கைக்கொள்ளவன்சிறையிழந்தபுட்போற்
றளர்வுறுமகனுந்தாயுஞ்சார்பிலார்தம்மனேர்க்கோர்
கனேகணையிருக்குங்கூடற்கடவுளேசரணமென்னு. (ஒ)

வந்துவானகமேபோழ்ந்தமணிமுடிவிமானக்கோயிற்
சுந்தரனாதன்பாதத்துணேதொழுதிறைஞ்சியார்க்குந்
தந்தையுந்தாயுமாகுந்தம்பிரானீரேயெனுகட்
கெந்தையும்மாயுமென்னுவிரங்கினின்றினேயசொல்வாள். (அ)

(உ) நிதிக்கோன்-குபேரன். (ஊ) மருகன்-தங்கைமைந்தன். தகவு-முறை. (எ) தணவா-நீங்காத. காதல்-மோகம். பூசல்-சண்டை. (ஏ) பெருமிதம்-வீறுப்பு. (ஐ) நெறி-மார்க்கம். தாழ்ப்ப-தாமதமாக. தாயமாக்கள் - பங்காளிகள். (ஒ) வெறுக்கை-பொன். கனேகண்-ஆதாரம். (அ) அகடு-நடு. போழ்ந்த-பிளந்த.

என்மகன்றன்னைமைந்தனின்மையாலெவருங்காணத்
தன்மகளைக்கொண்டுதகுதியாலன்றேகாணி
பொன்மனைபிறவுநல்கிப்போயினனெம்மூனிப்பால்
வன்மையாற்றுயத்தார்களைவையெலாம்வெளிக்கொண்டார். (கூ)

ஒருத்திநாளொருத்திக்கிந்தவொருமகனிவனுந்தேறுங்
கருத்திலாச்சிறியன்வேறுகாலகணுங்காணேனைய
வருத்திசாலறவோர்தேறுமருட்பெருங்கடலேயெங்கு
மிருத்திநீயறியாய்கொல்லோவென்றுபார்படியவீழ்ந்தாள். (கo)

மாறுகொள்வழக்குத்தீர்க்கவல்லவரருளினாலே
சீறுகொள்வடிவேற்கண்ணுள்சிறுதயிலடைந்தாண்மெய்யி
லூறுகொள்காரணமைந்துமுற்றறிகனவிற்கங்கை
யாறுகொள்சடையார்வேதச்செல்வராயடித்துச்சொல்வார். (கக)

புலர்ந்தபின்ரூயத்தோரைப்புரவலனுணையாற்ரூல்
வலந்தருமன்றத்தேற்றிமறித்தனையிருத்தியாம்போந்
தலந்தருமறிவான்மூத்தோரனைவருமிசையவந்தச்
சலந்தருவழக்குத்தீர்த்துத்தருகுவம்போதியென்ரூர். (கஉ)

வேரியங்குவளையுண்கண்விழித்தனள்வியந்துகெட்டே
னருமில்லார்க்குத்தெய்வந்துணையென்பதறிந்தேனென்னக்
காரிருங்கயலுண்கண்ணுள்கணவனைத்தொழுதுவாழ்த்திச்
சீரினங்குமரனுங்கொண்டெதிரிவைதன்மனையிற்சென்ரூள். (கங)

சென்றவள்கங்குலெல்லைதெரிந்தபினெழுந்துவெள்ளி
மன்றவன்கோயில்வாயில்வந்துவந்தனைசெய்தம்பொற்
குன்றவனுரைத்தவாற்ரூற்கொடுமைசால்வழக்குப்பூட்டி
வென்றவரிருக்கையெய்திவிளம்புவாள்பலருங்கேட்ப. (கச)

அட்டில்வாய்நெருப்பிடேலோரடியிடேலறத்தாறன்றிப்
பட்டிமைவழக்கால்வென்றுபோகொட்டேன்பலருங்கேட்க
விட்டனனரசனுணையறத்தவிசேறியான்ரூ
ரொட்டியபடிகேட்டெங்களுரிப்பொருடந்துபோமின். (கஙி)

(கூ) தகுதியால் - சுவீகாரமுறையினால். எம்மூன்-எனதுதமயன். (கo) அருத்திசால்-அன்புமிகுந்த. (கக) ஊறுகொள்-அழுந்திக்கிட க்கின்ற. அல்லது, ஊறுதலைக்கொண்டுள்ள. காரணம்-அந்தக்காரணம். ஐந்தும்-ஐம்புலன்களையும். உற்று-தானேயுற்று. அறி-விடையங்களை தன்னிடத்தறிகின்ற. கனவில்-சொப்பனத்தில். (கஉ) புலர்ந்தபின்-விடிந்தபின்னர். வலம்-வெற்றி. (கங) வேரி-தேன். தெரிவை-பெண். (கச) கங்குல்-இரவு. சால்-மிகுந்த.

என்றனண்மறித்தலோடுமிழுக்குரையாடிவைது
வன்றிறல்வலியார்தள்ளியடித்தனர்மைந்தனேடுஞ்
சென்றனண்முறையோவென்னுத்திருந்தறத்தவிசினேர்மு
னின்றுரையாடினுள்கேட்டறிந்தனர்நீதிநூலோர். (கசு)

அறத்தவிசிருப்போரேவலாடவரோடும்போந்து
மறித்தவைக்களத்திற்கூட்டிவந்தனள்வந்தவெல்லை
யறக்கொடிபாகர்வெள்ளியம்பலவாணர்தாமத்
திறத்தனபதியேயென்னத்திருவுருக்கொண்டுசெல்வார்: (கஎ)

கலிவிருத்தம்.

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ச்
செருகிதிர் கவிழ்ப்பவா ளெறிக்கு மங்கத
மருவரைத் தோள்கிடந் திமைப்ப வாகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டமே. (கஅ)

முரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்கமே றெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார். (கக)

வாடியமுளரி போன் மாறிட்டா ரிடத்
தூடியுமலர்ந்தபோ தொப்பமைந் தன்மே
னுடிய தண்ணளி நயந்து முட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை. (உ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரசனிங்கில்லைகொல்லோவான்றவரில்லைகொல்லோ
குரைகழல்வேந்தன்செங்கோல்கொடியதோகோதிலூல்க
ளுரைசெயுந்தெய்வந்தானுமில்லைகொலுறுதியான
தருமமெங்கொளித்ததேகொலென்றறத்தவிசிற்சார்வார். (உக)

தனபதிவரவுநோக்கிவஞ்சனைத்தாயத்தார்க
ளினைவுறுமனத்தராகிவிம்மிதமெய்திவெல்லு

(கசு) அட்டில்-சமயலறை. பட்டிமை-வஞ்சனை. அறத்தவிசு-தரு மாசனம். ஒட்டியபடி-தீர்மானித்தவண்ணம். (கசு) மறித்தல்-தடுத் தல். (கஎ) திறத்தனபதி, சாமர்த்தியமுள்ளதனபதி. (கஅ) வான் - கிரணம். அங்கதம். வாகுவலயம். மணிக்கண்டிகை. அரதனகண்டி கை. (கக) முரல் - சத்திக்கின்ற. அளி-வண்டு. ஏறு-இடபம். (உ0) உட்கிடை-உள்ளக்கருத்து. (உக) ஆன்றவர் - உயர்ந்தோர். நூல்- வேதாதிநூல்.

மனவலியிழந்துபண்டெழக்கலாவழக்கால்வென்ற
வினைஞரினந்துள்ளமச்சராணிஞல்வீழுங்கப்பட்டார். (உ)

மாதுலராகிவந்தோர்மருகனேத்தம்பின்வந்த
தாதுலராதகோதைதன்னெடுந்தழீஇத்தங்கண்ட
மீதுலராதசாமவேதமார்ப்பவர்போல்வாய்விட்
டாதுலரானீரந்தோவையவென்றழுதுரைத்தார். (ஊ)

குடங்கையினெடுங்கணுளுங்குமரனும்வணிகன்முளிற்
றடங்கணீராட்டவீழ்ந்தார்தடக்கையாலெடுத்துப்புல்லி
மடங்கலேறனையான்முனுமற்றவர்தமைத்தன்கண்ணீர்
நெடுங்கடல்வெள்ளத்தாழ்த்திக்குமரனேநேர்ந்துரைவார். (எ-ச)

ஐம்படைமார்பிற்காணேன்சிறுசெலம்படியிற்காணேன்
மொய்ம்பிடைமதாணிகாணேன்முகத்தசைசுட்டிகாணேன்
மின்படுகுழைகள்காணேன்வெற்றுடல்கண்டேனப்பா
வென்பெறுமென்றுபிள்ளைப்பணிகளுங்கவர்ந்தாரென்னை. (ஞ-ங)

அனைவருமிரங்கவாய்விட்டழுதவரிளையாடன்னைத்
தனையனைக்கண்ணீர்மாற்றித்தடக்கையான்முதுகுதைவந்
தினையன்மின்னென்முன்வேறென்றெண்ணன்மினென்னுவஞ்ச
வினைஞர்வல்வழக்குச்சோர்ந்துவிடுவதுகாண்மினென்னை. (உசு)

நட்பிடைவஞ்சஞ்செய்தும்நம்பினர்க்கூன்மாறுட்டத்
துட்படைக்கவர்ந்துமேற்றேர்க்கிம்மியுமுதவாராயும்
வட்டியின்மிதப்பக்கூறிவாங்கியுஞ்சிலர்போலீட்டப்
பட்டதோவறத்தாறீட்டுநம்பொருள்படுமோவென்னை. (உஎ)

மங்கலமாடமோங்குமதுரைநாயகனைநோக்கிச்
செங்கரஞ்சிரமேற்கூப்பிமாணிக்கந்தேற்றிவிற்கு
மெங்குலவணிகரேறேயெம்மனோர்வழக்கையிந்தப்
புங்கவரிடைஞத்தீர்த்துத்தருகெனப்புலம்பியார்த்தார். (உஅ)

ஆவலித்தழுதகள்வர்வஞ்சரைவெகுண்டுநோக்கிக்
காவலன்செங்கோனுண்ணூல்கட்டியதருமத்தட்டி

(உ) இனைவு. வருத்தம். (ஊ) மாதுலன்-மாமன். தாதுலராத கோதை-மண்தாதுகெடாதகூந்தலினையுடையாள். ஆதுலர் - தரித்திரர். (எ) குடங்கை-உள்ளங்கை. (ஏ) ஐம்படை - பஞ்சாயுதம். மொய்ம்பு - தோள். மதாணி - வாகுவலயம். (ஐ) வஞ்சவினைஞர் - வஞ்சனைத்தொழிலினையுடையதாயத்தார். (ஒ) கட்பு - சினேகம். ஊன் - ஊனினாலாகியவுடலம். மாறுட்டத்துட்பட - மயக்கத்திற்குள்ளாக. (ஓ) தேற்றி - தெளிவித்து. புங்கவர்-உயர்ந்தோர்.

ஞவெனுந்துலோசாவிட்டெம்வழக்கையுமராய்வந்த
மேவலர்வழக்குந்தூக்கித்தெரிகெனவிதந்துசொன்னார். (உக)

நரைமுதுபுலியன்னான்சொற்கேட்டலுநெங்கிசசான்றோ
ரிருவர்சொல்வழக்குமேற்கொண்டனுவதித்திரண்டுநோக்கித்
தெரிவழியிழுக்குஞாதிவழக்கெனச்செப்பக்கேட்டு
வெருவினர்தாயதாதார்கள்வலியரின்வேறுசொல்வார். (ஈ0)

தவலருஞ்சிறப்பினன்றதனபதிவணிகரல்ல
ரிவரெனவையையுகேட்பவிருகையும்புடைத்துநக்குக்
கவளமானுரித்துப்போர்த்தகண்ணுதல்வணிகர்கோமா
னவரவர்குடிப்பேர்பட்டங்காணிமற்றனைத்துங்கூறும். (ஈக)

தந்தைதாய்மாமன்மாதிதாயத்தாரிவரையீன்றோர்
மைந்தர்களுடன்பிறந்தார்மனைவியர்கிளைஞர்மற்று
மந்தமில்குணங்கள்செய்கையாதியவடையாளங்கண்
முந்தையின்வழுவாவண்ணமுறையினுன்மொழிந்தான்முன்னோன்.

அனையதுகேட்டவரன்றோரனைவருநோக்கியந்தத்
தனபதிவணிகர்தாமேயிவரெனசசாற்றலோடு
மனவலிதத்தாயத்தார்தம்வழக்கிழுக்கடைந்ததீது
நனவழிவேம்பன்றேரிற்றண்டிக்குநம்மையென்னை. (ஈஈ)

இல்லினுக்கேகிமீள்வன்யானென்றுங்குளத்திற்கேகி
யொல்லையில்வருவேனென்றுமொவ்வொருவார்த்தையிட்டு
வல்லெழுவனையதாளாரனைவரும்வன்காறள்ளச்
செல்லெழுமுகிற்போற்கூட்டஞ்சிதைந்தனரொளித்துப்போனார்.

அனையவர்போகநின்றவறனவின்மன்றத்துள்ளோர்
தனபதிவணிகர்தந்ததனமெலாந்தத்தமைந்தற
கெனமனையெழுதிவாங்கியீந்தனரீந்தவெல்லை
மனமொழிகடந்தநாய்கர்மறைந்துதங்கோயில்புக்கார். (ஈஙி)

இம்மெனப்பலருங்காணமறைந்தவரிருந்தண்கூடற்
செம்மலென்றறிந்துநாய்கசிறுவனுக்குவகைதூங்க

(உக)ஆவலித்து-வாய்திறந்து. கள்வர்-மாயத்தினையுடையசுவாமி. (ஈ0) அறுவகித்து - முன்னுரைத்தவைகளையுரைத்துநியாயங்கூறி. (ஈக) தவலரும் - கெடுதலற்ற, என - என்றுகூற. நக்கு-சிரித்து பட்டம். பட்டப்பெயர். (ஈஉ) கிளைஞர்-பந்துக்கள். (ஈஈ) கனை-தேன். (ஈஙி) எழு-தூண்(ஈஙி) மனை-சாதனம்.

விம்மிதமடைந்துவேந்தன்வரிசையுள்வெறுப்பநல்கிக்
கைம்மறிவணிகர்கோயில்புதுக்கினுன்கனகங்கொண்டி. (கூசு)

கலிநிலைத்துறை.

பூதநாயகன்பூரணசுந்தரப்புத்தேள்
பாதசேகரன்வரகுணபாண்டியன்புயத்தி
லோதநீருலகின்பொறைசுமக்கையத்தும்பர்
நாதர்சேவடித்தாமரைநகைநிழலடைந்தான். (கூஎ)

மாமனுகவந்து வழக்குரைத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம்-சஅ-க்கு-திருவிருத்தம்-ககூசுஉ.

நாற்பதாவது,

வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்.

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்கொண்டவேதமுதலிடை யீறுநாடரியபரமாமனுகியொருவ
ணிக,னெண்கொண்டகாணிபொருள்கவர்ஞாதிமாதுலரையெதிரே
றிவென்றபடியிதுவாந், தண்கொண்டநேமி வரகுணதேவனெய்து
பழிதன்னைத்துடைத்தனேயமனவன், கண்கொண்டுகாணவுயர்சிவ
லோகமதுரைதனில்வருவித்தகாதையினிமொழிவாம். (க)

இயமானனிந்திரவியெரிவானிலஞ் சலிலமெறிகாலெனும் பகு
தியிருநான், மயமானசுந்தரனேமனவாய்மெய்யன்பினிறைவழிபாட
டைந்தவரகுணனுய்ச், சயவேளவென்றவடிவினனீறில்வென்றிபெ
றுசதவேள்வியிந்திரனெனிகர்வோ, னியன்மேனிகொண்டவொளியி
னிலேழ்பசும்புரவியினன்றேசுவென்றவரகுணனே. (உ)

மறையாதிகலேபலவுமகமாதிபலவினேயும் வழுவாதுநிறுவுதலின்
மலர்மே, லிறையாகிமலர்வனிதைபிறிவான திருமகளி ரிகபோகம்
விளையமுறைசெயலாற், கறையாழிவளைகளணிகரனுகியிகல்செய்
பொறிகரணதிபகைகளையுநெறியா, லறைவாய்மையுரையின்முழுது
ணர்வாலெவ்வுயிருநிறையரனுகியுலகுமுறைசெயுநாள். (ங)

(கூசு) இம்மென-விரைந்து. (கூஎ) ஓதம்-சமுத்திரம். (க) ஞாதிமாதுலர் - தாயாதியரானமாமன்மார்கள். மனவன்-அரசன். (உ) இயமானன்-ஆன்மா. எரி-அக்கினி. சலிலம்-நீர். கால்-வாயு. இருநான்மயம்-அட்டமூர்த்தி ரூபம். சதம்-நூறு. இயல்-இலக்கணம். இனன்-சூரியன். (ங) மலர்மேலிறை-பிரமன். மலர்வனிதை-திருமகள். திருமகளிர்-அட்டவிலக்குமியர். ஆழி-கடல். பொறி-பஞ்சேந்திரியம்.

வேட்டஞ்செய்காதலொருநாட்டங்கவேவினை மேட்டெங்குமா
தடவியெரியா, நாட்டஞ்செய்காயுழுவைநீட்டுங்கையானைமுகநாட்
டும்பலேனமிவைமுதலா,வோட்டஞ்செய்தேரிரவிகோட்டின்கணே
றியிருளூட்டந்திமாலைவருமளவாக், கோட்டஞ்செய்வார்சிலையின்
மாட்டம்பிஞாறியுயிர்கூட்டுண்டுமொருகரில்வருவான். (சு)

காலிற்கடும்புரவிமேலிற்கடிந்துவரு காலக்கடந்தனிலொர்மறை
யோன், மாலுற்றயர்ந்துமுகம்வேர்வைக்குறுந்திவிலை வாரக்கிடத்து
விழிதுயில்வோன், மேலக்கடும்புரவிகால்வைப்பவந்தணனும்வீவுற்
றவிந்தனனதறியான், கோலிற்செலும்பரியின் மீனத்தனுந்தனது
கோயிற்புகுந்தனனவளவே. (ரு)

மேற்படி - வேறு.

கனவட்டத்தடியிடறப் பொறிவிட்டுப்புலனவியக்கரணத்துட்
பொதியுயிர்விட்டவனுகந், தனையொக்கற்பனவரெடுத்தனர்கிட்டிக்
குரிசில்கடைத்தலையிட்டத்திறமொழியத்தமிழ்மாற, னினைவுற்றுப்
பனவர்கையிற்கனகக்குப்பைகணிறைவித் தெமதிக்குற்றவினையெடு
த்தெரிமூல, புனைவித்தக்கடன்முடிவித்தனன்மற்றப்பழிபடரிற்பு
தையப்பற்றியதிடைவிட்டகலாதே. (சூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பற்றியபழிக்குத்தீர்வுபழமறைக்கிழவர்சொன்ன
பெற்றியினேவேறுண்டிதற்கரைபெருநூற்கேள்வி
மூற்றியமறையோர்க்கீந்துமூவராந்தாருவேந்தைச்
சுற்றியுந்தூர்வைகொய்துசுரபிகள்சுவைக்கவீந்தும். (எ)

அகமருடணத்தாலோமமாற்றியுமானந்தாவி
னகைமணிக்கோடுதோய்ந்தகளிர்புனல்குடித்துந்தான
வகைபலகொடித்துநீங்காவலியதாயிழுதுபெய்த
புகையழலெனமேலிட்டப்புலப்படவீளந்ததன்றே. (அ)

(சு) மேடு-மேட்டுநிலம். மாதடவி-மிருகங்களைத்தேடி. உழுவை-புலி. உம்பல்-யானை. எனம்-பன்றி. கோடு-மலை. கோட்டம்-வளைவு. (ரு) கடம்-காடு. திவலை-நீர்த்துளி. வீவுற்று-அறிவழிந்து. கோல்-அம்பு. மீனத்தன்-மச்சக்கொடியினையுடைய பாண்டியன். (சூ) கனவட்டம்-பாண்டியன் குதிரை. ஒக்கல்-சுற்றம். பனவர்-அந்தணர். எமதிக்கு-தென்றிக்கு. எரி-அக்கினியில். மாலைபுனைவித்து. மாலைசூட்டி. படர்-துன்பம். (எ) தீர்வு-ஒழிவு. தாருவேந்தை-அரசினை. (அ) அகமருடணம்-பாவத்தினையகற்று மொருமந்திரம், கோடு-கொம்பு.

கலிநிலைத்துறை.

எங்கும்பெருமூச்செறியுங்கையெறியுங்குன்றி
னெங்குஞ்சிறுகுமுடன்முர்த்திமுன்னும்பின்னும்
பாங்குந்தொடருஞ்சிரிக்கும்பகுவாயைமெல்லு
நீங்குங்குறுகும்பழிதாவெனநேர்ந்துபற்றும். (கூ)

மாசுண்டதெய்வமணிபோற்பணிவாயிற்பட்ட
தேசுண்டதீந்தண்மதிபோலொளிதேம்பிவண்டு
மூசுண்டதான முகமாவுண்டவெள்ளில்போலக்
காசுண்டபூணனறைபோயகருத்தனனன். (கo)

மறையோர்கள்பின்னும்பழிமேலிடுவெண்ணநோக்கி
யிறையோயிதுநான்முகன்சென்னியிறுத்தகூட
லறவேதியனத்தினமாயிரத்தெண்காற்சூழ
லுறவேயொழிக்கப்படுமின்னமுரைப்பக்கேட்டி. (கக)

ஆனவிரதநெறியாலிரண்டைந்துவைகல்
வானுடனேயம்முறையால்வலஞ்செய்துவந்தா
யானலதற்குவழிகாட்டுமென்றையர்கூறப்
போனனரசன்புனிதன்றிருக்கோயில்புக்கான். (கஉ)

விழியாயிரத்தோன்பழிதீர்த்தனவேதியன்றன்
கழியாதமாபாதகந்தீர்த்தனகௌவைக்கங்கைச்
சுழியாறலைக்குஞ்சடையாயெனத்தொட்டலைக்கும்
பழியானதுந்தீர்த்தருளென்றுபணிந்துவீழ்ந்தான். (கங)

எண்ணும்படியம்முறையால்வளந்தேத்தவையன்
விண்ணின்றியம்புமரசேபரிமேதவேள்வி
நண்ணும்பயனேரடிவைப்பினினண்ணவெம்மைப்
பண்ணும்வலத்தான்மகிழ்ந்தேம்பழியஞ்சன்மன்னே. (கச)

பொன்னேடுமுத்தங்கொழிக்குந்தறைப்பொன்னிநாட
னின்னேடமராற்றநினைந்தெழுநீயுநேர்வா
யன்னேனுனக்குப்புறகிட்டகன்றேடுநீயும்
பின்னேடியெட்டிப்பிடிப்பாரிற்றுரத்துமெல்லை. (கஞ)

(கூ) உடன்று-பகைத்து. பகுவாய்-பிளந்தவாய். (கo) வெள்ளில்-விளங்கனி. காசு-இரத்தினம். (கக) சூழலுறவே-பிரதட்சணஞ்செய்யவே. (கஉ) ஆனு-நீங்காத. இரண்டைந்துவைகல்-பத்துத்தினம். (கங) விழியாயிரத்தோன்-இந்திரன். கௌவை-ஓசை. (கச) வலந்து-பிரதட்சணஞ்செய்து. (கஞ) புறகிட்டு-முதுகுகாட்டி.

எமையாமருச்சித்திருக்குந்தலத்தெய்துவாயா
லமையாதவன்சுட்பழிமாற்றுதுமென்னச்சேற்க
ணுமையாண்மணாளனருள்வாழ்த்தியுரகனுச்சிச்
சுமையாறுதோளான்றெழுதான்றனிருக்கைபுக்கான். (கசு)

ஆர்த்தார்முடியோன்சிலகாள்கழித்தாற்றலேற்ற
போர்த்தாவுவேங்கைக்கொடித்தானைபுடவிபோர்ப்பப்
பேர்த்தார்கலிவந்தெனப்பேரியமார்ப்பக்கன்னிப்
பார்த்தாமவேண்மீனவனுட்டிற்பாடர்ந்தவெல்லை. (கள)

மிடைந்தேறுநேரிப்பொருப்பன்படைவேலைமேற்சென்
றடைந்தேறிமீனக்கொடியானமராடவாழி
கடைந்தேறுவெற்பிற்கலங்கிற்றெனக்கிள்ளிசேனை
யுடைந்தேகவெந்நிட்டுடைந்தோடினுள்ளம்வெள்க. (கஅ)

சுறவக்கொடியண்ணறுரந்துபின்பற்றிச்செல்வோன்
புறவக்கடிமூல்லையுந்தாமரைப்போதுமேந்தி
நறவக்கழிநெய்தலங்கானலின்ஞாய்க்ர்மொய்த்த
விறவப்புலவுகழுவீர்ந்துறைப்பொன்னிசேர்ந்தான். (கக)

பூசத்துறையிற்புகுந்தாடியப்பொன்னித்தென்சார்
வாசத்திடைமாமருதப்பணிதற்குவைகைத்
தேசத்துவன்கீழ்த்திசைவாயில்கடந்துசெல்லப்
பாசதசையும்பழியும்புறநின்றவன்றேற. (உ0)

சுருதிச்சுரும்புறஞ்சூழ்ந்துகுழறத்தெய்வ
மருதிற்சிறந்தபெருந்தேனைக்கண்வாயங்காந்து
பருகிப்படிந்துதழல்வாய்வெண்ணெய்ப்பாவையொப்ப
வுருகிச்செயலற்றுரையற்றுணர்வாகிநின்ருன். (உக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிராமயபரமானந்தநிருத்தனான்மாடக்கூடற்
பராபரவிமையாமுக்கட்பகவபார்ப்பதிமணாள
புராதனவகிலநாதபுண்ணியமருதவாண
வராவணிசடையாவென்றென்றளவிலாத்துதிகள்செய்தான். (உஉ)

(கசு) எமை - எம்மை. அருச்சித்திருக்குந்தலமென்றது. திருவிடை மருதூரை. (கள) புடவி-பூமி. தாமவேல் - ஒளிபொருந்திய வேல். (கஅ) மிடைந்து - நெருங்கி. நேரிப்பொருப்பன் - நேரிமலையினையுடைய சோழன். (கக) சுறவக்கொடி - மீனக்கொடி. (உ0) பூசத்துறை - காவிரியிலொரு துறை. பழி-பிரமகத்தி. (உக) குழற - பாட. அலகிலாத - கணக்கற்ற.

சொற்பதங்கடந்தசோதிதுதித்தடிபணிந்தவேந்தை
மற்பெருந்தோளாய்கீழைவாயிலிற்பிரமசாயை
நிற்பதன்றெறியாற்செல்லேனிழன்மதியுரிஞ்சுமேலைப்
பொற்பெருவாயினீங்கிப்போதிநம்மதுரைக்கென்றான். (உங)

வரகுணனதுகேட்டையன்மருதிவனளந்துநீங்கற்
கருமையால்வாயிரேறுமடிக்கடிவீழ்ந்துவீழ்ந்து
வரைதுளைத்தன்னமேலைவாயிலாற்போவானன்ன
திருமணிக்கோபுரந்தன்பெயரிலுறச்செய்துகின்றுள். (உச)

திருப்பணிபலவுஞ்செய்துதென்றிசைவழிக்கொண்டேகிச்
சுருப்பணிநெடுநாண்பூட்டுஞ்சுவைத்தண்டச்சிலையாற்காய்ந்த
மருப்பணிசடையான்கோயில்வழிதொறுந்தொழுதுபோற்றிப்
பொருப்பணிமாடக்கூடற்பொன்னகரடைந்தான்மன்னே. (உடு)

தொடுபழிதொலைவித்தாண்டசுந்தரத்தோன்றல்பாதக்
கடிமலரடைந்தூநாளுங்கைதொழுதுலகமெல்லாம்
வடிவுறுசெங்கோலோச்சும்வரகுணனறமோர்நாவா
லடிசுவையமுதமன்னவரன்புகழ்செவிமடுப்பான். (உசு)

வேதமாகமம்புராணமிருதிகண்முதலாநூலு
மோதுவதுலகின்மிக்கதுருத்திரவுலகமென்னும்
போதமதகங்கொண்டந்தப்பொற்பதிகாணவேண்டுங்
காதல்செல்வழியேயீசன்கங்குலிற்கோயிலெய்தா. (உஎ)

கலிநிலைத்துறை.

மாழைமான்மடநோக்கிதன்மனைளனேவணங்கிப்
பீழையேழ்பவங்கடந்துநின்னடிநிழல்பெற்றேர்
சூழநீசிவபுரத்தில்வீற்றிருப்பதுதொழுதற்
கேழையேற்கொருகருத்துமுந்தெய்தியதெந்தாய். (உஅ)

என்றகாவலனன்பினுக்கெளியராய்வெள்ளி
மன்றவாணரவ்வுலகையவ்வுலகிடைவருவித்
தின்றுகாட்டுதுமியற்கெனத்திருவுளத்தெண்ண
மொன்றினரஃதுணர்ந்தாலுருத்திரவுலகம். (உக)

கோடிமாமதிக்கடவுளர்குருவுச்சுடர்பரப்பி
நீடியோரிடத்துதித்தெனமின்மினிநிகர்த்து

(உங) அங்நெறி அவ்வழி. (உச) வரை-மலை. (உடு) சுருப்பு-வண்டு. சுவைத்தண்டச்சிலை-இனிப்புள்ள கரும்புவில். (உசு) வடிவுறு-சுற்ற மற்ற. (உஎ) போதம்-அறிவு. காதல்-ஆசை. (உஅ) மாழை-அழகு. பீழை-துன்பம். (உக) காவலன்-அரசன். ஒன்றினர்-பொருந்தினர்.

வாடிவானிருசுடரொளிமழுங்கவானிழிந்து
தேடிஞர்க்கரியானுறைசிவபுரந்தோன்ற. (௩0)

ஆண்டநாயகனந்தியையழைத்தெமக்கன்பு
மாண்டகாதலான்வரகுணவழுதிநம்முலகங்
காண்டல்வேண்டிஞன்காட்டெனக்கருணையாலேவல்
பூண்டவேத்திரப்படையினுன்றிருமுகத்தோன். (௩௪)

வருதியாலெனப்பணிந்தெழுவரகுணற்கொடுபோய்க்
கருதியாயிரம்பெயருடைக்கடவுணின்முகத்தோன்
சுருதியாதியீளப்பருஞ்சொயம்பிரகாசப்
பருதியாள்சிவபுரமிதுபாரெனப்பணித்தான். (௩௨)

கருப்புரங்கமழ்ந்துளர்பசுங்கால்களாலுதையுண்
டருப்பினஞ்சிதைந்தாயிரப்பத்தியோசனைபோய்
மருக்கமழ்ந்துநூறுயிரம்வாலிதழ்க்கமல
மிருக்குமோடைகள்புடைதொறுந்தழுவியயாறும். (௩௩)

வரம்பின்மாதரார்மதுரவாய்திறந்துதேன்வார்க்கு
ரரம்பினேழிசையாழிசைநகைமலர்த்தருவின்
சுரும்பினேரிசைநாரதம்புருவிசைக்கு
மிரும்புரீர்மெழுகாக்கியவின்னிசையெங்கும். (௩௪)

அமுதவாவியும்பொன்மலரம்புயத்தடமுங
குமுதவாயரமாதராங்குயிலினம்பயிலு
நிமிரவாள்விடுமரகதநெடியபைங்காவுந்
திமிரமாசறக்கழுவியதேவர்வாழ்பதமும். (௩௫)

அலம்புபாற்கடல்போற்புரத்தமுதநீரகழும்
பொலஞ்செய்ஞாயில்சூழ்புரிசையும்பொன்செய்கோபுரமு
நலங்கொள்பூவியல்வீதியுநவமணிகுயின்ற
தலங்குமாளிகைப்பந்தியுஞ்சூளிகைகிரையும். (௩௬)

ஐம்புலங்களும்வைகலும்விருந்தாவருந்த
வெம்புநால்வகையுண்டியும்வீணையுஞ்சாந்துஞ்

---

(௩0) குருஉச்சுடர்-மிக்கநிறம்வாய்ந்தஒளி. வான்-ஆகாயம். இருசுடர் - சந்திரசூரியர். (௩௪) மாண்ட-மிகுந்த. வேத்திரப்படையினுன்-பிரம்பாயுதமுடையநந்திதேவன். (௩௨) பருதி-சூரியன். பணித்தான்-உரைத்தான். (௩௩) உளர் - சுழலுகின்ற. (௩௪) வரம்பில்-அளவற்ற. (௩௫) அமுதவாவி-பாலோடை. நிமிர-நேராக. திமிரம்-இருள். (௩௬) அலம்பு-அலைகின்ற.

செம்பொனுரமுமாடலின்செல்வமுந்தெய்வப்
பைம்பொன்மேகலையோவியப்பாவையொப்பாரும். (நூஎ)

படர்ந்தவார்சடையுருத்திரர்பணைத்திறுமாந்த
வடங்கொள்பூண்முலையுருத்திரமகளிரோடமரு
மிடங்கொண்மாளிகைப்பந்தியுமிகல்வினோதன்பங
கடந்தசெல்வமுங்கவலையில்போகமுங்காட்டி. (நூஅ)

முண்டகாசனன்பதமிதுமூவுலகளந்த
தண்டுழாயவன்புரமிதுதனிமுதல்வடிவங்
கொண்டுவீறுசாலுருத்திரர்கோப்பதியின்ன
வெண்டிசாமுகங்காவலருறைவிடமிவைகாண். (நூசூ)

புலருமுன்புனலாடிநீறுடிநம்புனித
னிலகுமாலயமம்விளக்கிநந்தனப்பணியியற்றி
மலர்கொய்தாய்ந்தனர்தொடுத்தரன்புகழ்செவிமடுத்திங்
குலகவாணராய்ப்போகமுற்றுறைகுநரிவர்காண். (சூ0)

தூயராகியைஞ்சுத்திசெய்தகம்புறமிரண்டி
னேயராய்விதிதெரியினுண்முகமனீரெட்டாற்
காயம்வாய்மனவொருமையாலர்சித்துக்கடவு
ளையனாருகுறைபதநண்ணினாரிவர்காண். (சூக)

கிளர்ந்தகாலினுலகுகியைநிமிர்த்துமேற்கிடைத்து
வளர்ந்தபிங்கலையிடைநவெழியுகுமதியின்
வினைந்தவின்னமுதுண்டெம்விடையவன்வடிவங
குளந்தனிற்குறித்தவனுருக்கொண்டவரிவர்காண். (சூஉ)

முக்கணையகன்பொருட்டெனவேள்விகண்முடித்துத்
தொக்கவேதியரிவர்புனற்சாலையித்தொடக்கத்
தக்கபேரறம்புகழ்பயன்றமைநன்குமதிக்கும்
பொக்கமாறியநிராசையாற்புரிந்தவரிவர்காண். (சூங)

மறையினூற்றினூற்றந்திரமாபினுண்மெய்யி
னிறையுநீற்றினர்நிராமயனிருத்தனேர்ந்தெழுத்து

(நூஎ) வைகலும்-நாடோறும். வெம்பு-மிகுந்த. (நூஅ) பணைத்து - தடித்து. வடம் - முத்துவடம். (நூசூ) முண்டகாசனன் - பிரமன். கோப்பதி - சிறந்தநகரம். (சூ0) புலருமுன்-விடியுமுன். (சூக) தூயராகி-நீராடலாதியாற்சுத்தியுற்றவராகி. ஐஞ்சுத்தி-பூதசுத்தி, ஆன்ம சுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி. என்பன. (சூஉ) கால்-பிராணவாயு. மதி-சந்திரமண்டலம். (சூங) பொக்கம்-பொய்.

மறையுநாவினர்பத்தராயரன்புகழ்கேட்கு
முறையினலிவர்வினைகலிமுருக்கினர்கண்டாய். (சச)

மறைகளின்சதவுருத்திரமந்திரநவின்றோர்
நிறைகொள்கண்டிகைநீறணிநீரரியாரேனுங்
குறிகுணங்குலன்குறித்திடாதன்பரைச்சிவனென்
றறியுமன்பினற்பிறவிவேரறுத்தவரிவர்காண். (சடு)

ஆனஞ்சாடியபரஞ்சுடரிறைசிவஞான
தானஞ்செய்தவர்தருப்பணஞ்செய்தவர்சாம
கானஞ்செய்தவற்காலயங்கண்டுதாவித்தோ
ரூனஞ்சேர்பிறப்பறுத்துவாழுத்தமரிவர்காண். (சசு)

சிவனேயர்ச்சனைசெய்பவர்க்கிசைவனசெய்தோ
ரவனெனக்குறித்தடியரைப்பூசைசெய்தாறு
சுவையவின்னமுதருத்திநேர்தொண்டர்தம்பணியே
தவமெனப்புரிந்துயர்ச்சியைச்சார்ந்தவரிவர்காண். (சஎ)

ஆதிசுந்தரக்கடவுளுக்காலயம்பிறவு
நீதியாலருச்சனைபிறபணிகளுநிரப்பிப்
பூதிசாதனவழிநிலம்புரந்திவணடைந்த
கோதிலாதநின்குடிவழிக்கொற்றவரிவர்காண். (சஅ)

என்றுவேத்திரங்கொகுறித்தெம்மிறைநந்தி
கொன்றைவேணியனடியர்தங்குழாத்தினைத்தேற்றி
நின்றுவீழ்ந்துவீழ்ந்தஞ்சலிமுகிழ்த்திடநெறியே
சென்றுவானவர்நாயகன்றிருமுன்புவிடித்தான். (சகூ)

மறைகளாகமம்வடிவெடுத்திருபுடைவாழ்ந்த
நறைகொள்யாழ்தழீஇத்தும்புருநாரதர்பாட
வறைகொள்வண்டிமிர்கொம்பரினரம்பையராடக்
குறைகொள்வானவர்பதங்கிடையாதிறைகொள்ள. (இ0)

மதங்கவிழ்க்குமால்வரைமுகமைந்தனுஞ்சூரன்
கதங்கவிழ்த்தவேற்கந்தனுங்கருதலன்வேள்வி
விதங்கவிழ்த்தவாள்வீரனும்வெயின்முடித்தார்தேன்
பதங்கவிழ்ப்பவீழ்ந்தேயினபணிவழிநிற்ப. (இக)

(சச) தந்திரமரபு-ஆகமமார்க்கம். (சடு) நீரர்-தன்மையர். (சசு) கண்டி-உண்டாக்கி. (சஎ) இசைவன-வேண்டுவன. (சஅ) பிறபணி-பிறதொழில். (சகூ) குறித்து-சுட்டி. (இ0) நறை-ஈண்டுஇனிமைப் பொருட்டு. (இக) கருதலன்-பகைவன்.

தூங்குதானையையொதுக்கிவாய்துணைக்கரம்பொத்தி
யோங்குமாலயன்றங்குறையொதுங்கிநின்றுரைப்ப
வாங்குவான்சிலையிந்திரன்முதற்றிசைவாணர்
தாங்கடாம்புரிகாரியக்குறைநின்றுசாற்ற. (நிஉ)

எழுவிழுதெண்டோந்திவாய்மென்றெயிறதுக்கிக்
குழுமுபாரிடத்தலைவருங்கோடிகூற்றெதுங்கி
விழுமமுழ்கிமெய்பனித்திடவிதிர்க்குமுக்குமிக்
கழுமுளேந்தியகணத்தவர்கடைதொறுங்காப்ப. (நிஙி)

சித்தர்வானவர்தானவர்சாரணர்திணிதோள்
வைத்தயாழினர்கின்னரர்மாதவரியக்கர்
பைத்தபாரிடர்காருடர்பாதலவாணர்
சுத்தயோகியர்முதற்கணத்தொகையெலாம்பரவ. (நிசி)

இனிவறும்பிறப்பறுத்தெமைக்காத்தியாலெனத்தங்
கனிவரும்பியவன்பெழுகருணையாரமுதைப்
பனிவருந்தடங்கண்களாற்பருகிமெய்பனிப்ப
முனிவர்சங்கரசிவசிவவெனமுறைமுழங்க. (நிடி)

வரந்தவாதனயாவர்க்கும்வரன்முறைவழங்கி
முருந்தவாநகைமலைக்கொடிமுகிழ்நகையரும்பத்
திருந்தவாயிரங்கதிர்விடுசிங்கமெல்லணைமே
லிருந்தநாயகனிருக்கைகண்டிறைஞ்சினனிறைவன். (நிசு)

உரைகளுந்தமாறமெய்யுரோமமுஞ்சிலிர்ப்பக்
கரையிறந்தவின்னருட்பெருங்கடலிலன்பென்னுந்
திரையிறந்தவாநீர்த்திடமிதந்துபோய்ச்செப்பின்
வரையிறந்தவானந்தவாரமுதைவாய்மடுத்தான். (நிஎ)

தன்புலன்களுங்கரணமுந்தன்னவேயாக்கி
யன்புடம்புகொண்டவனெதிரருட்சிவலோகம்
பின்புபண்டுபோன்மதுரையாப்பிராட்டியுந்தானு
முன்பிருந்தவாறிருந்தனன்சுந்தரமூர்த்தி. (நிஅ)

(நிஉ) தூக்கி-மேலெடுத்துச்சொருகி. (நிஙி) எழு-வேதடி. விழுமம் - துன்பம். கழுமுள்-சூலம். (நிசி) பாதலவாணர்-நாகலோகவாசிகள். பாதாளலோகவாசியான அசுரர்முதலியருமாம். (நிடி) பனிவரு - நீர்த்துளிவருகின்ற. தவாதன-கெடாதன. முருந்தவாநகை. புறவையிறகினடியும் விரும்புந்தந்தம். (நிஎ) செப்பின்வரை - சொல்லினளவு. (நிஅ) அன்புடம்பு - அன்பாகியசரீரம்.

வேந்தர்சேகரன்வரகுணன்விண்ணிழிகோயி
லேந்தல்சேவடியிறைஞ்சிநின்றிறையருட்பெருமை
யாய்ந்தவாவுதன்னகம்புகவின்பமோடன்பு
தோய்ந்துதாரைநீர்துளும்பநாக்குழறிடத்துதிப்பான். (நிக)

கோசீசகக்கலிப்பா.

நாயினேனென்னேநடுக்கும்பழியகற்றித்
தாயினேராகித்தலையளித்தாய்தாள்சரணஞ்
சேயினேன்காணச்சிவலோகங்காட்டிப்பின்
கோயினேர்நின்றவருட்குன்றேநின்ரூள்சரணம். (சுo)

மாழாந்துசெய்யும்வினைவழிபோய்வன்னரகிற்
ரூழாதடியனேற்கன்புதந்தாய்தாள்சரண
மேழாகிநான்குவகையாயெழுபிறப்பும்
பாழாகவென்னேப்பணிகொண்டாய்தாள்சரணம். (சுக)

வெங்கட்பழியின்வினையேனேவேரூக்கித்
திங்கட்குலக்களங்கந்தீர்த்தாய்நின்ரூள்சரண
மங்கட்சிவபுரமுண்டன்புடையார்க்கென்பதையின்
றெங்கட்குக்காட்டியசைவித்தாய்தாள்சரணம். (சுஉ)

கலிநிலைத்துறை.

என்னவேத்தியின்னருண்முகந்தீறிலாவன்பாற்
பின்னர்வேறுபல்பூசையும்பிறக்குவித்திருந்தான்
மன்னரேறடையார்க்கொருமடங்கலேறடல்வேற்
றென்னரேறெனத்தோன்றியவரகுணதேவன். (சுரு)

என்றதென்மலைமுனிவனேயிருடிகளேக்கி
யன்றுவாசவன்பழிகரிசாபமந்தணனைக்
கொன்றுதாயொடுங்கூடியகொடுவினைமுதலாத்
துன்றுபாவமுமதுரையிற்றொலைத்தனனன்ரே. (சுசு)

பரமனெண்குணன்பசுபதிவரகுணற்பற்றும்
பிரமவன்பழியிடைமருதிடைவிட்டுப்பெயர

(நிக) தாரை-விழிமணி. (சுo) நேராகி-ஒப்பாகி. (சுக) மாழாந்து மயங்கி. வினை. ஆகாமியவினை. எழாகிநான்குவகையாகியென்றது - தேவராதி எழுவகைப்பிறவியையும் அண்டசாதி நால்வகையோனியையும். (சுஉ) வெங்கண் - விடாதுபற்றிய வைராக்கியத்தினையுடைய. (சுரு) முகந்து - கிரகித்து. பிறக்குவித்து - விளங்கச்செய்து. (சுசு) துன்று-நெருங்கிய.

வரமளித்தவாறென்னைகொல்வள்ளலேயிதனைத்
திரமுறப்புகலெமக்கெனமுனிவர்கோன்செப்பும். (சுடு)

பூதநாயகன்சுந்தரன்புண்ணியமூர்த்தி
யாதலாலன்னதலத்துறையடியவரஞ்சிப்
பாதகஞ்செயாதொழுகுறூஉம்படிநினைந்தினைய
தீதுறூஉம்பழிதனையிடைமருதினிற்றீர்த்தான். (சுசு)

என்றகத்தியமுனியிறையிறைகொடுத்தியம்ப
நன்றெனசிரம்பணித்துமெய்ஞ்ஞானவானந்தந்
தன்றிருற்றவர்சுந்தரச்சோதிசேவடிக்கீ
ழொன்றுமற்புதவானந்தவுதியுட்களித்தார் (சுஎ)

கோச்சகக்கலிப்பா.

அன்னதனித்தொன்மதுரையன்றுதொடுத்தின்றெல்லை
தன்னனையதாயகிலதலங்கள்சிகாமணியாகிப்
பொன்னகரின்வளஞ்சிறந்துபூவுலகிற்சிவலோக
மென்னவிசைபடப்பொலிந்ததேழிரண்டுபுவனத்தும். (சுஅ)

வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம் முற்றிற்று.

ஆ படலம் - சகூ - க்கு திருவிருத்தம் - உ0கூ0.

நாற்பத்தொன்றவது,

விறகுவிற்ற படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெடியவன்பிரமன்றேடநீண்டவன்றென்னற்கேழின்
முடியதாஞ்சிவலோகத்தைக்காட்டியமுறையீதையன்
படிமிசைநடந்துபாடிப்பாணன்றன்விறகாளாகி
யடிமையென்றடிமைகொண்டவருட்டிறமெடுத்துச்சொல்வாம். (க)

மன்றலந்தெரியன்மார்பன்வரகுணன்செங்கோலோச்சி
பொன்றலங்காவலானிற்பொலியுநாளேமகாத

(சுடு) பரமன் - பிரேட்டன். (சுசு) பூதநாயகன் - சிவபெருமான். (சுஎ) இறைகொடுத்து - விடையிறுத்து. (சுஅ) இன்றெல்லை - இன்றளவும். (க) நெடியவன் - திருமால். எழின்முடி யென்றது - சிவலோகம். அனைத்துலகிற்கு மேலிருத்தலின்.

னென்றொருவிறல்யாழ்ப்பாணன்வடபுலத்திருந்தும்போந்து
வென்றிகொள்விருதினேவிஞ்சைசூழ்மதுரைசார்ந்தான். (உ)

பூழியர்பெருமான்கோயில்புகுந்துவேத்தவையத்தெய்திச்
சூழிமால்யானையானைத்தொழுதுபல்புகழ்கொண்டாடி
யேழிசைமழலைவீணையிடந்தழீஇச்சுருதிகூட்டி
வாழியின்னிசைத்தேன்மன்னனஞ்செவிவழியப்பெய்தான். (ஈ)

முகையுடைந்தவிழ்ந்தமாலைமுடித்தலைதுளக்கித்துசு
பகலவிர்மணிப்பூணல்கிப்பல்லுணக்கருவிநல்கி
யகன்மனைவேறுகாட்டியரசர்கோன்வரிசைசெய்ய
விகலறுகளிப்பினேடுமிசைவல்லானில்லிற்புக்கான். (ச)

மீனவன்வரிசைபெற்றசெருக்கினும்விருதினனு
மானமேல்கொண்டதன்னேடின்னிசைபாடவல்ல
தானயாழ்ப்புலவர்வேறிங்கில்லெனத்தருக்குஞ்செய்தி
கோனறிந்துழையர்க்கூவிப்பத்திரற்கொணர்திரென்றான். (டு)

உழையரால்விடுக்கப்பட்டபத்திரனுவரிவென்றான்
கழல்பணிந்தருகுநிற்பக்கௌரியனேக்கிப்பாணி
பழகிசைவல்லானேடும்பாடுதிகொல்லோவென்ன
மழலையாழிடந்தோளிட்டபாணர்கோன்வணங்கிசொல்வான். (சு)

தென்னவர்பெருமயானுன்றிருவுளவலனுங்கூடன்
முன்னவனருளுமூட்டுமுயற்சியான்முயன்றுபாடி
யன்னவன்விருதுவாங்கியவனேவீறழிப்பனென்றான்
மன்னவனேலப்பாடுபோகெனவரைந்துசொன்னான். (எ)

இற்கண்ணேயிசைவல்லான்போயிருந்தழியனேயான்பாணர்
கற்கும்பாண்மக்கண்மல்லலாவணங்கவேலமன்றம்
பொற்குன்றமனையமாடமறுகெங்கும்போகிப்போகிச்
சொற்குன்றுவகையாற்பாடித்திரிந்தனர்வீறுதோன்ற (அ)

இவ்விசைகேட்டுநன்றென்றதிசயித்திசைவல்லான்பால்
வவ்விசைமைந்தர்பாடும்வண்ணமீதென்னெகெட்டே
னவ்விசைவல்லான்பாடுமுறையெற்றேவவனேகாசை
செவ்விசைபாடிவெல்வதெவனெனத்திவவுக்கோலான். (கூ)

(உ) பொன்தலம் காவலான்-விண்ணுலகத்தை யாளும் இந்திரன். (ஈ) சூழி-முகபடாம். (ச) துளக்கி-அசைத்து. (டு)மானம்-கர்வம். கோன்-வரகுண பாண்டியன். (சு) உழையர்-ஊழியர். கௌரியன்-பாண்டியன்.(எ) வீறழிப்பன்-கர்வபங்கஞ்செய்வோன்.(அ)மல்லல்-வளம். கவலை-முத்தெருக் கூடுமிடம். வீறு-பெருமை. (கூ) வவ்விசைமைந்தர் - இசையைக் கிரகித்த பாண்மக்கள்.

யைமணிமிடற்றிஞனேமகூரைநாயகனேவந்தித்
தையனேயடியேற்கின்றுனருட்டுணைசெய்யல்வேண்டு
மெய்யனேயென்றுபோற்றிவேண்டுகொண்டன்புதோய்ந்த
பொய்யறுமனத்தானில்லம்புக்கினிதிருந்தானிப்பால். (கo)

கலிநீலத்துறை.

வருத்தனுகிவந்திரந்தவனிசைப்பகைமாற்ற
விருத்தனும்பிறகாளெனவிண்ணிழிவிமானத்
தொருத்தனுரறிவாகியவுண்மையானந்தத்
திருத்தனுர்தமதிச்சையாற்றிருவுருக்கொள்வார். (கக)

அழுக்குமூழ்கியசிதரசைத்தவிர்சடையமுத
மொழுக்குவெண்மதிமாங்கியேசெருகியதொப்ப
மழுக்குகூனல்வெள்வாய்க்குயம்வலம்படச்செருகி
யிழுக்குதேய்செருப்பருமறைகடந்ததாளேற்றி. (கஉ)

பழையதோர்பொல்லம்பொத்தியபத்தர்யாழ்க்கோடு
ளுழையதாகவிட்டெருத்தலைத்தசலாடியவொண்
குழையகாதினிற்களவிணர்க்குறியகாய்தூக்கித்
தழையும்வார்சிகைசரிந்திடச்சுமையடைதாங்கி. (கங)

தறிந்தவிந்தனந்தினந்தொறுந்தாங்கிநீள்பங்கி
பறிந்துதேய்ந்துழுந்தியதலையுடையாராய்ப்பறிந்து
மறிந்தகங்கையும்பங்குறைமங்கையுங்காணு
தெறிந்தவிந்தனச்சுமைதிருமுடியின்மேலேற்றி. (கச)

என்புதோன்றியூனின்றியெயிலேத்தயாக்கையரா
யன்புதோன்றியேகண்டவரகங்கனிந்திரங்க
வன்புதோன்றியமனமொழிகடந்தாண்மலர்பார்
முன்புதோன்றியதவத்திலுன்முடிமிசைச்சூட. (கஙி)

திருமுகத்துவேர்வரும்பவாய்குவிந்தொலிசெய்ய
வருவர்கற்சுமைதாங்கிமேற்சார்த்துவர்மடிநீர்
பருகுவாரெடுப்பார்தலைவெம்மைவேர்பறிய
விருகையாலடிக்கடியெடுத்தேந்தியூர்புகுவார். (கசு)

(கo) மை-இருள். (கக) திருத்தனுர் - செவ்வையானவர். (கஉ) சிதர்-கந்தை. குயம்-கொடுவாள். (கங) பொல்லம்-துண்டு. பொத்தியை-தைத்த. (கச) இந்தனம்-விறகு. (கஙி) யாக்கையர்-உடலினர். (கசு) பறிய-நீங்க.

நடந்துகொள்ளுநர்க்கரும்விலைபகர்ந்துநான்மாட
மிடைந்தவீதியுங்கவலையுமுடைக்கருமிடைந்து
தொடர்ந்தவேதமும்பிரமன்மால்சூழ்ச்சியும்பகலுங்
கடந்துபோகியவ்விசைவலான்கடைத்தலைச்செல்வார். (கஎ)

வரவுநேர்ந்தழைப்பவரெனவாம்பல்வாய்மலர
விரவுகான்றுவெண்மதிநகைத்தெழுவயிர்த்துணைவன்
பிரிவுநோக்கிஞரெனக்கணீர்பில்குதாமரையி
னிரைகள்கூம்பிடக்கதிரவன்குடகடனீந்த. (கஅ)

பறவைவாயடைத்தருகணைபார்ப்பொடும்பெடையைச்
சிறகராலணைத்திரும்பொழிற்குடம்பையுட்செறிய
நறவவாய்ப்பெடையுண்டதேனக்கிவண்டோடைப்
பொறைகொடாமரைப்பள்ளியுட்புகுந்துகண்படுக்க. (ககூ)

புல்லெனீணிலைக்குரங்கினம்பொதும்பர்புக்குறங்க
முல்லையாய்மகாருய்த்தரக்கன்றுள்ளிமுந்திக்
கொல்லையானிரைமனைதொறுங்குறுகிடச்சிறுபுன்
கல்விமாணவச்சிறார்பயில்கணக்கொலியடங்க. (உ0)

பூனைந்தவாழ்கடற்கரும்படாமுடம்பெலாம்போர்த்து
வானைந்தபூண்முலைநிலமகடியில்வதுமானக்
கானைந்தகாரிருண்மெல்லெனக்கவிதரப்பிரிவா
லினைந்தகாதலர்நெஞ்சில்வேளெரிகனைநாட்ட. (உக)

திங்கள்வாணுதன்முயற்கறைத்திலகமுஞ்சிவந்த
மங்குலாடையுமயங்கிருளோதியும்வான்மீன்
பொங்குமாரமும்பொலிந்ததன்கொண்கனைப்பொருப்பன்
மங்கைதேடிவந்தாளெனவந்ததுமாலை. (உஉ)

எடுத்தவிந்தனமொருபுறத்திறக்கியிட்டேறி
யடுத்தவன்புறந்திண்ணைமீதமர்ந்திளைப்பாறித்

(கஎ) ஆலிலை - பொருத்தமற்றவிலை. (கஅ) குடகடல்-மேற்றிசைக்கடல். (ககூ)பெடை-பெண்வண்டு.குடம்பை-கூண்டு. பொறை-கனம்.பள்ளி-படுக்கை. (உ0)ஆய்மகார்-இடைசிறுவர். உய்த்தர-செலுத்த. உள்ளி-நினைத்து. (உக) கரும்படாம்-கரியவாடை. மான-ஒப்ப. கவிதர-மூட. வேள்-காமன். (உஉ) முயற்கறை-களங்கம். மங்குல்-ஆகாயம். ஓதி-கூந்தல். கொண்கன்-கணவன். பொருப்பன்-மலையரையன்.

தொடுத்தவின்னிசைசிறிதெழீஇப்பாடினர்சுருதி
மடுத்தியாரவன்பாடுவானென்றிசைவல்லான். (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வண்டறைகொன்றையான்முன்வந்துநீயாரையென்றான்
பண்டருவிபஞ்சிபாணபத்திரனடிமையென்றான்
முண்டகமலரோன்மாயோன்புரந்தரன்முதன்மற்றேனை
யண்டருந்தன்குற்றேவலடிமையாக்கொண்டவம்மான். (உச

கனியிசைக்கிழவன்றன்கீழ்க்கற்பவரனேகர்தம்மு
ணனியிசைக்கிழமைவேட்டுநானுமவ்வினைஞனேன்
றனியிசைக்கிழவனெக்கித்தசையெலாமொடுங்கமூத்தா
யினியிசைக்கிழமைக்காகாயென்றெனைத்தள்ளிவிட்டான். (உடு)

வெவ்விறகெறிந்துகட்டிவிலைபகர்ந்தேனுமைய
விவ்வயிறும்புகேனென்றித்தொழில்பூண்டேனென்ன
னைவளர்தெரிந்தவேமகாதனும்விறகுமள்ளா
வவ்விசையொருகாலின்னும்பாடெனவையன்பாடும். (உசு)

குண்டுநீர்சுறந்திட்டன்னநெடுங்கொடிக்குறுங்காய்ப்பத்தர்த்
தண்டுநீணிறத்தநல்யாழிடந்தழீஇத்தெறித்துத்தாக்கிக்
கண்டுமாடகந்திரித்துக்களவியதிவவிற்பாவ
விண்டதேனெழுகிற்றென்னவீக்கிமென்சுருதிகூட்டி. (உஎ)

விசையொடுதானந்தோறும்விரனடந்தாசலாட
விசைமுதலேழிற்பல்வேறின்னிசையெழுஞ்சாதாரி
யசைவொடுவீதிப்போக்குமுடுகியலராகம்யார்க்கும்
நசைதருநரம்புகண்டமொற்றுமைநயங்கொண்டார்ப்ப. (உஅ)

வயிறதுகுழியவாங்கலழுமுகங்காட்டல்வாங்குஞ்
செயிரறுபுருவமேறல்சிரஞடுக்குறல்கண்ணுடல்
பயிறருமிடறுவீங்கல்பையெனவாயங்காத்த
லெயிறதுகாட்டலின்னவுடற்றெழிற்குற்றமென்ப. (உக)

(உசு) அவன் - எமநாதன். (உடு) விபஞ்சி-யாழ்வல்லோன். கிழமை-உரிமை. (உசு) னை-இசை. மள்ளன் - திண்ணியன். (உஎ) குறுங்காய் - சிறியகாய். நிறத்தநல்யாழ் - ஐந்நிறமமைந்தநல்யாழ். ஐந்நிறமாவன-மாத்திரைகளொன்பானும் தானங்களெட்டானும், எத்துங்கிரியையென்றீரைந்தும் கோத்துப் - பதின்மூன் றெழுத்தர்ற் றெழிலேந்தும்பண்ணின் - மதியோர்களேந்து நிறமாம். எண்பதஞ் லுணர்க. மாடகம்-முறுக்காணி. திவவு - கட்டு.

வெள்ளைகாகுளிகிழோசைவெடிகுரஞ்சியின்ன
வெள்ளியவெழாலின்குற்றமெறிந்துகின்றிரட்டலெல்லை
தள்ளியகழிபோக்கோசையிழைத்தகெட்டியிர்ப்புத்தள்ளித்
துள்ளலென்றின்னபாடற்றொழிற்குற்றம்பிறவுந்தீர்ந்தே. (ஈ0)

எழுதுசித்திரம்போன்மன்னியிழுமெனுமருவியோதை
முழவொலிகஞ்சநாதம்வலம்புரிமுரலுமோசை
கொழுதிசைவண்டின்ரரியெனவிசைக்குணனும்வேரல்
விழுமிலைசென்மீன்மேல்வீழ்வீழ்ச்சிபோற்பாடற்பண்பும். (ஈ ஈ)

பொருந்தமந்தரத்திலேமெத்திமந்தாரம்போக்கித்
திருந்தியதுள்ளறூங்கன்மெலிவதுசிறப்பச்செய்து
மருந்தனசெய்யுளோசையிசையோசைவழாமல்யார்க்கும்
விருந்தெனசெவியின்மாந்தப்பாடினர்வேதகீதர். (ஈ உ)

கலிவிருத்தம்.

விரைசார் மலரோ னறியா விகிர்த
னரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
யரசாய் மதுரை யமர்ந்தா னலனென்
புரைசார மனனும் புகுந்தா னென்னே. (ஈஈ)

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடி யேனகமு
மாட லரங்கா வமர்ந்தா னென்னே. (ஈ ச)

நீல வுணணன் றேரு நிமல
னுல வாயி லமர்ந்தா னென்னே
யால வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே. (ஈ.டு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாணர்தம்பிராணைக்காப்பான்பருந்தொடுநிழல்போக்கென்ன
யாணரம்பிசைபின்செல்லவிசைத்தவின்னிசைத்தேனண்ட
வாணர்தஞ்செவிக்காலோடிமயிர்த்தூவெழியத்தேக்கி
யாணரின்னமுதயாக்கையிசைமயமாக்கிற்றன்றே. (ஈஈ)

(ஈச) அகம்-உள்ளம். (ஈடு) நீலவண்ணன்-கரியநிறவருவினனான திருமால். (ஈஈ) அண்டவாணர்-தேவர். யாணர் - புதுமை. பருந் தொடுநிழல்போக்கென்ன - பருந்துடனதன்நிழலுஞ்சென்றாங்கு.

தருக்களுஞ்சலியாமுந்நீர்ச்சலதியுங்கலியாநீண்ட
பொருப்பிழியருவிக்காலுநதிகளும்புரண்டுதுள்ளா
வருட்கடல்விளைத்தகீதவின்னிசையமுதமாந்தி
மருட்கெடவறிவன்றீட்டிவைத்தசித்திரமேயொத்த. (கஎ)

வீணைகைவழிக்கிச்சோர்வார்சிலர்சிலர்விரனடத்தும்
பாணரம்பெழாலுங்கண்டத்தெழாலும்வேறுகவேர்ப்பார்
காணமொவ்வைகைதள்ளாநாத்தலநடுங்கித்தங்கண்
மாணிழையவர்மேல்வீழ்வார்விஞ்சையர்மயங்கிச்சில்லோர். (கஅ)

போதுளான்பரமன்பாதப்போதுளாளனென்வேலை
மீதுளான்பரமானந்தவேலைமீதுள்ளாளனென்
றூதுளாங்கமலக்கண்போற்சதமகனுடலமெல்லாங்
காதுளானல்லேனென்றுன்கண்ணுளான்கானங்கேட்டு. (கக)

முனிவருந்தவத்தராதிமுத்தர்மாசித்தரன்பின்
றுனிவரும்பழங்கண்டீர்ப்பான்சுந்தரத்தோன்றல்கீதங்
கனிவருங்கருணையென்னுங்கடலிலன்பெனுமாற்றிற்
பனிவருங்கண்ணீர்வெள்ளம்பாய்ந்திடவின்பத்தாழ்ந்தார். (சo)

ஊடிவேறுறுங்கித்துன்பவுவரியுட்குளித்தார்தம்மிற்
கூடிவேறற்றவின்பக்குளிர்கடல்வெள்ளத்தாழ்ந்தார்
நாடிவேறிடைப்பிரிந்தார்மேன்மனநடத்திமேனி
வாடிவேளலைப்பச்சோர்ந்துமம்மர்நோயுழந்தார்மண்ணோர். (சக)

பைத்தலைவிடவாய்நாகம்பல்பொறிமஞ்ஞைநால்வாய்
மத்தமானரிமான்புல்வாய்வல்லியமருட்கையெய்தித்
தத்தமாறறியாவாகித்தலைத்தலைமயங்கிச்சோர
வித்தகைமாவும்புள்ளுமிசைவலைப்பட்டவம்மா. (சஉ)

வன்றரைகிழியவீழ்போய்வான்சினைகரிந்துநின்ற
வொன்றறிமரங்களெல்லாஞ்செவியறிவுடையவாகி
மென்றளிரீன்றுபோதுவிரிந்துகண்ணீருஞ்சோர
நன்றறிமாந்தர்போலநகைமுகமலர்ந்தமாதோ. (சங)

(கஎ) சலியா - அசையா. கலியா-முழங்கா. (கஅ) எழால்-ஓசை. (கக) கண்ணுளான்-சிவபெருமான். (சo) முனிவு-வெறுப்பு. (சக) ஊடி-பகைத்து. உவரி-கடல். உட்க-நடுங்க. (சஉ) மஞ்ஞை - மயில். அரிமான்-சிங்கம். புல்வாய்-மான். வல்லியம்-புலி. ஆறு-வழி. தலைத்தலை - இடங்கள்தோறும்.(சங) ஒன்றறிமரம்-பரிசவுணர்ச்சிஒன்றே யுள்ளமரம். கண்ணீர்-கள்நீர். நன்றறிமாந்தர் - நன்மைதீமைகளை யறியுமனிதர்.

வாழியவுலகின்வாளேர்மனிதர்புள்விலங்குமற்று
மாழியகரணமெல்லாமசைவறவடங்கவைய
னேழிசைமயமேயாகியிருந்தவுணர்ந்தோருள்ள
மூழியிலொருவன்முள்புக்கொடுங்கியதன்மையொத்த. (சச)

கண்ணிறைநுதலோன்சாமகண்டத்தினெழுந்தமுல்லைப்
பண்ணிறைதேவகீதஞ்சராசரவுயிரும்பாரும்
விண்ணிறைதிசைகளெட்டும்விழுங்கித்தன்மயமேயாக்கி
யுண்ணிறையுயிருமெய்யுமுருக்கியதிசைவல்லானே. (சடு)

கலிநிலைத்துறை.

சிந்தைதோயுமைம்பொறிகளுஞ்செவிகளாப்புலன்க
ளுந்துமோசையாவிசைவலானிருந்தனனுகப்
பந்தநான்மறைநாவினுற்பத்திரனுளாய்
வந்துபாடினிரிந்தனச்சுமையொடு மறைந்தார். (சசு)

யானறிந்தசாதாரியன்றிம்பருளிதனே
நானறிந்தென்றெருவருநவின்றிலர்தேவ
கானமீதிவற்குணர்த்திநேனென்கடவுளேயன்றி
யேனமானுடர்வல்லரோவிதுவியப்பென்ன. (சஎ)

இழுக்கிவிட்டவிக்கிழமகளிசையிதேலந்த
வழுக்கில்பத்திரன்பாடலெற்றேவெனமதியா
வழுக்கமுற்றெழுந்திசைவலானடுத்ததன்பண்டர்
குழுக்களுங்குலேகுலேந்திடவிருள்வழிக்கொண்டான். (சஅ)

மடக்குபல்கலேப்பேழையுமணிக்கலம்பிறவு
மடக்குபேழையுங்கருவியாழ்க்கோலுமாங்காங்கே
கிடக்கமானமுமச்சமுங்கிளர்ந்துமுன்னீர்த்து
கடக்கவுத்தரதிசைக்கணேநாடினனடந்தான். (சகூ)

(சச) ஆழியகரணம்-ஆழ்ந்த மனமுதலிய அந்தக் கரணம். (சடு) முல்லேப்பண்-சாதாரி. இசைவல்லான்-இசைநூலின் வல்ல ஏமநாதன். (சசு) பந்தநான்மறை-பதம், நிறை, பாழி, சாகை, பஞ்சாதி, அநுவாகம், முதலியவைகளேயுடைய நான்குவேதங்கள். (சஎ) இம்பர் - இவ்வுலகவாசிகள். (சஅ) இழுக்கிவிட்ட-தள்ளிவிட்ட. வழுக்கு-குற்றம். அழுக்கம்-கவலே. பண்டர்-பாடற்கீழ் மக்கள். (சகூ) பேழை-பெட்டகம்.

சிவிகையோர்வழிவிறலியரோர்வழிசெல்லக்
கவிகையோர்வழிகற்பவரோர்வழிகடுகக்
குவிகையேவலரொருவழிகூடநாணுள்ளத்
தவிகையோவருமொருவழியகன்றிடவகன்றான். (கூ0)

அன்றுபத்திரன்கனவில்வந்தாடலேறழக
ரின்றுபத்திரவிசைவலானிடைவிறகாளாய்ச்
சென்றுபத்திரனடிமையாமென்றுபாண்செய்து
வென்றுபத்திரஞ்செய்துநின்வேண்டுகோளென்றார். (கக)

குஞ்சிநாண்மலர்க்கொன்றையாரங்ஙனங்கூறு
நெஞ்சினுனினைப்பரியசொற்கேட்டலுநெஞ்ச
மஞ்சினுனிதுசெய்யவோவடியனேன்மறைகட்
கெஞ்சினுரையின்றிரந்தவாறென்றுகண்விழித்தான். (கஉ)

கண்மலர்ந்தெழுபத்திரன்கரையிலாவுவகை
யுண்மலர்ந்தெழுமன்புகொண்டேக்கவெங்கதிரோன்
விண்மலர்ந்தெழுமன்புபோய்விசும்பிழிகோயிற்
பண்மலர்ந்தநான்மறைப்பொருளடித்தலம்பணிந்தான். (கங)

கடியகானகம்புகுதவோகட்டியவிறகை
முடியிலேற்றவோமுண்டகந்தாள்கணைந்திடவந்
தடியனேன்பொருட்டடாதசொற்பகரவோவஞ்சக்
கொடியனேன்குறையிரந்தவாவிளைந்ததேகுற்றம். (கச)

நெடியனேமுதல்வானவர்நெஞ்சமுஞ்சுருதி
முடியனேகமுங்கடந்தநின்முண்டகப்பாதஞ்
செடியனேன்பொருட்டாகவிச்சேணிலந்தோய்ந்த
வடியனேற்கெளிதாயதோவையநின்பெருமை. (கஙு)

நாதவந்தமுங்கடந்தமெய்ஞ்ஞானவானந்த
போதமென்பரஃதின்றிருவுருபுடவிமானுடமா
யாதபந்தெறத்தறிந்தவிந்தனஞ்சுமந்தடியேன்
பேதையன்பளவாயதோபெருமநின்னுருவம். (கசு)

(கூ0) விறலியர்-பாடற் பெண்மக்கள். ஓவர் - பாடற்கீழ்மக்கள். (கக) ஆடல்-போர். (கஉ) குஞ்சி-குடுமி. (கங) கண்மலர்ந்து-கண் விழித்து. (கச) அடாத்சொல்-தகாதசொல். அது பத்திரனடிமை யென்றது. (கஙு) செடியன்-இழிதொழிலுடையன். (கசு) நாத அந்தம்-விந்துதத்துவத்தின் கீழுள்ள ஒரு இடம்.

மறிந்ததெண்டிரைகிடந்தவனுந்தியில்வந்தோ
னறிந்ததன்றரும்பொருள்வரம்பகன்றெழுவிசும்புஞ்
செறிந்தவண்டமுங்கடந்ததுசியனேன்பொருட்டாத்
தறிந்தவிந்தனஞ்சுமந்ததோதம்பிரான்முடியே. (இஎ)

எண்ணவந்தனைசெய்துநின்றேத்தியங்கயற்கண்
மின்னமர்ந்தபங்கொருவனேவலங்கொடுமீண்டு
மன்னர்தம்பிராஞ்சியவரகுணதேவன்
றன்னைவந்தடிபணிந்தனன்றந்திரிக்கிழவோன். (இஅ)

வந்தவேழிசைத்தலைமகன்வரவறிந்தரச
னந்தவேழிசைக்கிழவனையழையெனவுழையோர்
பந்தயாழ் மகளிருக்கைபோய்ப்பார்த்தனர்காணூர்
சிந்தையாகுலமடைந்தவன்போனவாதெளியார். (இக)

எங்குளானெனத்தேடுவாரிவரெதிரியல்வா
யங்குளார்சிலரறிந்துவாறரைகுவாரவனேற்
றிங்குளான்விறகெடுத்தொருமுதுமகனிவன்பாற்
பொங்குமெழிசைப்பத்திரனடிமையாய்ப்போந்தான். (கo)

பாடினனன்புபட்டதுதெரிகிலேம்பாணி
னோடினனெனக்கேட்டலுமொற்றர்போய்க்கொற்றஞ்
சூடினனவையடைந்தவர்சொல்லியவாறே
யாடினர்வியப்படைந்தனுமானமுற்றரசன். (கக)

தன்னடைந்தவத்தந்திரித்தலைவனேநோக்கி
யென்னவாறவன்போனவாறிங்கினும்போன
பின்னையாதுநீசெய்தனையெனவிசைப்பெருமான்
றென்னர்கோனடிதொழுதுதன்செய்தியைமொழிவான். (கஉ)

நென்னல்வாயடியேனினதாணிழனீங்கிப்
பின்னல்வார்சடைமௌலியெம்பிரானடிபணிந்தே
னின்னலார்குறையிரந்துமீண்டிருக்கைபுக்கிருந்தேன்
கன்னலார்மொழிபங்கரென்கனவில்வந்தருளி. (கங)

(இஎ) திரை-திரையினையுடைய கடல். திரை அலை. (இஅ) தந்திரிக் கிழவோன் - வீணையில்வல்ல பாண பத்திரன். தந்திரி-வீணையினரம்பு. (இக) பந்தம்-நரம்பின்கட்டு. ஆகுலம்-துன்பம். (கo) பொங்கும்-உயர்ந்த. (கக) பட்டது-நடந்தது. கொற்றம்-வெற்றி. ஆடல்-சொல்லல். அநுமானம்-மனத்தா னெண்ணியுணருமொரனை. (கஉ) இங்கினும்-இவ்விடத்தினின்றும். (கங)நென்னல்வாய்-நேற்றைப்போது.

ஓடியுன்பொருட்டாகநாம்விறகெடுத்துழன்று
வாடிநின்பகைப்புறங்கடைவந்துசாதாரி
பாடிவென்றுநின்பகைவனைத்துரந்தனமெனச்சொல்
லாடினர்விழித்தேனிதுகிழ்ந்ததென்றறைந்தான். (சுச)

ஏவன்மைந்தர்போய்விளங்கிவந்திசைத்ததும்வீணைக்
காவலன்களிகழ்ச்சியுமொத்தலிற்கைக்கும்
பூவலங்கலானீஃதுநம்பொன்னகர்க்கூடற்
றேவர்தம்பிரான்றிருவிளையாட்டெனத்தெளிந்தான். (சுடு)

இகழ்ந்தகூற்றெறிசேவடிக்கிடையருநேசங்
திகழ்ந்தபத்திரனன்பையுந்தேவரைக்காப்பா
னகழ்ந்தவாழிநஞ்சுண்டவனருளையும்வியந்து
புகழ்ந்துபோய்மதுராபுரிப்புனிதனேப்பணியா. (சுசு)

பத்தர்யாழிசைக்கிழவனேப்பனேக்கைமானெருத்தில்
வைத்துமாடநீணகர்வலஞ்செய்வித்துமலர்ந்த
சித்தமாழ்ந்திடவரிசைகண்மிதப்புறச்செய்து
தத்துமான்றொடைத்தேரிஞன்றன்மனைபுகுவான். (சுஎ)

தேவருந்தவமுனிவருந்தேவரிற்சிறந்தோர்
யாவருந்தமக்காட்செயவிருப்பவரிருதா
ணேவவந்துமக்காட்செய்துநுங்குறைமுடித்தா
ராவரேலுமக்கனேவருமேவலரன்றே. (சுஅ)

ஆதலாலெனக்குடையரீருமக்குநானடியே
னீதலாலெனக்கும்மொவ்வுக்குவேறிலேநா
னேதலாவதோர்குறையுளதின்றுதொட்டுமக்கு
வேதநாதனேப்பாடலேகடனெனவிடைத்தான். (சுக)

அரசனல்கியவெறுக்கைபூணுடைகள்பிறவும்
பரசுநாவலர்மாணவர்யாவர்க்கும்பகிர்ந்து
வரிசையாலிசைக்கிளையொடுமனையில்வந்தெய்திக்
கரைசெயாமகிழ்கிறந்திசைக்காவலனிருந்தான். (எo)

விறகுவிற்றபடலம் முற்றிற்று.

ஆ படலம் - கிo - க்கு திருவிருத்தம் - உசoo.

(சுச) புறங்கடை-தலைவாசல். உழன்று-திரிந்து. (சுடு) கைக்கும் பூ-வேப்பம்பூ. (சுசு) கூற்று - எமன். (சுஎ) மாழ்தல் - மயங்கல். தத்துமான் - தாவுங்குதிரை. (சுஅ) ஏவலர்-ஊழியர். (சுக) கடன்-முறைமை. (எo) வெறுக்கை - பொன். பூண் - ஆபரணம்.

நாற்பத்திரண்டாவது,

திருமுகங்கொடுத்தபடலம்.



அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவன் மதுரைமூதூர்முழுமுதலிசையுலானே
யின்னிசைபாடிவென்றதென்னுரைசெய்கேனந்தத்
தென்னவன்சேரன்மாடேதிருமுகங்கொடுத்துப்பாணர்
மன்னவன்றனக்குச்செம்பொன்வழங்கியவழக்கஞ்சொல்லாம். (க)

இனிமதியெமக்கேதென்னுயாழ்வல்லோனன்றுதொட்டுப்
பனிமதிமருமான்கோயிற்பாணிசைக்கிழமைபூத்துக்
குனிமதிமிலைந்தநாதன்கோயின்முப்போதுமெய்திக்
கனிமதியன்பிற்பாடுங்கடப்பநீயமம்பூண்டான். (உ)

இத்தொழிலன்றிவேறுதொழிலியற்கின்மையாலே
பத்திரனிலம்பாடெய்தப்பொறுப்பரோபழனக்கூடற்
சித்தவெம்மடிகள்மேவுந்தன்பொன்னறைச்செல்வம்வௌவிப்
பத்தர்யாழிடத்தேளேந்திப்பாடுகொன்காணவைப்பார். (ஊ)

சிலபொலங்காசுசின்னுண்மணிக்கலன்சின்னுள்செம்பொற்
கலவகைசின்னுளம்பொற்சாமரைக்காம்புசின்னு
ளலர்கதிரிமான்சேக்கையாடகத்தகடுசின்னுள்
குலமணிவருக்கஞ்சின்னுள்கொடுத்திடக்கொண்டுபோவான். (எ)

கைவரும்பொருளேத்தந்தகள்வருந்தானுமன்றி
யெவ்வெவர்தமக்குந்தோற்றுதெரியிலிட்டழித்துஞ்சின்னஞ்
செய்வனசெய்துந்தன்னைச்சேர்ந்தவரிரந்தோர்கைபார்த்
துய்பவர்பிறர்க்குமாறுதவியுட்கவலைதீர்ப்பான். (ஏ)

வைகலுங்கொடுப்போர்பின்னுண்மறுத்தனராகப்போய்ப்போய்க்
கைதொழுதிறைஞ்சிவாளாவருமவன்கலியின்மூழ்கி
யுய்வகைவேறுகாணுதொக்கலுமொக்கவாடிக்
கையறவடையநோனுதுறங்கினன்கனவினெல்லை. (ஐ)

சித்தவெம்பெருமான்வந்துசெப்புவானப்பாநிம்பத்
தொத்தவன்கோசந்தன்னிற்றும்பியுண்கனியின்வௌவி

(க) மாடு-பக்கம். (உ) மதி-புத்தி. நீத்து-விடுத்து. (ஊ)இலம்பாடு-வறுமை. (எ) பொலம்-பொன். அரிமான் சேக்கை-சிங்காதனம். (ஏ) சின்னம் - உருவழித்தல். (ஐ) கலை-வறுமையால்வருந்துன்பம். கையறவு-துன்பம். நோனுது-ஆற்றுமல்.

யித்தனமின்றுகாறுமீந்தனமெம்பாலன்பு
வைத்தவனறிந்தாற்சங்கைமனத்தலுய்விகற்பங்கொள்வான். (எ)

மயலறக்கற்புக்காக்குமகளிர்போற்றுறவுகாக்க
முயலும்யோகரிலுட்காப்புமுரசெறிபுறஞ்சூழ்காப்புங்
கயலிலச்சினையுநிற்கக்கவர்ந்ததற்புதமிக்கள்வ
னுயிர்தொறுமொளித்தகள்வனொருவனேவறியேனென்பான். (அ)

கோமகனினையசெய்தியறியுமேற்கோசங்காப்போர்க்
காமுறுதண்டநின்போலண்பகத்தெம்மைவைத்த
தேமருபோந்தின்கண்ணிச்சேரமான்றனக்கிப்போது
நாமொருமூடங்கறீட்டிநல்குவம்போதியென்ஞ. (கூ)

மறைக்குரைசெய்தவாக்கான்மதிமலிபுரிசையென்னுஞ்
சிறப்பியற்சீர்சால்செய்யுட்பாசுரஞ்செப்பித்தீட்டிப்
பிறைச்சடைப்பெருமானல்கிமறைந்தனன்பெரும்பாண்செல்வ
னுறக்கநீத்தாடிப்பாடியுவகைமாகடலிலாழ்ந்தான். (கo)

க லி வி ரு த் த ம்.

வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்
டாங்கிறை யடிபணிந் தகன்று பத்திர
னேங்கிய கோயிலை வலங்கொண் டொல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான். (கக)

கொல்லையுங் குறிஞ்சியுங் கொதிக்கும் வெம்பரற்
கல்ல தரத்தமுங் கடந்து முட்புறப்
பல்சுளைக் கனியிடி யிடறப்பைப் பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினான். (கஉ)

அலைகட னெடுந் துகிலந்த நாடெனுந்
தலைமக டனக்குவான் றடவுகுன்று பூண்
முலையென விளங்கின முகத்திற் றீட்டிய
திலகமே யானது திருவஞ்சைக் களம். (கங)

(எ) கோசம்-கருவூலம். தும்பி-யானை. (அ) மயல்-மயக்கம். (கூ) ஆமுறும்-உண்டாகும். போந்தின்கண்ணி-பனைமாலை. முடக்கல்-ஓலை. (கo) சிறப்பிய லென்றது-சொல்லமைதி பொருளமைதிகளை. சீர் என்றது-செய்யுளின்பத்தினை. (கக) மேல்வரைப்புலம்-மேற்றிசைக்கணுள்ள மலைநாடு. (கஉ) கொல்லை-முல்லைநிலம். அத்தம்-பாலைநிலம். சுளைக்கனி-பலாக்கனி. பைப்பைய - மெல்லென மெல்லென. (கங) அந்தநாடு-அம்மலைநாடு.

அறமக ளாக்கமு மலரின் மேயசெங்
கிறமகளாக் கமுநீதி சான்ற போர்
மறமக ளாக்கமும் வடசொற் றென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர். (கச)

மண்புக ழ்ந்நகர் மறுகின் மாடொரு
தண்புனற் சாலையிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற்கன் றிராக்
கண்புனை நுதலினர் கனவிற் றோன்றினர். (கஞ)

தென்னவன் மதுரையி லிருக்குஞ் சித்தர்யா
ரின்னிடை வந்துளே நின்னைக் கண்டுதா
னன்னிதி வேண்ட நம்மோலை கொண்டுநம்
மின்னி சைப்பாண பத்திரனிங் கெய்தினன். (கசு)

மற்றவற் கருநி தி கொடுத்து மன்னநீ
தெற்றென வாவிடு கென்று சித்தர்தாஞ்
சொற்றனர் போயினர் சுரக்குந் தண்ணளி
யொற்றை வெண்குடையி னுறைக்க நீங்கினன். (கள)

கங்குல்வாய்க் கண்டவக் கனவைப் பெண்ணையங்
தொங்க லான்றமரொடு சொல்லிச் சேற்களுள்
பங்கினன் றிருமுகங் கொணர்ந்த பத்திர
னெங்குளான் கொல்லெனத் தேடவெண் ணுவான். (கஅ)

மற்றவர் தமைத்துரீ இவருகதில் வெனக்
கொற்றவ னேவலோர் குறுகி மாடமுந்
தெற்றியு நியமமு மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிநக ரெங்குந் தேடுவார். (கக)

தருமநீர்ப் பந்தரி லிருக்குந் தந்தரி
வருமிசைக் கிழவனைக் கண்டுவல்லை போய்த்

(கச) அறமகளாக்கம்-தருமமகளின் செல்வம். போர்மறமகளாக் கம்-வீரலட்சுமியின் வெற்றிச்செல்வம். கலைத்திற மகளாக்கம்-கல் விச்செல்வம். (கஞ) மறுகு-வீதி. (கசு) தென்னவன் - பாண்டியன். (கள) தெற்றென-விரைவாக. (கஅ) பெண்ணை-பனை. தமர்-உரிமை சுற்றத்தினர். (கக) துருவி-தேடி. தில்என்னுமிடைச்சொல். ஈண்டு-விரைவுப்பொருட்டு. இதனை-விழை வேகால மொழியசைக் கினவி யென், நம்மூன் றென்பதில்லைச்சொல்லே - என்னுஞ் சூத்திரத்தா னுணர்க.

திருமகற் குணர்த்திஞர் சேனையோ டெழீஇப்
பெருமகன் பாணர் தம்பிரானே நண்ணினனன். (உ0)

கண்டனன் முகிழ்த்த கைக்கமலஞ் சென்னிமேற்
கொண்டனன் பாடினன் கூத்து மாடினன்
றண்டென வீழ்ந்தன னன்பிற் றண்ணரு
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே. (உக)

வாங்கினன் றிருமுக மலர்க்க ணெற்றினன்
ரூங்கினன் முடிமிசைத் தாமம்போன் மகிழ்
தூங்கினன் றடங்கணீர் துளிப்பமெய் யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே. (உஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னவிருஞ்செம்பொன் மணிமாடக்கூடன் மேயசிவன்யா
மெழுதிவிடுக்குமாற்ற, நன்னர்முகிலெனப்புலவர்க்குதவுஞ்சோரர
பாலன்காண்கதன்போனம்பாலன்ப, னின்னிசையாழ்ப்பத்திரன்
றன்மாடேபோந்தானிரு கிதியங்கொடுத்து வரவிடுப்பதென்னத்,
தென்னர்பிரான்றிருமுகத்தின் செய்திநோக்கிச்சேரர்பிரான்களிப்
பெல்லேதெரியாளுகி. (உங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னின்றளிகை மிசைவைத்துப்புழைக்கைமதமான்றலேயேற்றி
மன்னுங்கொளையாழ்ப்புலவனே முன்வைத்துப்பின்னேதானிருந்து
மின்னுங்கதிர்காலினைக்கவரிவீசிப்பலவேறியங்கலிப்பத்
தென்னென்றளியாரிசைத்தாரான்றிருமாநகரைவலஞ்செய்யா. ()

பஞ்சுதடவுஞ்சீறடியார்பலமங்கலங்கொண்டெதிர்போத
மஞ்சுதடவுநீள்குடுமிமாடமனையிற்கொடுபோகி
நஞ்சுதடவுமணிகண்டனன்பன்றனைநன்னீராட்டி
யஞ்சுதடவியோவியஞ்செய்தமைத்தமணிமண்டபத்தேற்றி. (உசு)

அம்பொற்றவிசிட்டருச்சனைசெய்தாறுசுவையின்னமுதருத்திச்
செம்பொற்கலவைநறுஞ்சாந்தந்தீம்பூவாதிமுகவாசம்

(உ0) தந்திரி-வீணை. (உக) தண்ணரு வண்டு - தேனைக் கண்ட வண்டு. (உஉ) திருமுகம்-இறைவ னெழுதிய ஓலை. (உங) நன்னர் முகில்-உலகத்திற்கு நன்மை பயக்கின்றமேகம். (உச) தளிகை-தவிசு. கொளை-இசை. தென்-ஓரிசை. (உசு) சீறடி-சிறியகால். பல மங்கலம்-கண்ணுடி இடபம் தீபஞ்சீவற்சம்-சங்கு சுவத்திகம் பூரணகும்பம்-இணைக்கயல்முதலியமங்கலங்கள். அஞ்சு-பஞ்சவன்னம்.

பைம்பொற்கலத்துவெள்ளிலேதீம்பழுக்காய்பிறவுமுறைநல்கி
யும்பர்க்கிறைவன்றிருமுகத்திலுய்ப்பதெனலாலுய்த்துமென. (உசு)

செம்பொனறையைத்திறந்தழைத்துக்காட்டியினையதிருவெல்லா
மும்பர்பெருமானடியீர்நீருடையீர்கவர்ந்துகொண்மினென
விம்பர்நிழற்றும்வெண்குடையானிசைப்பவெதிர்தாழ்ந்திசைக்கிழவ
னம்பனருளுக்குரியீர்நீர்நல்கிற்றமையுமெனக்கென்ன. (உஎ)

மன்னன்ருனெண்ணியவாற்ருல்வழங்கவழங்கமறுத்துமறுத்
தின்னதீருமிசைக்கிழவனிலங்கும்பொலம்பூணிருநிதியம்
பொன்னஞ்சிவிகைகரிபரிமான்பொற்பட்டாடைபலபிறவுந்
தன்னதென்னுமளவாற்ருற்ருனேகொள்ளத்தார்வேந்தன். (உஅ)

பின்னேழடியோசேட்சென்றுபெருமைசான்றவரிசையினுற்
றன்னேரிசையான்றனேவிடுத்துமீண்டானுகத்தமிழ்மதுரை
மின்னேர்சடையாரிசைத்தொண்டன்ருனுமீண்டுவெயில்விரிக்கும்
பொன்னேர்மௌலிநிதிக்கிழவன்போலமதுரைநகர்புக்கான். (உக)


வந்துமதுரைப்பெருமானேவணங்கிக்கொணர்ந்தநிதியெல்லா
மிந்துமருமானகருள்ளார்யாருமறியயாவர்க்கு
முன்தைவேதமுதல்வர்க்கும்புலவோர்தமக்குமுறைநல்கிச்
சந்தயாழினிசைப்பாணர்தருமமனேயான்வைகினன். (ஈ0)

திருமுகங்கொடுத்த படலம் முற்றிற்று.

ஆ படலம் - நிக-க்கு திருவிருத்தம்-உகஈ0.

நாற்பத்துமூன்றவது,

பலகையிட்டபடலம்.



கோச்சகக்கலிப்பா.

கருந்துழாய்முகிலொருபாற்கலந்தவர்பத்திரற்குநிதி
திருந்துதாருதியனிடைத்திருமுகமீந்தளித்ததிது
வருந்தியாழவனிசைப்பமழைதூங்குநள்ளிரவி
லிருந்துபாடெனப்பலகையிட்டதூஉமினிப்பகர்வாம். (க)

(உசு) முகவாசம்-தாபம். பழுக்காய்-பாக்கு. (உஎ)கவர்தல்-கைக் கொள்ளுதல். நல்கிற்று-கொடுத்தது.(உஅ)தானெண்ணியவாற்ருல்-தானினைத்தவண்ணம். வழங்க வழங்க-கொடுக்கக் கொடுக்க. தன்னம்-சிறுமை. (உக) நிதிக்கிழவன்-குபேரன். (ஈ0)இந்துமருமான்-சந்திரன் வழித்தோன்றலானபாண்டியன். (க)உதியன்-சேரமன்னன்.

முன்புடைநாயகனேமுப்போதும்புகுந்திறைஞ்சி
யின்புறுமேழிசைக்கிழவனிருநிதியமருளியபி
னன்புநிறந்தரையிரவுமடைந்துபணிந்தடல்விடையின்
பின்புறநின்றேழிசையும்பாடியருளும்பேறடைவான். (உ)

தொழுந்தகையன்பருந்தேவர்தொகுதிகளுந்தொழத்திங்கட்
கொழுந்தலையநதியலையக்குனிக்கின்றதனிக்கடவுள்
செழுந்தராளச்சிவிகையின்மேற்றேவிதிருப்பள்ளியறைக்
கெழுந்தருளும்போதுபணிந்தேத்துவானேரிரவில். (ஊ)

இன்னிசையாழ்ப்பெரும்பாணனெவ்விடையூறுறத்தாலுந்
தன்னியமநெறியொழுக்கந்தவானென்பதுலகறியப்
பொன்னியலுஞ்சடைமௌலிப்புராணர்திருவிளையாட்டா
லன்னிலையிற்கருங்கொண்மூவார்த்தெழுந்ததிசையெல்லாம். (எ)

தடித்துநிரைபுடைபரப்பித்தடுமாறித்திசையங்கத்
துடித்துவிடவாயரவுஞ்சோர்ந்துசுருண்டலையொதுங்க
விடித்துவின்கணம்புதைப்பவிருள்கான்றுசலபதிமுன்
முடித்திவான்வரவிடித்தமுகிலேழும்வளைந்தவென. (ஙி)

கருங்கடலேவிசும்பெடுத்துக்கவிழ்ப்பதெனவெண்டாரை
நெருங்கிருளினிருப்புக்கோணிறைத்ததெனநிறங்கருக
வொருங்குசொரிந்துள்ளுணராருள்ளம்போலுட்புறம்பு
மருங்கொடுகீழ்மேலென்றுதெரியாதமயங்கிருள்வாய். (சு)

மாமாரியிடைநனைந்துவருவானம்மாரிதனைப்
பூமாரியெனநினைந்துதிருக்கோயில்புகுந்தெய்திக்
காமாரிதனைப்பணிந்துகருணைமாரியினனைந்து
தேமாரிபொழிவதெனத்தெள்விளியாழ்வாசிப்பான். (எ)

விடைக்கடவுள்பின்னின்றுவீணையிடத்தோள்கிடத்திப்
புடைத்துநரம்பெறிந்துமிடற்றெலிபோக்கிப் பொலங்கொன்றைச
சடைக்கடவுள்செவிவழிபோயருட்பைங்கூழ்தலையெடுப்பத்
தொடைத்தமிழினிசைப்பாணிச்சுவையமுதமடைதிறந்து. (அ)

(உ) அரையிரவு-பாதி யிராத்திரி. (ஊ) குனிக்கின்ற - நடனஞ் செய்கின்ற. (எ) தவான்-தவறான். கொண்மூ-மேகம். (ஙி) தடித்து-மின்னல். அலை-பிலம். உடு - நட்சத்திரம். சலபதி - வருணன். (சு) நிறங்கருக-நிறங்கருமையாக. வெள்ளிய மழைத்தாரைகள்-நிறந்தெரிந்திரவி லிருணிறங் காட்டலை. உள்ளுணரார் உள்ளம்-தம்மை யுணராரின்மனம். (எ) காமாரி - காமனைக் கொன்றவன். பைங்கூழ்-பயிர். மிடறு-தொண்டை. பரிசவுணர்ச்சி நீங்கி.

நரம்புநனந்திசைமழுங்கநனந்துடலம்பனிப்பவிசை
வரம்பொழுகுவிரன்மிறைத்துவலிவாங்கமயிர்சிலும்ப
கிரம்பியசேறடிபுதைப்பகின்றுநிறையன்பிசையா
யரும்புதல்போலென்புருக்குமமுதவிசைபாடுமால். (கூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாதர்நகையாய்மதுரசேசருண்பலிக்கெம்மனைவாய்வந்து
காதன்முகத்தரும்பிக்காட்டியென்சிந்தைகவர்ந்தார்போலுங்
காதன்முகத்தரும்பக்கையறவுதீரக்கலப்பேன்பாதி
பேதையுருவாயிருந்தார்நாணிவிழித்தாவிபிழைத்தேன்போலும்.

ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டெண்பலிக்குநம்மனையினூ
டேசுடற், கண்ணுதலாருள்ளாளக்கானமிசைத்தென்னுளங்கவர்ந்
தார்போலுங், கண்ணுதலார்பாடுமவினயங்கண்டாகங்கலப்பேன்
பாதி, பெண்ணுருவமாயிருந்தார்வெள்கிவிழித்தாவிபெற்றேன்போ
லும். (கக)

ஐயரியுண்கண்ணுய்திருவாலவாயுடையாரையங்கொள்வான்
மையனகைசெய்தென்வனமுலையின்மேற்செங்கை வைத்தார்போ
லு, மையனகைசெய்தென்வனமுலைமேற்கையைப்பமாழ்கிச்சோர்
வேன், றையலிடங்கண்டுநெடுநெடுங்கிவிழித்தாவிதரித்தேன்போலும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாடுவாரிருவர்க்கன்றுபரிசிலாக்கொடுத்தசங்கத்
தோடுவார்செவியிலூட்டுந்தொண்டகண்டிதன்மேனின்று
பாடுவாயுனக்கேயிந்தப்பலகையென்றுழந்தவன்பி
னாடுவார்விசும்பிற்கூறுநகைமணிப்பலகையிட்டார். (கஙு)

இறையருளாணையஞ்சியிட்டபொற்பலகையேறி
நறைகெழுமதுரகீதம்படிநான்மறைகள்சூடி
மறைகழலகத்துட்கொண்டுபலகையுமங்கைகொண்டு
மறைவழியாழ்வல்லோன்றன்மனைவயிற்செல்லுமெல்லை. (கச)

(கூ) காதல்-ஆசை. கையறவு - காமநோய். (கக) வெண்டலை - வெள்ளியதலையோடு. உள்ளாளக்கானம்-குமுக்காரமாய்ப்பாடும்கன வாலாபனம். தேவகாந்தருவமென்றுங்கூறுப. (கஉ) ஐயரி-அழகிய கீற்று. மையல்நகை - காமக்குறிப்புணர்த்துமோகநகை. வனம் - சந்தனக்கோலம். (கஙு) இருவர்-அச்சுவதரகம்பளர். இதனை அச்சு வதரனற்கம்பளனெனவறையாகின்ற. நச்செயிற்றரவிரண்டைநகும ணிக்குழையிரண்டா; வைச்சனன்-என்பதாலுணர்க. (கச) இறை-சோமசுந்தரக்கடவுள்.

மின்னுமாமேகநீங்கிவிசும்புவாய்விளங்கித்தென்றன்
மன்னுமாமலையின்மேயமாதவன்குடித்தலைகற்
பொன்னுமாமணியுமுத்தும்புலப்படக்கிடந்தவேலை
யென்னமீன்விளங்கித்தோன்றவேகியில்புகுந்தானிப்பால். (கஙி)

பாயிருட்படலங்கீண்டுபரிதிகண்விழித்துச்செங்கை
யாயிரம்பரப்பிமுந்நீரிலகடனீந்துமெல்லே
மாயிருஞாலங்காக்கும்வரகுணனிரவுதங்க
ணுயகன்பாடற்கிந்தநல்லருட்பரிசில்கேட்டான். (ககூ)

இன்னிசைக்கரசையிட்டபலகைமீதிருத்திமன்னர்
மன்னவனிவனேயெங்கண்மதுரைநாயகனென்றுன்னி
மின்னிவர்மணிப்பூணல்கிவிளைநிலமிகவுநல்கி
நன்னிதிவெறுப்பநல்கிவரிசையானடத்திவந்தான். (கஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இறையருள்வரிசைபெற்றபத்திரனுமேறுயர்த்தவரைநாற்போது
முறையிலுல்வழிபட்டொழுகுவானுகமுடிகெழுவரகுணவேந்து
மறைமுதலடிகள்வந்துவந்தனையால்வழுத்துவான்சில்பகல்கழிய
நிறைபெருஞ்சுடரோன்றிருவுருவடைந்தநெறியினுற்சிவபுரமடைந்தான்

பலகையிட்டபடலம் முற்றிற்று.

அ படலம் இஉ-க்கு திருவிருத்தம் உகசஅ.

நாற்பத்துநான்காவது,

இசைவாதுவென்றபடலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூடலம்பதியிலாடகமேருக்கொடியவிற்குருசிலடியவனுக்குப்
பாடலின்பரிசிலாகியசெம்பொற்பலகையிட்டபடிபாடினமன்னன்,
வீடரம்பொருவில்கற்புடையாளோர்விறலியைப் பரமனிறையருள்
பற்றி, மாடகஞ்செறியும்யாழ்வழிபாடிவாதுவென்றவரலாறுமிசைப்
பாம். (க)

(கதி) மாமலை-பொன்னிறமலை; மீன்-நட்சத்திரம். பரிசில்-கொடை. (ககூ) கண்விழித்து-உதித்து. (கஎ) இன்னிசைக்கரசைஎன்றது-பாணபத்திரனை. (கஅ) ஏறு-இடபக்கொடி. திருவுருவடைந்த-சாரூபமுத்திபெற்ற. நாற்போது-காலை-நண்பகல்.மாலை-நடுநிசி. (க) வீடு-விடுதல். விறலி-பாடினி. மாடகம். முறுக்காணி.

வரகுணன்கதியடைந்தபினம்பொன்மௌலிசூடியவிராசவிரா சப், புரவலன்புவிமடந்தையைவேட்டுப் புயந்தழீஇக்கொநெயந்த ருநாளிற், பரவுமன்பதைபுரந்தொழுகந்தப்பஞ்சவற்குரியரஞ்சன வுண்கண், மரபின்வந்தமடவார்பலரேனமையல்செய்யுமடவார்ப லர்மாதோ. (உ)

அன்னபோகமடவாருளொருத்தியரசனுக்கமுதுமாவியுமாகு, மின்னுளம்பதரகிதமிசைக்கும்விஞ்சையின்றுறைவலாளவளுக்கும், பன்னகாபரணனின்னிசைபாடும் பத்திரன்பொருவில்கற்புடையா ட்கு, மன்னுகிதவினையாலிகன்மூள வழுதிகாதன்மடமாதுபொறு ளாய். (ஊ)

பாடினிக்கெதிரொர்பாடினிதன்னைப்பாடவிட்டிவள்படைத்த செருக்கை, யீடழிப்பலெனவெண்ணியெழீஇத்தன் னிறைமகற்கஃ திசைத்தலுமந்தத், தோடிறப்பொருகயற்கணினுடான் சொன்ன வாறெழுகுமன்னவர்மன்ன, னுடியத்தகைய விறலியையீழநாட்டி னும்வரவழைத்துவிடுத்தான். (எ)

பந்தயாழ்முதுகுதைவரவிட்டுப்பாடலாய மிருபக்கமுமொய்ப் ப, வந்தபாடினிமடந்தையுமன்னர் மன்னனைத்தொழுதொர் கின் னரமாதிற், சந்தவேழிசைமிழற்றினணின்று டன்னைநோக்கியொரு மின்னிடையாண்மேற், சிந்தைபோக்கியருகீப்பழிநோக்காத்தென் னருக்கரசனின்ன துசெப்பும். (ஏ)

பத்திரன்மனைவிதன்னை யெம்முன்னர்ப் பாடுதற்கழையதற்க வளாற்று, துத்தரஞ்சொலினும்யாமவள்சார்பா யுனைவிலக்கினும் விடாதுதொடர்ந்தே, சித்தநாணமுறவஞ்சினமிட்டுச்செல்வனில்லை னவளைந்துகொளென்னு, வெய்த்தநுண்ணிடையி னையிருக்கைக் கேகினாளவருகென்றுவிடுத்தான். (ஐ)

கலிநிலைத்துறை.

மின்னாரின்னிசைப்பத்திரன்பெருந்தகைவிறலி
தன்னையங்கழைத்தளத்தொன்றுபுறத்தொன்றுசாற்று

(உ) நயம்-இன்பம். மையல் செய்யு மடவார், காமமயக்கத்தினை வளர்க்குங் காமக்கிழத்தியர். (ஊ) பன்னகம் - பாம்பு. (எ) கய்ற் கண்ணி - கயன்மீன்போற் கண்களையுடைய காமக்கிழத்தி.(ஏ) பந் தம்-கட்டு. ஆயம் - மடவார்கூட்டம். கின்னரமாதில்-கின்னரமா தினையொப்ப. (ஐ) வஞ்சினம்-சபதம்.

மென்ஞெடின்னிசைபாடுவொருளர்கொலோவிங்கென்
றுன்னிவந்திருக்கின்றனளிசைவலாளொருத்தி. (எ)

ஆடமைத்தடந்தோளிஞையவளொடுங்கூடப்
பாடவல்லியோபகரெனப்பாடினிபகர்வாள்
கோடருந்தகைக்கற்புமிக்கூடலெம்பெருமான்
வீடருங்கருணையுமெனக்கிருக்கையால்வேந்தே. (அ)

பாடிவெல்வதேயன்றிநான்பரிபவமுழுந்து
வாடுவேனலேனென்றுரைவழங்கலுமதுக்கா
லேடுவார்குழலவளையுமிருக்கையுய்த்திருந்தா
னீடுவார்திரைப்பொருநையந்தண்டுறைநிருபன். (கூ)

மற்றைவைகலவ்விருவரைப்பஞ்சவன்மதுரைக்
கொற்றவன்றனதவையிடையழைத்துநேர்கூட்டிக்
கற்றவேழிசைகேட்குமுன்கலத்தினும்போந்த
வெற்றிவேன்மதர்நெடுங்கணுள்விறலியைவைதாள். (கo)

குற்றமெத்தனையெத்தனைகுணங்களுள்யாழ்க்கோலுக்
குற்றமெய்வமேதிசைப்பதெவ்வுயிருடம்புயிர்மெய்
பெற்றவோசையெவ்வளவவைக்குத்தரம்பேசி
மற்றெஞ்ஞெடிபாடில்லையேல்வசையுனக்கென்றாள். (கக)

இருமையும்பெறுகற்பினுளியம்புவாள்கலத்தின்
வருமருமும்பெறற்கல்வியும்வாதின்மேலுக்கப்
பெருமையும்பலர்விரும்புறுபெண்மையின்செருக்குந்
திருமகன்சபையறியவாய்திறக்கவேண்டாவோ. (கஉ)

நெய்யுண்பூங்குழன்மடவரானின்ஞெடும்வாது
செய்யும்பூசலுக்கெதிரலாற்றீயவாய்திறந்து
வையும்பூசலுக்கெதிரலேன்மானம்விற்றுண்போ
லுய்யும்பாவையரேயதற்கெதிரெனவுரைத்தாள். (கங)

(எ)பெருந்தகை-பெரிய தகுதியினை யுடையவள். (அ)கோடருந்தகைக்கற்பு-மாறுபடுதலில்லாத பெருந்தகைமையினையுடைய கற்பு. (கூ) பரிபவம்-துன்பம். (கo) வைகல்-நாள். பஞ்சவன்-பாண்டியன். (கக) குற்றமாவன-செம்பகை. ஆர்ப்பு-கூடம். அதிர்வு-முதலியன. (கஉ) கலத்தின் வருமருமும்பெறல் கல்வி என்றது - ஈழப்பாடினி மரக்கலமேறிவந்தது கற்றகல்வியா லாதலா லுடையாள் தன்மை உடமை மேலேற்றிக்கூறியதாம். (கங) பூசல் - போர்.

வென்றிமீன வன்வில்லக்குவான்போலெதிர்விலக்கித்
துன்றுதார்குழன்மடந்தைமீர்பாடுமின்றோற்றோர்
வென்றமாதரார்க்கடிமையாய்விடுவதேசபத
மென்றுமான முண்டாக்கலுமீழநாட்டிரிவை. (கச)

முந்தியாழிடந்தழீஇக்குரல்வழிமுகிழ்விரல்போ
யுந்தவேபெருமிதநகையுட்கிடந்தரும்பச்
சந்தவேழிசையிறைமகன்றழ்செவிக்கன்பு
வந்தகாதலாண்மழலையின முதெனவார்த்தாள். (கடு)

வீணைவாங்கினண்மாடகமுறுக்கினள்விசித்து
வாணரம்பெறிந்திருசெவிமடுத்தனரியக்கர்
நாணமெல்விரனடைவழிநாவிலையமுதம்
பாணர்கோமகன்விறலியும்பலர்செவிநிறைத்தாள். (கசு)

அரசனுட்கிடையறிந்திலரவைக்களத்துள்ளார்
விரைசெய்வார்குழற்பாடினிபாடலேவியந்தார்
புரைசைமானிரைப்பூழியனிலங்கையிற்போந்த
வரைசெய்குங்குமக்கொங்கையாள்பாடலமகிழ்ந்தான். (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தென்னவனுட்கோளெல்லைதரிந்தனரவையத்துள்ளா
ரன்னவன்புகழ்ந்தவாறேபுகழ்ந்தனரவனுத்தானே
முன்னவனருளாப்பெற்றுமும்மையுந்துறந்தோரேனு
மன்னவன்சொன்னவாறேசொல்வதுவழக்காறன்றே. (கஅ)

பொன்றளிரனையாண்மையற்புதுமதுநுகர்ந்துதீது
நன்றறியாதகன்னிநாடவனவையைநோக்கி
யின்றொருநாளிற்றேரத்தக்கதோவிதுவென்றந்த
வென்றடுவேற்கணுரைப்போமெனவிடைத்தான்மன்னோ. (கஈ)

மருவியவாயமேத்தவிருந்திணண்மனைவந்தெய்திப்
புரவலன்றனதுபாட்டைப்புகழ்ந்ததேபுகழ்ந்ததாகப்

(கச) மானமுண்டாக்கல்-அபிமானத்தையுண்டாக்கல். (கடு) குரல்-குரலெனப்பெயருள்ள வீணைநரம்பு. அன்புவந்த காதலாள். அன்பினையுடைய காமக்கிழத்தி. (கசு)விசித்து-கட்டமைத்து. (கஎ) உட்கிடை-உள்ளக்கருத்து. (கஅ) மும்மையுந்துறந்தோர்-மண்பொன்பெண் எனுமூன்றையுந் துறந்ததுறவினர்.(கஈ) மையற்புதுமது-காமமயக்கமானபுதியகள்.

பெருமிதந்தலைக்கொண்டாளுப்பெருங்களிப்படைந்துமஞ்சத்
திருமலரணைமேலார்வந்திளைத்தினிதிருந்தாளிப்பால். (உ0)

வணங்குறுமருங்கிற்கற்பின்மடவரன்மதங்கிதானு
மணங்கிறைகொண்டநெஞ்சளங்கயற்கண்ணிபாகக்
குணங்குறிகடந்தசோதிகுணாகழலடிக்கீழெய்தி
யுணங்கினள்கலுழ்கண்ணீரளொதுங்கிநின்றினைச்சொன்னுள். ()

தென்னவனுகிவையஞ்செய்யகோல்செலுத்திகாத்த
மன்னவவழுதிவாரவழிவழிக்குரைப்பதானு
னன்னவன்கருத்துக்கேற்பவவையருமனையராளுர்
பின்னடிநிலைமைதூக்கிப்பேசுவார்யாவையா. (உஉ)

உன்னருட்பிணைச்செய்தென்பாலுறுகணேய்துடைப்பதென்ன
மின்னனுய்நீயேகாவலெவ்லுமாசெய்துமஞ்சே
லென்னவாகாயவாணியிறிலானருளாற்கேட்டு
மன்னருங்கற்பினுடன்மனைபுகுந்திருந்தாண்மன்னே. (உங)

அன்றுபோன்மற்றைஞான்றுமழைத்தனன்பாடல்கேட்டுக்
குன்றுபோற்புயத்தானென்னற்கூறியவாறேகூற
மன்றுளார்பலருமன்னவண்ணமேசொன்னுர்கேட்டு
நின்றபாண்மடந்தைபாண்டிநிருபனேநோக்கிச்சொல்வாள். (உச)

தென்னரேறனையாய்ஞாலமனுவழிசெங்கோலோச்சு
மன்னரேறனையாய்வாரவழக்கினையாதலானீ
சொன்னவாறையுஞ்சொல்லத்துணிந்ததுதிலைநாவன்ன
பன்னகாபரணர்முன்போய்ப்பாடுகேம்பாடுமெல்லை. (உஞ)

இருவரோம்பாட்டுங்கேட்டுதுணிந்திவள்வென்ருளென்னு
வொருவர்சங்கியிற்சொன்னுற்போதுமென்றுரைத்தாள்பாண்டித்
திருமகனனையவாறேசெய்மினீர்செய்மினென்ன
மருவளர்குழலினுர்தமனைபுகுந்திருந்தார்பின்னுள். (உசு)

கலிவிருத்தம்.

தென்ற லுடனு மந்திரச் செல்வரு
நன்று தீதுணர் நால்வகைக் கேள்வியோ

(உ0) விருந்திளுள்-விருந்தாகவந்த பாடினி. (உக) மதங்கி-பாணினி. (உஉ)வாரம்-பட்சபாதம். உறுகண்-துன்பம். துடைப்பது-துடைப்பாயாக. இதுதுவவீற்றுவியங்கோள்வினைமுற்று. (உங)மன்னரும்-இடைத்தற்கரிய. (உச) நென்னல்-நேற்று. அவை-சபை (உஞ) ஞாலம்-உலகம். (உசு) திருமகன்-பாண்டியன்.

ரொன்றவேகியொளிவிடுவெள்ளிமா
மன்றவாணர்மாமண்டபத்தெய்தினார். (உஎ)

எய்தியம்மடமாதரையிங்குறச்
செய்திரென்னத்திருமகனேவலோர்
நொய்திலேடிநொடித்தழைத்தாரொடு
மைதிகழ்ந்தவிழியார்வருவாரால். (உஅ)

படிமையார் தவப்பாடி னிவந்தெனக்
கடிமை யாவளின்றை யமின்ரு லெனக்
கொடிமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங
கடிமையாக வந்தாள் கலத்தின் வந்தாள். (உக)

கற்புமிக் கெழு கற்புங் கருத்தினிற்
சிற்பரஞ் சுடர்சேவடி மேல்வைத்த
வற்பு மிக்கெழ மெல்லவந் தாளரோ
பொற்பு மிக்குள பத்திரன் பொன்னனுள். (ஈ0)

அலங்கு மாரமோ டங்கத மாதிபல்
கலன்க டாங்கிக் கலிஞர் குழாத்திடை
யிலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலங்கொ ணுவலர் போல்வந்து வைகினார். (ஈக)

அந்த வேத்தவை தன்னி லருங்கலம்
வந்த வேய்த்தடந் தோளிசை மாதராண்
முந்த வேத்திசை பாடினண் முந்தையோர்
சிந்தைவேட் டொன்றுஞ் செப்பின ரில்லையால். (ஈஉ)

வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட விருக்கையின் வைகியே
யாண ரம்பெறிந் தின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால். (ஈங)

அருணகிரிக்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடங்கைநீரும்பச்சிலையுமிவொர்க்கிமையாக்குஞ்சரமும்
படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்மதுரைப்பரமேட்டீ

(உஎ) நால்வகை கேள்வி-கீத, லய, சுருதி, தாள, ஞானக்கேள்விகள். (உஅ) நொய்தின் - விரைவின். (உக) கோட்டம் - கோணல். கடிமை-விரைவு. (ஈ0)கற்பு-கல்வியறிவு. கற்பு-பாதிவிரதம். அற்பு-அன்பு. (ஈக)இறைவர்-கடவுள். (ஈஉ)வேத்தவை-அரசசபை. (ஈங) வாணி-சரசுவதி.

படங்கொள்பாயும்பூவணேயுந்தருவாய்கையிற்பதெலெகொண்
டிடங்கடோறுமிரப்பாயென்றேசுவார்க்கென்பேசுவனே. (கூச)

தேனூர்மொழியார்விழிவழியேசெல்லாதவர்க்கேவீடென்று
நானூவேதப்பொருளுரைத்தாய்நியேமதுரைநம்பரனே
நானூவேதப்பொருளுரைத்தாய்நீயேபாதிநாரியுரு
வானுயென்றுபிறர்பழித்தாலடியேன்விடையேதறைவேனே. (கூடு)

வரதனுகியெவ்வுயிர்க்குமாயாவிருத்திவலியடக்கிச்
சரதமானவீட்டின்பந்தருவாய்மதுரைத்தனிமுதலே
சரதமானவீட்டின்பந்தருவாய்வீடுபெறுவார்போல்
விரதயோகநிலையடைந்தாயென்பார்க்கென்னுன்விளம்புவனே. ()

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்ணுதன்மதுரைப்பிராணையிவ்வாறு கருதியபாணியாழ்கனிந்து, பண்ணுதல்பரிவட்டணைமுதலிசைநூல்பகர்முதற்றொழிலிருநான்கு. மெண்ணுறுவார்தல்வடித்திடன்மூதலாமெட்டிசைக்கரணமும்பயப்ப, மண்ணவர்செவிக்கோவானவர்செவிக்கும்வாக்கினுஞவிளையமுதம். (கூஎ)

இடையிலேடேனப்பிங்கலையியக்கமிகந்துமூலந்தொடுத்தியக்கி, நடுவுறுதொழிலாற்பிரமாந்திராந்தநடைபெறவிசைக்குமுள்ளாள, மிடறுவீங்கான்கண்ணிமைத்திடாளெயிறுவெளிப்படாள்புருவமேனிமிராள், கொடிறதுதுடியாள்பாடலுமதுகேட்டனேவருங்குதுகலமடைந்தார். (கூஅ)

கன்னிநாடுடையான்கைதவனெனும்பேர்க்காரணந்தேற்றுவானெனத்தா, னின்னிசையறிஞனுகியுமுன்போலியம்புவானெருப்பகின்றான், முன்னவனருளாற்றன்மனக்கோட்ட முரண்கெடப்பொதுமையாலேக்கி, யின்னவடானேவென்றனென்றனினேயவாறனேவருமொழிந்தார். (கூக)

(கூச) சூடங்கை - உள்ளங்கை. இமையாக் குஞ்சரம்-ஐராவதம். (கூடு) வீடு - முத்தி. (கூச) வரதன் - அருட்கொடையுடையோன். (கூஎ) மூதற்றொழிலிருநான்கு-பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல்,செலவுகையூழ்,விளையாட்டு,குறும்போக்குஎன்பன. இசைக்கரணமெட்டு. வார்தல், வடித்தல், உந்தல், உறழ்த்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்பன. வாக்கினுள்-வார்த்தாள். (கூஅ) இயக்கம்-அசைவு. இகந்து-நீங்கி. (கூக) கைதவன்-தவங்கை கூடியவன். வஞ்சகன்.

கரியுரைமொழிந்தகைதவனிலங்கைக்கைதவப்பாடினிகழுத்திற்
புரிகுழன்மாதையிருத்தென்விருத்தும்போதுமையிடங்கரந்திருந்த
வரியராவலரீதற்புதமீதற்புதமென்வறைந்தவைகாண [தன்.
விரிகதிர்மின்போன்மறைந்தனர்யாரும்வியந்தனர்பயந்தனன்வேந்

செங்கணேறழகராடலீதென்றேயாவருந்தெளிந்தனரேத்தி
யங்கணுயகர்தங்கருணையின்றிறனுமடியவரன்பையுந்தூக்கித்
தங்கணுரருவிபெருகவானந்தத்தனிப்பெருஞ்சலதியிலாழ்ந்தார்
வங்கமேல்வந்தாள்பிடர்மிசையிருந்தமாணிழைவிறலியைமன்னன்.

இறக்குவித்தவட்குமுந்த முத்தாரமெரிமணிக்கலன்றுகில்வரி
சை பெறக்கொடுத்தேனையவட்குமுண்மகிழ்ச்சிபெறச்சிலவரிசைதந்
தவையிற், சிறக்கவந்தொருங்குவைகியானிழிந்ததெய்வதக்கோயில்
புக்கிருந்த, வறக்கொடியிடஞ்சேர்டெரும்புலவோர்க்குமருங்கலஞ்
திகணல்கா. (சஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னவர்வலிகளெல்லாந்தெய்வத்தின்வலிமுன்னில்லா
வன்னமாதெய்வஞ்செய்யும்வலியெலாமரண்மூன்றட்ட
முன்னவன்வலிமுன்னில்லாவெனப்பலர்மொழிவதெல்லா
மின்னபாண்மகளிற்காணப்பட்டதென்றிறும்பூதெய்தா. (சஊ)

மின்னியல்சடையிஞ்ஞைவிடைகொடிவலஞ்செய்தேகி
யின்னியமியக்கஞ்செய்யவெழில்கொடன்கோயிலெய்தித்
தென்னிதிபெற்றுன்போலச்சுகுணபாண்டியனைப்பெற்று
மன்னியமகிழ்ச்சிவீங்கவைகிஞனிராசராசன். (சச)

இசைவாதுவேன்றபடல முற்றிற்று.

ஆ படலம்-இரு-க்கு-திருவிருத்தம்-உகஉ.

நாற்பத்தைந்தாவது,

பன்றிக்குட்டிக்கு மூலகோடுத்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இருளேக்கந்தரத்தில்வைத்தேதான்றன்னிடத்தென்றுமன்பின்
றெருளேத்தந்தவட்குமாமுந்தெரிவையையிசையால்வெல்ல
வருளேத்தந்தளித்தவண்ணமறைந்தனந்தாயாய்ப்பன்றிக்
குருளேக்குமூலதந்தாவிகொடுத்தவாறெடுத்துச்சொல்வாம். (க)

(சஅ) கரியுரை-சாட்சிமொழி. (சக) சலதி-சமுத்திரம். (சஉ) தெய்வதக்கோயில்-இந்திரவிமானம். (சஊ) அரண்-மதில். முன்னவன்-சிவபெருமான். (சச) இயக்கஞ்செய்ய-ஒலியாநிற்ப. வீங்க-அதிகரிக்க. கந்தரம்-கழுத்து.

மூறையெனவிமையோர்வேண்டமூலைத்தஞ்சயின்றுசான்ற
யுறையெனமிடற்றில்வைத்தவும்பரான்மதுரைக்காரந்
திறையெனவெறிநீர்வைகைத்தெற்கதுகுருவிருந்த
துறையெனவுளதோர்செல்வத்தொன்மணிமாடமூதூர். (உ)

தருநாதனுதிவாலோர்தங்குருவிருந்துநோற்பக்
குருநாதனெனப்பேர்பெற்றுக்கோதிலாவரந்தந்தேற்றில்
வருநாதன்சித்திரத்தேர்வலவனுருடனேகஞ்சத்
திருநாதன்பரவவைகியிருக்குமச்சிறந்தவூரில். (ஊ)

சுகலனெண்ணிருருவேளாளனவன்மனைசுகலியென்பா
ளிகலருஞ்சற்பிளுள்பன்னிருமகப்பெற்றுள்செல்வப்
புகலருஞ்செருக்காலன்னபுதல்வரைக்கடியாராகி
யகலருங்களிப்புமீனாரன்பிளுல்வளர்க்குநாளில். (எ)

தந்தையுந்தாயுமாயத்தறுகண்மிக்குடையராகி
மைந்தரும்வேடரோடுகூடிவெங்கானில்வந்து
வெந்தொழில்வேட்டஞ்செய்வார்வெயில்புகாப்புதற்கீழெய்தி
யைந்தவித்திருந்துநோற்குங்குரவனையங்குக்கண்டார். (டு)

கைத்தலம்புடைத்துநக்குக்கல்லும்வெம்பரலும்வாரி
மெய்த்தவன்மெய்யிற்றூக்கவீசினூர்வினையைவெல்லு
மூத்தமன்லீக்கஞ்செய்தார்தவத்தினுக்குவரென்றுன்னிச
சித்தநொந்தினையவஞ்சத்தீயரைசசெயிர்த்துநோக்கா. (சு)

தொழுந்தொழின்மறந்துவேடத்தொழிலுழந்துழல்வீர்நீர்மண்
ணுழுந்தொழிலுடையநீராற்பன்றியினுதரத்தெய்திக்
கொழுந்தழலனையவேனக்குருளையாய்த்தந்தைதாயை
யிழந்தலமுறுமினென்னுவிட்டனன்கடியசாபம். (எ)

(உ) திறை-கப்பம். (ஊ) தருநாதன்-பஞ்ச தருக்களையுடைய இந்திரன். பஞ்சதருக்களாவன - மந்தாரசந்தானபாரிசாத அரிசந்தன கற்பகங்கள். வாலோர்குரு - வியாழன். நோற்ப-தவஞ்செய்ய. குருநாதன்-குருசிரேட்டன். கோதிலா-குற்றமில்லாத. சித்திரத்தேர்வலவன்-அழகிய பூமியாகிய தேரோட்டிய சாரதியான பிரமன். கஞ்சத்திருநாதன்-தாமரைமலரை யிருப்பிடமாகவுடைய மகாலட்சுமியின் கணவனான திருமால். பரவ-வணங்க. (எ) இகலரும்-பகையற்ற. புகலரும்-உரைத்தற்கரிய. (டு) மாய-இறக்க. தறுகண்-அஞ்சாமை, வெந்தொழில். ஐந்தவித்து - பஞ்சேந்திரியங்களையொடுக்கி. குரவன்-தேவகுரு. (சு) நக்கு-சிரித்து. செயிர்த்து-சீறி. (எ) தொழுந்தொழில்-அந்தணர்முதலிய மூவருணத்தினரையும்வணங்கி அவரிட்டவேலைகளைச்செய்தல். நீரால்-தன்மையால். ஏனக்குருளை-பன்றிக்குட்டி. அலமுறுமின்-துன்பப்படுங்கள்.

பாவத்தையனையமைந்தர்பன்னிருபேருமஞ்சிச்
சாவத்தையேற்றெப்போதுதணிவுதிச்சாபமென்ன
வாவத்தையகற்றுமீசனருட்கழனினைந்துவந்த
கோவத்தைமுனிவுசெய்தக்கடவுளர்குரவன்கூறும். (அ)

என்னையாளுடையகூடலேகநாயகனேயுங்கட்
கன்னையாய்முலைதந்தாவியளித்துமேலமைச்சராக்கிப்
பின்னையானந்தவீதிதருமெனப்பெண்ணேர்பாகன்
றன்னையாதரித்தோன்சொன்னுன்பன்னிருதனயர்தாமும். (கு)

தொன்மைசால்குருவிருந்ததுறையதன்புறத்தவான
பன்மைசால்கானவாழ்க்கைப்பன்றிகட்கரசாய்வைகுந்
தன்மைசாறனியேனத்தின்றன்பெடைவயிற்றிற்சென்று
வன்மைசால்குருளையாகிப்பிறந்தனர்வழக்கான்மன்னே. (கo)

ஆனகாலொருகாலெல்லியரசருக்கரசனை
மீனவன்மதுரைநீங்கிமேற்றிசைக்கானநோக்கி
மானமாவேட்டஞ்செய்வான்மத்தமாவுகைத்துத்தண்டாச்
சேனைதன்புறம்பேமொய்ப்பச்செல்கின்றுன்செல்லுமெல்லை. (கக)

மாவழங்கிடங்கடேரவல்லதோல்வங்காலொற்றர்
பாவடிச்சுவடுபற்றிப்படர்ந்துநாழல்புலால்வாய்த்
தீவிழியுழுவையேனந்திரிமருப்பிரலேபுல்வாய்
மேவிடனறிந்துவல்லேவிரைந்துவந்தெதிரேசொன்னர். (கஉ)

மறத்துறைவேட்டமாக்கள்வல்லேபோயொடியெறிந்து
புறத்துவார்வலைகள்போக்கிநாயதன்புறம்புபோர்ப்ப
நிறைத்துமாவொதுக்கிநீட்டும்படைஞராய்நிரைசூழ்நிற்ப
வறத்துறைமாருக்கோலாஞனேமேல்கொண்டுநிற்ப. (கங)

(அ) ஆவத்து-ஆபத்து. கோவத்தை முனிவுசெய்து-கோபத்தைச் சீயென வெறுத்து. (கு) ஆதரித்தோன் - விரும்பினேன். தன்மை சால்-தகுதிமிக்க. குருளை-குட்டி. (கக) மீனவன்-பாண்டியன். மான மா-பெரியமிருகம். மத்தமா-யானை. தண்டா-நீங்காத. (கஉ) மா - விலங்குகள். தோல் - தொடுதோல். செருப்பென்றுபொருள்; வன் கால்-முருட்டுக்கால். பாவு-பரவிய. அடிச்சுவடு-காலடியினடையா ளம். அழல்-சீற்றம். புலால்-ஊன். உழுவை-புலி. ஏனம்-பன்றி. திரி மருப்பு-முறுக்கியகொம்பு. இரலை-கலைமான். புல்வாய்-வெளிமான். (கங) மறம்-கொலைத்தொழில். ஒடிஎறிதல்-மரக்கிளைகளைவெட்டிப் பெருவலை கட்டுதல். மூலைபோக்குத லென்றுங்கூறுப. வார்வலை - நீண்டவலை. அறத்துறை - தருமவழி. சில்லரி-ஒருகட்பறை. தூடி-உடுக்கை. கோடு ஊதுகொம்பு. சிலையாநிற்ப - முழக்க. பார்வைகா ட்டல்-அந்தந்த விலங்கின் சாதிகளைக்காட்டுதல். பயில்வினி-வினைக் கினைவிபோல்மனிதர்பழகுவினித்தல். வல்லியம்-பெரும்புலி. மையன் மானினம்-மயக்கம்பொருந்திய மிருகக்கூட்டம். வெருளாநிற்ப-கலக்கமடையாநிற்ப. இற-ஒடிய.

சில்லரித்துடிகோடெங்குஞ்செவிடுறச்சிலையாநிற்பப்
பல்வகைப்பார்வைகாட்டிப்பயில்விளியிசையாநிற்ப
வல்லியமிரலைமையன்மானினம்வெருளாநிற்ப
வில்லிறவலித்துவாங்கிமீளிவெங்கணைகோர்த்தார். (கச)

கலிநிலைத்துறை.

செறிந்தமான்முறிந்ததாள்சிதைந்தசென்னிசெம்புனற்
பறிந்தவாறுவெண்ணிணம்பரிந்துவீசுகையிரு
மறிந்தவேழுயர்ந்தவேழமாண்டவெண்குவல்லியம்
பிறிந்தவாவியோடெம்வாய்பிளந்தவாய்விழுந்தவே. (கடு)

தொட்டபுற்கிழங்குவாடைதொடவிரைந்துகண்ணியுட்
பட்டவும்பொறித்துவைத்தபார்வைவீழ்ந்துடித்தவுங்
கட்டியிட்டவேபிழைத்துஞமலிகௌவுகின்றவு
மட்டிலாதவொட்டினின்றுமள்ளர்வேலின்மாய்ந்தவே. (கசு)

பட்டமாவொழிந்துநின்றமறவிலங்குபல்சில
வட்டமாவளைந்துடுத்தவலையினுந்தியப்புறத்
தெட்டிநின்றகொலைஞர்மேலெதிர்ந்துமீளவெயில்வளைந்
தொட்டிஞரைமலையுமாப்பொறிக்கணங்களொத்தவே. (கஎ)

வல்லியந்துளைத்தகன்றுமான்றுளைத்தகன்றுவெங்
கல்லியங்குமெண்கிணைத்துளைத்தகன்றுகயவுவாய்
வெல்லிபந்துளைத்துமள்ளர்விட்டவாளியிங்ஙனஞ்
சொல்லினுங்கடிந்துபோய்த்துணிந்தமாவளப்பில. (கஅ)

மடித்தவாளியிற்பிழைத்துவலையைமுட்டியப்புறத்
தடித்தமானைவௌவிநாயலைத்துநின்றவாதிநா
ளுடுத்தபாசவலையினின்றுமுய்குவாரையொய்யெனத்
தடுத்தவாவிளைத்துநின்றதையலாரையொத்தவே. (கஙு)

மதியைநேர்வகிர்ந்துகௌவியனையவான்மருப்புவெங்
கதியவேழமீதுதாதுகாலுநீலமுகையினி

(கடு)ஏழுயர்ந்தவேழம்-ஏழுமுழமுயர்ந்தயானை. பிறிந்த-நீங்கின. (கசு) தொட்ட-கல்லிய. புற்கிழங்கு-ஒருவகை மணமுள்ள புல்லின் கிழங்கு. (கஎ) பட்ட - இறந்த. உந்தி-தாவி. எயில்-மதில். மலையும்-போர்செய்யும். (கஅ) எண்கு-கரடி. கயவுவாய்-பெரியவாய். சொல்-சாபமொழி. (கஙு) அவா-ஆசை. வான்மருப்பு,வெள்ளியகோடு. வேழம்-யானை. துகிய - கூரிய.

ஞுதியவேனுழைந்தசெம்புனூழில்வீழுமுதிரநீர்
முதியகானவரையின்மீ துமொய்த்ததீயையொத்தவே. (உ0)

மள்ளரோசைதுடியிலேசைவயிரிலேசைவாளிபோய்த்
தள்ளவீழ்விலங்கிலேசைதப்பியோடுமானின்மேற்
றுள்ளுநாய்குரைக்குமோசைகானமூடுதொக்குவா
னுள்ளுலாயுடன்றெலிக்குமுருமிலேசைபுரையுமால். (உக)

இன்னவேறுபல்விலங்கெலாமலைத்திலங்குவேன்
மன்னரேறுதென்னர்கோமகன்குடக்கினேகுவா
ணன்னபோதொரேனமேனவரசிருக்குமடவிவாய்
முன்னரோடிவந்துகின்றுவந்தசெய்திமொழியுமால். (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எங்களுக்கரசேகேட்டியிங்குளதிருகமெல்லாந்
திங்களுக்கரசன்கொன்றுவருகின்றுனென்றுசெப்ப
வெங்களிப்படைந்துபன்றிவேந்தனுமடபோராற்றச்
சங்கையுற்றெழுந்துபோவான்றன்னுயிர்ப்பெடையைநோக்கா. ()

இன்றுபாண்டியனேநேரிட்டிருஞ்சமராடிவென்று
வன்றிறல்வாகையோடுவருகுவனேயோவன்றிப்
பொன்றுவனேயோநீயுன்புதல்வரைபாதுகாத்து
நன்றிவணிருத்தியென்னநங்கைப்பேடின்னகூறும். (உச)

ஆவியங்கேகவிந்தவாகமிங்கிருப்பதேயிப்
பாவியேற்கேலேவிந்தப்பறழினைவருத்ததெய்வ
மாவமராடிவென்றுவருதியேல்வருவேனன்றி
நீவிளிந்திடத்துமாய்வெனிழலுக்குஞ்செயல்வேறுண்டோ. (உடு)

போதுகமெழுகவெண்ணப்பொருக்கெனவெழுந்துநிலத்
தார்திறழேனப்பாட்டிதன்புடைதழுவிச்செல்லும்
பேதுறுபறழைநூக்கிப்பின்றொடர்ந்தணைந்துசெல்லக்
காதெயிற்றெறுழிவேந்தன்காலெனநடந்தானன்றே. (உசு)

(உ0) தாது - மகரந்தம். காலும் - சிந்தும். முகை - அரும்பு. நீல முகையினின்றுதிய என்பது-பண்புபற்றிய வுவமையாதலால் விடம்பூசியஎன்னும்பொருளுதாய்நின்றது. நூழில்-யானை.(உக)வயிர்-ஊதுகொம்பு. (உஉ)ஏனஅரசு-பன்றிவேந்து. (உங)சங்கையுற்று-எண்ணி. (உச) நேரிட்டு-எதிர்த்து. (உடு)ஆவிஎன்றது-உயிரனையகணவனை.பறழ்-குட்டி. தெய்வம்-தெய்வமே.(உசு)நீலத்தாது.நீலோற்பலமகரந்தம். உறழ்-ஒத்த. ஏனப்பாட்டி-பெண்பன்றி.

பல்வகைச்சா தியுள்ளபன்றியின் கணங்களெல்லாம்
வெல்படைத்தறுகட்சேனைவீரராய்முன்புசெல்லச்
செல்லெனத்தெழித்துச்செங்கட்டீயுகமானமென்னு
மல்லல்வாம்புரவிமேல்கொண்டெழுந்தனன்வராகவீரன். (உஎ)

முற்படுதூசியாகநடக்கின்றமூரட்காற்பன்றி
மற்படுசேனைநேரேவருகின்றமன்னர்மன்னன்
வெற்படுதடந்தோள்வன்மூள்வீரர்மேற்சீறிச்செல்லப்
பிற்படவொதுங்கிவீரர்பெய்தனரப்புமாரி. (உஅ)

சொரிந்தனசோரிவெள்ளஞ்சொரிந்தனவீழ்ந்தயாக்கை
சரிந்தனகுடர்களென்புதகர்ந்தனவழும்புமூளை
பரிந்தனசேனங்காகம்படர்ந்தனவுயிருமெய்யும்
பிரிந்தனவேனநின்றபிறைமருப்பேனவீரர். (உக)

பதைத்தனரெரியிற்சீறிப்பஞ்சவன்படைமேற்பாய்ந்து
சிதைத்தனர்சிலரைத்தள்ளிச்செம்புனல்வாயிற்சோர
வுதைத்தனர்சிலரைவீட்டியுரம்புதைபடக்கோன்றி
வதைத்தனர்சிலரைநேரேவகிர்ந்தனர்சிலரைமாதோ. (ஈ0)

தாள்சிதைந்தாருஞ்சில்லோர்தலைசிதைந்தாருஞ்சில்லோர்
தோள்சிதைந்தாருஞ்சில்லோர்தொடைசிதைந்தோருஞ்சில்லோர்
வாள்சிதைந்தாருஞ்சில்லோர்வையறுத்தலரோன்றீட்டு
நாள்சிதைந்தாருஞ்சில்லோர்நராதிபன்சேனைவீரர். (ஈக)

கண்டனர்கன்னிநாடுகாவலனமைச்சர்சீற்றங்
கொண்டனர்முசலநேமிகூற்றெனவீசியார்த்தார்
விண்டனர்மாண்டார்சேனைவீரருமனையவெல்லப்
புண்டவழெழிற்றுவேங்கைப்புடைநின்றபேடைநோக்கா. (ஈஉ)

எவியசேனையெல்லாமிறந்தனவினிநாஞ்செய்ய
லாவதென்வாளாநாமுமழிவதிங்கென்னேதப்பிப்
போவதேகருமமென்றுபுகன்றதத்துணையைநோக்கிச்
சாவதையஞ்சாவேனத்தனியரசொன்றுசாற்றும். (ஈங)

நுண்ணறிவுடையராகிநூலொடுபழகினாலும்
பெண்ணறிவென்பதெல்லாம்பேதைமைத்தாதலாலுன்

(உஎ) கணம்-கூட்டம். (உஅ) தூசி-அணி. (உக) படர்ந்தனர்-பிரிந்தன. (ஈ0) எரியில்-தீயைப்போல. (ஈக) வரையறுத்து - தீர்மானித்து. அலரோன்-பிரமன். (ஈஉ) கன்னிநாடு-பாண்டிநாடு. அமைச்சர்-மந்திரியர். (ஈங) வானர-வீணைக.

கண்ணறிவுடைமைக்கேற்றகாரியமுரைத்தாய்மான
மெண்ணறிவுடையோர்க்கெல்லாமிழுக்குடைத்தன்றுவீதால். ()

தூங்கிருள்வறுவாய்ச்சிங்கமிரண்டுறைதுறையின்மாடோர்
வாங்கிருமருப்புக்கேழல்வந்துநீர்பருகிமீளும்
வீங்கிருளுடற்கரேணமொன்றுறைதுறையில்வீரந்
தாங்கிருமடங்கனீர்க்குத்தலைப்படவஞ்சுமன்றே. (ஈடு)

அத்திடமரபின்வந்துபிறந்துளேனுதலாலே
கைத்திடுதாரான்வீரங்கவர்ந்திசைதிசையும்வானும்
வைத்திடவல்லேனன்றிமடிந்திடவல்லேனுகிற்
பொய்த்திடுமுடம்பேயன்றிப்புகழுடம்பழிவதுண்டோ. (ஈசு)

கலிநிலைத்துறை.

சீலில்லெனத்தன்பெடைதன்னைறுத்திரீத்தென்
கானில்லெனவாழ்கருமாவின்கணங்களெல்லா
மூனில்லுயிருண்டனமென்றினியோடல்கூடற்
கோனில்லெனவார்ப்பவன்போலக்கொதித்துநேர்ந்தான். (ஈஎ)

கிலத்தைக்கிளைத்துப்பிலங்காட்டிநிமிர்ந்துதூள்வான்
றலத்தைப்புதைப்பத்தனியேனவரைநோக்கி
வலத்தைப்புகழ்ந்தான்வியந்தான்சிலைவாங்கிவாளிக்
குலத்தைசொரிந்தான்பொருதைத்துரைக்கொற்கைவேந்தன். ()

சூறித்துச்செழியன்விடுவாளியைக்கோலவேந்தன்
பறித்துசிலவாளியைவாய்கொடுபைம்புலென்னக்
கறித்துச்சிலவாளியைக்கால்கொடுதேய்த்துத்தேய்த்து
மூறித்துச்சிலவாளியைகாலின்முறித்துநின்றான். (ஈக)

மானம்பொருதமதியின்வழிவந்தவேந்தன்
றானம்பொருதுகவிழ்க்கும்புகர்த்தந்திகையி
னானம்பொருதமுசலங்கொடுத்தேறியுய்த்தா
னேனம்பொருதார்த்திடியேற்றினெழுந்ததன்றே. (சo)

தந்திப்பொருப்பைத்துணிக்கென்றுதழன்றுநீற்ற
மூந்திக்கதலிக்கொழுந்தண்டெனவுசற்கையைச்

(ஈச) இழுக்கு-தாழ்வு. (ஈடு) தூங்கல்-தங்கல். காரேனம்-பெரும்பன்றி. (ஈசு) நிடம்-வீரம். (ஈஎ) ஓடல்-ஓடாதே. (ஈஅ) பிலம்-பாதலம். (ஈக) கோலம்-பன்றி. புகர்-புள்ளி. முசலம்-இருப்புலக்கை. (சo) மானம்-அபிமானம். தானம்-மதநீர்.

சிந்திப்பிறைவாளெயிறேர்ச்சிச்சிதைத்துவீட்ட
முந்திக்கடுந்தேர்மிசைப்பாய்ந்தனன்மூரித்தாரான். (சக)

திண்டேர்மிசைதின்றடனேமிதிரித்துவிட்டான்
கண்டேனவேந்தன்விலக்கிக்கடுங்காலிற்பாய்ந்து
தண்டேருடையத்தகர்த்தான்பரிதன்னிற்பாய்ந்து
வண்டேறுதாரான்விடவேலவலந்திரித்தான். (சஉ)

சத்திப்படைமேல்விடுமுன்னர்த்தறுகண்வீரன்
பத்திச்சுடர்மாமணித்தார்ப்பரிமாவின்பின்போய்
மொத்திக்குடர்செம்புனல்சோரமுடுகிக்கோட்டாற்
குத்திச்செகுத்தான்பொறுத்தானலன்கூடல்வேந்தன். (சஙு)

மண்ணிற்குதித்துவலிகண்டுவராகவேந்தை
யெண்ணித்தலையிற்புடைத்தான்கையிருப்புத்தண்டாற்
புண்ணிற்படுசெம்புனலாறுபுடவிபோர்ப்ப
விண்ணிற்புகுந்தான்சுடர்கீறிவிமானமேலால். (சச)

வேனிற்கிழவோனில்விளங்கியதுவாளேர்
தேனிற்பொழிபூமழைபெய்யநனைந்துதெய்வக்
கானத்தமுதுண்டிருகாதுகளித்துவீர
வானத்தமுதுண்டமங்கையர்கொங்கைசேர்ந்தான். (சஞ)

கலிவிருத்தம்.

பின்றுணை யாய பெடைத்தனி யேன
மென்றுணை மாய விருப்பது கற்போ
வென்றில னேனும் விசும்படை வேலு
லென்றிகல் வேந்தை யெதிர்த்த திருத்தே (சசு)

விறனவில் பேட்டை விளிப்பது வேந்தர்க்
கறனல வென்றவ ளுள்வினை மள்ளர்க்
கிறைமக ளுன சருச்சர னென்றேர்
மறமக னேர்ந்த மராட வளைந்தான். (சஎ)

(சக) தந்திப்பொருப்பு யானையாகியமலை. (சஉ) திரித்து-சுழற்றி. விடவேலை விடுதலைம்பூசிய வேற்படையினை. (சங) சத்திப்படை-வேற்படை. மணித்தார்-கிண்கிணீமாலை. (சச) விண்-வீரசுவர்க்கம். சுடர்கீறி-சூரியமண்டலத்தைப்பிளந்து. (சஞ) வேனிற்கிழவன். வசந்தத்திற்குரியமன்மதன். (சசு) இகல்-பகையாண. (சஎ) வீறல்-வெற்றி. விளித்தல்-மாய்த்தல். உள்வினை மள்ளர்க்கிறைமகன். வேட்டமாக்களின் தலைவனுன சருச்சரன்.

கனிபொழு தாட மராடின னஞ்சிற்
களிசின வன்பெடை காய்சின வேடத்
தனிமக னேத்தரை வீட்டின தாற்ற
வினியிலை யென்ன வினைத்துயிர் சோர்வான். (சஅ)

இரும்புசெய் தண்டினை யிம்மென வோச்சிப்
பொரும்பெடை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தி னராயிரு வோரும் விமானத்
தருந்தி றல்வான மடைந் தனரன்றே. (சஈ)

வன்றிறன் மன்னவர்மன்னவனுந்தன்
பொன்றிகழ்மாநகர்புக்கனனிப்பாற்
பன்றி விழுந்து பருப்பத மாகா
நின்றது பன்றி நெடுங்கிரி யென்ன. (இ0)

அன்று தொடுத்த தனுக்கது போரா
யின்றும வழங்கு வதிம்பரி லந்தக்
குன்றி லருந்தவர் விஞ்சையர் கோபம்
வென்றவ ரெண்ணிலர் வீடுற நோற்பார். (இக)

கலிநிலைத்துறை.

என்றுகூறியவருந்தமிழ்க்கிறைவனேநோக்கித்
தன்றுமாதவரறிவிலாசகுகரவுருவக்
குன்றின்மீதருந்தவரெலாங்கோதறநோற்று
நின்றகாரணம்யாதெனக்குறுமுனிநிகழ்த்தும். (இஉ)

வேனில்வேளெனவிளங்குவிசாதரனென்னுந்
தானையாழ்மகன்புலத்தியன்றவத்தினுக்கிடையூ
றுனபாண்செயப்பன்றியாச்சபித்தனனறவோ
னேனமாகுவோனுய்வதென்றெனக்கெனமுனிவன். (இங)

மன்னர்மன்னனுந்தென்னவன்வந்துநின்வனத்திற்
றுன்னுபல்வகைவிலங்கெலாந்தொலைத்துனைமாய்க்கும்
பின்னரிவ்வுருப்பெறுகெனப்பணித்தனனியக்க
னன்னவாறுவந்திறந்துபின்பழவுருவடைந்தான். (இச)

ஆயபுண்ணியவிஞ்சையனுகமாய்க்கிடந்த
தாயகீரதாலவ்வரைமீமிசைத்துறந்த

(சஅ) கனிபொழுது - நெடுநேரம். (சக) இம்மென-விரைவாக. (இ0) பருப்பதம்-மலை. (இக) இம்பரில்-இவ்வுலகில். (இஉ) அருந்தமிழ்க்கிறைவன்-அகத்தியமுனிவன். (இங) விச்சாதரன்-வித்தியாதரன். (இச) பணித்தல்-அருளிச்செய்தல்.

பாயகேள்வியரிறைகொளப்பட்டதெவ்வுயிர்க்கு
நாயனூர்மதுரேசருநயந்தவணுறைவார். (குடு)

என்றகத்தியன்விடைகொடுத்தியம்பினனிப்பாற்
பன்றியேற்றையும்பாட்டியும்பைம்புனத்திட்டுச்
சென்றவிர்தபின்பன்னிருகுருளையுந்திகைப்புற்
றன்றலக்கணையுழந்தமையாரளந்துரைப்பார். (குசு)

ஓடுகின்றனதெருமரலுழுவனநிழலைக்
தேடுகின்றனதாய்முலைத்தீயபால்வேட்டு
வாடுகின்றனதாகவெம்பசிநனிவருத்த
வீடுகில்றனவெயில்சுடவெதும்புகின்றனவால். (குஎ)

இன்னவாறிவையணங்குறுமெல்லலேவல்வல்ல
தென்னராகியதேவர்கடேவரங்கயற்கண்
மின்னுளாடுமின்னவிர்விமானமீதேறி
யண்ணகாவெகத்திச்சையாலாடல்செய்திருந்தார். (குஅ)

ஏனமென்பழுதுகளேய்க்கிரங்கிஞரிச்சை
யானவன்புதந்தித்தியரகற்றுவானின்ற
மானவன்புடைப்பேடையின்வடிவெடுத்தயருங்
கானவஞ்பழங்கலங்களுர்கலங்கநேர்வந்தார். (குகூ)

கிட்டுகின்றதந்தாயெதிர்குட்டியுங்கிட்டி
மூட்டுகின்றனமொய்ப்பனமுதுகுறத்தாவி
யெட்டுகின்றனகால்விசைத்தெறிவனிலத்தை
வெட்டுகின்றனகுதிப்பனவோடுமீள்வ. (சுo)

ஏனமின்னமுங்காண்பரிதாகியவேன
மானமெய்ம்மயிர்முகிழ்த்திடத்தழுவிமோந்தருளின்
மானமென்மூலையருத்திமாவலனும்வண்றிறனு
ஞானமும்பெருந்தகையுநற்குணங்களுநல்கா. (சுக)

(குடு) இறைகொளல்-தங்குதல். (குசு) ஏற்றை-பன்றியி னாண்பெயர். இதனை, ஆற்றலொடுபுணர்ந்தவாண்பாற்கெல்லாம், ஏற்றைக்கிளவியுரித்தெனமொழிப. எனவருந்தொல்காப்பியசூத்திரத்தானுணர்க. (குஎ) தெருமரல் - சுழலல். (குஅ) இச்சை - இச்சாசத்தி. (குகூ) அன்புதந்து - அன்புகூர்ந்து. மானம்-மிகுதி. அளுர் - பசித்தன்பம். (சுo) கிட்டுகின்ற-வருகின்ற. (சுக) ஏனம் - முன்னையது, திருமால்-பின்னையது, சிவபெருமான்.

துங்கமாமுகமொன்றுமேசூகரமுகமா
வங்கம்யாவையுமானுடயாக்கையவாக்கிக்
கங்கைநாயகன்கடவுளர்நாயகன்கயற்கண்
மங்கைநாயகன்கருணையாந்திருவருமறைந்தான். (சுஉ)


இம்மையிப்பவத்தன்னேயாயினிவருபவமுஞ்
செம்மைசெய்தசேதனத்தையுஞ்சேதனஞ்செய்தா
ரெம்மையெப்பவத்தாயினுமெனேப்பலவுயிர்க்கு
மம்மையப்பராய்க்காப்பவரவரலாலெவரே. (சுஊ)

பன்றிக்குட்டிக்குமூலகோடுத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் நெச-க்கு திருவிருத்தம்-உஉநிநி.

நாற்பத்தாறவது,

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம்.



கலிநிலைத்துறை.

தந்தைதாயிழந்தலமருங்குருளையைத்தாயாய்
வந்துநாயகன்மூலகொடுத்தருளியவகையீ
தந்தவாறிருமைந்தருமந்திரிகளாகி
யெந்தையார்சிவபுரம்புகுந்திருந்தவாறிசைப்பாம். (க)

ஆதிநாயகன்றிருவுருமறைந்தபினேய
கோதிலாதிரண்டேனமாக்குமரருங்காலேச்
சோதியாறிரண்டருக்கர்போற்றேன்றியப்பொருப்பி
லோதியாய்ந்தபல்கலைஞராயொருங்குவீற்றிருந்தார். (உ)

அனேயராயவர்வைகுநாளறைபுனற்கூடற்
புனிதநாயகனருட்டிறமுயிர்க்கெலாம்பொதுவா
யினியவாவனவென்பதையாவருந்தேற
வனிதைபான்மொழிமங்கைதன்மணாளனேவினவும். (ஙு)

வெவ்விலங்கினும்வெய்யவாயசேதனவிலங்கா
மிவ்விலங்கெயிற்றேனமென்குருளைகட்கிரங்கிக்
கைவ்விலங்கினேயெய்தநீகருணையாய்மூலதந்
திவ்விலங்கறிவகற்றியதியாதெனவிறைவன். (ச)

(சுஉ) சூகரம்-பன்றி. (சுஊ) செம்மை-புனிதம். சேதனம்-அறிவுள்ளது. அசேதனம்-அறிவில்லாதது. (க) குருளை-குட்டி. (உ) அருக்கர்-சூரியர். (ஙு) வைகுநாள்-இருந்தகாலத்து. (ச) கைவிலங்கு-யானை. ஆய்-தாய்.

அகிலவேதமுமாகமபேதமுமம்மைச்
சகலசீவதயாபரனென்றுரைசால்பா
விகலில்சேதனமசேதனமாகியவிரண்டும்
புகலில்வேறலவெமக்கவைபொதுமையவதனால். (டு)

தாயிழந்துவெம்பசித்தழலகஞ்சுடத்தழன்று
காயுமாதபம்புறஞ்சுடக்கானிடைக்கிடந்து
நீயுமேனமென்குருளைகடெருமாவிரங்கி
யாயுமாய்முலையளித்துயிரளித்தனமதனால். (சு)

அளவிலாற்றலுந்திறனுநல்லரும்பெறற்கல்வி
விளைவுஞானமுங்கிடைத்தனர்மீனவற்கினிமேல்
வளைவிவாதகோலமைச்சராய்வளம்பலபெருக்கிக்
களைவில்பாசநீத்தெம்பெருங்கணத்தவராவார். (எ)

என்றுநாயகனுயகிக்கிறைகொடுத்தியம்பி
யன்றுமீனவன்கனவில்வந்தரசகேள்பன்றிக்
குன்றிலேனமாமுகத்தராய்ப்பன்னிருகுமரர்
வென்றிவீரராய்வைகுநர்மிக்கறிவுடையார். (அ)

அவரைநின்கடைக்கமைச்சராக்கோடியென்றளவில்
சிவபரஞ்சுடரருள்செயசெழியர்கோவேந்தன்
கவலருங்களிப்புடையனுய்க்கண்மலர்ந்தெழுமான்
றவழ்நெடுந்திரைக்கருங்கடறத்தி நீந்தெலை. (கூ)

மாண்டகேள்விசான்மந்திரர்க்குணர்த்தியம்மலைமேற்
காண்டகேனமாவீரரைக்கொணர்கெனக்கருணை
பூண்டகாவலனமைச்சரும்போயவர்க்கண்டு
வேண்டவீரருமீண்டிஞர்மீனவன் றிருமுன். (க0)

வந்திறைஞ்சியவராகமாமைந்தரைநேர்கண்
டந்தமில்களிப்படைந்துவேந்தமைச்சியற்கிழமை
தந்துவேறுபல்வரிசையுந்தக்கவாநல்கிக்
கந்துசீறியகடகரிக்கைதவன்பின்னர். (கக)

பழையமந்திரர்க்கிழார்மடப்பாவைபோல்வாரை
விழவுசால்கடிமங்கலம்விதியினுற்புணர்த்தி
யழகிதாமெனநடத்தினனெயரும்வீரக்
கழலினுற்கொருகவயமுங்கண்ணுமாய்நடப்பார். (கஉ)

(டு) அகிலவேதம்-அனைத்துப்பொருள்களையுமுடையவேதம். (சு) ஆதபம்-வெயில். (எ) களைவில்பாசம்-நீங்காதபாசம். (அ) இறை-பதில். (கூ) கடை-திருவாயில். எல்லை-உதயகாலம். க0) காண்-அழகு. (கக) கந்து-கட்டுத்தறி. (கஉ) கவயம்-கவசம்.

உடம்பாறிரண்டிற்குயிரொன்றெனவொன்றியைவாய்
விடம்பாயரவம்விழுங்கும்மிரையொத்துநெஞ்சந்
திடம்பாடுகொள்ளவினைவாங்கிச்செழியன்கல்வி
யிடம்பாநெல்கும்பயன்போன்மகிழ்வெய்தநின்றார். (கஈ)

நல்லாவின்பாலினறுந்தேன்கலந்தென்னப்பன்னூல்
வல்லாருமாகிமதிதுட்பருமாகிச்சோர்வில்
சொல்லாலடையார்மனமுங்களிதூங்கச்சொல்லிப்
பல்லார்பிறர்சொற்பயனுய்ந்துகவரவல்லார். (கஉ)

பழையேமிறையூழ்கொளப்பட்டமென்றேமாப்பெய்தா
ருழையேவல்செய்யுஞ்சிறார்போலவொதுங்கிவேந்தன்
விழைவேததனேவிடம்போலவெறுத்துவெஃகா
ரழல்போலணுகாரகலார்நிழலன்னீரார். (கஊ)

மறுக்குஞ்செயனீத்துநடக்கையின்வையத்தோரை
யொறுக்கும்பொருளும்பணிகேட்கையிலுன்னலாரைச்
செறுக்கும்பொருளுங்கவராவிளைசெல்வமாக்க
ளிறுக்கும்பொருளேயிறைவற்கிவரீட்டுஞ்செல்வம். (கஎ)

மறத்தானவேலான்மனக்கொள்கைதன்னெஞ்சுள்வான
நிறத்தாடிழலெனத்தோற்றநிறுத்துமற்ற

(கஈ) ஐவாய் - ஐந்ததலை. திடம்-உறுதி. கல்வியிடம்பாநெல்கும் பயன் - இம்மையில் ஒருவற்கு, கற்ற கல்விபுகழையும் பொருளையும் பெருக்கிமகிழ்வுறுத்திமறுமையிலும் உயிர்சென்றுழிச்சென்றுபயன் தந்துமகிழ்வுறுத்தல். (கஉ) அடையார்மனமுங்களிதூங்கச்சொல்லி எ-து. வழுவின்மை-சுருங்குதல். விளங்குதல்-இனிதாதல். விழுப் பயன்தருதல். என்னுங்குணங்களொருங்கமைந்து பகைவரும் நட் பினைவிரும்பும்வண்ணம் இருக்குஞ்சொல்லாற்றலே விளக்கின்றது. பல்லார்-பரிசனர். பிறர் - பகைவர்முதலியார். கவரல் - பிரித்தல். (கஊ) ஊழ்கொளல்-நன்குமதித்தல். ஏமாப்பு - இறுமாப்பு. விழைவு-விருப்பம். வெஃகல் - விரும்பல். (கஎ) மறுக்குஞ்செயல்நீத்துநடத் தல்-தீக்கொளுத்தல், நஞ்சிடுதல், திருடுதல், ஆறலைத்தல், சூறை யாடல், பிறர்மனைநயத்தல்முதலியதீச்செயல்களிலகலல் அரசன் கோற்கீழடங்கியொழுகல். ஒறுக்கும்பொருளுங்கவராரென்றது - தங்கோற்கீழ்வாழுங்குடிகள்குற்றஞ்செய்யின் அவரைத்தாயராக்கு தற்பொருட்டித்தன்பஞ்செய்தல், பொருட்கோடல், கொல்லுதல் என்னும்மூவகைஒறுத்தலில் ஒரோவழிதன்பஞ்செய்யும் ஒறுப்பொ ன்றேயன்றி ஏனைப்பொருள்முதலிய வின்மையை. ஒன்னரைச் செறுக்கும்பொருளுங்கவராரென்றது-பகைவர்பால்திறைகோடலே யன்றி அவர்கருவூலப்பொருள்முதலிய கவராமையை. விளைசெல் வம்-விளைதல்முதலியவற்றாலுள்வரும்செல்வம்.

தறத்தாறெனிலாற்றுவரன்றெனிலாக்கமாவி
யிறத்தான்வாினுமனத்தானுமிழைக்கவெண்ணூர். (கஎ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னவாறெழுகும்பன்னிருவோருமீகையுந்தருமமும்புகழுந்
தென்னர்கோமகற்கு வைகலும்பெருகத் திசையெலாம்விசயமுண்
டாக்கிப், பன்னகாபரணன்சிவபுரமடைந்து பரன்கணநாதருட்கல
ந்து, மன்னிவீற்றிருந்தார்மன்னர்மன்னவனும்வான்பதமடைந்துவீ
ற்றிருந்தான். (கஅ)

பன்றிக்குட்டிகளமந்திரிகளாக்கியபடலம் முற்றிற்று.

ஆடபடலம்-ருகு - க்கு திருவிருத்தம்-உஎகூ.

நாற்பத்தேழாவது,

கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம்.

கோச்சகக்கலிப்பா.

வரிக்குருகிப்பத்திரற்குப்பலகையிட்டமணிகண்ட
னரிக்குருவேவடிவானவடல்வீரர்க்கரசன்பார்
பரிக்குமமைச்சியலளித்தபரிசறைத்தாம்பசுபதியாற்
கரிக்குருவிகுருமொழிகேட்டருளடைந்தகதைபகர்வாம். (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னவனிராசராசன்வானவர்க்கரசனென
பின்னவன்குமரனெனபெருவலிமடங்கலன்ஞென்
றுன்னலரடுபோர்சாய்க்குஞ்சுகுணபாண்டியனீர்ஞால
மின்னநீர்த்தறக்கோலோச்சியீர்ங்குடைநிழற்றுநாளில். (உ)

ஆற்றல்சாலொருவன்மேனளாற்றவுமறனேயாற்றி
மாற்றமில்சிறிதுபாவஞ்செய்ததன்வலத்தால்வந்து
தேற்றமில்கயவாயாகிச்செனித்தலாற்காகமாதி
கூற்றெனவூற்றஞ்செய்யக்குருதிசோர்தலேயதாகி. (ஙு)

(கஎ) வானகிறத்தாடி என்றது-வானத்தைப்போலப் புகைகிறம் வாய்ந்தக ண்ணுடியை. கிறுத்து என்றது - அரசனது மனக்கொள் கையை, இங்கிதம், வடிவு, தொழில், சொல் முதலியவற்றாலளக்கா தமனத்தொடி கண்ணுமுகமுங் கலந்தன ஆதலால் அவற்றாலளந் தமையை. இழைத்தல்-செய்தல். (கஅ) வைகலும்-தினமும். (க)வரி-இசை. (உ) தின்னலர்-பகைவர். (ஙு) ஆற்றல்சால் - வன்மைமிக்க.

புட்கெலாமெளிதாயூறுபாடஞ்சிப்புரத்துள்வைகி
யுட்கிநீள்வனத்துட்போகிவழிமருங்கொருசார்நிற்குங்
கட்கவிழ்ந்தொழுகப்பூத்தகவிழிணர்மரமேல்வைகி
வெட்கமீதூரச்சாம்பிவெய்துயிர்த்திருக்குமெல்லே. (சு)

விடையவனீறுபூசுமெய்யவன்பூண்டகண்டித்
தொடையவன்புறம்புமுள்ளுந்தூயவன்குடையுங்கையி
லுடையவன்தருமதீர்த்தயாத்திரையொழுக்கம்பூண்ட
கடையவனெருவனந்தநறுந்தருநிழலிற்சார்ந்தான். (கி)

இருந்தவன்சிலரைநோக்கியியம்புவானெவர்க்கும்பேறு
தருந்தலந்தீர்த்தமூர்த்தித்தன்மையிற்சிறந்தவன்பு
வருந்தமிழ்மதுரைபொற்றமரைத்தடஞ்சுந்தரேசப்
பெருந்தகையென்றுசான்றோர்பேசுவராதலாலே. (சூ)

ஓரிடத்தனேயமூன்றுவிழுப்பமுமுள்ளதாகப்
பாரிடத்தில்லையேனப்பதியிடத்தொன்றேயென்றுஞ்
சீருடைத்தாகுங்கூடற்செழுநகரிடத்தம்மூன்றும்
பேருடைத்தாகுமென்றற்பிறிதொருபதியாதென்றான். (எ)

இம்மதுரேசன்சேவித்தேத்துவோர்க்கெளியனாகிக்
கைம்மலர்நெல்லிபோலக்கருதியவரங்களெல்லா
மிம்மையுணடனேநல்குமேனையதலத்துவாழ்நர்
நம்மையினன்றிநல்காராதலாலதிகனென்றான். (அ)

மற்றதுகேட்டுக்கொம்பர்வைகியகயவாய்ஞானம்
பெற்றதுபறவையாகிப்பிறந்ததும்பிறவுந்தேற்ற
முற்றதுநாமிச்சன்மமொழிப்பதற்கறவோனிங்ஙன்
சொற்றதேயுறுதியென்றுதுணிவுகொண்டெழுந்ததன்றே. (கூ)

ஆய்மலர்க்கானநீங்கியாடகமாடக்கூடற்
போய்மலர்க்கனகஞ்சப்புண்ணியப்புனறோய்ந்தாம்பல்
வாய்மலர்க்கயலுண்கண்ணுண்மணுளனேவலஞ்செய்தன்பிற்
றோய்மலர்க்கழலினனேயகத்திறைற்றொழுதர்ச்சித்தே. (கo)

(சு) உட்கி-வருந்தி. சாம்பி - துன்புற்று. (கி) தருமதீர்த்தயாத்திரை - தருமசாத்திரங் கூறும் புண்ணியதீர்த்தங்களில் முழுகச்செல்லுஞ்செல்கை. (சூ) சான்றோர்-உயர்ந்தோர். (எ) பாரிடத்து-பூமியினிடத்து. (அ) கைம்மலர்-கையில்விளங்குகின்ற. (கூ) கயவாய்-கரிக்குருவி. (கo) ஆடகமாடம்-பொன்மயமானமாளிகை.

இன்னணமூன்றுவைகல்கழிந்தபினெம்பிராட்டி
தன்னமர்காதலானைத்தாழ்ந்தெதிர்நோக்கியைய
வென்னையிக்கயவாய்செய்யுஞ்செயலிதன்வரவியாதென்ன
மூன்னவனதன்றன்செய்திவரலெலாமுறையாற்கூறு. (கக)

பத்திமைநியமமீண்டப்றவைமேற்கருணைநாட்டம்
வைத்திமையாதமுக்கண்மறைமுதலொருசேய்க்கன்று
நித்தியநிலைமைகல்கிநேர்ந்தவெங்கூற்றைக்காய்ந்த
சத்தியஞானமித்திஞ்சயத்தினையுபதேசித்தான். (கஉ)

கலிவிருத்தம்.

உவமை யற்றவ னுரைத்த மந்திரஞ்
செவி மடுத்தலுஞ் சிற்றுணர்ச்சி போய்ப்
பவ மகற்றிடப் படிகரிக் குரீஇ
கவலை விட்டரன் கழல்வழுத் துமால். (கங)

எண்ணி லாவுயிர்க் கிறைவ போற்றிவான்
றண்ணி லாமதிச் சலடி போற்றியென்
புண்ணி யப்பயன் போற்றி யங்கயற்
கண்ணி நாதநின் கருணை போற்றியால். (கச)

தெளித லின்றியே செய்த தீமையால்
விளியு மென்னையு மாளல்வேண்டுமோ
வெளிய ரெங்குளா ரென்றுதேர்ந்து தேர்ந்
தளியை யாவதுன் னருளின் வண்ணமே. (கஞ)

உம்மை நல்லற முடைய நீர்மையா
லிம்மை யிம்மனு வியம்பி னுயிது
வம்மை நன்னெறிக் கேது வாதலான்
மும்மையுங்கல முடைய மொய்ம்பினேன். (கசு)

ஆயினும் மெனக் கையவோர் குறை
தீயபுள் ளெலாமூறு செய்தெனைக்
காயுமான முங்கழியக் கண்டபே
ரேயெனும் படிக் கெளிய னுயினேன். (கஎ)

(கக) வைகல் - தினம். (கஉ) ஒருசேயென்றது - மார்க்கண்டேயரை. மித்திஞ்சயனை-மித்திருத்திஞ்சயமந்திரத்தினை. (கங) உவமையற்றவன்-ஒப்பற்றசிவபெருமான். (கச)எண்ணிலா-அளவற்ற. (கஞ) அளியை - இரக்கமுடையை. (கசு) மொய்ம்பினேன் - வன்மையுடையேன். (கஎ) ஏ-இகழ்ச்சிக்குறிப்பு.

என்ன வக்குரீ இயியம்ப வெம்பிரா
னன்னபுட் கெலாம் வலியை யாகெனப்
பின்னுமக்குரீ இதாழ்ந்து பேதையேற்
கின்னுமோர் வரந்தருதி யென்றதால். (கஅ)

வலியை யென்பதென் மரபினுக் கெலாம்
பொலிய வேண்டு மெப்போது மீசான
வொலிய மந்திரமோதி யோதி நாங
கலியை வெல்லவுங் கருணை செய்கென. (கக)

ஆவதாக வென்ற மர நாயகன்
மூவெழுத்தினுன் முடிந்த வம்மனு
தாவிறெய் வதமிருடி சந்தமோ
டோவி லோசைமூன் றெழு செருட்டினுன். (உ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருமொழிபயின் றுமுள்வாய்க்குருவிதன் குலனுந்தன்போ
லருமறைமுதல்வனீந்தவாற்றலாற்பறவைக்கெல்லாம்
பெருமைசால்வலியா னென்னும்பெயரவாயுலகின்மன்னச்
கருமணிகண்டன்செம்பொற்கனகழலடிசேர்ந்தன்றே. (உக)

இக்கரிக்குருவிதானேஞ்ஞெய்தியவரத்தைதன்போ
லொக்கலுமெளிதாவெய்தப்பெற்றதாலுலகின்மேன்மைத்
தக்கவனெருவன்வாழ்தலன்கிலைவாழ்வதென்ன
மக்கவெடுத்துக்கூறும்பழமொழிவிளங்கிற்றன்றே. (உஉ)

மேற்படி - வேறு.

ஈசனடிக்கன்பில்லார்போலெளியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்பின்மையினுலெளிதாய்த்திரிந்தவிக்கயவா
யீசனடிக்கன்புடைமையினுல்வலிதாயிற்றேயெவ்வுயிர்க்கும். (உங)

கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம் முற்றிற்று

ஆ படலம் - இசு - க்கு திருவிருத்தம் - உஉகசு.

(கஅ) பேதையேற்கு-அறிவற்ற வெனக்கு. (கக) ஒலிய-ஓசையினை வான. (உ0) மனு - மந்திரம். ஓசைமூன்று - எடுத்தல் படித்தல் கலித்தல் ஆகிய மூவகையோசை. (உக) ஆற்றலால்-வன்மையால். சேர்ந்தன்று-சோந்தது. (உஉ) நோற்று - தவஞ்செய்து. ஒக்கல்-தன்னினம். (உங) கயவாய்-கரிக்குருவி.

நாற்பத்தெட்டாவது,

நாரைக்குமுத்திகொடுத்த படலம்.



கலிவிருத்தம்.

அத்தி தந்த விமான மழகியார்
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறனிது நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவாம். (க)

தேக்கு நீர்வைகை நாட்டொரு தென்புலத்
தாக்கு மாடவைப் பொன்றுள தவ்வயின்
வீக்கும் யாழ்செயும் வண்டுக்கு வீழ்நற
வாக்கு தாமரை வாவியொன்றுள் ளதால். (உ)

ஆழமிக்க கயந் தலையத் தலை
வாழுமீன மினத்தையும் வாய்ப் பெய்து
சூழநந்து முத்தீனுந் துறைக்கணே
தாழ்வதோர் செய்யதாண் மட நாரையே. (ங)

சிறிய நாண்மழை யின்றியச் சேயிதழ்
வெறிய தாமரையோடை வியன்கரை
யிறைகொணு ரையிரு வினைப் பௌவமும்
வறியதாகி வறப்பவ றந்த தால். (ச)

நுரை செறித்தன நோன்சிறை நாரையு
மிரை விரும்பிய வாவியிகந் தொறீஇ
விரைய வந்தொரு கானிடை வீழ்ந்ததாற்
புரையி லோர்க் கிடனுருமப் பொங்கர்வாய். (ஞ)

முத்தரான முனிவர் குழாத் தொடுஞ்
சுத்தவா னந்தவாரியுட் டோய்ந்து தன்
சித்த மாசுகழீ இச் சிவமாகிய
சத்தி யத்தவமா முனி தங்குமால். (சு)

(க) பத்திதந்த - பத்திசெய்த. (உ) தென்புலத்து-தென்பாகத்து. வீழ்-விருப்பத்தினைத்தருகின்ற. (ங) சூழ -சுற்றிலும். நந்து-சங்கு. (ச) சிறியநாள்-சிறுதுகாலம். வெறிய-வாசனையினையுடைய. இறை கொள்-தங்கியிருந்த. (ஞ) நோன்சிறை-வலியஇறகு. (சு) சித்தமாசு-மனவழுக்கு.

கூப்பி டெல்லை குணித்துச் சதுரமா
யாப்ப மைந்துசுற் றெங்கும் படித்துறைக்
கோப்ப மைந்து குளிர்சந்தி யாமடங்
காப்ப மைந்தோர் கயந்தலை யுள்ளதால். (எ)

விரைசெய் சண்பகம் பாதிரி வேங்கைதே
னிரைசெய் வஞ்சி யிலஞ்சி குராமரா
கிரைசெய் கிஞ்சுக நீண்மரு தாதியா
வுரைசெய் பண்மர மும்புறத் துள்ளவால். (அ)

அந்த வாவியின் பேரதோ நீர்த்தமென்
றிந்தஞால மியம்புவ தாலிரை
முந்தவாவு மொடுக்க வெழுந்து முன்
வந்த நாரை யதன்கரை வைகு மால். (கூ)

ஆய்ந்த மாத வரப்புனி தத்தடங்
தோய்ந்து தோய்ந்தங் கெழுந்தொறுந் தோட்புறஞ்
சாய்ந்த வார்சடைக் கற்றையிற் றத்துமீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தரோ. (கo)

ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட வெத்தவஞ் செய்தன வேகொலென்
முண்டை மீனமக் காகாவென வீரை
வேண்டு நாரை வெறுத்தங் கிருந்ததால். (கக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்ணிகர்தவத்தோர்யாருந்தடம்படிந்தேறிநித்த
மன்னியகருமமுற்றிச்சந்தியாமடத்தில்வைகி
மின்னியமகுடஞ்சூடிவேந்தருயுலகங்காத்த
பொன்னியற்சடையான்கூடற்புராணநூலோதுகின்றார். (கஉ)

அண்ணலெம்பெருமான்செய்தவருள்வீளையாட்டுமாதிப்
பண்ணவன்சிறப்புங்கூடற்பழம்பதிச்சிறப்புந்தீர்த்தத்
தெண்ணருஞ்சிறப்புஞ்சேர்ந்தோர்க்கெளிவருமிறைவனென்னும்
வண்ணமுமெடுத்துக்கூறக்கேட்டங்குவதியுநாரை. (கங)

(எ) குணித்து-எல்லையிட்டு. (அ) கிஞ்சுகம்-முருக்கு. (கூ) ஞாலம்-உலகம். (கo) தத்தும் - தாவும். (கக) ஆண்டை - அவ்விடத்துள்ள. (கஉ) படிந்து - மூழ்கி. (கங) அண்ணலெம்பெருமான் - பெருமையினையுடையவெமதுசுவாமி.

மடம்படுமறிவுநீங்கிவல்வினைப்பாசம்வீசித்
திடம்படுமிவுகூர்ந்துசிவபரஞ்சோதிபாதத்
திடம்படுமன்புவாவென்றீர்த்தெழுவெழுந்துநாரை
தடம்படுமாடக்கூடற்றனிநகரடைந்துமாதோ. (கச)

வாங்கியதிரைசூழ்பொற்றுமரைபடிந்திமையாவேழக்
தாங்கியவிமானமேயதலவனைத்தாழ்ந்துசூழ்ந்து
தேங்கியவருட்கணேக்கத்தெரிசித்துத்திருமுன்வைகி
யோங்கியகருணைமேனியுள்ளுறத்தியானஞ்செய்தது. (கஞ)

இந்திலேகியமமூவைந்தெல்லைஞான்றியன்றுபின்னு
ளந்திலேயொழுகுநாரையாடகமலந்தோய்வான்
வன்னிலேமதில்சூழ்ஞாங்கர்வந்துழிப்பகியால்வெந்து
மின்னிலேவேல்போற்றுள்ளுமீன்கவர்ந்துண்குமென்னு. (கசு)

சிறிதுளத்துள்ளிநாதன்றிருவருள்வலத்தாற்பின்ன
ரறிவுவந்தச்சோவிந்தவறப்பெருந்தீர்த்தத்துள்ளே
யெறியுமீனருந்தவாசையெழுந்ததேயெனக்கிப்போதிப்
பிறவியென்றெழிவதென்னப்பேரூரடைந்துபின்னும். (கஎ)

சுந்தரச்செம்மல்பாதத்தூணைமலரன்பிற்றூய்ந்து
சிந்தைவைத்திருக்குமெல்லைதேவருமறையுஞ்செய்யும்
வந்தனைக்கரியாரூரைமனநினைவடிவாய்த்தோன்றி
யெந்தமக்கினியாய்வேண்டுமென்றெதிர்கொண்டாரன். (கஅ)

கலிவிருத்தம்.

செய்யகான்மட நாரையுஞ் சென்றுதாழ்ந்
தையனேயிப் பிறவி யறுத்துநின்
மெய்யர்வாழ்சிவ லோகத்தின் மேவினா
ரய்யவேண்டுமொன் றின்னமு முண்டரோ. (கக)

வள்ளலென்மர புள்ளவு மற்றைய
புள்ளுமிந்தப் புனித மலர்த்தடத்
துள்ளமீனுயி ருண்ணினைக் காலமுந்
தள்ளொணாத பழிவந்து சாருமே. (உ0)

என்று மித்தட மீனிலவாகநீ
நன்றுசால்வர நல்கென வெள்ளிமா

(கச) கூர்ந்து-பொருந்தி. (கஞ) வாங்கிய-வளைந்த. (கசு) மூவைந் தெல்லை-பதினைந்தாள். (கஎ) உள்ளி-நினைத்து. (கஅ) செம்மல் - தலை வன். (கக) மடநாரை-இளநாரை. (உ0) மரபுள்ளவும்-சாதியிலுள்ளவும்.

மன்றுளானும் வரந்தந்து போயினன்
சென்றுநாரை சிவலோகஞ் சேர்ந்ததால். (உக)

இயங்களேந்து மியம்பவி மானமேற்
புயங்களுன்குமுக் கண்களும் பொற்பவான்
வியங்கொள்பூமழை வெள்ளத்து ளாழ்ந்துபோய்
வயங்கொணந்தி கணத்துள் வதிந்ததே. (உஉ)

அன்று தொட்டின்ற ளவும் பொற்றுமரை
யென்றுரைக்கு மெழின்மல ரோடையிற்
சென்றுகைத்துத் திரிகின்ற மீனலா
லொன்று மற்றன நீர்வா ழுயிர்களும். (உங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்கிழாயன்றிவேற்றுப்பறவைகடாழுந்தன்போ
னன்கதியடையவேண்டிற்றேகொலிங்காரைசெய்த
வன்பினில்வியப்போவீசனருளினில்வியப்போவன்பர்க்
கின்புருவானவீசனருளன்பர்க்கெளிதேயைய. (உச)

கலிவிருத்தம்.

மறக்குறும்பு கலைகட்டு மண்ணின்மே
லறப்பெரும்பயி ராக்கிய தன்பயன்
சிறக்க நல்கிட வுண்டு செருக்குவான்
றுறக்க மெய்தி யிருந்தான் சுகுணனும். (உடு)

நாரைக்குமுத்திகொடுத்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - நிள - க்கு திருவிருத்தம் - உஊஉக.

கூடற்காண்டம் முற்றிற்று.

திருவாலவாய்க்காண்டம்.

நாற்பத்தோன்பதாவது,

திருவாலவாயானபடலம்.

பரசிவ வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாயுடையார்விடுத்தபழியழல்வழுதியுடல் குளிப்பப்பதிகமோ
தஞ், சேயுடையாரணத்திலைக்குஞ்செவியுடையாரளவிறந்ததிசைக
ளெட்டுந், தோயுடையார்பொன்னிதழித்தொடையுடையார்விடவா
வஞ்சுற்றுமால, வாயுடையார்புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவ
திம்மனிதயாக்கை. (க)

(உக)நன்றுசால்-நன்மைமிக்க.(உஉ) இயங்களேந்தும்-தோற்கருவி யாதிய பஞ்சகருவிகளாலாகிய வாத்தியங்கள் ஐந்தும். வியம்-பெருமை. (உங) மீனலால்-மீனன்றியும்.(உச) கிலே-சுற்றம்.(உடு)மறக்குறும்பு-பாவம்.(க) பாயுடையார்-சமணர். ஆணம்-திருநெறித்தமிழ்வேதம்.

சிவசத்தி வணக்கம்.

வேதனெடுமாலாதிவிண்ணுடர்மண்ணுடர்விரதயோகர்
மாதவர்யாவருங்காணமணிமுறுவல்சிறிதரும்பிமாடக்கூட [வி
ஞுதனிருதிருக்கரன்தொட்டம்மியின்மேல்வைத்தகய ஞுட்டச்செல்
பாதமலரெழுபிறவிக்கடனீந்தும்புணையென்பர் பற்றிலாதோர்.(உ)

மேற்படி வேறு.

ஓலவாய்மறைகடேறுவொருவன்றன் னுலகந்தன்னேச்
சேலவாயுழலுநாரைக்கருளியசெயலீதம்ம
நீலவாய்மணிநேர்கண்டனெடியநான்மாடக்கூட
லாலவாயாகச்செய்தவருட்டிறமெடுத்துச்சொல்வாம். (ங)

சித்திரமேருவென்றதிரண்டதோட்சுருணன்பின்பு
சித்திரவிரதன்சித்ரபூடணன்றிண்டோர்வல்ல
சித்திரதுவசன்வென்றிச்சித்திரவருமன்வன்றேட்
சித்திரசேனன்சீர்சால்சித்ரவிக்கிரமனென்போன். (ச)

மணிகெழுதேரிராசமார்த்தாண்டனிராசசூடா
மணியணிமுடியிராசசார்த்தூலவழுதிசிந்தா
மணிநிகர்துவிசராசசூலோத்தமன்மடங்காவென்றி
மணிதிகழ்பொலம்பூணுயோதனப்பிரவீணன்மன்னே. (ஞ)

இயம்பருந்திறலிராசசூஞ்சரன்பரவிராச
பயங்கரன்கைக்கும்பைந்தாருக்கிரசேனன்பாரைச்
சயங்கெழுதோண்மேலேந்துசத்தருஞ்சயன்வீமத்தேர்
வயங்கெழுமன்னன்வீமபராக்ரமவழுதிமாதோ. (ஃ)

பெய்வளைவிந்தைசேர்ந்தபிரதாபமார்த்தாண்டப்பேர்த்
தெவ்வடுசிலேயான்றோல்விக்கிரமகஞ்சுகன்றேரார்போர்
வெளவியசமரகோலாகலனெனும்வாகைவேலா
னவ்வியமவித்தசிந்தையதுலவிக்கிரமனென்போன். (எ)

எழில்புனேயதுலகீர்த்தியெனவிருபத்திரண்டு
வழிவழிமைந்தராகிவையகங்காத்தவேந்தர்
பழிதவிரதுலகீர்த்திபாண்டியன்றன்பாலின்பம்
பொழிதரவுதித்தகீர்த்திபூடணன்புரக்குநாளில். (அ)

(உ) புணை-தெப்பம். (ங) ஓலம்-ஒலி.(ச)சித்திரம்-அழகு.(ஞ)சிந்தா மணி - வேட்டதளிக்குமொருதெய்வமணி. (ஃ) வீமத்தேர்வயங்கெழுமன்னன் - வெற்றியுடன் விளங்கும் வீமரதபாண்டியன். (எ) விந்தை-சயமடந்தை. தேரார்-பகைவர். (அ) புரக்குநாளில்-அரசாளுங்காலத்து.

கருங்கடலேழுங்காவற்கரைகடந்தார்த்துப்பொங்கி
யாருங்கெழுந்துருத்துச்சீறியும்பரோடிம்பரெட்டுப்
பொருங்கடகரியுமெட்டுப்பொன்னெடுங்கிரியுநேமிப்
பெருங்கடிவரையும்பேரப்பிரளயங்கோத்ததன்றே. (கூ)

அப்பெருஞ்சலதிவெள்ளத்தழிந்தனவழிலாத
வெப்பெரும்பொழிலுமேழுதீபமுமிவற்றுட்டங்கி
நிற்பனசெல்வனான திணைகளுநீண்டசென்னிப்
பர்ப்பதவகையுமீறுபட்டனவாகவங்கண். (கூ0)

தேனிழிகுதலைத்தீஞ்சொற்சேனெடுங்கண்ணிகோயில்
வானிழிவிமானம்பொற்றுமரைவிளையாட்டின்வந்த
கானிழியிடபக்குன்றங்காரிவரைநாகக்குன்ற
மானிழிவரைவாகவரைமுதலழிலாத. (கக)

வெள்ளநீர்வறப்பவாதிவேதியன்ஞாலமுன்போ
லுள்ளவாறுதிப்பகல்கியும்பரோடிம்பரேனப்
புள்ளொடுவிலங்குநல்கிக்கதிருடற்புத்தேண்மூவர்
தள்ளருமரபின்முன்போற்றமிழ்வேந்தர்தமையுந்தந்தான். (கஉ)

கலிவிருத்தம்.

அங்கியை மதிமர பென்னு மாழியுட்
டங்கிய கலியெனுன் கிரட்டி தன்னெடும்
பொங்கிய நிலாமதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே. (கஙூ)

தாளணி கழலினுன் றங்க ணுயகன்
கோளணி புரிசைசூழ் கோயில் சூழவோர்
வாளணி கடிநகர் சிறிது வைகவைத்
தாளரி யேறென வவனிகாக்கு நாள். (கச)

செய்யகோன் மனுவழி செலுத்து நீர்மையாற்
பொய்கெழு கலிப்பகை புறந்தந் தோடத்தன்
வையகம் பல்வளஞ் சுரப்ப வைகலு
மெய்கெழு மன்பதை மிக்க வாலரோ. (கஞ)

(கூ) நேமிப்பெருங்கடிவரை-சக்கரவாளகிரி. (கூ0)சலதிவெள்ளம்-கடனீர். (கக) கான்-வாசனை. (கஉ) ஆதிவேதியன்-சிவபெருமான். (கஙூ) வங்கியசேகரன் - வம்சசேகரன். (கச) கோள் - நவக்கிரகம். (கஞ) மன்பதை - மக்கட்கூட்டம்.

பல்குறு மாலுடப் பரப்பெலா மொருங்
கல்குற விடங்குறை வாகவாய் மதுப்
பில்குறு தாரிஞன் பிறைமுடித் தவன்
மல்குறு கோயிலின் மருங்க ரெய்தினான். (கசு)

கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு
திறையவ னின்னரு ளலியி னிந்நிலப்
பொறையது வாற்றுவேற் கீண்டிப் போதொரு
குறைய துண்டாயின தென்று கூறுவான். (கஎ)

இத்தனை மாக்களு மிருக்கத் தக்கதாப்
பத்தனங் காணவிப் பதிக்க ணைதியே
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலே
னத்தமற் றதனையின் றறியக் காட்டென்றான். (கஅ)

நுண்ணிய பொருளினு நுண்ணி தாயவர்
விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்
றிண்ணி யவன்பினுக் கெளிய சித்தராய்ப்
புண்ணிய வருட்கட லாகிப் போதுவார். (கரு)

கலிநீலத்துறை.

பாம்பிஞற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்
பாம்பிஞற் புரிநூல்சன்னவீரம் வெம்பகு வாய்ப்
பாம்பிஞற் குழைகுண்டலம் பாத கிண்கிணிநாண்
பாம்பிஞற் கரகங்கணம் பரித்தனர் வந்தார். (உ0)

வந்தயோகர் மாமண்டப மருங்குநின் றங்கைப்
பந்தவாலவா யரவினைப் பார்த்து நீயிவனுக்
கிந்தமா நகரெல்லையை யளந்துகாட் டென்ற
ரந்தவாள ராவடி பணிந்தடி களேவேண்டும். (உக)

பெருமவிந் நகரடியனேன் பெயரினல் விளங்கக்
கருணைசெய்தி யென்றிரந் திடக்கருணை யங்கடலு
மருணயந்து நேர்ந்தனைய தேயாகெனப் பணித்தா
னுருகெழுஞ் செலவுரகமு மொல்லெனச் செல்லா. (உஉ)

(கசு) அல்குதல்-தங்குதல். (கஎ) கறை-விடம். (கஅ) பத்தனம்-நகரம். (கரு) நுண்ணிதாயவர் - சிறிதாயவர். (உ0) கடிசூத்திரம் - அரைநாண். பசுந்தாள் - இல்லாதகால். (உக) பந்தம்-கட்டு. ஆல வாய்-விடவாய். அரவு-பாம்பு. (உஉ) உரு-அச்சம். உரகம்-மார்பாற் செல்வது. அதுபாம்பு.

கீட்டிசைத் தலைச்சென்று தன்கேழ்கிளர் வாலை
நீட்டிமாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்
கோட்டிவாலை வாய்வைத்து வேற்கொற்றவற் கெல்லை
காட்டிமீண்டரன் கங்கண மானது கரத்தில். (உங)

சித்தர்தஞ்சின கரத்தெழுந் தருளினர் செழியன்
பைத்தவாலவாய் கோலிய படிசுவ ரெடுத்துச்
சுத்தநேமி மால்வரை யினேத்தொட் டகழ்ந்தெடுத்து
வைத்ததாமென வகுத்தனன் மஞ்சு சூழிஞ்சி. (உச)

தென்றிசைப் பரங்குன்றமும் வடதிசை யிடபக்
குன்றமுங் குடக்கேடக நகரமுங் குணபாற்
பொன்றலங் கிழித்தெழு பொழிற்பூவண நகரு
மென்றுநாற் பொருவாயில்கட் கெல்லையா வகுத்தான். (உஙி)

அனையநீண் மதிலாலவாய் மதிலென வறைவர்
நனையவார் பொழினகரமு மாலவாய் நாமம்
புனையலாய தெப்போது மப்பொன்னகர் தன்னைக்
கனையவார் கழற்காலினுன் பண்டுபோற் கண்டான். (உசு)

கொடிக ணீண்மதின் மண்டபங் கோபுரம்வீதி
கடிகொள் பூம்பொழி லின்னவும்புதிய வாக்கண்டு
நெடியகோ ளகைகிரீடம் வாணிழன் மணியாற்செய்
தடிகள்சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான். (உஎ)

பல்வகைப் பெருங்குடிக ளும்பரப்பெலா நிரப்பிச்
செல்வவான வன்புரந்த ரன்புரத்தினுஞ் சிறப்ப
மல்லன்மாநகர் பெருவளந் தளும்பிட வளர்த்தான்
றெல்லைநாட் குலசேகரன் போல்வரு தோன்றல். (உஅ)

திருவாலவாயானபடலம் முற்றிற்று.

ஆ படலம் - நிஅ - க்கு திருவிருத்தம் - உஙசகூ.

(உங) கேழ்-நிறம். கிளர் - விளங்குகின்ற. (உச) இஞ்சி-மதில். (உஙி) குடக்கு-மேற்கு. (உசு) நனைய - அரும்புகளையுடைய. (உஎ) கடி - மணம். அடிகள்-கடவுள். சாத்திய-சாத்த. (உஅ) தளும்பிட-நிறைந்துவழிய.

ஐம்பதாவது,
சுந்தரப்பேரம்பெய்த படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கணருரகமணிந்தருள்வடிவமடைந்தரசகமகிழக்
கங்கணவிடவரவங்கொகெடிநகர்கண்டருண்முறையிதுவாஞ்
சங்கனிகுழையினர்பஞ்சவன்வழிபடுதம்பெயரெழுதியகூர்
வெங்கணைகொவிளவன்படைமுடுகியவென்றியையினிமொழிவாம்

வெங்கயனீள்கொடிவங்கியசேகரன்வெண்குடைநீழலின்வாய்
வங்கமுலாவியதென்கடன்ஞாலமடைந்தையுமாச்றுசீர்ச்
செங்கமலாலயமங்கையும்வாலியதிண்பதுமாலயமே
னங்கையுமோவறமங்கலமானநயம்பெறுவாழ்வுறுநாள். (உ)

வேழமறப்படைசூழவெதிர்த்தவர்வீறுகெடுத்தடியிற்
ரூழவடர்த்திகல்வாகைதொடுத்தலர்தார்புனைவிக்கிரமச்
சோழன்மதிக்குலநாயகனேப்பொருசூள்கருதித்தொலையா
வாழ்கடலுக்கிணையாமனிகத்தொடுமாடமருக்கெழுவான். (ஙு)

கயபதிகாய்ஞினரபதிபாய்துரகதபதியேமுதலா
வயமிருதோள்வடதிசையினராதிபர்வலிகெழுசேனையினூ
டியமிடியேறிமிழிசையெனவாய்விடவிரதமதேறிடஅப்
பயன்மலிகாவிரிநதியருகேயுறைபதிகொடுமேயினனால். (ச)

சிலைத்தெழுசெம்பியன்வெம்படைமள்ளர்செயிர்த்துமதிக்கடவுட்
குலத்தவனூட்டினிருந்தெழிலானிரைகொண்டுகுறும்புசெய்து
மலர்த்தடமேரியுடைத்துநகர்க்குவரும்பலபண்டமுமா
றலைத்துமுடுக்கிநடுக்கம்விளைத்துமமர்க்கடியிட்டனரால். (ஞ)

மாறனறிந்தினியென்செய்துநேரியன்வன்படையோவளவின்
றேறியெதிர்ந்தமராடினெனக்கரிதிக்குறையைப்பிறையோ
டாறணிபூரணசுந்தரனென்தையடித்தலமுன்குறுகாக்
கூறியிரந்துவரம்பெறுகென்றிறைகோயிலடைந்தனனூல். (ரு)

அடைந்தபணிந்தருணயகனேயடியேனுவிக்கிரமன்
ரொடர்ந்தமராடவயற்புலமன்னவர்தொகையொடுபொசதைவாய்ப்

(க) தம்பெயர்-சுந்தரன். (உ) ஓவற-நீங்காமல். (ங) இகல்-பகை. (ச) துரகம் - குதிரை. (ஞ) குறும்பு - நீத்தொழில். (ரு) ஏறி-மேற் சென்று.

படர்ந்திறைகொண்டனனேபொரவொத்தபதாதியெனக்கிலையே
மிடைந்துவரும்படைமிக்கவிடத்தரண்வேறுளதோவ்றைவா. (எ)

என்னையினிச்செயுமாறெனமாறனிரந்துமொழிந்திடலு
முன்னவன்வானிடைநின்றசரீரிமொழிந்தருள்வான்முதனீ
யன்னவனேடமாடபிளுமுமடைந்துதவித்துணையாய்
நின்னதுவாகையெனப்பொருகின்றனனீயினியஞ்சலென. (அ)

சிந்தைகளித்திருகண்களிளித்திருசெங்கைகுவித்நிறைவ
னந்திமதிச்சடையந்தணனேத்தொழுதன்றுபுறப்படமுன்
வந்தனனெற்றுவனந்திவரைக்கயல்வந்ததுவிக்கிரமன்
வெந்தறுகட்படையென்றரசற்குவிளம்பினனப்பொழுதே. (கூ)

அரசனியம்பலவதிரவலம்புரியலறவலங்குலோமா
னிரதமணிந்திடவிசைகொடுசிந்தைபினிடவலவன்கடவப்
புரசைநெடுங்கரிதிரையெறியுங்கடல்பொருபரிவிண்டொடுதேர்
விரைசெய்நறுந்தொடைவிருதர்கணம்புடைவிரவநடந்தனலால். ()

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அளந்துசூழ்திருவாலவாய்மதிலின்புறத்தகழாழிபோல்
வளைந்தசோழனெம்படைக்கெதிர்வஞ்சிவேய்ந்தெழுபஞ்சவன்
கிளர்ந்தசேனையதிர்ந்துகிட்டினகிட்டியவ்விருபடைஞருங்
களஞ்சிறந்திடவஞ்சினங்கொடுகைவருத்தமர்செய்வரால். (கக)

சையமொத்தெழுதேரினுரொடுசையமொத்தெழுதேரரு
மையண்மைக்கரிவீரரோடெதிர்மையண்மைக்கரிவீரருங்
கொய்யுளைப்பரிவயவரோடிகல்கொய்யுளைப்பரிவயவருங்
கையழற்படைவீசிமின்விகொரெனப்பொருவாரரோ. (கஉ)

முடங்குவெஞ்சிலைவில்லரோடுமுடங்குவெஞ்சிலைவில்லரும்
விடங்கலுழ்ந்திடுவேலரோடுவிடங்கலுழ்ந்திடுவேலரு
மிடங்கைதோல்வலவாளரோடுமிடங்கைதோல்வலவாளரு
மடங்கலேறுமடங்கலேறுமலைப்பதென்னமலைப்பரால். (கங)

அரவினன்னிலமம்புயம்பொறையாற்றுமீனவனுற்றல்கூர்
புரவியின்னிரைவையமேல்கொடுபோந்தநேரியர்வெந்தனேர்

(எ) பாசறை - படைவீடு. (அ) மாறன்-பாண்டியன். (கூ) நந்தி வரை - இடபமலை. (கo) உளை - புறமயிர். (கக) வஞ்சி - வட்கார் மேற்சேறல்வஞ்சிஎன்பதாம் ஆதலிற் போர்மேற்செல்வோரணிமாலை வஞ்சி.(கஉ) சையம் - மலை. உளை-புறமயிர். கார்-மேகம். (கங) தோல்-கேடகம். மடங்கலேறு ஆண்சிங்கம்.

விரவிமின்னியமுரசியம்பமிடைந்துவெஞ்சமராடுமா
றிரவிதன்னெடுமதியவன்பொரவேகிஞனிகராகுமால். (கச)

தள்ளுமாவொலிதானையாறுதளும்புமாவொலிதூண்டுதேர்
தள்ளுமாவொலிபடையொடும்படைதாக்குமாவொலிபொருநரார்த்
தெள்ளுமாவொலிமள்ளர்பைங்கழலேங்குமாவொலிவீங்கியந்
தெள்ளுமாவொலிவேறுபாடுதிரிந்துகல்லெனலாயதே. (கஙி)

துடித்தவாளரவென்னவீசியதூங்குகையினவீங்குநீர்
குடித்தகாரொடுகோர்மலைந்திடுகொள்கைபோலவுடன்றுடன்
றிடித்தவாயினவசனியேறினிருப்புலக்கையெடுத்தெறிந்
தடித்தசோரியொடாவிசோரவிழுந்தவெஞ்சினவாரணமே. (கசு)

எய்தவாளிவிலக்குவார்பிறிதெய்யும்வாளிதமார்புதோள்
செய்தபோதவராண்மைகண்டுசிரித்துவென்றிவியப்பரால்
வைதவாவடிவேலெறிந்திடவருவதைக்குறிவழியினூற்
கொய்ததார்மறவாளெறிந்துகுறைத்துவேறுபடித்துவார். (கஎ)

பின்னிடாதிருபடையுமொத்தமராடுமெல்லைபெரும்படைச்
சென்னிதன்றுணையான வுத்தரதேயமன்னவர்படையொடுந்
தன்னிஞாலமுடிக்குநாளெழுசூறைதள்ளவதிர்ந்தெழும்
வன்னியென்னவுடன்றெதிர்ந்தனர்வழுதிசேனையுடைந்ததே.(கஅ)

மின்னிலங்கிலைவாளொடுஞ்சிலைவில்லிழந்தனர்வீரரே
பன்னலம்புனைதேரொடுங்கரிபரியிழந்தனர்பாகரே
தென்னவன்பொருவலியிழந்தனனென்றுசெம்பியன்வாகையுந்
தன்னதென்றுதருக்குமேல்கொசெங்கெடுத்துமுழக்கினான். (கக)

அந்தவேலையின்முன்னருந்தமதருளெனக்குளிர்கடிபுனற்
பந்தர்நீழலளித்துமோடைபடுத்தியும்பகைசாயவே
வந்தவேடரவண்ணமேயொருமானவேடரசாய்வலஞ்
சிந்தவாகுலமூழ்குமீனவர்சேனைகாவலராயினர். (உ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குன்றவில்வேடன்சாபங்குழைவித்துச்சுந்தரேச
னென்றதன்னுமந்தீட்டியிட்டகூர்ங்கணைகடிண்டி

(கச) நேரியர்வேந்தன்-சோழன். (கஙி) துள்ளுமா-குதிரை. தானையாறுதளும்புமா-யானை. (கசு) அசனியேறின்-இடியேற்றின். (கஎ) வைதவா-கூர்நீங்காத. தோள்செய்த-தோளைசெய்த. (கஅ) சூறை-ஒருவகைக்காற்று. வன்னி-அக்கினி. (கக) செம்பியன்-சோழன். (உ0) ஓடைபடுத்தியும்-மடவில்வீட்டியும்.

வென்றனமென்றுவாகைமிலைந்துவெண்சங்கமார்த்து
நின்றவன்சேனைமீதுநெறிப்படச்செலுத்தாநின்ரூன். (உக)

அம்மூனைவாளியொவ்வொன்றடல்புனைநூறுநூறு
தெம்மூனைவீரர்தம்மைச்செகுத்துயிருண்ணநோக்கி
யிம்மூனைவாளியொன்றுக்கித்துணைவலியாதென்ஞ
லெம்மூனைமறவேற்சென்னிவியந்தநுமானமெய்தா. (உஉ)

அன்னகூர்வாளிதன்னைக்கொணர்கெனவதனைவாசித்
தின்னதுசுந்தரேசனெனவரைந்திருப்பதீது
தென்னவர்க்காலவாயான்றுணைச்செய்தசெயலென்றஞ்சிப்
பொன்னிநாடுடையான்மீண்டுபோகுவான்போகுவானே. (உங)

செருத்துணையாகிவந்தவுத்தரதேயத்துள்ளார்
துருக்கரொட்டியர்வேறுள்ளார்யாவருஞ்சூழ்ந்துநில்லென்
றருத்தனர்வைதுநீபோர்க்குடைந்தனைபோதியீதுன்
கருத்தெனினுண்மையாவர்கண்ணதுன்மானமென்னும். (உச)

செல்லலைவருதியென்ஞச்செயிர்த்தெழுந்திடியினார்த்துக்
கல்லெழுவனையதிண்டோட்கௌரியன்படைமேற்சென்று
வில்லிறவலித்துவாங்கிவேறுவேருகிநின்று
சொல்லினுங்கடியவாளிதொடுத்தனர்விடுத்தார்தூர்த்தார். (உடு)

வடுத்தவாமருமச்செம்புண்மறமகளுகிநின்ற
கடுத்தவாமிடற்றுமுக்கட்கண்ணுதற்சாமிதான்மூன்
னெடுத்தவாடகவிலன்னவிருஞ்சிலைவாளியொன்று
தொடுத்தவாடவர்தாம்விட்டசுடரந்தொலைத்துப்பின்னும். (உசு)

பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துமான்றேரைச்சாய்த்தான்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துவெங்களிற்றைமாய்த்தான்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துவாம்பரியைக்கொன்ரூன்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துமானுடரைவென்ரூன். (உஎ)

நூறம்புதொடுத்துநூறுநூறுவெம்பெரிமேலெய்தா
னூறம்புதொடுத்துநூறுநூறுவெங்கரிமேற்பெய்தா
னூறம்புதொடுத்துநூறுநூறுதேர்கிதையவிட்டா
னூறம்புதொடுத்துநூறுநூறுசேவகரையட்டான். (உஅ)

(உக) குன்றவில்-மலைவில். சாபம்-தனுசு. (உஉ) அனுமானம்-உத்தேசம். (உங) தென்னவற்கு-பாண்டியற்கு. ஆலவாயான்-மதுரைக்கடவுள். (உச) சூழ்ந்து-வளைந்து. (உடு) தூர்த்தார்-நிறைத்தார். (உசு) கடுத்தவா-விடநீங்காத. மிடற்றன்-கழுத்தினை யுடையவன். (உஎ) மான்றேர்-குதிரைபூண்டதேர். (உஅ) வெம்பரி - வேகமான குதிரை.

ஆயிரம்வாளியா னூருயிரம்பரியைக்கொன்ரு
ஞயிரம்வாளியா னூருயிரங்கரியைவென்ரு
ஞயிரம்வாளியா னூருயிரந்தேரைச்சாய்த்தா
ஞயிரம்வாளியா னூருயிரம்பேரைத்தெய்த்தான். (உக)

தடிந்தனதோளுந்தாளுந்தகர்ந்தனசென்னிமண்ணிற்
படிந்தனமடிந்தோர்யாக்கைபரிந்தனதும்பைத்தாம
மடிந்தனமையல்யானேமாண்டனதாண்டும்பாய்மா
ஞெடிந்தனகொடிஞ்சிமான்றேரொதுங்கினவொழிந்தசேனை.(உO)

ஆவிமுன்னேகத்தாமுமருக்கமண்டலத்தாறேகத்
தாவுவவென்னவாடுந்தலேபலகிலேவாள்பட்டுக்
கூவிளியெடுத்துவீழுங்குறைத்தலேயாடப்பாதிச்
சாவுடனின்றுகைகள்கொட்டெதாளமென்ன. (உக)

தறைவிழத்தனதுசென்னிவீட்டினுர்தம்மைநின்ற
குறையுடற்கைவேல்குத்திநூக்குவகுரவைபாடி
யெறிபடதலைகள்வாய்மென்றெயிறதுகறித்துவீழ்ந்து
கறுவினமார்பந்தட்டிநிற்பனகவந்தயாக்கை. (உஉ)

ஒருவழிபட்டுவீழுமிருதலேயொன்றற்கொன்று
மருவியகேண்மைத்தாகிவாலெயிறிலங்கநக்குப்
பிரிவறவந்தாய்நீயுமென்றெதிர்பேசிப்பேசிப்
பரிவுறமொழிந்துமோந்துபாடிநின்றுடல்செய்தது. (உங)

மாகவாறியங்குசேனம்வல்லிருட்குவையினன்ன
காகம்வன்கழுகுவெம்போர்க்களனிடையவிந்துவீந்தோ
ராகமேற்சிறகடிக்கொண்டசைவனவேடைநீக்கப்
பாகநின்றுலவட்டம்பணிப்பனபோன்றவன்றே. (உச)

வெள்ளமாச்சோரியீர்ப்பமிதக்கின்றதேர்கள்வெம்பேய்ப்
பிள்ளைகண்மூழ்கிக்கீழ்ப்போய்மறித்தனப்பெயர்ந்துவீழ்வ
தெள்ளுநீர்க்கடலின்மீதூர்சிதைக்கலநிரையுந்தாக்கித்
துள்ளிமற்றவற்றைச்சாய்க்குஞ்சுறவமும்போன்றவன்றே. (உஞ)

கத்திநின்றெருபாலீர்ப்பக்கருங்கொடிசேனந்துண்டங்
கொத்திநின்றெருபாலீர்ப்பக்குடலயிற்றழல்கட்பூதப்

(உக)நூருயிரம்-ஓரிலக்கம். (உO ஒழிந்தசேனை-வில்வாட்சேனை. (உக)குறைத்தலே-கவந்தம். பாதிச்சாவுடல்-மூற்றுஞ்சாகாதவுடல். (உஉ) கறித்து-கடித்து. குரவை-கைகோத்தாடல். (உங)கேண்மை-நேகம். (உச) மாகம் - ஆகாயம். வேடை-வெப்பம். (உஞ) சிதைக்கலம்-கீழ்மையானகப்பல்.

பத்திரின்றெருபாலீர்ப்பப்பட்டவராகக்கூளி
பொத்திரின்றெருபாலீர்ப்பவைம்பொறிபோலமன்னே. (நசு)

துடுவைவான்முறங்காறள்ளுந்துணைச்செவியரிசிகோட்டி
னுவைநேர்மணியின்குப்பையுரலடியுலக்கைதிண்கோ
டகெலங்கடந்தீச்சோரிமத்தகமடுப்பென்றியானைப்
படுகளம்விசயச்செல்வியுமடைப்பள்ளிமானும். (நஎ)

பிணத்தினைக்கோலிப்புண்ணீராற்றினைப்பெருக்கியுண்பேய்க்
கணத்தினையுதைத்துநூக்கிக்கரையுடைத்தொருவன்பூத
நிணத்தெதும்புமருங்கீத்தநேர்படவிருந்துகையா
லனைத்துவாய்மடுக்கும்வைகையருந்தியபூதமென்ன. (நஅ)

புரத்தினுளுயர்ந்தகூடற்புண்ணியனெழுதியெய்த
சரத்தினிலவிந்தார்சென்னிக்குற்றுழிச்சார்வாய்வந்த
வரத்தினையறுக்கும்வைவேலயற்புலவேந்தர்நச்சு
மரத்தினையடித்தசந்துங்கதழெரிமடுத்ததென்ன. (நக)

மாசறுசாட்சியான்றன்வாளியாலவிந்தோர்தம்மை
மூசுவண்டென்னச்சூழ்ந்துமொய்த்தனபைத்தகூளி
காய்சினச்சேனங்காகங்கழுகினம்பற்றியீர்த்துப்
பூசலிட்டொன்றேடொன்றுபோர்செய்வான்றொடங்கிற்றம்ம. சO

வெஞ்சினமறக்கோனம்பிவிகணைவெள்ளத்தாழ்ந்து
வஞ்சினமுறுதன்சேனைமடிந்துதுகண்டுமாழாந்
தெஞ்சினபடையுஞ்சூழவேதிலார்நகையுஞ்சூழத்
தஞ்சினமறமுஞ்சூழச்சோழனுமுடைந்துபோனான். (சக)

வில்லொடுமேகமன்னவெஞ்சிலைவேடவேந்தன்
மல்லொடுபயின்றதென்னன்மலர்முகச்செவ்விநோக்கி
யல்லொடுமிவன்தென்னவருணகைகிறிதுபூத்துச்
செல்லொடுபகைபோற்கொண்டதிருவுமறைந்துபோனான். (சஉ)

பாடுவாயளிதேனூட்டும்பைந்தொடைச்செழியன்வென்றிக்
கோடுவாய்வைத்திட்டார்த்துக்குஞ்சரமுகட்டிலேறித்
தோடுவாய்கிழிக்குங்கண்ணர்மங்கலந்துவன்றியேந்த
நீடுவார்திரைநீர்வேலிநிண்மதினகரிற்புக்கான். (சஙு)

(நசு) கருங்கொடி - கரியகாகம். சேனம் - பருந்து. துண்டம்-அலகு. கூளி - பிசாசு. (நஎ) துடுவை - துடுப்பு. உடு-நட்சத்திரம். (நஅ) நூக்கி - அள்ளி. (நக) கூடல் - மதுரை. (சO) மாசறு-களங்கமற்ற. (சக) துஞ்சினமறம் - இறந்தவீரம், அதுதோல்வி. (சஉ) வில் - இந்திரதனுசு. (சஙு) வென்றிக்கோடு - வெற்றிச்சங்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிலைவிற்சேவகஞ்செய்துவாகைவாங்கித் திருவளித்தசேவகற்குச் சிறந்தபூசை, நிலைவித்தாய்மணிப்பொலம்பூ ணிறுவிச்சாத்தி நிழல்விரிக்கும்வெயின்மணியா னெடியமேரு, மலைவிற்றுனென்ன வரிச்சிலையுநாமம்வரைந்த கடுங்கூர்ங்கணையும்வினைத்துசாத்தி, யலைவித்தாழ்கடலுலகுக் ககலசெங்கோ லறம்பெருக்கும் வங்கியசே கரனுமண்ணல். (சச)

சுந்தரப்பேரம்பெய்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - நுக - க்கு திருவிருத்தம் - உஉகஉக.

ஐம்பத்தொன்றவது,

சங்கப்பலகைதந்தபடலம்.



வேதிருவாகிமேருவில்லிதன்னுமக்கோலெய்
தாடமராடித்தென்னனபகைதுரந்தவண்ணம்
பாடினஞ்சங்கத்தார்க்குப்பலகைதந்தவாறோடொப்பக்
கூடிமுத்தமிழின்செல்வம்விளக்கியகொள்கைசொல்வாம். (க)

வங்கியசேகரன்கோல்வாழுநாண்மேலோர்வைகற்
கங்கையந்துறைசூழ்கன்னிக்கடிமதிற்காசிதன்னிற்
பங்கயமுளரிப்புத்தேள்பத்துவாம்பரிமாவேள்வி
புங்கவர்மகிழ்ச்சிதூங்கமறைவழிபோற்றிச்செய்தான். (உ)

நிரப்பியவழிநாணன்னீராடுவானீண்டவீணை
நரப்பிசைவாணிசாவித்திரியெனுநங்கைவேத
வரப்பிசைமனுவாங்காயத்திரியெனுமடவாரோடும்
பரப்பிசைக்கங்கைநோக்கிப்படருவான்படருமெல்லை. (ஊ)

ஞானவார்குழலினூரம்மூவரிஞவின்செல்வி
வானவாறியங்கும்விஞ்சைமாதராளொருத்திபாடுங்
கானவாறுள்ளம்போக்கிநின்றனள்கமலயோனி
யானவாலறிவனேகியந்நதிக்கரையைச்சேர்ந்தான். (எ)

நாமகள்வரவுதாழ்ப்பநங்கையரிருவரோடுங்
காமரைக்கிழவன்மூழ்கித்தடங்கரையேறுமெல்லைப்

(சச) அலைவி - ஐம்பகை. (க) நாமக்கோல் - சுந்தரப்பேரம்பு. (உ) கோல்வாழுநாள்-செங்கோல்செல்லுங்காலத்து. (ஊ) வழிநாள்-பின்னுள். (எ) ஞானம் - வாசனை.

பாமகள்குறுகியென்னையன்றிநீபடிந்தவாறென்
ஞமனவெருண்டாள்கேட்டவம்புயத்தண்ணல்சொல்வான். (இ)

குற்றநின்மேலதாகநம்மைநீகோபங்கொள்வ
தெற்றெனவினையதீங்கையெண்ணுமாக்கடோற்ற
முற்றனையொழித்தியென்னுவுரைத்தனன்சாபமேற்கும்
பொற்றொடிமடந்தையஞ்சிப்புலம்புகொண்டவலம்பூண்டாள். (ஈ)

ஊனிடரகன்றுயுன்னுருயிர்த்துணையாவேனிந்த
மானுடயோனிப்பட்டமெயங்குகோவென்னவண்டே
தேனிடையழுந்திவேதஞ்செப்பும்வெண்கமலச்செல்வி
தானிடரகலநோக்கிச்சதுர்முகத்தலைவன்சாற்றும். (எ)

முகிழ்த்தருமூலநின்மெய்யாமுதலெழுத்தைம்பத்தொன்றிற்
றிகழ்தரும்ஆகாராதிஹாகாரமீறுச்செப்பிப்
புகழ்தருநாற்பத்தெட்டுநாற்பத்தெண்புலவராகி
யகழ்தருகடல்சூழ்ஞாலத்தவதரித்திடுவையாக. (அ)

அத்தகுவருணமெல்லாமேறிநின்றவற்றவற்றின்
மெய்த்தகுதன்மையெய்திவேறுவேறியக்கந்தோன்ற
வுய்த்திடும்அகரத்திற்குமுதன்மையாயொழுகுநாதர்
முத்தமிழாலவாயெம்முதல்வரம்முறையான்மன்னே. (உ)

தாமொருபுலவராகித்திருவுருத்தரித்துச்சங்க
மாமணிப்பீடத்தேறிவைகியேநாற்பத்தொன்ப
தாமவராகியுண்ணின்றவரவர்க்கறிவுதோற்றி
யேமுறப்புலமைகாப்பானென்றனன்கமலப்புத்தேள். (ஊ)

அக்கரநாற்பத்தெட்டுமவ்வழிவேறுவேறு
மக்களாய்ப்பிறந்துபன்மாண்கலைகளின்வகைமைதேர்ந்து
தொக்கவாரியமுமேனைச்சொற்பதினெட்டுமாய்ந்து
தக்கதென்கலைநுண்டேர்ச்சிப்புலமையிற்றலைமைசார்ந்தார். (எ)

கழுமணிவயிரம்வேய்ந்தகலன்பலவன்றிக்கண்டிக்
கொழுமணிக்கலனும்பூணுங்குளிர்நிலாநீற்றுமெய்யர்
வழுவறத்தெரிந்தசெஞ்சொன்மாலையாலன்றியாய்ந்த
கழுமலர்மாலையாலுஞ்சிவார்ச்சனைசெய்யுநீரார். (ஏ)

(இ) நாமகள் - சரசுவதி. நங்கையரிருவர்-காயத்திரி, சாவித்திரிகள். (உ) மாக்கள்தோற்றம் - மானுடப்பிறவி. (எ) ஊனிடர் - பிறவித்துன்பம். (அ) முகிழ் - தாமரையரும்பு. (கூ) வருணம்-எழுத்து. (கூ) ஏழுநூ - இன்பமுண்டாக. (கக) ஆரியம் - தேவபாடை. (கஉ) கழுமணி - அரணைதீர்த்தமாணிக்கம்.

புலந்தொறும்போகிப்போகிப்புலமையால்வென்றுவென்று
மலர்ந்ததண்பொருநைநீத்தவளங்கெழுநாட்டில்வந்து
நிலந்தருதிருவிளைன்றநிறைநிதிச்செழியன்செங்கோ
னலந்தருமதுரைநோக்கிநண்ணுவார்நண்ணுமெல்லை. (கக)

பற்பலகலைமாண்டோர்ச்சிப்பனுவலின்பயனுய்ந்தின்ற
வற்புதமூர்த்தியெந்தையாலவாயடிகளங்கோர்
கற்பமைகேள்விசான்றகல்வியின்செல்வராகிச்
சொற்பதங்கடந்தபாதமிருநிலந்தோயவந்தார். (கச)

அவ்விடைவருகின்றாரைநோக்கிநீராரைநீவி
ரெவ்விடைநின்றும்போதுகின்றனிரென்னவன்னூர்
வெவ்விடையனையீர்யாங்கள்விஞ்சையரடைந்தோர்பாவம்
வௌவிடுபொருநைநாட்டின்வருகின்றேமென்னலோடும். (கடு)

தனிவருபுலவர்நீவிர்தண்டமிழாலவாயெங்
கனிவருகருணைமூர்த்திகனகழலிறைஞ்சல்வேண்டு
மினிவருகென்னநீரேயெங்களுக்களவில்கோடி
துனிவருவினைகடீர்க்குஞ்சுந்தரக்கடவுளென்றார். (கசு)

மறையினுறெழுகும்பன்மாண்கலைகள்போன்மாண்டகேள்வித்
துறையினுறெழுகுஞ்சான்றோர்சூழமீண்டேகிக்கூடற்
கறையினர்கண்டத்தாரைப்பணிவித்துக்கரந்தாரொற்றைப்
பிறையினர்மகுடந்தோற்றுதறிஞராய்வந்தபெம்மான். (கஎ)

விம்மிதமடைந்துசான்றோர்விண்ணிழிவிமானமேய
செம்மலேவேறுவேறுசெய்யுளாற்பரவியேத்திக்
கைகம்மலியுரியினர்தங்காறெழுதிறைஞ்சிமீண்டு
கொய்ம்மலர்வாகைச்செவ்வேற்செழியனைக்குறுகிக்கண்டார். (கஅ)

மறமலிநேமிச்செங்கோன்மன்னவன்வந்தசான்றோ
ரறமலிகேள்விநோக்கியவைக்களக்கிழமைநோக்கித்
திறமலியொழுக்கநோக்கிச்சீரியர்போலுமென்னு
நிறைமலியுவகைபூத்தநெஞ்சினனிதனேச்செய்தான். (கக)

திங்களங்கண்ணிவேய்ந்தசெக்கரஞ்சடிலநாதன்
மங்கலம்பெருகுகோயில்வடகுடபுலத்தின்மாடோர்

(கஉ) புலம்-நாடு. (கச) சொற்பதம்-சொல்லும்பொருளும். (கடு) விஞ்சையர்-புலவர். (கசு) தூனி - தூண்பம். (கஎ) ஒற்றைப்பிறை - ஒருகலையினையுடையபிறை. (கஅ) விம்மிதம்-ஆச்சரியம். (கக) மறம்-வீரம்.

சங்கமண்டபமூண்டாக்கித்தகைமைசால்சிறப்புநல்கி
யங்கமர்ந்திருத்திரென்னவிருத்திஞனநிஞர்தம்மை. (உ0)

வண்டமிழ்நாவினர்க்குமன்னவன்வரிசைநல்கக்
கண்டளம்புழுங்கிமுன்னேப்புலவரக்கழகத்தோரை
மண்டினர்மூண்டுமூண்டுவாதுசெய்தாற்றன்முட்டிப்
பண்டையபுலனுந்தோற்றுப்படருழந்தெய்த்துப்போனர். (உக)

இனையர்போல்வந்துவந்துமறுபுலத்திருக்குங்கேள்வி
வினைஞருமதமேற்கொண்டுவிஞய்விஞவாதஞ்செய்து
மனவலியினேப்பவென்றுவைகுவோரொன்றைவேண்டிப்
புனையிழைபாகநீங்காப்புலவர்முனண்ணினரே. (உஉ)

மூந்துநூன்மொழிந்தார்தம்மைமுறைமையால்வணங்கியெம்மை
வந்துவந்தெவரும்வாதஞ்செய்கின்றூர்வரிசையாக
வந்தமிழ்புலமைதூக்கியளப்பதாயெம்மனோர்க்குத்
தந்தருள்செய்திசங்கப்பலகையொன்றென்றுதாழ்ந்தார். (உங)

பாடியபாணற்கன்றுவலியவேபலகையிட்டார்
பாடியபுலவர்வேண்டிப்பலகைதந்தருளார்கொல்லோ
பாடியபுலவராகும்படியொருபடிவங்கொண்டு
பாடியபுலவர்காணத்தோன்றினர்பலகையோடும். (உச)

சதுரமாயளவிரண்டுசாணதிப்பலகையம்ம
மதியினும்வாலிதாகுமந்திரவலியதாகு
மூதியதும்போல்வார்க்கெல்லாமுழுமவளர்ந்திருக்கைநல்கு
மிதுநுமக்களவுகோலாயிருக்குமென்றியம்பியீந்தார். (உடு)

நாமகளருளாய்வந்தநாவலர்தமக்குவெள்ளத்
தாமரையமளிதன்னேப்பலகையாத்தருவதென்னக்
காமனேமுனிந்தார்நல்லக்கைக்கொடுகளிறுதாங்கு
மாமணிக்கோயிறன்னவளேந்துதங்கழகம்புக்கார். (உசு)

நாறுபூந்தாமநாற்றிநறும்பனிதோய்ந்தசாந்தச்
சேறுவண்மலர்வண்கேசுசெழும்புகைதீபமாதி

(உ0) வடகுடபுலம் - தென்மேற்கு. (உக) முட்டி - தடையுற்று. புலனும் - அறிவும். (உஉ) மதமேற்கோடல் - தாங்கொண்டதை விடாமை. (உங) மூந்துநூல்-வேதம். (உச) வலியவே-தாமே. (உடு) வாலிது - தூய்மையானது. வெண்மையுமாம். மந்திரம் - தேவரகசியம். (உசு) நாவலர்தமக்குவெள்ளத்தாமரை-சரசுவதியின் அமிசமாய்.

வேறுபல்வகையாற்பூசைவிளைமுடித்திறைஞ்சிக்கீர
னேறிஞன்கபிலனெடுபரணனுமேறினனே. (உஎ)

இருங்கலைவல்லோரெல்லாமிம்முறையேறியேறி
யொருங்கினிதிருந்தார்யார்க்குமொத்திடங்கொடித்துகாதன்
றருஞ்சிறுபலகையொன்றேதன்னுரைசெய்வோர்க்கெல்லாஞ்
சுருங்கின்றகலங்காட்டித்தோன்றுநூல்போன்றதன்றே. (உஅ)

மேதகுசான்றோர்நூலின்விளைபொருள்விளங்கத்தம்மி
லேதுவுமெடுத்துக்காட்டுமெழுவகைமதமுங்கூறும்
போதவைதெளிந்தகிள்ளைபூவையேபுறம்புபோந்து
வாதுசெய்வார்கள்வந்தான்மறுத்துநேர்நிறுத்துமன்னே. (உக)

கலிவிருத்தம்.

ஆயவாறெண் புலவரு மாய்ந்துணர்
பாயகேள்விப் பயன்பெற மாட்சியாற்
றூயபாட லெடுங்கினர் செய்துகொண்
டேயவாறிருந் தாரந்த வெல்லையாய். (ஈ0)

பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தொன்றியே
தலைமயங்கிக் கிடந்தவத் தன்மையால். (ஈக)

வேறுபாடறி யாது வியந்துநீர்
கூறுபாட லிதுவென்றுங் கோதிலென்
றேறுபாட லிதுவென்றுஞ் செஞ்சவே
மாறுபாடுகொண் டார்சங்க வாணரே. (ஈஉ)

மருளுமாறு மயக்கற வான் பொருட்
டெருளுமாறுஞ் செயவல்ல கள்வர் சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்மு
னருளுநா வலராய் வந்து தோன்றினர். (ஈங)

(உஎ) தாமம் - மாலை. (உஅ) அகலம் - உரை, விரிவு. (உக) ஏது - காரணம். காட்டு - உதாரணம். (ஈ0) பாய - விரிந்த. (ஈக) ஆயவல் - பாடல். மாண்பொருள்மலருஞ்செல்வம் - மாட்சிமைப்பட்ட உரைவிரிகின்றசெல்வம். (ஈஉ) செஞ்சவே - முறையே. (ஈங) தெருளுமாறு - தெளியும்வண்ணம்.

வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தையாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்தயாப்பைக் கொணர்கெனப் பாவல
ரெந்தை யீங்கிவை யென்று முன்னிட்டனர். (ஈச)

தூயசொல்லின் பொருளின் ரூடர் ச்சியு
மாய நாவல ரவ்வவர் தம்முது
வாயபாடல் வகை தெரிந் தவ்வவர்க்
கேயவே யெடுத் தீந்தன ரென்பவே. (ஈடு)

வாங்கு சங்கப் புலவர் மனங் களித்
தீங்கு நீரெம ரோடு மொருத்தரா
யோங்கி வாழ்திரென் ரூல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொற் றவிசிலிருத் தினர். (ஈசு)

பொன்னின் பீடிகை யென்னும் பொன்னரமேற்
றுன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னினர்நடு நாயக மாமணி
யென்ன வீற்றிருந் தார்மது ரேசரே. (ஈஎ)

நதியணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்ம ரென்னப் படும்புல வோரெலா
முதியவான் றமிழ் பின்னு முறைமுறை
மதிவிளங்கத் தொடுத்தவண் வாழுநாள். (ஈஅ)

கலிநிலைத்துறை.

வங்கியசேகரன்வங்கியசூடாமணிதன்னைப்
பொங்கியதேசார்முடிபுனைவித்துப்புவிநல்கி
யிங்கியல்பாசவினைப்பகைசாயவிருந்தாங்கே
சங்கியல்வார்குழையானடியொன்றியசார்புற்றான். (ஈக)

சங்கப்பலகைதந்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுo - க்கு திருவிருத்தம் - உசஈஉ.

(ஈச) பந்தம்-தலை. (ஈடு) முதுவாய்-பழம்பொருளினை யுடைய வாய். (ஈசு) எமரோடும்-எங்களவர்களோடும். (ஈஎ) பொன்னரம் - பொற்பதக்கம். (ஈஅ) முதிய - புராதனமான. (ஈக) இங்கியல்-இவ்விடத்திலிற் பொருந்திய.

ஐம்பத்திரண்டாவது,

தருமிக்குப்பொற்கிழியளித்த படலம்.

கலிநிலைத்துறை.

சொற்குவைதேரும்பாவலர்மேவத்தொகுபீட
மற்குவைகண்டத்தண்ணலளித்ததறைந்தேமாற்
றற்குவைதந்தாலுய்குவலென்னுந்தருமிக்குப்
பொற்குவைநல்கும்வண்ணமெடுத்துப்புகல்கிற்பாம். (க)

மன்னவர்மன்னன்வங்கியசூடாமணிமாறன்
றென்னவராகித்திகிரியுருட்டுந்தென்கூடன்
முன்னவன்னங்கண்டறியாதமுடிக்கேற்பப்
பன்மலர்நல்குநந்தனம்வைக்கும்பணிபூண்டான். (உ)

மாதவிபாதிரிதாதகிகூவிளமந்தாரந்
தாதவிழ்மல்லிகைமுல்லையிலஞ்சிதடங்கோங்கம
வீதவழ்கொன்றைகரந்தைசெழுங்கரவீரந்தண்
போதவிழ்ந்திசெருந்திகுருந்தம்புன்னகம. (ஙி)

முண்டகமென்கடிநீலமுதாரபலமுப்போது
மெண்டிசையுங்கமழும்படிநந்தனமெங்குந்தே
னுண்டிசைவண்டுபடிந்துமுரன்றிடவுண்டாக்கி
வண்டிமிர்சண்பகநந்தனமுந்தனிவைதாஞல். (ச)

பொய்த்திடுநுண்ணிடைமங்கலமங்கையர்பொன்பூண்டா
ரொத்தெழுசண்பகமொய்த்தவரும்பருடைந்தெங்கும்
வைத்திடுநந்தனவாசம்விழுங்கிமணங்கான்று
பைத்தமலர்ந்தனகண்டுமெகிழ்ந்துபரிதேரான். (ஞ)

செருக்கியவண்டுவிழாமலர்கொய்துதெரிந்தாய்ந்து
நெருக்கியவிண்டைகிரைத்தொடைதொங்கலெடுத்தாம
மருக்கிளர்கண்ணிதொடுத்தணிவித்துவணங்காரூ
கருக்கியகண்ணுதலார்திருமேனிகவின்செய்தான். (சு)

(க) தற்கு - தனக்கு. (உ)நந்தனம் - பூந்தோட்டம். (ங) மாதவி-குருக்கத்தி. தாதகி - ஆத்தி. இலஞ்சி - மகிழ். வீ - வண்டு. கரவீரம் - அலரி; கஸ்தூரிப்பட்டையென்ப. (ச) இமிர்-மொய்கின்ற. (ஞ) நந்தனவாசம் - எ-து. மற்றையமலர்களையுடைய நந்தவனங்களின்பலமலர்வாசனைகளை.விழுங்கி-அடக்கி.(சு)வண்டுவிழாமல்சம்பகம்.

அன்னவியன்பொழின்மாமதுரேசரடித்தாழ்வோன்
பொன்னவிர்சண்பகமாலபுனைந்தபுதுக்கோலந்
தன்னேவியந்திவர்சண்பகசுந்தரர்தாமென்னு
முன்னரிறைஞ்சினனிம்பமணிந்தமுடித்தென்னன். (எ)

அன்னதொர்நாமம்பெற்றனரின்றுமணிக்கூடன்
முன்னவரந்தத்தாமமவர்க்குமுடிக்கேற்று
மின்னதொர்நீராற்சண்பகமாறனென்றேபேர்
மன்னிவிளங்கினன்வங்கியசூடாமணிதானும். (அ)

சண்பகமாறன்சண்பகசுந்தரர்தம்பாடே
நண்பகமாரூரன்பணிசெய்யுநன்னுளிற்
பண்பகர்சொல்லார்தம்புடைமாரன்படுபோர்மூண்
டெண்பகவெய்வானுகியவந்தன்றிளவேனில். (கூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மனிதர்வெங்கோடைதீர்க்கும்வசந்தமென்காலும்வேறு
தனிதவிரிளங்கால்வேண்டுஞ்சோலையுஞ்சோலைவேண்டும்
புனிதநீர்த்தடமும்வேறுபுதுமலரோடைவேண்டும்
பனிதருமதியும்வேறுபான்மதிவேண்டுங்காலம். (கo)

அண்டவான்றருமேற்சீறிச்சிவந்தெழுந்தாங்குத்தேமா
தண்டளிரீன்றுவானந்தைவரநிவந்தகாசு
கொண்டிடையழுத்திச்செய்தகுழையணிமகளிர்போல
வண்டிறைகொள்ளப்பூத்தமலர்ந்தனசெருந்தியெல்லாம். (கக)

செங்கதிர்மேனியான்போலவிழ்ந்தனசெழும்பலாச
மங்குலூர்செல்வன்போலமலர்ந்தனகாஞ்சிதிங்கட்
புங்கவன்போலப்பூத்தபூஞ்சினைமரவஞ்செங்கை
யங்கதிராழியான்போலலர்ந்தனவிரிந்தகாயா. (கஉ)

தாகிழித்தெழுநீர்வைகைத்தடங்கரையெக்கரல்கு
லரவமேகலைசூழ்ந்தென்னவலர்ந்துதாதுகுப்பஞாழன்
மாகதந்தழைத்துவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துவாங்குந்
திரைகடற்பவளக்காடுசெய்வனகண்ணிப்புன்னை. (கங)

(எ) வியன் - பெரிய. (அ)முன்னவர் - தலைவர். அவர் - சோமசுந்தரர். (கூ) எண்பக - நினைவுவேறுபட. (கo) வசந்தமென்கால் - வசந்தகாலத்துக்குரிய மெல்லியகாற்று. அதுதென்றல். (கக)தைவதடவ. (கஉ) பலாசம் - புரசு. மரவம்-ஒருமரம்.ஆழியான்-அரி. எக்கர் - திடர். அரவம் - ஒலி.

ஊடினர்போலவெம்பியிலையுதிர்ந்துயிரன்னகைக்
கூடினர்போலவெங்குங்குழைவரத்தழைத்துநீங்கி
வாடினர்போலக்கண்ணீர்வாரமெய்பசந்துமைய
னீடினரலர்போற்பூத்துநெருங்கினமரங்களெல்லாம். (கச)

விழைதருகாதலார்தாமெலிவுறமெலிந்துநெஞ்சங்
குழைவுறக்குழைந்துநிற்குங்கோதிலாக்கற்பினர்போன்
மழையருங்கோடைதீப்பமரந்தலைவாடவாடித்
தழைவுறத்தழைத்துநின்றதழீஇயபைங்கொடிகளெல்லாம். (கடு)

சேட்டிகைத்தென்காறள்ளத்தெண்மதுச்சிதறத்தும்பி
நீட்டிசைமுரலச்சாயாநின்றுபூங்கொம்பராட
ஞட்டியப்புலவனுட்டநகைமுகம்வெயர்வைசிந்தப்
பாட்டிசைத்தாடாநின்றபாவைமார்போன்றவன்றே. (கசு)

மலர்ந்தசெவ்வந்திப்போதும்வகுளமுமுதிர்ந்துவாடி
யுலர்ந்துமொய்த்தளிதேனக்கக்கிடப்பனவுள்ளமிக்க
குலந்தருநல்லோர்செல்வங்குன்றினுந்தம்பாலில்லென்
றலர்ந்தவர்க்குயிரைமாறியாயினுங்கொடுப்பரன்றே. (கஎ)

நாறியதண்ணந்தேமாநறுந்தளிர்கோதிக்கூவி
யூறியகாமர்ப்பேட்டையுருக்குவகுயின்மென்சேவல்
வீறியசெங்கோல்வேந்தன்வெளிப்படத்தேயங்காவன்
மாறியவேந்தன்போலவொடுங்கியமயில்களெல்லாம். (கஅ)

பொங்கரினுழைந்துவாவிபுகுந்துபங்கயந்துழாவிப்
பைங்கடிமயிலேமுல்லைமல்லிகைப்பந்தர்தாவிக்
கொங்கலர்மணங்கூட்டுண்டுகுளிர்ந்துமெல்லென்றுதென்ற
லங்கங்கேகலகடேருமறிவன்போலியங்குமன்றே. (கஙு)

தாமரைகளாஞ்சிதாங்கத்தண்குயின்முழவமேங்க
மாமருதமருங்கிள்ளைமங்கலமியம்பத்தும்பி
காமரமிசைப்பமுள்வாய்க்கைதைவாளெடுப்பவேனிற்
சோமகன்மகுடஞ்சூடியிருப்பதக்குளிர்பூஞ்சோலை. (உ0)

கலையினுணிறைந்தவிந்துகாந்தமண்டபத்திற்செய்த
மலையினுமெழுதுமாடமருங்கினுநெருங்குசோலைத்

(கச) ஊடினர் - பிணங்கினர். (கடு) குழைவுற - மனமிளக (கசு) திகை-திசை. (கஎ) அலம் - தன்பம். (கஅ) நாறிய - தளிர்த்த. (கஙு) பொங்கர் - சோலை. (உ0) காமரம் - ஒருபண்.

தலையினுங்கமலவாவித்தடத்தினுந்தண்முத்தார
மூலையினுமன்றிக்கோடைமுடிவிடங்காணுர்மைந்தர். (உக)

நிலந்தருதிருவினுன்றநிழன்மணிமாடக்கூடல்
வலந்தருதடந்தோண்மைந்தர்வானமும்வீழும்போக
நலந்தருமகளிரோடுநாகநாடவர்தஞ்செல்வப்
பொலந்தருவனையகாட்சிப்பூம்பொழினுகர்வான்போவார். (உஉ)

மேற்படி வேறு.

மாத்தாண்மதமானெருத்தின்மடங்கலெனச்செல்வாரும்
பூத்தாரொலிவாம்பரிமேற்புகர்மாவெனப்போவாரும்
பாத்தார்பரிதியெனவாம்பரித்தேருகைத்தூர்வாருந்
தேத்தாருளர்வண்டலம்பச்சிலம்பினடக்கின்ருரும். (உங)

நீலப்பிடிமேற்பிடிபோனெறிக்கொள்வாருந்தாள
மாலைச்சிவிகைமிசைவெண்மலராளெனச்செல்வாரு
மாலைக்கரும்பன்றுணைபோலளித்தார்ப்பரியூர்வாருங்
கோலத்தடக்கைபற்றிக்கொழுநருடல்போவாரும். (உச)

சுருப்புக்கமழ்தேங்கண்ணித்தொடுபைங்கழலாடவரு
கருப்புச்சிலைமன்னவஞற்கருவிப்படையன்னவரும்
விருப்புற்றெறிநீர்வைகையெள்ளாத்தாளந்தெள்ளிப்
பொருப்பிற்குவிக்கும்புனம்புறஞ்சூழ்சோலைபுகுவார். (உரு)

கூந்தற்பிடியும்பரியுமூர்வார்கொழுநர்தடந்தோ
ளேந்தற்சயமாதென்னத்தழுவாவிழிந்துபொழில்வாய்ப்
பூந்தொத்தலர்பொற்கொடிதாதுகுமாறென்னப்புனைந்த
சாந்தக்கலையையுகப்போய்வனமங்கையர்போற்சார்ந்தார். (உசு)

ஏமாசலமென்முலையார்நடையோவியமேயென்னப்
பூமாதவிசேர்வாரும்புன்னைநிழல்சேர்வாருந்
தேமாநிழல்சேர்வாருஞ்செருந்திநிழல்சேர்வாருங்
காமாயுதசாலைகள்போற்கைதைநிழல்சேர்வாரும். (உஎ)

கோடும்பிறைவாணுதலார்குழலேக்கருவிக்காரென்
ருேடுந்தோகையவர்கண்ணேக்கிக்கணையென்றஞ்சி

(உக) செய்தமலை - கட்டுமலை. (உஉ) விழும் - விரும்பும். (உங) எருத்து - பிடரி. (உச) சிவிகை - பல்லக்கு. கரும்பன் - மன்மதன். துணை - மனைவி. (உரு) படையன்னவர் - பெண்கள். (உசு) கூந்தற்பிடி. புறமயிரினையுடையபெண்யானை.(உஎ)ஏமாசலம் - பொன் மலை.

யோடுங்கொடியினன்னருருமாந்தளிரென்றயில்வா
ளுடுங்குயிலன்னவர்பண்ணிசைகேட்டொதுங்கிநாணும். (உஅ)

நீடுந்தரங்கமிரங்குநிறைநீர்நிலையேயன்றிப்
பாடுஞ்சுரும்புண்கழுநீர்பைந்தாட்குமுதம்பதுமங்
கோடும்பூத்தவென்னக்கொடியோரிடையார்குழையுந்
தோடுங்கிடந்தவதனத்தொகையாற்பொலிவசோலை. (உக)

பிடிகளென்னநடந்தாருடன்போய்க்கொழுநர்பெருந்தண்
கொடிகண்மிடைந்தவில்லிலியக்கர்போலக்குறுகிக்
கடிகொள்பனிநீர்தெளித்துவேடைதணித்துங்கன்று
மடிகள்பிடித்துஞ்சேடியவர்கைக்குதவியாவார். (ஙo)

மைவார்தடங்கண்மடவார்வளைப்பார்கொம்பின்மலரைக்
கொய்வார்குமிழ்மோந்துயிர்ப்பார்குழையுஞ்செவியுங்குழலும்
பெய்வார்மகிழ்ச்சிசெய்வார்போ்ராமையல்கூர
வெய்வார்கணைபோற்றைப்பக்கொழுநர்மார்பத்தெறிவார். (ஙக)

முத்தேர்நகையார்வளைப்பமுகைவிண்டலர்பூங்கொம்பர்ப்
புத்தேன்வண்டும்பெடையும்புலம்பிக்குழலிற்புகுந்து
தெத்தேயெனப்பாண்செய்துநீந்தேனருந்துந்துணையோ
டொத்தேழிசைபாடிக்களுண்ணும்பாணரொத்தே. (ஙஉ)

மேற்படி வேறு.

இம்பர்வீடளிக்குந்தெய்வமகளிரேயென்பார்கூற்றம்
வம்பலமெய்யேபோலும்வளைக்கையார்வளைப்பத்தாழ்ந்து
கம்பமுற்றடிப்பூச்சிந்திமலர்முகங்கண்ணீர்சோரக்
கொம்பரும்பணிந்ததென்ரூலுலகியல்கூறற்பாற்ரே. (ஙங)

மைக்கணிளாருத்தியெட்டாநிமிர்கொம்பைவளைக்குந்தோறுங்
கைக்குநேர்படாமைவாடுங்கடிமலர்க்கொடிபோனிற்பத்
தைக்கும்பூங்கணைவேளன்ரூலெரூமகன்றலைப்பட்டென்னை
யெய்க்கின்ரூய்தோண்மேலேறிப்பறியெனவேந்திநின்ரூன். (ஙச)

தையலாளொருத்தியெட்டாமலர்க்கொம்பைத்தளிர்க்கைநீட்டி
யையநுண்மருங்குலேவவருந்தலுமாற்ரூக்கேள்வ

(உஅ) கருவிக்கார் - சூன்முற்றியமேகம். (உக) தரங்கம்-அலை. கோடு - பூங்கொம்பு. (ஙo) கடி-வாசனை. (ஙக) குமிழி-குமிழலரனை யதாகி. (ஙஉ) முத்தேர்-முத்துப்போன்ற அழகினையுடைய. (ஙங) வம்பல - புதுமையன்று. (ஙச) வேள் - காமன்.

ஞெய்யெனவிதுவுமென்னேயூடியமகளிரேயோ
கொய்யெனவளைத்துநின்முன்கண்முத்தங்கொழிப்பநின்றாள்.(ஈடு)

மைக்குழலொருத்திகாதில்வட்டப்பொன்னோலையூடே
திக்கயமனையான்கொய்தசெருந்திப்பூச்செருகிநோக்கி
யிக்குழையழகிதென்றுனிடுமெங்கைக்கிதியென்ன
வக்குழையோடும்வீசியன்பனுக்கலக்கண்செய்தாள். (ஈசு)

மயிலிளம்பெடையன்னாளோர்மாதர்மாங்குடம்பைசெல்லுங்
குயிலிளம்பெடைதன்னைவிச்சேவலைக்கூவநோக்கி
யயிலிளங்களிறன்னானைக்கடைக்கணித்தளியுந்தேனும்
பயிலிளஞ்சோலைமாடோர்மாதவிப்பந்தர்சேர்ந்தாள். (ஈஎ)

பாசிழையொருத்தியாற்றுப்புலவியாள்பைந்தாரான்முன்
பூசகில்வாசங்காலிற்போக்கியும்புனைபூண்காஞ்சி
யோசையைச்செவியிலுய்த்துங்கலவியினுருவந்தீட்டுந்
தூசினையுடுத்தும்போர்த்துந்தூதுவிட்டவள்போனின்றாள். (ஈஅ)

வாய்ந்தநாண்மலர்கொய்தீவான்மெய்யிலம்மலர்த்தேந்தாது
காந்தமான்மதம்போற்சிந்திக்கிடப்பவோர்தையல்யாரைத்
தோய்ந்தசாய்ந்தென்றுளுள்ளத்துன்னையுஞ்சுமந்துகொய்த
வாய்ந்தசண்பகத்தாதென்றுனெய்சொரியழலினின்றாள். (ஈக)

பிணியவிழ்கோதையாளோர்பேதைதன்பதிதன்னூட
றணியவந்தடியில்வீழத்தன்னிழலனையான்சென்னி
மணியிடைக்கண்டுகங்கைமணாளனேயொப்பீரெம்மைப்
பணிவதென்னென்றுநக்குப்பரிவுமேற்பரிவுசெய்தாள். (சஅ)

மதுகைவாளொருவனங்கோர்மங்கைதன்வடிவைநோக்கிப்
பதுமமேயடிகைகாந்தள்பயோதரங்கோங்குகாவிப்
புதுமலர்விழியாயாம்பற்போதுநும்மூரலெப்போ
தந்தனைவாய்திறந்துகாட்டிப்போமினென்றடித்துநின்றான். (சக)

விடைத்தனியேறன்னாளோர்விடலையோர்வேற்கணுண்முன்
கிடைத்தநும்மிடத்தென்னைஞ்சங்கெட்டுவந்தொளித்தல்குற்
றடத்திடையொளித்தீரேயோதனத்திடையொளித்தீரோபூம்
படத்தினைத்திறந்துகாட்டிப்போகெனப்பற்றிச்சென்றான். (சஉ)

(ஈகி) ஒல்லென - விரைந்து. (ஈசு) மைக்குழல் - கருங்கூந்தல். (ஈஎ) மாங்குடம்பை - மாமரத்திலுள்ளகூடு. (ஈஅ) புலவி-காமப்பிணக்கு. (ஈக) நாண்மலர் - அன்றலர்ந்தபூ. (சஅ) பிணி - கட்டு. (சக) மதுகை - வெற்றி. (சஉ) படம் - ஆடை.

மாந்தளிரடியார்சாய்ப்பவளைந்தபூஞ்சினைவண்டன்னார்
கூந்தலிற்கிடந்தசெம்மற்கோதைமேல்வீழ்ந்தகற்பி
னேந்திழையவரைநீத்துப்பலர்நுகர்ந்தெச்சிலாக்கும்
பூந்தொடியவரைத்துய்க்கும்பேதையர்போன்றதன்றே. (சஙூ)

கலிவிருத்தம்.

புல்லி மைந்தர் பொருள்கவர்ந்தா ரென
வல்லி யன்ன மடந்தையர் கொய்தலி
னல்லிகாண்மல ரற்றபின் கைப்பொரு
ளில்லி யென்ன வியோத்தன காவெலாம். (சச)

மையுண் கண்ணியர் மைந்த ரொடம்மலர்
கொய்யுஞ் செல்வ நுகர்ந்து கொழுங்கணு
மெய்யுந் தோயிற் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை திளைப்பச் சென்றுரோ. (சஙி)

அன்ன மன்னவ ராடுங் கயந்தலை
நன்னர்நீல நளினங் குமுத மென்
றின்னவன்றி யெழின் மூல்லை சண்பகம்
பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றதே. (சசு)

கலிநிலைத்துறை.

குவளைவேரியர் கயந்தலைகுறுகுமுன்கயலு
மரவும்யாமையுமலவனுமன்னமுமகன்ற
பருவரால்களுமிரிந்தனபகைஞர்மேலிட்டு
வருவரேலெதிர்நிற்பரோவலியிழந்தவரே. (சஎ)

பண்ணெனுஞ்சொலார்குடைதொறும்பன்மலர்வீழ்ந்த
தண்ணெனுந்திரையலைதொறுநிரைநிரைதாக்கல்
கண்ணுநீலமுமுகங்களுங்கமலமும்வாயும்
வண்ணவாம்பலுந்தத்தமின்மலைவனவனைய. (சஅ)

கூழைபாசியின்விரிந்திடமலர்ந்துநீர்குடையு
மாழையுண்கணுர்கொங்கையுமுகங்களுமருங்கர்
சூழரும்பொடுமலர்ந்தசெந்தாமரைத்தொகுதி
பாழ்த்தரங்கநீரிடைக்கிடந்தலைவனவனைய. (சஆ)

(சஙூ) சினை - கிளை. செம்மல் - பழம்பூ. (சச) புல்லிமைந்தர் பொருள்கவர்ந்தார் - புணர்ந்து இளையோர் கைப்பொருளை அபகரிக்கும் பொருட்பெண்டிர். (சஙி) நுகர்ந்து-அநுபவித்து. (சசு) கயந்தலை-கயத்தினிடத்து. (சஎ) அலவனும் - நண்டும். (சஅ) மலைவன - போர்புரிவன. (சஆ)கூழை - கூந்தல்.

தூயநீர்குடைந்தேறுந்தன்றுணைவியைத்துணைவன்
வாயுங்கண்களும்வேறுற்றவண்ணங்கண்டென்க
ணேயவின்னுயிரனையவளெங்குளாளென்றுன்
காயும்வேற்கணுள்முலைகுளிப்பாட்டினுள்கண்ணீர். (௳0)

மங்கைநல்லவளொருத்திநீராடுவான்மகிழ்ந
னங்கைபற்றினளேகுவாளவன்குடைந்தேறும்
பங்கயக்கணுளொருத்தியைப்பார்த்தனன்சிசி
யெங்கையெச்சினீராடலேனெனக்கரைகின்றுள். (௳க)

வனைந்தபைங்கழலான்புனலாடலின்மார்பி
னனைந்தகுங்குமத்தலையெறிகளினமொட்டழுந்தப்
புனைந்தகொங்கையால்வடுப்படப்பொறித்தவள்யாரென்
றினைந்தழுங்கிஞணெய்சொரியெரியெனவொருத்தி. (௳உ)

வீழ்ந்தகாதலன்செய்ததீங்காகியவேலாற்
போழ்ந்தநெஞ்சினுள்புலவிநோய்பொருளவன்காண
வாழ்ந்தநீரிடையழுந்துவாள்போன்றயர்ந்தயலே
தாழ்ந்தவன்னத்தைநோக்கிக்கைதாவெனவிரந்தாள். (௳ங)

கரும்புபோன்மொழியாளொருகாரிகைவதனஞ்
சுரும்புசூழ்கமலங்களுட்கமலமாய்த்தோன்ற
விரும்புகாதலனேயுற்றுமெலிந்தனன்மெல்ல
வரும்புமுல்லைகண்டையத்தினீங்கிச்சென்றணைந்தான். (௳ச)

களித்தகாதலன்மொக்குள்வாய்த்தன்னிழல்கண்டு
தெளித்துவாணகைசெய்யமாற்றுளென்றுசீறித்
தளிர்க்கைநீட்டினள்கண்டிலடடவினள்சலத்து
ளொளித்தியோவெனுவுதைத்தனள்பேதைமாதொருத்தி. (௳ஞ)

நாறுசுண்ணமென்கலவையுநானமுந்தம்மின்
மாறிவீசிநின்றுவோர்மாலைதாழகலத்
தூறுபாடறவந்தரத்தளிகவர்ந்துண்ப
வாறுசெல்பவர்பொருள்வெனவுமரட்டரேபோல. (௳சு)

கொய்யுநீலமுங்கமலமுங்கொண்டுகொண்டனங்க
னெய்யும்வாளியினெறிவராலெறிந்திமெலரைக்

(௳0) வண்ணம் - தன்மை. (௳க) எங்கை-எனது தங்கை. (௳உ) பொறித்தவள் - அணைத்தலைச்செய்தவள். (௳ங) கைதா-கைகொடு. (௳ச) காரிகை-பெண். (௳ஞ) மொக்குள்-நீர்க்குமிழி. (௳சு) ஊறுபாடுற-படுதலின்மையாக.

கையிலுற்புடைத்தெதிர்ந்தவர்கதிர்முகம்படக்கண்
டையுவாணைகைசெய்தகமிகிழ்ச்சியுளாழ்வார். (நிஎ)

வாசமென்பனிநீரொடுசெண்ணமும்வாரி
வீசுவாரிளம்பிடியொடுவேழமாநிரைபோற்
காசுலாந்தொடிவில்லிடக்கைகளாலள்ளிப்
பூசுசாந்தவையழிந்திடப்புனிதநீரிறைப்பார். (நிஅ)

அப்பெரும்புனற்றடங்குடைந்தாடுவாராயத்
தொப்பருந்தனியொருமகளொருவன்றன்முகத்துத்
துப்பைவென்றசெந்துவரிதழ்செய்யவாய்த்தூநீர்
கொப்பளித்தனளாம்பலந்தேனெனக்குடித்தான். (நிக)

ஆழமவ்விடைச்செல்லலேநில்லெனவடித்தோர்
வேழமன்னவன்விலக்குவான்போலொருவேற்க
ணேழைதன்னைக்கையால்வளைத்தேந்திவண்டறைதார்
சூழுமார்பணைத்திரதிதோடோய்ந்தவளெத்தான். (நிo)

மாசிலுனமுஞ்சூடியமாலையுமெய்யிற்
பூசுசாந்தமுமாரமும்பொய்கைக்குக்கொடுத்து
வாசமெய்யினிலம்புயவாசமுமயங்க
வாசைமைந்தரோடிளையவரகன்கரையடைவார். (நிக)

தையலார்சிலர்நனைந்தநுண்டானையுட்பொதிந்த
மெய்யெலாம்வெளிப்படக்கரையேறுவான்வெள்கி
யையதாபொலந்துகிலெனவன்பரைக்கூய்க்கண்
செய்யமாயனைக்கேட்குமாய்ச்சிறுமியரொத்தார். (நிஉ)

உலத்தைவென்றதோளாடவருச்சிமேற்பொறித்த
வலத்தகத்தொடுசுங்குமமளைந்துசெம்புனலாய்
மலர்த்தடங்குடைந்தவர்க்குநீராசனவட்டக்
கலத்தையொத்தனசுற்றகின்றுரொத்தகடிக்கா. (நிங)

பட்டும்பன்னிறக்கலிங்கமும்பன்மணிக்கலனுங்
கொட்டுஞ்சாந்தமுநானமுஞ்சுங்குமச்சேறுங்
கட்டுந்தாமமுந்தமதுகட்டழகெலாங்கவர
மட்டுண்கோதையராடவர்மனமெலாங்கவர்ந்தார். (நிச)

(நிஎ) அணங்கன்; அங்கமில்லாதவன்; அவன்மன்மதன். (நிஅ)காசுலாம்-பொன்பொருந்திய. (நிக) துப்பு-பவளம். துவர்-செம்மை. (நிo) வேழமன்னவன் - யானையனையான். (நிக) மைந்தர்-புருடர். (நிஉ) நுண்டானை - மெல்லியவாடை. (நிங) அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. (நிச) கலிங்கம் - சேலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காவியுங்கமலப்போதுங்கள்ளொழுகாம்பற்போது
மாவியுட்பூத்தபோலவாடியுட்பூப்பநோக்கி
யேவிரண்டன்னகண்ணுலணங்கனேயேவல்கொள்ளும்
பூவிரிபொலங்கொம்பன்னூர்புதுமதுநுகரப்புக்கார். (சுடு)

பொன்னினும்வெள்ளியாலும்பளிங்கினும்புலவன்செய்த
ரன்னிறக்கலத்திற்கூர்வாணட்டெனவாக்கிச்சேடி
மின்னைநேரளித்தேதெறற்சிறுதுளிவிரலிற்றெள்ளித்
துன்னிவீழ்களிவண்டோச்சித்தொண்டையங்கனிவாய்வைப்பார்.

வள்ளத்துவாள்போல்வாக்குமதுக்குடந்தன்பாற்பெய்த
கொள்ளத்தெண்மதுவைக்கொள்ளைகொளவந்தவள்ளமீதென்
றுள்ளத்துவெகுண்டுவைவாளுன்றிமார்பிடப்பதொத்த
கள்ளசூழ்காளைவண்டுசெருச்செயல்காண்பவொத்த. (சுஎ)

தணியலுண்டுள்ளஞ்சோருமொருமகடணியலுண்பான்
பிணியவிழ்கோதையாளோர்பெண்மகள்கலத்தில்வாக்குந்
துணிமதுத்தாரைதன்னேவாளெனத்துணிந்துபேதாய்
திணிகதிர்வாளால்வள்ளஞ்சிதைத்தியோவென்றுநக்காள். (சுஅ)

மலர்தொறுஞ்சிறுதேனக்கித்திரிவண்டுமடவார்தங்கைத்
தலனெடுத்தோச்சவோடாதழீஇத்தடஞ்சாடிமொய்ப்ப
விலமெனப்பல்லோர்மாட்டுமிரந்திரந்தின்மைநீங்கா
நலமரும்வறியோர்வைத்தநிதிகண்டாலகல்வரேயோ. (சுக)

உண்டவளொருத்திகள்வாயுதிக்குந்தன்முகமுங்கண்ணுங்
கண்டுதாமரைகள்வேலைமுளைத்தகள்ளாயா
மொண்டுணப்பேதைத்தும்பியம்மதுமுளரிவார்தே
னுண்டுளிசெறிவதென்னுகொடித்துக்கைபுடைத்துநக்காள். (எ0)

மங்கையாளொருத்திதானுண்டெஞ்சியமதுவுட்டோன்றுந்
திங்களோநோக்கியென்னேப்பிரிவின்கட்டீயாய்ச்சுட்டா
யிங்குவந்தகப்பட்டாயேயினிவிடேன்கிடத்தியென்னு
வங்கொருவள்ளங்கொண்டுசேமித்தாளருந்தல்செய்யாள். (எக)

(சுடு) ஆவி-குளம். (சுசு) புலவன்-கம்மியன். தேறல்-கள். தொண்டை-கோவை. (சுஎ) வள்ளத்து - கிண்ணத்து. (சுஅ) தணியல்-கள். (சுக) சாடி - கள்வைக்கு மொருவகைப்பாத்திரம். (எ0) வேலை - கடல். நொடித்து - உரைத்து. (எக) மிஞ்சிய - மிகுந்த.

வெவ்வியநறவமுண்டவிளங்கிழையொருத்திகையிற்
கௌவியவாடிதன்னிற்கருங்கயனெடுங்கட்சேப்புங்
கொவ்வைவாய்விளர்ப்புநோக்கியென்னலங்கூட்டுண்டேகு
மௌவியமனத்தான்யாரென்றயர்கின்றுளையலாரெள்ள. (எஉ)

ஒருத்திகள்ளுண்கின்றுடன்னுருவமந்நறவுட்டோன்ற
வொருத்தியென்னுடன்வந்துண்பாள்காணெனவுண்டதோழி
யொருத்திவந்தென்செய்வாடன்னுருவமுநோக்கிப்பேதா
யொருத்தியோவிருவரென்றுளைச்சிலென்றுகுத்துநக்காள். (எஊ)

சாடியுணறவமுண்டாடன்னுருவேறுபாட்டை
யாடியுணைக்கிநாணுவல்லணுவெனைத்தான்கைக்கொண்
டோடினர்பிறருமுண்டோவுயிரன்னுன்வந்திங்கென்னைத்
தேடினென்செய்கேனென்னைத்தேடித்தாசேடியென்றுள். (எசு)

களித்தவளொருத்திகின்றவாடியுட்கணவன்றண்பி
னெளித்தவனுருவுந்தானுநேர்படவுருத்துநோக்கித்
தளித்தகண்ணீரளாகியேநிலாடோடோய்ந்தின்பங்
குளித்தனையிருத்தியோவென்றுதைத்தனள்கோபமூண்டாள். (எடு)

இளம்புளிந்தயிர்விராயவின்சுவைபொதிந்தசோறு
வளம்படவிருந்திணுமருந்துவார்வசந்தவீணை
களம்படுமெழாலிணுகைவிரனடத்திக்காம
னுளம்புகுந்தலைப்பவெண்ணெய்ப்பாவைபோலுருகிச்சோர்வார். ()

இவ்விளவேனிற்காலத்தின்னுயிர்த்துணைவியோடும்
செவ்வியசெங்கோணேமிச்செண்பகமாறணுஞ்ஞாள்
கைவினைவல்லோன்செய்தகதிர்விகொந்தக்குன்றில்
வெவ்வியவேடைநீப்பானிருந்தனன்வேறுவைகி. (எஎ)

மாந்தளிரீன்றுகோங்குவண்டளவரும்பித்தண்டேங்
காந்தள்செங்கமலமாம்பல்சண்பகங்கழுநீர்பூத்துச்
சாய்ந்தமென்கொடியுந்தானுந்தனியிடத்திருப்பாணேரே
யாய்ந்ததோர்நாற்றந்தோன்றவைசந்தவசந்தத்தென்றல். (எஅ)

வெவ்வியவேலான்வீசுமவாசமோந்தீதுவேறு
திவ்வியவாசமாகவிருந்ததுதென்றல்காவில்

(எஉ) நறவம் - கள். (எஊ) விளர்ப்பு - செம்மையிலாவெண்மை. (எசு) கைக்கொண்டு - அபகரித்து. (எடு) களித்தவள் - கட்குடித்தவள். (எசு) வசந்தவீணை - ஒருவீணைவிசேடம். (எஎ) கைவினை-சிற்பத்தொழில். (எஅ) தளவு-முல்லை. (எக) திவ்வியம்-மேன்மை.

வெளவியவாசமன்றுகாலுக்கும்வாசமில்லை
யெவ்வியல்வாசமேயோவிதுவெனவெண்ணங்கொள்வான். (எக)

திரும்பித்தன்றேவிதன்னேநோக்கிஞண்றேவியையம்பா
லிரும்பித்தைவாசமாகியிருந்ததுகண்டிவ்வாசஞ்
சுரும்பிற்குந்தெரியாதென்ஞச்சூழ்ந்திறும்பூதுகொண்டீ
தரும்பித்தைக்கியல்போசெய்கையோவெனவையங்கொண்டான்.

ஐயுறுகருத்தையாவராயினுமறிந்துபாடல்
செய்யுநரவர்க்கேயின்னவாயிரஞ்செம்பொன்னென்றக்
கையுறைவேலானீந்தபொற்கிழிகைக்கொண்டேகி
மெய்யுணர்புலவர்முன்ஞத்துக்கிஞர்வினைசெய்மாக்கள். (அக)

வங்கத்தார்பொருள்போல்வேறுவகையமைகேள்விநோக்கிச்
சங்கத்தாரெல்லாந்தம்மிற்றனித்தனிதேர்ந்துதேர்ந்து
தங்கத்தார்வேம்பனுள்ளஞ்சூழ்பொருடிழாவியுற்ற
பங்கத்தாராகியெய்த்துப்படருமனத்தராஞர். (அஉ)

கலிவிருத்தம்.

அந்த வேலையி லாதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முந்தை யாச்சிம முயலும் பெற்றியான்
றந்தை தாயிலான் தருமி யென்றுளான். (அங)

ஒருவ ஞன்முகத் தொருவன் மார்புறை
திருவ ஞடருந் தேவஞ லுரு
வருவநாலகன்ருனேத்தன்கலி
வெருவ நாடி முன்வீழ்ந்து வேண்டுவான். (அச)

தந்தை தாயிலேன் றனிய ஞகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல நீர்ப்பதற்
கெந்தையேயிது பதமென் றேத்தியே. (அடு)

நெடிய வேதநூ னிறைய வாகம
முடிய வோதிய முறையினிற் கெணும்
வடிவிலில்லற வாழ்க்கை யின்றி னின்
னடிய ருச்சனைக் கருக ஞவலேனே. (அசு)

(அo) அரும்பித்தை - அரியகூந்தல். (அக) கிழி - முடிப்பு. (அஉ) வங்கத்தார்-கப்பலில்பொருந்திய. (அங) மாணவன்-பிரமசாரி.(அச) கலி-வறுமை. (அடு) வதுவை-கல்யாணம். (அசு) முடிய-முற்றிலும்.

ஐய யாவையு மறிதியே கொலோ
வைகை நாடவன் மனக்கருத் துணர்ந்
தய்யவோர் கவியுரைத் தெனக் கருள்
செய்ய வேண்டு மென்றிரந்து செப்பினன். (அஎ)

தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கையின் றமிழ்
சொன் னலம்பெறச் சொல்லி நல்கினு
ரின்ன நீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினன். (அஅ)

பொற் றளிர்ச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல்கைக் கொண்டு தொன்னிதி
பெற் றெடுத்தவன் போன்று பீடிறக்
கற்ற நாவலர் கழக நண்ணினன். (அக)

கல்வி யாளர்தங் கையி னீட்டினன்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே
நல்லநல்ல வென்று வகை நண்ணினர். (கo)

அளக்கில் கேள்வியா ரரசன் மூன்புபோய்
விளக்கி யக்கவி விளம்பினர் கடன்
னுளக் கருத்துநே ரொத்தலாற் சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினன். (கக)

உணர்ந்தகேள்வி யாரிவரொ டொல்லை போய்
புணர்ந்த வாயிரம் பொன்னுமின் றமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்கவின் றென
மணந்த தாரினன் மகிழ்ந்து நல்கினன். (கஉ)

வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
வாய்ந்த பொற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்து கீரனில் லென விலக்கினன். (கங)

சூற்ற மிக்கவிக் கென்று கூறலுங்
கற்றி லாரெனெங் காலம் வெம்பசி

(அஎ) இரந்துசெப்பினன் - யாசித்துக்கேட்டான். (அஅ) மன்னர்-சோமசுந்தரக்கடவுள். (அக) பீடிற-பெருமைபொருந்த. (கo) வல்லை-விரைந்து. (கக) அளக்கில் - அளவிடுதற்கரிய. (கஉ) ஒல்லை-விரைவாக. (கங) விபுதர் - புலவர்.

யுற்றவன் கலத்துண்ணு மெல்லை கைப்
பற்ற வாடினுன் பண்பு பற்றினன். (கூச)

உலர்ந்த நெஞ்சுகொண் டொதுங்கி நாயக
னலந்தருங்கழ னண்ணி னனவன்
மலர்ந்த பாடல்கொண் டறிஞர் வைகிடத்
தலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே. (கூடு)

செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவ னென்னினீ
மையுள் கண்டவிவ் வழுவு பாடலைக்
கையுணல் கினுய் கதியி லேற்கெனு. (கூசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வறுமைநோய்பிணிப்பப்பன்னுள்வழிபடுமடியேனின்பாற்
பெறுபொருளிழந்தேனென்றுபேசிலேன்யார்க்குமேலாங்
கறைகெழுமிடற்றுரேய்நின்றனகவிக்குற்றஞ்சில்வாழ்நாட்சிற்
றறிவுடைப்புலவர்சொன்னுலாருனை மதிக்கவல்லார். (கூஎ)

எந்தையிவ்விகழ்ச்சிநின்ன தல்லதையெனக்கியாதென்னுச்
சிந்தைநோயுழந்துசைவசசிறுவனின் றிரங்கயார்க்கும்
பந்தமும்வீடும்வேதப்பனுவலும்பயனுமான
சுந்தரவிடங்கனங்கோர்புலவனுய்த்தோற்றஞ்செய்தான். (கூஅ)

கண்டிகைமதாணியாழிகதிர்முடிவயிரம்வேய்ந்த
ருண்டலங்குடிகொண்டாகத்தழகெலாங்கொள்ளைகொள்ளத்
தண்டமிழ்மூன்றும்வல்லோன்முனெனக்குறியிட்டாங்கே
புண்டரநுதலிற்பூத்துப்பொய்யிருள்கிழித்துத்தள்ள. (கூக)

விரிகதிர்ப்படாத்திற்போர்த்தமெய்ப்பையுளடங்கிப்பக்கத்
தெரிமணிக்கடகத்திண்டோளிளையவரடப்பையோடுங்
குருமணிக்களாஞ்சியம்பொற்கோடிகந்தாங்கமுத்தாற்
புரிமதிக்குடைக்கீழ்ப்பொற்காற்கவரிபால்புரண்டுதுள்ள. (க00)

சொல்வரம்பிகந்தபாதமென்பதுதோன்றவேத
நல்லபாதுகையாய்ச்சூடினவின்றனகற்றுப்பாட

(கூச) பண்பு - தன்மை. (கூடு) ஒதுங்கி-நடந்து. (கூசு) பையுள் - துன்பம். (கூஎ) பிணிப்ப - பந்திப்ப. (கூஅ) சைவச்சிறுவன்-ஆதிசைவப்பிராமணப்பிரமசாரி. (கூக) பொய்யிருள்-மலவிருள். (க00)அடப்பை - வெற்றிலைப்பை.

வல்லவர் மறையினுறு மனுமுதற்கலைபோற்பின்பு
செல்லநூலாய்ந்தோர்வைகுந்திருந்தவைக்களத்தைச்சேர்ந்தான். ()

ஆரவைகுறுகிநேர்நின்றங்கிருந்தவரைநோக்கி
யாரைநங்கவிக்குக்குற்றமியம்பினுரென்னுமுன்னங்
கீரனுஞ்சாதுநானேகிளத்தினேனென்றுன்னின்ற
சீரணிபுலவன்குற்றம்யாதெனத்தேராக்கீரன். கoஉ)

சொற்குற்றமின்றுவேறுபொருட்குற்றமென்றுன்றாய
பொற்குற்றவேணியண்ணல்பொருட்குற்றமென்னையென்றுன்
றற்குற்றம்வருவதோரான்புனைமலர்ச்சார்பாலன்றி
யற்குற்றகுழற்குநாற்றமில்லையெயென்றனையன். (கoஊ)

பங்கயமுகமென்கொங்கைப்பதுமினிகுழலோவென்ன
வங்கதுமனைத்தேயென்றுலவாயுடையான்றெய்வ
மங்கையர்குழலோவென்னவன்னதுமந்தாரத்தின்
கொங்கலரோந்துநாறுங்கொள்கையாற்செய்கைத்தென்றுன். ()

பரவிநீவழிபட்டேத்தும்பரஞ்சுடர்திருக்காளத்தி
யரவுநீர்ச்சடையார்பாகத்தமர்ந்தஞானப்பூங்கோதை
யிரவினீர்ங்குழலுமற்றேவெனவஃதுமற்றேயென்னு
வெருவிலான்சலமேமுற்றச்சாதித்தான்விளைவுநோக்கான். (கoஎ)

கற்றைவார்சடையானைற்றிக்கண்ணினைச்சிறிதேகாட்டப்
பற்றுவானின்னுமஞ்சானும்பரார்பதிபோலாக
முற்றுநீர்கண்ணுலுமொழிந்ததும்பாடல்குற்றங்
குற்றமேயென்றுன்றன்பாலாகியகுற்றந்தேரான் (கoஅ)

கலிநீலத்துறை.

தேய்ந்தநாண்மதிக்கண்ணியானுதல்விழிச்செந்தீப்
பாய்ந்தவெம்மையிற்பொருதுபொற்பங்கயத்தடத்து
ளாய்ந்தீரவலன்போய்விழுந்தாழ்ந்தனனவனைக்
காய்ந்தநாவலனிம்மெனத்திருவுருக்கரந்தான். (கoஎ).

தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுக - க்கு திருவிருத்தம் - உஙிசுக.

(கoக) மறையினுறு - வேதத்திற்கங்கமான சிட்சை யாதிய. (கoஉ) ஆரவை - நிறையவை. (கoஊ) பொற்குற்ற-பொன்போன்ற. (கoச) பதுமினி-பெண்டிரிலுயர்ந்த லிலக்கணமுடையாள். (கoடு) சலம் - சவிகருதியபொருளைததள்ளி விபரீதப்பொருள்கூறிக் குற்றஞ்சாதிப்பது. (கoசு) உம்பரர் - தேவர். (கoஎ) இம்மென - விரைந்து.

ஐம்பத்துழன்றவது,

கீரனைக்கரையேற்றிய படலம்.

கலிநிலைத்துறை.

மாரனைப்பொடிகண்டவனந்தணமைந்தனுக்
காரருற்கனகக்கிழியீந்ததறைந்தன
மேரனத்திரள்சூழ்மலரோடையிடத்தினுங்
கீரனைக்கரையேற்றியவாறுகிளத்துவாம். (க)

தாழ்ந்தவேணியனெற்றிமூளைத்ததழற்கணற்
போழ்ந்தநாவலனுடகபங்கயப்பொய்கைவாய்
வீழ்ந்தரும்படர்வேலையில்வீழ்ந்தனன்விம்முறச்
சூழ்ந்தநாவலர்கண்டுபொருதுளங்குவார். (உ)

என்றவேந்தனிலாக்குடியீட்டமுமின்கதிர்
கான்றநாயகமாமணிபோகியகண்டியு
மான்றஞானமிலாதவர்கல்வியுமானதே
சான்றகீரனிலாதவைகூடியசங்கமே. (ங)

ஐயசொற்பொருடன்வடிவானவராலவாய்
மைதழைத்தமிடற்றினர்தம்மொடும்வாதுதான்
செய்தவிப்பிழையோபெரிதெப்படிதீருமோ
யுய்வதற்புதமேயெனயாவருமுன்னினார். (ச)

எய்திவெள்ளிமலைபெயர்த்தானுமிறுத்ததன்
கையில்வீணைதொட்டின்னிசைபாடக்கனிந்தவன்
செய்தகிங்குபொறுத்ததுமன்றித்திண்டேரொடு
மொய்கொள்வாளுங்கொடுத்தனன்புண்ணியமூர்த்தியே. (ஞ)

யாவராலுமகற்றரிதிப்பிழையாவர்க்குந்
தேவராமவரேதிருவுள்ளந்திரும்பிஞற்
போவதேயிதுவேதுணியென்றுபுகன்றுபோய்ப்
பாவலோர்பரன்றாணிழலிற்பணிந்தேத்துவார். (ட)

திருத்தனேசரணஞ்சரணம்மறைச்செந்நிமே
னிருத்தனேசரணஞ்சரணங்கிறைவேதநூ

(க) எர் - அழகிய. (உ) மூளைத்த - அப்பொழுதுண்டாகிய. (ங) என்ற - தகுந்த. (ச) உய்வது - பிழைப்பது. (ஞ) இறுத்த - ஓடித் தெடுத்த. (ட) அகற்றரிது - நீக்கமுடியாது.

லருத்தனேசரணஞ்சரணந்திருவாலவா
யொருத்தனேசரணஞ்சரணங்களுனக்குநாம். (எ)

பாயுமால்விடைமேல்வருவோய்பல்லுயிர்க்கெலாந்
தாயுந்தந்தையுமாகுகின்றண்ணளிதாமரைக்
கேயுமாதவன்போனல்லதியவியற்றினூர்க்
காயுமின்பமுந்துன்பமுமாக்குவதாதலால். (அ)

அத்தகற்றசெருக்கினறிவழிகீரனின்
வித்தகக்கவியைப்பழுதென்றவிதண்டையான்
மத்தகக்கண்விழித்துவெதுப்பின்மலர்ந்தபொன்
முத்தகக்கமலத்திடைவீழமுகிக்குளய். (கு)

இருணிறைந்தமிடற்றடிகேளினியிப்பிழை
கருணைசெய்துபொறுத்தருளென்றுகபிலனும்
பரணனும்மூதலாகியபாவலர்யாவருஞ்
சரணமென்றுவிழுந்திரந்தாரடிசாரவே. (கo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அக்கீரவேலையாலமயின்றவெங்கருணைவள்ள
லிக்கீரமழலைத்தீஞ்சொலிறைவியோடெழுந்துபோந்து
நக்கீரன்கிடந்தசெம்பொனளினப்பூந்தடத்துஞாங்கர்ப்
புக்கீரமதுரத்தீஞ்சொற்புலவர்தங்குழாத்துணின்றான். (கக)

அனற்கணீலைக்கிளன்பின்னருட்கணீலைக்கவாழ்ந்த
புனற்கணேகிடந்தகீரன்பொறிபுலன்கரணமெல்லாங்
கனற்கணார்தமவேயாகக்கருணைமாகடலிலாழ்ந்து
வினைக்கணேயெதித்தயாக்கைவேறிலன்புருவமானான். (கஉ)

போதையாருலகமீன்றபுனிதையார்பரஞானப்பூங்
கோதையார்குழற்குத்தீங்குகூறியகொடியநாவின்
றீதையார்பொறுப்பாரேயோவவரன்றித்திருக்காளத்திக்
காதையார்குழையிளரைக்காளத்திகையிலேயென்னு. (கங)

எடுத்தசொன்மாறிமாறியிசையநேரிசைவெண்பாவாற்
றொடுத்தவந்தாதிசாத்தத்துணைச்செவிமடுத்துநேர்வந்

(எ) மறைச்சென்னி - வேதாந்தம். (அ) தண்ணளி - கருணை. (கு) விதண்டை - தான்கூறும்விஷயத்திற் குற்றமிருக்கப் பிறர் கூறும்விஷயத்திற் குற்றஞ்சாதிப்பது. (கo) அடிகேள்-சுவாமிகாள். (கக) அக்கீரவேலை - அந்தப்பாற்கடல். (கஉ) அருட்கணில்-கருணை விழியால். (கங) தீதை - குற்றத்தினை.

தடித்தவன்கையைப்பற்றியகன்கரையேற்றினர்தாள்
கொடுத்தெழுபிறவிவேலைக்கொடுங்கரையேற்றவல்லார். (கச)

கைதந்துகரையேறிட்டகருணையங்கடலேத்தாழ்ந்து
மைதந்தகயற்கணிளவஞ்சித்துதீங்குநன்கு
செய்தந்தோர்க்கிகலுமன்புஞ்செய்தமைபொருளாச்செய்யுட்
பெய்தந்துபாடுகின்றுன்பிரானருணீடுகின்றுன். (கடு)

அறனிலானிழைத்தவேள்வியழித்தபேராண்மைபோற்றி
மறனிலாச்சண்டிக்கீந்தமாண்பெருங்கருணைபோற்றி
கறுவிவீழ்கூற்றைக்காய்ந்தகனைகழற்கமலம்போற்றி
நிறுவனுக்கழியாவாழ்நாளளித்தருள்செய்திபோற்றி. (கசு)

சலந்தரனுடலங்கீண்டசக்கரப்படையாய்போற்றி
வலந்தருமதனைமாயோன்வழிபடக்கொடுத்தாய்போற்றி
யலர்ந்தசெங்கமலப்புத்தேணடுச்சிரமரிந்தாய்போற்றி
சிலந்தியைமகுடஞ்சூட்டாவரசருள்செல்வம்போற்றி. (கஎ)

திரிபுரம்பொரியநக்கசேவகம்போற்றிமூவர்க்
கருளியதலைமைபோற்றியனங்கனையாகந்தீய
வெரியிடுநயனம்போற்றியிரதிவந்திரப்பமீளக்
கரியவன்மகனுக்காவியுதவியகருணைபோற்றி. (கஅ)

நகைத்திடவந்தவந்தகருசிரந்திருகிவாங்கிச்
சிகைத்திருமுடிமேல்வைத்ததிண்டிறல்போற்றிகோயி
லகத்தவிசுடரைத்தூண்டுமெலிக்கரசாளமூன்று
சகத்தையுமளித்ததேவர்தம்பிரான்சரணம்போற்றி (கசு)

பொருப்பகழ்ந்தெடுத்தோன்சென்னிபுயமிறமித்தாய்போற்றி
யிருக்கிசைத்தவனேபாடவிரங்கிவாள்கொடுத்தாய்போற்றி
தருக்கொடுமிருவர்தேடத்தழற்பிழம்பாளுய்போற்றி
செருக்குவிட்டவரேபூசைசெய்யநேர்நின்றுய்போற்றி. (உ0)

பருங்கைமால்யானையேனம்பாய்புலியரிமான்மீன
மிருங்குறள்யாமைகொண்டவிகல்வலிகடந்தாய்போற்றி

(கச)மாறிமாறி-கைலாபதிகாளத்திபாதியாகத்திருப்பித்திருப்பி. (கடு)தீங்குநன்குஞ்செய்தந்தோர்க்கு-தீமையுநன்மையுஞ் செய்தவர் கட்கு. இகலுமன்பும்-பகையும்உறவும். (கசு)அறனிலான்-ஈண்டுதக்க னென்றுகுறிப்பு.(கஎ)சலந்தரன்-ஓரசுரன்.(கஅ)நக்க-சிரித்த. (கசு) திருகி-முகத்தினைத்திருப்பி. (உ0) அவனே - அவ்விராவணனே.

குரங்குபாம்பெறும்புநாரைகோழியாணலவன்றேரை
கருங்குரீஇகழுகினன்புக்கிரங்கியகருணைபோற்றி. (உக)

சாலநாளிழைத்ததீங்குக்கென்னையுந்தண்டஞ்செய்த
கோலமேபோற்றியஞ்சிக்கொடியனேன்றெடுத்தபுன்சொன்
மாலகேட்டென்னையாண்டமூலமகண்மணாளபோற்றி
யாலவாயடிகள்போற்றியம்மைநின்னடிகள்போற்றி. (உஉ)

கலிநிலைத்துறை.

ஆவலந்தனேனடியனேற்கருளருளென்னுக்
கோவுமும்பிரசாதமுங்குறித்துரைபனுவற்
பாவலங்கலாற்பரவையும்பங்கிலங்கயற்கட்
பூவைதன்னையுமுறைமுறைபோற்றியென்றேத்தா. (உங)

தேவதேவனேப்பின்பெருந்தேவபாணியொடுந்
தாவிலேழிசையெழுகூற்றிருக்கையுஞ்சாத்திப்
பூவர்சேவடிசென்னிமேற்பூப்பவீழ்ந்தெழுந்தான்
பாவலோர்களுந்தனித்தனிதுதித்தனர்பணிந்தார். (உச)

துதித்தகீரனுக்கின்னருள்சுரந்துமூன்போன்
மதித்தநாவலர்குழாத்திடைவதியெனமறைநூ
லுதித்தநாவினர்க்கருணைசெய்துருக்கரந்தயன்செய்
வித்தகோயில்புக்கமர்ந்தனர்விளங்கிழையோடும். (உஞ)

சுற்றகீரனுங்கலுருருங்கழகமண்டபத்தி
லுற்றவாடகக்கிழியறுத்தந்தணர்க்குதவிக்
கொற்றவேந்தனும்வரிசைகள்சிலசெயக்கொடுப்பித்
தற்றைநீங்கியகல்வியின்செல்வராயமர்ந்தார். (உசு)

சம்பகமாறனென்னுந்தமிழ்நர்தம்பெருமான்கூட
லம்பகநுதலினனேயங்கயற்கண்ணினனேவ
வம்புகுங்கிறைந்தசெந்தாமரையடிவந்துதாழ்ந்து
நம்பகநிறைந்தவன்பாற்பல்பணிகடத்திவைகும். (உஎ)

கீரனைக்கரையேற்றியபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுஉ - க்கு திருவிருத்தம் - உருசுசு.

(உக) எனம்-பன்றி. (உஉ) சால-மிகவும். (உங)பனுவல்-கோபப் பிரசாதமெனப்பெயரியபாடல். (உச) தாவில் - கெடுதலற்ற. (உஞ) அயன்செய் - தெய்வத்தச்சனை விசுவகன்மன். (உசு) ஆட கக்கிழி - பொற்கிழி. (உஎ) அம்பகம் - விழி.

ஐம்பத்துநான்காவது,

கீரனுக்கு இலக்கணமுபதேசித்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொன்றையந்தெரியல்வேய்ந்தகூடலெம்பெருமான்செம்பொன்
மன்றலங்கமலத்தாழ்ந்துவழிபடுநாவலோனை
யன்றகன்கரையேறிட்டவருளுரைசெய்தேமிப்பாற்
றென்றமிழனையான்றேறத்தெருட்டியதிறனுஞ்சொல்வாம். (க)

முன்புநான்மாடக்கூடன்முழுமுதலானையாற்போ
யின்புறவறிஞரீட்டத்தெய்தியாங்குறையுங்கீரன்
வன்புறுகோட்டந்தீர்ந்துமதுரையம்பெருமான்முனி
லன்புறுமனத்தனுகியாய்ந்துமற்றினனைச்செய்வான். (உ)

கட்டவிழ்கடுக்கையண்ணல்கண்ணிலுலவிந்தகாலை
மட்டவிழ்மலரோனுலுமாயவனுலுங்காக்கப்
பட்டவனல்லனன்னுனுதல்விழிப்படுதீநம்மைச்
சுட்டபோதுருப்பந்தீர்த்துக்காத்ததிச்சுவணகஞ்சம். (ங)

இப்பெருந்தடமேயெம்மையெம்மையுங்காப்பதென்னுக்
கப்பிலாமனத்தான்மூன்றுகாலமுமுழுகிமுழ்கி
யப்பனையாலவாயெம்மடிகளையடியார்சேம
வைப்பினையிறைஞ்சிநித்தம்வழிபடுநியமம்பூண்டான். (ச)

மையறுமனத்தான்வந்துவழிபடுநியமநோக்கிப்
பையரவாரம்பூண்டபரஞ்சுடர்மாடக்கூட
லெயனுமணியனுகியகமகிழ்ந்தவனுக்கொன்று
செய்யநன்கருணைபூத்துத்திருவுளத்திதனைத்தேர்வான். (ஞ)

இலக்கணமிவனுக்கின்னுந்தெளிகிலவிதனுலாய்ந்த
நலத்தசொல்வழூஉச்சொலென்பதறிகிலனவைதீர்கேள்விப்
புலத்தவர்யாரைக்கொண்டுபோதித்துமிவனுக்கென்னு
மலைத்தனுவளைத்தமுக்கண்மன்னவனுன்னுமெல்லை. (ட)

பங்கயச்செங்கைகூப்பிப்பாலினேர்மொழியாள்சொல்வா
னங்கணைவங்கைநெல்லிக்கனியெனவனைத்துங்கண்ட

(க) தெரியல் - மாலை. (உ) கோட்டம் - கோணல். (ங) சுவணக்கஞ்சம் - பொற்றாமரை. (ச) கப்பிலாமனம் - கவருறுமனம். (ஞ) நியமம் - முறைமை. (ட) இவனுக்கு - இக்கீரனுக்கு. (எ) பாலினேர் - பாலினையொத்த.

புங்கவாகின துசங்கைக்குத்தாம்புகலவல்லா
ரெங்குளாரேனுமென்ன ஞ்சுதிப்பதொன்றிசைப்பேனையா. (எ)

பண்டொருபோதுவெள்ளிப்பனிவரையிடத்துன்பாங்கர்ப்
புண்டவழ்குலிசக்கோமான்பூமகன்மாயப்புத்தே
ளண்டருஞ்சனகளுதியருந்தவர்பிறருமீண்டிக்
கொண்டனரிருந்தாரிந்தக்குவலயம்பொறுதுமாதோ. (அ)

தாழ்ந்ததுவடகீழெல்லையுயர்ந்ததுதென்மேற்கெல்லை
சூழ்ந்ததுகண்டுவாளேர்தொழுதுனைப்பரவியைய
ஊழ்ந்திடுமரவம்பூண்டோயொருவனின்னெப்பானங்கே
வாழ்ந்திடவிடத்தாலிந்தவையநேர்ந்திற்குமென்றார். (கூ)

பைத்தலேபுரட்டுமுந்நீர்ப்பௌவமுண்டவனேயெம்மை
யொத்தவனேயான்வாழ்க்கைக்குரியளாகியவுலோபா
முத்திரையிடவான்பெற்றமுகிழ்முலைக்கொடியொப்பாளென்
றத்திருமுனியைநோக்கியாயிடைவிடுத்தாயன்றே. (கo)

விடைகொடுபோவாளென்றைவேண்டிளனேகுந்தேயந்
தொடைபெறுதமிழ்நாடென்றுசொல்லுபவந்தநாட்டி
னிடைபயின்மனித்தரெல்லாமின்றமிழாய்ந்துகேள்வி
யுடையவரென்பகேட்டார்க்குத்தரமுரைத்தல்வேண்டும். (கக)

சித்தமாசகலவந்தச்செந்தமிழியனூறன்னே
யத்தனேயருளிசெய்தியென்றனனனேயான்றேற
வைத்தனேமுதனூறன்னேமற்றதுதெளிந்தபின்னு
கித்தனேயடியேனென்றுநின்னடிகாண்பேனென்றான். (கஉ)

கடம்பமாவனத்திலெம்மைக்கண்டனையிறைஞ்சியுள்ளத்
திடம்பெறயாதுவேட்டாயவையெலாமெம்பாற்பெற்றுத்
திடம்பெறமலயத்தெய்தியிருக்கெனவிடுத்தாய்சென்று
குடம்பெறுமுனியுமங்கேயிருக்கின்றான்கொடியிலேடும். (கங)

இனையதுன்றிருவுள்ளத்துக்கிசைந்ததேலிவற்குக்கேள்வி
யினையமாதவனேக்கூவியுணர்த்தெனவணங்குகூற

(அ) வெள்ளிப்பனிவரை - இமயகைலாயம். வெண்ணிறமான பனிமலையெனினுமாம். (கூ) ஊழ்ந்திடும் - ஊர்ந்திடும். எதுகைநயங் கருதி ரகரத்தினே ழகரமாக வைத்தார். (கo) பைத்து - விரித்து. (கக) விடைகொடு - உத்தரவுபெற்றுக்கொண்டு. (கஉ) இயனூல் - இலக்கணநூல். (கங) மலயத்து - பொதிகையில். (கச) கேள்வி - இலக்கணநூற்பாடம்.

வினையாணிகழ்ச்சியெல்லாமறந்திடாதின்றுசொன்ன
யனையதெய்துமென்னவறிவனிவனந்தானையன். (கச)

கலிநிலைத்துறை.

உடையநாயகன்றிருவுளமுணர்ந்தனன்முடிமே
லடையவஞ்சலிமுகிழ்த்தனனருந்தவமானத்
திடைபுகுந்தனன்பன்னியோடெழுந்தனனகல்வா
னடையஞாலிவந்தடைந்தனனற்றமிழ்முனிவன். (கஙி)

இயங்குமாதவத்தேரினும்பன்னியோடிழிந்து
புயங்களுலயம்புகுந்துநாற்புயம்புடைகிளைத்துத்
தயங்குஞ்செம்பவளாசலந்தன்னையுமதன்பால்
வயங்குமிந்திரநீலமால்வரையையும்பணியா. (கசு)

பெருகுமன்புளந்துளும்பமெய்யானந்தம்பெருக
வுருகிருந்தனனுவயிற்கீரனுமம்பொன்
முருகவிழ்ந்ததாமரைபடிந்திறைவனேமுன்போ
லுருகுமன்பினுலிறைஞ்சுவானெல்லைவந்தடைந்தான். (கஎ)

இருந்தமாதவச்செல்வனேயெதிர்வாநோக்கி
யருந்தவாவிவற்கியற்றமிழமைந்திலமெம்பாற்
றெரிந்தரியதையரிறபத்தெருட்டெனப்பிணியு
மருந்துமாகியபெருந்தகைசெய்யவாய்மலர்ந்தான். (கஅ)

வெள்ளைமாமதிப்பிளவணிவேணியுங்கருணை
வள்ளலார்பணிசிரத்தினுமனத்தினுந்தாங்கிப்
பள்ளமேழையும்பருகினுன்பணியுநக்கீர
னுள்ளமாசறவியாகரணத்தினேயுணர்த்தும். (ககூ)

இருவகைப்புறவுரைதழீஇயெழுமதமொடுநாற்
பொருளொடும்புணர்ந்தையிருகுற்றமும்போக்கி
யொருவிலையிரண்டழகொடுமுத்தியெண்ணுன்கு
மருவுமாதிநூலினத்தொகைவகைவிரிமுறையால். (உ0)

கருத்துக்கண்ணழிவாதியகாண்டிகையானும்
விருத்தியானுநூற்கிடைப்பொருளெக்கறவிளக்கித்
தெரித்துரைத்தனனுரைத்திடுதிறங்கண்டுநூலி
னருத்தமேவடிவாகியவாதியாசிரியன். (உக)

(கஙி) பன்னி - மனைவி. (கசு) புயங்கன்-பாம்பினையுடையவன். (கஎ) ஒல்லை - விரைந்து. (கஅ) மாதவச்செல்வனே - மிகுந்த தவச செல்வத்தினையுடைய அகத்தியனே. (ககூ) பள்ளம் - கடல்.(உ0)புற வுரை - பாயிரம். (உக) கண்ணழிவு - பதச்சேதம்.

தருக்குமின் பழுங்கருணையுந் தழையமாதவனைத்
திருக்கரங்களான் மகிழ்ச்சியுட்டிளைத்திடத்தழுவிப்
பெருக்கவேண்டியபேறெலாம்பிறநல்கி
யிருக்கையிற்செலவிடுத்தனளவாயிறைவன். (உஉ)

பொன்னளொடுங்குறுமுனிவிடைகொடுபோன
பின்னையாருயிர்க்கிழத்திதன்பிராணேசர்நோக்கி
யென்னைநீயிவற்குணத்திடாதித்தவப்பொதியின்
மன்னனுலுணர்த்தியதெனமதுரைநாயகனும். (உங)

தன்னைநித்தலும்வழிபடுந்தகுதியோர்சாலப்
பொன்னளிப்பவர்தொடுத்தமற்சரமிலாப்புனிதர்
சொன்னசொற்கடவாதவர்துகடவிர்ஞ்சத்
தின்னவர்க்குநூல்கொளுத்துவதறனெனவிசைப்ப. (உச)

இவனெடுத்தமற்சரத்தினுல்யாமுணர்க்காதத
வனேவிட்டுணர்த்தினமெனசசாற்றினுன்கேட்டுக்
கவலைவிட்டகமகிழ்சிகொண்டிருந்தனள்கதிர்கா
னவமணிக்கலம்பூத்ததோர்கொடிபுரைநுங்கை. (உரு)

கற்றகிரனும்பின்புதான்முன்செய்தகவிகண்
முற்றுமாய்ந்துசொல்வழுக்களும்வழாதிலைமுடிபு
முற்றுநோக்கினனறிவின்றிழுதொருங்குணர்ந்தோன்
சொற்றபாடலிற்பொருள்வழுச்சொல்லினேனென்னு. (உசு)

மறையினந்தமுந்தொடாததானிலந்தொடவந்த
றைபரஞ்சுடர்நிராமயநிருத்தற்குப்பிழைத்தேன்
கிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையோரென்
றறிஞர்கூறியபழுஞ்சொலென்னளவிற்றேயம்ம. (உஎ)

அட்டமூர்த்திதன்றிருவடிக்கடியனேன்பிழைக்கப்
பட்டதீங்கினுலெனையவனுதல்விழிப்படுதீச
சுட்டதன்றியென்னெஞ்சமுஞ்சுடுவதேயென்றென்
றட்டதும்பியவிழுமநோயுவரியுளாழ்ந்தான். (உஅ)

(உஉ) மாதவனை - அகத்தியனை. (உங) பொதியின் மன்னன் - அகத்தியன். (உச) மச்சரம் - அழுக்காறு. (உரு) புரை - ஒத்த. (உசு) ஈற்றுநோக்கினுன் - ஊன்றியாராய்ந்தான். (உஎ) கழியவும் - மிகவும். (உஅ) அட்டமூர்த்தி - எட்டுருவினனாகிவபெருமான்.

மகவையீன்றதாய்கைத்திடுமருந்துவாய்மடித்துப்
பகைபடும்பிணியகற்றிடும்பான்மைபோலென்னை
யிகலிழைத்தறிவுறுத்திஞற்கேழையேன்செய்யத்
தகுவதியாதெனவரம்பிலாமகிழ்ச்சியுட்டாழ்ந்தான். (உ௯)

மாதவன்றனக்காலவாய்மன்னவனருளாற்
போதகஞ்செய்தநூலினைப்புலவரேஞர்க்கு
மாதரஞ்செயக்கொளுத்தியிட்டிருந்தனமலன்
பாதபங்கயமூழ்கியபத்திமைக்கீரன். (ஈ0)

கீரனுக்கு இலக்கணமுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுஈ - க்கு திருவிருத்தம் - உடுகூ.

ஐம்பத்தைந்தாவது,

சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காமனைப்பொடியாக்கண்டகண்ணுதறென்னூல்கீர
ராமநற்புலவற்கீந்தநலமிதுபொலம்பூங்கொன்றைத்
தாமனச்சங்கத்தாள்ளார்தலைதடுமாற்றந்தீர
வூமனைக்கொண்டுபாடலுணர்த்தியவொழுக்கஞ்சொல்வாம். (க)

அந்தமில்கேள்வியோரெண்ணறுவரும்வேறுவேறு
செந்தமிழ்செய்துதம்மிற்செருக்குறுபெருமைகூறித்
தந்தமின்மாறுய்த்தத்தந்தராதரமளக்கவல்ல
முந்தைநூன்மொழிந்தவாசான்முன்னர்வந்தெய்தினாரே. (உ)

தொழுதனரடிகள்யாங்கடொடுத்தவிப்பாடலம்முள்
விழுமிதுந்தீதுந்தூக்கிவேறுபாடளந்துகாட்டிப்
பழுதறுத்தையந்தீரப்பணிக்கெனப்பணிந்தார்கேட்டு
முழுதொருங்குணர்ந்தவேதமுதல்வனுமுக்கண்மூர்த்தி. (ங)

இருவருந்துருவநீண்டவெரியழற்றூணிற்றோன்று
முருவெனவறிவானந்தவுண்மையாயுலகுக்கெல்லாங்
கருவெனமூலத்தமூலவிலிங்கத்துணின்றுங்காண்டற்
கரியதோர்புலவனுகித்தோன்றியொன்றருளிச்செய்வான். (சு)

(உ௯) இகலிழைத்து - பகைசெய்து.(ஈ0) கொளுத்தி-உணர்த்தி.
(க)தென்னூல்-தமிழிலக்கணம்.(உ)எண்ணறுவர்-நாற்பத்தெண்மர்.
(ங) விழுமிது-சுற்றமற்றது. (சு) திருவ-தேட.

கலிவிருத்தம்.

இம்மாநகருள்ளாளெருவணிகன்றனபதியென்
றம்மாநிதிக்கிழவோன்மனைகுணசாலினியனையார்
தம்மாதவப்பொருட்டால்வெளிற்றறிவாளரைத்தழுவும்
பொய்ம்மாசறவினன்போலவதரித்தாளெருபுத்தேள். (கூ)

ஓயாவிறன்மதனுக்கிணையொப்பானவனூமச்
சேயாமவனிடைநீருரைசெய்யுட்கவியெல்லாம்
போயாடுமினனையாணதுபுந்திக்கிசைந்தானன்
ரூயாவருமதிக்குந்தமிழதுவேயெனவறைந்தான். (சு)

வன்ரூண்மழவிடையாயவன்மணிவாணிகனூம
னென்ரூலவன்கேட்டெங்ஙனமிப்பாடலிற்கிடக்கு
நன்ரூனவந்தீதானவுநயந்தாய்ந்ததன்றன்மை
குன்ரூவகையறைவானெனமன்ரூடியகூத்தன். (எ)

மல்லார்தடம்புயவாணிகமைந்தன்றனக்கிசையச
சொல்லாழமும்பொருளாழமுங்கண்டான்முடிதூளக்காக்
கல்லார்புயம்புளகித்தூளங்களிதூங்குவன்கலக
மெல்லாமகன்றிடுமுங்களுக்கென்ரூலயஞ்சென்ரூன். (அ)

பின்பாவலரெல்லாம்பெருவணிகக்குலமணியை
யன்பாலழைத்தேகித்தமதவையத்திடையிருத்தா
நன்பான்மலர்நறுஞ்சாந்துகொண்டரூச்சித்தனர்நயந்தே
மூன்பாலிருந்தருந்தீந்தமிழ்மொழிந்தாரவைகேளா. (ஃ)

மகிழ்ந்தான்சிலர்சொல்லாழ்ச்சியைமகிந்தான்சிலர்பொருளை
யிகழ்ந்தான்சிலர்சொல்வைப்பினையிகழ்ந்தான்சிலர்பொருளைப்
புகழ்ந்தான்சிலர்சொல்லின்பமும்பொருளின்பமுமொருங்கே
திகழ்ந்தான்சிலர்சொற்றிண்மையும்பொருட்டிண்மையுந்தேர்ந்தே.

இத்தன்மையனகிக்கலிவல்லோர்தமிழெல்லாஞ்
சித்தங்கொடுதெருட்டுஞ்சிறுவணிகன்றெருள்கீரன்
மூத்தண்டமிழ்கபிலன்றமிழ்பரணன்றமிழ்மூன்று
மத்தன்மையனறியுந்தொறுமறியுந்தொறுமெல்லாம். (கக)

(கூ)இனன்-சூரியன்.(சு)சேயாம்-குழந்தையாம். (எ) மணிவாணிகன்-அரதனவியாபாரி.(அ)முடிதூளக்கா-தலையசைத்து. (சு) அவையத்திடை-சங்கமண்டபத்தில். (கo) திகழ்ந்தான்-பொலிவுற்ரூன். (கக) தெருள் - ஞானத்தினையுடைய.

நுழைந்தான்பொருடொறுஞ்சொற்றொறுநுண்டீஞ்சுவையுண்டே
தழைந்தானுடல்புலனேந்தினுந்தனித்தான்சிரம்பணித்தான்
குழைந்தான்விழிவழிவேலையுட்குளித்தான்றனையளித்தான்
விழைந்தான்புரிதவப்பேற்றினைவிளைத்தான்களிதிளைத்தான். (கஉ)

பல்காசொடுகடலிற்படுபவளஞ்சுடர்தரள
மெல்லாநிறுத்தளப்பானெனவியல்வாணிகருமரன்
சொல்லாழமும்பொருளாழமுந்துலைநாவெனத்தூக்க
நல்லாறறிபுலவோர்களுநட்டாரிகல்விட்டார். (கஊ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகினுட்பெருகியந்தவொண்டமிழ்மூன்றும்பாடற்
றிலகமாய்ச்சிறந்தவாய்ந்ததெய்வநாவலருந்தங்கள்
கலகமாகவையிற்றீர்ந்துகாசறுபனுவலாய்ந்து
புலமிருகோட்டிசெய்துபொலிந்தனரிருந்தார்போலும். (கச)

சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுச - க்கு திருவிருத்தம் - உசுக0.

ஐம்பத்தாறவது,

இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடைக்காடன்பசிக்கன்னக்குழியருத்தி வேட்கையறக்கொடுத்தகங்கைச், சடைக்காட்டன் புலவரிகறணிவித்தமுறையிது மேற்றன்னைப்பாடுந், தொடைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னவனை முனிந்துதன்னைத் தொழுதுபோன, விடைக்காடனுடன்போய்ப் பின்பெழுந்தருளிப்பிணக்கறுத்தவியல்புசொல்வாம். (க)

இந்திரன்றன் பழிதுரத்தியரசளித்துப்பின்பு கதியின்பமீந்த, சுந்தரன்பொன்னடிக்கன்பு தொடுத்துநறுஞ்சண்பகத்தார்தொடுத்துச்சாத்தி, வந்தனைசெய்திருத்தொண்டின் வழிக்கேற்பச்சண்பகப் பூமாறவேந்த, னந்தரசூடாமணியாஞ்சிவபுரத்து ணிறைசெல்வ மடைந்தானிப்பால். (உ)

(கஉ) சிரம்பணித்தான் - அசைத்தான். (கஊ)காசு - பொன். நட்டார்-இசைத்தார். இகல்-பகை. (கச)ஒண்டமிழ்மூன்றும்-ஒள்ளியவியலிசைநாடகங்களான தமிழ்கள்மூன்றும். (க)இகழ்ந்த-அவமதித்த. (உ) அந்தரசூடாமணி - வானுலகசூடாமணி. சூடாமணி-தேவமணி.

ஆற்றன்மிகுபிரதாபசூரியன்வங்கிசத்துவசனளவில்சீர்த்தி
சாற்றரியவிரிபுமருத்தனன்சோழவங்கிசாந்தகன்ரூன்வென்றி
மாற்றரியபுகழ்ச்சேரவங்கிசாந்தகன்பாண்டிவங்கிசேசன் [ஞ்ஞ.
ரூற்றமுறுபரித்தேர்வங் கிசசிரோமணிபாண்டிச் சுரன்ரூன்மன்

துணிவுடையகுலத்துவசன்வங்கிசபூடணமாறன்சோமசூடா
மணிகுலசூடாமணியேயிராசசூடாமணியேமாற்ரூர்போற்றிப்
பணியவரும்பூபசூடாமணியேகுலேசபாண்டியனேயென்னக்
கணிதமுறுபதினேவர்வழிவழிவந்துதித்துநிலங்காவல்பூண்டோர். ()

அத்தகையபாண்டியருட் குலேசபாண்டியனென்னு மரசன்
ரூண்மேல், வைத்தவனிதலம்புரப்போனிலக்கணமுமிலக்கியமும்
வரம்புகண்டோ, னெத்தகையபெருநூலுமெல்லைகண்டோனுதலி
னலிவனுக்கேற, முத்தமிழோர்பயில் சங்கமிடங்கொடுத்ததனைய
மணிமுழவுத்தோளான். (ரு)

கழிந்தபெருங்கேள்வியினு னெனக்கேட்டு முழுதுணர்ந்தகபி
லன்றன்பாற், பொழிந்தபெருங்காதன்மிகுகேண்மையினினிடைக்
காட்டுப்புலவன்றென்சொன், மொழிந்தரசன்றனக்காண்டுமெனத
தொடுத்தபனுவலொடு மூரித்தீந்தேன், வழிந்தொழுகுதாரானைக்
கண்டுதொடுத்துரைப்பனுவல்வாசித்தானால். (சு)

வழுக்காதசொற்சுவையும் பொருட்சுவையும்பகிர்ந்தருந்த வல்
லோனுள்ளத், தழுக்காற்ரூற்சிரந்துளக்கானகமகிழ்ச்சிசிறிதுமுதத்
தலர்ந்துகாட்டா, னெழுக்காயுந்திணிதோளா னொன்றுமுரையான்
வாளாவிருந்தானுய்ந்த, குழுக்காதணண் புடையான்றனேமானம்பு
றந்தள்ளக்கோயில்புக்கான். (எ)

சந்நிதியில்வீழ்ந்தெழுந்து தமிழறியும்பெருமானே தன்னைச்
சேர்ந்தார், நன்னிதியேதிருவாலவாயுடையநாயகனேநகுதார்வேம்
பன், பொன்னிதிபோலளவிறந்தகல்வியு மிக்குளனென்றுபுகலக்
கேட்டுச், சொன்னிறையுங்கவிதொடுத்தே னவமதித்தான்சிறிது
முடிதுளக்கானுகி. (அ)

பரிவாயின்மொழிதொடுத்துவருணித்தோர்க்ககமகிழ்ந்தோர்
பயனுநல்கா, வீரிவாயதடங்கடலேநெடுங்கழியே யடுங்கானவிலங்

(சு) இரிபுமருத்தனன் - பகைவரைமிதிப்பவன். (சு) மாற்ரூர் - பகைவர். (ரு) பெருநூல் - பாரதகாவியம். (சு) கழிந்த - மிகுந்த. (எ) ஆய்ந்தகுழு - புலவர்கூட்டம். (அ)நகு - விரிந்த. (கூ) பரிவாய் - விருப்பமாய்.

கேபுள்ளே, பொரிவாயபராரைமரநிரையேவான்றெருகுமிப் பொ
ருப்பேவெம்பு, மெரிவாயகொடுஞ்சுரமேயென விவற்றோரஃறிணை
யொத்திருந்தானெந்தாய். (கூ)

என்னேயிகழ்ந்தனேனேசொல் வடிவாய் நின்னிடம்பிரியா விம
யப்பாவை, தன்னேயுஞ்சொற்பொருளான வுன்னேயுமேயிகழ்ந்த
னென்றனக்கியாதென்னே, முன்னேமொழிந்திடைக் காடன்றணி
யாத முனிவீர்ப்பமுந்திச்சென்றே, னன்னவுரைதிருச்செவியினூறு
பாடெனவுறைப்பவருளின்மூர்த்தி. (கo)

போனவிடைக்காடனுக்குங்கபிலனுக்கு மகத்துவகைபொலியு
மாற்றான், ஞானமயமாகியதன் னிலிங்கவுருமறைத்துமையா நங்
கையோடும், வானவர்தம்பிரானெழுந்து புறம்போய்த்தன்கோயிலி
னேர்வடபால்வைகை, யானதித்தென்பாலோ ராலயங்கண்டங்க
ணினிதமர்ந்தான்மன்னே- (கக)

சங்கவான்றமிழ்த்தெய்வப்புலவோருமுடனெழுந்தூசைலவேந்தன்
மங்கைநாயகன்போனவழிபோயங்கிருந்தாரவ்வழிநாள்வைகற்
கங்குல்வாய்புலரவரும்வைகறையிற்பள்ளியுணர்காலத்தெய்தி
யங்கணையகனடியார்சேவிப்பாரிலிங்கவுருவங்குக்காணூர். (கஉ)

என்னவதிசயமோ வீதென்றயிர்த் தாரிரங்கிஞரிதனேயோடி,
மன்னவனுக்கறிவிப்பான் வேண்டுமெனப் புறப்பட்டு வருவாராவி,
யன்னவரைப் பிரிந்துறையுமணங்கனேயாமெனவுமலரணங்குநீத்த,
பொன்னவிர்தாமரையெனவும் புலம்படைந்துபொலிவழிந்த புரமு
ங்கண்டார். (கங)

அரசனிடைப்புகுந்துள்ள நடுநடுங்கிநாவுணங்கி யரசேயாமொ
ன், றுரைசெய்வஞ்சுதுமுங்கணையகனத்திருப்பள்ளி யுணர்ச்சிநோ
க்கி, மரைமலர்ச்சேவடி பணியப்புகுந்தன மின்றுங்கவன்றன் வடி
வங்காணேம், புரமுநனி புலம்படைந்த தென்றழல்வே லெனச்செ
வியிற்புகுத்தலோடும். (கச)

வழுதியரியணையிலிருந்தடி யிறவீழ்பழுமரம்போன் மண்மேல்
யாக்கை, பழுதுறவீழ்ந்துயிரொடுங்கவறிவொடுங்கி மட்பாவைபடிந்
தாங்கொல்லைப், பொழுதுகிடந்தறிவு சிறிதியங்க வெழுந்தஞ்சலிக்

(கo) ஊறுபாடு - துன்புறுத்துவது. (கக) ஞாணமயம்- அறிவுமயம். (கஉ) சைலவேந்தன் - மலையரையன். (கங) ஆவியன்னவரை-உயி
ரனைய காதலரை.(கச)மரைமலர்-தாமரைப்பூ. மரை-முதற்குறை.

கைப்போதுகூப்பி, யழுதிருகண்ணீர்வெள்ளத் தாழ்ந்தடியேனென் பிழைத்தேனண்ணலண்ணல். (கடு)

கொலையினையோரவுணர் புரநொடிவரையிற் பொடியாகக்குனித்தமேருச், சிலையினையோபழையசிவபுரத்தினையோவருவிமணி தெறிக்கும்வெள்ளி, மலையினையோ தம்மைமறந்தினை நினைப்பார்மனத்தினையோவாழ்த்தும்வேதத், தலையினையோவெங்குற்றமெங்குற்றமென்றறிதளருமெல்லை. (கசு)

சிலர்வந்தமண்ணலோரதிசயங்கண்டனம் வைகைத்தென்சாராக, வலர்வந்தோன்படைத்த நாண்முதலொருகால்முங் கண்டதன்றுகேள்வித், தலைவந்தபுலவரொடுமாலவாயுடையபிரான்றானே செம்பொன், மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண் டிறைகின்றான் மாதோவென்றான். (கஅ)

அவ்வுரைதன்செவிநுழைந்து புகுந்தீர்ப்ப வெழுந்தரசனச்சத் தாழ்ந்து, தெவ்வர்மூடித்தொகையிட்டறுங் கழற்காலானடந் தேகிச் செழுநீர்வைகை, கௌவைநெடுந்திரைக்கரத்தாற் கடிமலர்தூஉய்ப் பணியத்தென்கரைமேல்வந்து, மௌவலிளமுகைமுறுவன்மாதிலெடுமிருக்கின்றமணியைக்கண்டான். (கஆ)

படர்ந்துபணிந்தன்புருக்குங்கண்ணீர்சோர்ந்தானந்தப் பௌவத்தாழ்ந்து, கிடந்தெழுந்துநாக்குழறித்தடுமாறின்றினைக்கிளக்கும்வேதந், தொடர்ந்தறியாவடிவிப்ப நகர்புலம்பவுகின்ற தோகையோடிங், கடைந்தருளுங்காரணமென் னடியேனுற்பிழையுளதோவையாவையா. (கக)

அல்லதையென்றமராலென்பகைஞராற்கள்வராலரியகானத், தெல்லைவிலங்காதிகளா லிடையூறின்றமிழ் நாட்டிலெய்திற்றுலோ, தொல்லைமறையவ ரொழுக்கங்குன்றின ரோதவந்தருமஞ்சுருங்கிற்றுலோ, வில்லவனுந்துறவறனும் பிழைத்தனவோ யானறியேனெந்தாயெந்தாய். (உ0)

கள்ளேறுகடுக்கைநறுஞ்சடையானேபோற்றி பெருங்கருணைபோற்றி, வெள்ளேறுகொடியுயர்த்தவிடையானேபோற்றி யருள்விகிர்தாபோற்றி, புள்ளேறுகொடியுயர்த்த புனிதனயன்றேருத புனி

(கடு) பழுமரம்-ஆலமரம். (கசு) எல்லை - சமயத்தில். (கஎ) இறைகொண்டிறைகின்றான் - தங்கியிருக்கின்றான். (கஅ) கௌவை - ஆரவாரம்.(கக)ஆனந்தபௌவத்து-ஆனந்தசமுத்திரத்தில்.(உ0)என்றமரால் - எனதுமந்திரிமுதலியசுற்றத்தினரால்.

தாபோற்றி, வள்ளேறுசிறுகுழலிமதிறுத லங்கயற்கண்ணி மலைள போற்றி. (உக)

பாதமலரிணைபோற்றிபன்னிரண்டுகையானைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபரஞானத்திலானந்தவிளைவேபோற்றி [ற்றி
போதவடிவாய்நால்வர்க்கசைவிறந்து நிறைந்தபரம்பொருளேபோ
மாதவளநீறணிந்தமன்னுலங்கயற்கண்ணிமலைளபோற்றி. (உஉ)

பொக்கமுடையார்செய்யும் பூசைதவங் கண்டுகரும் புராண போற்றி, தக்கன்மகம்பொடியாகத்திருப்புருவ நெரித்தகொடுந்தழ லேபோற்றி, செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத் திகிரியருள் செல்வாபோற்றி, மைக்குவளையனையமணி கண்டாலங்கயற்கண்ணி மலைளபோற்றி. (உங)

மேற்படி வேறு.

தென்னவனின்னவண்ணமேத்திளுன்செம்பொற்கூடன்
மன்னவன்கேட்டாகாயவாணியால்வைகைநாட
உன்னதுசோத்தநாங்கேட்டுவந்தனமினியதாயிற்
றின்னமொன்றுளதுகேட்டியென்றனனருளிச்செய்வான். (உச)

இயம்பரும்பதிகடம்முளாலவாயேற்றாநீங்குச்
சயம்புவாயனந்தமுள்ளதானவரியக்கர்சித்தர்
வயம்புரியரக்கர்வானோர்முனிவர்மனிதருள்ளார்
சயம்பெறவிதியாற்கண்டசங்குறியனந்தமுண்டால். (உஙி)

அக்குறிகளின்மேம்பட்டகுறியறுபத்துநான்கா
மிக்குறிகளின்மேம்பட்டகுறிகளெட்டினையவெட்டித்
திக்குறைவானோர்பூசைசெய்தனவிவற்றியாம்வந்து
புக்குறைகுறிநந்தோழன்பூசித்தகுறியதாகும். (உசு)

அறைந்தவித்தெய்வத்தானமனைத்துமோரூழிக்காலத்
திறந்தநந்தோழன்கண்டவிலிங்கமாமதனுலிங்கே
யுறைந்தனமுறைதலாலேயுத்தரவாலவாயாய்ச்
சிறந்திடத்தருவதின்றுமுதலிந்தத்தெய்வத்தானம். (உஎ)

(உக) சுடுக்கை-கொன்றைமலர். (உஉ) பரஞானம்-சிவஞானம். (உங) பொக்கம் - பொய்யொழுக்கம். (உச) சோத்தம் - சோத்தம் என்பார் இழிகுலத்தினர். இதனை இழிந்தோர்வணக்கமென்ப.(உஙி) இயம்பரும் - உரைத்தற்கரிய. (உசு) அக்குறி-அவ்விலிங்கம். (உஎ) ஊழிக்காலம் - பிரளயகாலம்.

ஓங்குதண்பணை சூழ்நீபவனத்தைநீத்தொருபோதேனு
நீங்குவமல்லேங்கண்டாயாயினுநீயும்வேறு
தீங்குசெயல்லேகாடன்செய்யுமிகழ்தலாலே
யாங்கவனிடத்தியாம்வைத்தவருளினல்வந்தேமென்ன. (உஅ)

பெண்ணினேப்பாகங்கொண்டபெருந்தகைப்பரமயோகி
விண்ணிடைமொழிந்தமாற்றமீனவன்கேட்டுவானோர்
புண்ணியாசிறியோர்குற்றம்பொறுப்பதுபெருமையன்றே
வெண்ணியபெரியோர்க்கென்னவேத்திணனிறைஞ்சினனே. (உக)

அடிபணிந்தேத்திணனேயருள்சுரந்தசையுமின்னுக்
கொடியணிமேனியிற்போக்கிக்கோமளவல்லியோடு
முடனுறைபுலவரோடுமொல்லைதன்கோயில்புக்கான்
வடதிருவாலவாயில்வந்துவீற்றிருந்தவள்ளல். (ஙO)

மின்மதிச்சடையினன்பினடந்துபோய்விடைகொண்டேகு
மன்னவன்றன்னேப்பாடிவந்தவன்றன்னேமாட்சித்
தன்மைசால்சங்கவாணர்தம்மொடுங்கொடுபோயென்றும்
பொன்மகள்காணிகொண்டபுரிசைசூழ்கோயில்புக்கான். (ஙக)

விதிமுறைகதலிபூகங்கவரிவால்விதானந்தீபம்
புதியதார்நிறைநீர்க்கும்பங்கதலிகைபுனைந்தமன்றற்
கதிர்மணிமாடத்தம்பொற்சேக்கைமேற்கற்றோர்சூழ
மதிபுனைகாடன்றன்னேமங்கலவணிசெய்தேற்றி. (ஙஉ)

சிங்கமான்சுமந்தபொன்னஞ்சேக்கைமேலிருந்துவெள்ளைக்
கொங்கவிழ்தாமந்தூசுகுளிர்மணியாரந்தாங்கி
மங்கலமுழவமார்ப்பமறையவராக்கங்கூற
நங்கையர்பல்லாண்டேத்தநன்மொழிப்பனுவல்கேட்டு. (ஙங)

அறிவுடைக்காடனுக்குமருமைமாண்புலமையோர்க்கு
முறைமையாலாரந்தூசுமுகிழ்முலைக்கொடியினன்னர்
நிறைநிதிவேழம்பாய்மாவிளைநிலமிரம்பநல்கி
யறைகழற்காலிற்பின்னேழடிநடந்தித்தினேவேண்டும். (ஙச)

புண்ணியப்புலவீர்யானிப்போழ்திடைக்காடனர்க்குப்
பண்ணியகுற்றமெல்லாம்பொறுக்கெனப்பரவித்தாழ்ந்தா

(உஅ) காடன் - இடைக்காடன். (உக) விண்ணிடை - ஆகாயத்தில். (ஙO)ஒல்லை - விரைவாக. (ஙக) விடைகொண்டு - உத்தரவு பெற்று. (ஙஉ)கதலி-வாழை. பூகம்-கமுகு (ஙங) சேக்கை-ஆசனம். (ஙச) தூசு-ஆடை. (ஙஞ) பரவி-துதித்து.

ணுண்ணியகேள்வியோருமன்னநீநுவன்றசொல்லாந்
தண்ணியவழுதாலெங்கள்கோபத்தீத்தணிந்ததென்னு. (கூடு)

இன்னமுமாலவாயெம்மிறையவன் கருணைநோக்காற்
பன்னரும்புகழ்மைகுன்றுப்பாக்கியமுனக்குண்டாக
வென்னநல்லாக்கங்கூறியேகினராகவந்தத்
தென்னவன்குலேசன்செய்ததவமுருத்திரிந்தாலென்ன. (கூசு)

எரிமருத்தவனிமுன்னுவெண்வகைமூர்த்தியன்பு
புரிமருத்துவனேசூழ்ந்தபொருபழிதுடைத்தோன்சோதி
விரிமருத்துடல்வான்றிங்கண்மிலைந்தவனருளின்வந்தா
னரிமருத்தனனுந்தென்னனடலரிக்குருளையன்னான். (கூஎ)

கலிநிலைத்துறை.

பரிசிலைப்புலவருக்கருள்குலேசன் பல்பகல்கழீஇத்
திரிமருப்பிரலெவ்வம்மழுவெடித்தவன் மதிசசென்னிமேல்
வரிசிலைப்படைபொறித்தவனெனப்பெறுவரமைந்தனு
மரிமருத்தனனிடத்தவனிவைத்தரனடியெய்திஞன். (கூஅ)

இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம் - முற்றிற்று.

ஆ படலம் - சுடு - க்கு திருவிருத்தம் - உசுசஅ.

ஐம்பத்தேழாவது,

வ லை வீ சி ன ப ட ல ம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்றிரித்தன்னவேணிவேதியனிடைக்காடன்பின்
சென்றுமீண்டனையான்கொண்டபிணக்கினைத்தீர்த்தவண்ண
மின்றுரைசெய்துமுந்நீரெறிவலைவீசிஞாழன்
மன்றலங்குழலினாளமணந்தமீள்வண்ணஞ்சொல்வாம். (க)

அந்தமிலழகன்கூடலாலவாயமர்ந்தலீல
கந்தரனுலகமீன்றகன்னியங்கயற்கணாளாங

(கூசு) மருத்து - காற்று. அவனி-பூமி. (கூஅ) வரிசிலைப்படைபொறித்தவன் - அருச்சுனன். (க) திரித்தன்ன - முறுக்கிவிட்டாற்போன்ற. வேணி-சடை.

கொந்தவிழலங்கற்கூந்தற்கொடிக்குவேறிடத்துவைகி
மந்தணமானவேதமறைப்பொருளுணர்த்துமாதோ. (உ)

நாதநின்னருளாற்கூறுநான்மறைப்பொருளெயெல்லாம்
யாதுகாரணத்தான்மன்னுவெறிகிலேமெம்பிராட்டி
காதரமடைந்தாள்போலக்கவலையுஞ்சிறிதுதோன்ற
வாதரமிலளாய்க்கேட்டாளஃதறிந்தமலச்சோதி. (ஊ)

அராமுகமனையவல்குலணங்கினைநோக்கியேனை
யிராமுகமனையவுள்ளத்தேழைமார்போலவெம்பாற்
பராமுகையாகிவேதப்பயனெருப்படாதுகேட்டாய்
குராமுகையவிழ்ந்தகோதாயுற்றவிக்குற்றந்தன்னால். (ச)

விரதமுமறனுமின்றிமீன்படுத்திழிஞரான
பரதவர்மகளாகென்றுபணித்தனன்பணித்தலோடு
மரதனவாரந்தாழ்ந்தவாரமென்முலையாளஞ்சி
வரதநிற்பிரிந்துவாழவல்லனெவென்றுதாழ்ந்தாள். (ரு)

வீங்குநீர்ச்சடையானீங்குமெல்லியல்பரிவுநோக்கி
வாங்குநீர்க்கானல்வாழ்க்கையலைஞர்கோன்மகளாய்வைகி
யாங்குநீவளர்நாள்யாம்போந்தருங்கடிமுடித்துமென்னத்
தேங்குநீரமுதன்னாளச்செலவிடத்திருந்தானிப்பால். (சு)

அன்னதுதெரிந்துநால்வாயைங்கரக்கடவுடாதை
முன்னர்வந்திதலைலன்றேமூண்டதிச்செய்தியெல்லா
மென்னவீர்ங்கவளம்போலாங்கிருந்தபுத்தகங்களெல்லாந்
தன்னெடுங்கரத்தால்வாரியெறிந்தனன்சலதிமீதால். (எ)

வரைபகவெறிந்தகூர்வேன்மைந்தனுந்தந்தைகையி
லுரைபெறுபோதநூலையொல்லெனப்பறித்துவல்லே
திரைபுகவெறிந்தாலைகச்செல்வநான்மாடக்கூட
னரைவிடையுடையநாதனந்தியைவெகுண்டுநோக்கா. (அ)

அடித்துநாமிருக்குஞ்செவ்வியறிந்திடாதிவரைவாயில்
விடித்துநீயிருந்தாய்தீங்குவினைந்ததுன்னனக்குமிந்தத்
தொடுத்ததீங்கொழியவின்றேர்சுறவுருவாகிவைய
முடுத்தகாரோதநீர்புக்குழல்கெனப்பணித்தான்மன்னோ. (கூ)

(உ) கொந்தவிழ் - கொத்துவிரிந்த. மர்மம் - இரகசியம். (ஊ) காதரம் - அச்சம். (ச) அராமுகம்-பாம்பின்படம். (ரு) பரதவர்-நெய்தலிலவலைஞர். கானல்-கழிக்கரை. (எ) நால்வாய் - தொங்குகின்ற வாய். (அ) பக-பிளக்க. (கூ) செவ்வி-காலம்.

வெருவருஞ்செலவின்வேழமுகத்தனைவிதித்தசாபப்
பெருவலிதன்னைச்சாரும்பெற்றியாற்சாபங்கூரு
னருவரைநெஞ்சுபோழ்ந்தவள்ளிலைவடிவேற்செங்கை
முருகனைவணிகர்தம்மின்மூங்கையாகென்றுனிப்பால். (க0)

நாயகனைவலாலேநாயகிவலைஞர்மாத
ராயதுந்நந்திப்புத்தேளகுசுறவாகிமுந்நீர்
மேயதுங்கருணைவள்ளன்மீன்படுத்தணங்கைவேட்டுப்
போயதுமவட்குக்கேள்விபுகன்றதுமுறையிற்சொல்வாம். (கக)

கலிநிலைத்துறை.

சூழும்வார்திரைவைகையந்துறைகெழுநாட்டுட்
கீழையார்கலிமுகத்ததுநெய்தலங்கீழ்நீ
ராழிநீள்கருங்கழியகழ்வளைந்தகாவளைந்து
தாழைமூதெயிலுடுத்ததோர்தண்டுறைப்பாக்கம். (கஉ)

மூடங்குமுள்ளிலையாற்புதைந்தெதிரெதிர்மொய்த்து
நூடங்குகைதைபோதொடுவளிநூக்கநின்றசைவ
மடங்குமெய்யராய்க்கையிருங்கேடகவட்டத்
தடங்கிவாள்பனித்தாடமாற்றுவாரனைய. (கங)

புலவுமீனுணக்கோசையும்புட்களோப்பிசையும்
வீலைபகிர்ந்திடுமமலையுமீன்கொள்கம்பலையும்
வலையெறிந்திடுமரவமும்வாங்குமாரவமு
மலையெறிந்திடுபரவைவாயடைப்பனமாதோ. (கச)

வாட்டுநுண்ணிடைநுளைச்சியர்வண்டலம்பாவைக்
கூட்டுகின்றசோறருகிருந்துடைந்தபூங்கைதை
பூட்டுகின்றனநித்திலம்பொருகடற்றரங்கஞ்
சூட்டுகின்றனகடிமலர்சூழல்சூழ்ஞாழல். (கஞ)

நிறைந்ததெண்கடலாடிநீணெறியிடைச்செல்வோர்க்
கறந்தெரிந்தபோற்பொதிந்தசோறவிழ்ப்பனதாழை
சிறந்தமுத்தொடுபசும்பொனும்பவளமுந்திரட்டிப்
புறந்தெரிந்திடக்கொடுப்பனமலர்ந்தபூம்புன்னை. (கசு)

(க0) அள்ளிலை - கூரியஇலைவடிவான. (கக) சுறவு - ஒருபெரு மீன். (கஉ) மூதெயில் - பழமதில் (கங) வாள்பனித்து - வாள்வி திர்த்து. (கச) புட்களோப்பிசை - பறவைகளோயோட்டுமோசை. (கஞ) நுளைச்சியர் - நெய்தனிலப்பெண்கள். (கசு)பொதிந்தசோறு-மூடப்பெற்ற மகரந்நிறைந்தசோறு.

கொன்றுமீன் பகர்பரதவர் குரம்பைகடோறுஞ்
சென்றுதாவிமேற்படர்வன திரைபடுபவள
மன்றல்வார்குழனுளைச்சியர் மனையின்மீனுணக்கு
முன்றில்சீப்பன கடலிடமுழுமணிக்குப்பை. (கஎ)

கூற்றம்போன்றகண் ணுளைச்சியர்குமுதவாய்திறந்து
மாற்றம்போக்கினர்பகர்தருங்கயற்குநேர்மாறுந்
தோற்றம்போக்குவவவர்விழித்துணைகளக்கயன்மீ
னூற்றம்போக்குவதவர்குழனைகமலர்க்கைதை. (கஅ)

அலர்ந்தவெண்டிரைக்கருங்கழிக்கிடங்கினரும்பர்
சூலந்தவிழ்ந்துதேன்றுளும்பியகுமுதமேயல்ல
கலந்தருங்கடலெறிகருங்காற்பணங்கள்வாய்
மலர்ந்தருந்தியகுமுதமொய்ப்பனவண்டு. (கக)

ஆயபட்டினத்தொருவன்மேலாற்றியதவத்தாற்
றூயவானவர்தம்மினுந்தூயனுய்ச்சிறிது
தீயதீவினைசெய்தியாற்றிண்டிமில்வாணர்
மேயசாதியிற்பிறந்துளான்மேம்படுமனையான். (உ0)

செடியகாருடற்பரதவர்திண்டிமினடத்தா
லெடியவாழியிற்படுத்தமீன்றிறைதொடுறைக்குங்
கடியவாயிலோனவர்க்கெலாங்காவலோனேற்றுக்
கொடியவானவனடிக்குமெய்யன்புசால்குணத்தோன். (உக)

மகவிலாமையாலாற்றநாண்மறுமையோடிம்மைப்
புகலிலானெனவருந்துவானெருபகற்போது
தகவுசால்பெருங்கிளையொடுஞ்சலதிமீன்படுப்பா
னகலவார்கலிக்கேகுவான தன்கரையொருசார். (உஉ)

தக்கமேருமாமலமகளேடையிற்றவத்தான்
மிக்கமீனவன்வேள்வியில்விரும்பியமகவாய்ப்
புக்கநாயகிதன்பதியாணையாற்புலவு
தொக்கமீன்விலைவலுனன்மேற்றவப்பயன்றூர்ப்ப. (உங)

(கஎ) உணக்கல் - உலரவைத்தல். குரம்பை - சிறுகுடில். மாற்றம்போக்கினர் - மீளேஓமீனெனப்பண்ட மாற்றுவிளியெறிந்தாராய். (ககூ) பனங்கள்வாய்மலர்ந்தருந்திய குமுதம் - பனைமதுவினைவாய் திறந்துண்ட அந்நிலப் பெண்களினமதரமாகிய குமுதம். (உ0) திமில் - தோணி. (உக) செடி- நாற்றம். (உஉ) சலதி - கடல். (உங) ஆணையால் - கட்டளையால்.

இச்சையாலவனன்பினுக்கிரங்குவாள்போலச்
செச்சைவாய்திறந்தழுதொருதிருமகவாகி
நெய்ச்சபாசிலேப்புன்னேநன்னீழலிற்கிடந்தாண்
மைச்சகாருடற்கொடுந்தொழில்வலைஞர்கோன்கண்டான். (உச)

கார்கொணீர்த்திருமாதுகொல்கரந்துநீருறையும்
வார்கொள்பூண்முலைமடந்தைகொல்வனத்துறைவாழ்க்கைத்
தார்கொள்பூங்குழலணங்குகொறடங்கணுமிமைப்ப
வார்கொலோமகவாகியீண்டிருந்தவளென்ஞ. (உஞ)

பிள்ளாயின்மையேற்கிரங்கியெம்பிரான்றமிழ்க்கூடல்
வள்ளனல்கியமகவிதுவேயெனவலந்தோ
டுள்ளவண்புகூர்ந்தெடுத்திருதோளுறப்புல்லித்
தள்ளருந்தகைக்கற்பிணுடனதுகைக்கொடுத்தான். (உசு)

பிறவியந்தகன்றெறிந்துகண்பெற்றெனக்கழிந்த
வறியனீணிதிபெற்றெனவாங்கிளள்வலை
றெறியும்வேலையினர்த்தனர்கையெறிந்திரட்டிக்
குறியவாணகைவலைச்சியர்குழறிஞர்குரவை. (உஎ)

பிழையில்கற்புடைமனைவியும்பெரு துபெற்றெடுத்த
குழவியைத்தடங்கொங்கையுங்கண்களுங்குளிரத்
தழுவிமுத்தமிட்டுச்சிமோந்தன்புளந்துதும்ப
வழுகிதாகியமணிவிளக்காமெனவளர்ப்பாள். (உஅ)

புலவுமீன்விலைப்பசும்பொனுற்செய்தபல்பூணு
மிலகுமாரமும்பாசியுங்காசிடையிட்டுக்
குலவுங்கோவையுஞ்சங்கமுங்குலத்தினுக்கிசைய
வலகிலாதபேரழகினுக்கழகுசெய்தணிந்தாள். (உக)

தொண்டைவாய்வலைச்சிறுமியர்தொகையொடுந்துறைபோய்
வண்டலாடியுகித்திலமாமணிகொழித்துங்
கண்டன்ஞாழல்சூழ்கானலங்கடிமலர்கொய்துங்
கொண்டலோதிபின்முழ்தரக்குரைகடல்குளித்தும். (கூ0)

தளர்ந்தபைங்கொடிமருங்குலுந்தண்ணுயிர்த்தலைவ
னளந்தவைகலுங்குறைபடவெனிடத்தார்வங்

(உச) இச்சையால் - தனது விருப்பத்தால். (உஞ) ஆர்கொலோ - எவரோ? (உசு) மகவு - குழந்தை. (உஎ) வறியன் - தரித்திரன். (உஅ) மணிவிளக்கு - அரதனதீபம். (உக) பாசி - கீரைமணியென்ப. (கூ0) நித்திலம் - முத்து. (கூக) மருங்குலும் - இடையும்.

இளர்ந்தவன்புமொண்கொங்கையுங்கிளரநாட்சிறிதில்
வளர்ந்துவைகிஞள்வைகலுமுயிரெலாம்வளர்ப்பாள். (நக)

ஆலவாயுடைநாயகனேவியவாறே
மாலைதாழிளமதிச்சடைமகுடமுங்கரங்க
ணூலுமாகியவடிவுடைநந்தியுஞ்சுறவக்
கோலமாகிவெண்டிரைக்கடல்குளித்தினிதிருந்தான். (நஉ)

குன்றெறிந்தவேற்குழகனுங்கரிமுகக்கோவு
மன்றெறிந்ததந்திரமெலாஞ்சிரமிசையடக்காக்
கன்றெறிந்தவனறிவருங்கழன்மனத்தடக்கா
கின்றெறிந்தவன்மத்தெனவுழக்கிடாகிற்கும். (நங)

கிட்டுந்தோணியைப்படகினேக்கிழிபடவிசைபோய்த்
தட்டுஞ்சோங்கினேமேலிசரக்கொடுங்கவிழ
முட்டுஞ்சீறிமேல்வரும்பலசுறவெலாமுடுக்கி
வெட்டுங்கோடுகோத்தேனையமீனெலாம்வீசும். (நச)

தரங்கவாரிதீர்கலக்கலாற்றந்திரங்கொடுமே
லிரங்குவான்புலவோர்க்கமுதீகையாலெண்ணூர்
புரங்கண்மூன்றையும்பொடித்தவனுணையாற்புனலிற்
கரங்கணுன்கையுங்கரந்தமீன்மந்தரங்கடுக்கும். (நஞ)

தள்ளுநீர்த்திரைபோய்நுளைச்சேரிகள்சாய்ப்பத்
துள்ளுநீர்குடித்தெழுமழைசூலிறப்பாயு
முள்ளுநீண்மருப்புடையமீன்மொய்கலமந்தத்
தெள்ளுநீர்த்துறைநடையறவின்னணந்திரியும். (நக)

எற்றிதாலெனத்துறைமகன்யாமிதுபிடிக்கும்
பெற்றியாதெனக்கிளையொடும்பெருவலைப்பாசம்
பற்றியாழியூர்படகுகைத்தெறிந்தனன்படகைச்
சுற்றிவாய்கிழித்தெயிற்றிறப்பாய்ந்ததுசுறவம். (நஎ)

படவுடைப்பவோர்தோணிமேற்பாய்ந்துமத்தோணி
விடவுறத்தெறித்தெறிந்திடவிசைத்தொருசோங்கி
னிடைபுகுந்துநீள்வலையெறிந்திங்ஙனம்வெவ்வே
றுடல்புகுந்துழலுயிரெனப்பரதனுமுழல்வான். (நஅ)

(நஉ) சடைமகுடம் - சடையாகியமகுடம். (நங) குழகன் - இளையோன். (நச) சோங்கு - ஒருவகைப்படகு. (நஞ) தரங்கவாரி - அலையுடையகடல். (நக) நுளைச்சேரி - நுளையர்வாழூர். (நஎ) படகுகைத்து - படகினைநடத்தி. (நஅ) பரதன் - நெய்தற்றலைவன்.

முன்னர்வீசிஞற்பின்னுறமூளத்தெழுமுயன்று
பின்னர்வீசிஞன்முன்னுறப்பெயர்ந்தெழும்வலத்தி
லுன்னிவீசிஞலிடம்படவுருத்தெழுமிடத்தின்
மன்னிவீசிஞல்வலத்தெழுமகரவேறதுதான். (சுக)

எறிவலைப்படுமகமலர்ந்தீர்ப்பவனுள்ள
மறுதலைப்படவலையினும்வழீஇப்பொருளாசை
நெறிமலர்க்குழனல்லவர்நினைவெனநினைவுற்
றறிபவர்க்கரிதாம்பரம்பொருளெனவகலும். (சo)

ஏவலாளரோடின்னவாறின்னமீன்படுத்தற்
காவதாந்தொழிலியற்றவுமகப்படாதாக
பாவரேயிதுபடுப்பவரென்றிருங்கானற்
காவலாளனும்பரதருங்கலங்களுருழந்தார். (சக)

சுங்கலம்புதண்டுறைகெழுநாடனிச்சலதித்
துங்கமந்தரமெனக்கிடந்தலமருஞ்சுறவை
யிங்கணைந்தெவன்பிடிப்பவனவனியாளீன்ற
மங்கைமங்கலக்கிழானென மனம்வலித்திருந்தான். (சஉ)

நந்திநாதனுமினையனையங்கயலுட்ட
திந்துவாணுதலாளுமங்கனையளாயிருப்பத்
தந்திநாலிரண்டேந்தியதமனியவிமானத்
துந்துநீர்ச்சடையார்மணமுன்னினூர்மன்னே. (சங)

உயர்ந்தசாதியுந்தம்மினுமிழிந்தவென்றுன்னிக்
கயந்தனெஞ்சுடைவலைக்குலக்கன்னியைவேட்பான்
வியந்துகேட்பதெவ்வாறவர்வெறுக்குமுன்னவருக்
கியைந்தமீன்வலையுருவெடித்தேகுதுமென்னே. (சச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருகிருண்முகந்தாலன்னகச்சினன்கச்சோடார்த்த
சுரிகையன்றிரண்மேலிட்டதுகிலினன்குஞ்சிசூட்டு
முருகுகொப்பளிக்குநெய்தற்கண்ணியன்மூத்தவாலே
நிருவருமறையுந்தேடியிளைப்பவோர்வலைஞனென். (சடு)

(சுக) மூளத்தெழும் - தோன்றிக்காணப்படும். (சo) மறுதலைப்பட - வேறுபட. (சக) அருழந்தார் - துன்புற்றார். (சஉ) சலதி - கடல். (சங) தந்தி - யானை. (சச) வேட்பான் - மணம்புரிவான். (சடு) சுரிகையன் - உடைவாளினன்.

முழுதுலகீன்றசேற்கண்முதல்வியையருளிலார்போ
லிழிதொழில்வலைமாதாகச்சபித்தவாறென்னேயென்றும்
பழிபடுசாபமேமூர்பரதராய்வரவும்வேண்டிற்
றழகிதுநன்றுநன்றேயாலவாயடிகள்செய்கை. (சசு)

தன்பெருங்கணத்துளாளுர்தலைவனுஞ்சலதிவாண
னென்பதுதோன்றவேடமெடுத்தெறிவலைதோளிட்டு
வென்புறமலைப்பக்காவிமீனிடுகுடம்பைதாங்கிப்
பின்புறநடந்துசெல்லப்பெருந்துறைப்பாக்கம்புக்கான். (சஎ)

கழித்தலைக்கண்டற்காடுங்கைதையங்கானுநெய்தற்
சுழித்தலைக்கிடங்குநீத்துச்சுஃறெனுந்தோட்டுப்பெண்ணை
வழித்தலைசுமந்துவார்கள்வார்ப்பவாயங்காந்தாம்பல்
குழித்தலைமலர்பூங்கானற்கொடுவலைச்சேரிசேர்ந்தான். (சஅ)

பெருந்தகையமுதன்னுளைப்பெருதுபெற்றெடுப்பானுற்ற
வருந்தவவலைஞர்வேந்தனிசயமகத்துட்டோன்ற
வருந்தகையுடையகாலவலைமகன்வரவுநோக்கித்
திருந்தழகுடையநம்பியாரைநீசெப்புகென்ருன். (சகூ)

சந்தநான்மறைகடேருத்தனியொருவடிவாய்த்தோன்றி
வந்தமீன்கொலைஞன்கூறுமதுரையில்வலைஞர்க்கெல்லாந்
தந்தைபோற்சிறந்துளாளுர்தனிவலையுழவனல்ல
மைந்தன்யான்படைத்துக்காத்துத்துடைக்கவும்வல்லனுவேன். ()

அல்லதுவாண்மீனெல்லாமகப்படவலைகொண்டோச்ச
வல்லவனுவேனென்னமற்றிவன்வலைஞன்கோலம்
புல்லியமகன்கொன்முன்னம்புகன்றசொல்லொன்றிப்போது
சொல்லியதொன்றிரண்டுஞ்சோதனைகாண்டுமென்னு. (ருக)

தொண்டுறைமனத்துக்கானற்றுறைமகனஃதேலிந்தத்
தண்டுறையிடத்தோர்வண்மீன்றழலெனக்கரந்துசீற்றங்
கொண்டுறைகின்றதையகுறித்தறுபிடித்தியேலென்
வண்டுறைகோதைமாதைமணஞ்செயத்தருவேனென்ருன். (ருஉ)

(சசு) பழிபடு - இழிவுபொருந்திய. (சஎ) சலதிவாணன்-கடற்கரைவாழ்க்கையனை நுளையன். (சஅ) கண்டற்காடு-தாழைவனம். (சகூ) நம்பி - ஆண்மகனிற்சிறந்தோய். (ருஉ) வலையுழவன் - வலையினற்றொழில்புரிவோன். அதாவது பாசத்தாலான்மாக்களைக்கட்டுதலும்விடுத்தலும்புரிபவன். (ருக) அல்லது-மேற்கூறியவாறன்றி. (ருஉ) வண்மீன்-சுறாவேறு.

சிங்கவேறனையான்காலிற்சென்னடைப்படகிற்பாய்ந்து
சங்கெறிதரங்கந்தட்பத்தடங்கடல்கிழித்துப்போகிக்
கிங்கரனெனகாலைவரையெனக்கிளைத்தோண்மேற்
றொங்கலிற்கிடந்துஞான்றதொகுமணிவலையைவாங்கி. (நிசு)

செவ்விதிலைக்கியாகந்திருகநின்றெறிந்தான்பக்கங்
கௌவியமணிவில்வீசவிசையொலிகறங்கிப்பாயப்
பைவிரித்துயிர்த்துநாகம்விழுங்கவாய்ப்பட்டமீன்போல்
வெவ்வினைச்சுறவேறையன்விடுவலைப்பட்டதன்றே. (நிஎ)

மாசறுகேளிரன்பின்வலைப்படும்வலைஞர்கோன்முய்
வீசியவலையிற்பட்டமீனினைச்சுருக்கிவாங்கிக்
காசெறிதரங்கமுந்நீர்க்கரையிடையிட்டான்கள்வாய்
மூசுதேனென்னவார்த்துமொய்த்தனபரதச்சாதி. (நிடு)

நிலையுகங்கோனும்வீசுவலைஞராய்க்கிளர்தோளாற்றல்
வினைவொடுமுயன்றுபன்னுள்வினைசெயப்படாதமீனிவ்
வினைவயினுருவன்றானேயொருவிசையெறிந்தானீர்த்தா
னளியநங்குலத்தோர்தெய்வமகனிவனுகுமென்றார். (நிசு)

கைதைசூழ்துறைவலைஞகைகைமிகப்பம்பையேங்க
நொய்தெனநுசுப்பிற்கள்வாய்நுளைச்சியர்குரவைதூங்கப்
பைதழைபகுவாய்க்கச்சைப்பரதவற்கலங்கள்ஞாழல்
செய்தெழுங்கோதைமாதைத்திருமணம்புணர்த்தினானே. (நிஎ)

அந்நிலைதுவைக்கோலமாயினமருகனுரு
மின்னிலைவேற்கணுமும்விண்ணிடைவிடைமேற்கொண்டு
தன்னிலைவடிவாய்த்தோன்றத்தடங்கரைமீனுந்தானு
நன்னிலைவடிவேபோன்றுநந்தியாய்முந்தித்தோன்ற. (நிஅ)

கொற்றவெள்விடைமேற்காட்சிகொடுத்தவர்கருணைநாட்டம்
பெற்றலின்மேலைச்சார்பாற்பிணித்தவிப்பிறவிவாழ்க்கைச்
சிற்றறிவொழிந்துமுந்நீர்ச்சேர்ப்பனல்லறிவுதோன்றப்
பொற்றனுமேருவீரன்பூங்கழலடிக்கீழ்த்தாழ்ந்தான். (நிகூ)

(நிஉ)காலிற்செல் - காற்றைப்போலபோகின்ற. (நிசு) ஆகந்திருக - நின்றநிலையிலுடலத்திரும்ப. (நிடு) கேளிர் - அன்பர். (நிசு) அளிய - தாழ்ந்த. (நிஎ) ஓகை - சந்தோஷம். (நிஅ) மின்னிலை - ஒளிதங்கிய. (நிகூ) சேர்ப்பன் - நுளையர்தலைவன்.

இரக்கமிலிழிந்தயாக்கையெடுத்தழலேழையேனைப்
புரக்கவின்றென்போல்வந்தபுண்ணியவடிவம்போற்றி
யரக்கெறிபவளச்செவ்வாயணங்கினைமணந்தென்பாசங்
கரக்கவெள்விடைமேனின்றகருணையேபோற்றியென்றான். (சுo)

அகவிலான்பரவிநின்றவன்பினைநோக்கிப்பன்னுண்
மகவிலாவருத்தநோக்கியுமையைநாமகளாத்தந்து
தகவினுண்மணந்தேயித்தரணியிற்றனதனென்ன
நகவிலாப்போகமூழ்கிநம்முலகடைவாயென்ன. (சுக)

பெண்ணினைவதுவைக்கீந்தபெருந்துறைச்சேர்ப்பற்கன்று
தண்ணளிசுரந்துநல்கித்தருமமால்விடைமேற்றோன்றி
விண்ணிடைநின்றான்சென்றான்வேத்திரப்படையாளனு
முண்ணிறையன்பரோடுமுத்தரகோசமங்கை. (சுஉ)

அங்கிருந்தனுதிமூர்த்தியாதிநான்மறைகளேத்துங்
கொங்கிருங்கமலச்செவ்விக்குரைகழல்வணங்கிக்கேட்டப்
பங்கிருந்தவட்குவேதப்பயனெலாந்திரட்டிமுந்நீர்ப்
பொங்கிருஞ்சுதைபோலட்டிப்புகட்டினனென்செவிகளார. (சுங)

மேற்படி - வேறு.

அவ்வேலையன்புடையாரறுபதிஞ்யிரவர்க்குமளித்துப்பாச
வெவ்வேலைகடப்பித்தவீடாதபரானந்தவீடுநல்கி
மைவ்வேலையனையவிழியங்கயற்கணங்கையொடுமதுரைசார்ந்தா
னிவ்வேலைநிலம்புரக்கமுடிகவித்துப்பாண்டியனென்றிருந்தமூர்த்தி

வலைவீசின படலம் முற்றிற்று.

அ படலம் - சுசு-க்கு திருவிருத்தம் - உஎகஉ.

ஐம்பத்தெட்டாவது,

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்.

கோச்சகக்கலிப்பா.

கலைவீசுமதிச்சடையோன்கடற்றுறைவன்றலைச்சென்று
வலைவீசியவன்பாசவலைவீசும்பரிதிமே
லலைவீசும்புனல்வாதவூரைவந்தவிச்சைவலி
நிலைவீசிப்பணிகொண்டநெறியறிந்தபடிமொழிவாம். (க)

(சுo) கரக்க - மறைய.(சுக) நகவு-இகழ்வு.(சுஉ)வேத்திரப்படையாளனு - பிரம்பாயுதமுடைய நந்தியெம்பெருமானுடன். (சுங) கொங்கு-வாசனை. (சுச) அளித்து - உபதேசம்புரிந்து. வெவ்வேலை-கொடியபிறவிக்கடல். (க) கலை-நிலா.

தொடுத்தவறுமையும்பயனுந்தூக்கிவழங்குனர்போல
வடுத்தவயற்குளநிரப்பியறம்பெருக்கியவனியெலா
மூடுத்தகடலொருவற்குமுதவாதவுவரியென
மடுத்தறியாப்புனல்வைகைக்கரையுளதுவாதவூர் (உ)

விழவுறுநகரெங்கும்விருந்தறுமனையெங்கு
மழவுறுமகிழ்வெங்குமறையுறுகிடையெங்கு
முழவுறுவரங்கெங்குமுகிலுறுபொழிலெங்கு
முழவுறுவயலெங்குமுடம்பறுவுயிரென்ன. (ஊ)

ஆயவளம்பதியதனினமாத்தியரிலருமறையின்
றாயகிவாகமநெறியின்றுறைவிளங்கவஞ்சனையான்
மாயனிடும்புத்தவிருளுடைந்தோடவந்தொருவர்
சேயவிளம்பரிதியெனச்சிவனருளாலவதரித்தார். (எ)

பேர்வாதவூரெனப்பெற்றுத்தம்பிறங்குமறைச்
சார்வாயநூல்வழியாற்சடங்கெல்லாநிறைவெய்தி
நீர்வாயவிளமதிபோனிரம்புவார்வேதமுதற்
பார்வாயெண்ணெண்கலையும்பதினருண்டினிற்பயின்றார். (ஏ)

இத்தகையோர்நிகழ்செய்தியறிந்தவர்சென்றியம்பவரி
மர்த்தனபாண்டியன்கேட்டுவரவழைத்துமற்றவரைச்
சித்தமகிழ்வரிசையினுற்சிறப்பளித்துத்தன்கோயில்
வித்தகனமதியமைச்சின்முழில்பூட்டிமேம்படுத்தான். (ஐ)

செற்றமிகுங்கருவிகளின்றிறநூலுமதுவேந்தன்
சொற்றபெருந்தொண்ணூலுந்தளக்கமுறவிளகமுறக்
கற்றறிந்தோராதலினுற்காவலற்குக்கண்போன்ற
முற்றுணர்ந்தவமைச்சரினுமுதலமைச்சராய்நிகழ்வார். (ஒ)

புல்லாதார்முரணடக்கிப்பொருள்கவர்வாரென்பதெவன்
செல்லாதபல்வேறுநீபத்துச்செங்கோன்மை
வல்லாருந்தத்தமதேத்தியபொருள்வரவிடுத்து
நல்லாராயொப்புரவுநடப்படையநடக்கின்றார். (ஓ)

(உ) உவரியென-உவர்க்கத்தக்கதென்று,உவர்த்தல், வெறுத்தல். (ஊ) கிடை-வேதபாடசாலை. (எ) அமாத்தியரில்-அமாத்தியரெனப் பெயர்வாய்ந்தவர்களில். (ஏ) நீர்வாய் - நீர்த்தன்மையுடையதாகிய. (ஐ) நிகழ்செய்தி - நடக்குந்திறம். (ஒ) செற்றமிகு-கோபமிக்க. (ஓ) புல்லாதார் - பகைவர்

அண்ணலரிமருத்தனனுக்கடல்வாதவூரமைச்சர்
கண்ணுமிகவசமும்போற்காரியஞ்செய்தொழுகுவார்
தண்ணளிசெய்தவனியெலாந்தங்கிளேபோற்குளிர்தூங்க
வண்ணமதிக்குடைநிழற்றிமுறைசெய்துவாழ்நாள். (கூ)

கலிநிலைத்துறை.

மெய்ம்மையாம்பொருள்விவேகமும்வேறுபாடாய
பொய்ம்மையாம்பொருள்விவேகமும்புந்தியுட்டோன்ற
விம்மையாசையுமறுமையிலாசையுமிகந்து
செம்மையாகியகருத்தராய்ப்பரகதிதேர்வார். (கo)

புத்தராதியோர்புறவுரைநெறிகளும்பொய்யா
கித்தவேதநூறழுவியவகவுரைநெறியுஞ்
சித்தமாசறுத்தானருட்டெளிவியாவதனுன்
மித்தையாணவத்தொடக்கறுதில்லையாம்வீடும். (கக)

பத்திசெய்தானருட்பெறும்பத்தருக்கன்றி
முத்தியெய்தரிதென மறைமொழிவதப்பொதுநூல்
சத்தியப்பொருட்டெளிவெலாஞ்சத்திபாதர்க்
குய்த்துணர்த்தியதாகமமென்பர்மெய்யுணர்ந்தோர். (கஉ)

வேதவாகமச்சென்னியில்வீளேபொருளபேதம்
பேதமாகியபிணக்கறுத்திருட்பிணியவிழ்த்து
ஈதலுகியதன்னேயுமென்னேயுநல்கும்
போதலுகியகுருபரன்வருவதெப்பொழுதால். (கங)

கரவிலாதபேரன்பினுக்கெளிவருங்கருணைக்
குரவனுருளன்றியிக்கொடியவெம்பாசம்
புரையில்கேள்வியாற்கடப்பதுபுணையிலுலன்றி
யுரவுநீர்க்கடல்கரங்கொடுநீந்துவதொக்கும். (கச)

என்றிவ்வாதவூர்மறையவரின்பவீடெய்தத்
துன்றுமாசையாற்றொடக்குண்டுசுருதியாகமநூ

(கூ) கவசம் - ஆயுதமுதலிய படாதுதடுக்க விடுமொரு அங்கி. (கo) மெய்ம்மையாம் பொருள் விவேகம்-நித்தியவத்து விவேகம். பொய்ம்மையாம்பொருள் விவேகம்-அனித்தியவத்துவிவேகம். (கக) புறவுரை - அவைதிகமொழி. (கஉ) வேதவாகமச்சென்னியில்-வேதாந்த சித்தாந்தங்களில். வீளே உண்டாகின்ற. (கச) கரவிலாத-மறைவற்ற. (கஞ) துன்றும் - நெருங்கிய.

லொன்றுகேள்வியோர்வருந்தொறுமுணர்ந்தவரிடைத்தாஞ்
சென்றுகாண்டொறுமளவளாய்த்தேர்குவாராஞர். (கடு)

எண்ணிலாரிடத்தளந்தளந்தறிபொருளெல்லா
முண்ணுநீர்விடாய்க்குவரிநீருண்டவரொப்ப
வண்ணலாரகத்தமைவுறுதரசனுக்குயிருங்
கண்ணுமாயமைச்சரிமையுங்கைவிடாதியல்வார். (கசு)

கள்ளக்காதலனிடத்தன்புகலந்துவைத்தொழுகு
முள்ளக்காரிகைமடந்தைபோலும்பரைக்காப்பான்
பள்ளக்காரியுண்டவனிடத்துள்ளன்புபதிந்து
கொள்ளக்காவலனிடைபுறத்தொழிலுமுட்கொண்டார். (கஎ)

இன்னசெய்கையிலெழுகுவாரொருபொழுதேகித்
தென்னர்தம்பிரானவையிடைச்சென்றெதிர்நின்ரு
ரன்னபோதடுபரிநிரைகாப்பவரரசன்
முன்னர்வந்துதாழ்ந்தொருசிறைநின்றிதுமொழிவார். (கஅ)

மறந்தவாதவேல்வலவநம்வயப்பரிவெள்ளத்
திறந்தவாம்பரிபோகநின்றெஞ்சியவெல்லா
நிறைந்தநோயவுநெடிதுமூப்புடையவுமன்றிச்
சிறந்தவாம்பரியொன்றிலேதேர்ந்திடினென்ரூர். (ககூ)

மன்றல்வேம்பணும்வாதவூர்வள்ளலேநோக்கி
யின்றுநீர்மதுறைதிறந்திருநிதியெடுத்துச்
சென்றுவேலையந்துறையில்வந்திறங்குவதெரிந்து
வென்றிவாம்பரிகொடுவரப்போமென்றுவிடுத்தான். (உ0)

உள்ளம்வேறுபட்டமைச்சியனெறியினின்ரெழுகும்
வள்ளலார்நிதியறைதிறந்தரும்பெறல்வயமான்
கொள்ளவேண்டியபொருளெலாங்கொண்டுதாழிறுக்கி
வெள்ளமாமதிவேந்தனேவிடைகொடுபோவார். (உக)

எடுத்தபொற்சுமையொட்டகத்திட்டுமுன்னேக
விடுத்துவிண்டொடுதிண்டிறல்விடையவன்கோயி

(ககூ) எண்ணிலார்-அளவிலார். (கஎ) கள்ளக்காதல னிடத்து - சோர நாயகனிடத்து. (கஅ) தென்னர் தம்பிரான்-பாண்டியர்கள் தலைவன். (ககூ) மறந்தவாத-வீரநீங்காத. (உ0) மன்றல் - மணம். (உக) அரும்பெறல்-கிடைத்தற்கரிய. (உஉ) விண்டொடு - வானமளாவிய.

லடித்தவிழ்ந்தபொன்னம்புயத்தடம்படிந்தனைய
மடித்தடங்கரைச்சித்தியைங்கரத்தனைவணங்கா. (உஏ)

கருணைநாயகியங்கயற்கண்ணியெம்பிராட்டி
யருணநாண்மலர்செய்யசீறடித்தலமிறைஞ்சி
வருணஞர்பெருவயிற்றுநோய்வலிகெடுத்தாண்ட
தருணநாண்மதிச்சடையுடையடிகண்முன்ருழா. (உஐ)

ஒன்றுவேண்டுமிப்பொருளெலாமுனக்குமைம்பொறியும்
வென்றுவேண்டுநின்னன்பர்க்குமாக்குகவெள்ளி
மன்றுவேண்டிநின்ருடியவள்ளலென்குறையீ
தென்றுவேண்டிநின்றேத்துவார்க்கிறைவனின்னருள்போல். (உஒ)

ஆதிசைவனுமருச்சகனெருவனேரணைந்து
பூதியீந்தனனமக்கிதுபோலிலிங்கித்த
மீதுநன்னெறிக்கேதுவென்றிருகையேற்றணிந்து
வேதநாதனையிறைஞ்சினர்விடைகொடுமீண்டார். (உகூ)

கலிவிருத்தம்.

இன்னிய மதிர்ந்தன வெழுந்தன பதாதி
துன்னிய வினைக்கவரி தூள்ளின துகிர்க்காற்
பொன்னியன் மதிக்குடை நிழன்றன பொலங்கொண்
மின்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார். (உசு)

மற்றிவர் வழிப்படுமுன் மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர் வினைத் தொகையி னெப்பும்
பற்றிய விருட்டுமல பக்குவமு நோக்கா
வுற்றடிமை கொண்டுபணி கொண்டருளவுன்னு. (உஎ)

சந்தமறை தீண்டரிய தங்கருணையாலோ
ரந்தணர் குலக்குரவ ரூகியடி நீங்கா
மைந்தர்பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்
கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார். (உஅ)

பொருங்கட லனீகமொடு போய்ப்புற வடித்த
விருங்கட மளப்பிலக டந்தெழு பிறப்பாங்

(உகூ) அருண நாண்மலர் - செந்நிறமான அன்றலர்ந்த மலர். (உசு) ஆக்குக - ஆமாறுசெய்க. (உகூ) பூதியீந்தனன்-விபூதிகொடுத்தான். (உசு) இன்னியம் - இனியவாத்தியம். (உஎ) வினைத்தொகையின் ஒப்பும்-இருவினைக் கூட்டத்தின் சமத்துவமும். (உஅ) சந்தமறை-இரட்டைமுதலிய இலக்கணங்களையுடைய வேதம்.

கருங்கடல் கடக்கவரு வார்கருணை வெள்ளப்
பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார். (உசு)

அடித்திட வடித்திட வகத்து வகைவெள்ள
மடித்திட முகிழ்த்தகைம் மலர்க்கமல முச்சி
தொடுத்திட விழிப்புன றுளித்திட வினைக்கே
விடுத்திடு மனத்தருள் வினைந்திட நடந்தார். (ஈ0)

பித்திது வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வெளிச்சுமை பொறுத்தோ
ளெத்திழி பிணிப்புறு மொருத்தனையு மொத்தார். (ஈக)

நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
யுருக்குமித ஞலெனை யொளித்த மலவாற்றல்
கருக்குமவ ஞகியெனை யாள்கருணை வெள்ள
யிருக்குமிட னேயிதென வெண்ணினகர் புக்கார். (ஈஉ)

காயிலை யடைந்தகழு முட்படை வலத்தார்
கோயிலை யடைந்துகுளிர் வான்புனல் குடைந்து
வாயிலை யடைந்துடல மண்ணுற விழுந்து
வேயிலை யடைந்தவரை மெய்ப்புகழ் வழுத்தா. (உஈ)

ஆலய மருங்குவல மாகவரு வார்முன்
மூலமறை யோதிமுடி யாதபொரு டன்னைச்
சிலமுனி வோர்தெளிய மோனவழி தேற்றுங்
கோலமுறை கின்றதோர் குருந்தையெதிர் கண்டார். (ஈசு)

கலிநீலத்துறை.

வேதநூலொருமருங்கினுமெய்வழிச்சைவப்
போதநூலொருமருங்கினும்புராணத்துட்கிடந்த
நீதநூலொருமருங்கினுங்கிளைகெழுசமய
பேதநூலொருமருங்கினும்வாய்விட்டுப்பிறங்க. (ஈடு)

(உசு) அனீகம் - சேனை. புறவடித்த-காடுகளை யுடைய. கடம்-வழி. (ஈ0) உவகை - சந்தோடம். (ஈக) பித்திதுவென - பைத்தியகுண மிதுவென்று. (ஈஉ) கருணைவள்ளல் - கிருபையே வடிவமான கட வுள். (ஈஈ) வேயிலை - மூங்கிலை. (ஈசு) மோனவழி - மௌனமார்க் கத்தால். கோலம்- ஆசாரியவடிவம். (ஈடு) சைவப்போதநூல்-சிவஞா னநூல். அது, ஆகமஞானநூல்.

சுருதிகூறியவறமுதலொன்குமத்தொன்னூற்
கரியதாங்கதிக்கேதுவென்முகமங்காட்டுஞ்
சரியையாதிநாற்பாதமுந்தலைதெரிந்துணர்ந்த
பெரியமாணவர்கழகமும்விளைவிடைபேச. (நகக)

சரியையல்லமெய்த்தொண்டருஞ்சம்புவுக்கினிய
கிரியைசெய்யுநன்மைந்தருங்கிளர்சிவயோகந்
தெரியுஞ்சாதகக்கேளிருந்தேசிகத்தன்மை
புரியும்போதகச்செல்வருமளவிளர்பொலிய. (நகஎ)

ஒழித்தநோன்பினராடலர்பாடலருலகம்
பழித்தசெய்கையரழுகையர்நகையினர்பாசங்
கழித்தகண்களாலரனுருக்கண்டுகொண்டுலகில்
வீழித்தகண்குருடாத்திரிவீரும்பலரால் (நகஅ)

கரவிலுள்ளமாம்விசும்பிடைக்காசறவிளங்கும்
பரசிலாச்சுடர்க்குதயமீறின்மையாற்பகலு
மிரவுநேர்படக்கண்டிலரியன்றுசெய்நித்த
விரதமாதிநோன்பிழந்துறைவிஞ்சையர்பலரால். (நஉக)

உடையுங்கோவணமுண்டியுங்கைப்பலியுறவென்
றடையுங்கேளிருமரணடியார்கண்டிகலன்கண்
படையும்பாரிடமாயினும்பகலிராமுதலீ
றிடையின்றுமிடத்துறங்குவதிந்தவர்வாழ்க்கை. (நஉ0)

இத்தகைப்பலதொண்டர்தங்குழாத்திடையால
மொத்தபைங்குருந்தடியினில்யோகவாசனத்திற்
புத்தகத்தெழுதியசிவஞானமெய்ப்போதங்
கைத்தலந்தரித்திருப்பதோர்கருணையைக்கண்டார். (நஉக)

மன்றுளாடியவானந்தவடிவமும்வடவா
லொன்றிநால்வருக்கசைவறவுணர்த்தியவுருவு
மின்றுநாயினேற்கெளிவந்தவிவ்வுருவென்னு
வன்றுநாயகன்குறிப்புளத்துணர்த்திடவறிந்தார். (நஉஉ)

(நகசு) அத்தொன்னூற்கு-அப்பழையவேதத்திற்கு. (நகஎ) போதகச்செல்வர் - ஆசாரியசம்பன்னர். (நகஅ) ஒழித்தநோன்பினர் - விரதானுட்டானங்களைவிட்டவர். (நகக) கரவில்-பொய்யில்லாத. (நஉ0) கைப்பலி - கரபிச்சை. (நஉக) ஆலமொத்த - ஸ்ரீகைலாயத்திலுள்ள கல்லாலமரத்தினைப்போன்ற. (நஉஉ) மன்றுளாடிய - அம்பலத்திலானந்ததாண்டவம்புரிந்த.

மூன்பணிந்தனரணிந்தனரஞ்சலிமுடிமே
லென்புநெக்கிடவுருகினரினியராயெளிவந்
தன்பெனும்வலைப்பட்டவரருள்வலைப்பட்டார்
துன்பவெம்பவவலையறுத்திடவந்ததொண்டர். (௫)

காலமுங்களுக்காட்சியுநிமித்தமுங்கடிந்தான்
சீலமாணவர்செவ்விதேர்தேசிகனென்ன
மூலவாமகமோதினுண்முறுக்கவிழ்கழுநீர்
மாலைசாந்தணிந்தடியின்மேல்வன்கழல்வீக்கி. (௬)

அண்ணல்வேதியரொழுக்கமுமன்புங்கண்டியாக்கை
யுண்ணிலாவுயிர்பொருட்புனலுடன்கவர்ந்துள்ளக்
கண்ணிலுன்மலங்கழீஇப்பதகமலமுஞ்சூட்டி
வண்ணமாமலர்ச்செங்கரஞ்சென்னிமேல்வையா. (௭)

சூக்கமாகுமைந்தெழுத்தினிற்சுற்றியபாச
வீக்கநீக்கிமெய்யானந்தம்வினைநிலத்துய்த்துப்
போக்குமீட்சியுட்புறம்பிலாப்பூரணவடிவ
மாக்கிலுலெருதீபகம்போல்வருமண்ணல். (௮)

பார்த்தபார்வையாலிரும்புண்டநீரெனப்பருகுந்
தீர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்ததுந்தம்மைப்
போர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத
மூர்த்தியாயொன்றுமறிந்திலர்வாதவூர்முனிவர். (௯)

தேனும்பாலுந்தீங்கன்னலுமமுதுமாய்த்தித்தித்
தூனுமுள்ளமுமுருக்கவுள்ளொளியுணர்ந்தின்ப
மானவாறுதேக்கிப்புறங்கசிவதொத்தொழியா
ஞானவாணிவந்திறுத்தனளன்பர்தந்நாவில். (௰)

தொழுதகையினர்துளங்கியமுடியினர்துளும்ப
வழுதகண்ணினர்பொடிப்புறுமியாக்கையர்நாக்குழற்
றழுதழுத்தவன்புரையினர்தமையிழந்தழல்வா
யிழுதையன்னமெய்யினர்புணர்ந்தேத்துவாராஞர். (௰௧)

---

(௫) அருள்வலை - கருணையாகியவலை. (௬) சீலமாணவர் - ஞானாசாரத்தினையுடைய சன்மார்க்கசீடர். (௭) மலங்கழீஇ-பாசமோசனஞ்செய்து. (௮) சூக்குமமாகுமைந்தெழுத்தினில்-சூக்கும பஞ்சாக்கரத்தினில். (௯) தம்மையுமென்றது - பசுபோதத்தை. (௰) கண்ணல்-கரும்பு. (௰௧) இழுதையன்ன - நெய்யையொத்த.

பழுதிலாதசொன்மணியினப்பத்திசெய்தன்பு
முழுதுமாகியவடத்திலுன்முறைதொடுத்தலங்க
லழுதுசாத்துமெய்யன்பருக்ககமகிழ்ந்தையர்
வழுவிலாதபேர்மாணிக்கவாசகனென்றார். (சுo)

பாட்டிற்கின்புறுருருபரன்பாதமேற்கண்ணீ
ராட்டிச்சொன்மலரணிந்துதற்போதவின்னமுதை
யூட்டித்தற்பரஞானமாமோமவெங்கணலை
மூட்டிசம்புவின்பூசைமேன்முயற்சியாராஞர். (சுக)

ஆசைவெம்பவவாசனையற்றுமாணிக்க
வாசகப்பிரான்றேசிகன்மாணவரோது
மோசையாகமவுபனிடப்பொருளெலாங்கேட்டு
நேசமங்குவைத்திருந்தனனதுகண்டிருத்தன். (சுஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தித்திக்குமணிவார்த்தையின்னஞ்சின்னஞ்சிறுச்செவியிலருந்
தவங்கைச்செம்பொனெல்லாம், பத்திப்பேரன்பளித்துக்கவர்ந்து
வேண்டும்பணிகொடுபாண்டியனெயிவர்பண்புதேற்றி, முத்திக்கே
விடுத்திடவும் புத்தைவாதுமுடித்திடவுந்திருவுள்ளமுன்னமெய்தி,
யெத்தித்தொண்டரைக்கருமஞ்சிறிதுண்டிங்கேயிருத்தியெனவுருக்
கரந்தானடியரோடும். (சுஊ)

கனவில்வருங்காட்சியெனக்கருணைசூர்த்தி காட்டிமறைத்தலு
மன்பர்கலக்கத்தாழ்ந்து, நனவுகொல்லோகனவுகொல்லோவின்று
நாதன்ஞமலிக்குத்தவிசிட்டநலம்போலென்னே, நினைவரியதிருமே
னிகாட்டியாண்டுநீத்ததையென்றையுற்றுநெஞ்சந்தேறி,யிவனடியா
ருடன்கூட்டாதேகினையோவென்னையுமென்வினையையுமிங்கிருத்தி
யெந்தாய். (சுஎ)

வஞ்சவினைக்கொள்கலனுமூடலைத் தீவாய்மடுக்கிலேன்வரையு
ருண்டுமாய்ப்பேனல்லே, னஞ்சொழுகுவாளாலுங் குறைப்பேனல்
லேனுனையதுவு நினதுடைமையென்றே, யஞ்சினேன்றனையு
மழியாதாவியையனேனினப்பிரிந்துமாற்றகில்லே, னென்செய்கோ
வெந்தாயோவெந்தாயோ வென்றிரங்கினார் புரண்டழுதாரினைய
சொல்வார். (சுஙி)

(சுo) வடத்திலுல்-கயிற்றிலுல். (சுக) தன்போத வின்னமுதம்-பசுபோதமாகிய இனிய அமுதம். ஊட்டி - நிவேதித்து. (சுஉ) தேசிகன் - ஆசாரியனது. (சுஊ) கவர்ந்து - கிரகித்து. (சுஎ) கலக்கத்தாழ்ந்து-துன்பத்துண்முழுகி. (சுஙி) வஞ்சவினை-பொய்த்தொழில்.

வறியனுமொருபிறவிக் குருடன்கையில்வந்தபெருவீலை மணி போன்மழலேதேரச், சிறியனுமொருமதலைகையிற்கொண்டசெம் பொன்மணிவள்ளம்போற்றேவர்யாவர்க்கு, மறிவரியாய்சிறியேனை யெளிவந்தாண்டவருமையறியேன்றுன்பத்தழுவத்தாழப், பிறிவறி யாவன்பரொடுமகன்றுய் கல்லாப்பேதையேன் குறையலதெம்பிரா னுலென்னே. (ருசு)

கோச்சகக்கலிப்பா.

மண்ணுதியாருறுமனந்துழாவித்தடுமாறிப்
புண்ணுகியெனைக்காணுதுழல்கின்றேனைப்போதவருட்
கண்ணுலவைமுழுதுங்கரையநோக்கியான்யானென்
றெண்ணுவெனைத்தந்தாயெங்குற்றாயோவெந்தாயே. (ருஎ)

வாளுதியைத்தழுதல்வகுத்தவோசைமுதலேந்து
மாளுதியங்குமனமாதிநான்கும்வழியடைப்பத்
தேளுதியறுசுவையுங்கழியவூறுந்தெள்ளமுதம்
யாளுரனல்கினையாலெங்குற்றாயோவெந்தாயே. (ருஅ)

மாசாய்மறைக்குமலவலியும்நாணும்வேறின்றி
யாசாவிகாரமலமாயினேனைப்பொருட்படுத்திப்
பேசாதசவின்புருவினின்ஞடென்னைப்பின்வைத்த
வீசாவெனையிங்கிட்டெங்குற்றாயோவெந்தாயே. (ருக)

கலிநிலைத்துறை.

என்றுவாய்திறந்தரற்றினுரிரங்கினுர்புனிற்றுக்
கன்றுநீங்கியவானெனக்கரைந்தநெஞ்சினராய்ச்
சென்றுகோபுரவாயிலின்புறம்புபோய்த்திரண்டு
நின்றகாவலன்றமர்களோநேர்ந்தனர்நோக்கா. (சுo)

துங்கவாரியிற்கடும்பரித்தொகையெலாமாடித்
திங்களின்றலைவருமெனமுன்புபோய்த்தென்னர்
புங்கவன்றனக்குணர்த்தமின்பேர்மெனவிடுத்தா
ரங்கணையகன்பெருந்துறைநாயகனன்பர். (சுக)

புரசைமாலயப்புரவிதேர்ப்பொருநர்போய்ப்பொறிவண்
டிரைசெய்தார்முடிவேந்தன்முனிறைஞ்சிஞருள்ள
தூரைசெய்தாரதுகேட்டொன்றுமுரைத்திலனிருந்தா
னிரைசெய்தார்ப்பரிவரவினேநோக்கியிருபன். (சுஉ)

(ருசு) மழலை-இரம்பாஇளஞ்சொல். (ருஎ) போதவருட்கண்ணுல்-ஞானமாகியஅருள்நயனத்தால். (ருஅ) தெள்ளமுதம்-தெளிந்தஅமுதம். (ருக) மாசாய் - தெளிவற்றதன்மையாய். (சுo) அரற்றினுர் - ஓசைகாட்டியழுதார். (சுக) இங்களின்றலை - மாதத்தினில். (சுஉ) புரசை - கழுத்துக்கயறு.

வள்ளல்வாதவூர் முனிகளுமன்னவன்பரிமாக்
கொள்ளநல்கியபொருளெலாங்குருந்தில்வந்தாண்ட
பின்னவாண்மதிச்சடைமுடிப்பெருந்துறைமறையோர்க்
குள்ளவாதரம்பெருகமுன்வேண்டியாங்குய்ப்பார். (சுசூ)

சிறந்தபூசைக்குந்திருவிழாச்சிறப்புக்குஞ்செல்வ
நிறைந்தவாலயத்திருப்பணித்திறத்துக்குநிரப்பி
யறந்தவாதபேரன்பர்க்குஞ்செலுத்தியத்தலத்தே
யுறைந்தவாவறவின்னணமொழுகிநாள்கழிப்பார். (சுசு)

எல்லைகூறியகுளிர்மதியுடுக்கவந்தெய்த
மல்லல்யானையானின்னமும்வயப்பரிவந்த
தில்லையாலிதுவென்னெனவோலையுமெழுதிச்
செல்லவுய்த்தனன்வாதவூரமைச்சர்தந்திருமுன். (சுசுஇ)

மன்னவன்றிருமுகங்கண்டுமுறைமையால்வாங்கி
யன்னவாசகந்தெரிந்துகொண்டாதியீறில்லா
முன்னவன்றிருவருட்கடன்மூழ்கியமுனிவ
ரென்னவேறினிச்செய்யுமாறென்றுநின்றயர்வார். (சுசுசு)

சிந்தையாகியசெறுவினுட்சிவமுதலோங்கப்
பந்தபாசம்வேரறக்கலாந்தருட்புனல்பாய்ச்சி
யந்தமாதியின்றுகியவானந்தபோகந்
தந்ததேசிகவுழவன்றன்கோயிலேச்சார்ந்தார். (சுஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்னுயகனேபொன்னுடரேறேயுறுகொடியுயர்த்த
மன்னுதென்னுபெருந்துறையெம்மணியேவழுதிபொருளெல்லா
நின்னுலயத்துநின்னடியாரிடத்துஞ்செலுத்துநெறியளித்தாய்
பின்னுனவனுக்கென்கொண்டுபெருமாச்செலுத்தப்பெறுமாறே.(சுஅ)

என்னுவிறைஞ்சியெழுந்தேத்தியிரந்தாரெதிரேபெருந்துறையின்
மின்னுர்சடைமேற்பிறைமுடித்தோன்விசும்பினிறைந்த திருவாக்கா
மன்னுனவர்க்குப்பரியெல்லாம்வருமென்றுலவிடுதியெனச் [ன்
சொன்னுன துகேட்டகத்துவகைதுளும்பிவரைந்துசுருள்விடுத்தார்

அந்தவோலைப்பாசுரமுமறையக்கேட்டுநின்றுங்கோர்
சிந்தையாலுமகிழ்சிறப்பவிருந்தான்புரவித்தேரோடும்

(சுசூ) குருந்தில் - குருந்தமா நிழலில். (சுசு) அறந்தவாத - நூல வினின்றுந் தவறாத. (சுசுஇ) எல்லைகூறிய - காலவவதியுரைத்த. (சுசுசு) திருமுகம் - அரசனுலே. இது மங்கலமொழி. (சுஎ) செறுவி னுள் - வயலினுள். (சுஅ) நெறி - மார்க்கம்.(சுகூ)துளும்ப - ததும்ப.

வந்தவாதிச்செங்கதிரோன்மறைந்தானவனுல்வையமெலாம்
வெந்தவேடைதணிப்பான்போன்முளைத்தாஞதி வெண்கதிரோன்.

அன்றுதயிலும்வாதவூரடிகள்கனவிற்சுடர்வெள்ளி
மன்றுகிழவர்குருந்தடியில்வடிவங்காட்டியெழுந்தருளி
வென்றிவேந்தன்மனங்கவரும்விசயப்பரிகொண்டணைகின்றே
மின்றுநீமுன்னேகுதியென்றருளிச்செய்யவெழுந்திருந்தார். (எக)

கனவினிடத்துந்தேவர்க்குங்காண்டற்கரியகருணையுரு
ணனவினிடத்துங்கனவிடத்துமெளிதேயன்றோநமக்கென்ன
நினைவினிடைக்கொண்டிருக்கின்றூர்நிருத்தானந்தச்சுடருள்ளத்
தினவிருளைத்தின்றெழுவதெனவெழுந்தானிரவியிரவொதுங்க. எஉ

எழுந்தாருடையபெருந்துறையாரிருதாள்பணிந்தாரினிப்பிறப்பி
லழுந்தார்வழிக்கொண்டாரடைந்தாரகன்றூர் நெறிகளவிர்திங்கட்
கொழுந்தார்சடையார்விடையார்தென்கூட லேனந்தார் பாடளிவ
டுழுந்தார்வேந்தன்பொற்கோயிலுற்றூர்காணப்பெற்றூரால். [ண்

மன்னர்பெருமானெதிர்வந்தமறையோர்பெருமான்வழிபாடு
முன்னர்முறையாற்செய்தொழுகிமுன்னேநிற்கமுகநோக்கித்
தென்னர்பெருமானெவ்வளவுசெம்பொன்கொடுபோயெவ்வளவு
நன்னரிவளிகொண்டதெனக்கேட்டான்கேட்டநான் மறையோர்.

பொன்னுமளவோவிலகொண்டபுரவித்தொகையுமனைத்தவைதாம்
பின்னர்வரக்கண்டருளுதியெம்பெருமானிதனுற்றுரங்கபதி
யென்னுநாமம்பெறுதிமதியென்றுரென்றமந்திரர்க்குத்
தென்னன்சிறந்தவரிசையளஞ்செய்துவிடப்பச்செல்கின்றூர். (எடி)

பொன்னங்கமலத்தடம்படிந்துபுழைக்கைமதமாமுகக்கடவு
டன்னங்கமலசரணைறைஞ்சித்தனியேமுளைத்தசிவக்கொழுந்தை
மின்னங்கயற்கட்கொடிமருங்கில்விளைந்ததேனைமுகந்துண்டு
முன்னங்கருத்துமொழியுடம்புமுன்றுமன்பாய்த்தோன்றினூர். ()

மன்னேயென்னேயாட்கொண்டமணியேவெள்ளிமன்றுடு
மன்னேயடியேன்வேண்டியதுமாறாசனீந்தநிதியெல்லா
முன்னேகொண்டென்பணிகொண்டாய்முனியாதரசனனிமகிழ
வென்னேபுரவிவருமவ்வண்ணமென்றுவேண்டிநின்றிடலும். (எஎ)

(எ0) ஆஞ - நீங்காத. (எக) கிழவர் - உரியவர். கிழமை-உரிமை. (எஉ) இனவிருள் - மலக்கூட்டமாகிய விருள்.(எச)நன்னர்/இவளி-கல்லகுதிரை.(எடி)பெறுதிமதி-பெறுவாயாக இதின்மதி அசையென்ப-மதிநினேப்பாயாக என்றுமாம்.(எசு)கருத்துமொழியுடம்பு-மனே வாக்குக்காயங்களான திரிகரணங்கள்.(எஎ)முனியாது-கோபியாது.

மெய்யன் புடையாயஞ்சலிநீவேட்டவண்ணம்விண்ணிரவி
வையம்பரிக்கும்பரியனையமாக்கொண்டுவருதுமென
வையன்றிருவாக்ககல்விசும்பாறெழுந்ததாகவதுகேட்டுப்
பொய்யன்பகன்ஞர்சிவன்கருணைபோற்றிமனையிற்போயினர். (எஅ)

மேற்படி - வேறு.

கடிமனையடைந்தவெல்லைவாதவூர்க்காவலாரை
மடிமையில்சுற்றத்தோருங்கேளிருமாண்டகாத
லடிமையுள்ளாருமேதிலாளரும்பிறருமீண்டி
யிடிமழைவாய்விட்டென்னப்புந்திகளினையசொல்வார். (எக)

மந்திரக்கிழமைபூண்டுமன்னவர்கருமஞ்செய்வ
தந்தணர்க்கறனையல்லவமைச்சியலறத்துறின்ஞல்
வெந்திறலரசர்க்கேற்றசெய்வதேவேண்டுமென்னத்
தந்திரமநுநூல்வல்லோர்சாற்றுவாரன்ஞுவையா. (அ0)

அரசியலமைச்சுநீதியாய்ந்துநுங்கட்குநாங்க
ளுரைசெய்வதெவனீர்செய்வதொன்றுநன்ஞுவதில்லை
விரைசெறிதாராற்கின்றவெம்பிரானுவதாக
வுரையறைசெய்தீர்நாமெயென்சொலவல்லீரையா. (அக)

கழுவியகிளைஞர்நட்டோர்சார்வுளோர்தக்கசான்ஞோர்
குழுவினைக்காக்கவேண்டுங்குறிப்பிலீர்போலுநீவி
ரொழுகுறுசெயலீஞலேயுஞ்செயலுமக்கேசால
வழகுதுபோலுமென்னக்கழறினுதுகேட்டையன். (அஉ)

சுற்றமுந்தொடர்புநீத்தேந்துன்பமுமின்புமற்றோம்
வெற்றுடன்மானந்தீர்ந்தேம்வெறுக்கைமேல்வெறுக்கைவைத்தேஞ்
செற்றமுஞ்செருக்குங்காய்ந்தேந்தீவினையிரண்டுந்தீர்ந்தேந்
கற்றைவார்சடையான்கோலங்காட்டியாட்கொண்டவன்றே. (அங)

தந்தைதாய்குருவுஞானசங்கரனிராசைபெண்டிர்
மைந்தர்பல்லுயிருஞ்சுற்றமாகிலாவீசனன்ப
ரந்தமில்பிறவியேழுமபகையென்பதோர்ந்தே
மெந்தையார்கருணைகாட்டியெம்மையாட்கொண்டவன்றே. (அச)

(எஅ) வேட்டவண்ணம் - நீவிரும்பியபடியே. (எக) கடி - பொலி வினையுடைய. (அ0) அரனேயல்ல-நீதியன்ஞும். (அக) உரைசெய்வ தெவன்-சொல்லுவதென்னை. (அஉ) கிளைஞர்-ஞாதிகள். நட்டோர்-நேசகஞ்செய்தவர்கள். (அங) வெற்றுடல்-பொருளற்றவுடல். (அச) நிராசை - நிறவியங்களிலனிச்சை.

ஊரெலாமட்டசோறுநம்மதேயுவரிசூழ்ந்த
பாரெலாம்பாயறுன்னற்கோவணம்பரிக்குமாடை
சீரெலாஞ்சிறந்தசாந்தந்தெய்வநீறணிபூண்கண்டி
நீரெலாஞ்சுமந்தவேணிநிருத்தனுட்கொண்டவன்றே. (அ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இறக்கினுமின்றேயிறக்குகவென்றுமிருக்கினுமிருக்குகவேந்த
னெறுக்கினுமொறுக்கவுவகையுமுடனேயூட்டினுமூட்டுகவானிற்
சிறக்கினுஞ்சிறக்கவொடியதீநரகஞ்சேரினுஞ்சேருகசிவனே [தார்.
மறக்கிலம்பண்டைப்பழவினைவிளைந்தான்மாற்றுவார்யாரென மறுத்

வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் - சுவ - க்கு திருவிருத்தம் - உஎகஅ.

ஐம்பத்தொன்பதாவது,

நரிபரியாக்கியபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரிகணெதாடுத்துவேழமட்டவன்செழியன்வாயிற்
றெரிகலையமைச்சரேற்றைத்தேசிகவடிவுத்தீண்டி
வரிகழல்சூட்டியாண்டவண்ணமிவ்வண்ணமைய
னரிகளைப்பரிகளாக்கிநடத்தியவாறுஞ்சொல்வாம். (க)

சுற்றமாம்பாசநீவித்துகளறுத்திருந்தார்தம்மை
மற்றைநாளழைத்துவேந்தன்வந்திலபோலுமின்னங்
கொற்றவாம்பரிகளென்னக்குறுமதிமுடித்தானன்ப
னிற்றைநாண்முதலுண்மூன்றிலீண்டுவிறையவென்ஞ. (உ)

சிந்துரநுதன்மால்யானைச்செல்வவப்பரிக்குவேழ
மந்துரையகன்றவாகவகுக்கசூழ்தண்ணீருட்ட
நந்துறைதடங்கள்வேறுதொகுகணைகரமெங்கு
மிந்துறைமாடமெல்லாமழகுசெய்திகெவென்றார். (ங)

(அ) பாயல் - கிடக்கை. (அசு) ஒறுக்கினும்-தண்டஞ்செய்யினும். (க) அரிகணை-நாராயணபாணம். (உ) நீவி-அகற்றி. (ங) மந்துரை - குதிரைகட்டுமிடம்.

காவலன்கருமஞ்செய்வோர்கந்துகப்பந்தியாற்றி
யோவறுநகரமெங்குமொளிபெறவழகுசெய்யத்
தாவுதெண்கடலேழ்கண்டசகரர்போல்வைகன்மூன்றில்
வாவியுங்குளனுந்தொட்டார்மண்டொகருவிமாக்கள். (ச)

வரையறைசெய்தமூன்றுவைகலுங்கழிந்தபின்னுட்
கரையறுபரிமாவீண்டக்கண்டிலமின்னமென்னு
விரையறைவண்டார்தண்டார்வேம்பனும்விளித்துவந்த
வுரையறைநாவினுரையொறுப்பவெனுத்துச்சீறு. (டு)

என்னிவன்பரிமாக்கொண்டதென்றவைவருவதென்னுத்
தன்னெதிர்நின்றவஞ்சத்தறுகணர்சிலரைநோக்கிக்
கொன்னுமிக்கள்வன்றன்னைக்கொண்டுபோய்த்தண்டஞ்செய்தெம்
பொன்னெலாமறுவுகொண்டுவாங்குமின்போமினென்றான். (சு)

கற்றிணிதோளான்சீற்றங்கண்டெதிர்நில்லாதஞ்சிச்
சுற்றியபாசம்போலத்தொடர்ந்துகொண்டேகிமள்ள
ரெற்றினிவகைதான்பொன்னுக்கியம்புமென்றெதிர்த்துச்சீறிச்
செற்றமில்சிந்தையார்மேற்செறிந்தகல்லேற்றினாரே. (எ)

பொன்னெடுஞ்சயிலங்கோட்டிப்புரம்பொடிபடுத்தவீரர்
சொன்னெடுந்தாளையுள்கிநின்றனர்சுமந்தபார
மன்றெடுத்தகையார்தாங்கியாற்றினுடைந்தவன்பர்
தன்னெடும்பாரமெல்லாந்தாங்குவாரவரேயன்றே. (அ)

சிலையதுபொறைதோற்றுதுகிவனடிநிழலினின்றார்
சிலையதுநோக்கிமாயமெறியிதுபோலுமென்னுக்
கொலையதுவஞ்சாவஞ்சர்கொடுஞ்சினந்திருகிவேந்தற்
கலையதுதெரிந்தார்கையுந்தான்களுங்கிட்டியார்த்தார். (கூ)

அக்கொடுந்தாழிலுமஞ்சாதிருந்தனரானையுள்கி
யிக்கொடுந்தாழிலினுந்தாமினிநனியொறுப்பரென்னுப்
புக்கதுகாண்டற்குள்ளம்பொறாரெனவிரவிப்புத்தேண்
மிக்கதன்னெளிகண்மாழ்கிவிரிகடலழுவத்தாழ்ந்தான். (கo)

(ச) ஓவற - குற்றமற. (டு) வரையறை - தீர்மானம். (சு) பரிமா - குதிரை. (எ) திணி - அழுந்திய. (அ) சயிலம் - மலை. (கூ) சிலையது பொறை - கல்லின்கனம். (கo) ஆனையுள்கி - சிவபெருமானை நினைத்து.

சுந்தரவிடங்கரன்பர்சூழ்துயரகற்றநேரே
வந்தெழுகாட்சிபோலவந்ததுசெக்கர்வான
மிந்தவர்மார்பந்தாங்குமேனவெண்கோடுபோன்ற
தந்தரவுடுக்களெல்லாமயன்றலைமாலையொத்த. (கக)

சுழிபடுபிறவித்துன்பத்தொகுகடலழுவத்தாழ்ந்து
கழிபதினையுங்காப்பான்கண்ணுதன்மூர்த்திபாதம்
வழிபடுமவரைத்தேரூன்வன்சிறைப்படுத்ததென்னன்
பழிபடுபுகழ்போலெங்கும்பரந்ததுகங்குலீட்டம். (கஉ)

கங்குல்வந்திறுத்தலோடுங்கருஞ்சிறையறையிற்போக்கிச்
சங்கிலிநிகளம்பூட்டித்தவத்தினேச்சிறையிட்டென்னச்
செங்கனல்சிதறநோக்குஞ்சினங்கெழுகாவலாளர்
மங்குலினீருண்டகண்டர்தொண்டரைமறுக்கஞ்செய்தார். (கங)

மிடைந்தவர்தண்டஞ்செய்யவெஞ்சிறைவெள்ளத்தாழ்ந்து
கிடந்தவர்கிடந்தோன்பூமேலிருந்தவன்றேடக்கீழ்மே
னடந்தவர்செம்பொற்பாதநகைமலர்புணையாப்பற்றிக்
கடந்தனர்துன்பவேலைபுலர்ந்ததுகங்குல்வேலை. (கச)

அந்தமிலழகன்றன்னேயங்கயற்கண்ணியோடுஞ்
சுந்தரவமளிப்பள்ளியுணர்த்துவான்றொண்டர்சூழ
வந்தனைசெய்யுமார்ப்புமங்கலசங்கவார்ப்பும்
பந்தநான்மறையினூர்ப்பும்பருகினூர்செவிகளார. (கஞ)

போதவானந்தச்சோதிபுனிதமெய்த்தொண்டர்க்காக
நாதமாமுரசமார்ப்பநரிப்பரிவயவர்சூழ
வேதவாம்பரிமேற்கொண்டுவீதியில்வரவுகாணுங்
காதலான்போலத்தேர்மேற்கதிரவனுதயஞ்செய்தான். (கசு)

கயனெடுங்கண்ணியோடுங்கட்டவிழ்கடிப்பூஞ்சேக்கைத்
துயிலுணர்ந்திருந்தசோமசுந்தரக்கருணைவெள்ளம்
பயினெடுஞ்சிகரநோக்கிப்பங்கயச்செங்கைகூப்பி
நயனபங்கயநீர்சோரநாதனேப்பாடலுற்றார். (கஎ)

(கக) ஏனவெண்கோடு - பன்றியின்வெள்ளிதந்தம். (கஉ) கடலழுவம் - கடல். இது இருபெயரொட்டு.(கங) கருஞ்சிறை - கொடியசிறை. (கச) கிடந்தோன் - நாராயணன். (கஞ) அந்தமிலழகன் றன்னே - முடிவற்ற சோமசுந்தரனே. (கசு) நாதமாமுரசம் - நாத தத்துவமாகியமுரசம். (கஎ) கட்டவிழ் - முறுக்கவிழ்ந்த.

கொச்சகக்கலிப்பா.

எந்தாயனைத்துலகுமீன்றெடுத்தேவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைத்தாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையுஞ்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ. (கஅ)

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையு
மாவார்கொடியாயடியேற்கிரங்காயோ. (கக)

முன்னைமுதுபொருட்குமுன்னைமுதுபொருளாய்ப்
பின்னும்புதுமைக்கும்பின்னைக்கும்பேரொளியாய்த்
தென்னைமதுரைத்திருவாலவாயுறையு
மென்னையகனேயெளியேற்கிரங்காயோ. (உ0)

மண்ணாய்ப்புனலாய்க்கனலாய்வளியாகி
விண்ணாயிருசுடராயித்தனையும்வேறாகிப்
பண்ணாயிசையாய்ப்பனுவலாயெங்கண்ணுங்
கண்ணானெனுறுகண்காணுவாறென்கொலோ. (உக)

பொங்குஞ்சினமடங்கல்போன்றருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்தாழ்ந்துநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலையா
லெங்குஞ்செவியுடையாய்கேளாயோவெண்ணுரையே. (உஉ)

பூட்டியருட்பாசமிருபாதம்பொறித்துடலிற்
கூட்டியடியாருளகப்படித்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டாய்வெய்யரெனை
யாட்டியொறுக்குமிடத்தாரேன்றுகொள்வாரே. (உங)

ஊராருனைச்சிரிப்பதோராயென்றுன்னடிமைக்
காராயடியேனயர்வேனீதறிந்தும்
வாராயரசன்றமரிழைக்கும்வன்கண்ணேய்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டி. (உச)

(கஅ) செழுங்குவளை - செங்கழுநீர்மலர். (உ0) முன்னைமுதுபொருள் - புராதனமானபழம்பொருள். (உஉ) சினமடங்கல் - கோபமுடைய சிங்கம். (உங) வெய்யர் - கொடியர். (உச) வன்கணேய் - தண்டத்தன்பம்.

கலிநிலைத்துறை.

என்றீரங்குவோரிரங்கொலியிளஞ்சிறுரழுகை
சென்றுதாயர்தஞ்செவித்துளைநுழைந்தெனச்செல்லக்
குன்றிருஞ்சிலைகோட்டியகூடலையகன்கேட்
டன்றுவன்சிறைநீக்குவான்றிருவுளத்தமைத்தான். (உடு)

கந்தியாதியாம்பெருங்கணநாதரைவிளித்தான்
வந்தியாவரும்பணிந்தனர்மன்னவற்கின்று
முந்தியாவணிமூலநாள்வந்ததுமுனிவு
சிந்தியாமுனம்பரியெலாஞ்செலுத்துவான்வேண்டும். (உசு)

யாவரும்புனத்தியங்குறுநரியெலாமீட்டித்
தாவரும்பரியாக்கியத்தாம்பரிநடத்துஞ்
சேவகஞ்செய்வோராகிமுன்செல்லுமின்யாமும்
பாவகம்படவருதுமப்படியெனப்பணித்தான். (உஎ)

ஏகநாயகனுணீபூண்டெழுகணத்தவரு
நாகநாடரும்வியப்புறநரியெலாங்கிரட்டி
வேகவாம்பரியாக்கியவ்வெம்பரிநடத்தும்
பாகராயினரவர்வரும்பரிசதுபகர்வாம். (உஅ)

தூக்கியார்த்தசெம்பட்டினர்சுரிகையர்தொடுதோல்
வீக்குகாலினரிருப்புடற்காப்பினர்வெருளி
லேக்குபார்வையர்புண்டரநுதலினரிடியிற்
றாக்கியார்ப்பெழுநகையினர்தழன்றெழுசினத்தோர். (உக)

வட்டத்தோல்வரிபுறங்கிடந்தசையவைவடிவா
டொட்டகையினர்சிலர்நெடுந்தோமரஞ்சுழல
விட்டகையினர்சிலர்வெரிகிடைநெடுவிசிகப்
புட்டில்வீக்கிவிற்றூக்கியபுயத்தினர்சிலரால். (ஈ0)

செம்படாஞ்செய்தபோர்வையர்சிலர்பசும்படத்தான்
மொய்ம்புவீக்கியகவயத்தர்சிலர்கருமுகில்போ
லம்புயம்புதைகாப்பினர்சிலர்சிலரவிரும்
பைம்பொன்வாணிறப்படாஞ்செய்குப்பாயத்தர்சிலரால். (ஈக)

(உடு) இளஞ்சீறூர் - இளங்குழந்தைகள். (உசு) முனிவுஞ்சிந்தியா முனம்-கோபங்கொள்ளுமுனம். (உஎ) புனத்து - காட்டில். (உஅ) வியப்புற - ஆச்சரியப்பட. (உக) தூக்கியார்த்த - எடுத்துக்கட்டிய. (ஈ0) வட்டத்தோல் - கேடகம். (ஈக) மொய்ம்பு - தோள். .

பிச்சவொண்குடையார்பலர்கவரிவால்பிறங்கத்
தைச்சதண்குடையார்பலர்சல்லிசூழ்நாற்றி
வைச்சவண்குடையார்பலர்வாணிலாமுத்த
மொய்ச்சவெண்குடையார்பலர்மொய்ம்பினரிவருன். (கூஉ)

தருமமாதிநாற்பொருளெனுந்தாளதுஞான
கருமகாண்டமாஞ்செவியதுகாட்சியைக்கடந்த
வொருமையாம்பரமபரமாமுணர்வெனுங்கண்ண
தருமையாம்விதிமுகத்ததுநிடேதவாலதுவால். (கூஊ)

தந்திரங்களாற்புறவணிதரித்ததுவிரித்த
மந்திரங்களாற்சதங்கைதார்மணிச்சிலம்பணிந்த
நந்தரஞ்சுழல்சோமனுமருக்கனுமிதிக்குஞ்
சுந்தரப்பதம்பொறைகொளத்தாங்கிருபுடைத்தால். (கூகூ)

மாண்டதாரகப்பிரமமாங்கலினம்வாய்கிழியப்
பூண்டதாற்புறச்சமயமாம்பொருபடைமுரிய
மூண்டபோரெதிர்வினைத்திகன்முடிப்பதுமுளரி
யாண்டகோமுகமந்தரையாகமேவியதால். (கூஙு)

அண்டகோடிகளனைத்துமோர்பிண்டமாவடுக்கி
யுண்டநீரதாமுதுகின்மேலுபநிடக்கலனை
கொண்டவாலியவைதிகப்புரவிமேற்கொண்டான்
ரெண்டர்பாசவன்ரெடரவிழ்த்திடவருஞ்சோதி. (கூசு)

ஆனமந்திரக்கிழார்பொருட்டன்றியும்வென்றி
மீனவன்பிறப்பறுக்கவும்வார்கழல்வீக்கி
வானநாயகனேந்தியமறையுறைகழித்த
ஞானவாள்புறவிருளோயுநக்கிவாளெறிப்ப. (கூஎ)

சாய்ந்தகொண்டையுந்திருமுடிச்சாத்தும்வாள்வைரம்
வேய்ந்தகண்டியுந்தொடிகளுங்குழைகளும்வினையைக்
காய்ந்தபுண்டரநுதலும்வெண்கலிங்கமுங்காப்பு
மாய்ந்தெதாண்டர்தமகம்பிரியாதழகெறிப்ப. (கூஅ)

(கூஉ)பிச்சவொண்குடையார்-மயிற்பீலியாலாகியவெள்ளியகுடையினர். (கூஙு) மாண்ட - மாட்சிமையான. தந்திரம் - ஆகமம். கலினம் - கடிவாளம். (கூசு) கலனே - சேணம். (கூஎ) கிழார் - உரிமையுடையார். (கூஅ) கலிங்கம் - ஆடை.

பிறக்குமாசையோர்மறந்துமிங்கணுகன்மின்பிறப்பை
மறக்குமாசையோரிம்மெனவம்மினன்பரைவேந்
தொறுக்குநோய்களாவானெனவொருவனும்பிறவி
யறுக்கவந்தனனென்பபோற்பரிச்சிலம்பலம்ப. (நகூ)

சுங்கையைச்சடைமுடியின்மேற்கரந்தனையவள்போ
லெங்கடம்மையுங்கரந்திடென்றிரந்துகாவேரி
தூங்கபத்திரையாதியாநதிகளுஞ்சூழப்
பொங்கிவீழ்வபோலொலியலுங்கவரியும்புரள. (சO)

வாவிநாறியவாலிதழ்த்தாமரைமலரோ
ஞவிஞ்ஞுமைநாயகனுன்மறைபரியா
மேவிஞ்ஞெனனத்தாளெருவெண்குடையாகிப்
பாவிஞ்ஞெனமுடியின்மேற்பானிலாக்கால. (சக)

முறையிஞ்ஞெதியபுராணமூவாறுநாமொழியு
மிறைவனுமிவன்படைத்தளித்தழிப்பவனிவனே
மறையெலாமுறையிடும்பரம்பொருளெனவாய்விட்
டறையுமாறுபோலியங்களீரொன்பதுமார்ப்ப. (சஉ)

மிடைந்தமாயவாம்பரித்திரண்மேற்றிசைநோக்கி
நடந்தநாயகனுன்மறைப்புரவியுநாப்ப
ணடைந்தாலெழுந்தூளிகளண்டமுந்திசையும்
படர்ந்தபோம்வழியாதெனமயங்கினன்பரித்தி. (சஙூ)

பள்ளமாக்குவதிடரினேப்பள்ளத்தைமேடு
கொள்ளவாக்குவபாரெலாம்விலாழிகொப்பளித்து
வெள்ளமாக்குவதூளியால்வெள்ளத்தைவெறிதா
யுள்ளதாக்குவுள்ளுவவுருக்கொண்டபரிமா. (சச)

கொய்யுளைப்பரியெழுந்ததூள்கோப்பவான்கங்கை
வைகையொத்ததேழ்பசும்பரிசெம்பரிமாவாச்
செய்ததொத்ததுசிந்துரந்திசைக்கயமுகத்துப்
பெய்ததொத்ததாலொத்ததுபெரும்பகன்மாலே. (சஙி)

(நகூ) இம்மென - விரைந்து. (சO) ஒலியல்-சுழற்றிவீசும்ஆடை. (சக) மலரோன் நாவிஞள் - கலைமகள். (சஉ) இயங்கள் - வாத்தியங்கள். (சஙூ) மிடைந்த - நெருங்கிய. (சச) விலாழி - நுரை. (சஙி) உள்ள - புறமயிர்.

விளம்புகின்றவச்சம்புவெம்பரித்திரண்மிதிக்குங்
குளம்புகிண்டியவெழுந்ததூள்குன்றிகரிக்தோன்
வளம்புகுந்தடைவார்சுரவழிபுரிவேள்விக்
களம்புகைந்தெழுதோற்றமேயல்லதுகடாதால். (சசு)

மட்புலந்திசைவான்புதைபூழியுண்மறைந்து
கொட்புறும்பரிசதங்கைதாரொலியினுங்குளிர்வான்
பெட்புறுங்குரலொலியினுஞ்செவியினிற்பிறிது
கட்புலங்களாற்கண்டிலர்வழிவரக்கண்டோர். (சஎ)

கலிவிருத்தம்.

தரங்கமெறி முத்திவை விலாழி யலதார்மா
விரங்குமொலி யல்லதிரையேங்கு மொலியின்ன
தரங்கமல மற்றிவை சுரர்க்கரசனின்றும்
புரங்கொல விடித்திடவரும் புணரியென்பார். (சஅ)

இம்பருல குள்ளவல பண்டினையபாய்மா
வும்பருல காளிபரியே கொலதுவொன்றே
வெம்பரிதி வெம்பரிகொலேழ வைகளேழும்
பைம்பரிகள் யாவினையபாய் பரிகளென்பார். (சஉ)

வெம்பணிகளைப்பொர வெகுண்டெழுவதேயோ
பைம்புன லுடுத்தமுதுபார் முதுகுகீறு
மும்பருலகைப் பொரவுருத் தெழுவதேயோ
வம்பர முகட்டளவடிக்குர மழுத்தும். (ரு0)

உத்தர திசைப்புரவி தெற்கடையு மாறு
மத்தகைய தெற்குள வடக்கடை யுமாறு
மித்தகை குடக்கொடு குணக்கடையு மாறுஞ்
சித்தர் விளையாடலின் வெளிப்படுதல் செய்யா. (ருக)

மறைமரபு சாலவரும் வன்னியிவை பொன்னித்
துறைவ னுளமுஞ் சுடுமிரும் பனைதொடுக்கு
மறவனுளமுஞ் சுடுமமைச் சரை யொறுக்கு
மிறைவமுதி யுள்ளமு மினிச்சுடுவ தென்பார். (ருஉ)

(சசு) சம்பு - நரி. (சஎ) மட்புலம் - மண்ணினிடம். (சஅ) தரங்கம் - அலை. (சஉ) பைம்பரி - பச்சைக்குதிரை. (ரு0) அம்பரம் - ஆகாயம். (ருக) குணக்கு - கிழக்கு. (ருஉ) வன்னி - குதிரை.

மூந்தை யொருமந்திரி பொருட்டா சன்முன்னு
வந்தமிலனீ கமொடரும் பரியில் வந்தாங்
கிந்தமறை மந்திரி யிடும்பை தணிவிப்பான்
வந்தனர் கொலிப்பரி வரும்பொருந ரென்பார். (௫௬)

காமனிவனே கொலறு காலுழு கடப்பங்
தாமனிவனே கொல்பொரு தாரகனே வென்றுன்
மாமனிவனே கொன்ம லைவன்சிற கரிந்த
நாமனிவனே கொலென நாரியர யிர்த்தார். (௫௭)

அடித்திடு வர்கண் ணிறையவண் ணலழகெல்லா
மடித்திடு வர்கைவளை யைமாலை விலையென்னக்
கொடுத்திடுவர் மாலைகள் கொடுத்திடு தியன்றே
லெடுத்திடுதி யெங்கள்வளை யெங்கள் கையிலென்பார். (௫௮)

ஏந்தன்முடி மாலைமலர் சிந்தின வெடுத்துக்
கூந்தலின் மிலைந்துமதன் வாகைமலர் கொள்வார்
சாந்தனை யகிந்தினதனந் தடவி யண்ணற்
றோய்ந்தளவிலா மகிழ்தளும் பினவ ராவார். (௫௯)

பொட்டழகன் மார்பிலிடு போர்வை கவசப்பே
ரிட்டதுமெய் நம்முயிர் தடுத்தமையி னென்பார்
கட்டழ்கன் மாலையது கண்ணியென வோதப்
பட்டதுமெய் நம்முயிர் படுத்தமையி னென்பார். (௬௦)

கலிநீலேத்துறை.

இச்சையால்வடிவெடுப்பவனிந்திரசால
விச்சைகாட்டுவானெனப்பரிவீரனிலுலகைப்
பிச்சதேற்றிடமயக்கியுங்காமனிற்பெரிது
நச்சமாதரைமயக்கியுமிங்ஙனநடந்தான். (௬௧)

தாவுகந்துகமிந்தியமொத்தனசயமா
வாவுதிண்கணமள்ளர்கண்மனங்களையொத்தார்
மேவியம்மனந்தொறுமிடைவிடாதுநின்றியக்கு
மாலியொத்ததுகவெருமருமறைப்பரியே. (௬௨)

---

(௫௬) அனீகம் - சேனை. (௫௭) தாமன் - மாலையினையுடையான். (௫௮) மடித்திடுவர் - பார்ப்பார்.(௫௯) ஆவார் - ஒத்தார். (௬௦) கண்ணி - சுருக்குவலை. (௬௧) விச்சை - வித்தை. (௬௨) தாவுகந்துகம் - தாண்டுங்குதிரை.

துன்னுமின்னியமுழக்கமுந்துரகதவொலியு
மன்னவீரர்வாயரவமுந்திசைசெவிடைப்பக்
கன்னிமாமதில்சூழ்கடிநகர்க்கரைக்காத
மென்னவெய்திஞண்மறைப்பரிப்பாகனவ்வெல்லே. (சுo)

கலிவிருத்தம்.

கண்டவர் கடிதோடிக் கடிநகர் குறுகிக்கார்
விண்டவழ் மணிமாடத் தகிலைறை பிடைகின்ற
கொண்டலி னிளையார்முன் குறுகினர் மலர்செவ்வி
முண்டக வதனத்தார் முகிழ்நகை யினர்சொல்வார். (சுக)

மன்னவ னெறிகோடா மந்திர ரடலேறே
பன்னிற வெழுமுந்நீர்ப் பரவைகள் வருமாபோற்
றுன்னின வருகின்ற துரகத முளவெல்லாம்
பொன்னெயின் மணிவாயில் புகுவன விதுபோதில் (சுஉ)

ஒல்லை யிலதுமன்னற் குரையுமி னெனமேரு
வில்லவ னருள்பெற்ற வேதியர் பெருமான்போய்ச்
செல்லது தளையிட்ட திருமக னருகெய்தி
மல்லணி திணிதோளாய் வருவன பரியென்றான். (சுஙு)

மருத்தென வருகின்ற மாக்கட லெனமன்னன்
றிருத்தணி கடகப்பூண் டெறித்திட வுடல்வீங்கப்
பெருத்தெழு மகிழ்தூங்கிப் பெருவிலை மணியார
மருத்திகொள் கலைநல்கி யமைச்சரை மகிழ்வித்தான். (சுச)

ஏந்தரி யணைநீங்கி யெழுதிய தலைவாயிற்
போந்தரு கொளிர்மாடம் புகுந்தரி யணைமேவிக்
காந்தளின் விரனல்லார் கவரிகள் புடைவீச
வாய்ந்தவர் புறஞ்சூழ வடபரி வரவேற்பான். (சுருு)

பரனருள் விளையாடல் காட்டிய பரிவெள்ளம்
வருவன சிறுகாலந் தாழ்த்தலு மதிவேந்தர்
புரவலன் மனம்வெள்கிப் பொய்யிது வெனவுள்கி
யருகணை யுழையோரைக் குறித்தன னழல்கண்ணுன். (சுசு)

(சுo) துரகதம் - குதிரை. (சுக) கடி - காவல். (சுஉ) எயில் - மதில். (சுஙு) பரி - குதிரை. (சுச) அருத்தி - இச்சை. (சுருு) நல்லார் - மடவார். (சுசு) புரவலன் - அரசன்.

மன்னவ னினைவாற்றுன் மந்திரர் பெருமானைத்
துன்னினர் கொடுபோயத் தோள்வலி மறமள்ள
ருன்னரி தெனவஞ்சா தொறுத்தன ருரவோர்தங்
தென்னவர் தமையுள்கிச் சேவடி துதிசெய்வார். (சுஎ)

கலிநீலத்துறை.

பூவார்முளரிப்புத்தேளறியாநெறிதந்தாய்
பாவார்தென்சொற்பனுவன்மாலைப்பணிகொண்டாய்
தேவாதேவர்க்கரசேசிறியேனுறுதுன்ப
மாவாவென்னுவஞ்சேலென்னுயறனேயோ. (சுஅ)

நெஞ்சேயுரையேசெயலேயெல்லாநினவென்ருய்
வஞ்சேபோலுமஃதேலின்றுவாராயோ
பஞ்சேரடியாள்பாகாகூடற்பரமேட்டீ
யஞ்சேலென்னுவிதுவோவருளுக்கழகையா. (சுக)

காவிநேருங்கண்டாநாயிற்கடையான
பாவியேனப்பொருளாக்கொண்டென்பணிகொண்டா
யாவியோடிவ்வுடலுநினதேயன்றேவின்
றேவிவாளாதிருந்தால்யாரென்னுடையானே. (எ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றிரந்திரங்குமன்பரிருசெவியூடேயேங்குங்
கன்றிளஞ்செவியினல்லான்கனேகுரலோசைபோல
வொன்றியசின்னங்காளங்காகளமொலிக்குமோசை
வென்றிகொள்புரவிச்சென்றூடிசையெலாம்விழுங்கக்கண்டார். ()

வழுதியுமறிந்தவாதவூரரைவிளித்துவந்த
தொழுகுலவமைச்சர்தம்பாற்றுகடவிரன்புகூர்ந்தெம்
பழுதறுகருமநும்போற்பரிச்சுநர்யாரையென்னு
வெழுதருமகிழ்ச்சிமேற்கொண்டளவளாயிருக்குமெல்லை. (எஉ)

பாயிருட்படலங்கீறிப்பல்கதிர்பரப்பித்தோன்றுஞ்
சேயிளம்பரிதியாலேரனேயராய்ச்சிறந்தகாட்சி
மேயினபாகரோடுமிலாழியாற்பரவைசெய்யும்
வாயினவாகிவந்தமாயவாம்பரிகளெல்லாம். (எங)

(சுஎ) தந்தென்னவர்-தமதுகடவுளான சோமசுந்தரபாண்டியர். (சுஅ) பூவார் - அழகுபொருந்திய. (சுக) வஞ்சேபோலும் - வஞ்சனேபோலும். (எ0) காவி - கருநெய்தன்மலர். (எக) எங்கும் - தாயைக்காணுதவிம்மும். (எஉ) தொழுகுலவமைச்சர்-பார்ப்புனசாதி மந்திரி. (எங) செயிளம்பரிதி - செந்நிறமான இளஞ்சூரியன்.

வண்டுழுதாரிஞன்றன்மரபின்மன்னவருமுன்னூட்
கண்டறியாதகாட்சிக்கவனவாம்பரியைநோக்கி
யண்டர்நாயகன்போஞமாயிரங்கண்பெற்றூஉ
முண்டமையாவென்றுள்ளக்குறிப்பொடுமூவகைபூத்தான். (எச)

தானெனமகிழ்ச்சியென்னத்தலைதடுமாறிவேந்தன்
மானவெம்பரிமேல்வந்தவயவரைவியந்துமிக்கா
ரானவரிவருள்யாரென்றமைச்சரைவினவவையா
யானதுவறியேனென்றூர்யாரையுமறியவல்லார். (எடு)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டமெலாமாதாரமாகத்தாங்குமானந்தத்தனிச்சோதியண்ட
ந்தாங்குஞ், சண்டமறைப்பரிதனக்காதாரமாகித்தரிக்கவொருகால
த்துமசைவிலாத, புண்டரிகத்தாளசையப்பாசநீக்கும் பூனைகரத்தா
ற்பரிபூண்டபாசம்பற்றிக், கொண்டரசனெதிர்போந்தமன்னவெங
கள் குதிரையேற்றஞ்சிறிதுகாண்டியென்றூர். (எசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இசைத்தவைங்கதியுஞ்சாரியொன்பதிற்றிரட்டியாதி
விசித்திரவிகற்பந்தோன்றவேந்தனுமவையுமன்றித்
திசைப்புலத்தவருமேலத்தேவருமருளமேற்கொண்
டசைத்தனரசைவற்றெல்லாவுலகமுமசைக்கவல்லார். (எஎ)

ஆண்டகையவர்போனின்றவதிகணத்தவருந்தத்தங்
காண்டகுபுரவியெல்லாநடத்தினர்காட்டக்கண்டு
பாண்டியனவரைநோக்கிநுங்களிற்பதியாந்தன்மை
பூண்டவர்யாவரென்றனிவரென்றூர்புரவிவீரர். (எஅ)

சட்டுதற்கரியசோதிசுருதிவாம்புரவியோடு
மட்டவிழ்தாரிஞன்முன்வருதலுங்கருணைநாட்டம்
பட்டுளமயங்கித்தன்னைமறந்தெழீஇப்பாண்டிவேந்தன்
றட்டவிழ்கமலச்செங்கைதலைமிசைக்கூப்பிநின்றூன். (எக)

(எச) அண்டர்நாயகன் - தேவராசன். (எடு) மானவெம்பரி - பெரியவேகத்தினையுடையகுதிரை. (எசு) அண்டமெலாம்-அனைத்தண்டங்களையும். (எஎ) இசைத்த - அசுவவிலக்கணநூல்கூறிய. (எஅ) ஆண்டகையவர்போல் - தலைமையான சுவாமியையொப்ப மனிதவேடந்தாங்கிநின்ற.(எக)எழீஇஎன்னுஞ்சொல்,நின்றூனென்பதனைக்கொண்டு முடிந்தது.

பின்னவனணையாலேமறைப்புண்டபெருநீர்க்கூடன்
மன்னவனறிவுதோன்றவின்றிருவயமாவீரன்
றன்னோடாங்கணடெழுந்ததடங்கரங்கூப்பிநின்ற
தென்னைனத்தவிசின்மீளவிருந்திடாணிநின்றான். (அ0)

நிற்கின்றான்முகத்தைநோக்கிநேர்நின்றமறைமாவீரர் [ன்
பொற்குன்றம்புயத்தாயுன்றன் பொருளெலாங்கொண்டுபோந்து
சொற்குன்றவமைச்சன்றானேநமக்குநஞ்சூழனீங்கா
மற்குன்றமார்க்குமாரவழங்கினைவழங்கலாலே. (அக)

வானவர்தமக்கேயன்றிமனிதருக்கிசையத்தக்க
வானவன்றறிஞரிட்டவிலேவரம்பகன்றநூலின்
மான்முள்ளனவாய்நல்லவாசிகளுனக்குவந்த
வூனமில்பரிமாவிற்கும்வாணிகமுரைப்பக்கேட்டி. (அஉ)

இன்னவாம்பரிகளென்பாலின்றுநீகயிறுமாறி
நின்னவாக்கொள்ளுநீரானின்னவாம்பரியேனாலே
யென்னவாயிருந்தவேனுமெனக்குமுன்றானக்குங்கொண்டு
மன்னவாகருமமில்லைபரிவிலேவழக்கீதென்றார். (அங)

அப்பொழுதரசன்றானுமகமகிழ்ந்ததற்குநேர்ந்தெம்
மெய்ப்புகழமைச்சர்தம்மின்மேம்படுவாதவூர
ரொப்பருந்திறத்தராகியும்மிடைநட்பான்மிக்க
தப்புரவுடையராதலெனனனிசொல்லினானே. (அச)

உகதவாரந்தோற்றுதயர்மறைப்பரிமேல்வருதார்
மாகதந்திருத்துநிம்பமாலைதாழ்மார்பினற்குக்
குரகதங்கயிறுமாறிக்கொடுப்பவர்பொதுமையாய
தாகதவிலக்கணங்கள்சொல்லுவான்றொடங்கினானே. (அடு)

காயும்வேண்மன்னவோரிக்கடம்பரியமையம்வந்தான்
ஞாயிலுந்தாண்டிச்செல்லுநாட்டமுநுழையாச்சால
வாயிலுநுழையுங்கண்டவெளியெலாம்வழியாச்செல்லுந்
தீயவெம்பசிவந்துற்றாற்றின்னுதவெனினுந்தின்னும். (அசு)

(அ0) பின்னவன் - பின்னாந்தக்கடவுள். ஆணையாலே-கட்டளையால். (அக) மறைமாவீரர் - வேதமாகிய குதிரைமீதெழுந்தருளிய சுவாமி. (அஉ) நூலின் மானமுள்ளன - அசுவலிலக்கணநூன்மதிப்பினையுடைய. (அங) கயிறுமாறி - குதிரைவாங்கு வோருக்கு விற்போர் புல்லுடன்கலந்து குதிரையுடன் கயிற்றினைக் கொடுக்குமாறுகொடுக்க. (அச) துப்புரவு - தூய்மை. (அடு) உரகதம் - பாம்பு. (அசு) ஓரிக்கடும்பரி-எண்ணுவாயாக இவ்வேகமானகுதிரை; எ - ம். கரியாகியகொடியகுதிரை - எ - ம். ஆம்.

கலிவிருத்தம்.

பொருவில்சி ரிலக்கணப் புரவி யொன்றுதா
னெருவண திடைவதிர் துறையி னெல்லென
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்,
பெருகுறுங் கீர்த்திகள் பல்கும் பெற்றியால். (அஎ)

நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு குளம்புக ளுயர்ந்த வார்ந்துநே
ரொத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம். (அஅ)

அகலிய நுதலின வாய்ந்த குஞ்சிபோ
னிகரறு கொய்யுளை நிறமொன் றுயின
புகரறு கோணமூன் றுகிப் பொற்புறு
முகமுடை யனவய மொய்கொள் கோடகம். (அக)

முட்டிய சமரிடை முகத்தில் வாளினல்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கைதோல்
பட்டிமை நரியரி சரபம் பாய்முய
லெட்டிய கதியின விவுளி யென்பவே. (கo)

உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய லிலாழி காலவதாய்ப்
பின்னமா கியதனி வன்னம் பெற்றுமை
வன்னமு முடையது வன்னி யாவதே. (கக)

திணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்ததா
யணிதரு பஞ்சகல் யாண முள்ளதாய்க்
குணிதரு நீபது குதிரை யாவதே. (கஉ)

குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சரபமுங் கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி. (கங)

(அஎ) பல்கும் - அதிகரிக்கும். (அஅ) நெய்த்திடும் - மிருதுவாயிருக்கின்ற. (அக) அகலிய - அகன்ற. ஆய்ந்த - கைபிழி எணிணெயுங் கடிவும் பெய்து சீப்பால்வாரிய. (கo) தோல் - யானை. கதியின - போக்கினை. (கக) வெண்கன்னலின் - வெண்கரும்பினும். (கஉ) தெய்வதமணி - தேவமணியென்னுமொரு சுழிவிசேடம். (கங) பாலதாய் - தன்மையுடையதாய்.

நாலுகால்க ளுங்கடைக் தெறித்து நாட்டினுற்
போல்வதாய்க் கொட்புறும் போது சுற்றுதிக்
கோலை யொப்பாகிமேற் கொண்ட சேவகன்
காலினு ளடங்குவ தாகுங் கந்துகம். (கச)

அரணமுந் துருக்கமு மாறுந்தாண்டிடு
முரணது வாகியிம்மூற்றி லக்கணப்
புரணமெல்லா நிறை புரவி போந்தன
விரண வேலாய்வய தெட்டுச் சென்றதால். (கடி)

பகைத்திற முருக்குமிப் பரிகண் மன்னரீ
யுகைத்திடத் தக்கவென் ரேறி வேதநூற்
கிகைத்தனிச் சேவகர் திரும்பித் தம்மனோர்
முகத்தினே நோக்கினர் மொய்த்த வீரரும். (சுசு)

வாம்பரி மறைக்கெலாம் வரம்பு காட்டுவ
தாம்படி கண்ட்வ ரறிவும் பிற்படப்
போம்படி முடுக்கினர் புரவி யாவையும்
வேம்பணி தோளினன் வியப்ப மெய்தியே. (கஎ)

ஆத்தராய் மருங்குறை யமைச்சர் யாரையும்
பார்த்த சையாமுடி யசைத்துப் பைப்பயப்
பூத்தவாணகையொடுமெழிச்சிபொங்கினன்
றீர்த்தனுடத்தினன்றெய்வமாவினே. (கஅ)

இருவகைச் சாரியு மெதிர்ந்து வட்டமாய்
வருவழி ளெதிழி போன்மறு கெலாமொரு
தாரகத மேனிலை நின்ற தோற்றமொத்
தொருவற நடத்தினு ரொரு கணத்தினே. (கக)

இந்நிலை யலமரு மிவுளி மேலொரு
மின்னிலை வேலினன் வினவத் தங்கையின்
மன்னிய கங்கணம் விடித்து மாகதர்
தன்னிலை காட்டிய தன்மை யொத்ததே. (க00)

(கச) சுற்றுத்தீக்கோல் - கொள்ளிவட்டம். (கடி) துருக்கம்-மலை மேற்கோட்டை. (கசு) உகைத்திட - ஏறிநடத்துதற்கு. (கஎ) வாம் பரி மறைக்கெலாம் - தாவுகின்ற அசுவ இலக்கணநூலனைத்திற் கும். (கஅ) ஆத்தராய் - கண்பராய். (கக) இருவகைச்சாரி - இட சாரி வலசாரி. (க00) இவுளி - குதிரை.

பன்னிற முடையவரம் பரியும் வீதியுட்
பின்னிய வாவெனப் பின்னி வட்டமாய்த்
தன்னிகர் மதுரையாந் தையல் கையணி
துன்னிய பன்மணித் தொடியும் போன்றவே. (கoக)

இந்திய னுதலினு ரிடித்த பொற்சுணஞ்
சிந்திய மறுகிடை நடக்குந் திண்பரிப்
பந்தியி னெழுந்ததுள் சுவணப் பாரின்மா
வுந்திய வெழுந்த பொற்பூழி யொத்ததே. (கoஉ)

தேவரு மனிதரும் திருந்து கூடலார்
யாவரு முவப்புற விவுளி விட்டுமண்
காவலன் முன்குறீஇக் கருணை மாக்கடன்
மாவருதிற னெலாம் வகுத்துத் தேற்றுமால். (கoங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உளங்கொள்காம்போசமிப்பரியிம்மாமந்தரமிந்தவாம்புரவி
விளங்குகாந்தாரமிக்குரங்குவான்மீகமிக்கந்துகஞ்சிந்து
துளங்கில்பாஞ்சாலமிக்கனவட்டந்துளுவமிக்குதிரையித்துரகங்
களங்கமிலிமயப்பருப்பதமிந்தக்கற்கியின்மண்டலங்கலிங்கம். கoச

ஆரியமிந்தப்பாடலமிந்தவச்சுவங்கூர்ச்சரமிந்தச்
சீரியதுரங்கங்கேகையமிந்தத்திறலுறுகொய்யுளையவனம்
வேரியம்பூணசூழ்மக்கமிக்கொக்குவிரிபொழில்வளுயுசமிந்தப்
போரியலிவுளிபல்லவமிந்தப்பொலம்பூனைதார்நெடும்பாய்மா.(கoடு)

கற்றவர்புகழ்சவ்வீரமிக்கோரங்கன்னிமாராட்டமிவ்வன்னி
கொற்றவர்பயில்வாசந்திகமிந்தக்கோடகங்காடகங்கன்ன
லுற்றகான்மீரமிவ்வயமிந்தவுத்தமகோணமாளவமிவ்
வெற்றிசேர்குந்தங்கந்தரமிந்தவிறல்புனையரிசவுராட்டம். (கoசு)

விரிபொழிற்சாலிவேய்மிகுகிள்ளைவேறுதீவாந்தரமிந்தத்
துரகதமிந்தக்குரகதங்கொண்டல்சூழ்குருக்கேத்திரமின்ன
பரவுபல்வேறுதேயமுமுள்ளபரியெலாமிவன்றருபொருளின்
விரவியநசையாற்கொணர்ந்திவர்வந்தார்வேந்தகேளிந்தவாம்பரியுள்

(கoக) தொடியும்போன்ற - வளையலையு மொத்தன. (கoஉ) இந்தியல் - மதியனைய. (கoங) மாவருதிறன் - குதிரைப் பிறப்பின் தேயம். (கoச) கனவட்டம் - குதிரை. (கoடு) பாடலம் - குதிரை. (கoசு) கோரம் - குதிரை. (கoஎ) கிள்ளை - குதிரை.

வெண்ணிறஞ்சிவப்புப்பொன்னிறங் கறுப்பும் வேறற விரவிய நான்கு, வண்ணமுள்ள வவும்வேறு வேறுயமரபுமை வண்ணமும் வந்த, வெண்ணிய விவற்றின் சிறப்பிலக்கணத்தை யியம்புதுங்கே ளெனவிகல்கா, யண்ணலங்களிற்றுற் கருமறைப் பரிமேலழகியா ரடைவுற விரிப்பார். (கoஅ)

வெள்ளிநித்திலம்பால்சந்திரன்சங்குவெண்பனிபோல்வதுவெ ள்ளாத், தள்ளியபுரவிமாதனம்போதுசுகிர்ந்த செம்பஞ்சியின்குழம் பிற், றெள்ளியநிறத்தசெம்பரிமாமை சிறைக்குயில்வண்டுகார்முகில் போ, லொள்ளியகரியபரியெரியழலா னுரோசனை நிறத்தபொற் பரியே. (கoக)

தெரிதரவருத்த விந்நிறநான்குஞ்செறிந்தது மிச்சிரமிதன்பே, ருரைசெய்வர்முகமார்புச்சிவால்காலென் றுரைத்தவெட்டுறுப்பினும் வெண்மை, விரவியதட்டமங் கலந்தலை வால்வியனுர மென்றவிம் மூன்று, மொருவியவுறுப்போரைந்திலும்வெள்ளையுள்ளதுபஞ்சகல் யாணி. (ககo)

அணிகிளர்கழுத்தில்வலஞ்சுழித்திருந்தாலறிந்தவரதனையேதெய்வ மணியெனவிசைப்பர்முகந்தலைநாசிமார்பம்நான்குமிவ்விரண்டு பணிதருசுழியுநுதனடுப்பின்னேப்பக்கமுமொவ்வொருசுழியுந் துணிதரவிருப்பதிலக்கணமுளதிச்சுழியிலதிலக்கணவழுவே. (ககக)

பிரிவுறவுரத்திலேஞ்சுழியுளதுபோர்சிரீவற்சமாநுதலி லிருசுழியாதன்முச்சுழியாதலிருக்கினுநன்றதுவன்றே லொருவறநான்குசுழிவலம்புரியாயுள்ளதுநல்லதுவன்றி [பார். யிருசுழிமுன்னங்கால்களின்மூலத்திருக்கினுநல்லதென்றிசைப்

களநடுவிரட்டைச்சுழியுடைப்பரிதன்கருத்தனுக்கறமிடிகாட்டு மளவறுதுன்பமரணமுண்டாக்குமவைகணேக்காலுளவாகி லுளபயந்துன்பங்களபந்தனமேலுதமெற்காலடிகபோலம் [ம். வளர்முழந்தாளிந்நான்கினிச்சுழிகண்மன்னினுந்தலைவனெவதைக்கு

இச்சுழியுடைய புரவிபந்தியில்யாத்திருக்கினும்பழுதிவைகிடக்க, வசமில்பரிக்குப்பிராயநாலெட்டாமவத்தைபத்தாகுமொவ்வொன் றில், வைச்சதுமூன்றுவருடமுமிரண்டுமதியமும்பன்னிருநாளு, மிச்ச யித்தளந்தாரின்னமுமொருசார்நிகழ்த்திடுமிலக்கணமதுகேள். ()

(கoஅ) சிறப்பிலக்கணம் - தனி இலக்கணம். (கoக) உரோசனை - கோரோசனை. (ககo) மிச்சிரம் - கலப்பு. (ககக) துணிதர-பிரகாசிக்க. (ககஉ) ஒருவற-நீங்காமல். (ககங) களநடு - கழுத்தின்மத்தியில். (ககச) யாத்திருக்கினும் - கட்டப்பட்டிருந்தாலும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எவ்வண்ணமேதமிருந்திருந்தாலும்வெள்ளோகலந்திருந்ததனால், வவ்வண்ணப்பரிசன்றுகரும்புரவிக்ககடேனுமகன்மார்பேனுஞ், செவ்வண்ணமிருக்கின தசயமுளதப்படிவெண்மைசேர்ந்தாலந்த,மைவ்வண்ணப்பரியின்பேர்வாருணமாஞ்சயங்கொடுக்குமாற்றூர்போரில்.

மகவளிக்கும்பிடர்வெளுப்பு மகிழ்வளிக்குமுரவெளுப்புமணிச்தார்கண்டத், தகவெளுப்புப்பொருள்கொடுக்குமுகவெளுப்புச்சயங் கொடுக்குமதன்பின்பக்கத், தகவெளுப்புச்சகம்பயக்குமிடவெளுப்புச்சந்தானந்தழைக்குஞ்செல்வ, மிகவளர்க்குந்தனம்பலதானியநல்கும்வலப்புறத்துவெள்ளோமாதோ. (ககசு)

நற்புறம்வான்முகமூன்றும் வெளுத்தபரிவென்றி தருநாபிசொட்டி,முற்புறமெல்லாம்பரிதியெனச்சிவந்தமதியெனப்பின்முழுதும் வெள்கும், பொற்புடையவயப்பரிக்குப்பகல் விசயமதியெனமூற்புறம்புவெள்கிப், பிற்புறமெல்லாங்கதிர்போற்சிவந்தபரிக்கிராவிசயம் பெருக்குமன்றே. (ககள)

வந்தனவாலிவ்விரண்டுவகைப்பரியும்புரவியடிவைத்தாலொத்த பந்தெனவுநின்ருலோமலியெனவுமொலித்தாலோபகடீறும் வெந்தறுகணரியெனவும்வேகத்தாற் காற்றெனவுமிகுக்குங்கூத்தாற் சந்தடமகனெனவுநடக்கிலரிகளிறெனவந்தகையவாகி (ககஅ)

குலமகள்போற்கவிழ்முகமுங்கருநெய்தலெனக்கண்ணுங்கொண்டுகார்போ,னிலவியசீர்வண்ணமுங்கார்நெய்தலெனக்கடிமணமுநிறைந்துநாற்ற, மலரகில்சந்தெரிமணிப்பூணலங்கரிக்கிலாஞ்தமகிழ்ச்சியெய்தி, யிலகுவதுத்தமவாசியென்றுரைப்பர்பரிவேதமெல்லாங்கண்டோர். (ககக)

நூறுவிரலுத்தமவாம்பரிக்குயர்வீரெட்டுவிரனூறுநீக்கிக் கூறுவிரன்மத்திமவாம்பரிக்கறுபத்தொன்றதமக்குதிரைக்கென்பவீறில்புகழாய்பொருநரிப்பரியைப்பூசனஞ்செய்திறைஞ்சிப்பாச[ன் மாறுவராலெனமணித்தார்சதங்கை சிலம்பணிவித்துமதிக்கோமாற

(ககஙி) அகடேனும் - வயிறுமினும். (ககசு) உரவெளுப்பு-மார்பில் வெண்ணிறம். (ககள) விசயம் - வெற்றி. (ககஅ) இவ்விரண்டுவகைப் பரியும்-பகலிலும்இரவிலும் வெல்லுவதான இந்தஇருவிதக்குதிரைகளும். (ககக) பரிவேதம் - அசுவலீலக்கணத்தில். வாசி - குதிரை. (கஉ0) நூறுநீக்கி - நூற்றினின்றுங்கழித்து.

கொத்தவிழ்தார்நறுஞ்சாந்தங்கொண்டுசெழும்புகைதீபங்கொ
டித்துப்பூசை, பத்திமையாற்செய்திறைஞ்சியெதிர்நிற்பவாலவாய்ப்
பரனேநோக்கிக், கைத்தலந்தஞ்சிரமுஞ்சித்துவாழியெனப்பரிகொ
டித்தான்கயிறுமாறி, முத்தொழிலின்மூவராய்மூவர்க்குந்தெரியாத
முக்கண்மூர்த்தி. (கஉக)

மேற்படி-வேறு.

உவனிடக்கலனேவாசியொன்றலாணின்றமாயக்
கவனவாம்புரவியெல்லாங்கொடித்திடக்கவர்ந்துவீறு
தவனனில்விளங்குந்தென்னன்றண்பெருங்கோயிலுய்ப்பப்
பவனமுங்கடலும்போலக்கொண்டுபோய்ப்பத்திசேர்த்தார். (கஉஉ)

வாசிவாணிகர்க்குத்தென்னன்வெண்டுகில்வரிசையாக
வீசிஞன்பாணற்கேவல்செய்தவர்வெள்குவாரோ
கூசிலாநேசர்க்காப்பான்குதிரையினிழிந்தேற்றந்தத்
தூசினையிரண்டாங்கங்கையெனமுடிசூடிநின்றார். (கஉங)

இனையதூசிவன்பாலூர்தியிழிந்துநின்றேற்றுச்சென்னி
புனைவதென்னிவர்கையோடும்புனைந்ததிக்குடையும்பூண்ட
கனலராப்பூணுமன்னன்கவருமோவென்றுதம்மில்
வினவினர்வெருண்டுசொன்னர்கணத்தனிவீரரெல்லாம். (கஉச)

அறந்தருகோலான்வெவ்வேறுபரிவயவர்யார்க்கு
நிறந்தருகலிங்கமீந்தானேர்ந்தவைவாங்கியன்பிற்
சிறந்தருள்வடிவாய்வந்தார்செழுமறைப்புரவியோடு
மறைந்தனர்மறைந்தாரொக்கமாயவாம்பரிமேல்வந்தார். (கஉஙி)

இருமைக்குந்துணையாய்நின்றவிருபிறப்பாளர்க்கேற்ப
வருமைத்தாஞ்சிறப்புநல்கியவரிடத்தவரையுய்த்துப்
பருமத்தயானைவேந்தன்பகற்கதிர்வானத்துச்சி
வருமப்போதெழுந்துசெம்பொன்மாடநீள்கோயில்புக்கான். (கஉசு)

எனைமந்திரருந்தத்தமில்புகப்புரவிபார்த்த
மானகராருந்தத்தமனைபுகப்பரியின்பாக
ரானவர்தாமுங்கோயிலடைந்ததம்மிளையாட்டெல்லா
மீனெடுங்கண்ணிஞட்குவிளம்பினரிருந்தாரன்றே. (கஉஎ)

நரிபரியாக்கியபடலம் முற்றிற்று.

ஆடபடலம் - சுச - க்கு திருவிருத்தம் - உகூஙி.

(கஉக)முத்தொழிலின்-ஆக்கல்காத்தலழித்தலில்.(கஉஉ),தவனனில்-சூரியனிலும். (கஉங)வீசிஞன்-கொடித்தான்.(கஉச)தூசு-ஆடை (கஉஙி)நிறந்தருகலிங்கம்-ஒளிவிடுமாடை.ஒக்க-உடனே.(கஉசு)இருமை-இம்மைமறுமை.(கஉஎ)பரியின்பாகராவர்-குதிரைவீரராகவந்த சோமசுந்தரக்கடவுள்.

அறுபதாவது,

பரிநரியாக்கியபடலம்.



கலிநிலைத்துறை.

ஞானநாயகனேயானரிபரிவெள்ள
மானவாறுரைசெய்துமீண்டப்பரிநரியாய்ப்
போனவாறுகண்டமைச்சரைப்புரவலன்கறுப்ப
வானவாறுபோல்வைகைநீர்வந்தவாறுரைப்பாம். (க)

நெருங்குசூரியமுழக்கமுந்தானையுங்கிழிர
மருங்கிலாதவர்வந்தெதிர்மங்கலமேந்த
வரங்கொல்வேலினனருளியவரிசையோடிணங்கு
புரங்கொல்வேதியர்க்சன்பர்தந்திருமனைபுகுந்தார். (உ)

உடுத்தசுற்றமுங்கழகமுமொட்டியநட்பு
மடுத்தகேண்மையால்வினவுவாரவரவர்க்கிசைய
வெடுத்தவாய்மையான்முகமனுமகிழ்ச்சியுமீந்து
விடுத்தவாதலூராளிகள்வேறிடத்திருந்து. (ங)

கரந்தைசூடியவாலவாய்க்கண்ணுதலுமன்
றிரந்தவண்ணமேயாங்கொடுபோகியவெல்லாம்
பரந்தவன்பருந்தானுங்கொண்டெம்மையும்பணிகொண்
டரந்தைதீர்த்தனனன்றியுமரசனுக்கிசைய. (ச)

நல்லவாம்பரிசெலுத்தினனமக்கினிக்கவலை
யில்லவாம்படியாக்கினனின்னமொன்றுலகை
வெல்லவாம்படிதன்னருள்விளக்குமானந்தம்
புல்லவாம்படியெமைத்தவம்பூட்டுவான்வேண்டும். (ஞ)

என்றவாதரந்தலைக்கொளவிகபரத்தாசை
யொன்றுமின்றியேயுணர்வினுக்குள்ளுணர்வாகத்
தன்றுபூரணமாகியசுந்தரச்சோதி
பன்றுளாடியசேவடிமனம்புதைத்திருந்தார். (ட)

நாவையுந்திருவால்வாய்நாயகன்றமரை
யாளமண்சுமந்தருளுமென்றதனையுங்காண்பா

(க)கறுப்ப-கோபிப்ப.(உ)மருங்கிலாதவர்-இடைதுணுகியவர்;அன்னோர்-மாதர்.(ங)கழகமும்-கழகவாசிகளும்.கழகம்-கல்விமண்டபம்.(ச)அரந்தை-துன்பம்.(ஞ)ஆனந்தம்-சிவானந்தம்.(ட)ஆதரம்-ஆசை.

ஞாலவெம்பரித்தூளிபோர்ப்புண்டமெய்கழுவி
மீளவேண்டுவான்போற்கடல்குளித்தனன்வெய்யோன். (எ)

ஈசனுடல்வெம்பரிக்குழாத்தெழுந்தசெந்தூளான்
மாசுமூழ்கியவண்டத்தைவானிலாவென்னுந்
தூசிஞாலறத்துடைப்பவனெனமணித்தொகுதி
வீசுமாழியுண்முளைத்தனன்வெண்மதிக்கடவுள். (அ)

சேயதாரகைவருணமாத்தீட்டியவான
மாயவேட்டினையிருளெனுமஞ்சனந்தடவித்
தூயவாணிலாவென்னுமெண்டிசிஞற்றுடைப்பான்
பாயவேலையின்முளைத்தனன்பனிமதிக்கடவுள். (கூ)

கள்ளொழுக்குதார்மீனவன்கடிமனைபுகுந்த
புள்ளுவப்பரிநள்ளிருட்போதுவந்தெய்தப்
பிள்ளையாகியமதிமுடிப்பிரான்விளையாட்டா
லுள்ளவாறுதம்வடிவெடுத்தொன்றொடொன்றுசாவும். (கo)

சங்கிலேசையும்பிணப்பறையோசையுஞ்சரிந்த
மங்குலோதியரழுகுரலோசையும்வடந்தாழ்
கொங்கைசேப்புறகையெறியோசையுங்குளிர
வெங்குநாஞ்செவிபருகுவமின்னமுதென்ன. (கக)

வாம்பரித்திரளாகிநாமனித்தரைச்சுமத்து
தாம்புசங்கிலிதொடக்குண்டுமத்திகைதாக்க
வேம்பலுற்றனம்பகலெலாமிப்பொழுதீண்டு
நாம்படைத்தனநம்முருநம்விதிவலத்தால். (கஉ)

கானகந்தனிலொழுகுநாண்முதலிந்தக்கவலை
யானதுன்பநாமறிந்திலமின்னமுமார்த்த
மானவன்றொடர்வடுக்களுமத்திகைத்தழும்பும்
போனவன்றினிப்புலருமுன்போவதேகருமம். (கங)

உள்ளமாரநாந்தின்பதற்கூன்சரிக்கொழுகு
நொள்ளைநாகிலநந்திலநுழைந்தளையொதுங்கும்

(எ) தமரை - அடியவரை. (அ) மாசுமூடிய - அழுக்கடைந்த. (கூ) அஞ்சனம் - மை. (கo) புள்ளுவப்பரி-வஞ்சனைக்குதிரை. அதாவது - நரிக்குதிரை. (கக) சரிந்த - கட்டவிழ்ந்த. மங்குல்-மேகம்போன்ற. (கஉ) தாம்பு - கயிறு. (கங) மத்திகை - சம்மட்டி. குறடா என்ப.

கள்ளகீள்கலைக்கால்லெண்டுமிலவினிக்கடலே
கொள்ளினேடுபைம்பயறுபுற்கொள்வகையடாதால். (கச)

நாடிக்காவலன்றமருளார்நகருளார்கண்டாற்
சாடிக்காய்வரேபுலருமுன்சங்கிலித்தொடர்நீத்
தோடிப்போவதேசூழ்ச்சியென்றூக்கமுற்றெருங்கே
கூடிப்பேசினவூளவாய்க்குறுநரிக்குழாங்கள். (கஞ)

வெறுத்தகாணமுங்கடலேயும்விரும்பினகோழுன்
றுறுத்தநாகுநந்தலவணைச்சங்கிலித்தொடரை
முறித்தகால்களிற்கட்டியகயிற்றெடுமூளையைப்
பறித்தவூளையிட்டெழுந்தனபோம்வழிபார்ப்ப. (கசு)

நின்றநீணிலைப்பந்தியுணெருங்குமாநிரையைச்
சென்றுதாவிவாளெயிறுறச்சிதைபடக்கடித்து
மென்றுசோரியைக்குடிப்பனவீக்கியமூளையோ
டொன்றவோடவேயண்டத்திலூறுசெய்வனவால். (கள)

ஊளையோசைகேட்டிம்மெனவுறக்கநீத்தெழுந்து
காளைவீராய்மந்தரைகாப்பவர்நெருன
லாளிபோல்வருபரியெலாநரிகளாய்மற்றை
யோளிமானிரைகுடர்பறித்துண்பனகண்டார். (கஅ)

காண்டலுஞ்சிலவலியுளகடியமுள்ளரணந்
தாண்டியோடினசிலநரிசாளரமுழையைத்
தூண்டியோடினசிலநரிசுருங்கையின்வழியா
லீண்டியோடினதூழில்புக்கேகினசிலவே. (கக)

முடங்குகாலுடைச்சம்புவுமூப்படைந்தாற்ற
லடங்குமோரியுங்கண்குருடாகியநரியு
மொடுங்குநோயுழந்தலமருமிகலனுமோடு
மிடங்கள்கண்டிலபந்தியிற்கிடந்தனவெங்கி. (உ0)

கிட்டியோடினர்வெருட்டுவோர்கீழ்வீழக்கடித்துத்
தட்டியோவெனிலவெதிர்தடுப்பவரடிக்கீ

(கச) நொள்ளைநாகில - நொள்ளைகளானநாகுகள். இல்லை, நாகு நொள்ளையானவையாதலின் நொள்ளை நாகென்றன. நொள்ளை - குருடு. நாகு - ஒருவகை நத்தை. (கஞ) புலருமுன் - இரவுமுடியு முன். (கசு) காணமும் - கொள்ளும். (கள) மாநிரையை - குதிரைவ ரிசையை. (கஅ) மந்தரை-குதிரைலாயம். (கக) முள்ளரணம் - முள் வேலி. (உ0) இகலனும்-நரியும்.

ழொட்டியோவெசிலகிடந்தூளோயிட்டிரங்குங்
குட்டியோடணத்தெயிலிறக்குதிப்பனசிலவே. (உச)

மறம்புனைந்தவேன்மீனவன்மாளிகைதள்ளிப்
புறம்படைந்தவிந்நரியெலாம்பொய்கையுய்யான
மறம்பயின்றநீண்மனைமறுகாலயங்கவலைத்
திறம்படர்ந்தபண்மாடநீணகரெலாஞ்செறிந்த. (உஉ)

மன்றுஞ்சித்திரகூடமுமாடமுமணிசெய்
குன்றுந்தெற்றியுமுற்றமுநாளொடுகோள்வஞ்
தென்றுஞ்சுற்றியபொங்கரும்பெங்கணுநிரம்பி
யொன்றுஞ்சுற்றமோலோயிட்டிழல்வனநரிகள். (உங)

கரியிலேசையும்பல்லியவோசையுங்கடுந்தேர்ப்
பரியிலேசையுமின்றமிழோசையும்பாணர்
வரியிலேசையுநிரம்பியமணிநகரெங்கு
நரியிலேசையாய்க்கிடந்ததுவிழித்ததுநகரம் (உச)

விழித்தஞாளிகள்விழித்தனகேகயம்வெருவி
விழித்தகோழிகள்விழித்தனமதுகரம்வெருண்டு
விழித்தவோதிமம்விழித்தனகுருகினம்விரைய
விழித்தவாரணம்விழித்தனகருங்கொடிவெள்ளம். (உருு)

அட்டில்புக்கனகிணத்திலேயழற்பசியுருக்கப்
பட்டடுக்கியகருங்கலமுருட்டுவபாகு
சுட்டசோறுபல்லுணவுவாய்மடுப்பனசூழ்ந்த
குட்டியுண்ணவுங்கொடுப்பனகூவிளிகொள்வ. (உசு)

புறவுபூவைபைங்கிள்ளைகள்பூத்தலைச்சேவல்
பிறவும்வாருவவுறங்கியபிள்ளையைக்கொடுபோய்
நறவுநாறியகுமுதவாய்நகையெழநக்கி
யுறவுபோல்விளையாடுவனூறுசெய்யாவால். (உஎ)

பறிப்பவேரொடுமுன்றில்வாய்ப்படர்பசுங்கொடியைக்
கறிப்பநாகிளங்காயெலாங்கரும்புதேன்கவிழ
முறிப்பவாயிட்டுக்குதட்டுவவுண்வெவ்வாய்மொய்ப்பத்
தெறிப்பவூளையிட்டாடுவதிரிவனபலவே. (உஅ)

(உக) எயிலிற-மதிலிடிய. (உஉ)உய்யானம் - பூந்தோட்டம். (உங) மன்று - பொதுவம்பலம். பொங்கரும் - சோலையும். (உச) வரி - இசைப்பாட்டு. (உடு) கேகயம் - ஒருவகைப்புள். (உசு) அட்டில் - சமையலறை. (உஎ)ஊறுசெய்யாமல் - துன்புறுத்தாமல். (உஅ)முன்றில்வாய் - முற்றத்தில்.

ஆயிரம்பொரிதிரிமருப்படல்கெழுமேட
மாயிரங்கருந்தாதுநேராக்கையவேன
மாயிரங்கவிரனையசூட்டவிர்தலைக்கோழி
யாயிரங்குறும்பார்ப்பொடுமாருயிர்செகுப்ப. (உக)

பின்றொடர்ந்தநாய்குரைப்பொடுதரந்திடப்பெயர்ந்து
மூன்றொடர்ந்துயிர்செகுப்பனவெஞ்சினமூட்டி
வன்றடம்புயமள்ளர்போய்வலிசெயப்பொருது
கன்றிவந்துசெம்புனலுகக்கடிப்பனவனந்தம். (ஙo)

பன்றிவாய்விடுமிரக்கமும்பல்பொறிமுள்வாய்
வென்றிவாரணச்சும்மையுமேழகத்தொலியு
மன்றிநாய்குரைப்போசையுமாடவரார்ப்பு
மொன்றியூளைவாய்நரிக்குரற்கொப்பதுண்டொருசார். (ஙக)

கங்குலெல்லைகாணியநகர்கண்விழித்தாங்கு
மங்குறோய்பெருவாயில்கடிறத்தலுமாறு
தெங்குமீண்டியநரியெலாமிம்மெனவோடிப்
பொங்குகாரிருட்டுணியெனப்போயினகானம். (ஙஉ)

ஈறிலாச்சிவபரஞ்சுடரிரவிவந்தெறிப்பத்
தேறுவாரிடைத்தோன்றியசிறுதெய்வம்போல
மாறிலாதபன்செங்கதிர்மலர்ந்துவாளெறிப்ப
வீறுபோயொளிமழுங்கினமீன்கணமெல்லாம். (ஙங)

அண்டருக்கரிதாகியமறைப்பொருளழுகைத்
தொண்டருக்கெளிதாகிமண்சுமந்தருள்வருத்தங்
கண்டருட்கழல்வருவொன்கைகளாயிரமுங்
கொண்டருக்கவெங்கடவுளுங்குணகடலுதித்தான். (ஙச)

கவனவெம்பரிசெலுத்திமேற்கவலைதீர்ந்துள்ளே
சிவமுணர்ந்தவர்சிந்தைபோன்மலர்ந்தசெங்கமல
முகமையில்பரம்பொருளுணர்ந்துரையிறந்திருந்தோர்
மகனைவாயெனவடங்கினமலர்ந்தபைங்குமுதம். (ஙஞ)

(உக) மேடம் - யாடு. கருந்தாது - இரும்பு. (ஙo) செம்புனல் - இரத்தமொழுக. (ஙக) சும்மை - பேரோசை. (ஙஉ) மங்குல்தோய் - மேகம்படிந்த. (ஙங) மீன்கணம் - நட்சத்திரகூட்டம். (ஙச) அண்டர் - தேவர். (ஙஞ) பரம்பொருள் - நிட்கள பரசிவமான ஒப்பற்ற சிரேட்டவத்துவை.

பந்தியாளர்கள்யாதெனப்பகர்துமென்றச்சஞ்
சிந்தியாவெழுந்தொல்லோபோய்த்திரண்மதங்கவிழ்க்குந்
தந்தியானரசிறைகொளுமிருக்கையைச்சார்ந்து
வந்தியாவுடல்பனிப்புறவந்தனமொழிவார். (ஙசு)

காற்றினுங்கடுங்கதியவாய்க்கட்கினியனவாய்
நேற்றுவந்தவாம்பரியெலாநின்றுவாம்பரிக்குக்
கூற்றெனும்படிநரிகளாய்ங்கரெலாங்குழுமி
யூற்றஞ்செய்துபோய்க்காட்டகத்தோடியவென்றூர். (ஙஎ)

கருத்திறுதவிச்சொல்லெனுங்கடியகால்செவியாந்
திருத்தியூடுபோய்க்கோபமாஞ்சுதெழன்மூட்டி
யெரித்ததீப்பொறிசிதறிடக்கண்சிவந்திறைவ
னுருத்தவாறுகண்டமைச்சரும்வெருவினொதுங்கி. (ஙஅ)

அழுதமுண்டவனஞ்சமுண்டாலெனமுதலுட்
சமரவெம்பரிமகிழ்ச்சியுட்டாழ்ந்தவனையே
திமிரவெங்குறுநரிகளாய்ச்சென்றவேயென்ன
வமரரஞ்சியவாணியாஞரஞராழ்ந்தான். (ஙகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருகிருக்குந்தொல்லமைச்சர்தமை நோக்கிவாதவூராளியென்னுங், கருகிருட்டமனக்கள்வனம்முடையபொருண்முழுதுங்கவர்ந்துகாட்டிற்,குருதிணக்குடர்பிங்கித்தின்றுதிரிநரிகளெல்லாங்கு திரையாக்கி, வரவிடுத்தானிவன்செய்தமாயமிதுகண்டீரோமதிநூல் வல்லீர். (சo)

இம்மாயஞ்செய்தானெயென்செய்வதெனவுலகிலெமருக்கெல்லாம், வெம்மாசுபடுபாவம்பழியிரண்டும்படவிழுக்குவிளைத்துத்தீய, கைம் மாறுகொன்றுன்றன்பொருட்டினியாமேதுரைக்கக்கடவேமென்று, சும்மாதுயிரந்தூக்கியெதிராடாதிருந்தாரச்சூழ்வல்லோர்கள். (சக)

அவ்வேலைமனக்கினியபரிசெலுத்தியரசகாரியமன்றுக்கி
வெவ்வேலைமனக்கவலைவிடுத்தனமென்றகமகிழ்ச்சிவிளைவுகூர
மைவ்வேலைவிடமுண்டவானவனைநினைந்தறிவுமயமாமின்ப [டே
மெய்வ்வேலையிடைவீழ்ந்தார் விளைந்ததறியார்வந்தார் வேந்தன்மா

(ஙசு)தந்தியான் - யானைப்படையினையுடையபாண்டியன்.(ஙஎ) குழுமி-கூடி. (ஙஅ) கடியகால்-கொடியகாற்று. (ஙக)சமரவெம்பரி-போருக்குரியவேகமான குதிரை. (சo) கள்வன் - வஞ்சகன், அல்லதுதிருடன். (சக) இம்மாயம்-இந்தப்பொய்யை. (சஉ) வீழ்ந்தார்-மூழ்கினர்.

வந்தவரைச்சிவந்தவிழிப்பொறிசிதறக்கடகெடுத்துமறவோலைக்
கி, யந்தமிலாப்பொருள்கொடுபோய்நல்லவயப்பரிகொடுவந்தழகி
தாகத், தந்தனையன்றேவரச கருமமுடித்திசைநிறுத்தத்தக்கோர்
நின்போ, லெந்தவுலகுளரேயோவெனவெகுண்டானதுகேட்டவீ
சன்முரண்டார். (சஉ)

குற்றமேதப்புரவிக்கெனக்கேட்டார்கோமகனுங்குற்றமேது
மற்றதாலரையிரவினரியாகியயனின்றபுரவியெல்லாஞ்
செற்றுவார்குருதியுகணிணஞ்சிதறக்குடர்பிடுங்கித்தின்றுநேர்வ
துற்றபேர்க்கூற்றமிழைத்தார்கலங்கக்காட்டகத்திலோடிற்றன்றே.

கண்ணுமிடுகவசமும்போற்காரியஞ் செய்தொழுகியதுங்காலம்
பார்த்தெம், மெண்ணரியநிதியீட்டங் கவர்வதற்கோதின்னமைச்சி
னியற்கைநன்றுற், புண்ணியவேதியர்மரபிற்பிறந்தனமென்றிருரு
பெருமைபூண்டாயேநீ, பண்ணியகாரியம்பழுதுபிறராகிற்றண்டிக்
கப்படுவரென்றான். (சஙி)

தண்டலாளர்க ளிவனைக் கொடுபோய்நம்பொருண்முழுதுந்
தடுத்துமீர்த்து, மிண்டிஞல்வலிசெய்தும்வாங்குமெனவெகுண்டர
சன்விளம்பக்கூற்று, மண்டுமேன்மறஞ்செய்யும்வலியுடையார்கதி
ரையிருளடுத்துப்பற்றிக், கொண்டுபோனு லென்னக்கொடுபுறம்
போயறவோரைக்கொடுமைசெய்வார். (சசு)

கதிர்நோக்கிக்கணன்மூட்டுங்கடும்பகலுச்சியிலிரவிக்கடவுணே
ர்நின், றெதிர்நோக்கநிலைநிறுத்திக்கரங்களிலுநுதலிலுங்கல்லேற்றி
ச்செந்தீப், பிதிர்நோக்கத்தவரொறுப்பவாற்றராய்வீழ்ந்திருளேப்பி
ளப்போன்செந்தீ, மதிநோக்கத்தனிச்சுடரையழைத்தழுதுதிதிசெ
ய்வார்வாதவூரர். (சஎ)

கோச்சகக்கலிப்பா.

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகனுமென்னைப்பணிகொண்ட

(சஉ) கடகெடுத்து - சீற்றங்காட்டி. (சஙி) ஊற்றமிழைத்து - துன்ப முண்டாக்கி. (சஙி) பழுது - தவறேயாம், தண்டிக்கப்படுவர். கொலைக்காளாவர்என்பதுகுறிப்பு; பார்ப்பாரைத்தண்டிக்கப்படாதென்பது, விதி. (சசு) தண்டலாளர்கள் - தண்டற்காரர்கள். அவர் அரனின் பணத்தைநிர்பந்தித்துவாங்குவோர். (சஎ) கதிர்நோக்கிக் கணன்மூட்டுங் கடும்பகலுச்சியில் - சூரியனைப் பார்த்தவண்ணம் பஞ்சாக்கினி வளர்த்துத் தவஞ்செய்தற்குரிய கொடிய பகற்கால தபோநுச்சிபொழுதில்.

வேதவோவேதமுடிவின்வினோந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ. (சஅ)

ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோமெய்யில்வினேயேன்றலைவைத்த
கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ. (சக)

அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்யுலகைமெய்யாகப்பேதிக்குஞ்
சித்தவோசித்தந்தெளிவித்தெனைத்தந்த
மூத்தவோமோனமயமானமூர்த்தியவோ. (கூ0)

கலிவிருத்தம்.

என்றேறியபுகழ்வேதியரிரங்குந்துதிசெவியிற்
சென்றேறலும்விடையேறுசுந்தரன்மற்றிவர்செயலே
மன்றேறவுமுடிமேனதிமண்ணேறவுமுதியா
ளன்றேறியதேரோடெம்விண்ணடைந்தேறவுநினைந்தான். (கூக)

கங்கைப்புனல்வடிவாகியகவ்வைத்திரைவைகைச்
சங்கச்சரியறலாமலர்த்தாரோதியைநோக்கா
வங்கக்கடல்பேரூழியில்வருமாறெனவெவரு
மிங்கற்புதமடையப்பெருகென்றுனருள்குன்றன். (கூஉ)

தும்பைச்சடைமுடியாஞருசொல்லாடவுமுன்னுள்
வம்பைப்பொருமுலையால்வரிவளையால்வடுவழுத்துங்
கொம்பைத்தவங்குலைப்பானடுங்கோபங்கொடுநடக்குங்
கம்பைப்பெருநதியிற்கடுங்கதியால்வரும்வைகை. (கூங)

பத்திக்குளிர்கமுகின்குலைபரியக்கரைமுரியக்
குத்திப்பழஞ்சிதறச்செறிகோட்டங்களைவீட்டி
முத்திக்கொடுகதலிப்புதன்முதுசாலிகள்பரித்துத்
தத்திப்பலதருவேரொடுந்தள்ளிக்கடுகியதே. (கூச)

பல்லாயிரஞ்செந்தாமரைபரப்பிக்கொடுவரலா
னல்லாயிரங்கண்ணுனெழினயக்குங்குளிர்களினங்

(சஅ) வேதமுடிவின்-வேதாந்தத்தின்; (சக) மெய்யில்-உண்மையற்ற. (கூ0) முத்த - இயற்கையிலேயே பாசமில்லாத சுவாமியே. (கூக) முதியாள் - பிட்டுவிற்குங் கிழவி. (கூஉ) கவ்வை - ஓசை. (கூங) வம்பைப்பொரு - கச்சினைமோதுகின்ற. (கூச) கோட்டம் - வயல்.

கல்லாரமுங்கடிமுல்லையுங்கரும்புங்கொடுவரலால்
வில்லாயிரங்கொடுபோர்செயும்வேள்வீரனுமானும். (இடு)

மணிமாலையுமலர்மாலையுஞ்சிதருவிறுமருங்கே
யணிகாஞ்சியுமொளிசங்கமுமலறப்புடையெறியாக்
கணியாவெழின்முகதாமரைகண்ணீரொடுங்கவிழத்
தணியாமுனிவுடனூடியதடங்கண்ணியர்போலும். (இசு)

வரையுந்தியமதமுல்லையினெய்பாறயிர்மருதத்
தரையுந்தியகரும்பின்குறைசாறுவரன்றி
யிரையுந்தெழுதூநீர்வைகையிந்நன்னகர்வைகுந்
திரையுந்தெழுகடறம்மிடஞ்சென்றுலவைபோலும். (இஎ)

கல்லென்றதிர்சும்மைப்புனல்கடிமாமதிற்புறம்போ
யில்லங்களுஞ்சிறுதுச்சிலுமறித்திட்டிருங்கடல்வாய்ச்
செல்லுங்கலநாவாய்பலதிமில்போற்சுமந்தேகிப்
புல்லும்புரிசையுந்தள்ளியுள்புகுகின்றதையன்றே. (இஅ)

மறுகும்பலபொருளாவணமணிவீதியுமன்றுஞ்
சிறுகுங்கணமதமாநிரைசேருந்தெருவும்போய்
முறுகுஞ்சினமொடுதெண்டிரைமூரிப்புனருவிக்
குறுகும்படிகண்டஞ்சினர்கொடிமாநகருள்ளார். (இகூ)

சிலர்மைந்தரையெய்ப்பார்களுஞ்சிலர்மைந்தரைக்காணு
தலமந்தழுவாருஞ்சிலரங்கைத்தளிர்பற்றிக்
குலமங்கையர்தமைக்கொண்டுயப்போவார்களுங்குறுகுந்
தலமெங்கெனத்திகைப்பார்களுந்தடுமாறுகின்றாரும். (சுO)

பொன்னுள்ளனபணியுள்ளனபொருள்பேணல்செய்வாரு
மன்னுஞ்சிலபொருள்கைக்கொளமறப்பார்களுமாட
மின்னுங்கொடிநெடுமாளிகைமேலேறுகின்றாரு
மிந்நன்னகர்துயர்மூழ்குதற்கேதுவென்பாரும். (சுக)

நேற்றும்பரிகரியாயினநெடுமாநகரெங்கு
மூற்றஞ்செய்தவென்பார்களுமொருகாலமுமிந்த
வாற்றின்பெருக்கிலையென்றயர்வாருங்கடலரசன்
சீற்றங்கொடுமுன்போல்வருஞ்செயலேகொலென்பாரும். (சுஉ)

(இடு) ஆயிரங்கண்ணுன் - இந்திரன். (இசு) கணியா - அளவிடப் படாத. (இஎ) வரன்றி - வாரி. (இஅ) தச்சிலும் - குடிசைகளும். (இகூ) ஆவணமணிவீதி - அழகிய கடைவீதி. (சுO) அலமந்து-அங்கலாய்த்து. (சுக) ஏது-காரணம்.(சுஉ)ஊற்றஞ்செய்த-தன்புறுத்தின.

நங்கோமகன்செங்கோல்பிழைத்தனனெனநவில்வார்
ரங்கோல்வளைபங்கன்விளையாட்டோவெனவறைவா
சிங்காரிதுதணிப்பாரெனவிசைப்பாரிதுதணிப்பான்
பொங்காலமுண்டருள்சுந்தரனலதியாரெனப்புகல்வார். (சுஙூ)

அடித்தாயிரங்குண்டோதரரெதிரேற்றிருந்தகல்வாய்
மடித்தாலுமிதடங்காதெனமதிப்பாரிதுதனையு
மெடுத்தாயிரமுகங்கையினிறைவன்சடையேறக்
கொடித்தாலலதடங்காதிதன்கொடுங்கோபமதென்பார். (சுஎ)

வானுறிழிநதியாயிரமுகத்தால்வருவதுபோ
லானதெழுநீத்தந்தணியாவாறுகண்டன்பு
தானுகியசிவனண்பரையொறுக்குந்தறுகண்ணர்
போனுர்தமதகத்தேயுளபொருள்பேணுதல்கருதா. (சுஙு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வழுதிதன்றமர்விட்டேகமதுரைநாயகன்பாலேகி
யழுதிசைபாடுந்தொண்டிலகப்படும்பாதம்போற்றித்
தொழுதுகொண்டறிவாயுருஞ்சுகப்பெருங்கடலின்மூழ்கி
யெழுதுசித்திரம்போன்மன்னியிருந்தனர்வாதவூரர். (சுசு)

பரிநரியாக்கியபடலம் - முற்றிற்று.

ஆ படலம் - சுக - க்கு திருவிருத்தம் - உகஙக.

அறுபத்தொன்றவது,

மண்சுமந்த படலம்.

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பண்சுமந்தமறைநாடரும்பொருள்பதஞ்சுமந்தமுடியார்மனம்
புண்சுமந்ததுயர்தீரவந்தபரிநரிகளாயடவிபோனபின்
விண்சுமந்தசுரநதியெனப்பெருகுவித்தவைகையிதுவிடையலன்
மண்சுமந்துதிருமேனிமேலடிவடிச்சுமந்தகதையோதுவாம். (க)

(சுஙூ) தணிப்பார் - சாந்தப்படுத்துவார். (சுஎ) மடித்தாலும் - உள்விடுத்தாலும். (சுஙு) ஆனுதி - கீங்காது. (சுசு) வழுதிதன்றமர் - அரசன்தண்டவாளர். (க) வடி - தழும்பு.

கருங்கடற்றிரையிடைக்கிடந்துசுழல்கலமெனக்கனமுகடளாய்
வரும்புணற்பரவையுட்கிடந்துநகர்மறுகியுட்கமறவேலினு
ஞெருங்கமைச்சரைவிளித்துநீர்கரைசுமந்தொதுக்கிவருமோதநீர்ப்
பொருங்கதத்தினையடக்குவீரென வமைச்சருந்தொழுதுபோயினர்.

வெறித்தடக்கைமதயானைமந்திரிகள்வேறுவேறுபலகுடிகளுங்
குறித்தெதெத்தெழுதியெல்லையிட்டளவுகோல்கிடத்திவரைகீறியே
யறுத்துவிட்டுநகரெங்கணும்பறையறைந்தழைத்துவிடுமாளெலாஞ்
செறித்துவிட்டவரவர்க்களந்தபடிசெய்மினென்றுவருவித்தனர். (ப)

மண்டொடுங்கருவிகூடையாளருமரஞ்சுமந்துவருவார்களும்
விண்டொடும்படிநிமிர்ந்துவண்படுவிரிபசுந்தழைபலாலமுங்
கொண்டதிர்த்துவருவாரும்வேறுபலகோடிகூடியசூழாமுநீர் [ர்.
மொண்டருந்தவருமேகசாலமென வருபுனற்கரையின்மொய்த்தன

இட்டுவார்பரிநிறுத்துவாரரவுருட்டுவாரடிகிடத்துவா
ரிட்டுவார்தழைநிரப்புவார்விளியெழுப்புவார்பறையிரட்டுவார்
வெட்டுவார்மணலெடுத்துவார்செலவெருட்டுவார்கடிதுதடுமெனக்
கொட்டுவார்கரைபரப்புவாருவகைகூருவார்குரவைகுழறுவார். (ஙி)

கட்டுவார்கரையுடைப்பநீர்கடுகல்கண்டுநெஞ்சதுகலங்குவார்,
மட்டிலாதமுனிவென்னை யன்னையினியாறு கென்றெதிர்வணங்கு
வார், கொட்டுவார் மணலுடைப்படங்கமகிழ் கொள்ளுவார்குரவை
துள்ளுவா, ரெட்டுமொதிரமுமெட்டவாயொலியெழுப்புவார்பறையி
ரட்டுவார். (சு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இங்கிலையூரிலுள்ளார்யாவர்க்குங்கூலியாளர்
தன்னிமுன்னளந்தவெல்லைத்தொழின்முறைமூண்டுசெய்வா
ரங்கிலைநகரின்றென்கீழ்த்திசையுளாளவிலாண்டு
மன்னியநாலைமூதாட்டியொருத்திபோல்வந்தியென்பாள். (எ)

செவியுணவானவேதசிரப்பொருளுணர்ந்துசெந்தீ
யவியுணவூட்டுமீசனன்பரிலுற்றநோற்ற
தவநிறைபேறுதுய்ப்பாடாயிலார்க்கன்னையொப்பாள்
சுவையுறுபிட்டுவிற்றுண்டொழிலினுடமியளாவாள். (அ)

(உ) கலமென - கப்பலையொப்ப. (ஙி) வெறி - மதமயக்கம். (ச) பலாலம் - வைக்கோல். (ஙி) பரி-குதிரைக்கால். இதுஒருவகை நடதறி. (சு) மாதிரமும் - திசையும். (எ) தென்கீழ்த்திசை-அக்கினி மூலை. (அ) தமியள் - தனித்துவாழ்பவள்.

வைகலுமவித்தசெவ்விப்பிட்டினேமருங்குநான்கு
கைகளாய்மூளைத்தமுக்கட்கரும்பினையரும்புமூரற்
செய்கதிர்முகத்தானந்தத்தேறலையாலவாயெம்
மையனேயகத்தாளேக்கியன்பினுலருத்திவிற்பாள். (கூ)

வளைந்தமெய்யுடையவந்தமாதவஞரைமூதாட்டிக்
களந்தபங்கடைப்பான்கூலியாள்கிடையாமலாற்றத்
தளர்ந்தினியென்னேமன்னன்றண்டிக்கினென்செய்கேனென்
றுளந்தமொறிக்கூடலுடையநாயகனேயுன்னு. (கo)

பிட்டுவிற்றுண்டுவாழும்பேதையேனிடும்பையென்ப
தெட்டினேயேனுமின்றியிரவியெங்கெழுகென்றிந்நாண்
மட்டுகின்னருளாலிங்குவைகினேற்கின்றுவந்து
விட்டதோரிடையூறையமீனவனுனையாலே. (கக)

தூணையின்றிமக்களின்றித்தமரின்றிச்சுற்றமாகும்
பேணையின்றியேன்றுகொள்வார்பிறரின்றிப்பற்றுக்கோடாம்
புணையின்றித்துன்பத்தாழ்ந்துபுலம்புறும்பாவியேற்கின்
றிணையின்றியிந்தத்துன்பமெய்துவதறனுவெந்தாய். (கஉ)

தேவர்க்குமரியனுருந்தேவனேயன்பராவார்
யாவர்க்குமெளியனுகுமீசனேவேந்தனுனைக்
காவற்செங்கோலாற்சீற்றங்கடுகுமுன்கூலியாளா
யேவற்செய்வாரைக்காணேனேழையேனினியென்செய்கேன். ()

கூலியாள்வருவதுண்டோவென்றுதன்கொங்கைமுற்றத்
தாலிபோற்கண்ணீர்சோர்வாள்குறித்துமுன்பருத்தும்பிட்டை
வேலைநீர்ஞாலங்காணமிசைந்தவளிடும்பைதீர்ப்பான்
பாலினேர்மொழியாள்பாகமறைத்தருட்படிவங்கொள்வான். (கச)

குறட்குநீரருத்திவைகைக்குடிஞையாயொழுகுங்கங்கை
யறற்குழல்பிரிவினுற்றுதன்பிளவுளைக்காண்பான்
மறக்கயனெங்கணுளைவஞ்சித்துவடிவமாறிப்
புறப்படவானைப்போலப்போதுவான்போதமூர்த்தி. (கஞ)

(கூ) வைகலும் - நான்தோறும். (கo) நரைமூதாட்டி - நரைத்த கிழவி. (கக) இடும்பை - துன்பம். (கஉ) பேணை - கொழுகொம்பு. (கங) சீற்றங்கடுகுமுன் - கோபமுண்டாதற்குமுன்; நெருங்குதற்கு முன்என்றுமாம். (கச) இடும்பை - துன்பம். (கஞ) குறட்கு - பூதத் திற்கு.

கோச்சகக்கலிப்பா.

அழுக்கடைந்தபழந் துணியொன் றரைக்கசைத்துவீழுத்தொண்டர்
குழுக்கடந்தவிண்டைநிகர்சுமையடைமேற்கூடைகவிழ்த்
தெழுக்கடந்துதிசைகடந்திட்டிணைகடந்தருத்தோண்மேன்
மழுக்கடைந்துவிளங்கியவாய்மண்டொடுதிண்படையேந்தி. (கசு)

திடங்காதல்கொண்டறவோர்திருவேள்வித்தருமமுது
மிடங்காவல்கொண்டுறைவாளருத்தமுதுமினிதுண்டு
மடங்காதபசியினர்போலன்னைமுலைப்பாலருந்த
மடங்காதபெருவேட்கைமகவுபோற்புறப்பட்டார். (கஎ)

ஆலுமறைச்சிரமுடியாரடிக்கமலநிலஞ்சூடக்
கூலிகொடுத்தென்வேலைகொள்வாருண்டோவென்றென்
றோலமறைத்திருமொழிபோலுரைபரப்பிக்கலுழ்கண்ணீர்
வேலையிடைப்படிந்தயர்வாள்வீதியிடத்தணைகின்றூர். (கஅ)

தந்தைதாய்பிறரின் றிவருகின்றதனிக்கூலி
மைந்தனுர்வாய்மலருங்குரல்கேட்டுவந்தியுந்தன்
சிந்தையாகுலமிழந்தநல்கூர்ந்தார்செல்வமகத்
தந்தபோதெழுமகிழ்ச்சிதலைக்கொள்ளப்புறம்போந்தாள். (ககூ)

அன்னையெனத்தன்பாலின்னருளசுரந்துவருகாளை
தன்னையழைத்தெனக்களந்தகரையடைத்துத்தருவாயோ
வென்னவிசைத்தனளாகவடைக்கின்றேனெனக்கன்னை
பின்னையதற்கிங்கூலியாதென்றூன்பெருமுதியாள். (உ0)

பிட்டிடுவேனுனக்கென்றூளதற்கிசைந்துபெரும்பசியாற்
சுட்டிடநான்மிகமெலிந்தேன்சுவைப்பிட்டிலுதிர்ந்தவெலா
மிட்டிடுவாயதுமுந்தத்தின்றுநானிளைப்பாறிக்
கட்டிடுவேனின்னுடையகரையென்றூர்கரையில்லார். (உக)

தெள்ளியவுசிற்றுண்டிசிக்கடைந்தபொதிதீக்கி
யள்ளியெடுத்தருந்தப்பாவென்றிட்டாளரைக்கசைத்த
புள்ளியுடைத்துகிலீத்தான்புறத்தானேவிரித்தேந்தி
யொள்ளியதென்றவளன்புமுடன்கூட்டியமுதுசெய்தார். (உஉ)

(கசு) இண்டை - கொண்டைமாலை. (கஎ) அறலோர் - முனிவர். (கஅ) ஆலுமறை - ஒலிக்கின்றவேதம். (ககூ) நல்கூர்ந்தார் - வறுமையுற்றூர். (உ0) வந்தி - பிட்டுவாணிபச்சிழவி. (உக) கரையில்லான் - எல்லையற்ற கடவுள். (உஉ) புள்ளியுடைத்துகில் - புலித்தோல்.

அன்னமுலைத்தீம்பாலினரியசுவைத்திஃதந்தத்
தென்னவனுயுலகாண்டதிருவாலவாயுடைய
மன்னர்பிரான்றனக்கேயாமென்றென்றுவாய்மலர்ந்து
சென்னியசைத்தமுதுசெய்தார்தீவாய்நஞ்சமுதுசெய்தார். (உங)

தந்தையொதாயின்றித்தனிக்கூலியாளாக
வந்தவெனக்கொருதாயாயருள்சுரந்துமாறுத
விந்தவீளப்பொழித்தனையெயினிவேலத்தலைச்சென்றுன்
சிந்தைகளிப்பெழவேலைசெய்வேனென்றிசைத்தெழுந்தார். (உச)

தந்திவாய்மருப்பிடறிவருங்குடிஞைத்தடங்கரையில்
வந்தியான்வந்தியாளென்றேட்டில்வரைவித்துப்
புந்தியாலுரையாணூற்பொருளிஞலளப்பரிய
வந்திவான்மதிச்சடையார்கரையடைப்பாராயினூர். (உஇ)

வெட்டுவார்மண்ணைமுடிமேல்வைப்பார்பாரமெனக்
கொட்டுவார்குறைத்தெடுத்துக்கொடுபோவார்சுமவிழத்
தட்டுவார்சுமையிறக்கியெடுத்ததனைத்தலைபடியக்
கட்டுவாருடன்சுமந்துகொடுபோவார்கரைசொரிவார். (உசு)

இவ்வண்ணமிவரொருகாலிருகான்மண்சுமந்திளைத்துக்
கைவ்வண்ணமலர்கன்றக்கதிர்முடிமேல்வடிவழுந்த
மைவ்வண்ணனறியாதமலரடிசெம்புனல்சுரந்து
செவ்வண்ணம்படைப்பவொருசெழுந்தருவின்மருங்கணைந்தார். ()

தருமேவுமலைமகளுஞ்சலமகளுமறியாமற்
றிருமேனிமுழுதுநிலமகடீண்டித்திளைப்பெய்தக்
குருமேவுமதிமுடியைக்கூடையணைமேற்கிடத்தி
வருமேருவனையார்தம்வடிவுணர்ந்துதுயில்கின்றூர். (உஅ)

அத்தருவேயாலநெடுந்தருவாகவலைபுரட்டித்
தத்திவரும்புனலடைப்பார்சனகாதிமுழுதுணர்ந்த
மெய்த்தவராய்க்கண்களிப்பமெய்யுணர்ச்சிமோனமயச்
சுத்தவருத்தெளிவிப்பாரெனத்துயிலுந்துயிலுணர்ந்தார். (உக)

ஆடுவார்சாமமெனத்தித்திக்குமமுதவிசை
பாடுவார்நகைசெய்வார்தொழில்செய்வார்பராக்கடையக்

(உங) தீவாய்நஞ்சு - தீயின்தன்மைவாய்ந்த நஞ்சு. (உச) இசைத்து - உரைத்து. (உஇ) குடிஞை - யாறு. (உசு) சுமவி - சுமையடை. (உஎ) செம்புனல் - உதிரம். (உஅ) சலமகளும் - கங்காதேவியும். (உக) புனலடைப்பார் - நீரைத்தடுப்பான் அணைகட்டுங்கூலியாளர்.

கோடுவார் மணல்குவிப்பார்குதிப்பார்தூளெழவடிபாய்ந்
தோடுவாருடன்மீள்வாருன்மத்தரெனவிருப்பார். (கூ0)

வேலையிலைலவருந்தியிளைத்தார்போன்மெய்வேர்வை
காலமிசைமூச்செறிந்துவாயொலியாற்காற்றழைத்துச்
சாலநெடும்பசியினர்போற்றளர்ந்தடியாளிடும்பிட்டின்
மேலடைந்தவிருப்பினராய்மீண்டுமவள்பாலணைவார். (கூக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இடும்பைநோய்வெள்ளநீந்தியின்பநீர்வெள்ளத்தாழ்ந்த
கொடும்புறமுதியாண்முன்போய்க்கூறுவார்கோலுக்கேற
விடம்படுகரைகளெல்லாமடைபடுகின்றவின்னங்
கடும்பசியுடையேனன்னேபிட்டிடுகெடுதினென்றூர். (கூஉ)

ஆங்கவளப்போதட்டசிற்றுணவளித்தாளையன்
வாங்கியங்கையுநாவுங்கனலெழவாயிற்பெய்து
பாங்கிருகொடிறுமொற்றிப்பதமுறப்பருகிக்கொண்டு
நீங்கிமுன்போலப்போந்துநெடுங்கரையடைக்கலுற்றூர். (கூங)

பிட்டுவாய்மிதப்பவுண்பார்பெருவலியுடையார்போல
வெட்டுவாரெடுத்தமண்ணைக்கொண்டுபோய்வேற்றுப்பங்கிற்
கொட்டுவாருடைப்புமாறுகொள்கைகண்டார்த்துத்திண்டோ
டட்டுவாரயனின்றூரைத்தழுவுவார்களிப்புத்தாங்கி. (கூசு)

எடுத்தமண்கூடையோடுமிடறிவீழ்வார்போலாற்றின்
மடுத்திடவீழ்வர்நீந்திவல்லைபோய்க்கூடைதள்ளி
யெடுத்தகன்கரைமேலேறியடித்தடித்தீரம்போக்கித்
தொடுத்தகட்டவிழ்ப்பர்மீளத்துன்னுவர்தொடுவர்மண்ணை. (கூடு)

கொட்டுமண்சுமந்துசெல்வர்கூடையையுடைப்பில்வீழத்
தட்டுவரெடுப்பார்போலத்தாவிவீழ்ந்தலையிலோட
விட்டொருமரத்தைப்பற்றிமிதப்பர்திண்கரையிலேற
முட்டுவர்சுழியிலாழ்வர்சேட்சென்றுமூளப்பர்மீள்வர். (கூசு)

கொட்டினைக்கழலப்பார்ப்பர்கோப்பர்கோலிடையாப்பிட்டுத்
தட்டுவருயிர்ப்புவீங்கித்தள்ளநின்றீளப்பர்கச்சிற்

(கூ0) பராக்கடைய - வேலைசெய்யாது வேறுசிந்தை கொள்ள. (கூக) அறவருந்தி - மிகவுமிளைத்து. (கூஉ) கொடும்புற முதியாள் - வளைந்த முதுகினையுடையகிழவி. (கூங) சிற்றுணவு - பிட்டு. (கூச) மிதப்ப - நிறைந்துவெளிவர. (கூடு) துன்னுவர் - பின்னுவர். பின்னுதல் - தெற்றுதல். (கூசு) சேட்சென்று - தூரத்திற்போய்.

பிட்டினை நுகர்வர்வேலினைகெடப்பிறர்க்குமள்ளி
யிட்டமொரேச்சநோக்கிநகைப்பர்கையிரண்டுந்தாக்கி. (நஎ)

வானத்தின்மண்ணிற்பெண்ணின்மைந்தரிற்பொருளிலாசை
தானற்றுத்தமையுநீத்துத்தத்துவமுணர்ந்தயோகர்
ஞானக்கண்கொண்டேயன்றிநாடருஞ்சோதிமண்ணே
ரூனக்கண்கொண்டுங்காணவுடன்விளையாடல்செய்வார். (நஅ)

அருளினுலகமெல்லாமாக்கியுமளித்துநீத்தும்
பெருவிளையாடல்செய்யும்பிறைமுடிப்பெருமானிங்ங
னொருவிளையாடல்செய்யவோச்சுகோற்கையராகி
யருகுநின்றேவல்கொள்வாரடைகரைநோக்கப்புக்கார். (நக)

நெட்டலையொதுங்கியோடநிவப்புறவரைபோலிட்டுக்
கட்டியகரைகளெல்லாங்கண்டுகண்டொப்புநோக்கி
யிட்டமேசெல்வர்திங்களாயிரந்தொழுதாள்பேரால்
விட்டபங்கடைபடாமைகண்டனர்வெகுளிமூண்டார். (சO)

வந்திக்குக்கூலியாளாய்வந்தவன்யாரென்றேடிக்
கந்தர்ப்பனென நேர்நின்றகாளையைநோக்கியேடா
வந்தப்பங்குள்ளவெல்லாமடைபட்டதெவனீயின்ன
மிந்தப்பங்கடையாய்வாளாதிருத்தியாறம்பீயென்றார். (சக)

வேறுரையாதுதம்மையுணர்ந்தவர்வீறுதோன்ற
வீறிலானிறுமாப்பெய்தியிருந்தனனுகமேலிட்
டாறுவந்தடுத்தபங்கிலடைகரைகல்லிச்செல்ல
மாறுகொண்டோச்சவஞ்சிமயங்கினர்வலியகோலார். (சஉ)

பித்தனேவிவன்ரூனென்பாரல்லதுபேய்கோட்பட்ட
மத்தனேவிவன்ரூனென்பார்வந்தியையலேப்பான்வந்த
வெத்தனேவிவன்ரூனென்பாரிந்திரசாலங்காட்டுஞ்
சித்தனேவிவன்ரூனென்பாராரென்றுந்தெளியோமென்பார். ()

பாடல்விஞ்சையனேவென்பார்பண்ணினற்பாணிக்கேற
வாடல்விஞ்சையனேவென்பாரரும்பெறற்செல்வத்தாழ்ந்து
வாடியமகனேவென்பாரிசைபடவாழ்ந்துகெட்ட
வேடவிழ்தாரினருள்யார்மகனிவன்கொலென்பார். (சச)

(நஎ) கொட்டினை - மண்வெட்டியை. (நஅ) தமையுநீத்து - பசு போதத்தையு மிழந்து. (நக) அருளினுல் - காருணியத்தால். (சO) அட்டமேசெல்வர் - குறுக்கேசெல்வார். (சக) கந்தர்ப்பன் - மன்மதன். (சஉ) ஈறிலான் - அழிவற்றசுவாமி. (சங) ஏத்தன் - ஏமாற்றுபவன். (சச) பாணிக்கேற - தாளத்திற்கிசைய.

கரும்பனும்விரும்பநின்றகட்டழகுடையனென்பா
ரரும்பெறலிவன்ருன்கூலிக்காட்செய்ததெவனேவென்பா
ரிரும்பெருங்குரவரற்றதமியனேவென்பார்வேலை
புரிந்தவனல்லனென்பாரதுமேனிபுகலுமென்பார். (சடு)

கூலியுங்கொண்டான்ருனேகணக்கிலுங்குறிக்கச்சொன்னுன்
வேலையுஞ்செய்யானின்சொல்விளம்பினுங்கேளானல்லின்
பாலறைமூளையாகிப்பராமுகம்பண்ணிநின்ரு
னேலநாமிதனேவேந்தற்குணர்த்துதுமென்றுபோனூர். (சசு)

தலைமகன்றிருமுன்ருழ்நதுசாற்றுவாரடிகேளிந்த
வலைபுனைகரார்தத்தம்பங்கெலாமளந்தவாற்ருன்
மலையினும்வலியவாகச்சுமந்தனர்வளைந்தசிற்ரூண்
விலைநரையாட்டிதன்பங்கடைத்திலள்வென்றிவேலாய். (சஎ)

வேளையும்வனப்பினுலேவென்றவனெருவன்வந்தி
யாளெனவங்கேவந்துபதிந்தனரசர்செல்வக்
காளைபோற்களிப்பன்பாடுமோவென்காலம்போக்கி
நீளுவன்வேலையொன்றுநெஞ்சினுனினைதல்செய்யான். (சஅ)

ஆண்டகைவனப்பைநோக்கியடிக்கவுங்கில்லேமஞ்சி
யீண்டினேமென்றுகூறவிம்மெனவமைச்சரோடும்
பாண்டியனெழுந்துநாம்போய்ப்பங்கடைபட்டவெல்லாங்
காண்டுமென்றெறிநீர்வைகைக்குடிஞையங்கரையைச்சார்ந்தான்.()

எடுத்தநிண்கரைகளெல்லாமிறைமகனுள்ளத்தோகை
மடுத்தனனேக்கிச்செல்வான்வந்திபங்கடைப்பாரின்றி
யடுத்தநோன்கையுங்கல்லியழித்தெழுவெள்ளநோக்கிக்
கடுத்துநின்றெங்குற்ருளிக்கரைசுமந்தடைப்பானென்ருன். (ருo)

வள்ளறன்கோபங்கண்டமாறுகோற்கையரஞ்சித்
தள்ளருஞ்சினத்தராகித்தடக்கைதொட்டூர்த்துப்பற்றி
யுள்ளெரிபுறங்கீழ்மேலாயுயிர்தொறுமொளித்துநின்ற
கள்வனையிவன்ருன்வந்தியாளெனக்காட்டினூர். (ருக)

(சடு) கரும்பனும் - மன்மதனும். (சசு) கல்லின்பாலறை - கல்லினிடத்து அறைகின்ற. (சஎ) தலைமகன்-அரசன். (சஅ) வேளையும் - மன்மதனையும். (சகு) உங்கில்லேம் - முயற்சியில்லாதாராகின்றேம். (ருo) ஓகை - சந்தோடம். (ருக) சினத்தர் - முனிர்ந்த கோபமுடையார்.

கண்டனன்கனன்றுவேந்தன்கையிற்பொற்பிரம்புவாங்கி
யண்டமுமளவிலாதவுயிர்களுமாகமாகக்
கொண்டவன்முதுகில்வீசிப்புடைத்தனன்கூடையோடு
மண்டனையுடைப்பிற்கொட்டிமறைந்தனனிறைந்தசோதி. (இஉ)

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாண்டியன்முதுகிற்பட்டது செழியன்பன்னியருடம்பினிற்ப
ட்ட, தாண்டகையமைச்சர்மேனிமேற்பட்டதரளங்குமர்மேற்ப
ட்ட, தீண்டியசுழற்கால்வீரர்மேற்பட்டதிவுளிமேற்பட்டதுபரும்ம,
பூண்டவெங்கிரிமேற்பட்ட தெவ்வுயிர்க்கும்போதன் மேற்பட்டவத்
தழும்பு. (இங)

பரிதியுமதியும்பாம்புமைங்கோளும்பன்னிறம் படைத்தநாண்மீனு
மிருநிலம் புனல்காலெரிகடுங்கனல்வானென்னுமைம் பூதமுங்காரு
ருதியுமாறுசமயவானவருஞ்சராகளுமுனிவருந்தொண்டின் [ஞ்
மருவியமுனிவர்கணங்களும்பட்டமதுரைநாயகனடித்தழும்பு(இச)

வானவர்மனிதர்நாகர்புள்விலங்குமாசுணஞ்சிதலெறும்பாதி
யானபல்சரமுமலைமரங்கொடிபுல்லாதியாமசரமும்பட்ட
வூனடைகருவும்பட்டனதழும்போடுதித்தனவுயிரிலோவியமுந்
தானடிபட்டசராசரடங்கடமக்குயிராயினேன்றழும்பு. (இடி)

துண்ணெனமாயோன்விழித்தனன்கமலச்சோதியும்யாதென
வியந்தான், விண்ணவர்பெருமான்வெருவினன் வானோர்வேறுளார்
மெய்பனிப்படைந்தார், வண்ணயாழியக்கர்சித்தர்சாரணர்தம்வடி
ப்படாவுடம்பினிற்பட்ட, புண்ணையாதென்றுதத்தமிற்காட்டி மய
ங்கினர்புகுந்தவாறறியார். (இசு)

ஏகநாயகனெவ்வுயிர்களுந்தானேயென்பதுமன்பினுக்கெளிய,
ஞெகியதிறனுங்காட்டிவானடிபட்டங்கொருகூடைமண்கொட்டி,வே
கதீர்சுருங்கக்கரையினையுயர்த்திமிகுத்துடன்வேலைநீத்தொளித்துப்
போகியவாறுகண்டுகோற்கையர்போய்நரையாட்டியைத் தொடர்ந்
தார். (இஎ)

வன்புதாழ்மனத்தோர்வலிசெயவின்னமன்னனெம்மறக்கமு
ண்டேயோ,முன்புபோகியவாளென்செய்தானென்னுய்முடியுமோ
வினியெனத்திரங்கி, யென்புபோல்வெளுத்தகுழலினுள்கூடலிறை

(இஉ) கனன்று - கோபித்து. (இங) ஆண்டகை - ஆண்தன்மை. (இச) நாண்மீன் - நட்சத்திரங்கள். (இடி) மாசுணம் - பாம்பு. (இக) கமலச்சோதி - பிரமன். (இஎ) மிகுத்து - அதிகமாகச்செய்து.

வினைநோக்கிநின்றிரங்க, வன்புதேனுகவருத்தியசிற்றாணமுதுசெய்
தருளினுமருளால். (நிஅ)

கண்ணுதனந்திகணத்தவர்விசும்பிற்கதிர்விடுதிப்பியவிமான
மண்ணிடையிழிச்சியன்னவாவென்றுவல்லைவைத்தமர்பூமழையும்
பண்ணிறைகீதவோதையும்வேதப்பனுவலுந்துந்துபியைந்தும்
விண்ணிடைநிமிரச்சிவனருளடைந்தார்மேவியசிவபுரத்துய்த்தார்.

மன்றுடையாரேர்கூடைமண்கொட்டிமறைந்ததுமடைகளை
நீண்ட, குன்றெனவுயர்ந்ததன்மையுந்தம்மேற்கோலடிபட்டது
நோக்கி, யென்றன்மேற்பட்டதென்றன்மேற்பட்டதிதுவெனவது
வெனவமைச்சர், நின்றவருணர்த்துநிகழ்ச்சியும்பிறர்பானிகழ்ச்சியு
நோக்கியங்கிருபன். (சுஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உள்ளத்தாசங்கையூண்டாலுகமண்ணுடைப்பிற்கொட்டிக்
கள்ளத்தாராகிப்போனர்ககனத்தாராகிச்சேனை
வெள்ளத்தார்பிறருங்கேட்பமீனவற்குவகைவெள்ள
கொள்ளத்தாமழைத்தாகாயவாணியாற்கூறலுற்றார். (சுக)

மறத்தாறுகடந்தசெங்கோல்வழுதிகின்பொருள்களெல்லா
மறத்தாற்றினீட்டப்பட்டவனையவைபுனிதமான
திறத்தாலேநமக்குநம்மைச்சேர்ந்தவர்தமக்குமார்வ
முறத்தாவில்வாதவூரனுதவினனுதலாலே. (சுஉ)

அனையனைமறுக்கஞ்செய்தாயரும்பிணப்புலவுத்தீவாய்
வனநரித்திரளையீட்டிவாம்பரியாக்கித்தந்தேங்
கனையிருட்கங்குற்போதிற்கழிந்தனபின்னுந்தண்ட
வினையர்பால்விடுத்துத்துன்பம்விளைத்தனையதுபொறுதேம். (சுங)

வருபுனல்பெருகப்பார்த்தேம்வந்திகைப்பிட்டொங்கிப்
பருகிவந்தாளாய்மாறுபட்டனமண்போகட்டுப்
பொருகரையுயரச்செய்துபோகியவ்வன்னைபோல்வாள்
பெருகியவிடும்பைதீர்த்தெம்பேருலகடையச்செய்தேம். (சுச)

இத்தனையெல்லாஞ்செய்தஇவன்பொருட்டிந்தவேத
வித்தகன்றன்மையொன்றுமறிந்திலவேட்கையென்பால்

(நிஅ) வன்புதாழ் - கடுமைதங்கிய. (நிக) இழிச்சி-இறக்கி. (சுஎ) மன்றுடையார்-வெள்ளியம்பலத்தினை உடையசுவாமி. (சுக) ஆசங்கை-சந்தேகம். (சுஉ) மறத்தாறு-அனீதிமார்க்கம். (சுங) மறுக்கஞ்செய்தாய் - அச்சுறுத்தினாய். (சுச) போகட்டு - கொட்டி.

வைத்துனக்கிம்மையோமெறுமையுந்தேடித்தந்த
வுத்தமன்ரொடைசந்தாதிப்புறப்பற்றுமொழிந்தீரான். (சுடு)

நிறையுடையிவ்வேயிச்சைவழியினுணிறுத்தியான்ற
மறைவழிநின்றுநீதிமன்னவர்க்களந்தவாழ்நாள்
குறைபடாதாஞ்செல்வவாரியுட்குளித்துவாழ்கென்
றிறையவன்மொழிந்தமாற்றமிருசெவிநிரப்பத்தென்னன். (சுசு)

அச்சமுற்றுவகையீர்ப்பவதிசயவெள்ளத்தாழ்ந்து
பொச்சமிலன்பரெங்குற்ரெனப்புகுந்துதேடி
நச்சரவசைத்தகூடலையகன்கோயினண்ணி
விச்சையிலிருக்கின்ரரைக்கண்டுபோயிறைஞ்சிவீழ்ந்தான். (சுஎ)

தொல்லைநீருலகமாண்டுசுடுதுயர்நரகத்தாழ
வல்லவென்னறிவுக்கேற்றவண்ணமேசெய்தேனீரென்
னெல்லைதீர்தவப்பேரய்வந்திகபரவேதுவாகி
யல்லல்வெம்பிறவிநோய்க்குமருமருந்தானீரையா. (சுஅ)

செறுத்துநானும்மையெண்ணுதிழைத்தவித்தீங்குதன்னைப்
பொறுத்துநீர்முன்போலுங்கள்புவியெலாங்காவல்பூண்டு
மறுத்துடைத்தாள்வதாகென்றிரந்தனன்மண்ணிலாசை
வெறுத்தவர்நகையுட்டோன்றமேந்தானேநோக்கிச்சொல்வார். (சுக)

பாய்திரைபுரளுமுந்நீர்ப்படுகடலுலகுக்கெல்லா
மாயிரஞ்செங்கணுன்போலரசுவீற்றிருப்பிருங்க
ணுயகனருளிச்செய்தவண்ணமேநயந்துசெய்வீர்
தூயவரன்ரொடுங்கள்சூழல்சேர்ந்தொழுகவல்லார். (எ0)

உம்மைநானுத்தநீபாலுலகியல்வேதநீதி
செம்மையாலிரண்டுநன்ரய்த்தெளிந்ததெளிந்தீரான்
மெய்ம்மையாஞ்சித்தசுத்திவிளைந்ததுவிளைந்தநீராற்
பொய்ம்மையானவினீங்கிப்போந்ததுசிவன்பாற்பத்தி. (எக)

வந்தவிப்பத்தியாலேமாயையின்விருத்தியான
பந்தமாம்பவஞ்சவாழ்க்கைவிளைவினுட்பட்டதுன்பம்

(சுடு) தொடைசந்தாதி - மாலைசந்தனமுதலிய. (சுசு) நிறை-ஒரு உயர்குணம். (சுஎ) பொச்சமில்-பொய்யற்ற.(சுஅ)அல்லல்-துன்பம். (சுக) செறுத்து - சிறைப்படுத்தி. (எ0) ஆயிரஞ் செங்கணுன் - இந்திரன். (எக) பொய்மை - தலைமையில்லையாகத் தலைமையுடையார் போனிற்கும் பொய்த்தன்மை.

வெந்தது கருணையாகி மெய்யுணர்வின் பந்தன்னைத்
தந்தது பாதஞ்சூட்டித் தன்வயமாக்கிற்றன்றே. (எஉ)

சச்சிதானந்தமாமத்தனிப்பரசிவனேதன்ன
திச்சையாலகிலமெல்லாம்படைத்தளித்தீறுசெய்யும்
விச்சைவானவரைத்தந்தமேலவன்பிறவித்துன்பத்
தச்சமுற்றடைந்தோர்க்காலுவின்பவீடளிக்குமன்னோன். (எஊ)

மந்தரங்கயிலேமேருப்பருப்பதம்வாரணசி
யிந்தநல்லிடங்களோறுமிகபரபோகம்யார்க்குந்
தந்தருள்செய்தெம்போல்வார்தம்மனம்புறம்போகாமற்
சிந்தனைதிருத்திஞானத்திருவுருவாகிமன்னும். (எசு)

ஒப்பவர்மிக்கோர்வேறற்றொருவனுயெங்குந்தங்கு
மப்பரஞ்சுடரேயிந்தவாலவாயுறையுஞ்சோதி
கைப்படிகனிபோன்மேலுட்கண்ணுவந்தியோர்க்கு
மெய்ப்பொருள்விளங்கித்தோன்றுவேதத்தைவிருத்திசெய்தான். ()

தன்னருளானஞானத்தபனியமாகுந்தில்லைப்
பொன்னகரிடத்திலென்னைபபோகெனப்பணித்தானீரு
மன்னதற்கிசைந்தீரோகென்றுலவாயடிகடம்மைப்
பன்னருந்துதியாலேத்திவிடைகொடுபணிந்துபோவார். (எசு)

தன்றொடக்கறுத்தநாதன்றுட்டொடக்குண்டுபோவார்
பின்றொடர்ந்தரசன்செல்லப்பெருந்தவர்தின்மினின்மி
னென்றனர்செலவுங்கூப்பிடலில்லைசென்றணியஞுகிச
சென்றடிபணிந்தத்தென்னன்விடைகொடுதிரும்பினானே. (எஎ)

துறந்தவர்போகமீண்டுதொன்னகரடைந்துதென்ன
னறந்தருபங்கிஞரையடைந்துதான்பிரம்புகீட்டப்
புறந்தருகருணைவெள்ளம்பூரிப்பத்தாழ்ந்துநெஞ்ச
நிறைந்ததுவாய்கொள்ளாமனின்றெதிர்துதிப்பதானோன். (எஅ)

கோச்சகக்கலிப்பா.

அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலத்தழும்புந்
தொடையாகவொருதொண்டன்றெடுத்தெறிந்தகல்லும்போற்

(எஉ) பவஞ்சவாழ்க்கை - பிரபஞ்சவாழ்க்கை. (எஊ) விச்சை - தொழில். (எசு) இகபரபோகம் - இம்மை மறுமை யனுபவம். (எடு) விருத்திசெய்தான் - அகலவுரைகூறினான். (எசு) தன்னருளான - தனது கருணையுருவமான. (எஎ) தன்றொடக் கறுத்த - தன்பந்தத் தினை ஞானவதியென்னுந் தீட்சையா லொழித்த (எஅ) அறந்தருப ங்கினரை-மூப்பத்திருவகை யறங்களையும் புரிந்த உமாதேவியாரை யொருபுறத்திலுடைய சோமசுந்தரக்கடவுளை.

கடையானேன்வெகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெல்லா
முடையானேபொறுத்ததோவுன்னருமைத்திருமேனி. (எசு)

கடியேறுமலர்மகன்மான்மூதலாயகடவுளரும்
படியேழுமளவிறந்தபல்லுயிருமீயேயோ
முடியேறமண்சுமந்தாய்முதுகுதனிலடிபட்ட
தடியேனும்பட்டேனின்திருமேனியானேஞே. (அ0)

கைக்குமருந்தின்சுவைபின்காட்டுமோரெனவினைக்கும்
பொய்க்குமருங்கலஞ்சிமண்ணுண்டுபுலைநரகந்
துய்க்குமருந்துயர்க்கானவான்மாரூய்ந்நின்றுணையடிக்கே
யுய்க்குமருந்தவரிவரென்றறியாமையொறுத்தேனே. (அக)

பாதியுமையுருவானபரமேட்டியெனக்கிம்மை
யூதியமும்பரகதியுமுறுதியெனவினைவிக்கும்
பீதியிஞன்மந்திரியாய்நின்னருளாயவதரித்த
வேதியரையறியாதேவெறுத்துரைஞெறுத்தேனே. (அஉ)

மாயாவிருத்தியிஞன்மாழாந்துமாதவரை
யாயாதெறுத்தேனருநரகத்தாழ்ந்துநான்
வீயாமலின்றனேயார்மெய்ம்மையெலாந்தேற்றியவென்
ரூயாஞய்த்தண்ணளிக்கென்றமியேன்செய்கைம்மாறே. (அங)

நின்னேயுணர்ந்தவர்வேதநெறிவேள்விசெய்தூட்டு
மின்னமுதிற்கழிசுவைத்தோவிவளிடும்பிட்டெவ்வுயிர்க்கு
மன்னவனேசெந்தமர்வாய்மலர்ந்தமுதுசெய்தனேயா
லன்னேயிலாவனக்கிவளோரன்னேயாய்வந்தாளோ. (அச)

அன்றுசிறுத்தொண்டரிடும்பிள்ளைக்கறியமுது
மென்றுசுவைதெரிந்தவேடனிட்டவூனும்போ
னன்றுரையாட்டியிடப்பிட்டுநயந்தருந்தி
யென்றுமடியார்க்கெளிவந்தாயெந்தாயே. (அடு)

(எசு)அடையாளம் பெறுவொருவனடித்த கொடுஞ்சிலத்தழும்பு-வடுத்தங்குமாறுபார்த்தனடித்தவேங்கை வில்லின்றழும்பு.இதனைமா பாரதத்து ஆரணிய பருவத்துக்காண்க. தொடையாக - பூமாலை யாகும் வண்ணம். ஒருவன்-சாக்கியனூர். தொடுத்து. இடைவிடா மல், கல்லும் - செங்கல்லும். இதனைத் திருத்தொண்டர் புராண மான பெரியபுராணத்துட் காண்க. (அ0) கடியேறு - மணம்மிக்க. (அக)கைக்குமருந்து-வேம்புங்கடுவுமுதலிய ஒளடதங்கள்.(அஉ)ஊதி யம்-இலாபம்.(அங)மாயாவிருத்தியினல்-மாயையின் பழக்கயுத்தத் தால்.(அச)கழிசுவைத்தோ-மிகுந்த உருசியுள்ளதோ. (அடு)பிள்ளைக் கறியமுது சீராளன்கறி. இதனைப் பெரிய புராணத்துட்காண்க. வே டன் - கண்ணப்பனூர். இதனைக் காளத்தி மான்மியம் பெரிய புரா ணமாதிகளிற் காண்க.

கரியாவும்பரியாக்கிநடத்தியும்பரமன்றித்
தரியாயான்றருதுகிலத்திருமுடிமேற்றரித்துமறைக்
கரியாய்நீயென்பாசமறுக்கவருந்திருமேனி
தெரியாதேபரியாசைதிளைத்திறுமாந்திருந்தேனே. (அசு)

வீண்சுமக்கும்புள்ளாய்விலங்காய்ச்சுழன்றுமனம்
புண்சுமக்குஞ்சூழ்ச்சிவலியுடையபுத்தேளிர்
மண்சுமக்குமள்ளராய்வந்திலரேவந்தக்காற்
பண்சுமக்குஞ்சொல்லிபங்கன்பாதமுடிகாண்பாரே. (அஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுபலமுறையாலேதுதித்தடைந்தோர்க்கன்பரிவாவரைத்தேறி
னன்றுமிகப்பரபோகம்வீடுபெறலெளிதென்றுநகைத்தார்வேந்த
னன்றுதிருப்பணிபூசைபிறவுநனிவளம்பெருக்கியழகார்வெள்ளி
மன்றுடையானடிக்கன்புமுயிர்க்கன்புஞ்சுரந்தொழுகிவாழுநாளில்

முன்புபெருந்துறையார்க்குமடியார்க்குமறந்தெரிந்தமுறையா
லீட்டுந், தன்பொருள்போயுடன் பலவாய்த் தழைத்து வருபயனே
போற் றலையுவாவி, னன்பனிகான்மதிகண்டவுவரி யெனப்பல
செல்வநாளுமோங்க, வின்புறுவான்சகநாத னெனுமகப் பெற்றின்
பத்துளின்பத் தாழ்ந்தான். (அசு)

அம்மகனேமுடிசூட்டியரசாக்கிவாதவூரமைச்சர்சார்பான்,மெய்
ம்மைநெறிவிளங்கியிருவினையொப்பி லரன்கருணைவிளைந்தநோக்
கான், மும்மைமலத்தொடர்நீங்கிச்சிவானந்தக்கடற்படிந்துமுக
ணம்மூர்த்தி, செம்மலர்த்தாணிழலடைந்தான்றிறலரிமர்த்தனனென்
னுந்தென்பார்வேந்தன். (கூ0)

(அசு) அம்பரம்-வெளி.சிவபெருமான்-வெளியினுளொளியாயுள்ள வராதலின் அம்பரமன்றித்தரியாய் என்றனர். இன்னம், அம்பரமன்றித் தரியாய் என்பதற்கு, எவரெவ்வாறு கூறினும் அழகிய பரத்துவநிலையையன்றி வேறுகொள்ளாத சுவாமியே என்றும். சிதாகாய வெளியிலன்றி வேறிடத்திற் றங்காதாய் எ-ம். அம்-கங்கையாகிய - பரமன்றி - பாரத்தினையன்றி. தரியாய் - தாங்காதாய். எ - ம். அம் பரமன்றி-தக்கினையன்றி. தரியாய்-உடுத்தாத சுவாமியே எ-ம்.ஆம். இதனேஅழலவிர்சடைமுடியாலவ்வியிறைவனுர்க்குத்திகம்பரனென் னும்பெயரே விளக்குதல் காண்க. இன்னம் வேறுவிதமாகவும் நயமறி புலவர் நவில்வர். (அஎ) வீண் சுமக்கும் புள்ளாய் - வானத்தாற்றுங்கப்படும் அன்னப் பறவையாய். (கூ0) சார்பால் - சம்பந்தத்தால். உபதேச வழியால் மணிவாசகப் பெருமானிடமருளுபதேச மூற்றூர் பல்லாயிரருள் அரிமருத்தனனும் ஒருவனென்க.

மேற்படி - வேறு.

வழுதியால்விடுக்கப்பட்டவாதவூர்முனிகடம்மைப்
பழுதிலாப்பாடல்கொள்வார்பகிபலபணிந்துபோக்து
முழுதுணர்மறையோர்வேள்விப்புகையண்டமுடிகீண்டேழி
யெழுவடவரைபோற்றோன்றுமெழிற்றில்லைமூதூர்சேர்ந்தார். (கக)

மேற்படி - வேறு.

வீதிதொறும்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சியாலயத்தெய்திமெய்ம்மையான
சோதியறிவானந்தச்சுடருருவாஞ்சிவகங்கைதோய்ந்துமேனி
பாதிபகிர்ந்தவள்காணப்பரானந்தத்தனிகூத்துப்பயிலாநிற்கு
மாதியருளாகியவம்பலங்கண்டுகொந்தேரயம்போற்சார்ந்தார்.(கூ)

அன்றுகுருந்தடியிலடிவைத்தாண்டகோலமேயருளானந்த,
மன்றினிடத்தெதிர்தோன்றிவாவென்பாரெனமூரன்மணிவாய்தோ
ற்றி, நின்றதனிப்பெருங்கூத்தர்நிலைகண்டாரஞ்சலித்தார்நிலமேல்
வீழ்ந்தா,ரொன்றரியபுலன்கரணவழிநீர்ந்திமெய்யன்பினுருவமானார்.

வண்டுபோற்புண்டரிகமலரில்வீளைசிவானந்தமதுவைவாரி
யுண்டுவாசகம்பாடியாடியழல்வெண்ணெயெனவுருகுந்தொண்டர்
விண்டுழாவியகுடுமிமன்றுடையான்றிருவாக்கான்மிகுந்தநேயங
கொண்டுபோய்க்குணதிசையிலருந்தவர்வாழ்தபோவனத்தைக்குறு
கியங்கண்.] (கூச)

(கூக) பழுதிலாப்பாடல் - வேதாகமங்களையொப்ப அழியாது விளங்கும்பாடலான திருவாசகம். அன்றியுந் தன்னை அன்புடன் பாராயணஞ்செய்வோர்கருதியவரனைத்தையுந்தருதலைக்குமியல்பினதாதலின் திருவாசகத்தினைப் பழுதிலாப் பாடலென்றார். எ - ம். வேதாகம வசனங்களையொப்ப சிவபெருமானல்முற்றிலும்அங்கீகரிக்கப்படும் பொருளினதான திருவாசகம் எ - ம். பாட்டினைத் தலைவனையொப்ப அழியாததாதலில் திருவாசகத்தினைப் பழுதிப் பாடலென்றும், பஞ்சவிலக்கணங்களும் நிரம்பிய, குற்றமற்ற பாடலென்றும் ஆம். (கூ) ஆதியருளாகிய - சிவனதருள்வடிவாகவிளங்குகின்ற (கூங) மூரல் - புன்னகை. (கூச) வண்டுபோற் புண்டரிக மலரில்வீளை சிவானந்த மதுவைவாரியுண்டு - மதுவுண்டவண்டின் செயல்களான ஆடல் பாடல் உருகல் முதலிய வுடையவராதலின் ஆசிரியர் வண்டெமைகூறினார். அன்றியும் வண்டானது நறுமலரிலு றுதேனையந்துசென்றுண்ணுமேயன்றித், தலைக்குறை கமலமாதியி லுள்ளவை சத்துக்களைக்கிரகிக்காதவாறு, தேவதேவனாகிய புலியூரம்

குறிகுணங்கள்கடந்ததனிக்கூத்தனுருவெழுத்தைந்தின்கொடு வாளோச்சிப், பொறிகரணக்காடெறிந்துவீசிமனப்புலந்திருத்திப் புனிதஞ்செய்து, நிறைசிவமாம்விதைவிதைத்துப்பசுபோதங்களைந் தருணன்னீர்கால்பாய, வறிவுருவாய்விளைந்ததனிப்பரானந்தவமு தருந்தாதருந்திநின்றூர். (கூடு)

மானிரையுங்குயவரியும்வந்தொருங்குநின்றுரிஞ்சமயங்குகானத் தானிரைகன்றெனவிரங்கிமோந்துநக்கவானந்தவருட்கண்ணீரைக் கானிரைபுள்ளினம்பருகக்கருணைநெடுங்கடலிருக்குங்காட்சிபோல ப், பானிறவெண்ணீற்றன்பரசைவின்றிச்சிவயோகம்பயிலுநாளில்.

புத்தர்சிலரிலங்கையினும்போந்தமூவாயிரமெய்ப்போதவேத, வித் தகரோடேழுநாள்வரையறுத்துச்சூளொட்டிவியாதஞ்செய்வா, ரித் தகையநாளேழில்யாமிவரைவேறுமெனுமெண்ணம்பூண்ட, சித்த மூடையவராகவவர்கனவிலெழுந்தருளித்தேவதேவர். (கூஎ)

பலவாணனது பொன்னடிக்கமல தியானத்தில் விளைந்த அருள முதமருந்தி அவ்வானந்தமயமாயினு ரென்பார் எண்டுபோலென் றூர் என்க. இதனைக்கொண்டன்னிய தேவதா வணக்கமற்றவ ரெம்பெருமா னென்பதனை விளக்கினுர் என்றுணர்க. புண்டரீக மலரின்வீளை சிவானந்தத்தேனை என்ற ஆசிரியர் இருதயபுண்ட ரீக மத்தியிலிறைவனு ரெழுந்தருளி இருக்கின்றுரெனவும் அங்குப் பக்கு வான்மாக்களான சிவயோகிகள் அப்புண்டரீக புரத்திலிறை வனைத் தரிசித்து, சிவயோகாப்பியாசத்தால் தன்னிலையை யிழக் கின்றன ரெனவுங்கூறும் வேதாகமசாரங்களை விளக்கியிருத்தல் காண்க. துவாதசாந்தத் தானத்துள்ள கமலத்தினை யுணர்த்து தற்கே ஆசிரியர் புண்டரீகமல ரென்றூர். என்றுமாம். புண்டரிகம் வொண்டாமரை.

(கூடு) அருந்தா தருந்திநின்றூர் - அருந்துதற் ரெழிற்குரிய வுரு வங்குணமுதலிய எவையுமின்றி ரிற்பதொன்றுதலானும் விழைந் தா ரெவரானுமருந்த லொல்லாது திருவருட்பேறுடையாரால் சமாதியி லனுபவிக்கப்படுவ தாதலின் மற்றைய முதம்போல வரு ந்துவதன் றென்பார், அருந்தாதருந்தி நின்றூர் என்றூர். (கூசு) மயங்கு கானத்து - தன்னு ணுழைந்தாரை வெளிவிடாது வழி முதலியவின்றித் தடுமாறச்செய்யுங் கொடிய காட்டினுள். சிவ ஞா னுதயபவ முதிர்வினையுடையார்மாட்டுத் தீய விலங்காதிய தீங்கு புரி யா வென்பதனை ஆசிரியர் குறிப்பித்திருத்தல் காண்க. (கூஎ) புத் தர் - ஒருவகைப்புறச் சமயத்தினர். அவைதீக மதத்தினரென்றும் புறப்புறச் சமயிகளென்றுங் கூறுப. புத்தி தத்துவத்தைப் பொரு ளாகவுடையார் புத்தர் என்பரொரு சாரார். அன்னுர், அம்மதத் துண்மையறியாதா ரென்க.

வாதவூரனைவிடுத்துவாதுசெய்வீரெனவிழித்துமறையோரந்தப்
போதவேதியரைவனம்புகுந்தழைத்தாரப்போதுபொதுவிலாடும்
வேதநாயகன்பணித்தவழிநின்றுரெதிர்மறுப்பமீண்டுபோந்து
காதராகுலமூழ்கியிருந்தார்முத்தழனிமிர்த்துக்கலியைக்காய்வார்.

பின்னுமவர் கனவின்கண் மன்றுடம் பிரியாத பெருமான் வந்து, முன்னவனைப் பெருந்துறையிற் குருந்தடியிலாட்கொண்ட முறையினுனு, மின்னிசைவண்டமிழ்மணிபோற் பாடுங்காரணத்தானும்யாமன்றிட்ட, மன்னியபேர்மாணிக்க வாசகனென் றழைமின்கள் வருவனென்றார். (கக)

உறக்க மொழிந் தறவோர்சென் றவர்நாம மொழிந் தழைப்பவுணர்ந்துதாத, னறக்கருணையிதுவோவென் றவரோடுமெழுந்துகரடைந்துமண்ணுந், துறக்கமுநீத்தருவருத்தார் மன்றுடந்துணைக்கமலந்தொழுதுமீண்டோர். நிறக்கனகமண்டபத்திற்புக்கிருந்தாரறிஞர்குழாநெருங்கிசூழ. (கஅ)

மேற்படி வேறு.

தத்துநீர்க்கலதிற்போந்தசிவப்போர்வைதாங்கும்
புத்தரைவேறுவைத்துப்புகன்மினும்மிறையுநூலு
மத்தலைநின்றுரெய்துங்கதியுமென்றுழ்ந்தகேள்வி
மெய்த்தவநெறிமாணிக்கவாசகர்விளவினாரே. (கஆக)

கனவினுநீறுகாணுக்கைதவர்காட்சியானு
மனவனுமானத்தானும்வாசகப்பெருமான்றம்மை
வினவியமூன்றுமுதசேசாதியின்விதித்தார்வேத
மனேயவர்கேட்டமூன்றுமனுயாதஞ்செய்துட்கொள்ளா. (கஇ)

இன்றிவர்க்கனுமானதியெப்படியென்னென் றுகாட்சி
யொன்றுகொண்டவர்கடாமேயுடம்படன் மறுத்தார்காட்சி

(கூஅ) போதவேதியர்-அறிவினையுடையஅந்தணர். பக்குவான்மாக்களைத் தமது உபதேசவழியால்முன்னிலையினின்றும் மாறுபடுத்துபவர். என்றுமாம். (கூக) முன்னவனை - முன்அந்தவாதவூரனை. (கஅ) உணர்ந்து - உலகமுகமாகவிழித்து. சிவஞானிகள்சிவனையன்றிமற்றொன்றினையுமனு பவியாரென்றும் உணராரென்றும் சிவனையுணர்வாரென்றும்விளக்கஉணர்ந்துஎன்றார். (கஆக)வேறுவைத்து - ஒருபுறமாகஇருத்தி. (கஇ) காட்சியானும் - காண்டலளவையானும். மனவனுமானத்தானும் கருதலளவையானும்.

யன்றியேதின்மையாலேயனுமானவளவையாலு
ணின்றவன்றுங்கோளதிகிறுத்தியமூன்றுமென்றார். (கoஈ)

பொன்றுதன்மூத்தியென்பார்பூசுரர்பிரானேநோக்கி
யின்றெமைக்காட்சியொன்றுல்லென்றனமென்றீராஞ
னன்றுதுங்கடவுடன்னேயளவையாஞட்டியெம்மை
வென்றிடுமென்றுரைந்தும்வென்றவர்முறுவல்செய்யா. (கoச)

பிறவியந்தகர்க்குவெய்யோன்பேரொளிகாட்டலாமோ
மறைகளாலளவைதன்னுற்றேவரான்மனத்தால்வாக்கா
லறிவருஞ்சோதியெங்கோனவன்றிருநீற்றுத்தொண்டின்
குறிவழியன்றிக்காணுங்கொள்கையானல்லனென்றார். (கoஞ)

தேற்றமில்லாதாருங்கள்சிவனுக்குருத்திருநீற்றுக்குந்
தோற்றமெப்படிதிட்டாந்தஞ்சொல்லுமினென்றார்தூயோர்
வேற்றுமையறநாமின்னேவிளக்குதுமதனேகீங்க
டோற்றபினுமக்குத்தண்டம்யாதுகொல்சொன்மினென்றார். ()

செக்குரலிடையிட்டெம்மைத்திரிப்பதுதண்டமென்னு
வெக்காரம்புத்தர்தாமேயிசைத்தனரிவாய்நாகங்
கொக்கிறகணிந்தாரன்பருலர்ந்தகோமயத்தைவாங்கிச்
செக்கரந்தழல்வாய்ப்பெய்துசிவந்திடவெதிப்பிவாங்கி (கoஎ)

இவ்வண்ணமிருக்குமெங்களிறைவண்ணவடிவுமந்தச்
செவ்வண்ணமேனிபூத்திருவெண்ணீறதுவுமென்னு
மெய்வ்வண்ணமுணர்ந்தவேதவித்தகரவைமுன்காட்ட
வுய்வ்வண்ணமறியாமூடருள்ளமுமுயிருந்தோற்றார். (கoஅ)

இங்கிவர்தோற்றவண்ணங்கேட்டவரிறப்பதின்பந்
தங்குவீடென்றுதேற்றுஞ்சமயத்திலாழ்ந்தவாத்திக்
கொங்கிவர்தாரான்மூங்கைக்குயிற்பெடையெனத்தானீன்ற
மங்கையைக்கொண்டுதில்லைமல்லன்மாநகரில்வந்தான். (கoக)

(கoஈ)காட்சியன்றியேதின்மையால் - காண்டலளவை நிகழாதி
ருதலளவை நிகழாமையின். (கoச) பொன்றுதல் - பஞ்சகந்
தங் கெடுதல். (கoஞ) அந்தகர் - குருடர். வெய்யோன் - சூரியன்.
(கoசு) தேற்றமிலாதார் - சைவ சித்தாந்தத்தெளிபொருளுணரா
தார்.(கoஎ)திரிப்பது - அரைப்பது.எக்காரம்-பொய்யாகிய.(கoஅ)
வண்ணவடிவு - அழகியவுருவம். (கoக) வீடென்று - மோக்கமென.
கொங்கிவர் - மணம்வீசுகின்ற.

யாவரேயாகவின்றிங்கென்மகண்மூங்கைதீர்த்தோ
ராவரேவென்றுரெனருளற்றவுமானம்பூண்டு
சாவதேமுத்தியென்பார்மணிமுதன்மூன்றுந்தங்க
டேவரேயென்றென்றுள்கிச்செய்யவுந்தீராதாக. (ககo)

அந்தணர்பெருமான்முன்போயரசன்றன்மகளைப்போகட்
டிந்தநோய்நீரேதீர்க்கவேண்டுமென்றிரந்தானேயன்
சுந்தரநாதன்மன்னுளாடியதூணைத்தாடன்னைச்
சிந்தைசெய்தருட்கணேக்காற்றிருந்திழையவளைநோக்கா. (ககக)

வேறுவேறிறைவன்கீர்த்திவிளுவுரையாகப்பாடி
யீறிலானன்பர்கேட்கவிறைமொழிகொடுத்துமூங்கை
மாறிலுள்வளவன்கண்ணிமடவரல்வளவன்கண்டு
தேறிலுன்சிவனேயெல்லாத்தேவர்க்குந்தேவனென்ரு. (ககஉ)

பின்பரவாரம்பூண்டபிரானருள்விளையப்பாடு
மன்பரைமுனிவர்மூவாயிரவரையடியிற்றுழ்ந்து
முன்பவர்சொன்னவாறேமூர்க்கரைத்தடிந்துமன்று
ளின்பரைநடங்கண்டேத்திபிறைமகன்சைவனுனன். (சுகங)

மாசறுமணிபோற்பன்னுள்வாசகமாலைசாத்திப்
பூசனைசெய்துபன்னுட்புண்ணியமன்றுளாடு
மீசனடிக்கீழெய்திபீறிலாவறிவானந்தத்
தேசொடுகலந்துநின்றுர்சிவனருள்விளக்கவந்தார். (ககச)

மண்சுமந்தபடலம் முற்றிற்று.

ஆ படலம் எo - க்கு திருவிருத்தம் - ஙகoடு.

(ககo) மூங்கை-ஊமை. சாவதே - பஞ்சகத்தங்கெடுதலே. (ககக) போகட்டு-நீறுத்தி. அருட்கணேக்கால். சிவசத்தியாவிர்ப்பாவநேத் திரத்தால். இதனை "அகம்பிரமமென்று அமலனேத்தன்னுட்கண்டு, சமலர்க்குப் பாசந்தடித்து. என்னுஞ் சைவசமயநெறிக்குரளானுற் றுணர்க. (ககஉ) இறைவன்கீர்த்தி - சிவபெருமான்றிருப்புகழ். (ககங) மூர்க்கர் - மூடரானபுத்தர் (ககச) உலகினர்சிவபெருமானை யும் அவனதருளினையும் புத்தர் முதலிய புறச்சமயிகளால்மறந்து கிற்குங்காலந்தோறும் சிவாக்கினை யாலவனருளுற்றுர் அவதரித்து சைவசமயபரிபாலனஞ் செய்தல் வழக்கமாதலையும், அங்ஙனம் வரு வோர். கன்மாதிமலவாய்ப்பட்டுச் சனனமரணச் சுழியிலகப்படலுறு வோர் அன்றன்றும் அவ்வாறேமணி வாசகப்பெருமா னருமென் பார். சிவனருள்விளக்கவந்தார்-என்றுர் என்க.

அறுபத்திரண்டாவது,

பாண்டியன்சுரந்தீர்த்த படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வானலமுதமதிமுடிமேன் மதுரைப்பெருமான் மண்சுமந்து
தேனலமுதவாசகரைக்கதியில்விடுத்ததிறமிதுமேற்
பானன் மணிவாய்க்கவுணியனே விடுத்துச்சமணர்படிற்றெழுகுங்
கூனல்வழுதிசுரத்தணித்தாட்கொண்டகொள்கைகூறுவாம். (க)

வாகுவலத்தான்சகநாதவழுதிவேந்தன்மகன்வீர
வாகுவவன்சேய்விக்கிரமவாகுவவன்சேய்பராக்கிரம
வாகுவனையான்மகன்சுரதமாறனனையான்றிருமைந்தன்
வாகுவலத்தான்மறங்கடிந்துமண்ணளுங்குங்குமத்தென்னன். (உ)

அன்னன்குமரன்கருப்புரபாண்டியனுமவன்சேய்காருணிய
மன்னுமவன்றன்மகன்புருடோத்தமனுமவன்றன்மகனுகு
மின்னர்மௌலிச்சத்துருசாதனபாண்டியனும்விறல்வேந்த
னின்னனின்மகன்கூன்பாண்டியனுமிவன்றேள்வலியாலிசைமிக்கான்

திண்டோள்வலியாற்குடநாடர்செம்மறனையுமாரலங்கல்
வண்டோலிடுதாரிரவிகுலமருமான்றனையுமலைந்துபுறங்
கண்டோர்குடைக்கீழ்நிலமூன்றுங்காவல்புரிந்துகோலோச்சிப்
புண்டோய்குருதிமறக்கன்னிப்புகழ்வேல்வழுதிகிழ்நாளில். (ச)

விண்டிழாவுங்கைம்மாவும்வெறுக்கைக்குவையுமணிக்குவையும்
வண்டிவீழ்தாளகவல்லியாயமொடுநல்கிக்
கண்டுகூடற்கோமகனைக்காலில்வீழ்ந்துதன்னுடி
பண்டுபோலக்கைக்கொண்டுபோனன்றேனூர்பனந்தாரான். (ரு)

சென்னிக்கோனுந்தானீன்றதிலகப்பிடியையுலகமெலா
மின்னிக்கோதில்புகழொளியால்விளக்குஞ்சைவமணிவிளக்கைக்
கன்னிக்கோலமங்கையருக்கரசிதன்னைக்கௌரியர்க்கு
வன்னிக்கோமுன்மணம்புணர்த்திவாங்கினன்றன்வளநாடு. (சு)

(க) கவுணியனே - கவுணியகோத்திரத்தி லவதரித்ததிருஞான சம்பந்தப்பெருமானே. (உ) மறங்கடிந்து - கொடுமையையகற்றி. (ரு) இசைமிக்கான்-புகழின்மிகுந்தான். (ச) மருமான்-வழித்தோன்றல். (ரு) வெறுக்கைக்குவை-பொற்குவியல். (சு) கௌரியர்க்கு - கூன்பாண்டியனுக்கு.

மேற்படி - வேறு.

வளவர்கோன்செழியன்கற்பின்மங்கையர்க்கரசியாருக்
களவறுநிதியஞ்செம்பொற்கலிங்கமுமணியும்பேரகம்
விளைநிலமனையவாயுவெள்ளமும்பிறவுந்தென்ன
னுளமகிழ்சிறப்பவேந்தர்வரிசையாலுதவிப்பின்னர். (எ)

கோதறுகுணத்தின்மிக்ககுலச்சிறையியன்பாணற்கோர்
மேதகுகேள்வியாளனவிடுத்தனன்மீண்டுதென்னன்
காதலியோடுமாயக்கடவுள்செம்பதுமக்கோயின்
மாதரைமணந்துசெவ்வான்போல்வந்துமதுரைசேர்ந்தான். (அ)

மலர்மகண்மார்பன்பொன்னிமன்னவன்பயந்தெய்வக்
குலமகளுடனேவந்தகுலச்சிறைகுணனுங்கேள்வித்
தலைமையுமதியுமிக்கதன்மையுந்தாக்கிநோக்கி
நலமலியமைச்சனுக்கிநானிலம்புரக்குநாளில். (கூ)

வல்வினைவலியான்மெய்யில்வலியகூனடைந்தான்போலக்
கொல்வினையிலராய்வஞ்சங்கொண்டுழன்றுடுத்தபாசம்
வெல்வினையறியாநக்கவேடர்சொல்வலையிற்பட்டு
நல்வினையுதவாத்தென்னனுன்மறையொழுக்கநீத்தான். (கo)

போதவிழ்தாரானக்கர்புன்னெறியொழுக்கம்பூண்டோ
னுதலிற்கன்னிநாடுமமணிருண்மூழ்கிப்பூதி
சாதனநெறியாஞ்சைவசமயமுமுத்திச்செல்வ
மாதவநெறியுங்குன்றமறைந்ததுவேதநீதி. (கக)

பறிபடுதலையும்பாயினுடுக்கையும்பாசிப்பல்லு
முறிபொதிகலனுமத்திரநாத்திபென்றுரைக்குநாவு
மறிவழியுளம்போனுணற்றழிந்தவெற்றரையுங்கொண்டு
குறிகெடுமணங்குசூழ்ந்தாங்கமணிறைகொண்டதெங்கும். (கஉ)

அருந்தமிழ்ப்பாண்டிவேந்தற்குறுதியாமாக்களுஞ்செய்யு
மருந்தினிற்சிறந்தகற்பின்மங்கையர்க்கரசியாரும்

(எ) செம்பொற்கலிங்கமும் - அழகியசெவ்விய பொன்னுடையும். (அ)காதலி-மனைவி. (கூ)நானிலம் எ-து-குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்னும் வேறுபாடுடையபூமியை. (கo) உடுத்தபாசம்-தம்மைச்சூழ்ந்தமலபந்தம் (கக) நக்கர் - ஆடையின்றியுலவுஞ் சைனத்துறவினர். (கஉ) உறிபொதிகலன் - உறியில்வைத்த குடுவை.

பெருந்தகையமைச்சுநீரிற்குழைத்தன்றிப்பிறங்கப்பேறு
தருந்திருநீறிடாராய்ச்சிவனடிச்சார்பினின்றார். (கஉ)

பொய்யுரைபிதற்றுமிந்தப்புன்சமண்களேகட்டிண்டு
மெய்யுரைவேதநீதிவியன்பயிர்தலைச்செய்தோங்கச்
செய்யுநெறவரேயென்றுசிந்தையிற்கவலைபூண்டு
கையுனராகிக்கூடனுதனேவணங்கப்போனார். (கச)

பேதுற்றமுனிவர்க்கன்றுபெருமறைவிளக்கஞ்செய்த
வேதத்தின்பொருளேயிந்தவெஞ்சமண்வலையிற்பட்டுப்
போதத்தையிழந்தவேந்தன்புந்தியைமீட்டிப்போதுன்
பாதத்திலடிமைகொள்வாயென்றடிபணியுமெல்லை. (கஙி)

வேதியனொருவன்கண்டிவேடமும்பூண்டோன்மெய்யிற்
பூதியன்புண்டரீகபுரத்தினும்போந்தோன்கூட
லாதியைப்பணிவான்வந்தான்மங்கையர்க்கரசியாரு
நீதியமைச்சரேறுநேர்படவவனேநோக்கா. (கசு)

எங்கிருந்தந்தணீர்வந்தனீரென்றுராய்ந்த
புங்கவன்சென்னிபொன்னிநாட்டினும்போந்தேனென்று
னங்கவரங்குண்டானபுதுமையாததைதிரென்றார்
சங்கரற்கன்புபூண்டோனுண்டென்றுசாற்றுகின்றான். (கஎ)

எழிசைமறைவல்லாளர்சிவபாதவிதயரென்னக்
காழியிலொருவருள்ளார்காரமண்கங்குல்சீப்ப
வாழியிலிரவியென்னவொருமகவளித்தியென்ன
ஊழியிலொருவன்றானேயுள்கிநோற்றெழுகின்றார். (கஅ)

(கஉ) ஆக்கஞ்செய்யும் - செல்வத்தினை மிகுதியாக்கும். அருந்தமிழ்-தமிழானது மொழிவோர்க்கினிமையும் முதற்பெருங்கடவுள் வழித்தோன்றுதலும் தன்னைச் செவ்வனே பயின்றார்க்குத் தெய்வப்புலமையைச் சேர்த்தலுமாதிய அருமைப்பாட்டின தென்பதையும் பிறபாடைகளுக் கிச்செயலின்றென்பதனையும் விளக்கிநிற்குமரியதமிழ் என்க. (கச) சமணரின் மூத்திரிலே தெய்வபரத்துவமாதிய அற்பத்தினு மற்பமானதாதலின் பொய்யுரைபிதற்றும் என்றார். பொய்யுரை, அபத்தவசனம். (கஙி) பேதுற்றமுனிவர்-பொருடெரியாது தடுமாறிய கண்ணுவனுதி இருடியர். வெஞ்சமண் - சைவர்க்குத் துன்பந்தருங்கொடிய சமணமதம். (கசு) புண்டரீகபுரம் - புலியூரான சிதம்பரம். (கஎ) புங்கவன் - பார்ப்பான். புதுமை - முன்னெங்கும் பரவாதவிசேடம். (கஅ) எழிசை- சூரல், தித்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி-தாரம். என்பனவாதிய.

ஆயமாதவர்பாலீசனருளினலுலகமுய்யச்
சேயிளங்கதிர்போல்வந்தான்செல்வனுக்கிரண்டாண்டெல்லை
போயபின்மூன்றுமாண்டிற்பொருகடன்மிதந்ததோணி
நாயகன்பிராட்டியோடும்விடையின்மேனடந்துநங்கை. (ககூ)

திருமுலைப்பாலினேடுஞானமுந்திரட்டிச்செம்பொற்
குருமணிவள்ளத்தேற்றிக்கொடுப்பவப்பாலன்வாங்கிப்
பருகியெண்ணிறைந்தவேதாகமமிவைபற்றிச்சார்வாய்
விரிகலைபிறவுமோதாதுணர்ந்தனன்விளைந்தஞானம். (உ0)

நம்பந்தமறுப்போன்ஞானநாயகன்ஞானத்தோடு
சம்பந்தஞ்செய்யுஞானசம்பந்தனெனநாவில்
வம்பந்தமூலமெய்ஞ்ஞானவாணியுங்காணிகொள்ள
வம்பந்தமறைகளெல்லாமருந்தமிழாகக்கூறும். (உக)

கரும்பினிற்கோதுநீத்துச்சாறுகட்டியேபோல்
வரம்பிலாமறையின்மாண்டபொருளெலாமாணத்தெள்ளிச்
சுரும்பிவர்கொன்றைவேணிப்பிரானிடந்தோறும்போகி
விரும்பியதென்சொன்மாலைவிடையச்சாத்தி. (உஉ)

பருமுத்தமுலையாள்பங்கனருளினற்பசும்பொற்றூளந்
திருமுத்தின்சிவிகைகாளந்தெண்முத்தின்பந்தரின்ன

(ககூ) சேயிளங்கதிர்போல் வந்தான் - குமரவேள் இளம்பருதியொப்பத் தோன்றினன். சேய் - ஒருகுழந்தை. இளங்கதிர்போல்-இளஞ்சூரியனையொப்ப, வந்தான் - அவதரித்தானென அவரவர்மதத்திற்கேற்பஇரண்டிலொன்றைஅமைத்துக்கொள்க. (உ0) குரு - சிறந்தஞ்சிய. (உக) நம்பந்தம்-நமது பாசக்கட்டினை. அம்பந்தமறைகளெல்லாம் அருந்தமிழாகக்கூறும். என்றதனால் ஆளுடையபிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பாடலனைத்தும் - இருக்கு, எசுர், சாமம், அதர்வணமென்னு நான்குவேதங்களையன்றி வேறின்மை நன்குவிளங்குதல் காண்க. அதனாலன்றே தமிழ்வேதமென அறிஞர் மணிகளவர்பாடலை யுரைத்து வருகின்றனர். கலைஞானம்பெற்ற மற்றைப் புலவர்பாடலையொப்பக் கூறுதலடாதென்பதனை விளக்கவும் திருஞானசம்பந்தப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய பாடல்களுக்கு வேதமென்னும்பெயரே தக்கதென்பது தக்கருத்தென்றும் வச்சிரலேகமாக ஆசிரியர்பரஞ்சோதியார்விளக்கியிருத்தல் காண்க. இதனாலடிப்பட்டச்சான்றோரனேகருந்தேவாரத்தினைத் (திருநெறி) தமிழ்வேதமென்றே வழங்கிவந்தனரென்பது திண்ணம் இதனையறியாதார் இஞ்ஞான்று வேறுபெயர் கூறுப. (உஉ)கோது-சக்கை.

நிருமித்தவகைபோற்பெற்றுபாலையைநெய்தலாக்கிப்
பொருமுத்தரதிருழ்வீழிப்பொற்படிக்காசுபெற்று. (உங)

அருமறைவணங்குங்கோயிற்கதவினையடைக்கப்பாடிப்
பரணுறைபதிகளெங்குந்தொழுதனர்பாடிப்பாடி
வருமவர்நுங்கணுட்டிவணங்கவும்வருவரென்னுத்
தருமநூலணிந்ததெய்வத்தாபதன்சாற்றலோடும். (உச)

கற்பலர்கொடியன்னருந்தென்னவன்கண்போல்வாரு
மற்புரையமண்பேயோட்டியன்றுதங்கோமான்மெய்யிற்
பொற்புறுநீறுகண்டுபூதிசாதனத்தாலெய்துஞ்
சிற்பரவீகெண்டமகிழ்ச்சியுட்டிளாத்தோராஞர். (உரு)

தங்கள்பேர்திட்டியோலைவிண்ணப்பஞ்சண்பைநாடர்
புங்கவர்க்குணர்த்தவந்தப்பூசுரன்கையிற்போக்கி
மங்கையர்க்கரசியாருமரசற்குமருந்தன்னனு
மங்கயற்கண்ணிகோனேப்பணிந்ததம்மகத்திற்புக்கார். (உசு)

பண்படுவேதச்செல்வன்வல்லேபோய்ப்பழனவேலிச்
சண்பையர்பிரானேக்கண்டுபறியுண்டதலைகளெல்லாம்
புண்படத்திரியுங்கையர்பொய்யிருள்கடந்தார்தந்த
வெண்படுமோலைகாட்டிப்பாசுரமெடுத்துச்சொன்னுன். (உஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெங்குருவேந்தரடிபணிந்தடியேன்குலச்சிறைவிளம்புவிண்ணப்ப, மிங்கெழுந்தருளிச்சமணிருளொதுக்கியெம்மிறைமகற்குநீறளித்துப், பொங்கிரும்பணைசூழ்தென்றமிழ்நாட்டைப்பூதிசாதனவழிநிறுத்தி, யெங்களேக்காக்கவென்றபாசுரங்கேட்டெழுந்தனர்கவுணியர்க்கிறைவர். (உஅ)

ஆதகாதிதுவென்றேதுவார்நாவுக்கரையர்நீர்சிறியவரவரோ
பாதகமஞ்சார்தம்மொடும்பன்னுட்பழகியவேனையவர்செய்த
வேதனையளந்துகூறுவதென்னைவிடுகதில்லம்மவோவுமக்கிப் [ர்.
போதுநாள்கோள்கள்வலியிலவென்னப்புகலியர்வேந்தரும்புகல்வா

எந்தையெம்பெருமானருளிலார்போலவின்னணமிசைப்பதெனவர்செய், வெந்தவேதனையினுய்ந்தநீர்நாள்கோள்வலங்குபுள்ளவு

(உங) சிவிகை - தண்டிகை. (உச) தாபதன் - தவசி. (உரு) கற்பு-பதிவிரதாதருமம். (உசு) சண்பை - சீகாழி. (உஎ) வல்லே - விரைந்து. (உஅ) வெங்குரு - சீகாழி. (உக) வேதனை - துன்பம்.

ணர்பேய்பூத, மந்தமில்பலவுமம்மையோடப்பனுணையானடப்புன
வவர்நஞ், சிந்தையேகோயில்கொண்டுலீற்றிருப்பத்திங்கிழையாவெ
னவெழுந்தார். (கூ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமுரசொலிப்பச்சங்கங்காகளம்வாய்விட்டேங்கச்
சாமரைபனிப்பமுத்தின்பந்தரிற்றரளத்தெய்வக்
காமருசிவிகைமேற்கொண்டமணிருள்கழுவுஞ்சோதி
யாமெனநெறிக்கொண்டீசனிடந்தொறுமடைந்துபாடி. (கூக)

செம்பியனுடீர்த்தென்னவனுடணணி
வெம்பியசுரமுமுல்லைப்புறவுமேகவில்லைத்
தும்பிகைநீட்டிவாங்குமலைகளுந்துறந்துபாகத்
தம்பிகையுடையான்கூடனகர்ப்புறணுகச்செல்வார். (கூஉ)

புண்ணியநீற்றுதொண்டர்குழாத்தினுட்புகலிவேந்தர்
நண்ணியசிவிகைமீதுநகைவிடுதரளப்பந்தர்
கண்ணியதோற்றந்தீம்பாற்கடல்வயிறுதித்துத்தீர்ந்து
விண்ணியன்முழுவெண்டிங்கள்விளக்கமேயொத்ததன்றே. (கஙூ)

தேம்பழுகுமுதச்செவ்வாய்சிரபுரசெல்வர்முன்னம்
போம்பரிசனத்தார்தம்மிற்பொன்னெடுஞ்சின்னமார்ப்போர்
தாம்பரசமயசிங்கஞ்சமணிருள்கிழியப்பானு
வாம்படிவந்தானென்றென்றூர்த்தெழுமோசைகேளா. (கூச)

நின்றுண்டுதிரியுங்கையரெதிர்வந்துநீவிர்நுங்கள்
கொன்றறன்சொன்னதேவைக்கும்பிடவந்தாலிந்த
வென்றிகொள்சின்னமென்கொல்வீறென்கொல்யாரைவென்றீ
ரென்றனர்தடித்தாரொன்றுமீறிலானடியார்தம்மை. (கூடு)

மாமதமொழுகச்செல்லுந்திண்டிறண்மத்தவேழந்
தாமரைநூலாற்கட்டத்தடைபடவற்றுகொற்றக்
காமனைமுனிந்தார்மைந்தர்கயவர்தந்தடையைநீத்துக்
கோமணிமாடமூதூரடைந்தரன்கோயில்புக்கார். (கூசு)

கைம்மலைச்சாபந்தீர்த்தகருணையங்கடலைத்தாழ்ந்து
மும்முறைவலஞ்சுழ்ஞானமுகிழ்முலைப்பாலிலைஞெ

(கூ0) அருளிலார் - கருணையற்றவர். (கூக) பனிப்ப - அசைய. (கூஉ) செம்பியன் - சோழன். (கூஙூ) புகலி-சீகாழி. (கூச) குழுதம்-செவ்வல்லி. (கூடு) கையர் - இழிசெயலினர். (கஙசு) வேழம்-யானை.

செம்மணிவள்ளத்தீந்தகிருவொடுத்தொழுதானந்த
மெய்ம்மயவெள்ளத்தாழ்ந்துநின்றனர்வேதச்செல்வர். (கூஎ)

மறைவழிநின்றுநின்னேவந்திசெய்துய்யமாட்டா
நிறைவழிவஞ்சநெஞ்சச்சமணரைநெறிகளெல்லாஞ்
சிறைபடவாதுசெய்யத்திருவுள்ளஞ்செய்திகூற்றைக்
குறைபடவுதைத்தோயென்றுகுறித்துரைபதிகம்பாடி. (கூஅ)

வேண்டுகொண்டருளப்பெற்றுமீளுமப்போதுகண்டு
மூண்டவைம்பொறியும்வென்றவாகீசமுனிகளென்ன
வாண்டிளாரொருவர்வேண்டவவர்திருமடத்திலன்பு
பூண்டெழுகாதலோடும்போயினர்புகலிவேந்தர். (கூக)

அங்கெழுந்தருளியெல்லினமுதுசெய்திருப்பவற்றைக்
கங்குல்வாயமணர்செய்யுங்கருதருஞ்செயலுந்தங்கண்
மங்கலமரபின்வந்தாள்வருத்தமுங்காணவஞ்சிச்
செங்கதிரவன்போய்மேலச்செழுங்கடல்வெள்ளத்தாழ்ந்தான். சஅ

மாறுகொளவுணர்செய்யுமவஞ்சனைக்கிடனுமொத்து
வேறறநட்புச்செய்வான்வந்தெனவிரிந்தகங்கு
லீறறமூளைத்தவான்மீனினமவர்பறித்தசென்னி
யூறுபட்டெழுந்தமொக்குளொத்தவக்கங்குலெல்லை. (சக)

கலிநீலத்துறை.

வைகிகத்தனியிளஞ்சிறுமடங்கலேறடைந்த
செய்தியைத்தெரிந்தயன்மலியிடங்களிற்றிரண்ட
கைதவத்தவெண்ணுயிரங்கயவருமொருங்கே
யெய்திமுத்தமிழ்விரகர்மேற்பழித்தழலிழைத்தார். (சஉ)

மெய்யில்சிந்தையாரத்தழற்கடவுளாவிளித்தாங்
கெய்தியெம்பகையாயினோரிருக்கையையமுது
செய்துவாவெனப்பணித்தனர்சிறுவிதிமகத்துக்
கையிழந்தவன்செல்லுமோவஞ்சினனென்கலங்கி. (சங)

ஈனர்தாஞ்சடத்தீயினேயெடுத்தனரேகி
ஞானபோனகர்மடத்தினிற்செருகினர்நக்தா

(கூஎ) கைம்மலை - யானை. (கூஅ) வந்திசெய்து - வணங்கி. (கூக) மூண்ட - விடயங்களில் நெருங்கிச்செல்லுகின்ற. (சஅ) கங்குல்வாய் - இரவில். (சக) அவுணர் - அரக்கர். (சஉ) மடங்கலேறு - ஆண்சிங்கம். (சங) தழற்கடவுள் - அக்கினிதேவன்.

தானதீப்புகையெழுவதையடியவர்கண்டு
வானநாயகன்மைந்தருக்குணர்த்தினர்வல்லே. (சச)

சிட்டர்நோக்கியத்தீயினைத்தென்றமிழ்க்கூட
லட்டமூர்த்தியையங்கிருந்தருமறைப்பதிகந்
துட்டர்பொய்யுரைமேற்கொண்டுதொன்முறைதுறந்து
விட்டவேந்தனைப்பற்றெனப்பாடினர்விடித்தார். (சடு)

ஆடித்ததக்கணத்தரசனைவெப்புநோயாகித்
தொடித்ததிட்டபல்கலன்களுந்துகளெழப்பணிநீர்
மடித்தசாந்தமுங்கலவையுமாலையுங்கருகப்
படித்தபாயலுஞ்சருகெழப்புரவலன்பதைத்தான். (சசு)

வளவர்கோன்றிருமடந்தையுமந்திரமேறுந்
தளர்வடைந்துநன்மருத்துநூல்விஞ்சையர்தம்மைக்கூஉய்ப்
பளகில்பன்மருந்தருத்தவும்பார்வையினுலும்
விளைவதேயன்றிவெஞ்சுரந்தணிவதுகாணுர். (சஎ)

சவலைநோன்புழந்திம்மையுமறுமையுஞ்சாரா
வவலமாசரைவிடித்தனரனைவரும்பார்த்துத்
தவலத்தினுமருந்தினுந்தணிந்திலதாகக்
கவலையெய்தினரிருந்தனர்விடிந்ததுகங்குல். (சஅ)

வட்டவாழியொன்றுடையதேர்ப்பரிதிதன்மருமான்
பெட்டகாதல்கூர்மருகனைப்பற்றியபிணிகேட்
டிட்டகாரிருளெழினியையெடுத்தெடுத்தங்கை
தொட்டுநோக்குவான்வந்தெனத்தொடுகடன்முளைத்தான். (சகூ)

வாலிதாகியசைவவான்பயிரினைவளர்ப்பான்
வேலியாகியோரிருவரும்வேந்தனைநோக்கிக்
காலபாசமுஞ்சுடுமிநோயருமறைக்காழிப்
பாலராலன்றித்தீர்த்திடப்படாதெனப்பகர்ந்தார். (கூ0)

பொய்யர்சார்பினைவிடாதவனீங்குநீர்புகன்ற
சைவர்நீறிட்டுப்பார்ப்பதுதருவதோவென்ன

(சச) ஈனர்-இழிதொழிலர். (சடு) அட்டமூர்த்தி - நிலமுதலிய எட்டுருவினனை சிவபெருமான். (சசு) வெப்புநோய் - சுரநோய். (சஎ) வளவர்கோன் - சோழன். (சஅ) அவலமாசரை - பயனற்ற அழுக்குமெய்யரான சமணரை. (சகூ) பரிதி - சூரியன். (கூ0) வாலி தாகிய - தூய்மையான.

வையநீயெனைத்திறத்தினுலையினுநேர்ப்பீர்க்
துய்யவேண்டுமேயிதனில்யாதுறுதியென்றுரைத்தார். (௹க)

அழைமினீண்டெனவரசனுமிசைந்தனனுர்வந்
தழையுமந்திரத்தலைமகன்றனிமுகமெங்கும்
விழவுதூங்கநன்மங்கலவினைகளால்விளக்கி
மழலையின்றமிழ்விரகர்தம்மடத்தில்வந்தெய்தா. (௹உ)

அன்றுகேள்வியாலருந்தியஞானவாரமுதை
யின்றுகண்களாலுண்கெனப்பெற்றபேறெய்திச்
சென்றிறைஞ்சினனெழுந்திருந்தீயமண்சூழ்ச்சி
வென்றசிந்தையீரென்றனர்பூந்தராய்வேந்தர். (௹ஊ)

நன்றிருந்தனிரேயெனநகைமலர்த்தடந்தார்
வென்றிமீனவன்கற்பினர்தம்மையும்விண்ணு
வென்றுநும்மருளுடையவர்க்கெவன்குறையென்னு
வொன்றுகேண்மைசூழ்ன்பிஞரிதனையுமுரைப்பார். (௹ச)

கையர்மாளவுநீற்றினுற்கவுரியன்றேய
மெய்வதாகவுமின்றுநும்மருளினுலொலிநீர்
வைகைநாடன்மேல்வெப்புநோய்வந்ததாலதனை
யையதீர்த்திடல்வேண்டுமென்றடியில்வீழ்ந்திரந்தார். (௹டு)

இரந்தவன்பருக்கன்னதாகென்றருள்சுரந்து
பரந்தநித்திலயானமேற்பனிக்கதிர்மருமான்
சுரந்தணிப்பலென்றேகுவாலெனத்துமெய்ச்சுருதி
புரந்தளிப்பவர்பாண்டியன்கோயிலிற்புகுவார். (௹சு)

வாயிலெங்கணுந்தூபமும்மங்கலவிளக்குந்
தோயகும்பமும்கொடிகளுஞ்சுண்ணமுந்துவன்றிச்
சேயகாகளவொலிமன்னன்செவிப்புலன்சுவைப்பக்
கோயிலெய்திஞரமணர்தங்கோளரியனையார். (௹எ)

காவலோன்மருங்கிட்டதோர்கதிர்மணித்தவிசின்
மேவினுரவர்நோக்கினுன்மீனவன்றெளிந்து

(௹க) எனைத்திறத்தினுல் - எவ்வகையினுல். (௹உ) விழவு-உச்சவம். (௹ஊ) பூந்தராய் - சீகாழி. (௹ச) மீனவன்-பாண்டியன். (௹டு) கொளரியன் - பாண்டியன். (௹சு) நித்திலயானமேல் - முத்துப்பல்லக்கின்மீது. (௹எ) தோயகும்பமும் - நீர்நிறைந்தகுடமும்

வாவிதாழ்செழுந்தாமரையெனமுகமலர்ந்து
பாவியேன்பிணிதணித்தெனைப்பணிகொண்மினென்றான். (ஹஅ)

புலைத்தொழிற்குவித்தாயினோர்கேட்டிளம்புழுக்கிக்
கலைத்தடங்கடனீர்த்தியகாவலோயுன்றன்
வலப்புறத்துநோயிவரையுமற்றைநோயெமையுங்
தொலைத்திடப்பணியென்றனர்கைதவன்சொல்வான். (ஹக)

அனையசெய்திரென்றிசையுமுன்சமணரும்சோகன்
றனைநினைந்துகைப்பீலியாற்றடவியுங்கரத்துக்
கனைகொளாலிநீர்சிதறியுநெய்சொரிகனல்போற்
சினவிமேலிடக்கண்டனர்தீர்ந்திடக்காணார். (கo)

தீயர்மானமிக்குடையராய்ச்செருக்கழிந்திருப்பப்
பாயகேள்வியோர்புண்ணியப்பையுணீறள்ளிக்
காயுநோயதுதணித்திடக்கருதினரதனை
மாயநீறெனவிலக்கினர்மாயைசெய்தழிவார். (கக)

அண்டநாயகன்றிருமடைப்பள்ளிநீறள்ளிக்
கொண்டுவாருமென்றருமறைக்கவுணியர்கூறக்
கண்டுகாவலனேவலாற்கைக்கொடுவந்தார்
வண்டுலாவுதார்வழுதிநோய்தணிப்பவர்வாங்கி. (கஉ)

மருந்துமந்திரம்யாவையுமறையுரைப்பதுவும்
பொருந்துமின்பவீடளிப்பதும்போகமும்பொருளுந்
திருந்துமாலவனாயான்றிருநீறெனச்செப்பி
யருந்துமின்னமுதனையசொற்பதிகமதறைந்து. (கங)

மெய்யிலிட்டனர்வருடலும்வெஞ்சுரந்துறந்த
மையில்சிந்தையோர்வெகுளியிற்றணிந்ததுவாசஞ்
செய்ததண்பனிநீர்விரைச்சந்தனந்திமிர்ந்தா
லெய்துதண்மையதாயினதிறைவலப்பாகம். (கச)

பொழிந்ததண்மதுத்தார்புனைபூழியர்கோனுக்
கிழிந்தசெய்கையர்கைதொடவெரியிடுசுரத்தாற்
கழிந்ததுன்பமுங்கவுணியர்கைதொடச்சுரந்தீர்ந்
தொழிந்தவின்பமுமிருவினையொத்தபோலொத்த. (கஙு)

(ஹஅ) காவலோன் - அரசன் (ஹக) புலைத்தொழில் - பாவத்தொழில். (கo) அசோகன் - அருகதேவன். (கக) செருக்கழிந்து - கருவமொழிந்து. (கஉ) மடைப்பள்ளி - சமயலறை. (கங) வீடு - மோட்சம். (கச) வெஞ்சுரம் - கொடியசுரம்.

ஐயவிச்சுரமாற்றினிதாற்றினென்னு
வையகநாடவன்வல்லமண்மாசுதீர்ந்தடியே
னுய்யவேண்டுமேலதனையுமடிகளேயொழித்தல்
செய்யவேண்டுமென்றிரந்தனன்சிரபுரக்கோனே. (சுசு)

பிள்ளையாரிடப்பாகமும்பண்டுபோற்பெருமான்
வெள்ளைநீறுதொட்டங்கையானீவுமுன்மேனு
ளுள்ளகூறுமெனுமெவப்புநோயொழிந்துமீனுயர்த்த
வள்ளன்மாசறக்கடைந்தவிண்மணியெனப்பொலிந்தான். (சுஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்னதொருகாரணத்தாற்சவுந்தரிய பாண்டியனென்றுகிய
ன்ன,தென்னவர்கோன்கவுணியர்கோன்றிருநோக்காற்பரிசத்தாற்
றெருட்டும்வாக்காற், பொன்னடிதாழ்ந்தைந்தெழுத்து முபதேசப்
பேறடைந்துபொலிவால்வஞ்சந், துன்னமணர்நெறியிகழ்ந்துதொ
ல்வேதநெறியடைந்துதுயலுலுன். (சுஅ)

பாண்டியன் சுரந்தீர்த்த படலம் முற்றிற்று.

ஆபடலம் - எக - க்கு திருவிருத்தம் - ஈகளஈ.

அறுபத்துமூன்றவது,

சமணரைக்கழுவேற்றியபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பஞ்சவனடைந்தநோயைப்பாலரூவாயர்தீர்த்து
ளஞ்சணிகண்டனீறுநல்கியவண்ணஞ்சொன்னே
மஞ்சலராகிப்பின்னும்வாதுசெய்தடங்கத்தோற்ற
வஞ்சரைக்கழுவேறிட்டவண்ணமுஞ்சிறிதுசொல்வாம். (க)

தென்னவன்றேவியாருமமைச்சருட்சிறந்தசிங்க
மன்னவன்முனுங்காழியர்தணரடியில்வீழ்ந்தெம்
மன்னவன்வெப்புங்கூனும்பாசமுமாற்றினீரோ
யின்னமுமடியேம்வேண்டுங்குறைசெயத்தக்கதென்றார். (உ)

(சுடு) பூழியர்கோன் - பாண்டியவரசன். (சுசு) மாசு - குற்றம். (சுஎ) பிள்ளையார் - ஞானசம்பந்தப்பெருமான். (டுஅ) கவுணியர் கோன் - கவுணியகுலத்துப்பிறந்த தலைவரான ஞானசம்பந்தர். (க) பஞ்சவன் - பாண்டியன். (உ) அமைச்சர் - மந்திரியர்.

கன்னிநாடெங்குமிந்தக்காரமண்காலூடித்
துன்னினவிசுனையின்னேதுணித்திடல்வேண்டுமென்ரு
ரன்னவராலவாயார்திருவுள்ளமறிவேனென்ரு
வுன்னியமனத்தராதியொய்யெனக்கோயில்புக்கார். (ரு)

அவ்வீருவோருங்கூடவடைந்துபொற்கமலம்பூத்த
திவ்வியதீர்த்தந்தோய்ந்துசேனெடுங்கண்ணிபாக
ரவ்வியங்கமலச்செங்கைநாதனைத்தாழ்ந்துவேந்தன்
வெவ்வியவெப்புநீத்தார்தொழுதிதுவினவுகின்ரூர். (சு)

காயமேயொறுத்துநாளுங்கைதவம்பெருகநோற்கும்
பேயரையிம்மையோடுமறுமையும்பேறற்ரூரை
நீயுரைசெய்தவேதவேள்வியைநிந்தைசெய்யுந்
தீயரையொறுத்தல்செய்யத்திருவுளஞ்செய்தியென்ரூர். (ஙி)

வெம்மதவேழங்காய்ந்தவிடையவர்விசும்பிற்சொல்வா
ரெம்மனோராவீர்நுங்கட்கிசைந்ததேயெமக்கும்வேண்டுஞ்
சம்மதமதனுல்வெல்லத்தக்கவராகநீரே
யம்மதமுடையார்தோற்கத்தக்கவராகவென்றே. (சு)

எம்மொழிதேறினீர்போயிறைமகணவையத்தேறிச்
செம்மையிலாரைவாதுசெய்திர்நீரனேயார்தோற்று
வெம்மூனைக்கழுவிலேறிவிளிகுவரென்னக்கேட்டு
மைம்மலிகளத்தான்மைந்தர்தொழுதம்மடத்திற்போனூர். (எ)

இருவருமீண்டுதத்தமிருக்கையிற்போகியன்றைப்
பருவமங்கலப்பின்னுட்பாண்டிமாதேவியாரும்
பெருமதியமைச்சரேறும்பிள்ளையார்மடத்திற்போகி
யருகரைவெல்லுஞ்சூழ்ச்சியாதெனவளந்துதேர்வார். (அ)

பேரருணிறைந்தகாழிப்பெருந்தகையுடன்போய்த்தங்கோன்
சீரவைகுறுகியீதுசெப்புவார்செய்யகோலாய்
காரமண்காடேயெங்குங்கழியவுமிடைந்தவின்ன
வேரொடுங்களைந்தாற்சைவவிளைபயிரோங்குமென்ரூர். (கூ)

அவ்வண்ணஞ்செய்வதேயென்றரசனுமனுச்சைசெய்யச்
செவ்வண்ணவெண்ணீற்றண்ணலனுச்சையுந்தெரிந்துதேய

(ரு) ஆலவாயார் - மதுரைக்கடவுள். (சு) ரவ்வி - மான். (ஙி) வேள்வி-யாகம். (சு) வேழம்-யானை. (எ)அவையத்து-சபையில். (அ) அருகர்-சமணர். (கூ) பெருந்தகை-பெரியதன்மையினையுடையவன்.

மூய்வ்வண்ணமிதுவென்றங்கனுண்மகிழ்ந்திருந்தார்சீண்டை
பைவ்வண்ணவாரம்பூண்டார்புகழெங்கும்பரப்பவல்லார். (கஅ)

கலிவிருத்தம்.

அந்த வேலை யருகந்தக் கையரைக்
குந்த வேற்கட் குலமட மாதரு
மைந்த ராகிய மக்களுங் கண்ணழல்
சிந்த நோக்கி யிகழ்ந்திணைசெப்புவார். (கக)

செழியர் கோமகன் மூழ்கிய தீப்பிணி
கழிய மாற்றும் வலியின்றிக் கற்றிலா
மழலை வாயொரு மைந்தற்குத் தோற்று வெம்
பழிவிளைத் தீர்பக வன்றமர்க் கெலாம். (கஉ)

சாம்பராடுஞ் சமயம் புகுந்து வெம்
பாம் பணிந்தவனே பகவானென
வேம்பனுங்கள் விரதநெறி யெலாஞ்
சோம்ப லெய்தத் துறந்தா னிகழ்ந்தரோ. (கங)

ஏது மக்கு நிலையினி யென்றவப்
போது மற்றவர் தம்மைப் புறகிட
வாது செய்தற் கெழுந்தனர் வஞ்சகர்
போது மென்னத் தடித்தனர் பூவைமார். (கச)

செல்லன் மின்க ணுமக்கிது செவ்வியன்
றல்லல் கூர வருந்துன்பத் தாழநா
மெல்லி கண்ட கனவுண் டிதனே யாஞ்
சொல்லு கேமின்று கேண்மெனச் சொல்லுவார். (கஞ)

கலிநிலைத்துறை.

இடையறாதுநம்பாழியும்பள்ளியுமெங்குஞ்
சடையர்முஞ்சியர்சாம்பலர்தாங்கியசூலப்
படையர்தீவிழிப்புலவுவாய்பாய்பெரும்புலித்தோ
லுடையராய்ச்சிலர்வந்துவந்துலாவுதல்கண்டேம். (கக)

(கo) அணுசசை - உத்தரவு. (கக) அருகந்தக்கையர் - சமணர் களாகிய இழிந்தோர். (கஉ) பகவன் - அருகதேவன். (கங) சாம்ப ராடும் - விபூதி பூசும். (கச) போதுமென்ன - போவோமென்று. (கஞ) செவ்வியன்று - காலமன்று. (கசு) பள்ளி - சமணாலயம்.

கன்னியிற்றுறவன்னங்கள்கணவனிற்றுறவின்
மன்னுமாரியாங்கனைகணூல்வாங்குமக்குசைக
ளென்னமூவகைப்பெண்டவப்பள்ளிகளெல்லாஞ்
சின்னவெண்பிறைக்கோட்டுமாசிதைக்கவுங்கண்டேம். (கஎ)

முண்டிதஞ்செய்ததலையராய்முறுக்குறிதுங்கு
குண்டிகைத்தடங்கையராய்க்கோவணம்பிணித்த
தண்டதொங்கியசுவலராய்ச்சடையன்பேர்நாவிற்
கொண்டசைத்தனராயெங்குங்குலாவவுங்கண்டேம். (கஅ)

காந்துவெங்கதமுடையதோர்கயந்தலைவந்து
சூழ்ந்துகொண்டுநம்மடிகண்மார்கணமெலாந்துரத்தி
யேந்துபூஞ்சினையலைந்திடவிரங்கிவண்டினியப்
பாய்ந்துபிண்டியைவேரொடும்பறிக்கவுங்கண்டேம். (கக)

அந்தமூவிலைவேலினுமயின்முனைக்கழுவின்
பந்திமீதுரேறவுங்கண்டுளம்பனிப்பச்
சந்தமார்பகஞ்சேப்பவந்தளிர்க்கரம்புடைத்துக்
கந்தவார்குழல்சோரவுங்கலுழவுங்கண்டேம். (உ0)

தள்ளருந்திறலிந்திரசாலமோகாதி
யுள்ளவிஞ்சையியல்லெலாந்துதவிலவொன்றுங்
கள்ளராற்பறிபட்டவோகன்லில்வெந்தனவோ
வெள்ளங்கொண்டவோசேமத்திற்கிடப்பவோவிளம்பீர். (உக)

தாவுதீவளர்த்தெழுகரிதன்னையாடரவை
யாவையேவிமுன்னம்மலோர்பட்டதுமறிந்தீர்
காவலன்பிணிதணித்திலீரினிச்செயுங்கருமம்
யாவதாகுமோவதனையுமெண்ணுமினென்றூர். (உஉ).

இற்றைவைகலுக்கேகண்மினென்றனரதத்தைச்
செற்றவஞ்சகர்செல்லுவார்திரும்பவுங்கையைப்
பற்றியீர்த்தனர்பெண்டிர்சொற்கேட்பதும்பழுதென்
றுற்றதீவினைவழிச்செல்வாரொளித்தனர்செல்வார். (உங)

கொங்கலர்க்குழல்சரிந்திடக்குரத்தியர்பின்னு
மெங்கள்சொற்கொளாதேகுவீர்பரிபவமெய்தி

(கஎ) மா - யானை. (கஅ) முண்டிதம்-சவரம், அல்லதுமொட்டை. (கக) கதம் - சீற்றம். (உ0) பந்தி-வரிசை. (உக) விஞ்சை-வித்தை. (உஉ) கரி -யானை. (உங) வைகல் - தினம்.

யுங்களுக்கிடையூறுவந்துறுகெனச்சபித்தா
ரங்கதற்குமஞ்சார்செல்வாரழியுநாளுதித்தார். (உச)

புட்களும்பலவிரிச்சியும்போகலென்றெதிரே
தட்கவுங்கடந்தேகுவார்தடங்கயலுகைப்பக்
கட்கவிழ்ந்தலர்கிடங்கர்சூழ்கடிநகர்ப்புறம்போ
யுட்குநெஞ்சராயாவருமோரிடத்தீண்டி. (உடு)

யாதுசூழ்ச்சியென்றெண்ணுவாரிறைவனேக்கண்டு
தோதிநாமவனனுமதியுறுதிகொண்டனைய
வேதிலாளனேவாதிலல்வேறுமென்றிசைந்து
போதுவார்நகர்புகுந்துவேத்தவைக்களம்புகுவார். (உசு)

ஆயபோதிளங்காலையிற்கவுணியராய
வாயர்சேவடிபணிந்துதம்மடத்தினிற்செல்லக்
காயுமாதவச்செல்வனேக்கங்குல்சூழ்ந்தாங்கு
மாயவஞ்சகர்வந்திடைவழித்தலைமறித்தார். (உஎ)

மறித்தகையர்பின்செல்லமுன்மன்னவைகுறுகிக்
குறித்தவாளரித்தவிசின்மேற்கொச்சையர்பெருமா
னெறித்தசேயிளம்பரிதியினேறிவீற்றிருந்தார்
பறித்தசீத்தலைப்புலையர்கள்பொருதிவைபகர்வார். (உசி)

மழலையின்னமுந்தெளிகிலாமைந்தகண்மணியொன்
றுழல்கருங்கொடியிருந்திடக்கனியுதிர்ந்தாங்குன்
சுழல்கொள்விஞ்சையினன்மையான்மன்னனேத்தொடுத்த
தழலவித்தனமென்றுநீதருக்குறத்தகுமோ. (உகூ)

நந்துநாகுநீர்வண்டுசென்னடைவழியெழுத்தாய்
வந்துவீழினும்வீழுமவ்வழக்கினின்கையிற்
சிந்துசாம்பருஞ்சிறுசொலுமருந்துமந்திரம்போற்
சந்துசூழ்மலையான்சுரந்தணித்தனகண்டாய். (ரூ0)

உங்கண்மந்திரமேடொன்றிற்றீட்கெவோரேட்
டெங்கண்மந்திரந்தன்னையுந்தீட்கெவிரண்டு

(உச) கொங்கலர் - மணம்வீசுமலர். (உடு) தட்கவும் - தடுக்கவும். (உசு) சூட்சி - ஆலோசனை. (உஎ) ஆதவச்செல்வனை - சூரியனை. (உஅ) அவை - சபை. (உகூ) மழலை - நீரம்பா இளஞ்சொல். (ரூ0) நந்து - நத்தை.

மங்கிவாயிடின்வெந்ததுதோற்றதவ்வங்கி
நுங்கிடாததுவென்றதென்றெட்டியேதுவலா. (கூக)

செக்கரஞ்சடையானுறைபதிகளிற்செய்யத்
தக்கதன்றவனடிலபிழைத்துநுஞ்சார்வாய்
விக்கமெம்மனோர்க்கியற்றுவான்வேறொருதலத்திற்
புக்கமர்ந்துவாதஞ்செயப்போதுகமென்னை. (கூஉ)

வென்றிமாமுரசுறங்கிடாவியனகர்ப்புறம்போய்
மன்றல்வேம்பன்முன்கதழெரிமடுத்திடிற்பிழைப்ப
தொன்றுவேவதொன்றீதுகொண்டுமோர்களுமெமரு
மின்றுவெல்வதுந்தோற்பதுங்காண்டுமென்றெழுந்தார். (கூங)

கவிவிருத்தம்.

சுட்டுவெஞ்சுநெஞ்சரேயெழீஇநகர்ப்புறம்புபோய்க்
கீட்டிசைக்கணேரழற்கிடங்குதொட்டெழுந்துவா
னீட்டுகோடரங்குறைத்துநிறையவிட்டுநெட்டெரி
மூட்டினர்தமாதரார்வயிற்றுமிட்டுமூட்டினர். (கூச)

ஞானமுண்டமுனிவர்தம்மையெள்ளியெள்ளிநாயினு
மீனரங்கியைத்தடுத்திருப்பவெண்ணிராயிர
ரானதொண்டருடனெழுந்துசண்பைவேந்துமாசனு
மானனருமந்திரக்கிழானும்வந்துவைகினர். (கூஞ)

உள்ளவிழ்ந்தமுலைசுரந்தொழுக்குபாலருந்தியே
துள்ளியோடுகன்றுபின்றொடர்ந்துசெல்லுமானென
வெள்ளியம்பலத்துளாடும்வேதகீதர்காதல்கூர்.
பிள்ளைபோனவாறுதம்பிராட்டியோடுமெய்தினர். (கூசு)

ஆறிலேடிரண்டடுத்தவாயிரஞ்சமணரும்
வேறுவேறுதாமுயன்றமந்திரங்கள்வேறுவே
றூறுநீர்சுரந்தவோலையிற்பொறித்தொருங்குபோய்ச்
சீறிவாளிமிர்ந்தெழுந்ததீயின்வாய்நிரப்பினர். (கூஎ)

அக்கிவாய்மடுத்தவேடனைத்துமக்கணத்தினே
யிக்குவாயுலர்ந்ததோடெனக்கரிந்துசாம்பரா

(கூஉ) விக்கம் - வீக்கம். வீக்கம்கெடுதி. (கூங) வியன்நகர் - பெரியநகரம். (கூச) கோடரம் - மரக்கிளை (கூஞ) மானனர் - திருமகளனையபாண்டிமாதேவியார். (கூசு) ஆனென - தாய்ப்பசுவையொப்ப. (கூஎ) ஊறுநீர்சுரந்தவோலை-பச்சை ஓலை.

யுக்கவாறுகண்டுசீருட்கிடந்துபொங்கவே
திக்குளார்கள்கண்டபேர்சிரித்துளார்களாயினர். (ஈஅ)

விரிந்தவேதநாவர்தாம்விரித்தவேதமெய்ப்பொருள்
வரைந்தபுத்தகத்தைவண்கயிற்றினல்வகிர்ந்துதா
மருந்தஞானவமுதளித்தவம்மைபேரகப்படத்
தெரிந்தவேடெடுத்தடித்தசீயின்வாயிலிட்டனர். (ஈக)

மறைபுலப்படுத்தநூல்வரைந்தவேடனந்தநா
ளறைபுனற்கிடந்ததாமெனப்பசந்ததரசனு
நிறையமைச்சுமரசியாருநின்றபேருமந்தணர்க்
கிறைவரைப்புகழ்ந்தளப்பிலின்பவெள்ளமூழ்கினர். (சஅ)

வெந்தசிந்தையமணர்வாதுவெல்வதற்குவேறிடம்
புந்திசெய்துவந்தவப்பொதுத்தலம்பொதுக்கடிந்
தந்தணுளர்வாதுவென்றவன்றுதொட்டுஞானசம்
பந்தனென்றநாமமேபடைத்துயர்ந்ததின்றுமே. (சக)

அன்னவேடுமுறையிலேடிறுக்கியந்தணுளர்கோன்
மன்னனோக்கவினையிலேபொயுடித்தமாசர்தாஞ்
சொன்னசூள்புலப்படத்துணிந்தும்வாய்மைநாணினீஇக்
கன்னிநாடனவைசிரிக்கவாற்றலாதகத்துவார். (சஉ)

ஏடநாங்களெழுதியிட்டபச்சையேடெணையிரம்
வீடவந்தநீவரைந்துவிட்டவோலையொன்றுமென்
வாடலின்றிநீரிலிட்டவண்ணமானதாலிதன்
பாடவஞ்செய்விஞ்சைகொண்டுபோவகற்பிணித்ததே. (சஙு)

உங்களேடுமெங்களேடுமும்பர்வானளாய்விரைஇப்
பொங்கியோடம்வையைநீரிலிடுகவிட்டபோதுதா
னங்குநீரெதிர்க்குமோலைவெல்லுமோலையன்றியே
துங்கவேலைசெல்லுமோலைதோற்குமோலையாயதே. (சசு)

வென்றுவீறடைந்தவர்க்குவீறழிந்துதோற்றபே
ரென்றுமேவலடிமையாவதென்றிசைந்துகைதவக்

(ஈஅ) அக்கி-தீ. (ஈக)அம்பைபேர் - போகமார்த்தவென்னுந் தமிழ்மறையின் முதலடி. (சஅ) அனந்தநாள் - வெகுகாலம். (சக) பொதுத்தலம் - பொதுவான இடம். (சஉ) பாயுடித்தமாசர் - சமணர். (சஙு) பாடவம் - களிப்பு. (சசு) துங்கம் - பெரிய.

குன்றுபோலுநின்றகுண்டர்கூறலோடுமீதிலா
மன்றுளாடுமடிகண்மைந்தர்வாய்மலர்ந்துபேசுவார். (சஞ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியார்பதினாறுயிரவருள்ளார்சிவனேயவமதித்த
கொடியார்நீவிருமக்கேற்றதண்டமிதுவோகொன்றைமதி
முடியாரருளாலுங்களோநாம்வென்றேமாயின்மூவிலைவேல்
கடிவாணிரைத்தகழுமுனையிலிடுவேமதுவேவழக்கென்றார். (சசு)

ஊழின்வலியாலமணரதற்குடன்பட்டார்களஃதறிந்து
சூழியானைக்குலச்சிறையுந்தச்சர்பலரைத்தொகுவித்துக்
காழினெடியபழுமரத்திற்சூலவடிவாக்கழுநிறுவிப்
பாழிநெடியதோள்வேந்தன்முன்னேகொடுபோய்ப்பரப்பினார்.(சஎ)

தேறலாதார்தமைக்காழிச்செம்மனேக்கியினிவம்மி
னீறுபூசிக்கண்டிகையும்பூண்டுநிருத்தரெழுத்தைந்து
மூறவோதிப்பாசமொழித்துய்மினென்னுவறநோக்கிக்
கூறினார்மற்றதுகேட்டுக்குண்டரெரியிற்கொதித்துரைப்பார். (சஅ)

முன்புதியில்வென்றனமேநீரில்யாந்தாய்முடியுமென
வன்புபேசியெமையிணக்கியகலநினைந்தாயல்லதைநீ
பின்புவாதுசெயத்துணியும்பெற்றியுரைத்தாயல்லபுலா
லென்புபூணியடியடைந்தவேழாய்போதியெனமறுத்தார். (சகூ)

ஊகந்தவழும்பழுமரத்தையுதைத்துக்கரைமாறிடவொதுக்கிப்
பூகந்தடவிவேர்கீண்டுபொருப்பைப்பறித்துப்புடைபரப்பி
மாகந்தழாவிக்கடுகிவரும்வைகைப்புனலைமந்திரத்தால்
வேகந்தணிவித்தேடெழுதிவிடுந்தார்முன்போல்வெள்காதார். (ரு0)

சிறையேய்புனல்சூழ்வேணுபுரச்செல்வர்யாருந்தெளிவெய்த
மறையேவாய்மையுரையாகின்மறைகண்முழுதுந்துணிபொருடான்
பிறையேய்வேணிப்பிராஞுகிற்பெருநீரெதிரேசெல்கவென
முறையேபதிகமெடுத்தெழுதிவிட்டார்முழுங்கிவருபுனலில். (ருக)

தேசம்பரவுங்கவுணியர்கோன்விடுத்தவேடுசெழுமதுரை
யீசனருளாங்கயிறுபிணித்தீர்ப்பநதியிலேதிரேற

(சஞ) வீறழிந்து - வலியிழந்து. (சசு) வழக்கு - முறைமை. (சுஎ) சூழி - முகபடம். (சஅ) நிருத்தர் - சடாசார். (சக) வம்புபேசி-பொருந்தாதவைகளையுரைத்து. (ரு0) ஊகம்-குரங்கு. (ருக) சிறையேய் - கரையினையுடைய.

நாசஞ்செய்யும்பொறிவழியேநடக்குமுள்ளமெனச்சென்று
நீசரேடெண்ணுயிரமுநீத்தவழியேயொழுகியவால். (திஉ)

சிங்கமனையாரெழுதுமுறையெதிராற்றேறத்தெரிந்தமர [தார்
ரங்கணரும்பூமழைபொழிந்தாரறவோர்துகில்விண்ணைறிந்தார்த்
கங்கையணிந்தார்திருத்தொண்டர்கண்ணீர்க்கடலிலழுந்தினர்
வெங்கணமணர்நடுங்கியுடல்வெயர்வைக்கடலிலழுந்தினர். (திஊ)

வேமேயென்பதறியாதேவெல்வேமென்றேசூளொட்டி
நாமேயிட்டவேடெரியில்வேவக்கண்டுநெஞ்சுகதிரே
போமேயின்னம்வெல்வேமென்றிட்டவேம்புணரிபுகத்
தாமேதம்மைச்சுடநாணினின்றமணர்தலைதூக்கி. (திசு)

பொருப்பேயிலையாப்புரங்கடந்தபுனிதனேயெத்தேவர்க்கும்
விருப்பேபோகம்வீடுதருமேலாங்கடவுளெனநான்கு [போ
மருப்பேய்களிற்றுரன்முடிதகர்த்தான்மருமானறியக்குருமொழி
னெருப்பேயன்றிவேகவதிநீரும்பின்னர்த்தேற்றியதால். (திஎ)

பொய்யின்மறையின்புறத்தமணர்புத்தர்க்கன்றிவாய்மையுரை
செய்யுமறைநூல்பலதெரிந்துஞ்சிவனேபரமென்றறியாதே
கையில்விளக்கிலெடுங்கிடங்கில்வீழ்வார்போலக்கலங்கிமன
மையமடைந்தபேதையர்க்குமறிவித்தனவேயவையன்றே. (திசு)

கண்டுகூடற்கோமகனுங்கற்புநிறைந்தபொற்புடைய
வண்டுகூடுந்தாளகவளவன்மகளுமந்திரியுந்
தொண்டுகூடுமடியாருங்காழிக்கரசைத்தொழுதுதிதி
விண்டுகூடற்கரியமகிழ்வெள்ளத்தழுந்திவியந்தனரால். (திஏ)

நன்றிதேரூர்பின்புள்ளமானமிழந்துநாணழிந்து
சுன்றுபோலுந்தோணிபுரக்கோமானைதிரேயாங்களுமக்
கின்றுதோற்றேமெமையீண்டுநீரேயென்றீரெனநேர்ந்து
நின்றுகூறக்கவுணியர்கோனனையாருய்யுநெறிநோக்கா. (திஅ)

இன்னமறத்தாறிசைக்கின்றேநீரேன்வாளாவிறக்கின்றீ
ரன்னையனையானெம்மிறைவனவனுக்காளாயுய்மின்க

(திஉ) நீசர் - சமணர். (திஊ) அமரர் - தேவர். (திசு) சூளொட்டி - சபதஞ்செய்து. (திஎ) புரங்கடந்த - திரிபுரங்களையழித்த. (திசு) பொய்யின் மறை - பொய்யற்ற வேதம். (திஏ) பொற்புடைய - அழகுடைய. (திஅ) உய்யுநெறி - பிழைக்குமார்க்கம்.

ளென்னவேடசிறியாய்நீயெவ்வாறெங்கட்கடாதமொழி
சொன்னதென்றுமானமுளார்கழுவிலேறத்தொடங்கினர். (ஙசு)

மேற்படி - வேறு.

மதத்தினின்மானமிக்கார்தாங்களேவலியவேறிப்
பதைத்திடவிருந்தாரேனைப்பறித்தலேயவரைச்சைவ
விதத்திலொழுக்கம்பூண்டவேடத்தார்பற்றிப்பற்றிச்
சிதைத்திடர்செய்தறிட்டார்திரிதலேக்கழுக்கோறன்னில். (சுo)

வழிவழிவருமாணைக்கர்சாதற்குவருந்திநெஞ்ச
மழிபவர்திருநீறிட்டாரதுகிட்டாதயர்வாராவி
னிழிவில்கோமயத்தையள்ளிப்பூசினரிதுவுங்கிட்டா
தொழிபவராவின்கன்றைத்தோளிலிட்டுயிரைப்பெற்றார். (சுக)

கூறிட்டமூன்றுங்கிட்டாதயர்பவர்குற்றந்தீர
நீறிட்டார்நெற்றியோடுநிருமலகோமயத்தின்
சேறிட்டார்நெற்றியோடுநெற்றியைசசெறியத்தாக்கி
மாறிட்டபாசந்தன்னேமறித்திட்டுப்பிறப்பைவெல்வார். (சுஉ)

மற்றிவர்தம்மையூற்றஞ்செய்திலர்மடிந்தோர்யாருஞ்
சுற்றியசேனங்காகரிகணுப்தொடர்ந்துகௌவிப்
பற்றிநின்றீர்த்துத்தின்னக்கிடந்தனர்பருமயானே
வெற்றிகொள்வேந்தன்காழிவேந்தரைத்தொழுதுநோக்கா. (சுங)

இன்றுநீரிட்டவேடிங்கியாவருங்காணநேரே
சென்றதேயெங்கேயென்றனதனேயாஞ்செம்பொற்கூடன்
மன்றவரருளாலின்னேவருவிப்பமென்றுவாது
வென்றவர்நிதியின்மாடேமேற்றிசைநோக்கிசசெல்வார். (சுச)

செல்லுநர்காணவோலகாவதஞ்செல்வதப்பா
லொல்லையங்கொளித்தலோடும்வியந்தவணைருங்குகூடிக்
கொல்லையான்மேய்த்துநின்றூர்சிலர்தமைக்குறித்துநீவிர்
வெல்லையுள்விசேடமுண்டோவிவண்கண்டதிசைமினென்றார்.(சுடு)

அவ்விடைச்சிறார்கள்யாங்களொன்றையுமறியேமென்ன
விவ்விடைவிசேடங்காணல்வேண்டுமெத்திறத்துமென்னத்

(ஙக) அறத்தாறு-நீதிமார்க்கம். (சுo) பதிதலையவர்-பிடுங்கப்பட்டதலையினரான சமணர். (சுக) கோமயம் - சாணம். (சுஉ) அயர்பவர் - வருந்துவோர். (சுங) சேனம் - பருந்து. (சுச) கூடன்மன்றவர் - வெள்ளியம்பலவாணர்.

தெவ்விடைவா துசெய்யத்திருவுளக்கருணைசெய்த
வெவ்விடைக்கொடியினுரைப்பாடினுர்வேதகாவார். (சுசு)

பாட்டின்மேற்கருணைவைத்தார்சயம்புவாய்ப்பராரைவில்லக்
காட்டினுளிருப்பநேரேகண்டுதாழ்ந்தெழுந்துசண்பை
நாட்டினுர்வலங்கொண்டேத்தியெதிர்நின்றுர்நகைத்தார்நிம்பத்
தோட்டினுனை துகேட்டங்கேதோன்றினுன்றுனையோடும். (சுஎ)

அந்தமாவிலிங்கத்தீசனுயிரமதியங்கண்ட
முந்தைவேதியராய்த்தோன்றிமுத்தமிழ்க்கரசைநீயென்
மைந்தனுமீனையோனெப்பாய்வருகெனநீறுசாத்திச்
சிந்தைநீளார்வங்கூரத்திருவருள்சுரந்துநின்றுர். (சுஅ)

நின்றவந்தணரையன்றுநிருமலஞானமீந்தா
ரென்றுகண்டிறைஞ்சியையநீரில்யானிட்டவேடு
சென்றதிங்கெடுத்தீர்நீரேயதுநுஞ்செல்வர்க்கேற்ற
தன்றதைத்தருதிரென்றுரறுமுகச்செம்மலன்ஞர். (சுசு)

இன்னமும்பன்னுளெம்மையிடர்தொறும்பாடியெஞ்சும்
புன்னெறியொழுகுவாரைவென்றுநம்புனிதவீடு
பின்னர்நீபெறுதியென்ஞவேடுதந்தாசிபேசி
மின்னென மறைந்துநின்றுர்வேதியராயவேடர். (எ0)

தாதையார்கவர்ந்துமீளத்தந்தவேடதனைவாங்கிப்
போதையார்ஞானமுண்டார்புரிசடைப்பிரானுர்வெளவி
யீதையாமிரந்துவேண்டத்தந்தனரென்றுகூறிக்
கோதையார்வேலினுற்குக்காட்டவக்கொற்கைவேந்தன். (எக)

கச்சானவரவமார்த்தகருணையங்கடலிற்ருேன்று
விச்சானஞானமுண்டீராற்றலின்விளைவுதேரு
தச்சானவலியானும்மையளந்தனனடியேனிந்தத் [ன்.
துச்சானபிழைதீர்த்தாள்கென்றிறைஞ்சினுன்றுணர்த்தார்வேம்ப

அந்நெடுமேருவாங்குமாடகச்சிலையினுர்க்குப்
பொன்னெடுஞ்சிகரக்கோயின்மண்டபம்புயலக்கீண்டு

(சுநு) ஒல்லை - விரைந்து. (சுசு) தெவ்விடை - பகைவரிடத்து. (சுஎ) பராரை - பருத்தஅரை. (சுஅ) முத்தமிழ்க்கரசை - ஞானசம் பந்தப்பெருமானே. (சுசு) இறைஞ்சி - வணங்கி. (எ0) புன்னெறி - இழிந்த மார்க்கமான புத்த சமணரது மதவழி. (எக) தாதையார் - சிவபெருமான். (எஉ) விச்சான - வித்தான.

மின்னெடுமதியஞ்சூடுங்கோபுரமேகந்தாவுங்
கன்னெடும்புரிசைவீதியாவையுங்களிப்பக்கண்டான். (எஙூ)

அற்றைநாளாதியாகவேடகமென்னுநாமம்
பெற்றதாலேடகத்தின்மேவியபிரானேப்பாண்டிக்
கொற்றவன்சமணரோடுங்கூடியபாவமெல்லாம்
பற்றறப்பூசைசெய்துபாசமுங்கழியப்பெற்றான். (எசி)

நறைகெழுதுழாயினுங்கலுழனுநாகர்வேந்து
முறையினுலகங்கண்மூன்றும்பூசித்துமுடியாவின்ப
நிறையருள்பெற்றரன்னநிராமயவிலிங்கந்தன்னே
யிறுதியாமுகத்திற்பாண்டியிறைமகன்பூசைசெய்தான். (எகி)

அங்கண்மாநகர்கண்டாங்கோராண்டிறைகொண்கொழிப்
புங்கவரோடும்பின்னுட்பூழியர்பெருமான்மீண்டு
மங்கலமதுரைசேர்ந்துவைகுநாணீற்றுச்செல்வ
மெங்கணும்விளங்கச்சின்னுளிருந்துபின்ஞானச்செல்வர். (எசு)

வடபுலத்துள்ளவீசன்பதிகளும்வணங்கிப்பாடக்
கடவமென்றெழுந்துகூடற்கண்ணுதற்பெருமான்றன்னே
யிடனுறைகயற்கண்ணேயிறைஞ்சிப்பல்வரனும்பெற்று
விடைகொடுதமிழ்நாடெங்கும்பணிந்தனர்மீண்டுபோவார். (எஎ)

தன்பெருங்கற்பினுளுமமைச்சனுந்தமிழ்நர்கோனும்
பின்புமுனந்தண்காழிப்பிரானடிபிரிவாற்றாரா
யன்புதந்தவர்பானட்டவன்றுதொட்டாளுக்கேண்மை
யின்பமுந்தன்பமாகிவீளைந்துமுன்னீர்ப்பப்போனூர். (எஅ)

சண்பையர்தலைவர்தாமுமனையராய்த்தம்பின்செல்லு
நண்புடையவரைநோக்கிநம்மிடத்தன்புநீங்காப்
பண்பினராகிநீறுபாதுகாத்தீசன்கீர்த்தி
மண்படவாழ்மீனீதுமறுக்கன்மினின்மினென்றார். (எக)

ஆளுடைப்புகலிவேந்தராணமொழிமறுக்கவஞ்சித்
தாளுடைப்பதுமச்செந்தாடலையுறப்பணிந்துமீண்டு
வாளுடைத்தானைத்தென்னன்மதுரையில்வந்தான்கஞ்சத்
தோளுடைச்சிங்கமன்னர்சோழர்கோனுடுக்கார். (அ0)

(எஙூ) புயலை - மேகத்தை. (எசி) கொற்றவன்-கூன்பாண்டியன். (எகி) கலுழன் - கருடன். (எசு) இறைகொண்டு - தங்கி. (எஎ)வட புலத்து - வடதேயத்து. (எஅ) ஆளு - நீங்காத. (எக) மண்பட-பூமியின்கலிய. (அ0) தானை - சேனை.

ஞானமாமதநீர்சோரஞானசம்பந்தரென்னு
மானமாயானைவந்துகடம்பமாவனத்திற்றுன்னு
மூனமாஞ்சமணரென்னுந்தருக்களையொடித்துவெண்ணீ
ரூனமாப்பூழியள்ளித்தூற்றியதவனியெங்கும். (அக)

கலிநிலைத்துறை.

ஆதியாலயத்தடலைகொண்டாழிசூழ்காழிச்
சோதிவேதியர்பாண்டியன்சுரந்தணித்துடலிற்
பேதியாதகூனிமிர்த்தலாற்பிறங்குகற்பாதிப்
பூதியாவினுஞ்சிறந்ததவ்வட்டில்வாய்ப்பூதி. (அஉ)

சம்மணரைக் கழுவேற்றியபடலம் முற்றிற்று.

ஆ படலம் - எஉ - க்கு திருவிருத்தம் - ஈஉ ருடு.

அறுபத்துநான்காவது,

வன்னியுங்கிணறும் இலிங்கமுமழைத்தபடலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சென்னிவெண்டிங்கண்மிலைச்சியமதுரைச் சிவனருளடைந்த சம்பந்தர், துன்னிருஞ்சமணைக்கழுமுனையேற்றித் துணித்தவாறி சைத்தனம்வணிகக், கன்னிதன்மன்றற்கரியினைமாற்றுள் காணவக் கண்ணுதலருளால், வன்னியுங்கிணறுமிலிங்கமுமாங்குவந்தவாறெடு த்தினியுரைப்பாம். (க)

பொன்மலர்க்கைதைவேலிசூழ்வேலைப்புறத் தொருபட்டினத் துள்ளான், மின்மணிக்கொடும்பூணெருகுலவணிகன்வேறுவேறும்ப லசெல்வத், தன்மையிற்சிறந்தோன்மகவிலஞ்சித்தன்மனக்கினிய தோர்காட்சி, நன்மனைக்கொடியோடறம்பலபுரிந்தோர்நகைமதிக் கொம்பையீன்றெடுத்தான். (உ)

அத்தனவணிகற்குரிய நன்மருகனவன்முதற்கடமண முடித் தோன், முத்தமிழ்மதுரைப்பதியுளானவற்கேமுறையினஞ்ஞற்றுநா ன்பயந்த, வித்தகமயிலைக்கொடுப்பவென்றனையவியற்குலவணிகர் கோன்றன்னை, டொத்தபல்கிளைஞர்யாவருமறியவுணர்த்திஞன்சி லபகலொழிய. (ஈ)

(அக) மாப்பூதி - சிறந்தபுழுதி. (அஉ) அடலை - சாம்பல், விபூதி. (க) மிலைச்சிய - அணிந்த. (உ) வேலைப்புறத்து-கடற்கரையில். (ஈ) கிளைஞர் - உறவினர்.

ஊழ்வினைவலியாலாருயிரிழந்தானுயிர்க்குடம்பனையதன்கற்பின்
சூழ்கதிர்மணிப்பூண்மனைவியுமிறப்பத்துணிந்தனளவரிருவோர்க்கு
மாழ்கடற்கிளைஞர்செயத்தகுகடன்களாற்றியச்செய்தியைமதுரை
வாழ்தருமருகற்குணர்த்துவாளெலிவித்தனர்மருமகன்வாங்கா.(அ)

தன்னருண்மாமன்றுஞ்சிஞன்கூடத்தாரமுந்துஞ்சியதிப்பா
லன்னவர்க்களவின்றுகியதனமுண்டவனனிகாண்மகவின்றிப் [ய
பின்னொருபெண்ணைப்பெற்றனனவளைத்தனக்கெனப்பேசிஞனை
கன்னியைமணந்துசெல்கெனமுடங்கற்கழறியபாசுரந்தெரியா. (இ)

வீழ்ந்தனன்றரைமேற்புரண்டனனுயிர்ப்புவீங்கினன் விழிப்பு
னல்வெள்ளத், தாழ்ந்தனன்விம்மூற்றம்மவோவென்றென்றரற்றினன்
கிளைஞர்நட்படைந்து, வாழ்ந்தவர்தழுவத்தழீஇத்தழீஇக்கரைந்
தான்மற்றவர் தேற்றிடத்தெளிந்து சூழ்ந்தவெந்துயர்நீத்தொருதலை
மாமன்றொன்னகர்க்கேகுவாண்முணிந்தான். (உ)

அங்குளகிளைஞர்சிலரொடுங்கூடியருங்கடிமதுரைநீத்தேகிப்
பொங்கிருங்கழிசூழ்பட்டினங்குறுகிப்புகுதுவான்வரவறிந்தங்குத் [க
தங்குதங்கிளைஞர்வினவநேர்வாரைத்தழீஇத்தழீஇச்செலவிடுத்தேகி
கொங்கிவர்தளவத்தாரிஞன்மாமன்கோயில்புக்கிருந்தனனுக. (ஊ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாள்சிலகழிந்தபின்னர்நாய்கரேறனையானன்ன
வாள்புரைகண்ணினூளைமதுரையிற்கொடுயோயங்கென்
கேளிர்முன்வேட்பலென்றுகிளர்ந்ததன்மாமனீட்டு
நீள்பெரும்பொருள்கண்மற்றுங்கைக்கொண்டுநெறியிற்செல்வான்.

வழிவிடவருவார்தம்மைநிறுத்திப்பின்மதுரைமூதூர்க்
கெழுதருசுற்றத்தாரைமுன்சென்மினென்றுபோக்கித்
தொழுபரிசனமுந்தானுந்தோகையும்வைகலொன்றிற்
கழிவழியரைமேற்பெய்தகாவதமாகப்போவான். (ஈ)

வெங்கதிர்வேலைசெல்லும்வேலவந்தணையுமுன்ன
மிங்கிருந்தொழிகமென்னுப்புறம்பயமூதூரெய்தி
யங்கிறைகோயின்முன்னிக்கூவனீராடியங்குத்
தங்கியவன்னிமாடேபோனகஞ்சமைத்துண்டெல்வாய். (உ0)

(அ) ஊழ்வினை - போகூழ். (இ) நனிநாள் - வெகுகாலம். (உ)உயிர்ப்பு - பெருமூச்சு. (ஊ) அருங்கடி - அரியகாவல். (அ) கேளிர் - சுற்றத்தார். (ஈ) வைகலொன்றில் ஒருநாளில்.(உ0) முன்னி-அடைந்து.

மலைவைத்தசிலையான்கோயின்மருங்கொருபடியினும்பர்த்
தலைவைத்துத்துயிலுமெல்லைவிதிவழிச்சாரவந்தோர்
கொலைவைத்தவிடவாய்நாகங்கடித்ததுகொதித்துமீண்ட
விலைவைத்தகொடும்பூணுய்கன்விடந்தலைக்கொண்மொய்ந்தான்.ககக

அங்குளபரிசனங்களாவலித்திரங்கிச்சூழக்
கொங்கைகள்புடைத்துச்சேடிக்குற்றீடைமகளிரேங்கச்
சிங்கவேறனையாளுகந்தீண்டிடாசொதுங்கிப்போந்த
பங்கயமலர்க்கொம்பன்னுள்பாவைபோற்புறம்புநின்றுள். (கஉ)

கலிநிலைத்துறை.

ஆளியேறன்னவனரவின்வாய்பட்டதுமவிந்தது
மீளிவேலுண்கணுர்கைகுலைத்தழுவதும்விழுவதுங்
கேளிர்சூழ்ந்தயர்வதுஞ்சோர்வதுங்கண்டிளங்கிளியனுள்
வாளியேறுண்டதோர்மயலின்வீழ்ந்தயங்கினுண்மயங்கினுள். (கங)

வடிக்கணுட்செருகினவருகினவுயிர்ப்பழல்வாய்ப்படுந்
தொடித்தபூங்கோதைபோற்சோர்ந்ததாகங்கரஞ்சோர்ந்தன
வடித்தளிர்சோர்ந்தனகன்னியன்னப்பெடையன்னவ
ளிடிக்கெதிர்ப்பட்டுவீழ்ந்தாளெனக்கிடந்தனளென்செய்வாள்.(கச)

சாயும்பூங்கொம்பரிற்சூழ்ந்திறந்தான்புறஞ்சார்ந்தழூஉ
மாயமென்மகளிர்மீண்டன்பலுடைங்கைதன்னுவியும்
போயதேகொல்லெனமடியுறக்கொடுங்கையாற்புறந்தழீஇத்
தூயதூசெறிந்திளைப்பாற்றினுர்சிறிதுயிர்தோற்றவே. (கஞ)

மெய்கழிந்தின்னுயிர்மீண்டுதன்யாக்கையின்மெல்லவே
கைகலந்தாங்கிருகாலியங்குற்றனகண்களும்
பொய்கைநீலஞ்சிறிதவிழ்ந்தெனவலர்ந்தனபூவையை
மைகழிநாண்முதலுன்குநால்வேலியாய்வளைந்தவே. (கசு)

கையெறியுங்குழற்கற்றைசோருந்திரிகாலுளி
நெய்யெனக்கண்புனல்கொங்கைமுற்றத்துகெஞ்சுகும்
பையலாய்விடும்புறம்பார்க்குநாணெடுந்தளைப்படுஞ்சிறு
தெய்வந்தொட்டாளெனத்தேம்பிவிம்மாந்தொளிதேயுமால். (கஎ)

(ககக) கொடும்பூண் - வளைவான ஆபரணம். (கஉ) ஒதுங்கிப்போந்த - நடந்துவந்த. (கங) மீளிவேல்-பெருமைவாய்ந்த வேல். (கச) வடி - மாம்பிஞ்சின் பிளவு. (கஞ) ஆயம் - மகளிர்கூட்டம். (கசு) நீலம் - நீலோற்பலம். (கஎ) திரிகால்-திரியினின்றும் துளிக்கின்ற

வணங்கில்செல்வந்தழீஇப்பிறந்தநாடொட்டொருவைகலு
மணங்கெனக்கனவிலுங்கண்டிலாளன்பன்மேல்என்பெ
லிணங்குதன்னுருவமாய்நிறைவரம்பிற்றெனவிருந்தொர்பெண்
ணணங்குகாய்விட்டழுதாலெனப்புலம்பலுற்றாளரோ. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்னுயகனேயோவென்னிருகண்மணியேயோவென்னேயீன்றுன்
றன்னுவியன்னதனிமருகாவோமுருகாவோதாரார்மல்லே
மன்னுவோவணிகர்குலமணியேயோவிடவரவின்வாய்ப்பட்டாயோ
வுன்னுகநிழலானவென்னேவிடுத்தெவ்வண்ணமொளிப்பதேயோ.()

பொன்னுட்டின்மடவாரைப் புணர்வதற்கோ நம்மளகாபுரத்து
வேந்தனன்னுட்டின்மடவாரைமணப்பதற்கோவுனக்கடித்தநாகர்
வேந்தன், றன்னுட்டின்மடவாரைத்தழுவுதற்கோவென்னுவித்தலே
வாவென்னே, யிந்நாட்டிலிருத்தியேனேவுஞ்சித்துப்போயினவாறெ
ன்னேயென்னே. (உ0)

தென்னுலகிற்புகுந்தனேயோபணிந்தனேயோ மாதுலனேத்தே
வியோடுந், தன்னிருதோளுறவாரத்தழுவினனேனானுமுடன்சார்ந்
தேனுகி, லென்னுளியகுரவரையுங்கண்ணுரக்காணேனேவெனேயீங்
கிட்டாய், பின்னுளியபரிசனமுங்கைவிட்டாய்தனிப்போயென்பெற்
ருயையா. (உக)

வரிசைமருமகனரவால்விளிந்தநானறைபோயமனத்தோ
டிங்குப், பரிவுறலுமெனேப்பயந்தார்நோற்றபயனன்ருகப் பலித்த
தேயோ, பெரிதவிக்கட்கலக்கங் காணுமுனிறந்தன்ரே பிழைத்
தாரந்தோ, வரியதிலுமரியபயனிதுவன்ரேவெவர்பெற்ரரவர்போ
லம்மா.

உன்காதன் மாமனெனேப்பயந்தவன்றேயுறவறியவுனக்கேபே
ரிப்,பின்காதன்மனேவியொடு முயிரிழந்தான்யானுமத்தப் பெற்றியா
லே, யென்காதலுயிர்போகவெற்றுடம் போவிருக்கு முடனிறப்பே
னென்னுத், தன்காதற்றுணையிழந்தவன்றிலெனவிருந்தழுதாடமிய
ளாளுள். (உங)

(கஅ) வணங்கில்செல்வம் - குறைவற்ற பெருஞ்செல்வம். (கக) முருகன் - கட்டிளமையுடையோன். (உ0) பொன்னுட்டின் - சுவர்க்கத்திலுள்ள. (உக) தென்னுலகம் - பிதிருலகம். (உஉ) அறைபோதல் - ஒட்டையாதல். (உங) உறவு - சுற்றம்.

மேற்படி வேறு

நன்னகருறக்கநீங்கிநடுக்கமுற்றழுங்கக்காழித்
தென்னகர்ஞானச்செல்வர்சிவனகர்தொறும்போய்ப்பாடி
யந்நகரடைந்தாரங்கோரணிமடத்திருந்தார்கேட்டீ
தென்னெனவாள்விட்டாய்ந்துகோயிலினிடைவந்தெய்தி. (உச)

கன்னிநீயாரையுற்றதென்னெனக்கன்னிதாழ்ந்து
தன்னருமரபுமீன்மூர்தம்மையுமருகற்கென்றே
யுன்னினர்மன்றல்பேசியிறந்தமுமையிரண்டிலே
டிங்நெறியடைந்தீங்குற்றநிகழ்ச்சியுமெடுத்துச்சொன்னாள். (உடு)

தந்தையுந்தாயுமன்னூர்தமியளாயிரங்கும்பேதைப்
பைந்தொடியாவிகாப்பான்பாம்புகோட்பட்டான்மாடே
வந்தவளுகமெல்லாமருந்துருவாகும்வண்ணஞ்
சிந்தைசெய்தருட்கண்வைத்தார்குதித்ததுதீவாய்நஞ்சம். (உசு)

எழுந்தனனுறங்கினுன்போலிறந்தவன்யாருங்கண்டு
தொழுந்தகைஞானவேந்தைத்தொழுதனர்துதிசெய்தார்வத்
தழுந்தினர்கன்னியன்னமனையவளின்பத்தீர்ந்தேன்
பொழிந்தொருபுறத்தேகஞ்சம்பூத்ததோர்கொம்பினின்றாள். (உஎ)

தலைவனையிறந்தபோதுந்தனியுயிர்பெற்றபோதுஞ்
சிலைநுதல்காதன்மாமன்செல்வியாயிருந்துநீண்டா
நிலைமையுமன்புங்கற்பினீர்மையும்வியந்துநோக்கி
மலைமகண்ஞானமுண்டார்வணிகனைநோக்கிச்சொல்வார். (உஅ)

வருதிநின்மரபுக்கெல்லாமணியனையுன்றன்மாமன்
றருதிருவனையாளின்பஞ்சாருநாடென்பம்வந்து
பெருகுநாளன்றியென்றுன்மெய்தொடப்பெறுவளீண்டே
திருமணமுடித்துக்கொண்டுபோகெனச்செப்பலோடும். (உகூ)

செங்கணேறனையானையன்றிருமொழிதலைமேற்கொண்டு
பங்கயன்படைத்தசாதிநான்கையும்பாதுகாப்பீ
ரெங்குலவணிகரின்றிக்கரிகளுமின்றியீங்கே
மங்கலமுடிக்கும்வண்ணம்யாதெனவணங்கிச்சொன்னான். (ஈ0)

(உச) தென்னகர் - அழகியநகர். (உடு) மன்றல் - கலியாணம். (உசு) மருந்து - அமுதம். (உஎ) ஆர்வம் - இன்பம். (உஅ) சிலைநுதல் - வில்போன்ற நெற்றியையுடையாள். (உகூ) திருவனையாள் - இலக்குமிபோல்வாள். (ஈ0) பங்கயன் - பிரமன்.

கன்னியையீன்றஞான்றேயுனக்கென்றுன்காதன்மாம
னுன்னியதுறவினுள்ளாரறிவரேயுனக்கீதன்றி
வன்னியுங்கிணறுமிந்தவிலிங்கமுங்கரிகண்மைந்தா
விந்நிலவதுவைசெய்தியெம்முரைகடவாதென்றார். (ருக)

மாசறுமனத்தான்காழிவள்ளலேப்பணிந்துநீரே
தேசிகர்குரவர்நட்டோர்தெய்வமுங்கிளையுமென்னப்
பேசியவாறேவேள்விப்பெற்றியானிறீ இத்தான்வேட்ட
பாசிழையோடுதாழ்ந்துவிடைகொடெபரவிப்போனான். (ருஉ)

ஏவல்செய்யாயத்தாருமடியருமீண்டவீண்டிக்
காவல்செய்மதுரைமூதூர்குறுகித்தன்காதன்மாமன்
பூவையையணந்தவண்ணங்கேட்டங்குப்புடைசூழ்சுற்றம்
யாவருமுவப்பவின்புற்றிருந்தனனிளங்கோமன்னன். (ருங)

தன்பெருந்தனமுமாமனீட்டியதனமுமீட்டி
மன்பெருநிதிக்கோனென்னவாணிகம்பெருக்கிநாய்க
னின்புறுகாதலார்களிருவருமீன்றகாத
னன்பொருண்மகிழ்ச்சிசெய்யநலம்பெறவாழுநாளில். (ருச)

மூத்தவள்சிறுவர்சாலமூர்க்கராயுள்ளாரேனை
மாத்தளிரியலிளஞ்சோர்மைந்தனுண்டிவனுமன்ன
தீத்தொழிலுகமன்னசிறார்களுமல்லற்செல்வம்
பூத்தநீணியமத்தூடுபோய்விளையாடல்செய்வார். (ருடு)

மூந்தியமணட்டிமைந்தர்முகிழ்முலையிளையபாவை
மைந்தனையொருநாட்சீறியடித்தனர்வருந்தியீன்ற
சந்தணிமுலையாண்மாற்றுடனையரைவைதாளீன்ற
பைந்தொடிதானுஞ்சீறியிளையளைப்பழித்துவைவாள். (ருஎ)

[illegible]க்கசாதியார்மகள்யாவர்காணச்
[illegible]கான்கடிமணஞ்செய்துவந்த
[illegible]நனுக்காசைப்பட்டு
[illegible]யாயும்வீறும். (ருஏ)

யினையுடைய நல்லம்மான். (ருஉ)
ஆயத்தாரும் - தோழியர்கூட்டமும்.
குபேரனையொப்ப. (ருஙு) மூர்க்கர்-மூர
டகருணமுள்ள டர். (ருசு) முகிழ்முலை - அரும்பனையதனம்.
(ருஎ) சான்ரு - சாட்சியாக.

உரியவன் றீமுன்னுகவுண்ணவேட்டதற்குவேறு
கரியுளதாகிற்கூறிக்காட்டெனக்கழறலோடு
மெரிசுடவாடிச்சாய்ந்தவிணர்மலர்க்கொம்பிற்சாம்பித்
தெரியிழைநாணஞ்சாய்ப்பகின்றிதுசெப்புகின்றாள். (௹அ)

அரவின்வாய்ப்பட்டவைகலாருயிரளித்தஞானப்
புரவலரருளாலெங்கோன்புறம்பயநாதன்வன்னித்
தருவொடுகிணறுங்காணச்செய்தனன்சாறம்மூன்று
கரிகளுமுள்ளவென்றாள்கற்பினுலொப்பிலாதாள். (௹க)

மாற்றவணகைத்துநன்றுநன்றுகின்மன்றல்வேள்விக்
கேற்றனகரியேசொன்னுயிங்குமக்கரிகண்மூன்றுந்
தோற்றுமேலதுவுமெய்யேயென்றனடோகையோடும்
வேற்றுமையிலாதசாயலிளையவள்விழுமங்கூரா. (சo)

வெவ்வுயிர்ப்பெறியவில்போய்மெல்விரனெரிக்குங்கையா
லவ்வயிறதுக்கும்வீழுங்கண்புனல்வெள்ளத்தாழுங்
கொவ்வைவாய்துடிக்குநாணந்தலைக்கொளுங்கூசுமன்னு
தெய்வமேயாவாவென்னுமென்செய்கேன்சிறியேனென்னும். (சக)

தாதைதாயிறந்தவன்றேதையளாயிங்குப்போந்த
பேதையேற்காருண்டையபேதுறும்வணிகற்கன்று
மாதலுகிஞாதிவழக்கறுத்தூரிமையீந்த
நாதனேயதிலாள்வாய்நவையினிற்காத்தியென்னு. (சஉ)

அன்றிரவுண்டியின்றித்துயிலின்றியழுங்கிப்பின்னுட்
பொன்றிணிகமலவாவிப்புண்ணியப்புனறோய்ந்தண்ட
நின்றிழிவிமானக்கோயினிரம்பியவழகர்முன்னுச்
சென்றிருதாளில்வீழ்ந்ததன்குறைசெப்பிவேண்டும். (சங)

அன்றெனைக்கணவன்வேட்டவிடத்தினிலதற்குச்சான்றாய்
நின்றபைந்தருவுநீயுங்கிணறுமங்கிலையேயிங்கு
மின்றுவந்தேதிலாள்வாய்நவைதுடைத்தென்
பொன்றுவலென்றாள்கற்பின்புகழ்

அல்லலுற்றழுங்கிநின்றாள்பரிவுகலை
லெல்லையில்கருணைபூர்த்தியருளினு

(௹அ) வேட்டதற்கு - கலியாணஞ்செ-
புரவலர் - திருஞானசம்பந்தர். (சo) மாற்-
வெவ்வுயிர்ப்பு - ஊர்த்துவசுவாசம். (சஉ) த ...ய - தனிதவ
ளாய். (சங) அழுங்கி - வருந்தி. (சச) வேட்டது-மணஞ்செய்தது.

தொல்லையின்படியேயன்னஞ்சொல்லியகரிகண்மூன்று
மொல்லைவந்திறுத்தகோயிலுத்தரகுணபாலெல்லை. (சடு)

அன்னபோதிலையாண்மூத்தாட்கொண்டுபோயாலவாயெம்
முன்னவன்றிருமுன்முழ்ந்துகாட்டுவாண்முகிழ்செய்சென்னி
வன்னியீதிலிங்கமீதுகிணறிதென்மன்றற்சான்றுத்
துன்னியவென்றுள்கண்டாண்முடித்தலைதாக்கிநின்றுள். (சசு)

அவ்விடைத்தருவுநீருமன்றுபோலின்றுசான்று
மிவ்விடைப்பட்டவென்னவதிசயமெவர்க்குந்தேறுத்
தெய்வமுமெளிவந்தங்கைக்கனியினித்திருவிணஞ்ஞள்
கைவ்வசப்பட்டதென்றுற்கற்பினுக்கரிதேதம்ம. (சஎ)

மங்கைதன்கற்புமீசனிடத்தவள்வைத்தவன்பு
மங்கணனவட்குச்செய்தவருளையும்வியந்துநோக்கி
மங்கலநகராரெல்லாமகிழ்ச்சியுளாழ்ந்தார்முல்லைத்
தொங்கலான்முதுமணுட்டியொருத்தியுந்துன்பத்தாழ்ந்தாள். (சஅ)

மேதகுவணிகர்மூத்தவினைக்கொடியாளைப்பொல்லாப்
பாதகியிவளாமென்றுபழித்தனர்படிறுபேசிக்
கோதறுகுணத்திளைக்குடிப்பழுதுரைத்தாய்நீயென்
காதலியாகாயென்றுகணவனுந்தள்ளிவிட்டான். (சக)

அந்திலையிளையாள்கேள்வனடியில்வீழ்ந்திரப்பாளைய
வென்னதுகற்பையின்றுநிறுத்திளைளிவண்மாற்றுளன்
றன்னையிலாதேற்கன்னையாயிளைளிவளும்யானு
மின்னுயிருடல்போல்வாழ்வமெனத்தழீஇத்தம்மினட்டார். (கூ0)

உடம்பிளைலிரண்டேயன்றியுயிர்ப்பொருளிரண்டற்றுள்ள
மடம்படுமழுக்காறற்றுமைந்தருமனையராக
வீடம்படுமைவாய்நாகம்விழுங்கிரையொத்துத்தம்மி
ன்மி.ம்படுமன்புற்றின்புற்றிருவருமிருந்தார்மன்னே. (கூக)

கேள்வற்காயுளுமானைச்செல்வப்
கருமம்பீடும்பேறு
நம்புகழும்பல்க
ரனவீற்றிருந்துமன்னே. (கூஉ)

டசிகள்மூன்றும். (சசு)முன்னவன்-முத
ர-கையிலுள்ளபழத்தைப்போல. (சஅ)தொ
யையுடையான். (சக)கோதறு-குற்றமற்ற. கே
ள்வன்-நாயகன். (கூக) அழுக்காறு-பொறுமை. (கூஉ) ஆளு-நீங்காத.

பொன்னவிர்கமலம்பூத்தபொய்கைசூழாலவாயெம்
முன்னவன்விளையாட்டெல்லைகண்டியார்மொழியவல்லா
ரின்னமுமனவின்றென்பவென்குருநாதசாமி
சொன்னவாறுங்கட்கெண்ணெண்காதையுஞ்சொன்னேனம்மஃ இரு

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுதென்மலே மேலிருந்தமாதவத் தோனின்னருட்குருபர
ன்றனேயு, மன்றவன்றிருவாய்மலர்ந்தவாசகமுமருள்கனிந்தொழுக
வுள்ளடக்கித், தென்றமிழாலவாய்த்தனிப்பதியைச்சென்னிமேற்ப
ன்னிரண்டும்ப, ரொன்றவைத்திமையாவங்கயற்கண்ணியுடனுறை
யொருவனேநினைந்தான். (இச)

பரவசமடைந்துவழிகவர்ந்துண்ணும்பழிப்புல வேடர்போயொ
ளிப்ப, விருள்வெளிகடந்துதிருவருள்வழிச்சென்றெண்ணிலாச்சரா
சரமனேத்தும், புரைவறநிறைந்துகாட்சிகண்காண்பான்புதைபடத்
தனித்தபூரணமா, யுரையுணர்விறந்தவுண்மையானந்தவுணர்வினையு
ணர்வறவுணர்ந்தான். (இஇ)

வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடலம் முற்றிற்று.

ஆபடலம் - எஉ - க்கு திருவிருத்தம் - ஈஉக0.

அறுபத்தைந்தாவது,

அருச்சனைப்படலம்.

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கன்னிதன்வதுவைக் கரிகளாயிலிங்கக்கடவுளுங்க வைக்கருங்
கோட்டு, வன்னியும்படநீர்க்கூவலும்வந்தவழியிதுமதுரைநாயகனேச்
சென்னியில்வைத்தமுனிவனேப்பூசைசெய்துமாதவரொருங் கெய்தி
ப், பன்னிறமலர்தூஉயாலவாயானேப்பரவியபரிசதுபகர்வாம்

போதவானந்தத்தனிக்கடல்பருகும்புயல்பா
மாதவஞ்திமுனிவருமுலோபாமு
போதொசாந்தமான்மதந்தீபம்பு
மேதகுசிறப்பாலருச்சனே செய்துபி

(இஉ) என்குருநாதசாமி - எனது குரு மியார். (இச) தென்மலே - பொதிகைமலே; பறித்து. (க) வதுவை - கலியாணம். (உ) புயல் மம்மர்.

கொச்சகக்கலிப்பா.

கோட்டஞ்சிலைகுனித்தகூடற்பிராளுடல்
கேட்டஞ்செவிபடைத்தபேறடைந்தேங்கேட்டபடி
நாட்டங்களிப்பநறுமலர்தூஉய்க்கண்டிறைஞ்ச
வேட்டங்கள்யாங்களெனவோதினர்மெய்த்தவரே. (ூ)

என்றவறவோரெதிரேமுகமலர்ந்து
குன்றமடக்குங்குறுமுனிவன்கூறுவா
னன்றுமுனிகாளிதனேநானுள்ளத்தெண்ணியாங்
கொன்றமொழிந்தீரென்ரூன்பின்னும்வியந்தோதுவான். (ா)

பண்ணுன்மறைமுடியுந்தேரூப்பரசிவனே
யெண்ணுலளவிறந்தவெக்கலையாற்கண்டுமுளக்
கண்ணுலறியாதார்வீட்டின்பங்காண்பரோ
மண்ணுதியாரூறுநீத்ததனிமாதவரே. (ி)

அஞ்செவியிலூறுபடக்கேட்டபடியாலவாய்ப்
பஞ்சமுகச்சோதிப்பரனேப்போயர்ச்சித்து
நெஞ்சநெகக்கண்டுநினையாவழிநினைந்து
வஞ்சவினைவேர்களைவான்வம்மின்களென்ரூனே. (ீ)

மங்கலவோரைவருதினத்தில்வானிழிந்த
கங்கைபடிந்துலகநாயகனைக்கைதொழுது
புங்கவர்முன்சங்கற்பஞ்செய்தனுச்சைபூண்டொழுகி
யங்கவர்வாயாசிமொழிகேட்டகமகிழ்ந்தே. (எ)

ஐம்புலனுங்கூடற்பெருமானடியொதுக்கி
நம்பனுருவைநன்தெழுத்துநாவாடக்கைகூப்பித்
தம்புனிதசைவதவத்தெய்வத்தேர்மேற்கொண்
டெம்பர்வழிநடக்கலுற்ரூர்கணற்றவரே. (அ)

ர்கிருநீறுசண்ணித்த
மேனியினருட்புறம்புந்
குடைய
ாதுவார். (கூ)

, ஒன்ற - பொருந்த. (ஞ) மறைமுடி
ஞசமுகச்சோதி - ஈசானஞ்சிஐம்முகங்களே
(எ) புங்கவர் - தேவப்பிராமணர். (அ) நம்
பன் - சிவபெருமானை. (கூ) சண்ணித்த - பூசிய.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புண்ணியந்தழைக்குந்தெய்வத்தலங்களும்புலன்கள்வென்றோர்
நண்ணியவனமூன்றீர்த்தநதிகளுந்தவத்தோர்நோற்கும்
வண்ணமுநோக்கினோக்கிமலயமாமுனிவன்காட்டக்
கண்ணினிணைகளிப்பநோக்கிக்கைதொழுதிறைஞ்சிச்செல்வார். (கo)

சிறுகொளிலங்கைவேந்தைச்செகுத்திடவிராமன்பூசித்
தாறணிவிரூபக்கண்ணனருள்பெறுதலமீது * உம்ப
ரேறிவீழ்ந்திறந்தோர்முன்னமெண்ணியதெண்ணியாங்கே
மாறியபிறப்பினல்குமலையிதுகாண்மின்காண்மின். (கக)

* விரூபாக்கம். திருப்பருப்பதம்.

சுரபிநீள்செவியிலிங்கச்சுடருருவாயினுன்ற
னிரவினிற்றிருத்தேர்மன்றனடக்குமூரிவ்வூர் * மேலை
யுரவுநீர்க்கரைத்தேண்மாதத்துயர்ந்தகார்த்திகையிற்றேரூர்ந்
தரவுநீர்ச்சடையான்வேள்விநடக்குமூரய்வூர்காண்மின். (கஉ)

* திருக்கோகர்ணம். திருவஞ்சைக்களம்.

விற்பயிறடக்கைவேடன்மென்றவூன்பாகம்பார்த்தோன்
பொற்புறுகிரியீது * அண்டம்புழைபடவிடத்தாணீட்டி
யற்புதன்காளிதோற்கவாடியதிது * மாநீழற்
கற்புடையொருத்திநோற்கும்பிலமிதுகாண்மின்காண்மின். (கங)

* திருக்காளத்தி. * திருவாலங்காடு. திருக்காஞ்சீபுரம்.

திருமறுமார்பன்காவற்செயல்பெறவரனேப்பூசித்
திருகரமுகிழ்த்துநேர்நின்றேத்திடமிதுவாம் * ஒத்தி
ணுரைவரம்பகன்றமுக்கணுத்தமன்சந்தைகூட்டி
யருமறையறவோர்க்கோதுவித்திடமதனைக்காண்மின். (கச)

* திருமாற்பேறு. திருஒத்தூர்.

அடிமுடிவிலங்கும்புள்ளுமளந்திடாதண்டங்கீண்டு
நெடியசெருப்புநின்றநிலையிது * முள்வாய்க்கச் -
வடிவெடுத்திருவர்நோற்குமலையிது ...
யிடையுறமுன்னும்பின்னுமிரு...

* திருவண்ணுமலை. திருக்க

(கo) வண்ணமும் - தன்மையும்.
வணன். (கஉ) சுரபி-பாற்பசு. (கங) வேட
திருமறுமார்பன் - ஸ்ரீவச்சமென்னுமறுவி... ...யையருளினீங்கியது,
விலங்கும்புள்ளும் - பன்றியுமன்னமும். (கசு) பவமறு - பாவமற்ற.

அவுணரிற்கள்வனெனவந்தகற்காய்ந்தமூன்று
புவனமுங்கவலைதீர்த்தபுண்ணியன்புரமீதாகும் *
கவலரும்புரங்கண்மூன்றுந்தழலுதற்றிருக்கண்சாத்திப்
வமறுமூவரன்பிற்பட்டவன்பதியைக்காண்மின். (கசு)

யெஞானனந்ததத்துவமசைவற்றூடு
யபரமானந்தநிறையருண்மன்றமீது *
முத்தியங்குதித்தோரெய்தும்பதியது * முதனூலுன்கும்
பத்தியிற்பூசித்தேத்தும்பதியிதுவாகும்பார்மின். (கள)

* சிதம்பரம். * திருவாரூர் திருமறைக்காடு.

பிரமன்மான்முதலாந்தேவர்பிரளயத்திறவாவண்ணம்
பரமனூர்தோணியேற்றும்பன்னிருநாமம்பெற்ற
புரமிது * சடாயுசம்பாதிகள்பெரும்பூசைசெய்ய
வரமளித்திருணீங்குமருந்துறைபதியீதாகும். (கஅ)

திருத்தோணிபுரம். புள்ளிருக்கும்வேளூர்.

மதிநுதலிமயச்செல்விமஞ்ஞையாய்வழிபட்டேத்து
மிதுதுலாப்பொன்னித்தானம் * எம்மனோர்மூன்றுகோடி
மதிபெறுமுனிவர்வந்துவழிபடுமூதூரீது * இப்
பதியறக்கடவுள்பூசைபண்ணியதானங்காண்மின். (கக)

* மாயூரம். * திருக்கோடிகா. தருமபுரம்.

கோடுநான்குடையவேழந்தானவன்குறைத்தகோட்டைப்
பாடறநோற்றுப்பெற்றபதியிது * மாலைசாத்துந்
தாடகைமானங்காப்பான்முழ்ந்துபூங்கச்சிட்டூர்க்கும்
பீடுறுகலியனன்பினிமிர்ந்தவெம்பிரானூரீதால். (உ0)

* திருவெண்காடு. திருப்பனந்தாள்.

கரிமுகத்தவுணற்காய்ந்தகரிமுகத்தண்ணல்பூசை
புரிசிவநகரமீது * தாரகற்பொருதுசெவ்வே
ர்ச்சித்தது * ஆர்க்கீழ்மணற்குறியான்பாலாட்டிப்
சேய்வளம்பதியீதாகும். (உக)

டி. திருச்சேய்ஞலூர்.

ா பொருள். (கஅ) பிரளயத்து - வுள் - தருமதேவதை. (உ0) கோடு ஊழிகாலதது. நான்குடைய வேழ பு நான்குடைய ஐராவதமென்னும் யானை. (உக) கரிமுகத்தவுரான் - கஜமுகாசுரன்.

கறுவிவீழ்காலன்மார்பிற்சேவடிக்கமலஞ்சாத்திச்
சிறுவனுக்காயுளீந்த சேவகப்பெருமான்மேய
வறைபுனற்பழனமூதூரது * விதுவானேதந்த
குறையுடற்போர்வைபோர்த்தகொற்றவன்கோயில்காண்மின். உஉ

* திருக்கடவூர். திருவழுவூர்.

பங்கயக்கடவுளீந்தபரிகலம்வாங்கிக்கொண்ட
வங்கணனிடமீது * ஆடலனங்கனையமுதுசெய்த
செங்கணுனிருக்கையீது * மேழகச்சென்னிதன்னை
மங்கலமாமற்கீந்தமருகனுரிருக்கைகாண்மின். (உங)

* திருக்கண்டியூர். * திருக்குறுக்கை. திருப்பறியலூர்.

திண்டிறலவுணன்றன்னைப்பெருவிரற்றீட்டுநேமி
யுண்டிடவிருந்தாக்கொண்டோனுறையதாம் * ஒருத்திமன்றல்
கண்டிடுகிரியாய்க்கூவல்கண்ணுதலிலிங்கம்வன்னி
யெண்டிசையறியக்காட்டநின்றிடமதனைக்காண்மின். (உச)

* திருவிற்குடி. திருப்புறம்பயம்.

சாமகண்டத்தன்றன்னைத்தானருச்சித்ததென்னர்
கோமகன்பிரமசாயைகுறைத்ததிப்பதியாம்கங்கை
மாமகந்தோறும்வந்துவந்துதற்படிந்தோர்விட்டுப்
போமகம்போகமூழ்கும்புனிதநீர்ப்பதியைக்காண்மின். (உரு)

* திருவிடைமருதூர். கும்பகோணம்.

குருமொழிதந்தைக்கீந்தெங்குருவுறைமலையீது * எங்கோன்
கருமுகில்வண்ணத்தண்ணல்கண்ணிடந்தடியிற்சாத்தப்
பொருவிறலர்ழியீந்தபுரமிது * நந்தியெந்தை
திருவுருவடையநோற்றதலமிதுதெரிந்துகாண்மின். (உசு)

* சுவாமிமலை. * திருவீழிமிழலை. திருவையாறு.

முடங்குகாற்சிலந்தியானைமலைமகண்முளரிநாட்டத்
தடங்கடல்வண்ணனேற்றதவநகரிது * முச்

(உஉ) சிறுவனுக்கு - மார்க்கண்டே
ண்கலம். (உச) திண்டிறல்அவுணன் - பம் பயனையுடைய
சலந்தராசுரன். (உரு) சாமகண்டத்தவிரூ பம்பதம் பாடுங் கழுத்
தனரானசிவபெருமான். (உசு) விறல்-வெற்றி.

மடங்கலேறனையானுமவரையிது * குடைந்தோர்பாவ
மடங்கலும்பருகும்பொன்னியாறிதுகாண்மின்காண்மின். (உஎ)

* திருவானைக்கா * திரிசிரபுரம். காவேரியாறு.

இந்திவெண்முத்தாரமெனக்கிடந்திலங்குஞ்சென்னி
மன்னவனுடதென்பதமிழறிவைகைப்பேர்யா
றந்நதிதுறக்கமண்மேல்வழுக்கிவீழ்ந்தாங்குத்தோற்றித்
தென்னவனுடசேய்த்தாதெரிவதேகாண்மினென்றான். (உஅ)

பொங்கர்மென்புதல்களென்னப்பொருந்திசிறுகாலென்னக்
கொங்கலர்தடஞ்சிற்றாறற்குழியெனப்பழனஞ்சில்லி
தங்குமென்பாத்தியென்னத்தாழைதாழ்சிறுபுல்லென்னப்
பைங்கூலக்கதலிமஞ்சட்பாத்திபோற்றோற்றக்கண்டார். (உக)

பன்னிறஃராடமாலையுபரிகைப்பந்திசெய்குன்
றன்னம்வெண்குருகுசெம்போத்தழகுபைங்கிள்ளைமஞ்ஞை
யின்னபுள்வேறுவேறுயொழுங்குபட்டிருப்பதொப்ப
மின்னுபூங்கொடியப்புட்கள்சிறகெனவிதிர்ப்பக்கண்டார். (ஙo)

மேற்படி - வேறு.

கண்டுநாட்டுநகர்வளங்கணடந்துடந்துகண்களிர்ந்
தண்டுமீளவகல்விசும்பாரெழுகிவலமாவருமுனிவர்
விண்டுழாவுங்கொடுங்குன்றும்*தளிப்புத்தூரும்*விரிபொழில்வாய்
வண்டுபாடன்மயிலாடல்பயிலாடானைவளநகரும். (ஙக)

* பிரான்மலை. * திருப்புத்தூர். திருவாடானை.

சரதவேதம்பரவுபுனவாயினகரும் * தவசித்த
ரிரதவாதஞ்செய்துசிவனுருவங்கண்டவெழினகரும் *
வரதனுகியரனுறையுங்கானப்பேரும் * மலைமகளை
விரதயோகநெறிநின்றுமணந்தார்சுழியல்வியனகரும். (ஙஉ)

* திருப்புனவாயில். * திருப்பூவணம்.
* காளையார்கோயில். திருச்சுழியல்.

மறவாளிலங்கையிறைமகனேவதைத்தபழியான்மருண்டரியன்
றறவாணேமியளித்தவனேயர்ச்சித்தகன்றவணிநகரும்*

(உஎ) மூச்சென்னி - திரிசராவென்னு மசுரன். (உஅ) சென்னி மன்னவன் - சோழராசன். (உக) பொங்கர் - சோலை. (ஙo) செம்போத்து - கள்ளிக்காக்காய். (ஙக) ஆரெழுகி-வழிச்சென்று. (ஙஉ) சரதவேதம் - உண்மை வேதம்.

நிறவாண்முத்தும்வயிரநிரையும்பொன்னும்விளைபொருகைத்
தறைவாய்ப்பிறவாக்கடவுள்வேய்வயிற்றிற்பிறந்ததொன்னகரும்.

* திருவிராமேச்சரம். திருநெல்வேலி.

துளபக்குன்றைக்கொன்றைமுடிக்குன்றமாக்குந்தொன்னகரும் *
அளகைப்பொறித்தகொடியிளையோன்மானேர் நோக்கிஞானமகள்
புளகக்குன்றைமணந்துமுதலிருந்தபொருப்பும் * போர்விசயன்
வளவிற்ருக்கவடுக்கிடந்தமுடியோன்மேயவளநகரும். (நுசு)

* திருக்குற்ருலம். * திருப்பரங்குன்றம். திருவேடகம்.

கொண்டல்படியுந்திருவாப்பனூருந் * தொழுதுகுளிர்திரைக்கை
வண்டுபடியுங்கமலமுகைவைகைப்பிராட்டியெதிர்வணங்கிக்
கண்டுபணிந்துதிசையெட்டும்விழுங்கியண்டங்கடந்துலக
முண்டநெடியோனெனவுயர்கோபுரமுன்னிறைஞ்சியுள்புகுதா.

* திருவாப்பனூர்.

மறுகுதோறும்பணிந்தெழுந்துவளைந்துவளைந்துபொற்கோயில்
குறுகிவிதியாற்பொற்கமலங்குடைந்துசெய்யுங்குறைநிறுவி
யுறுதிபெறவைத்தெழுத்தெண்ணியுற்றுமதத்துநாற்றடந்தோட்
சிறுகண்ணைவங்கரத்துச்சித்தியானேயடிவணங்கா. (நுசூ)

மும்மையுலகுநான்மறையுமுறையாலீன்றவங்கயற்க
ணம்மையடிகண்முடியுறத்தாழ்ந்தன்புகொடுத்தின்னருள்வாங்கி
வெம்மையொளிகான்மணிக்கனகவிமானத்தமர்ந்ததனிச்சுடரின்
செம்மையடித்தாமரைவேணிச்சிரமேன்மலரப்பணிந்தேத்தா.(நுஎ)

மேற்படி - வேறு.

அன்றிருபோதுமுண்டிதறந்திராவறுக்குந்தீவா
ளென்றெழுமுன்னீராடிநியதிகளியற்றியைந்தும்
வென்றுளத்தன்புபாயவிளைமுழுமுதலேப்பார்மேன்
மின்றிரண்டென்னநின்றவிமானமீதிருப்பக்கண்டார். (நுஅ)

வாசமஞ்சனந்தேன்கன்னல்பைங்கனிமறுவிலானேர்
தாசறுமமுதமைந்துதென்மலையாரம்வாசம்

(நுசு) அரி - இராமன். (நுசு) துளபக்குன்றை - துளபமாலையணிந்த திருமாலே. (நுநி) கொண்டல் - மேகம். (நுசு) மறுகுதோறும் - வீதிதோறும். (நுஎ) மலர - விளங்க. (நுஅ) ஞாள் என்று - ஒளியுடைய சூரியன்.

வீசுதண்பனிநீர்வெள்ளமான்மதம்விரைமென்போது
தூசணிமணிப்பூணல்லசுவையமுதின்னதாங்கா. (நக)

சதவுருத்திரத்தாலாட்டிமட்டித்துச்சாத்திப்பூட்டிப்
பதமுறமனுவாலட்டபாலமுதருத்திப்பஞ்ச
விதமுறுவாசம்பாகுவெள்ளிலையளித்துப்போக
முதவுறுதாபதிபாதிகள்பலவுவப்பகல்கா. (சO)

ஐம்முகச்சைவச்செந்தீயகத்தினுந்துவையார
நெய்ம்முகந்தருத்திப்பூசைநிரப்பிநால்வேதஞ்சொன்ன
மெய்ம்மனுநூற்றுப்பத்தான்மூவிலைவில்லநீலங்
கைம்மலரேந்திச்சாத்திக்கடவுளையுவப்பச்செய்து. (சக)

வாசமஞ்சனதீபாதிமந்திரமலர்கைக்கொண்டு
பூசையின்பயனேமுக்கட்புண்ணியன்கையினல்கி
நேசநெஞ்சுறக்கண்கணிறைய நீரூறிச்சோர
வீசனேயிறைஞ்சியாருமஞ்சலித்தேத்தல்செய்வார். (சஉ)

எ.ஸ்ரீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பழியொடுபாசமாறுகெடவாசவன்செய்பணிகொண்டவண்டசரண
ம், வழிபடுதொண்டர்கொண்டநீலகண்டுவெள்ளிமணிமன்றுளாடிச
ரணஞ், செழியன்விளிந்திடாதபடிமாறியாட றெளிவித்தசோதிசர
ண, மெழுகடல்கூவிமாமியுடன்மாமலுடவிசைவித்தவாதிசரணம்.

வெங்கரியாவிசோரநரசிங்கவாளிவிடுவேடறுசரணம்
புங்கவர்தேறவாதிமறையுட்கிடந்தபொருளோதுபோதசரணம்
வங்கமதெறிவேலைமகரம்பிடித்தவலையாண்மருளசரணங்
கங்கணநாகம்வீசிநகரெல்லைகண்டகறைகொண்டகண்டசரணம்.

மைத்தனிலாழிமேருமகவானகந்தைமடிவித்தநித்தசரணஞ்
சுந்தரநாமவாளிபணிகொண்டுகினிலிகாகைவென்றவீசரணம்
வெந்திறன்மாறன்முன்கலுருவானகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்திமுயல்வித்தயோகிசரணம்.

திருமணிமைந்தன்மைந்தன்முடிசூடவிற்றதிருமல்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழக்குவிலிபேசுமைந்தசரணங்
குருமொழிநந்தநாரைகுருவிக்குவீடுகுடிதந்தவெந்தைசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதிராபுரேசசரணம். (சசு)

விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டுவிளையாடுமண்ணல்சரணங்
குரத்தியைநச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாகைவேலசரணங்
கருத்திசைபாணஞளினிசைபாடிமாறுகளைவேதகீதசரண
நரித்திரண்மாவைமீளநகரங்கலங்கநரிசெய்தநம்பசரணம். (சஎ)

(நக)கன்னல் கரும்பு.(சO)ஆட்டி-அபிஷேகஞ்செய்து. (சக)தூடி வை-சிருக்கு.(சஉ)மஞ்சனம்-அபிஷேகசலம். (சங) பாசமாறு-பாசப் பகை.(சச)புங்கவர்-முனிவர்.(சஇ)கிள்ளி-சோழன். (சசு)திருமணி-அழகியஅரதனம். (சஎ) குரத்தியை - ஆசாரியன்மனைவியை.

மூற்பகலா திரண்டுசிறுபன் றியுண்ணமுலேதந்தவன்னேசரணம்
பொற்புறுமாயவாவையடலேறுகொண்டுபொருதட்டசிட்டசரணம்
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமட்டமூர்த்திசரணங்
கற்பினெருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம். (சஅ)

அளவைகளாலும்வேதமுதனூல்களாலுமயன்மாயனாலுமளவாக்,களவையுனக்குநாமகுணசின்னசாதிகளிசெய்தியில்லையவையு, முளவெனயாமறிந்ததுதிசெய்யவேகொலுகஞ்செயன்பினெளிதாய்,விளையுருண்மேனிகொண்டிவ் வறுபத்துநாலுவிளையாடல்செய்தபடியே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எனத்துதித்தவசிட்டாதிமிருடிகளேக்குறுமுனியையெறிதேனீ,பவனத்துறையுஞ் சிவபெருமானிலிங்கத்தின்மூர்த்தியாய்வந்துநோக்கிச், சினத்தினேவென்றகந்தெளிந்தீர்கீர்செய்தபூசைதுதிதெய்வத்தான, மனத்தினுக்குமனத்துயிர்க்குநிறைந்தநமக்கானந்தமாயிற்றென்ஞ.

சிறந்தவருள்சுரந்துகுறுமுனியைவருகென்றுகரஞ்சிரமேல்வைத்துப், புறந்தடவியெமையொப்பாய்நீயேகின்கற்புடையபொலங்கொம்பன்ஞ,ளறந்தழையுமுமையொப்பாளாதலினுமையொப்பாரகிலத்தியாரே,நிறைந்ததவம்புரிந்தோனுக்தவத்தாலுதித்தோனீயேயன்றே.

உனக்கரியவரினியாந்தருவதெவனுனக்கரிதாவொன்றுங்காணே, மெனக்கருணைசெய்திலிங்கத்திடையிச்சைவடிவாய்ச்சென்றிருந்தாஞகத்,தனக்கரியவரலர்குஞ்சிவலிங்கந்தன்பெயராற்றாபித்தான்றன், னினக்கருணைசிட்டாதிமுனிவர்களுந்தம்பெயரானிலிங்கங்கண்டார்.

எத்தியருச்சனைசெய்துனேவிலரிதாயன்பிலெளியவட்ட, மூர்த்தியையங்கயற்கண்ணியன்பினேமுப்போதும்போய்முடிதாழ்ந்தின்பம், பூத்தமனத்தினராகிக்கருவித்தேன்பொதிந்தசிறுபுட்போலந்த,மாத்தலனில்வசிட்டாதிமுனிவர்தபோவனஞ்செய்துவதிந்தார்மன்ஞ.

அருச்சனைப்படலம் முற்றிற்று.

ஆபடலம் - எச - க்கு திருவிருத்தம் - கூகூகூ.

திருவாலவாயிக்காண்டம் முற்றிற்று.

திருவிளையாடற்புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பரஞ்சோதிமுனிவர் திருவடிவாழ்க.

(சஅ) மன்றல் - கலியாணம். (சக) அளவை-அளந்தறியும் பிரமாணம்.(சக)அளவை-காண்டல்முதலிய பிரமாணங்கள். (ஞ0)நீபவனத்து - கடம்பவனத்து.(ஞக) பொலங்கொம்பு-பொன்னங்கொம்பு. (ஞஉ) கருணைசெய்து - கிருபைசெய்து. (ஞங) சிறுபுள் - தேனீ.

பரிசோதன பத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
ஊ	உசை	க	மாலவாய்ம்	மாலவாய்ப்
ஈக	க	சை	பாண்டிய	பாண்டி
கஉ	க0	ங	மூன்னீர்த்	மூங்நீர்த்
உ0	ஙிஅ	உ	மெண்ணுருவாக்	பெண்ணுருவாக்
,,	ஙிஈ	ங	பொலிவுங்	பொலிவு
உஙி	உஅ	ஙி	யெய்யுமால்	பெய்யுமால்
ஙிஙி	உ	சை	சைவலிக்கம்	சைவலிங்கம்
அக	ஈஎ	ங	தகலங்	தகலத்
ஊசு	சை	உ	மகலிலா	மகவிலா
ககசு	உஅ	உ	வேமுழங்கிப்	வேழமுழங்கிப்
ககக	சசு	சை	தனன்	தனண்
கஉக	க0ஙி	க	மாயைவன்	மாயவன்
கச0	கஅக	க	டொப்ப	டப்ப
கசக	கஅங	க	கககஙிழ்ந்	ககமகிழ்ந்
கசசு	உ0	ங	வம்லத்	வம்பலத்
கஙிசு	எ	உ	வுருத்திரந்	வுருத்திர
கஎசு	சசு	க	பண	மண
உ0ச	ஙஈ	உ	மல்கு	நல்கு
உகச	ஙிஅ	உ	புடித	படிக
உகஎ	அ0	க	வடிவமாத்	வடிவமாந்
உகஎ	அங	ஙி	செர்ல்வார்	சொல்வார்
உஉ0	சை	ங	தா ழ்த்து	தாழ்ந்து
உஙஅ	ஙஉ	க	மூர்ச்ஞி	மூர்ச்சி
உச0	சக	உ	சிம்புகளாய்	சிம்புளாய்
,,	,,	சை	செப்புகளாய்	செம்புளாய்
உசஎ	ஈ	ஞ	யிரேசில	யிரேசித
,,	க0	ஊ	திகழிரே	திகழிரே
உசஅ	கங	சை	வாத்தியங்	வார்த்திகக்
உஙிஉ	கச	உ	போக்கிக்	போகிக்
உசு0	கஎ	சை	பாபை	பாவை
உசுஎ	உங	உ	வநது	வந்து
,,	உசு	க	மகி	மதி
உசுஅ	சை	உ	ஞயிரஞ்	ஞயிரஞ்
உஅ0	உஎ	உ	மரர்ப்பு	மார்ப்பு
ஙஉஎ	ஙி0	க	வாழ்ந்த	வாழ்த்த
ஙஙஉ	க0	க	யைமணி	மையணி

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
ங-ங-சு	ங-அ	ங	ஙாணமொ	ஙாணமோ
ங-ங-அ	ஞ்ங	ங	யன்பு	மூன்பு
ங-ங-கூ	சு0	உ	றரைகுவா	றறைகுவா
ங-ச-ங	உ0	க	தந்தரி	தந்திரி
ங-சள	கக	உ	தென்னுளங்	தென்னுள்ளங்
,,	கச	உ	படி	பாடி
ங-ஞ்க	கச	ச	டிரிவை	டரிவை
ங-ஞ்உ	உஉ	க	செலுத்தி	செலுத்திக்
,,	,,	உ	வழிக்	வழக்
,,	உச	உ	புயந்தா	புயத்தா
ங-ஞ்ச	ங-ஞ்	உ	ஞியே	ஈயே
ங-சு0	கூக	உ	தோருஞ்	தாருஞ்
ங-சு-அ	க	ங	சறைத்தாம்	சுரைத்தாம்
ங-சு-கூ	அ	ங	மிம்மையு	மிம்மையி
ங-ள0	கச	உ	சலடி	சடில
ங-ளங	கூ	ங	மொடுக்க	கொடுக்க
ங-ளக	உஞ்	ச	பொரு	பெரு
ங-அக	கச	உ	வவந்த	வேந்த
ங-அங	உ-அ	க	பெரிமே	பரிமே
ங-அச	ங-ஞ்	உ	மறித்தனப்	மறித்தெனப்
ங-அஞ்	சங	ச	ங்ண்மதி	ங்ண்மதி
ங-கூங	கக	ச	செகுந்தி	செருந்தி
சO்க	உஞ்	ங	தயன்செய்	தயன்சேய்
சஉசு	உக	உ	றிறைதொடு	றிறைகொடு
சசக	ஞ்சு	ங	யாவர்க்கு	யார்க்கு
,,	சுக	ஙூ	பேர்மென	போமென
சசள	கள	உ	சோமசுத்தரக்	சோமசுந்தரக்
சசஅ	உக	ச	றென்கொலோ	றென்கொல்லோ
சசுஉ	ககஞ்	க	க்ஞஞ	ஞாஞ
சசுஞ்	கஉ	க	சுமத்து	சுமந்து
சசுசு	கஞ்	உ	ங்ங்கிலித்	சங்கிலித்
சசுஅ	ங-O	க	தூரந்திடப்	தொடர்ந்திடப்
சளசு	ககூ	ச	த்ந்தபோ	தந்தபோ
சளஅ	ங-க	ங	ளளந்	ளளர்ந்
சசுO	கO்ங	ச	நின்றவன்	நின்றதன்
சகூஉ	க	ச	சுரத்தணித்	சுரந்தணித்
சகூக	சள	உ	தம்மைக்கூஉய்ப்	தமைக்கூஉய்ப்
ஞ்கஞ்	அ	உ	கொடுயோ	கொடுபோ
ஞ்உசு	உசு	ங	லர்ழி	லாழி